02 805

# T. N. L. A. Debates

## OFFICIAL REPORT

VOL: LXVII NO: 1

April 24th 1984

C

V211,31'N84
D

N84·67·1
136268

136263

D
V211,31'N84
N84.67.1

உள்ளடக்கம் — பக்கங்கள்

24-4-1984.


(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

(ii) Personnel of the Government of the Tamil Nadu — iii

(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் — vii

(iv) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (தமிழ் அகர வரிசைப் படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் — ix

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள். — 1—4

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் — 41—115

2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள் — 116

(ஆ) இலங்கைவாழ் தமிழர் பிரச்னை — 116

(இ) காரைக்குடியில் பல்கலைக் கழகம். அமைத்தல். — 117

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

நாகப்பட்டினம் வேட்டைக்காரன் கரும்பு என்ற கிராமத்தில் சுங்க அதிகாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூடு. — 117—120

4. கவன ஈர்ப்புகள்.

(அ) ஆவடி-அம்பத்தூர் பெருஞ்சாலை பராமரிப்பு — 121—123

(ஆ) பழனி அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே படச்சுருள் தட்டுப்பாடு — 123—126

5. வரவு-செலவுத்திட்டம் 1984-8 வாக்கெடுப்பு (தொடர்ச்சி) — 126—297

(அ) கோரிக்கை எண் 36—பாசனம்

(ஆ) கோரிக்கை எண். 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு

| | |
|---|---|
| மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் | 126,127,157, 168,169,2 6, 217,225,274, —296 |
| திரு. பி. எம். தங்கவேல்ராஜ் | 127—131 |
| திரு. மி. வின்செண்ட் | 131—137 |
| திரு. மு. ப. முனுசாமி | 137—142 |
| திரு. கே. குப்புசாமி | 142—149 |
| திரு. ரா. கிருஷ்ணன் | 150—159 |
| திரு. எம். சின்னசாமி | 159—164 |
| திரு. சோ. அழகர்சாமி | 164—177 |
| திரு. க. பாலசுப்பிரமணியம் | 177—186 |
| திரு. கே. தனுக்கோடித் தேவர் | 186—196 |
| திரு. இரா. அமிர்தராஜ் | 196—203 |
| திரு. ப. நெடுமாறன் | 203—213, 258,289, —290 |
| திரு. ஏ. தங்கராசு | 213—216 |
| திரு. க. பாரமலை | 216—220 |
| திரு. மு. ஜான் வின்செண்ட் | 220—224 |
| திரு. இரெ. இராசமாணிக்கம் | 224—132 |
| திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் | 228,133—237 |
| திரு. செ. சிவகாமி | 237—241 |
| திரு. ஆர். தவசி | 241—243 |
| திரு. இரா. கருப்பையா | 243—248 |
| திரு. எம். கே. ராஜமாணிக்கம் | 248—252 |
| திரு. எஸ். ரெத்தினராஜ் | 252—255 |
| திரு. வி. வி. சுவாமிநாதன் | 255—265 |
| திரு. உ. சுப்பிரமணியன் | 265—274 |
| 6. அறிவிப்பு. பேரவை அலுவல் | 150 |
| 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் | 29 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர் லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் மற்றும் ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம் மற்றும் இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால் பெருக்குத் திட்ட அமைச்சர்)— பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்,

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள். எடைகள்–அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம். மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப் பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ் சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ், இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டுவசதி குடிசை மாற்றுவாரியம் புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு, (தொழில் துறை அமைச்சர்) — பெருந்தொழில்கள், சுரங்கமும், கனிவளமும், நெசவாலைகள் மற்றும் கைத்தறி.

15. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்),—மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராசன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)—சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்,

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற் பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்.



2805

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூகநலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)—கதர்.

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத் துறை அமைச்சர்)—மீன் வளம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

THIRU. SUNDAR LAL KURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Dr. M. G. RAMACHANDRAN (Chief Minister)-Public General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology and Excise.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance) - Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity) - Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Dairy Development) - Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue) Revenue, Commercial Taxes and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments) - Information and Publicity, Film Technology, Tourism, Tourism Developement Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and Grant of Liquor permit.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)- Education, includiug Technical Education, Official Language

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture)- Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law) - Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, and Co-Operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration) – Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S.RAGHAVANANDHAM(Minister for Labour) Labour, Housing Slum Clearance Board Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health) - Health.

13. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)-Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports

14. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries, Mines and Minerals, Textiles and Handlooms.

15. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works)-Prohibition excluding grant of liquor permit, Passports, Public Works Department and Establishment matter relating to Public Works Department.

16. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidas Welfare)- Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. Hon. Thiru R. SOUNDARARAJAN (Minister for Nutritious Meals) - Nutritious Meals.

18. Hon. Thiru S. R. ERADHA (Minister for Environmental Pollution Control) - Environmental Polluion Control.

19. Hon. Thiru M. R. GOVENDHAN (Minister for Backward Classes)—Backward Classes.

20. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)- Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggers Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY Minister for Khadi)- Khadi.

22. Hon. Y. S. M. YUSUF (Minister for Irrigation and Wakf)-Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. Hon. Thiru R. ARUNACHALAM (Minister for Rural Industries)- Rural Industries including Village, Cottage and Small Industries.

24. Hon. Thiru K. KALAIMANI (Minister for Fisheries) Fisheries.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

**பேரவைத் தலைவர்.**

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

**பேரவைத் துணைத் தலைவர்.**

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

† மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. எஸ். ஜகத்ரட்சகன்
2. திரு. மா. சின்னராசு
3. திருமதி. ம. யசோதா.
4. திரு. பாபு ஜனார்த்தனன்.
5. திரு. என். வரதராஜன்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. இரா. பாலகுரு, பி. ஏ.

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி. ஏ., பி.எல்.

குழு அலுவலர்.

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்.சி.

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.

திரு. பெ.ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.

திரு. வ. சா. ஜான், பி.ஏ.

எஸ்டேட் அலுவலர்.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. பி. கோதண்டராமன்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ். அனந்த நாரயணன், பி.லிட்.

தலைமை நிருபர்.

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ., எல். எல்.பி.

---

* 21-6-80 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

† 25-10-83 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்,

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| (1) | | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. | திருச்செந்தூர் |
| 7 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 8 | அரங்கநாதன், திரு. மு. | குன்னூர் (செ.வ.) |
| 9 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 10 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 14 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 15 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 16 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 17 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ. |
| 18 | ஆறுமுகம், திரு. சேலம் மு. | சேலம்–2 |
| 19 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 20 | ஆனூர் ஜெகதீசன், திரு. பு. கொ. | செங்கல்பட்டு |
| 21 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 22 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 23 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 24 | இராசரத்தினம், திரு. து | பூந்தமல்லி |
| 25 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.) |
| 26 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 27 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 28 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ) |
| 29 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 30 | இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 31 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 32 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 33 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந. | செஞ்சி |
| 34 | இராமசாமி, திரு. எஸ். எல். | சாத்தான்குளம் |
| 35 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 36 | இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 37 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 38 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 39 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 40 | இராஜசேகரன், திரு. வே. | டாக்டர் இராதா கிருஷ்ண நகர் |
| 41 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 42 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 43 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 44 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 45 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 46 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 47 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 48 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 49 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 50 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 51 | கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 52 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 53 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 55 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 56 | கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 57 | கருப்பையா, திரு இரா. | குளித்தலை |
| 58 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை (செ.வ.) |
| 59 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 60 | கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 61 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 62 | கலையரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ.வ.) |
| 63 | காளிமுத்து, டாக்டர் கா. | திருப்பரங்குன்றம் |
| 64 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஜி. | காங்கேயம் |
| 65 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 66 | கிருட்டினமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 67 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிகுப்பம் |
| 68 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்–1 |
| 69 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 70 | குப்புசாமி, திரு என். | மொரப்பூர் |
| 71 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 72 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 73 | குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 74 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 75 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 76 | குலசேகர பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 77 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 78 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 79 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 80 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 81 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 82 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 83 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 84 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி (செ.வ.) |
| 85 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 86 | சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 87 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 88 சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 89 சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 90 சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 91 சபாபதி, திரு. சி. | அரூர் (செ.வ.) |
| 92 சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டணம் |
| 93 சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 94 சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 95 சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 96 சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 97 சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 98 சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 99 சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 100 சிவபெருமான், திரு. மு. | ஓமலூர் |
| 101 சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 102 சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 103 சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 104 சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 105 சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 106 சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 107 சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 108 சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 109 சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 110 சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 111 சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 112 சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 113 சுப்பிரமணியன், திரு. கே.எம்.எஸ். | போடிநாயக்கனூர் |
| 114 சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 115 சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவ |
| 116 சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 117 சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 118 செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டி பாளையம். |
| 119 செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 120 செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 121 செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 122 சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 123 சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 124 சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் (செ.வ.). |
| 125 சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 126 சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 127 சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி—2 |
| 128 சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர். | ஸ்ரீரங்கம் |
| 129 சௌரிராஜன், டாக்டர் கே. | தி.நகர் |
| 130 தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 131 தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132 தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 133 தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 134 தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 135 தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 136 தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 137 தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 138 தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 139 திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 140 திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 141 திருமான், திரு. இரா. | ஏற்காடு (ஆ.வா. |
| 142 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 143 தீர்த்தராமன், திரு. ப. | பென்னாகரம் |
| 144 துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 145 துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 146 துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 147 துரைராஜ், திரு. பி. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 148 தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 149 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 150 நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 151 நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 152 நவநீதகிருஷ்ண பாண்டியன், | ஆலங்குளம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 153 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 154 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 155 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 156 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 157 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 158 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 159 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 160 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 161 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 162 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 163 | பழனிச்சாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 164 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 165 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம் |
| 166 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 167 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 168 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 169 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 170 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.). |
| 171 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 173 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. வேடச்சந்தூர் வி. பி. | வேடசந்தூர் |
| 175 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |
| 176 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 177 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 178 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 179 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 180 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 181 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 182 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 183 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 184. | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 185 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 186 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 187 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 188 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 189 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 190 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 191 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.). |
| 192 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 193 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி—1 |
| 194 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 195 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 196 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 197 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ). |
| 198 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 199 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 200 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 201 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட் (செ.வ.). |
| 202 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.). |
| 203 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 204 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 205 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 206 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர் பேட்டை (செ. வ. |
| 207 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 208 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 209 | ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |
| 210 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 211 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 212 | விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. | வீரபாண்டி |
| 213 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 214 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.). |
| 215 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 216 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 217 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட் |
| 218 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 219 | வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 220 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 221 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 222 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 223 | வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 224 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 225 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலமலை |
| 226 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 227 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 228 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 229 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 230 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 231 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர். |
| 232 | வெற்றிடம். | |
| 233 | வெற்றிடம். | |
| 234 | வெற்றிடம். | |
| 235 | வெற்றிடம். | |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைபெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா—அமைச்சர்
5 மாண்புமிகு திரு. யா சை. மு. யூசுப்—அமைச்சர்
6 மாண்புமிகு திரு. க. கலைமணி—அமைச்சர்
7 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, ஏப்ரல் 24, செவ்வாய்க் கிழமை

சித்திரை 12, ரக்தாஷி—திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ப. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்.

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு."

ஊற்றும் மழையுமாகிய இருவகை நீர் வளமும், தக்கவாறு அமைந்த மலையும் அந்த மலையிலிருந்து ஆறாக வரும் நீர் வளமும் வலிய அரணும் நாட்டிற்கு உறுப்புக்களாம்.

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

1983-ம் வருடம் ஜூலை முடிய பணியாற்றும் நேரத்தில் உயிரிழந்த மின்சாரத் துறை களப்பணியாளர்கள்

624—(*வினா எண் 20916 திரு. என். வரதராஜன். மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-ம் வருடத்தில் ஜூலை 83 முடிய மின்சாரத் துறைக்களப் பணியாளர்கள் பணியாற்றுகின்ற நேரத்தில் உயிரிழந்தோர் எத்தனை பேர்?

(ஆ) அதற்கான காரணம் என்ன?

(இ) விபத்துக்களைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். (அ) 40 பேர்.

(ஆ) இதற்கான காரணங்கள் பின்வருமாறு.—

(1) மின்கம்பங்களில் ஏறி வேலை செய்யும் போதும் தெருவிளக்குகளில் பழுது பார்க்கும்போதும் புதிய மின் இணைப்புகள் தரும்போதும் மின் இணைப்புகளைத் துண்டிக்கும் போதும் ஏற்பட்ட மின் தாக்குதல்கள்.

(2) மின் கம்பங்களில் ஏறி பணியாற்றும்போது தவறி கீழே விழுந்ததினால் ஏற்பட்ட விபத்துக்கள்.

(3) களத்தில் வேலை செய்யும்போது எதிர் பாராதவித மான விஷப்பாம்பு கடித்ததினாலும், பாதுகாப்புச் சாதனங்களை பணியாற்றும் போது உபயோகிக்காததாலும், விதிமுறைகளைக் கடைப்பிடிக்காததினாலும் ஏற்பட்ட மரணங்கள்.

(இ) விபத்துக்களைத் தடுக்க மின்சார வாரியம் பாதுகாப்பு வகுப்புகள் நடத்தி தக்க அறிவுரைகளை வழங்குகிறது. பாதுகாப்பு விதிகள் மற்றும் அறிவுரைகளைக் கடைப்பிடிக்காதவர் கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

திரு. கே. ஆர். சுந்தரம். மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, பல்வேறு காரணங்களினால் இத்தகைய விபத்துக்கள் ஏற்பட்டதாக அமைச்சரவர்கள் அறிவிக்கிறார்கள். இத்தகைய பணிகளைச்செய்பவர்களுக்குப் போதிய பாதுகாப்புச் சாதனங்கள் அளிக்கப்படாததினால் இத்தகைய மரணங்கள் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன? மேலும், மரணம் அடைந்தவர்களுக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டது என்பதையும் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தலைவரவர்களே, மரணம் அடைந்தவர்களுக்கு Workmen's Compensation Act-ன் படி விபத்தினால் உயிரிழந்தவர்களுக்குத் தருகின்ற இழப்புத் தொகை வழங்கப்படுகின்றது. மரணம் அடைந்த தொழிலாளி யின் வாரிசுக்கு வேலை தரப்படுகின்றது. போதுமான பாது காப்புச் சாதனங்கள் தரப்படுகின்றன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மின்சார வாரியத்தில் பணியாற்றுகின்ற பொழுது இறந்தவர்களின் வாரிசுகளுக்குப் பணிகள் தரப்படுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப் பிட்டார்கள். இப்படி, இறந்தவர்களின் வாரிசுகளுக்குப் பணி தரும்பொழுது, வயது வரம்பில் விதிவிலக்கு அளிக்க வேண்டு மென்றும், சில கேஸ்களில் கல்வித் தகுதியிலேகூட, விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும், அரசு ஆணையிட்டிருந்தும்கூட, மின் வாரியம் இதை அமல்படுத்தாமல் இருப்பது உண்மையா? ஆம் எனில், அதை அமல்படுத்தி, இறந்தவர்களின் வாரிசுகள் அனைவருக்கும் வேலை கொடுப்பதற்கு துறை என்ன நடவடிக்கையை எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தலைவரவர்களே, 1983–84 முடிய 1702 பேர்களுக்கு வேலைவாய்ப்பு இந்த வகையில் அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மட்டும் 147 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சுட்டிக்காட்டுகின்ற குறைகள் பற்றித் தனி யாகத் தகவல்களைத் தருவார்களேயானால் மின்சார வாரியம் தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.



திரு. பாபு ஜனார்த்தனன். பேரவைத் தலைவரவர்களே, இப்படி மின்சாரத்துறை களப்பணியாளர்கள் இறந்து விடுகின்ற நேரத்தில், அவர்களுக்கு உடனடியாக குறிப்பிட்ட பெரிய அளவுக்கு ஒரு தொகையைக் கொடுப்பதற்கும், அவர்களுடைய வாரிசுதாரர்கள் அல்லது அவர்களுடைய குழந்தைகள் அல்லது அவர்களுடைய துணைவியர்கள் ஆகியவர்களுக்கு உடனடியாகப் பணி கொடுப்பதற்கு ஒரு கால வரம்பை நிர்ணயித்தும், மற்ற உதவிகளைச் செய்வதற்கும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன். தலைவர் அவர்களே, காலவரம்பு நிர்ணயம் செய்வதைப்பற்றி அரசு ஆலோசிக்கும்,

திரு இரா. தாமரைக்கனி. பேரவைத் தலைவரவர்களே, நாம் சாதாரணமாக 230 ஒல்ட் மின்சாரத்தைப் பயன்படுத்துவ தால் அதிக ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. இதற்குப் பதிலாக வீடுகளுக்குப் பயன்படுத்துவதைப்போல 110 ஒல்ட்டாக ஆக்கினால் ஆபத்தில்லை என்று சொல்கிறார்கள். இதைப்பற்றி மின்வாரியம் ஏதாவது ஆராய்ச்சி செய்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தலைவரவர்களே, தனிக்கேள்வி போடவும்.

திரு. ச. பாலகிருஷ்ணன். மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, பணியாளர்கள் விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக் காததினாலும் அதிக விபத்துகள் நடப்பதாக அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். கிராமப்பகுதிகளில் பணியாற்றுகின்ற பல பணியாளர்கள் விதிமுறைகள் அறவே தெரியாமல் இருக்கிறார் கள். அவர்களுக்கு இந்த விதிமுறைகளைச் சொல்லித் தருகின்ற வகையில் தனியாக ஏதாவது பயிற்சி தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தலைவரவர்களே பாதுகாப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

### குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம்

625—(*வினா எண் 21046) திரு. சி. கணேசன். மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) குப்பையில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன். (அ) மற்றும் (ஆ) குப்பையி லிருந்து மின்சாரம் தயாரிக்கும் சாத்தியக் கூறுகள் பற்றி இந்திய தொழில் நுட்ப நிறுவனம் (ஐ.ஐ.டி.) ஆராய்ந்து வருகின்றது.

திரு. கோவைத்தம்பி. தலைவர் அவர்களே, மின் துறையில் தன்னிறைவு பெறுவதற்காக பல முயற்சிகள் செய்யப்படுகின்றன. குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் முயற்சி ஆய்வில் இருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது நடைமுறைக்கு உகந்த திட்டமாக இருக்கின்றதா? இப்போது கிடைக்கின்ற மின்சாரத்தினுடைய உற்பத்திச் செலவு, இது கிடைக்கின்ற மின்சார உற்பத்திச் செலவைவிட எவ்வளவு வித்தியாசப்படுகின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் உலகில் பல நகரங்களில் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. ஆகவே சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் ஐ. ஐ. டி. ஆய்ந்து வருகின்றது. இங்கே கிடைக்கின்ற குப்பை கூளங்களை வைத்து 110 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். டெல்லிக்கு அருகாமையில் இத்தகைய திட்டம் ஒன்றை உருவாக்கி அதற்கான நடைமுறைக் குறிப்பு அமலில் இருக்கின்றது. டெல்லிக்கு அருகாமையில் திப்பூர் என்ற இடத்திலே 300 டன் கார்ப்பரேஷன் வேஸ்டைப் பயன்படுத்தி 29.16 கோடி ரூபாயில் இந்தத் திட்டத்தினை அமல் படுத்தி வருகிறார்கள். அதன்படி 98 பைசா ஒரு யூனிட்டுக்கு உற்பத்திச் செலவாக ஆகின்றது என்ற கணக்கு வருகின்றது. எப்படி இருந்தாலும், குப்பையும் இல்லாமல் செய்யலாம்; அதேநேரத்தில் மின்சாரமும் பெறலாம். உலகில் பல நகரங்களில் இது ஏற்கெனவே அமல் படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ். தலைவர் அவர்களே, குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிப்பதுபோல் சாணத்திலிருந்தும் மின்சாரம் தயாரிப்பது என்பது நடந்து வருகின்றது. ஒவ்வொரு வீட்டிலும் இவ்வாறு சொந்தமாக மின்சாரம் தயாரித்து உபயோகிப்பவர்களுக்கு அதிகமான அளவுக்குச் சலுகைகளைக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தலைவர் அவர்களே, ஏற்கெனவே இத்தகைய திட்டம் ஒன்று அமலில் இருந்து வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் இன்னின்ன சலுகைகள் அவர்களுக்குத் தரப்படுகின்றன என்பதை விரிவாகச் சொல்லலாம்.

திரு. சு. பாலன் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குப்பையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதைப் பொறுத்தவரையில் ஆய்வில் இருப்பதாச் சொன்னார்கள். இந்த ஆய்வு எப்போது ஆரம்பிக்கப்பட்டது?



இன்னும் எவ்வளவு காலத்தில் அந்த ஆய்வு முடிந்து மக்களுக்கு அத்தகைய மின்சாரம் கிடைக்கக் கூடிய வழிவகை ஏற்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இது துவக்கப்பட்டது. அந்தக் கல்வி நிறுவனம் இது பற்றிய எல்லா நடவடிக்கைகளையும் ஆய்ந்து வருகின்றது. இதுபற்றிய சில தொழில் நுட்ப விவரங்கள் பிற நாடுகளிலிருந்து வரவேண்டி இருக்கின்றது. ஆகவே அதற்குரிய அத்தகைய விவரங்களை எல்லாம் பெற்றதற்குப் பிறகுதான் அத்தகைய மின்சார உற்பத்தியை நம்மால் துவக்க முடியும்.

## மின்சார வாரியம் 1983–84–ம் ஆண்டில் பொது மக்களிடமிருந்து எழுப்பிய கடன் தொகை

(626—* வினா எண். 21290) திரு. பெ. சு. திருவேங்கடம் மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் 1983–84 ஆம் ஆண்டில் பொதுமக்களிடமிருந்து கடன் எழுப்பி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) எழுப்பியுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். (அ) ஆம்.

(ஆ) ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா (பம்பாய்) அனுமதிக்கப்பட்டபடி குறிப்பிடப்பட்ட கடன் தொகை ரூ. 43.25 கோடியையும் அதன் மீது 10 சதவீதமும் அதிகப்படியாக வைத்துகொள்ளும் ரூ. 4,325 கோடியையும் சேர்த்து மொத்தம் ரூ. 47.575 கோடி மின்சார வாரியம் பொதுச்சந்தக் கடன் பெறும் முறையில் (Open market loan) எழுப்பியுள்ளது.

(இ) மின்சார வாரியம் கடன் விபரம் பின்வருமாறு—

| | |
|---|---|
| 1982 ஜூலை மாதம் | ரூ. 24.20 கோடி. |
| 1983 அக்டோபர் மாதம் | ரூ. 19.4825 கோடி |
| 1984 ஜனவரி மாதம் | ரூ. 3.8925 கோடி |
| மொத்தம் | 47.5750 கோடி |

திரு பெ. சு. திருவேங்கடம். பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே மின்சார வாரியம் பெற்றிருக்கின்ற கடன்கள் பற்றி ஆண்டு வாரியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவையெல்லாம் பொதுமக்களிடமிருந்து பெற்ற கடன்கள் மட்டுமா? அல்லது எல். ஐ. சி. நிறுவனம், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவற்றிலிருந்து மின்சார வாரியம் வாங்கிய கடன்களும் இதில் அடங்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தலைவர் அவர்களே, வெளிச்சந்தையிலிருந்து பெறுகின்ற கடன் என்பது ஒரு காலத்தில் பொதுமக்களிடத்திலிருந்து பெறப்பட்டது. இப்போது வங்கிகளே அந்தக் கடனை வழங்கி விடுகின்றன.

(முற்பகல் 9-10)

திரு பெ. சு. திருவேங்கடம். பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் நம்முடைய மின்சார வாரியம் கடன் வாங்குகின்ற சூழ்நிலையிலே இருந்து வருகின்றது. நம்முடைய வாரியம் இப்படிப்பட்ட கடன்களை வாங்குவதை நிரந்தரமாகக் குறைப்பதற்கு இப்படி கடன் வாங்கியே நாம் கொடுக்கவேண்டிய பாக்கி ஒரு பக்கம் இருப்பதாக இதே அவையிலே கூட மின்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்களே; இதைப் போக்க ஒரு தொகையை அரசாங்கத்திடமிருந்து நிரந்தரமாகப் பெற்று, இந்த மின் வாரியத்திற்கு உதவி செய்ய வேண்டுமென மின் துறை அரசைக் கேட்டுள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தலைவர் அவர்களே, கடன் வாங்காது எந்த நிறுவனமும் உலகில் இப்பொழுது நடைபெறுவதில்லை. ஆகவே, கடன் வாங்குவது தவறல்ல. வாங்கப்படுகின்ற கடனுக்கு வட்டியை செலுத்துவதும் வாங்கிய கடனைத் திருப்பித் தருவதும்தான் ஒரு நிறுவனத்திற்குத் தேவை. அந்த வகையிலே அதனுடைய நிதிநிலைமையைச் சீர்படுத்த வேண்டுமென்ற முயற்சியில்தான் நாம் ஈடுபட்டு வருகிறோம்.

திரு. ச. பாலகிருஷ்ணன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களிடமிருந்து நாம் வாங்குகின்ற கடனுக்கு என்ன வட்டி விகிதம் வழங்கப்படுகிறது? எத்தனை ஆண்டுகளிலே அந்தக் கடன் தொகை வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன், தலைவர் அவர்களே. வட்டி விகிதம் ஆண்டுக்கு 8.75 சதவீதம். 17 ஆண்டுக்கால முடிவுக்குப் பிறகு திருப்பித் தரவேண்டிய கடன்.



**செவந்திப் பட்டியிலுள்ள அருள்மிகு கருப்பண்ணசாமி மற்றும் வெங்கடாசலபதி ஆலயங்களிலிருந்து களவுபோன சிலைகள்**

627—(*வினா எண் 18171) திரு. பாபு ஜனார்த்தனன். மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் அருகே செவந்திப்பட்டியில் கருப்பண்ணசாமி மற்றும் வெங்கடாசலபதி ஆலயங்களில் 8 விக்ரகங்கள் திருடு போனது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அவை மீட்கப்பட்டனவா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். (அ) மற்றும் (ஆ) நாமக்கல் அருகே செவந்திப்பட்டியில் அருள்மிகு கருப்பண்ணசாமி மற்றும் வெங்கடாசலபதி ஆலயங்களிலிருந்து 1—2—1983 அன்று ஒன்பது சிலைகள் களவுபோய் விட்டன. அவைகள் திருச்சி மாவட்டம், நீலம்பட்டியில் உள்ள வெள்ளவாரியில் மண்ணிற்குள் புதைக்கப்பட்டிருந்ததை, காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டு, சிலைகளை மீட்டு நாமக்கல் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்தின் பொறுப்பில் உள்ளன. சிலைகளை நீதிமன்றத்திலிருந்து திரும்பப் பெற்று மீண்டும் பிரதிஷ்டை செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு பாபு ஜனார்த்தனன். பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் அருகே செவந்திப்பட்டியில் அருள்மிகு கருப்பண்ணசாமி மற்றும் வெங்கடாசலபதி ஆலயங்களிலிருந்து சிலைகள் களவு போய்விட்டன என்றும் அவை கண்டுபிடிக்கப்பட்டு நீதிமன்றத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்படிப் பல கோயில்களில் விக்கிரகங்கள் திருடு போகின்ற நிகழ்ச்சிகள் ஏராளமாக நடக்கின்றன. அதை ஒரு குறிப்பிட்ட காங்க், ஒரே கோஷ்டி செய்கிறதா? அல்லது திடீர், திடீர் என்று அதிலே வருமானம் வருகின்றது என்று செய்கிறார்களா? அதற்கு வெளி நாடுகளிலிருந்து ஆதரவு வருகின்றது என்ற வகையில் நடைபெறுகிறதா? சமீபத்திலே கூட மத்திய அரசு ஒரு அறிக்கை தயாரித்து வெளியிட்டார்கள். தமிழ்நாட்டில் கோயில்களில் ஏராளமான சிலைகள் திருடு போகின்றன என்று புள்ளிவிவரம் கொடுத்தார்கள். அது குறித்து அரசு என்ன தீவிர நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேதான் இப்படிப்பட்ட புகழ்மிக்க, தொன்மை வாய்ந்த, சிற்பக் கலை சிறப்புமிக்க சிலைகள் இருக்கின்றன. ஆகவே, இன்றைக்கு உலகம் முழுவதும் இப்பொழுது இந்தச் சிலைகள் புகழ்பெற்றிருக்கிற காரணத்தாலே இதற்குத் தேவைகளும் கிராக்கிகளும் அதிகமாக இருந்து, மதிப்பும் அதிகமாக இருப்பதனால் இதை எடுத்துக் கொண்டு.

விற்பனை செய்வதற்கு முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. ஆனால் இது நீண்ட காலமாகவே நடைபெற்று வருகின்ற ஒன்றுதான். இப்பொழுது அதிகமாக நடைபெறுகிறதா அல்லது நடைபெறுகின்ற திருட்டுக்கள் அதிகமாகக் கண்டு பிடிக்கப்படுகின்றனவா என்பதுதான் இன்றைக்கு உள்ள பிரச்னை. ஆனால் அதிகமாகக் கண்டு பிடிக்கிற முயற்சியிலே நாம் வெற்றி பெற்று வருகிறோம். பொதுவாக இதற்கு மதிப்புகள் அதிகம் போடப்பட்டு, குறிப்பாக, இதைப்பற்றிய செய்திகள் பத்திரிகைகளிலே வருகிறபொழுது, ஏதோ ரூ. 5,000, ரூ. 10,000 மதிப்புள்ள சிலைகள் என்று இருந்தாலும் இவை ரூ. 50, இலட்சம், ரூ. 1 கோடி ரூ. 2 கோடி என்று எல்லாம் அதிகப்படுத்தப்பட்டு செய்திகள் வருவதும் மற்றவர்களை இப்படிப்பட்ட ஒரு தகாத முயற்சியிலே ஈடுபடுத்துவதற்குத் தூண்டுவதாகவும் அமைந்திருக்கிறது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட கூட்டம்தான் இந்த முயற்சியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறதா என்று இப்பொழுது சொல்ல முடியவில்லை. அப்படி ஒருவர், இருவர் இதிலே ஈடுபட்டு அவர்கள் மீது தக்க நடவடிக்கைகள், வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதனாலேதான் இங்கே மானியக் கோரிக்கையிலே கூட நாங்கள் தெரிவித்திருக்கின்றோம். இப்படிப்பட்ட குற்றங்களிலே தொடர்ந்து ஈடுபடுகிற குற்றவாளிகளைப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்வதற்கான முயற்சிகள், அதற்கான சட்டத்திருத்தங்கள் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்தச் சிலைகளை வைத்திருப்பவர்களும் குற்றவாளிகள்தான் என்று குறிப்பிடுகிற அளவுக்குச் சட்டத்திருத்தம் செய்யவும் இப்பொழுது முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது தவிர தனியான போலீஸ் படையே இதற்காக அமைத்து குற்றப் புலனாய்வு நடத்துகின்ற அப்படிப்பட்ட போலீஸ் பிரிவு ஒன்றை அமைத்து, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சூழ்நிலைகள் எல்லாம் சேர்ந்து பொதுவாக மக்களிடத்திலே அப்படிப்பட்ட ஒரு தவறான பணம் சேகரிக்கிற முயற்சிகளிலே ஈடுபடலாம் என்று தூண்டுகிற சூழ்நிலைகளும் காரணமாக அமைந்திருக்கின்றன.

திரு பாபு ஜனார்த்தனன். மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சிலைகளை மீட்கும் பணிகளில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அறநிலையத் துறை மானியத்திலே தரப்பட்டிருக்கிற புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது 20 சதவீதம், 30 சதவீதத்திற்கு மேல் இந்தத் திருட்டுக்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்பது தெரிகிறது. ஆகவே ஏற்கனவே திருட்டுப் போயிருக்கிற சிலைகளைக் கண்டுபிடிக்க இன்னும் நடவடிக்கைகளை தீவிரப் படுத்தி, அவர்களுக்கு கடுமையான தண்டனைகளை இயற்றி இதுபோன்ற புராதன சிலைகள் மேலும் திருட்டுப் போகாமல் இருக்க அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகளைத் தான் நான் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். இந்தச் சிலைகள் [illegible] என்பது தமிழகம் முழுவதும் பலவேறு கிராமப் பகுதிகளி



நிறைந்திருக்கிற ஆலயங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தக் கேள்வியின் தொடர்பான இந்த ஆலயம் கூட ஒரு கிராமப் பகுதியில் மலை மீது இருக்கிற ஆலயம் ஆகும். அதிகமாக ஆட்கள் போகிற ஆலயம் அல்ல. திருட வந்தவர்கள் கூட ஒன்பது பேர்கள் அங்கே வந்து குருக்களையும், பக்கத்திலே கூட வந்திருந்தவர்களையும் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று கூப்பிட்டு மலை மேலே அழைத்துக்கொண்டு போய்த்தான், அவர்களை கட்டிப் போட்டுவிட்டு திருடி இருக்கிறார்கள். ஆகவே இது நாடு முழுவதும் கிராமப்பகுதிகளில் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இதைப் பாதுகாக்கிற முயற்சியும் கொஞ்சம் கடினமான காரியம்தான். ஆகவே அதற்கேற்றாற்போல அரசு தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது.

திரு. கோவைத்தம்பி. மாண்புமிகு தலைவர் அவர்களே,
** ** **

விலை மதிக்க முடியாத சிலைகளை எல்லாம் திருடி, கடத்தி பிறகு அந்தச் சிலைகளை குறைந்த மதிப்புள்ள சிலைகளாக.

திரு. எஸ். எஸ். வி. சித்தன். மாண்புமிக்க தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் இருக்கக்கூடாது.
** **

என்று சொல்கிறார்கள். அது குறிப்பிலே இருக்கவேண்டாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர். **. எல்லாம் இப்போது வேண்டாம் அதை அவைக்குறிப்பிலே இருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. கோவைத்தம்பி. மாண்புமிகு தலைவர் அவர்களே, விலை மதிக்க முடியாத சிலைகளை சிலர் திருடி வெளிநாடுகளுக்குக் கடத்தி, காவல்துறையும், அரசும் அவர்களை கண்காணித்து பிடிக்கும் பொழுது அந்தச் சிலைகளைத் திருடுவதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மிகவும் மலிவான சிலைகளை வாங்கி குற்றவாளிகளை காவல் துறையிடம் ஒப்படைப்பதைப் போல ஒப்படைத்து, கோடிக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்து உயர்ந்த இடங்களில் அமர்ந்துக்கொண்டு ஒரு முதலமைச்சர் பவனி வருவதைப் போல தமிழ் நாட்டிலே பவனி வந்து, அரசையும் மிரட்டி இந்தச் சிலைகளைத் திருடுவதற்கும் உடந்தையாக இருக்கிறார்கள் என்று புகார்கள் ஏதாவது அரசிற்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க, அவர்களை தீவிரமாக கண்காணிக்க திட்டமிட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல அப்படி யார் பவனி வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றி மட்ட வட்டமாக அரசுக்கு எந்தப் புகாரும் இதுவரையில் வரவில்லை. ஆனால் தொடர்ந்து இப்படிப்பட்ட குற்றங்களில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறவர்களுடைய பெயர்கள் சில அரசிடத்திலே இருக்கிறது. அவர்களைக் கண்காணிக்க, அவர்களை எல்லாம் தீவிரமாக நடவடிக்கை எடுத்து அதைக் களைகப் பிடித்து சிறையிலே வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய பெயர்களை இப்போது வெளியிடுவதுகூட அவ்வளவு பொருத்தமாக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போன்று முதலமைச்சரைப்போல பவனி வருபவர்கள் யார் என்பதை அவர்கள் தனியாகச் சொன்னால் அவர்கள் மீதும் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன். மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜனசந்தடியற்ற கோவில் ஒன்றில் குருக்களையும், மற்றவர்களையும் அடித்து சிலைகளைத் திருடிச் சென்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இது போன்ற இடங்களில், விலை மதிப்பற்ற சிலைகள் இருக்கும் இடங்களில் விசேஷமான பாதுகாப்பு முறைகளை ஏற்படுத்தி இந்தச் சிலைகள் திருட்டை தவிர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த அடிப்படையிலே தான் அறநிலையத் துறை தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இப்படி கிராமப் பகுதிகளில், தொன்மைவாய்ந்த ஆலயங்களில், இத்தகைய விலை மதிப்பற்ற மிகச் சிறந்த சிலைகள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் அங்கேயிருந்து சேகரித்து பாதுகாப்பான ஒரு ஆலயத்திலே, பாதுகாப்பான அறைக்குள்ளே வைக்கின்ற திட்டம் இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அதிலே இருக்கிற கஷ்டம், அந்த கிராமப் பகுதியிலே இருக்கிற மக்கள், அந்தக் கோவிலை நிர்வகிப்பவர்கள்— இந்தக் கோவில் கூட பரம்பரை அறக்காவலர் பொறுப்பிலே இருக்கிறது.

(மற்பகல 9-20)

நான் அதைச் சொல்ல வேண்டாம் என்று நினைத்தேன் அந்தக் கோயில் ஒரு பரம்பரை அறங்காவலர் பொறுப்பிலே இருக் கவே, இதிலே உள்ள குற்றவாளிகளுக்கும் அந்தப் பரம்பர அறங்காவலருக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதோ இல்லையோ என்பது கூடத்தெரியவில்லை. காரணம், குற்ற வாளிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே இந்தச் சூழ்நிலையில் அப்படி கிராமப் பகுதியிலே இருக்கின்ற, அப்படி சாதாரண பாதுகாப்பற்ற சூழநிலையில் உள்ள



ஆலயங்களில் இருக்கிற விலை மதிப்பற்ற ஆலயங்களில் இருக்கும் சிலைகளை பாதுகாப்பிற்காக எடுத்துச் செல்கிறபோது, அந்த மக்கள் அதை எதிர்க்கிறார்கள். அந்த ஆலயங்களில் இருந்து அதை எடுக்கக்கூடாது என்று சொல் கிறார்கள். ஆகவே, இதிலே பல பிரச்னைகள் இருக்கின்றன. உணர்வு அடிப்படையில், ஆன்மீக அடிப்படையில், நம்பிக்கை அடிப்படையில பல பிரச்னைகள் இருக்கின்றன. இதையெல்லாம் பரிசீலித்து முடிந்த அளவிற்கு இந்த அரசு தீவிர நடவடிக்கை களில் ஈடுபட்டு வருகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் தலைவர் அவர்களே, பிரசித்தி பெற்ற கோவில் சிலைகள் மதிப்பு மிக அதிகம். இந்தச் சிலை களைத் திருடுபவர்கள் சிலைகளைத்தான் எப்போதும் திருடு வார்கள். அதுதான் அவர்களுடைய மோடஸ் ஆபரேண்டி. தங்கம் திருடுபவர்கள் தங்கத்தைத்தான் திருடுவார்கள், சட்டி திருடுகிறவர்கள் சட்டியைத்தான் திருடுவார்கள், சட்டை துணிமணிகள் திருடுபவர்கள் அதைத்தான் திருடுவார்கள். காரணம், ஒரு தொழிலில் பழக்கமானதைத்தான் அவரவர்கள் செய்வார்கள். அதற்குத்தான் மோடஸ் ஆபரேண்டி என்று சொல்வார்கள். அதைப்போலவே, திருட்டுச் சொத்துக்களைக்கூட 'ரிசிவர் ஆப் ஸ்டோலன் ப்ராபர்டீஸ்' சிலர்தான் வாங்குவார்கள். இது போலீசுக்கும் தெரியும், எல்லோருக்கும் தெரியும். இது நீண்ட நெடிய காலமாக இருந்து வரும் சூழ்நிலை. இந்தச் சிலை திருட்டு என்பது தொடர்ந்து நடை பெறுகிறது தமிழகத்தில் இருந்து விலை மதிப்புள்ள சிலைகள் களவு போய்க் கொண்டு இருக்கின்றன. இதிலே மேட்டுக்குடி மக்களுடைய தொடர்பு இல்லாமல் செய்ய முடியாது. எக்ஸ்போர்ட் செய்வது என்று சொன்னால் அது சாதாரண விஷயம் அல்ல. சாதாரண மானவர்கள், சாமானியர்கள் செய்ய முடியாது. இந்த அடிப்படைகளை வைத்துப் பார்க்கிறபோது இந்தச் சிலை திருட்டுகளை இன்னார் செய்து இருப்பார் என்று அரசு உணர முடியும். ஆகவே, இந்த வகையில் தீவிரமாக பரிசீலனை செய்து. இதை முழுமையாகத்தடுக்க, கட்டுப்படுத்த, ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர். ஆகவேதான் இந்தத் திருட்டுகள் எப்படி நடை பெறும். அதற்கு அடிப்படையாக யார் யார் இருப்பார்கள் என்பதை அவர்களுக்கு பல பேரைச் சந்தித்த வகையில் ஏற்பட்ட அனுபவத்தின் தன்மையிலே தெரிவிக்கிறார்கள். திருட்டுக்கள் இப்படித்தான் நடைபெறுகிறது; அது தான் வழக்கமாக இருக்கிறது. அந்தத் தன்மையில் ஒரு நபர் திருட்டைச் செய்கிறாரோ அதே தன்மையில் தான் தொடர்ந்து செய்வார், எந்தச் சாமான்களைத் திருடுகிறாரோ அதே தன்மையில் அதே சாமான்களைத் தொடர்ந்து திருடுவதில் ஈடுபடுவது என்பது வழக்கமாக இருக்கிறது.

இந்தச் சிலை திருட்டு என்பது நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது. இதிலே என்ன கஷ்டம் என்று சொன்னால் இந்தச் சிலையைத் திருடுவது என்பது மிகப் பெரிய குற்றமாக இந்தியன் பீனல் கோடிலோ அல்லது இந்தியன் கிரிமினல் ப்ரோசீஜர் கோடிலோ அல்லது வேறு சட்டங்களிலோ அந்த அடிப்படையில் குறிப்பாக தெரிவிக்கப்படவில்லை. ஆகவே, பல சட்டங்களின் மீது நாம் நடவடிக்கை எடுக்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல, இதிலே ஈடுபட்டு இருக்கின்றவர்கள் மிகப் பெரியவர்கள், செல்வாக்கு மிக்கவர்கள், என்ற நிலைமையில் இருப்பதால் வழக்கறிஞர்களின் துணை கொண்டு நீதி மன்றத்திற்குப் போய் விடுதலை பெற்று விடுகிறார்கள். ஆகவே, நாம் நடவடிக்கை எடுக்க முடியாமல் கையைக் கட்டிப்போட்டு இருப்பதற்குக் காரணமாக சிறந்த திறமைமிக்க வழக்கறிஞர்கள் அவர்களுக்குத் துணையாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் செய்யும் தொழில் அது, ஆகவே, அப்படி செய்துகொண்டு இருக்கிறார்கள்.

ஆனால் பொதுநன்மையைக் கருதி இப்படிப்பட்ட குற்றங்கள் செய்தவர்கள் மீது நாம் நடவடிக்கை எடுக்கிறபோது பல வழக்குகளில் நீதிமன்றம் எந்த வகையில் தீர்ப்பு அளித்து இருக்கிறது என்பதை நீங்கள் பார்த்துக்கொண்டு இருப்பீர்கள் என்று கருதுகிறேன். நம்முடைய இந்த மாமன்றத்திலேயே அறநிலையத் துறை மானியக்கோரிக்கை விவாதத்தின்போது நான் விளக்கமாகத் தெரிவித்து இருக்கிறேன். 1972 ஆம் ஆண்டு 46 சிலைகளை திருடியவர்—அவர் பெயர் வழக்கு மன்றத்தில் இருக்கிறது—பால் பாண்டியன் என்று பெயர்—அவர் பல வழக்குகளில் ஈடுபட்டு இருக்கிறவர்—தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்தவர்—அவர் உள்ளே தள்ளப்படுகிறார், ஆனால் ஒரே நாளில் 100 ரூபாய் அபராதம் என்று மட்டும் சொல்லி அவர் விடுதலை செய்யப்படுகிறார். ஹைக்கோர்ட் வரை அந்த வழக்கு சென்ற போதிலும் 100 ரூபாய்தான் அபராதம் என்று முடிவு செய்யப்படுகிறது. அதற்குப் பிறகு 46 சிலைகள் மாற்றப்பட்டு இருக்கின்றன. அவைகள் எப்போது மாற்றப்பட்டு இருக்கின்றன என்பது எல்லாம் இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

ஆகவே இதிலே தொடர்பு உள்ளவர்கள் செல்வாக்கு உள்ளவர்கள்தான். அவர்கள் சாதாரணமாக சிலையை வைத்துக்கொண்டு இருக்கிறபோது பிடித்தால் அவர்கள் தப்பித்துக்கொண்டு விடுகிறார்கள். ஆகவே, சிலைகளை வைத்துக்கொண்டு இருப்பதே குற்றம் என்ற அந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வர ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்கிறோம். வெளிநாட்டிற்கு கடத்திச் செல்லப்படும் சிலைகள் என்பது பொது மக்கள் மத்தியில் செல்வாக்குள்ள நிகழ்ச்சியாக இருப்பதால் இது அதிகமாகத் தெரிகிறது. பல காரியங்கள் நடைபெறுகின்றன. அதைப்போலவே இந்தக் காரியங்களும் நடைபெறுகிறது. ஆகவே, இந்தக் குற்றங்களைத் தடுப்பதற்காக நான் ஏற்கனவே சொன்னதுபோல் சட்டத் திருத்தம் கொண்டு வர அரசு முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

—



திரு. மா. சின்னராசு: தலைவரவர்களே, நமது அரிய சொத்துக்களைத் திருடுவதைத் தடுப்பதற்கு முன்னால் இந்தச் சொத்துக்களின் தொன்மைத் தன்மையையும் சிறப்பையும் நன்கு அறிந்து, இந்த சிலைகளின் மதிப்பைக் கணக்கிடுவதற்கு ஏதாவது குழு இருக்கிறதா? இந்தக் குழுவில் கைதேர்ந்த கலைஞர்கள் யாராவது அரசாங்கத்தின் சார்பில் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? தமிழகத்தின் அரிய சொத்துக்களைப் பேணி பாதுகாக்க, இந்தக் குழு பணிகளைச் செய்துவருகிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, அந்தப் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு முழுவதும் இருக்கிற ஆலயங்களில் இருக்கிற இப்படிப்பட்ட விலை மதிப்பற்ற சிலைகளைக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தச் சிலைகளைப் புகைப்படம் எடுக்கிறோம். சிலைகளின் மதிப்பு என்ன என்பதை நிர்ணயித்து பதிவேட்டில் பதிவு செய்துகொண்டு வருகிறோம். இந்தக் கேள்வியில் இடம்பெற்றிருக்கிற சிலைகள் கூட சுமார் 47,000 ரூபாய் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அது பதிவேட்டிலும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அது சமீபத்தில் உலோகவியல் நிபுணர்களைக்கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டதில் 87,500 ரூபாய் என்று அவர்கள் சொல்கிறார்கள். இதனுடைய மதிப்பு என்பது செய்யப்பட்டிருக்கிற உலோகத்தின் மதிப்பைப் பொறுத்தது. ஆனால் வாங்குகிறவர்கள் தருகிற மதிப்புக்கும் இதற்கும் சம்பந்தம் இருப்பதில்லை. அது அவர்களுடைய செல்வாக்கைப் பொறுத்து, சிலைகளின் கவர்ச்சியைப் பார்த்து, தொன்மையைப் பார்த்து விலை தருகிறார்கள். அந்தவகையில் அவர்கள் மதிப்பீடு செய்கிறார்கள். இப்போது நாம் இந்தச் சிலைகள் பற்றிய மதிப்பீட்டைச் செய்து பதிவு செய்கிறோம்; புகைப்படம் எடுத்து வைக்கிறோம்; தகுந்த கண்காணிப்புக்கு ஏற்பாடு செய்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, "அரசு அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்" என்று ஒரு பழமொழி இருக்கிறது. ஆகையால் சிலை திருடுபவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்படுமா? பாகிஸ்தானில் இருப்பதைப் போன்று கசையடி கொடுத்து, இவர்கள்தான் சிலை திருடுகிறார்கள் என்று நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நாம் ஒரு மிகப்பெரும் ஜனநாயக நாட்டில் வாழ்கிறோம், ஜனநாயகத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம், ஆகையால் ஜனநாயகத்தில் எவ்வளவு நன்மை இருக்கிறதோ அதைபோல சிறிதளவு தீமையும் இருக்கும். அந்த தன்மைகளை எல்லாம் மாற்றுவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகலாம். அதுதான் ஜனநாயகத்தில் இருக்கிற ஒரு ஏற்பாடு.

### சங்கரன் கோவில் நகரிலுள்ள கோயிலிலிருந்து விற்பனை செய்யப்பட்ட தங்கம்.

628—(* வினா எண் 19361) திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு செய்தி-அறநிலயத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் சங்கரன்கோவில் கோயிலிலிருந்து 1982-ல் எத்தனை கிலோ தங்கம் விற்கப்பட்டது?

(ஆ) எந்த நோக்கத்திற்காக விற்கப்பட்டது?

(இ) தங்கத்தை விற்க என்ன நடைமுறை கையாளப்பட்டது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ. ஆ மற்றும் இ): திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் வட்டம் மற்றும் சங்கரன் கோவில் நகரிலுள்ள அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயிலில் 1982-ல் தங்கம் விற்பனை செய்யப்படவில்லை. 1981-ம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:—

தங்கக் கட்டுப்பாடு விதிகளின்படி, தங்கப் பத்திரத்தில் மேற்படி திருக்கோயிலிலிருந்து முதலீடு செய்யப்பட்ட 2875 கிராம் தங்கத்தினை 20-2-81 மற்றும் 21-3-81 ஆகிய தேதிகளில் அரசிடமிருந்து திரும்பப் பெறப்பட்டது. மேற்படி தங்கமானது பெறப்பட்ட நாளிலிருந்து ஆறுமாத காலத்திற்குள் உரிமம் பெற்ற வியாபாரிகட்கு விற்கப்படவோ, அல்லது ஆபரணங்களாக முன் அனுமதி பெற்று செய்யப்படவோ வேண்டும். தங்கப்பத்திர தங்கமானது அப்படியே ஆறுமாத காலத்திற்கு மேல் வைக்கப்பட்டிருப்பின் மத்திய அரசு சுங்க இலாகாவால் பறிமுதல் செய்யப்படும். அப்போது, ஆபரணங்கள் செய்ய அவசியம் இல்லாதிருந்ததாலும், காலகெடு முடிந்து விடக்கூடிய நிலை ஏற்பட்டதாலும், ஆலய நிதி நிலையை உயர்த்திக் கொள்ள ஏதுவாக ஆலயத்தின் அறங்காவலர் குழுவினால் தீர்மானம் நிறைவேற்றி, இந்து சமய அறநிலைய ஆட்சித் துணை ஆணையர் முன் அனுமதி பெற்று அங்கீகாரம் பெற்ற தங்க நகை வியாபாரியிடம் 19—8—81 அன்று விற்பனை செய்யப்பட்டது. விற்பனை மூலம் வரவு ரூ. 4,87,427.50.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, தங்கத்தின் விலை நாள்தோறும் கூடிக் கொண்டிருக்கிற காரணத்தால் இந்தமாதிரி ஆலயங்களில் தங்கத்தைச் சேமித்து வைக்க வேண்டுமென்ற கருத்து இருப்பதால் எந்தக் காரணத்தைக் கொண்டும் தங்கத்தை விற்பனை செய்யக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறதா? இல்லை என்றால் இனியாவது அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வியிலே இருப்பதைப் பொறுத்த வரையில், இந்தத் தங்கம் தங்கப் பத்திரத்தில் முதலீடு செய்யப்பட்டு, திருப்பிப் பெறப்பட்டது. அப்படித் திரும்பப் பெறுகிறபோது மத்திய அரசின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஆறுமாதத்திற்குள்ளே பதிவு செய்த வியாபாரிகளிடம் விற்பனை செய்ய வேண்டும்; இல்லை என்றால் மத்திய அரசின் அனுமதியைப் பெற்று நகைகளாகச் செய்ய வேண்டும். இப்போது, ஆலயங்களில் சிலைகளையே பாதுகாக்க முடியாமல் இருக்கிறபோது மேலும் மேலும் தங்கத்தையும் நகைகளையும் சேர்த்து வைப்பதில் பொருளில்லை. ஆகவே, தங்கத்தை 6 மாதத்திற்குள் விற்க முடிவு செய்யப்பட்டது. சுமார் 4,87,427 ரூபாய்க்கு விற்பனை செய்திருக்கிறார்கள். அதோடு 12,000 ரூபாய் சேர்த்துப் போட்டு, 5 இலட்சம் ரூபாய் இப்போது முதலீடு செய்திருக்கிறார்கள். அதற்கு 10½ சதவீதம் வட்டி வந்துகொண்டிருக்கிறது. பூட்டி உள்ளே வைத்து பாதுகாக்கமுடியாத ஒரு சூழ்நிலையில், அதற்கு ஒரு பாதுகாப்பை ஏற்படுத்துவதுமட்டுமல்லாமல் ஆலயத்திற்கு வருமானமும் வந்துகொண்டிருக்கிறது. இது ஒரு சிறந்த ஏற்பாடு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும் ஆலயங்களில் நகைகளாக இருப்பதை மாற்றக்கூடாது என்று ஆணை பிறப்பித்திருக்கிறோம். தற்போது இருக்கிற சூழ்நிலையில் தங்கமாக வைத்து பாதுகாப்பது கடினம். ஆனாலும் இந்தத் தங்கத்தை விற்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்றால் தங்கப் பத்திரத்தில் முதலீடு செய்யப்பட்டு, திரும்பப் பெறப்பட்டதை ஆறு மாதத்திற்குள் அனுமதி பெற்று நகை செய்ய வேண்டும், அல்லது விற்க வேண்டும். அதனால் விற்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது சிலைகளையே நாம் பாதுகாப்பது கஷ்டமாக இருக்கிறது. இந்த நிலையில் நகைகளை கோவில்களில் வைத்து பாதுகாப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதனால் விற்றுவிட்டோம் என்ற கருத்தைச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விற்கப்பட்டது நகை அல்ல; தங்கம், என்று சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 9-30)

திரு. சோ. அழகர்சாமி : நகைதான் தங்கம், தங்கம்தான் நகை. ஆகவே இந்த யோசனை சரியான யோசனை என்பதை நான் தெரிவித்துக்கொள்வதோடு பல கோவில்களில் அதிகமான நகைகள் தங்க நகைகளாக இருக்கின்றன. அல்லது தங்கமாகக்கூட இருக்கலாம். இவைகளையெல்லாம் கொஞ்சம் குறிப்பிட்ட அளவிற்கு கோவில் நகைகளாக வைத்துக்கொண்டு மீதி தங்க நகைகளைப் பூராவும் விற்பனை செய்தால் அதிலிருந்து

ஐந்து இலட்சம் ரூபாய் வந்தால் அதற்கு வட்டியாக ரூ. 55,000 வரும். அப்படிவரக்கூடிய வட்டியை வைத்துக்கொண்டு சிறப்பான முறையில் அங்கு பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு உயர்ந்த ஊதியம் கொடுக்கலாம். அதோடுகூட பல இடங்களில் உள்ள கோவில்கள் பல செப்பனிடப்படாமல் மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றைக்கூட இந்த வருமானத்திலிருந்து செப்பனிடலாம். ஆகவே அப்படிப்பட்ட நல்லதொரு முறையில் வழிவகை செய்யக்கூடிய ஒரு ஏற்பாட்டை இந்த அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; தலைவரவர்களே, இங்கேயே மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களுக்கும் இதிலே கருத்து வேறுபாடு வந்திருப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆகவே இப்படிப்பட்டதொரு பிரச்னைக்குள்ளே நாம் நுழைந்து காரிய மாற்றும்போது அது நம்முடைய தமிழ்நாட்டு மக்களுடைய நீண்டகாலமாக இருக்கிற நம்பிக்கை மற்றும் பல உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு காரியங்களில் ஈடுபடவேண்டியிருக்கிறது. ஆனால் பல ஆலயங்களில் அதிகமான தங்க நகைகள்—சுவாமிக்குப் பயன்படுத்தப்படாமல் இருக்கக்கூடிய தங்க நகைகளை வைத்திருக்கக்கூடிய நிலைமைகள்கூட இருக்கின்றன. ஆகவே அப்படி முடங்கிக் கிடக்கிற அந்த நகைகளையெல்லாம் நாம் சுவாமிக்குப் பயன்படுத்துகிற நகைகளைத் தவிர மற்ற நகைகளை தங்கமாக மாற்றி அதை மார்க்கட் நிலவரத்திற்கு விற்று முதலீடு செய்தால் நிச்சயமாக கோடிக்கணக்கான ரூபாய் வட்டியாக வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இதில் நுழைந்து காரியங்களாற்றும்போது மக்கள் உணர்வுகளை எல்லாம் நாம் மதிக்காக வேண்டும். குறிப்பாக இந்த ஆலயத்தில் கூட நகைகளாக இருக்கிற அல்லது நகைகள் அல்லது காணிக்கையாக வந்துள்ள சிறுசிறு தங்கமாக இருப்பதை எல்லாம் சேர்ந்து 36,316 கிராம் இருக்கிறது; அறுபது, எழுபது இலட்சம் ரூபாய் மதிப்புள்ளது. அந்த சுவாமிக்குப் பயன்படுத்துகிற தங்கம் அல்லது தங்க நகைகள் தவிர மற்றவற்றையெல்லாம் அப்படிச் செய்யலாமா என்று ஆரம்பிக்கிறபோது அதில் நிர்வாகச்சிக்கல்கள் வந்துவிடும். அதை உருக்கும்போது ஒழுங்காக உருக்கினார்களா, யார் உருக்கினார்கள்எப்படி உருக்கினார்கள்என்று - ஏதாவதுநல்ல காரியம் செய்ய நாம் உள்ளே நுழைந்தால் அதில் பல சிக்கல்கள் பலவில்லங்கங்கள் தோன்றலாம். ஆகவே பாம்புப் புற்றுக்குள்ளே கையை விடுவது போன்றதொரு நிகழ்ச்சியாக ரொம்ப ஜாக்கிரதையாகப் பார்த்து உள்ளே நுழைந்து காரியமாற்ற வேண்டியதொரு விஷயம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து பரிசீலனைக்குரிய கருத்து. என்றைக்காவது ஒரு நாள் செயல்படுத்தப்பட வேண்டிய கருத்து, இது.



## கொல்லிமலைப் பகுதியில் சுற்றுலாத்துறை மூலம் மேற்கொள்ளவிருக்கும் பணிகள்.

629—(*வினா எண்.19847)—திரு.சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கொல்லிமலையைச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் சுற்றுலாத்துறை மூலம் மேற்கொள்ள இருக்கும் பணிகள் என்னென்ன?

(ஆ) அந்த பணிகளுக்காக அரசு அளித்துள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ): கொல்லிமலையைச் சுற்றுலா பயணிகளைக் கவரும் விதத்தில் மாவட்ட உலாத்தலங்களின் கீழ் பல திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

சோளக்காட்டிலிருந்து அறப்பளீஸ்வரர் கோயிலுக்குச் செல்லும் பாதையை அபிவிருத்தி செய்வதற்கு 40 இலட்சம் ரூபாய், ஒரு தங்கும் வசதியுடன் கூடிய துயிலக விடுதி அமைப்பதற்கு இரண்டு இலட்சம் ரூபாய், கோயிலுக்கு அருகில் சிறு பழத்தோட்டத்துடன் கூடிய பூங்கா அமைக்க 3 இலட்சம் ரூபாய், செம்மேட்டிலும் மற்றும் சேலூரிலும் தொலைநோக்கி அமைக்க 2.70 இலட்சம் ரூபாய், அது தவிர இளைஞர் இல்லம் கட்டுவதற்கு ஐந்து இலட்சம் ரூபாய்—ஆக இப்படி பல்வேறு திட்டங்கள் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும் நம்முடைய போக்குவரத்துக் கழகத்தின் மூலமாகவும் வேறு சில திட்டங்களின் மூலமாகவும் நிதி உதவி பெற்று இங்கே இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிற கருத்து பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, கொல்லி மலையை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் பல்வேறு திட்டங்கள் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த ஆண்டு எந்தெந்த திட்டங்களை எடுப்பதற்கு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் நம்முடைய போக்குவரத்துக் கழகத்தினுடைய உதவியைப் பெற்றும் சில குறிப்பிட்ட திட்டங்களை, எந்தெந்த திட்டங்களை நிறைவேற்ற முடியுமோ அவைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

[1984 ஏப்ரல் 24

## ஆற்காடு தாலுகாவை தொழில் துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்கும் திட்டம்:

630—(* வினா எண். 19179) திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் துறையில் ஆற்காடு தாலுகாவை பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) தமிழ்நாட்டில் இதுவரை மத்திய அரசு அறிவித்துள்ள தாலுகாக்கள் எத்தனை? தமிழகம் அறிவித்துள்ள தாலுகாக்கள் எவை?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மைய அரசு தற்போது அறிவித்துள்ள 10 சதவீத மூலதன மானியத் திட்டத்தின் கீழ் ஆற்காடு வட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மைய அரசு 15 சதவீத மூலதன மானியத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 30 வட்டங்களை அறிவித்துள்ளது. இந்த வட்டங்களைத் தவிர 10 சதவீத மூலதன மானியத் திட்டத்தின் கீழ் ஒன்பது மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மாநில அரசு அறிவித்துள்ள வட்டங்கள் 33 ஆகும். அவை பின்வருமாறு:—

| | வட்டம். | மாவட்டம். |
|---|---|---|
| 1 | மதுராந்தகம் | செங்கற்பட்டு |
| 2 | பொன்னேரி | ,, |
| 3 | கும்மிடிப்பூண்டி | ,, |
| 4 | பெரியகுளம் | மதுரை |
| 5 | போளூர் | வட ஆற்காடு |
| 6 | வந்தவாசி | ,, |
| 7 | செங்கம் | ,, |
| 8 | செய்யார் | ,, |
| 9 | அறந்தாங்கி | புதுக்கோட்டை |
| 10 | ஆவுடையார் கோவில் | தென் ஆற்காடு |
| 11 | செஞ்சி | ,, |
| 12 | திருக்கோவிலூர் | ,, |
| 13 | உளுந்தூர்பேட்டை | ,, |
| 14 | கள்ளக்குறிச்சி | ,, |



1984 ஏப்ரல் 24]

| | | |
|---|---|---|
| 15 | திட்டக்குடி | தென் ஆற்காடு |
| 16 | சிதம்பரம் | ,, |
| 17 | காட்டுமன்னார்கோயில் | ,, |
| 18 | திண்டிவனம் | ,, |
| 19 | ஒரத்தநாடு | தஞ்சாவூர் |
| 20 | பேராவூரணி | ,, |
| 21 | முசிறி | திருச்சிராப்பள்ளி |
| 22 | அரியலூர் | ,, |
| 23 | விளாத்திக்குளம் | திருநெல்வேலி |
| 24 | நாங்குனேரி | ,, |
| 25 | தோவாளை | கன்னியாகுமரி |
| 26 | ராசிபுரம் | சேலம் |
| 27 | பழனி | மதுரை |
| 28 | அவினாசி | கோயம்புத்தூர் |
| 29 | கூடலூர் | நீலகிரி |
| 30 | தாராபுரம் | பெரியார் |
| 31 | ராதாபுரம் | திருநெல்வேலி |
| 32 | வானூர் | தென்னாற்காடு |
| 33 | கந்தர்வகோட்டை | புதுக்கோட்டை |

மேலும் கீழ்க்கண்ட நான்கு வகைத் தொழில்கள் இம்மாநிலத்தில் மைய மற்றும் மாநில அரசு மூலதன மானியத்திட்டத்தின்கீழ் அறிவிக்கப்படாத பகுதிகளில் துவங்கப்பட்டால் அவைகளுக்கு 10 சதவீத மூலதன மானியம் வழங்கப்படும். இம்மானியத்தின் உயர்மட்ட அளவு ரூ. 10 இலட்சமாக இருக்கும்:—

1 எலக்ட்ரானிக்ஸ்.

2 அடிப்படை மருந்துகள் மற்றும் ஷெட்யூல்டு மருந்துகள் தயாரித்தல்.

3 ஆட்டோமொபைல் துணைத்தொழில்கள்.

4 சூரிய விசையைப் பயன்படுத்தும் கருவிகள், இயந்திரங்கள் போன்றவைகளைத் தயாரிக்கும் தொழில்கள்.

[1984 ஏப்ரல் 24

திரு. ஏ. எம். சேதுராமன்: தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், 30 வட்டங்களை 15 சதவீதம் மூலதன மானியத் திட்டத்தின்கீழ் மைய அரசு அறிவித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது ஆனால் ஆற்காடு வட்டம் 10 சதவீதம் மானிய அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. ஆற்காடு தாலுகா 1973-ல் வாலாஜா தாலுகாவில் இருந்து பிரிந்து தனி தாலுகாவாக பத்து பதினோரு ஆண்டுகளாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே வாலாஜா தாலுகா எந்தக் கொள்கையின் அடிப்படையில் மைய அரசால். அறிவிக்கப்பட்டிருக்கிறதோ அதே அடிப்படையில் ஆற்காடு வட்டமும் அறிவிக்கப்பட அரசு ஏதாவது சிபாரிசு செய்து அனுப்பியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த வாலாஜா தாலுகா மைய அரசினுடைய மானியம் பெறுகிற தாலுகாவாக இருந்தது. அதிலிருந்து ஆற்காடு பிரிந்தபோது, புதிய தாலுகாவாக ஆன போது அந்த மானியம் பெறுகின்ற சலுகையை இழந்தது. இருந்தாலும், ஏற்கனவே வாலாஜா தாலுகா அதிலே ஒரு பகுதியாக இருந்தது. வாலாஜா தாலுகா பகுதி பின்தங்கிய பகுதி என்பதை மைய அரசுக்குச் சுட்டிக்காட்டி, அதை பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று மைய அரசுக்கு ஏற்கனவே கடிதம் எழுதியிருக்கிறோம்.

திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைக்கப்படுகின்ற தொழிற்சாலைகள், தொழிற்பேட்டைகள் தனியார் துறைகளைச் சார்ந்தவைகளாக இருந்தாலும், அரசுத் துறையைச் சார்ந்தவையாக இருந்தாலும். அவை அத்தனையும் வாலாஜா தாலுகாவிலே ஆரம்பிக்கப்படுகின்றன. 1983 ஆம் ஆண்டு ஏப்ரலிலிருந்து ஆற்காடு வட்டம் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்தும், இதுவரை எந்தத் தொழிலும் தனியார் மூலமாகவோ அரசுத் துறை மூலமாகவோ ஆரம்பிக்கப்படவில்லை. தயவுசெய்து, மிகவும் பின்தங்கிய பகுதியாக உள்ள ஆற்காடு வட்டத்தில் அரசு சார்பில் பெரு முதலீட்டில் தொழிற்சாலை துவங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளை ஆரம்பிக்கின்றபோது, பரவலாக பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்க வேண்டுமென்பதை கவனத்தில் கொண்டு ஆரம்பிக்கப்படுகின்றன. சில நேரங்களில் மற்றப் பிரச்னைகளையும் கவனத்தில் கொண்டு, மற்ற தாலுகாக்களில் தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வையும் அரசு வனத்தில் கொள்ளும்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அறிவித்திருக்கக்கூடிய முறையில் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்படுகின்றபோது, சில தாலுகாக்கள், வட்டங்கள் ஆகியவற்றில் தொழில்களை



1984 ஏப்ரல் 24]

ஆரம்பிப்பதற்கு வரக்கூடிய தொழில் அதிபர்கள் லைசன்ஸ் பெறுவதில், கடன் பெறுவதில், மின்சாரம் பெறுவதில், சில சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தினால், தொழில்களை ஆரம்பிக்காமல் இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் அவர்களுக்கு கடன் பெறுவதற்கும், மின்சாரம் பெறுவதற்கும், மற்ற வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கடன் பெறுவதிலே எந்த விதமான கஷ்டமும் இல்லை. மின்சாரம் பெறுவதிலே கஷ்டம் இருந்தால், அதற்கு பற்றாக்குறை காரணமாக இருக்கலாம். அதைப் போக்குவதற்கு மின்சார உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையில், அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே. மைய அரசு அறிவித்திருந்த 15 சதவீதம், மாநில அரசு அறிவித்திருந்த 15 சதவீதம், இந்த இரண்டும் சேர்ந்து பெறுகின்ற சில பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் இந்தச் சலுகைகளைப் பொறுத்த வரையில், மாநில அரசு கொடுக்கின்ற 15 சதவீதமும், மைய அரசு கொடுக்கின்ற 10 சதவீதமும் சேர்த்து தொழில்களைத் துவங்குபவர்களுக்கு கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாநில அரசு ஏற்கனவே அறிவித்திருந்த 15 சதவீதம் மானியத்தை தகொடுப்பதற்கு, மைய அரசு 10 சதவீதம் மானியத்தைப் பெறுகின்ற பகுதிகளுக்குப் பதிலாக, தமிழ்நாடு முழுவதும் 15 சதவீதம் என்று வைத்துக் கொண்டு, மேலும் சில தாலுகாக்களை அறிவிக்கலாமா என்பதை ஏற்கனவே அரசு ஆய்ந்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பின்தங்கிய பகுதிகளை அறிவித்து, மானியங்கள் அளிக்கக்கூடிய வகையில், தொழில்களை துவங்க ஏற்பாடு செய்யக்கூடிய நேரத்தில், மிகமிக பின்தங்கிய பகுதிகள் சில விடப்பட்டிருக்கின்றன. நம் மாநில சர்க்கார் அறிவித்திருக்கக் கூடிய அந்த லிஸ்டில்கூட, நெல்லை மாவட்டத்தில் விளாத்திகுளம், நாங்குனேரி வட்டாரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன ஆனால், ஓட்டப்பிடாரம் வட்டம் சேர்க்கப்படவில்லை. அது மிகமிக பின்தங்கிய பகுதியாகும். அங்கே தொழில்களை துவங்குவதற்கு ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில், மானிய உதவி அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தாலுகாவை பின்தங்கிய பகுதியாக அறிவிக்கின்றபோது, அந்தத் தாலுகாவில் ஏற்கனவே இருக்கின்ற தொழில்கள், அவற்றிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள், அந்த நிலத்தின் மதிப்பு, ஏற்கனவே அங்கே இருக்கின்ற தண்ணீர் வசதி, மின்னும் பல்வேறு வகையான வசதிகள், அதாவது பேசிக் பாக்டர்ஸ் போன்றவற்றை கவனத்திலே கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் சிபார்சு செய்யப்பட்டு அந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. இதற்குப் பிறகு, அரசு சில தாலுகாக்களை அறிவிக்கின்றபோது, பின்தங்கிய பகுதியென மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு, அரசுக்கு வருமேயானால், அது அரசால் பரிசீலனை செய்யப்படும்.

## Personel Laws of Old Travancore State

631—*Q.No. 22769. THIRU J. HEMACHANDRAN:—Will the Hon. the Minister for Handloom and Co-operation be pleased to state—

(a) whether any of the old Travancore State personnel Laws are still applicable in the State of Tamil Nadu or any part of Tamil Nadu

(b) what are all those laws; and

(c) whether the Government of Tamil Nadu had any intention to replace such Laws?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) — வாரிசு முறைச் சம்பந்தப்பட்ட சட்டமான திருவிதாங்கூர் கிருஸ்துவ வாரிசுமுறை ஒழுங்கு விதி, 1092 என்ற ஒரே ஒரு சட்டம் தான் கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை தாலுகா விலும் மலில் இருப்பதாக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளர் கூறியுள்ளார்.

(இ) அத்தகைய கருத்து எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(முற்பகல் 9.40)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி வட்டத்திற்கு மட்டும், இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், நாயர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், நம்பூதிரி சமுதாயத்தை சேர்ந்தவர்கள், ஈழவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி தனிச்சட்டங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. Hindu Marriages Act, Hindu Succession Act போன்ற சட்டங்கள் அவர்களுக்கு அப்ளிகபில் அல்ல என்று சொல்லப்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? இது சம்பந்தமாக அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?





மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கூட, Mohammadan Law, Hindu Law, Indian Succession Act, இப்படி பல்வேறு பிரிவினருக்காக, இந்து பிரிவினருக்காகத் தனியாகவும், இஸ்லாமியருக்குத் தனியாகவும், கிறிஸ்தவர்களுக்குத் தனியாகவும் இருப்பதுபோல், ஏற்கனவே திருவிதாங்கூர் மாநிலத்திலே இருந்த காரணத்தினால் அந்தப் பகுதியில் ஏற்கனவே இருந்து வந்த இதுபோன்ற சட்டங்கள் இதில் சில பகுதிகள் நம்முடைய மாநிலத்தில் இணைக்கப்பட்டதாலும், இந்தச் சட்டங்கள் இருந்துவருகிறது. இப்படி இருந்துவருவது உயர்நீதி மன்றத் தீர்ப்பையொட்டி அமலில் இருந்துவருகிறது. நாமே இதற்குப் பதிலாக மாற்றுச் சட்டம் கொண்டுவரமுடியாது. ஏனென்றால் ஒரு மதத்தை அல்லது சமுதாயத்தை அல்லது ஒரு பிரிவை பாதிக்கும் என்ற பிரச்சினைகள் வரும். ஆகவே இது போன்று மாற்றவேண்டுமென்று; அந்தச் சமுதாயத்தினரிடமிருந்து, அந்தப் பிரிவினரிடமிருந்து மனுக்கள் வருமேயானால், அப்போது அதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: இப்போது திருவிதாங்கூர் ராஜ்யத்தினுடைய பெருவாரியான பகுதிகள் கேரள மாநிலத்திற்குச் சென்று, 1975-ல் கேரள அரசாங்கம் Kerala Joint Hindu Families Abolition Act என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு, பொதுவாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படக்கூடிய சட்டத்தை அமல் படுத்தும் முறையில் சட்டத் திருத்தம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அதேபோல், சட்டம் கொண்டுவருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் ஏற்கனவே சொன்ன பதில்தான் மீண்டும் பொருந்தும். இஸ்லாமிய மதத்தினருக்கு மொஹமடன் லா, இந்துக்களுக்குத் தனியாக இந்து லா, கிருஸ்த்தவர்களுக்கு இந்தியன் சக்சஷன் லா என்று இப்படிப் பல்வேறு சட்டங்கள் சென்ட்ரல் ஆக்ட்டாக இந்தியா முழுவதும் இருக்கிறது. திருவிதாங்கூர் பகுதியில் ஏற்கனவே இருந்த சில விதிகள், அந்தந்த சம்பந்தப்பட்ட சமுதாயத்தினருக்கும், பிரிவினருக்கும் இருந்து வந்த விதிகள், சட்டங்கள், அதிலே சில சட்டங்கள் மட்டும் அப்படியே இருக்கிறது. அவர்கள் கோர்ட்டுக்குப் போய், அது இன்னும் எடுக்கப்படாமல் இருக்கிறது அது அப்ளிகபள் என்று கோர்ட்டு சொல்லி, அப்படியே இருக்கிறது. ஆனால் அந்தச் சமுதாயத்தினரிடமிருந்து ஏதாவது ரெப்ரசென்டேஷன் வருமேயானால், அதைப்பற்றி பரிசீலிக்கப்படும். ஏனென்றால், நாமே செய்தால், அது அவர்களுடைய உரிமையை பாதிப்பதாக அவர்கள் பிரச்சினையை எழுப்பலாம்.

திரு. மு. ஜான் வின்செண்ட்: மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்போது, திருவிதாங்கூர் மாநிலச் சட்டங்கள் தமிழ்நாட்டில் குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை தாலுகாவிற்குப் பொருந்தும் என்று சொன்னார்கள். இப்படி இருக்கிற ஒரு சட்டத்தை விஸ்தரித்து, அதை மாவட்ட அளவில் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாவட்ட அளவில் மற்றப் பகுதிகளில் Indian Succession Act, Mohammadan Law, Hindu Laws, போன்ற சட்டங்கள் அமலில் இருக்கின்றன.

செங்கற்பட்டு, திண்டிவனம் இடையே தேசிய நெடுஞ்சாலையில் நிகழும் சாலை விபத்துக்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கும் திட்டம்.

632—*வினா எண் 16494 )திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டிலிருந்து திண்டிவனம் வரையில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் நிகழும் சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்க மதுராந் தகத்தில் சிறப்புத் தனிப்பிரிவு துவக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்

(ஆ) இதற்கான ஆணை 1983 மே மாதம் 17ந் தேதி பிறப்பிக்கப்பட்டது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, மதுராந்தகத் தில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை உடனடியாக ஏற்படுத்துவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்று அமைச்சரவர்கள் தெரிவித்ததற்காக என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விபத்துப் பிரிவு எப்போது கட்டி முடிக்கப்படும் அதனுடைய மதிப்புத் தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா மேலும் பிண ஊர்தி தேவையென அரசுக்கு கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும் பரிசீலித்து ஆவனசெய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்த ஊர்தியைப்பற்றி நம்முடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வரவில்லை. அதைப்பற்றி நாம் ஆராயலாம். ஆனால் இந்த திட்டத்தை நாம், 4, 5 கட்டங்களாக நடத்திக்கொண்டு வருகிறோம். முதலில் மதுரை, ராமநாதபுரம் திருநெல்வேலி, கன்னியாகுமரி



பர்ஸ்ட் ஃபேஸ் திருச்சி, கோவை, நீலகிரி, பெரியார்; இரண்டா வது ஃபேஸ், தென் ஆற்காடு, சேலம் மாவட்டங்கள்; மூன் றாவது கட்டம், செங்கற்பட்டு, தர்மபுரி, மாவட்டம் இப்போது நான் சொன்னேனே, 17-5-1983-ல் இந்த ஆணை போடப்பட்டுள்ளது என்று இது நான்காவது கட்டம். ஐந்தாவது கட்டமாக, வட ஆற்காடு பார்ட்—2 ஸ்கிமில் நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

திரு. எஸ். டி. உகம்சந்த் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு மதிப்பீடு என்பதை அறிவிக்க இயலுமா? அத்தோடு விபத்து ஏற்படுகின்றபோது, பலர். மரணம் அடையக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. விபத்திலே அடிபட்டு இறந்தவர்களை ஆம்புலன்ஸ் வண்டியிலே ஏற்றுவ தில்லை, எனவே அதற்கு என்று ஒரு பிண ஊர்தியை அரசு வழங்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுராந்தகத்தைப் பொறுத்த வரையிலும், இந்தக் குறிப்பிட்ட பகுதியைப் பொறுத்தவரை யிலும், 10 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டும் அதற்காக ஒரு ஊர்தி ஆகியவற்றுக்காக 1.2 லட்சம் ரூபாய் செலவில் ஒரு ஸ்டான்டர்டு டீசல் வண்டியை நாம் ஏற்பாடு செய்திருக்கி றோம். ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுவதும் இந்த 5 கட்டங்களில், 6.5 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

திரு பு கோ. ஆனூர்ஜகதீசன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்திலேயிருந்து திண்டிவனம் வரையிலும் உள்ள தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் இந்த மாதத்தில் மட்டும் ஏறக்குறைய 16 விபத்துக்கள் நடந்துள்ளன. இதனால் 94 பேர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் செங்கற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். இதிலே 11 பேர்கள் இறந்திருக்கிறார்கள். இந்தப் பகுதி நெரிசல் மிகுந்த போக்குவரத்துப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், நாளுக்கு நாள் விபத்துக்கள் அதிகரித் துக்கொண்டு வருகின்றன. கடந்த 15 தேதிக்கு முன்பாக சிங்கபெருமாள் கோயில் பகுதியில் போக்குவரத்து சம்பந்தப் பட்ட அந்த விபத்தில் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்று பார்த்து அவர்களுக்கு ஆறுதல் சொன்னார்கள். மதுராந்தகம் மருத்துவமனையில் போதிய நவீன கருவிகள் இல்லை என்று சொல்லப்படுகிறது. தகுதிபெற்ற சிறப்பு மருத்துவர்கள் அங்கே இல்லை. ஆகவே அங்கே வருகின்ற நோயாளிகளைக்கூட விபத்திலே பாதிக்கப்பட்டவர்களைக்கூட செங்கற்பட்டிற்கு கொண்டு போய் அங்கே உள்ள மருத்துவ மனையில் சேர்ப்பதற்காக அனுப்பி வைக்கிறார்கள். திடீரென 40, 50 பேர்கள் மொத்தமாக வருவதால் விபத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதிய கவனத்தோடு விரைவாகப்

பணிகளைச் செய்ய முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. அதனால் ஏற்படும் ஏராளமானஇழப்புகளைத் தவிர்க்க முடியவில்லை. ஆகவே விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக தீவிரசிகிச்சை அளிக்கவும், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் இருக்கின்ற, பயிலுகின்ற மாணவர்களுக்குப் போதிய நல்ல பயிற்சி அளிக்கவும் செங்கற்பட்டு மருத்துவ மனையில் எல்லாவிதமான வசதிகளும் இருக்கக்கூடிய அளவில், தனியாக ஒரு விபத்துப் பிரிவை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய கருத்துக்கள் ஏற்றுக் கொள்ள கூடிய கருத்துக்களாக இருந்தாலும், நிதி நிலைமையைப் பொறுத்துதான் நாம் பல திட்டங்களைத் தீட்டவேண்டியிருக்கிறது. ஆகவே செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையைப் பொறுத்த வரையிலும், இந்தத் திட்டத்தின் கீழ்நாம் கொண்டு வருவதற்கு காலதாமதமாக இருந்தாலும்கூட அந்த நெடுஞ்சாலையிலே இருக்கக்கூடிய ஒரு மையமான இடத்தில் அந்த மருத்துவக் கல்லூரியினுடைய மருத்துவமனை இருக்கின்ற காரணத்தாலே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய அந்தக் கோரிக்கையை நாம் நிச்சயமாக ஆராயலாம். அங்கே இன்னும் நல்ல ஸ்பெஷலிஸ்ட்கள் இருக்கக்கூடிய அளவிற்கு நிலைமைகளை நாம் செய்யலாம். இந்த மருத்துவமனையிலே கூட கொஞ்சம் கூடுதலாகப் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தி நல்ல வகையில் இதற்கு என்று ஒரு பிரிவை ஏற்படுத்துவது சாலச்சிறந்ததாக இருக்கும் அதை நிச்சயமாக அரசாங்கம் கவனிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று ஒரு பொதுவான கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். விபத்துக்கள் அதிகரித்துக்கொண்டு போகின்றன, அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் இந்த திட்டத்தின் கீழே, 5 ஃபேஸ் என்று சொன்னேனே முதல் பேஸ் இரண்டாம் பேஸ், மூன்றாம் பேஸ் என்று இப்படி 5 கட்டங்களாக நாம் கொண்டு வந்ததிலே இன்னொன்றையும் நாம் செய்து கொண்டிருக்கிறோம். ஏதாவது ஒரு இடத்திலே விபத்து ஏற்படுமானால் ஏற்பட்டு விட்டால் உடனடியாக போலீஸ் இலாகாவோடுநம்முடைய இலாகா தொடர்பு கொண்டுபோலீஸ் சைரன் மூலமாக 10 ஊர்திகள் நாம் வாங்கியிருக்கிறோம். இதற்கு ரூ.65கோடிசெலவு என்று சொன்னேன். அந்த வண்டிகள் உடனடியாக வருவதற்காக போலீஸ் சைரனை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆகவே இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையிலும் போலீஸ் இலாகாவோடு, டிரான்ஸ்போர்ட் இலாக்காவோடு, நாம் இணைந்துசெயல்படக்கூடிய செயல்படுத்தக் கூடிய ஒரு திட்டமாக இதைநான் கருதுகிறேன்.





திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற போது, இரண்டாவது கட்டமாக தென்னாற்காடு மாவட்டதிலே சேர்த்து செய்யப்படும் என்று சொன்னார்கள். அது எப்போது செய்யப்படும்? அதை உடனடியாகச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் ஆணையிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காட்டைப் பொறுத்தவரையில் சேலத்தில், ஜி.ஓ.எம்.எஸ். நெம்பர் 751, தேதி 1-4-1982-ன்படி 3-வது கட்டத்திலே நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விபத்திற்கான காரணங்களையும் விளக்கினார்கள். அது ஒரு பக்கம் இருக்க, எனக்கு முன்னாலே ஒரு உறுப்பினர் கூறியது போல, சென்னையிலிருந்து திண்டிவனம் போன்ற பகுதிகளில் ஓடக்கூடிய அந்த நெடுஞ்சாலைகளில் தான் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. அந்த விபத்துக்குள்ளானவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு ஊர்தி வாங்குவது பற்றி இப்போது சொன்னார்கள். அதற்காக அமைச்சருக்கு நன்றி. ஆனால் அந்த மருத்துவமனையில் இதற்கென்றே ஸ்பெஷலாக ஒரு எமர்ஜென்சி வார்டு, 24 மணி நேரமும் வேலை செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட வார்டைப் பொதுவாக செங்கற்பட்டிலே வைத்துக் கொடுத்தால் நலமாக இருக்கும். அண்மையிலே கூட சிங்கபெருமாள் கோவிலிலே நடந்த விபத்து பற்றிக்கூட மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னார். உடனடியாக கவனிக்கப்படாததால்தான் அந்த உயிர்களைக் காப்பாற்ற முடியவில்லை. ஆகவே, உடனடியாக இதற்காகவே எமர்ஜென்சி வார்டு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா? அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனூர் ஜெகதீசன் அவர்களும் கேட்டார்கள். இந்தக் குறிப்பிட்ட சிங்கபெருமாள் கோவில் விபத்தைப் பொறுத்தவரையிலே, உடனடியாக கவனிக்கப்பட்டது என்பது மாண்புமிகு உறுப்பினர் ஜகதீசன் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். நான் கூட அன்று இரவே அங்கே போய் பார்த்தேன். அடுத்த நாள் நம்முடைய டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் கூட போய் பார்த்தார்கள். பொதுவாக நான் ஏற்கெனவே சொன்ன இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே முதன் முறையாக நம்முடைய மாநிலத்திலே தான் நாம் ஏற்படுத்தி இருக்கிறோம்.

இந்தத் திட்டத்தை எப்படி ஏற்படுத்த முடிந்தது என்றால், சில ஆண்டுகளுக்கு முன்பாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது, அங்கே பல இடங்களிலே ஏற்பட்ட விபத்துக்களுக்கு, செய்யப்பட்டிருக்கக் கூடிய நடைமுறைகளை, திட்டங்களைப் பார்த்தார்கள். அவைகளையெல்லாம் ஏன் நம்முடைய தமிழகத்தில் கொண்டு வரக் கூடாது என்றுதான் அன்றைக்கு, டாக்டர் நடராஜன் அவர்களை அழைத்து—அவர் இப்போதும் கூட இந்த ஆக்ஸிடென்ட் துறையிலே ஸ்பெஷலிஸ்ட்டாக இருக்கிறார்கள் — இதற்குத் திட்டம் தயார் செய்யச் சொல்லி, அவர் தயாரித்த அந்த வரைவு திட்டத்தைத் தான் நாம் இப்போது செயலாற்றிக் கொண்டு வருகிறோம்.

இந்தத் திட்டத்தின் கீழே இதற்காக தனியாக, 30 படுக்கைகளை, அது மருத்துவக் கல்லூரியோடு இணைந்த மருத்துவமனையாக இருந்தால் கொடுத்திருக்கிறோம். நான்—டீச்சிங் ஹாஸ்பிடலுக்கு 10 படுக்கைகளை இதற்காகவே கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல் 301 பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு ஆக்ஸிடென்ட் எய்ட் கிட்ஸ்களையும் கொடுத்திருக்கிறோம். தற்போது 3 ஆயிரம் இன்—பேஷன்டுகளும், 73 ஆயிரம் அவுட் பேஷன்டுகளும், ஆக்ஸிடென்ட் விக்டிம்ஸ் என்ற வகையில இந்தத் திட்டத்தின் கீழே பயன் அடைந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 'அலோபதி' மருந்துகளை நீண்டகாலம் தொடர்ந்து உட்கொள்வதால் ஏற்படும் விளைவுகள்,

*633 வினா எண். 18944—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அலோபதி மருந்துகளைத் தொடர்ந்து இருபது வருடம் சாப்பிட்டால் பிறகு மருந்து செயலற்ற நிலைமை ஏற்பட்டு விடுவது என்பது உண்மையா?

(ஆ) அப்படியானால் அலோபதி நிலைமை என்ன ஆவது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:(அ) அண்டு (ஆ) ஒரு சில குறிப்பிட்ட அலோபதி மருந்துகளை நீண்டகாலம் தொடர்ந்து உட்கொண்டால் அந்த மருந்து பலனளிக்காமல் போய் விடுவதும் உண்டு. ஆனால் இவ்விதம் பலனளிக்காமல் போகும் மருந்துகளுக்கு மறுபடியும் செயலாக்கக்கூடிய மாற்றுசக்தி மருந்துகள் அலோபதியில் நிறைய உள்ளன. மேலும் தற்பொழுது இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அலோபதியில் புதுப்புது மருந்துகள் பல்வேறு சக்திகள் அடங்கியவைமாய் தயாரிக்கப்படுகின்றன. ஆதலால் அலோபதி மருந்துகள் செயலற்றுப் போவது என்ற நிலைமை ஏற்படாது.



திரு. வேடசந்தூர் வி. பி பாலசுப்பிரமணியன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலோபதி மருந்துகள் தொடர்பான மிக முக்கியமான மற்றொரு கேள்வி. அது தொடர்பாக எற்படுகின்ற ஒரு பிரச்னை என்னவென்றால் இந்தியாவிலே இருக்கிற நிபுணர் குழுவினர் கூட இதைச் சொல்வதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. இந்தியாவிலே இருக்கிற 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட எக்ஸ்ரே யூனிட்டுகள் அதற்குரிய விதிமுறையின்படி அமைக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. எக்ஸ்ரே யூனிட்டுகள் சில விதிமுறைகளின்படி அமைக்கப்பட வேண்டும். ஆனால் அப்படி அமைக்கப்படாததினாலே அந்த எக்ஸ்ரே யூனிட் அமைந்திருக்கிற சாலை வழியாக போகிறவர்களுக்குக் கூட பிளட் கான்சர் வருகிறது என்றும் அந்த வழியாகச் செல்பவர்களுக்கு பிறக்கின்ற குழந்தைகள் கூட ஊனம் உற்று பிறக்கின்றன என்றும் சொல்கிறார்கள். இப்படி ஒட்டு மொத்தமாக இந்தியா முழுவதும் உள்ள 90 சதவீத எக்ஸ்ரே யூனிட்டுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். இது குறித்து அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? வரவில்லை என்றாலும் கூட இதன் மீது நடவடிக்கை எடுத்து அதைத் தடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியில் இந்த அலோபதி மருந்துகளைத் தொடர்ந்து உட்கொள்வதாலே ரெஸிஸ்டென்ஸ் பவர் குறைகிறதா என்பது மூலக் கேள்வி. ஆனால் இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். எக்ஸ்ரே கருவி வைத்திருக்கும் யூனிட்டுகளிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு எக்ஸ்ரேவிலிருந்து ரேடியேஷன் வெளிவருவதினாலே அவர்களுக்கு ஏதாவது இர்ரேடியேஷன் ஏற்படுகிறதா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்காக நாம் என்ன செய்திருக்கிறோம் என்றால் பில்லை மாதிரியாக Baba Institute of Atomic Research Centre என்று சொல்லக்கூடிய BARC என்று சொல்லக்கூடிய அந்த நிறுவனத்தின்மூலமாக பில்லைகளை எல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். எல்லா நபர்களும் டாக்டர்களாக இருந்தாலும் செவிலியர்களாக இருந்தாலும் எக்ஸ்ரே கருவிகளுக்கு பக்கத்திலே பணியாற்றுகிறவர்களுக்கு எவ்வளவு ரேடியேஷன் வருகிறது என்பதை பார்ப்பதற்காக அதை வைத்துக்கொண்டு பணியாற்றக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறோம். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பாபா இன்ஸ்டியூட்டிற்கு அனுப்பி எவ்வளவு ரேடியேன் வந்திருக்கிறது என்று பார்க்கிறோம். அங்கே பணியாற்றுகிறவர்களை 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை வேறு. பணிக்கு மாற்றுகிறோம், இந்த மாதிரி எல்லாம் செய்வதால் அவர்களுக்கு irradiation வராமல் பார்த்துக்கொண்டிருக்கிறே

## கும்பகோணம் அரசு மருத்துவ மனையில் கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடம்

*634வினா எண் 21572 திரு. செ. இராமலிங்கம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கும்பகோணம் அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டு இரண்டாண்டுக் காலம் ஆகியும் தேவையான படுக்கைகள் மருத்துவர் உதவியாளர்கள் நியமிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) எப்பொழுது நியமிக்கப்படுவார்கள்?

மாண்புமிகுடாக்டர் எச். வி. ஹண்டே(அ)மற்றும்ஆ) கும்பகோணம் அரசு மருத்துவமனையில் கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடம் செயல்பட ஏதுவாக தேவையான மருத்துவர் மற்றும் உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் மேலும் தேவையான கட்டில்களும் மெத்தைகளும் தலையணைகளும் வாங்கப்பட்டுவிட்டன.

திரு. செ. இராமலிங்கம் தலைவர் அவர்களே குடந்தை மகாமகத் திருவிழாவையொட்டி அங்கே 50 படுக்கைகள் கொண்ட ஒரு கட்டடம் கட்டப்பட்டது. 2 ஆண்டுக்காலம் கழித்துத்தான் அதற்குத் தேவையான உதவியாளர்களையும் மருத்துவர்களையும் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். திறப்புவிழா நடத்தவேண்டுமென்ற ஒரே ஒரு காரணத்திற்காக இன்று வரையில் அந்தக் கட்டடம் உபயோகப்படுத்தப்படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? உடனடியாக அதை உபயோகப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே பேரவைத் தலைவர் அவர்களே Expenditure Recurring and Non-recurring என்று இருக்கிறது. அதிலே Recurring expense என்ற முறையில் 1 லட்சத்து 95ஆயிரம் ரூபாய் அதற்காகசெலவழித்துக்கொண்டிருக்கிறோம். Non recurring expense என்ற முறையிலே 88 ஆயிரம் ரூபாய் செலவழிக்கிறோம். இப்போது தான் அந்தப் பணம் எல்லாம் கொடுக்கப்பட்டு அந்தப் பொருட்களை வாங்கியிருக்கிறோம். ஆகவே உடனடியாகச் செயல்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு உறுதியாக நான் கூறிக்கொள்கிறேன்.



திரு. செ. இராமலிங்கம் மாண்புமிகு தலைவர் அவர்களே, கும்பகோணம் அரசு மருத்துவமனையிலே நாளொன்றுக்கு ஆயிரம் பேர்களுக்கு மேல் புறநோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள், அதை மேலும் விரிவுப்படுத்தக் கூடிய முறையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு, கண் சிகிச்சைப் பிரிவு, எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு, பல் சிகிச்சைப் பிரிவு ஆகிய பிரிவுகளுக்காக தனித்தனியாகக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு ஏதாவது செயற்குறிப்பு வைத்திருக்கிறதா? குழந்தைகள்சிகிச்சைப் பிரிவு கட்டடத்திற்காக சேலம் போக்குவரத்துக்கழகம்1 லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கி இருப்பதாக அறிகிறேன். ஆகவே அங்கே குழந்தைகள் சிகிச்சைப் பிரிவைக் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா?'

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையைப் பொறுத்த வரையில் Average Number of Out-patients and Inpatients என்று முறையிலே நாம் ஒரு குறிப்பை வைத்திருக்கிறோம். 1981 ஆம் ஆண்டில் சராசரியாக ஒரு நாளைக்கு 1,489 பேர்களும்1983 இல் 1,512 பேர்களும், அதே மாதிரியாக Inpatientsஎன்ற முறையிலே 1981 ஆம் ஆண்டிலே 352 பேர்களும் 1983 ஆம் ஆண்டிலே 372 பேர்களும் வருகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. இப்படிப் பட்ட குறிப்புகளைக் கேட்கக்கூடும் என்பதற்காக நான் வைத்திருக்கிறேன். ஆகவே Number of Major Operations பொறுத்தவரையில் 1981 ஆம் ஆண்டில் 3,065ம் இப்போது கொஞ்சம் குறைந்து இருக்கிறது, 1983 ஆம் ஆண்டில் 2648-ம் நிலைமை இருக்கிறது. நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் ஒட்டுமொத்தமாக மாநில நிலைமையைப் பார்க்கிறபோது அபிவிருத்தி செய்யவேண்டுமென்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. இருந்தாலும் நம்முடைய நிதிநிலைமைக்கேற்ப அவ்வப்போது அந்தப் பணிகளைச் செய்து கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்லக் கூடிய கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்களாக இருந்தாலும் நிதிநிலைமைக்கு ஏற்ப செய்வதற்கு முடியும். நன்கொடையை பயன்படுத்துவோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் தலைவர் அவர்களே, மருத்துவமனைக் கட்டடம் கட்டியவுடன் திறக்காமல் திறப்புவிழா நடத்துவதற்கு என்று 1,2 ஆண்டுகள் என்று தள்ளி வைக்கிறார்கள், உடனடியாகச் செயல்படக்கூடிய முறையிலே ஏற்பாடுகள் செய்யப்படுமா' என்னுடைய தொகுதியிலே வானதிராஜபுரத்திலே கட்டடம் கட்டி 2 வரும் ஆகிறது, இன்னும் திறக்சப்படாமல் அப்படியே இருக்கிறது. ஆகவே இதுபோன்ற நிலைமைகள் இல்லமல் உடனடியாகச் செயல்படுவதற்கான முறையிலே ஏற்பாடுகளைச் செய்யஅரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே தலைவர் அவர்களே, நல்வாழ்வுத்துறையைப் பொறுத்த வரையில் நான் பதில் சொல்லமுடியும். அந்தக் கட்டடம் கட்டப்பட்டவுடன், யாராக இருந்தாலும் காத்துக்கொண்டு இருக்க வேண்டாம், இந்த மாதிரி வீண் காரியத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். அந்த மாதிரி இருக்கக் கூடாது என்று ஆணையிட்டிருக்கிறேன். ஆகவே அதிலே பிரச்சினையில்லை. திடீரென்று இங்கே சொல்ல முடியாது, அவர்கள் அதைப்பற்றிய குறிப்புகளைக் கொடுப்பார்களானால் எந்தக் காரணத்திற்காக அப்படி ஏற்பட்டிருக்கிறதுஎன்பதைச் சொல்லமுடியும்.சில இடங்களிலே பி.டபிள்யு.டி. நம்மிடம் ஒப்படைத்திருக்க மாட்டார்கள். சில இடங்களிலே வேலை முடிந்திருக்காது. ஏதாவது காரணம் இருக்குமே தவிர முழு விவரங்களை அவர்கள் கொடுப்பார்களானால் என்ன காரணம்என்று கேட்டு பதில் கொடுப்பது மட்டுமல்லாமல் உடனடியாகத் திறப்பதற்கும் எற்பாடு செய்யப்படும்,

## சாயல்குடியில் அரசு மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்

*635வினா எண் 21675—திரு. வ. சத்திய மூர்த்தி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியில் அரசு மருத்துவமனை ஒன்று ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (அ) ஆம்

(ஆ) மருத்துவப்பணிகள் மற்றும் குடும்பநலத்துறை இயக்குநர் இச்செயற்குறிப்பை ஆய்வு செய்து அறிக்கை தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார், அவரிடமிருந்து முடிவான அறிக்கை கிடைத்தபின் சாயல்குடியில் மருத்துவ மனை திறப்பது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்,

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது,



## திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மதுரா கோட்ஸ் ஆலையிலிருந்து வெளிப்படும் கழிவுநீர்

636—(*வினா எண். 20618) திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தாம்பிரபரணி ஆற்றில் மதுரா கோட்ஸ் ஆலையின் சாயப்பட்டரைக் கழிவு நீரைச் சுத்தம் செய்யாமல் விடுவதால் ஏற்படும் சுகாதாரக் கேட்டை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இதனைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (அ) ஆம்.

(ஆ) தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் கழிவுநீரின் தன்மையை வரையறுக்கப்பட்டுள்ள அளவுகளுக்குள் கொண்டு வருவது குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

டாக்டர் கே. சமரசம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுரா கோட்ஸ் ஆலையின் சாயப்பட்டரைக் கழவுநீர் அமிலமாக மாறி வெளியேறுவது அரசுக்குத் தெரியுமா? அது ஆற்றில் கலக்கிற காரணத்தினால் அதிலே வாழும் மீன்கள் இறந்து விடுகின்றன. அதைச் சாப்பிடுகிறவர்களுக்கு விஷ பேதி ஏற்பட்டு பலர் மரணம் அடைந்து இருப்பதாக செய்திகள் கிடைத்து இருக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட இந்த கொடுமையான இந்த ஆலையை அங்கே மூடி வேறு இடத்திற்கு அதை மாற்றம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு 2 விதமான கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது. அதிலே. சாயம் கலந்த கழிவுநீர் தாம்பிரபரணி ஆற்றிலும் சாயம் கலவாத கழிவுநீரும் வெளியேற்றப்படுகின்றது. இதிலே சாயம் கலந்த கழிவுநீரை அவர்கள் நல்ல நீராக மாற்றுவதற்கு எடுத்து இருக்கிற முயற்சி பற்றாக்குறையாக இருக்கிறகாரணத்தினால் சாயம் கலந்த அமிலமாகவும் மற்றும் சுகாதாரக் கேடுகள் விளைவிக்கக்கூடிய முறையில் அந்த நீர் தாம்பிரபரணி ஆற்றில் கலக்கிறது. ஆகவே இதற்கு புது முயற்சியை அவர்கள் எடுத்து இருக்கிறார்கள். அதற்கான காலக்கெடுவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மதுரா

கோட்ஸ் ஆலை ஜுன் மாதத்திற்குள் நல்ல நீராக மாற்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தி நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வாரியத்தின் நோக்கம் தொழிற்சாலைகளை மூடுவது அல்ல. இதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த வாரியத்தின் நோக்கம் புதிதாக தொழிற்சாலைகளை உருவாக்குகிறநேரத்தில் இந்த வாரியத்தின் அனுமதியைப் பெறவேண்டும். ஏற்கனவே லைசன்ஸ் பெற்று தொழிற்சாலைகளை ஓட்டிக் கொண்டிருக்கிற அந்த தொழிற்சாலையில் இப்படிப்பட்ட நிலம், நீர், காற்று இவைகளை மாசு படுத்துகிற தொழிற்சாலைகள் அதை மாற்றி அமைத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு காலக்கெடு கொடுக்கப்படுகிறது. அப்படிஅந்த கால கெடுவுக்குள் அந்தநிலம், நீர், காற்று இவைகளை மாசு படுத்துகிற தொழிற்சாலைகள் அவைகளை நீக்க முயற்சிக்காமல் இருக்குமானால் காலக் கெடு நீங்கிய பின்னால், தொழிற்சாலைகளை மூடுவது இந்த வாரியத்தின் நோக்கம் அல்ல. தொழிற்சாலைகளை உற்சாகப் படுத்த வேண்டும், தொழிற் சாலைகள் தமிழ்நாட்டுக்கு அதிகமாக வரவேண்டும் என்பதிலும் தொழிற்சாலைகளும் தொழிலாளர்களுக்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட்டு விடக்கூடாது என்றமுறையில் தொழிற்சாலைகளை உருவாக்குகிற முதலாளிமார்களுக்கு மேனேஜிங் டைரக்டர் இவர்கள் அந்த நிபந்தனைகளை சாலக் கெடுவுக்குள் செய்யாமல்விட்டுவிட்டால் அவர்கள் மீது இந்த சட்டத்தின்மூலம் கடுமையான முறையில் நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு ரிகரஸ் இம்பிரிசின்மெண்டு என்று சொல்லக்கூடிய முறையில் கடுமையான காவல் தண்டனை இரண்டு ஆண்டுகள் வரை முதல் தடவையாக இருந்தால் புராசிகன் பண்ணுகிற நேரத்தில் தண்டனையும் தொடர்ந்து அந்த முறையை நிவர்த்தி செய்யாமல் இருந்தால் 7 ஆண்டுகள் வரை அந்த தொழில் அதிபர்களை சிறை தண்டனைக்கு உள்ளாக்குகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் அவர் இதை தெரிந்து இந்த நிலம், நீர், காற்றை சுத்தப்படுத்துகிற முயற்சியை எடுக்க வேண்டும் என்பதுதான் இந்த வாரியத்தின் நோக்கம். அந்த முறைப்படி அம்பாசமுத்திரத்தில் உள்ள மதுரா கோட்ஸ் ஜுன் மாதத்திற்குள்ளாக இந்த முயற்சியை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகும் இந்த நிலை நீடித்தால் சட்டம் அவர்களை விட்டு வைக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருச்சி கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தின் தென்னூர்-தெற்கு விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள மனைகள்**

637—(*வினா எண். 22772) திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தின் தென்னூர்-தெற்கு விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் மனைகள் வழங்கப்பட்டுள்ளனவா?



(ஆ) ஆம் எனில், எத்தனை மனைகள் வழங்கப்பட்டுள்ளன?

(இ) வழங்கப்பட்ட மனைகளுக்கு அடிப்படை வசதி கட்டணம் வசூலிக்கப்பட்டதா?

(ஈ) ஆம் எனில், எவ்வளவு தொகை?

(உ) அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: (அ) ஆம்.

(ஆ) 452 மனைகள் வழங்கப்பட்டன.

(இ மற்றும்) ஈ) ஆம். மனைகிரயமாக ரூ. 38.69 இலட்சமும், வசதிவைப்பு தொகையாக ரூ. 11.90 இலட்சமும், முதலீடுகளின் பேரில் வட்டிக்காக ரூ. 5.05 இலட்சமும் அடங்கும்.

(உ) அடிப்படை வசதிக்காக ரூ. 8.10 லட்சம் வசூலிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட அந்த வீட்டுமனைகளில் கடந்த பத்தாண்டுகாலமாகியும் போதுமான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்காகப் பணம் வசூலிக்கப்பட்டு, அந்தப் பணத்தை வங்கியிலே வட்டிக்காகப் போட்டிருப்பதாக அறிகிறேன். அப்படி விடப்பட்ட அந்த வட்டியின் மூலமாகக்கூட அந்த மக்களுக்கு வசதி செய்து தருவது தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, நான் கேட்க விரும்புவதெல்லாம், வசதி செய்து தருவதற்காக வாங்கப்பட்ட அந்தப் பணம் வட்டிக்காக விடப்பட்டிருக்கிறதே, இது எந்தவகையில் நியாயம்? இந்தப் பணத்தை உடனடியாக எடுத்து அந்த மக்களுக்கு வசதி செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தலைவர் அவர்களே, வசதிக்காக வசூலிக்கப்பட்டிருக்கின்ற பணம் 11.90 இலட்சம் ரூபாய் ஆகும். இதில் செலவானதற்குப் பிறகு, மீதமுள்ள தொகை வங்கியிலே போடப்பட்டிருக்கிறது. வங்கியிலே

போடப்பட்டிப்பதால் வட்டி வருகிறதே தவிர, வட்டிக்காகவே வங்கியில் பணத்தைப் போட வேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால் மொத்தமாக இன்னும் அவர்கள் வழங்க வேண்டிய மனைகள் 58 இருக்கின்றன. அதற்கும் பல அடிப்படை வசதிகள் செய்யப்பட வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது; அதனால் ஒருவேளை அந்தப் பணம் வங்கியிலே இருக்கலாம் என்று நான் கருதுகிறேன். ஆனால், வசதிகள் தேவை என்று சொல்லப்பட்டால், அந்த வசதிகளைச் செய்வதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அடிப்படை வசதிகளைச் செய்ய வேண்டு மென்றுதான் அந்த மனைகளை வாங்கிய 452 பேர்கள் ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்ச ரவர்கள், பாக்கியுள்ள 58 மனைகளுக்கும் சேர்த்து வசதிகளைச் செய்து தர வேண்டுமென்ற கருத்தைத் தெரிவிக்கிறார்கள். ஆனால் 58 மனைகள் என்பது 10 சதவீதம் மனைகள்தான். 90 சதவீதம் மனைகள் விற்பனை செய்யப்பட்டு விட்டன. அந்த மனைகளில் அவரவர்கள் வீடுகளைக் கட்டிக்கொண்டிருக் கின்ற நேரத்தில், அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதி கள்ான, கழிவு நீர் வசதி, விளக்கு வசதி, சாலை வசதி போன்ற வைகள் இல்லாமல் அந்த மக்கள் அவல நிலைமைக்கு ஆளாகி, பெரிய பிரச்னை திருச்சி நகரத்தில் உருவாகிக் கொண்டிருக் கிறது. இதை மனத்தில் வைத்துக் கொண்டு, வட்டிக்கு விடப் பெற்றிருக்கின்ற அந்தப் பணத்தை ஏதாவது ஒரு வகையிலே உடனடியாகத் திரும்பப் பெற்று அந்த மக்களுக்கு வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காகக் கமிட்டி போட்டு, 50 இலட்சம் ரூபாய் தேவை என்று நகராட்சி கேட்டு ருக்கிறது. பணத்திற்குரிய மரியாதையை இழந்து வருகின்ற நேரத்தில் இந்த வசதிகளைச் செய்து தருவதற்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படிப்பட்ட ஏதாவது புகார்கள் இருந்தால் அவைகளைத் தனியாக அமைச்சரிடம் சொல்லுங்கள். எம்.எல்.ஏக்களாக இருப்பவர்களுக்கு உள்ளூர்ப் பிரச்னைகள் நிறைய இருக்கக்கூடும். எம். எல். ஏக்களாக இருந்தால் பிரச்னைகள் இருந்துதான் தீரும். இதையெல்லாம் பற்றித் தனியாக அமைச்சரிடத்தில் பேசிக்கொள்ள வேண்டும். இங்கே, சம்பந்தப்பட்ட பிரச்னையில் மட்டும் கேள்வியைக் கேட்க வேண்டும். மற்றப் பிரச்னைகளை நான் இங்கே அனு மதிக்க மாட்டேன்.



திரு. கே. சௌந்திரராசன்: நான் இதை விளையாட்டிற் காகவோ அல்லது வேடிக்கைக்காகவோ சொல்லவில்லை. அந்த மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டுமென்றுதான் கேட்கிறேன். உடனடியாக அந்த வசதி களைச் செய்து தருவதற்கு விரைந்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: தலைவரவர்களே, திருச்சி யிலேபிரச்னை உருவாகிறது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். பிரச்னை இல்லாத அளவிற்கு, இருக்கின்ற தொகையில், எந்தெந்த வசதிகளைச் செய்ய வேண்டுமோ அவைகளை அந்தக் கூட்டுறவுச் சங்கம் செய்வதற்கு அரசின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 10·10)

திரு. எல். இளையபெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நடைபெறும் என்று சொன்னார்கள். கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கொடுத்தும் இன்னும் நடவடிக்கை வரவில்லை. தனியார்களாக இருப்பவர்கள், ஸ்லம் பகுதிகளில் இருப்பவர்கள் எழுதிக் கொடுத்தும் ஒன்றும் கொடுக்கவில்லை. ஆகவே எந்த வகையிலாவது ஒருவகையில் உடனடியாகக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, பெரியவர் திரு. இளையபெருமாள் அவர்கள் எந்த வகையிலேயாவது நடவடிக்கை எடுப்பதற்கு இயலுமா என்று கேட்கிறார்கள். எந்த வகையிலேயாவது நடவடிக்கை எடுப்ப தற்கு என்னால் இயலாது. கூட்டுறவுச் சங்கத்தால் வாங்கப் பட்ட இடங்களைப் பொறுத்தவரையில் அவர்கள்தான் வசதி செய்யவேண்டும் என்ற கடமை அவர்களுக்கு இருக்கின்றது. அவர்கள் நகராட்சிக்கு ஒப்படைத்தால் நகராட்சி செய்ய வேண்டும். அவர்களுடைய மனைகளை அவர்களுடைய கையில் வைத்திருப்பதால் அவர்கள்தான் செய்யவேண்டும். அதற்கான தொகை வசூலிக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் தொகை செலவிடப் படவேண்டும் என்பதுதான் நடவடிக்கை. அதைச் செய்கிறார் களா இல்லையா என்பதைக் கண்காணிக்கிறோம். ஆனால் குடிசைப் பகுதிகளைப் பொறுத்தவரையில், அங்குள்ள பிரச்சினை களைப் பொறுத்தவரையில் நகராட்சி செய்யவேண்டும் என்றால் உரியவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாமே தவிர நானே செய்வது என்பது இயலாது என்பதை வேதனையோடு தெரி வித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, திருச்சி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தைப் பொறுத்தவரையில் பணத்தை வங்கியில் வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அந்த வட்டிப் பணத்தை வசூல் செய்ய என்ன தடை இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, வட்டிப்பணம் மட்டுமல்ல. வைக்கப்பட்டிருக்கின்ற பணமும் வசதிக்காக வசூலிக்கப்படுகின்ற தொகைதான். அதை வங்கியிலே வைத்து பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. கையிலே வைத்துக்கொள்ளக்கூடாது என்பதற்காக வங்கியிலே வைத்திருக்கிறார்கள். என்னென்ன வசதி தேவை என்று மக்கள் கேட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு அவற்றைச் செய்ய வேண்டும் என்பதற்காக வட்டியும் செலவு செய்யப்படும்; அசலும் செலவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீன் பிடிக்கும் தொழிலை நவீனப்படுத்தும் திட்டம்.

638— (*வினா எண். 22094) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன் பிடிக்கும் தொழிலை நவீனப்படுத்த அரசு திட்டம் தீட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. க. கலைமணி: (அ) ஆம்.

(ஆ) மீன் பிடிக்கும் தொழிலை நவீனப்படுத்த அரசு கீழ்க்கண்ட திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வந்துள்ளது.

(1) நாட்டுப் படகுகள் மற்றும் வள்ளங்களில் உட்புறம் பொருத்தும் இயந்திரங்கள் அமைத்தல்; கட்டு மரங்களில் வெளிப்புறம் பொருந்தும் இயந்திரங்கள் அமைக்கும் திட்டம் (20% அரசு மானியம், 80% வங்கிக் கடன் செய்வது).

(2) கண்ணாடியிழைப் படகுகள் வாங்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 20% அரசு மானியமும் 80% வங்கிக் கடனும் வழங்கும் திட்டம்,

(3) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கண்ணாடியிழைப் படகுகள் மற்றும் கரையேற்றும் படகுகள் (Surf landing Crafts) வாங்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 50% மானியம் வழங்கும் திட்டம்.



(4) தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மரத்தால் ஆன இயந்திரப் படகுகள் வழங்கும் திட்டம்.

(5) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக நாட்டுப் படகுதாரர்களுக்கு இயந்திரங்கள் வாங்க 80% வங்கிக்கடனும், 20% அரசு மானியமும் வழங்கும் திட்டம்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டில் பிடிக்கப்படும் இறால் மீன் வகைகளைப் பொறுத்த வரையில் 65 சதவீதம் கட்டுமரம் மற்றும் நாட்டுப் படகுகளின் மூலம்தான் பிடிக்கப்படுவதாக மத்திய அரசின் குறிப்பு சொல்கின்றது. எனவே மீன்பிடித் தொழிலை நவீன மயமாக்குகின்ற வகையிலே இந்தக் கட்டுமரங்களுக்கும், நாட்டுப் படகுகளுக்கும் அதிக அளவில் முக்கியத்துவம் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பிடிக்கப்படுகின்ற மீன்களில் 70 சதவீதம் நாட்டுப் படகுகளின் மூலமும், கட்டுமரங்களின் மூலமும்தான் கரையேற்றப் படுகின்றன. எனவே மீன் பிடித் திறனை அதிகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இயந்திர மயமாக்குகின்ற திட்டத்தை அரசு செயலாற்றி வருகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவா அவர்களே, கட்டுமரம் காற்றை நம்பி இருக்கின்றது. விசைப்படகு இயந்திரத்தை நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. காற்று இல்லாதபோது கட்டுமரங்களும், என்ஜின் ரிப்பேராக இருக்கும்போது விசைப்படகுகளும் ஆபத்தில் சிக்குகின்றன. எனவே கட்டுமரங்களுக்கு இயந்திரமும், விசைப்படகுகளுக்கு பாய்மரமும் பொருத்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. கலைமணி: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமரத்திற்கு இயந்திரம் பொருத்துகின்ற திட்டத்தை அரசு செயலாற்றிக் கொண்டு இருக்கின்றது. அதன் மூலம் கட்டுமரங்களிலே மீனவர்கள் விரைவாகச் சென்று மீன் பிடிக்கின்ற அளவுக்கு மீன்பிடித் திறனை அதிகப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு இயந்திர மயமாக்குகின்ற திட்டத்தை அரசு செயலாக்கி வருகின்றது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பிடிக்கின்ற திட்டத்தை நவீனப்படுத்தும் திட்டத்தின் மூலம் நாட்டுப் படகுகளுக்கும் கட்டுமரங்களுக்கும் இயந்திரம் பொருத்தப்படும் என்று சொல்லப்படுகின்றது. நாட்டுப் படகுகள் எத்தனை இருக்கின்றன? கட்டுமரங்கள் எத்தனை இருக்கின்றன? இதுவரை எத்தனை என்ஜின்கள் பொருத்தப் பட்டிருக்கின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

அயல் நாடுகளில் சில லைட்டுகளின் மூலமாக புதிய மீன்களை வரவழைத்து பிடிக்கிறார்கள். அப்படிப்பட்ட நவீன இயந்திரங்களைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. கலைமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, எத்தனை படகுகளுக்கு இதுவரை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற எண்ணிக்கை தற்போது என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பிடிப்பதில் நவீன முறையைக் கையாள்வதற்காகப் பல்வேறு காரியங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் ஆழ் கடலில் எந்த, எந்தப் பகுதியில் அதிகமான மீன்கள் இருக்கின்றன என்று ஆய்வு நடத்துவதற்குத் தமிழகத்திற்கென்று ஏதாவது பெரிய கப்பல்கள் இருக்கின்றனவா? இல்லையென்றால், அதை வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

அது போன்று விசைப் படகுகள் ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்கும்போது அவற்றைக் கரையில் சேர்ப்பதற்கு கரையோரத்தில் சிறிய படகுத்துறைகள், போட் ஜெட்டி அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா? இல்லையென்றால் வருகின்ற ஆண்டுகளில் அமுலாக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

அது போன்று நீர் பிடிப்பு உள்ள அணைக்கட்டுப் பகுதிகளிலே மீன் பிடிப்பதற்கு அந்தப் படகுகளுக்கு இயந்திரங்கள் இல்லாத குறை இருந்து கொண்டிருக்கிறது. அந்த இயந்திரங்களை அந்தப் படகுகளில் பொருத்துவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மீன் பிடிக்கிற மீன் பிடி விசைப் படகுகள் கரையேற்ற வசதிகளைப் பற்றிச் சொன்னார்கள். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் மீன்பிடி துறைமுகங்களும் மீன்பிடி ஜெட்டிகளும் பல்வேறு இடங்களிலே கட்டப்பட்டு வருகின்றன.

மற்றபடி நீர்த் தேக்கங்களில் மீன்பிடிக்கிற படகுகளுக்கு இயந்திரங்களைப் பொருத்துவது பற்றிச் சொன்னார்கள். அதை அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும் என்று கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; உடுக்குறியிட்ட வினாக்கள் விடைகள் முடிவுற்றன.



## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### வில்லிவாக்கத்தில் புதிதாக அரிசன மாணவர் விடுதி துவக்கும் திட்டம்.

வினா 720—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதியில் புதியதாக அரிசன நல மாணவர் விடுதி துவக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) அரிசன நலத்துறையின் கீழ் இத்தொகுதி அரிசன மக்கள் பயனடைய வேறு முற்போக்குத் திட்டங்கள் உள்ளதா ?

விடை—

(அ) வில்லிவாக்கம் தொகுதியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி ஒன்றும் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி ஒன்றும் திறப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

(ஆ) ராஜமங்கலம் தொடக்கப் பள்ளியினை நடுநிலைப் பள்ளியாக மாற்றுவது பற்றியும் அரசு பரிசீலித்து வருகிறது.

2—

### தஞ்சை மாவட்டம் தகட்டூர் பைரவ நாத சுவாமி கோயிலிலிருந்து பள்ளிக்கு கொடுத்த தொகை.

வினா 2664—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தகட்டூர் அருள்மிகு பைரவ நாதசுவாமி கோயிலிலிருந்து தகட்டூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு கொடுக்கப்பட்ட ரூ. 14,500 அதிகாரிகள் தவறால் பள்ளிக்குப் போய் சேராமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அந்தத் தொகையை மீண்டும் பள்ளிக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) தமிழ்நாடு இந்துசமய அறநிலையச் சட்டம் 1959-ன் 36-வது பிரிவின்படி ஆணையர் அவர்களது மனு எண் 211/1971, நாள் 16-11-1971-ல் தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், தகட்டூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம்

கட்டுவதற்காக தகட்டூர் அருள்மிகு பைரவநாதசுவாமி ஆலயத்தின் உபரிநிதியிலிருந்து ரூ. 15,000 நிதிமாற்றம் செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி முதலில் ரூ. 500 பின்னர், 1—2—1975-ல் ரூ. 12,500க்கு ஒரு காசோலையும், ரூ. 2,000க்கு ஒரு காசோலையும் (முத்துப்பேட்டை கிளை, கும்பகோணம் கூட்டுறவு வங்கி காசோலைகள்) தஞ்சை முதன்மைக் கல்வி அலுவலருக்கு மேற்படி ஆலய செயல் அலுவலரால் அனுப்பப்பட்டது. மேற்படி காசோலைகள் பணமாக்கப்படாமல் காசோலைக்குப் பதில் தஞ்சாவூர் அரசு வங்கியின் கொடுப்பாணையாகப் (D.mand Draft) பெற்று அனுப்புமாறு தஞ்சை முதன்மைக் கல்வி அலுவலரால் திரும்ப அனுப்பப்பட்டது. அவ்வாறு திரும்ப அனுப்பப்பட்ட இரு காசோலைகள் தகட்டூர் பள்ளி தலைமை ஆசிரியர் மூலம் 30—7—75-ல்தான் ஆலய செயல் அலுவலருக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. பின்னர் உடனடியாக கொடுப்பாணை மூலம் தொகை அனுப்பப்படவில்லை. இதற்கிடையில் அவசர நிலை அறிவிக்கப்பட்டதால் ஆணையரின் உத்திரவின்படி நிதிமாற்றங்கள் யாவும் நிறுத்தி வைக்கப்பட்டது. எனவே அதிகாரிகளின் தவறினால் நிதி கொடுக்கப்படவில்லை என்பது சரியல்ல.

(ஆ) நிதிமாற்றம் தொடர்பான இந்துசமய அறநிலைய சட்டப் பிரிவு 66(1)(ஜி)-ன்படி இந்துசமய போதனையும் அரசுக் கல்விக் கூடங்களில் நடத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையை கல்வித் துறை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே சட்டப்பிரிவு 36-ன் கீழ் திருக்கோயிலின் நிதியினை அரசு பள்ளிக்கு உபரிநிதி மாற்றம் செய்ய உத்திரவு பிறப்பிக்க இயலாமல் உள்ளது.

3—

அரியலூர் உட்கோட்டத்தில் பொய்யூர்-இடையாத்தங்குடி கிராம சாலை வேலைத் திட்டம்.

வினா 3612—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் உட்கோட்டத்தில் 1977—78-ல் கிராம சாலைத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டிருந்த பொய்யூர்—இடையாத்தங்குடி சாலை வேலை இன்னும் தொடங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) இச்சாலையினை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?



விடை—

(அ) மற்றும் (ஆ) : திருச்சி. சிதம்பரம் சாலையில் கி.மீ. 58/10 இல் பிரிந்து கண்டகுடி வரை இடையாத்தாங்குடி—எல்லேரி வழியாக 13 கி. மீ. நீளமுள்ள சாலையை மேம்பாடு செய்ய கிராமச்சாலைகள் திட்டத்தின் ஆறாவது கட்டப் பணியாக செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டு, அச்சாலையில் உள்ள அனைத்து சிறுபாலவேலைகளும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது.

4—

மாஞ்சோலை, நாலுமுக்கு, ஊத்து ஆகிய இடங்களில் பணியாற்றும் பள்ளி ஆசிரியர்களுக்கு மலைவாழ் படியும், குளிர்காலப் படியும் வழங்கக் கோருதல்.

வினா 4082—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மாஞ்சோலை, நாலுமுக்கு, ஊத்து ஆகிய எஸ்டேட்டுகளில் உள்ள (தோட்டங்களில் உள்ள) பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மலைவாழ்படியும், குளிர்கால படியும் வழங்கக்கோரி அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மாஞ்சோலை, நாலுமுக்கு, ஊத்து ஆகிய எஸ்டேட்டுகளிலுள்ள (தோட்டங்களிலுள்ள) பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கட்கு மலைவாழ்படியும், குளிர்காலப் படியும் வழங்கக்கோரி அரசுக்கு கோரிக்கை ஏதும் வரவில்லை. மேற்கண்ட இடங்களில் உள்ள பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கட்கு குளிர்காலப்படியும், சுகாதாரமற்ற பகுதிக்கான படியும் (Unh althy Locality Allowanc ) வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பகுதிகள் மலைவாழ்படி பெறுவதற்கு தகுதியுடையவையென அரசால் பிரகடனப்படுத்தப்படாமையால் மலைவாழ்படி வழங்கப்படவில்லை.

[1984 ஏப்ரல் 24

5—

தமிழர் மாநாட்டில் மதுரை மீனாட்சியம்மன் கோயிலை அழகுபடுத்த ஆன செலவு.

வினா 4764—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகத் தமிழர் மாநாட்டின்பொருட்டு மதுரை மீனாட்சியம்மன் கோயிலை அழகுபடுத்த அறநிலையத்துறை எவ்வளவு செலவு செய்துள்ளது ?

(ஆ) ஆம் எனில் அழகுபடுத்தப்பட்ட இடங்கள் யாவை?

விடை—

(அ) மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தை அழகுபடுத்த ரூபாய் 41,907.19 செலவிடப்பட்டு வேலைகள் யாவும் முடிக்கப் பட்டுள்ளன.

(ஆ) (1) அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய மதிற் சுவருக்கு மாணிக்கப்பூட்டை அடித்தல்.

(2) சங்கப்புலவர் மண்டபம் கிழக்குப்பக்கம் இரும்புக் கிராதி அமைத்தல்.

(3) சங்கப்புலவர் மண்டபம் மேற்குப் பக்கம் இரும் புக்கிராதி அமைத்தல்.

(4) நக்கீரர் அருளிய சித்திரைக்கனி கலைவக்கல்லில் பதித்தல்.

6—

நத்தம் பகுதியில் புதிய நடமாடும் வேன்

வினா 5905—திரு. மெ. ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தொகுதியில் நடமாடும் வேன் பழுது அடைந்து இருப்பதின் காரணத்தினால் நோயாளிகளுக்கு குறித்த நேரத்தில் சிகிச்சை அளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அரசு புதிய வேன் ஒன்று ஏற்பாடு செய்து கொடுக்க முன் வருமா ?

விடை—

(அ) நத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த ஊர்திகளும் நல்ல நிலையில் பணிபுரிகின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1984 ஏப்ரல் 24]

7—

விளாத்திக்குளம் தாலுக்காவில் புதிய நீர்ப்பாசன குளங்கள் அமைக்கும் திட்டம்.

வினா 6240—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) விளாத்திக்குளம் தாலுக்கா, சின்னூர், சுப்பலாபுரம், பூதலப்புரம், கருப்பூர், டி. புதுப்பட்டி, கீழ் அருணாசலபுரம், கொரளையம்பட்டி ஆகிய கிராமங்களில் புதிய நீர்ப் பாசனக் குளங்கள் அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அதன் மதிப்பீடுகள் பின்வருமாறு :

| | | | | |
|---|---|---|---|---|
| சின்னூர் | .. | .. | .. | ரூ. 7 இலட்சம். |
| கருப்பூர் | .. | .. | .. | ரூ. 9.05 இலட்சம் |
| டி. புதுபட்டி | .. | .. | .. | ரூ. 13.60 இலட்சம். |

கீழ் அருணாசலம் கிராமத்தின் அருகே கண்மாய் அமைப்பதற் கான சாத்தியக்கூறுகள் இல்லை. ஏனைய குளங்களின் மதிப்பீடுகள் ஆய்வில் உள்ளதால் மதிப்பீடுகள் தயாரிக்கப்படவில்லை.

8—

குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியம் மாணவர்களுக்கான மதிய உணவு மானியம் வழங்காமைக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை.

வினா 6331—திரு. டி. மணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியம் 1—4—1980-ல் இருந்து மாணவர்களுக்கான மதிய உணவு மானியம் வழங்க வில்லை என்று ஏதேனும் புகார்கள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) பழைய மதிய உணவுத் திட்டத்தின்கீழ் உள்ளாட்சி மன்றங்கள் தரவேண்டி இருந்த 5 காசு பங்குத் தொகை நிதி நிலைப் பற்றாக்குறை காரணமாக குருத்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தால் சில காலங்களுக்கு வழங்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

(ஆ) 1—7—1982 முதல் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் தொடக்கப் பள்ளிகளில் நண்பகல் உணவு வழங்கும் செலவு முழுவதையும் அரசே ஏற்று வருவதால் 1—7—1982-க்கு முந்திய காலங்களுக்கு உள்ளாட்சி மன்றங்கள் 5 காசு பங்குத் தொகை வகையில் தரவேண்டிய நிலுவைத் தொகைகள் எவையும் இருந்தால் அவற்றை (மைய சமையற்கூடங்கள் செயல்பட்ட செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டப் பகுதிகளைத் தவிர பிற பகுதிகளில்) தரவேண்டியது இல்லை என்று 20—12—1982 அன்று அரசு பொதுவான ஆணை ஒன்றை வெளியிட்டுள்ளது.

9—

## ஆலயங்களின் உபரி நிதி பயன்படும் விதம்.

வினா 7839—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலயங்களின் உபரி நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது ?

விடை—

ஆலயங்களின் உபரிநிதி, 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் 36/36ஏ மற்றும் 66(1) பிரிவுகளில் குறித்துள்ள பணிகளுக்குப் பயன்படுகின்றன. அவ்விதிகளில் குறிக்கப்பட்டுள்ள பணிகள் கீழே தரப்பட்டுள்ளன:—

(அ) வறுமை நிலையிலிருக்கிற அல்லது உதவி தேவையாயிருக்கிற சமய சம்பந்தமாக இதர நிலையங்களுக்கு உதவி அளிப்பது ;

(ஆ) இந்து சமயத்தோடு தொடர்புள்ள யாதொரு சமய காரியத்திற்காக உதவி அளிப்பது ;

(இ) அந்த நிலையத்தின் சமயக் கோட்பாடுகளைப் பிரச்சாரம் செய்வது ;

(உ) திவ்வியப் பிரபந்தம், தேவாரம், இவை போன்றவற்றையும், ஓதுவதற்கான ஏற்பாடுகள் செய்வது;





(ஊ) அர்ச்சகர்கள், அத்யாபகர்கள், வேத பாராயினர்கள், ஓதுவார்கள் இவர்களுடைய பயிற்சிக்காகவும் (இந்திய மொழிகள் உள்பட) திவ்வியப் பிரபந்தம், தேவாரம், அதுபோன்ற மற்றவைகளையும் கற்பதற்காகவும், பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவதும், அவற்றைப் பராமரிப்பதும் ;

(எ) இந்து சமயம், இந்து சமயத்தத்துவம் அல்லது இந்து சமய சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்வதற்காக விசேஷ ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அல்லது இந்துக்கோயில், சிற்பக் கலையில் போதனை செய்வதற்காக ஒரு பல்கலைக்கழகத்தையேனும் கல்லூரியையேனும், இதர நிலையத்தையேனும், ஏற்படுத்தி பராமரித்து வருவது;

(ஏ) இந்து சமயத்திலும், போதனையளிக்கின்ற கல்விஸ்தாபனங்களை ஏற்படுத்திப் பராமரித்து வருவது ;

(ஐ) கலைகளையும் சிற்பத் தொழிலையும் வளர்ப்பதற்கு ஆதரவு கொடுப்பது;

(ஒ) இந்து குழந்தைகளுக்காகவென்று அனாதை இல்லங்களை ஏற்படுத்தி பராமரித்து வருவது;

(ஓ) குட்டத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிற இந்துக்களுக்காக காப்பகங்கள் ஏற்படுத்தி பராமரித்து வருவது ;

(ஔ) ஏழைகள் ஆதரவற்றவர்கள் தேக திடமற்ற நபர்கள் ஆகியவர்களுக்காக ஏழை விடுதிகளை ஏற்படுத்துவதும் அவற்றைப் பராமரித்து வருவதும்;

(அஅ) சமய யாத்ரீகர்களின் பிரயோசனத்திற்காகவென்று மருத்துவமனைகளையும், மருந்து விநியோக சாலைகளையும் ஏற்படுத்தி பராமரித்து வருவது ; மற்றும்

(இஇ) வறுமை நிலையிலிருக்கின்ற அல்லது உதவியளிப்பதற்கு ஏற்ற இந்துக்களின் இந்து திருமணங்கள் நடத்தவும் இந்த உபரி நிதியை உபயோகிக்கலாம்.

10—

## சேலம் மாவட்டம் பெத்த நாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனையிலுள்ள படுக்கைகள் அமைக்க கட்டிட நிதி செய்துள்ள ஒதுக்கீடு.

வினா 8591—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியிலுள்ள பெத்த நாயக்கன் பாளையம் அரசு மருத்துவ மனைக்கு படுக்கைக அமைக்க கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை படுக்கைகள் ?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினா எழுவதற்கு இடமில்லை.

11—

அம்பாசமுத்திரம் தாலுகா, சொரி முத்தையனார் கோவிலுக்கு நிலம் வனத்துறையிடம் பட்டா செய்து தர கோரிக்கை.

வினா 8629—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அம்பாசமுத்திரம் தாலூகா சிங்கம்பட்டி சொரிமுத்தையனார் கோவிலுக்கு 42 ஏக்கர் நிலம் வனத்துறையிடம் பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அருள்மிகு சொரிமுத்தையனார் கோவிலுக்கு வனத்துறையிடமிருந்து சிங்கம் பட்டி மலைப்பகுதி, சர்வே எண் 243/4-ல் உள்ள 40 ஏக்கர் நிலத்தை ஒப்படை செய்யப்பட வேண்டும் என்று அக் கோயிலின் பரம்பரை அறங்காவலர் அரசுக்கு ஓர் கோரிக்கை அனுப்பினார். அரசு அக்கோரிக்கையை வனத்துறை தலைவருடன் ஆராய்ந்து அதனை ஏற்க இயலாது என்று அவருக்கு 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஓர் கடிதம் அனுப்பப்பட்டது. எனினும் திருவிழா காலங்களில் மட்டும் வனத்துறையின் ஒப்புதலுடன் மேற்படி நிலப் பகுதியில் சில தற்காலிக பணிகளை மேற்கொள்ளலாம் என்றும் அரசு தெரிவித்துள்ளது. இவ்வாறு பயன் படுத்தப்படும் நிலப் பகுதியில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் ஏற்படக்கூடாது என்பதனையும் அரசு தெரிவித்தது.

2. மேலும் 1981 ஆம் ஆண்டு மே திங்களில் மாவட்ட வளர்ச்சி மன்றம் பாபநாசம் மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள இக்கோயிலின் அனுபோகத்தில் நீண்ட காலமாக இருந்து வந்த மேற்கூறிய வனப்பகுதியினை இக்கோயிலின் பெயருக்கு மாற்றிக் கொடுக்கும்படி அரசுக்கு பரிந்துரை செய்வதென ஏகமனதாக ஓர் தீர்மானம் செய்துள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரும் இத்தீர்மானத்தின் நகல் ஒன்றினை நடவடிக்கைக்காக அரசுக்கு அனுப்பியுள்ளார். தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். அருணாசலம் அவர்களும் மேற்கூறிய கோரிக்கையை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார். இப்பொருள் வனத்துறைத் தலைவர், மாவட்ட ஆட்சியருடன் கலந்து அரசின் ஆய்வில் உள்ளது.



12—

தமிழ்நாட்டில் அறநிலையத்துறை கடந்த ஈராண்டில் ஆலயங்களுக்கு திருப்பணி செய்ய அனுமதித்தல்.

வினா 8898—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் அறநிலையத்துறை 1979-80, 1980-81ல் எத்தனை ஆலயங்களுக்கு திருப்பணி செய்ய அனுமதி வழங்கியுள்ளது ?

(ஆ) ஆகும் மொத்தச் செலவு எவ்வளவு ?

(இ) அரசு பங்கு என்ன ?

விடை—

(அ) 684.

(ஆ) ரூபாய் 8,34,05,297.

(இ) ரூபாய் 37 இலட்சம்.

13—

தாம்பரம் தொகுதி அரிசன நலப் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு சமையற்கூடம் கட்ட முன்வரும் நிலை.

வினா 9039—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு ஆதி திராவிடர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தாம்பரம் தொகுதியில் உள்ள அரிசன நலப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மதிய உணவு சமைக்கும் சமையற்கூடம் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்ட முன் வருமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தாம்பரம், தொகுதியில் கடப்பேரி, அனகாப்புத்தூர், பதுவன்சேரி, பொழிச்சலூர், பாலவாக்கம், நாகல்கேணி ஆகிய இடங்களில் உள்ள ஏழு பள்ளிகளிலும் முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத்திட்டத்தின் கீழ் சமையற் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

14—

ஆத்தூரிலிருந்து முகவை வாடி வழியாக தலைவாசல் செல்லும் புதிய பேருந்து வழித்தடத்தில் தார் போடும் பணி.

வினா 9480—திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;—

ஆத்தூரிலிருந்து முல்லைவாடி காட்டுக்கோட்டை மணி விழுந்தான் வழியாக தலைவாசல் வரை செல்லும் புதிய பேருந்து வழித்தடத்தில் முழுமையாக தார் போடும் பணி இந்த ஆண்டு நிறைவேற்றப்படுமா ?

விடை—

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பேருந்து வழித்தடம் ஆத்தூரிலிருந்து முள்ளுவாடி, காட்டுக்கோட்டை, அம்மம்பாளையம், ராமானுஜபுரம், மணிவிழுந்தான்காலனி, வடக்கு புதூர், மணி விழுந்தான், வடக்கு மணிவிழுந்தான் காலனி மற்றும் பட்டுத்துறை ஆகிய கிராமங்களின் வழியாக தலைவாசல் வரை செல்கிறது. இத்தடத்தில் தற்போது பஸ் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இத்தடத்தின் மொத்த நீளம் 25.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் கீழ்க்கண்ட 10 சாலைகள் அடங்கியுள்ளன :—

1. ஆத்தூர்—முள்ளுவாடி சாலை கி.மீ. 0/0—2/0
2. முள்ளுவாடி—காட்டுக்கோட்டை சாலை கி.மீ. 2/0—5/6.
3. காட்டுக்கோட்டை—அம்மம்பாளையம் சாலை 0/0—3/2.
4. காட்டுக்கோட்டை—ராமானுஜபுரம் சாலை கி.மீ. 0/0—3/2.
5. ராமானுஜபுரம்—மணிவிழுந்தான் காலனி வடக்கு புதூர் சாலை கி.மீ. 0/0—2/8.
6. பட்டுத்துறை—மணிவிழுந்தான் காலனி சாலை கி.மீ. 0/0—4/4.
7. பட்டுத்துறை—தலைவாசல் சாலை கி.மீ. 0/0—1/6.
8. மணிவிழுந்தான் வடக்குபுதூர்—மணிவிழுந்தான் காலனி சாலை கி.மீ. 0/0—1/6.
9. மணிவிழுந்தான் வடக்குபுதூர்— மணிவிழுந்தான் வடக்கு சாலை கி.மீ. 0/0—1/0.
10. மணிவிழுந்தான் வடக்கு—மணிவிழுந்தான் காலனி சாலை கி.மீ. 0/0—1/6.

மேற்கண்ட சாலைகளில் 1 மற்றும் 7-ல் குறிப்பிட்டுள்ள சாலைகள் ஏற்கெனவே தார் சாலைகளாக உள்ளன. 2 முதல் 6 வரை உள்ள சாலைகளை தார் சாலைகளாக்குவதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்



பட்டிருக்கின்றன. மீதமுள்ள மூன்று சாலைகளையும் 1982-83-ம் ஆண்டில் பேருந்துவழித்தடம் ஏற்பு திட்டத்தின்கீழ் மேற்கொண்டு தார் சாலையாக்குவதற்கு அரசு நிலை ஆணை எண் 1313 போக்குவரத்துத் துறை நாள் 12—11—1982-ல் ஆணை இடப்பட்டுள்ளது.

15—

தஞ்சை மாவட்டத்தில் மடம் கோவில்களுடைய நிலங்களின் சாகுபடிதாரர்களுடைய எண்ணிக்கை.

வினா 10342—திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் மடம், கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களில் சாகுபடிதாரர்கள் எவ்வளவு பேர் உள்ளார்கள் ?

(ஆ) அவர்களிடம் உள்ள நிலங்கள் எவ்வளவு ?

(இ) மேற்கண்ட நிர்வாகத்தின் கீழ் எவ்வளவு நிலம் உள்ளது ?

விடை—

(அ) (1) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மடங்களுக்குச் சொந்தமான நிலங்களின் சாகுபடிதாரர்களின் எண்ணிக்கை 15,572.

(2) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஆலயங்களுக்குச் சொந்தமானநிலங்களின் சாகுபடிதாரர்கள் எண்ணிக்கை-36,649.

(ஆ) (1) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மடங்களின் சாகுபடிதாரர்களிடம் உள்ள நிலங்கள் :—

| நன்செய். | | புன்செய். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|
| ஏ. | செ. | ஏ. | செ. | ஏ. | செ. |
| 12,235 | 78½ | 19,914 | 83 | 32,150 | 61 |

(2) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஆலயங்களின் சாகுபடிதாரர்களிடமுள்ள நிலங்கள்.

| நன்செய் | | புன்செய். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|
| ஏ. | செ. | ஏ. | செ. | ஏ. | செ. |
| 60,840 | 20½ | 21,500 | 94 | 82,341 | 14 |

(இ) (1) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மடங்களின் நேரிடை நிர்வாகத்தின் கீழ் உள்ள நிலங்கள்.

| நன்செய். | | புன்செய். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|
| ஏ. | செ. | ஏ. | செ. | ஏ. | செ. |
| 128 | 93 | 0 | 20 | 129 | 13 |

(2) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஆலயங்களின் நேரிடை நிர்வாகத்தின் கீழ் உள்ள நிலங்கள்.

| நன்செய். | | புன்செய். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|
| ஏ. | செ. | ஏ. | செ. | ஏ. | செ. |
| 4,029 | 05 | 1,276 | 54½ | 5,305 | 59½ |

16—

## தமிழகத்தில் வறட்சிப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு.

வினா 10483—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது?

(ஆ) செய்யப்பட்ட பணிகளின் விவரம் என்ன?

விடை—

(அ) தமிழகத்தில் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு 1981-82-ல் ரூபாய் 5,763.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்தும் பணிகளுக்கு தக்காவி கடன் வழங்குவதற்காக ரூபாய் 5 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது.

(ஆ) 31—3—1982 வரை வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூபாய் 5,685.30 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக தக்காவிக் கடன் கொடுக்கும் திட்டத்தின் கீழ் ரூபாய் 486 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



1981-82 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஆன செலவு விவரம்.

| பணிகளின் விவரம். | முடிக்கப் பட்ட பணிகளின் எண்ணிக்கை. | 31-3-1982 வரை ஆன செலவு விவரம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| (அ) குடிநீர் விநியோகம்— | | |
| 1 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க | 7,249 | 1,222.17 |
| 2 குடிநீர் கிணறுகள் ஆழப்படுத்த .. | 19,461 | 302.32 |
| 3 நகராட்சிகள், பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்ட மேம்பாடு. | 609 | 258.07 |
| 4 தண்ணீர் தொட்டிகள் அமைக்க | 218 | 27.50 |
| 5 சென்னை நகர குடிநீர் திட்டங்கள் | .. | 90.50 |
| 6 லாரிகள், வண்டிகள் மூலம் தண்ணீர் விநியோகம். | 218 | 41.24 |
| (ஆ) வேலை வாய்ப்புத் திட்டங்கள்— | | |
| 1 நீர்ப்பாசன வேலைகள் .. .. | 15,448 | 1,843.49 |
| 2 சாலைகள் மற்றும் கிராமச் சாலைகள் | 4,585 | 674.44 |
| 3 ஊரணிகள், குட்டைகள் மேம்பாடு | 4,715 | 252.35 |
| 4 மண்வளப் பாதுகாப்பு .. .. | .. | 60.65 |
| 5 வன அபிவிருத்தி .. .. | .. | 96.41 |
| (இ) வேளாண்மை— | | |
| 1 நெல் விதைகள், எண்ணெய் வித்துக்கள், பூச்சி மருந்து, இரசாயன எரு ஆகியவை விநியோகம். | .. | 385.64 |
| 2 வைக்கோல் விநியோகம் .. | .. | 46.92 |

1981-82 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஆன செலவு விவரம்—தொடர்ச்சி.

| பணிகளின் விவரம். | முடிக்கப் பட்ட பணிகளின் எண்ணிக்கை. | 31-3-1982 வரை செலவு விவரம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| (ஈ) மருந்தும் பொதுச் சுகாதாரமும்— | | |
| 1 நோய் போக்கும் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள். | .. | 147.32 |
| 2 கால்நடைகளுக்கு நோய் போக்கும் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள். | .. | 67.24 |
| 3 முதியோர்களுக்கும், கைம்பெண் களுக்கும், உடல் ஊனமுற் றோருக்கும் மாதம் 4 கிலோ கூடுதல் அரிசி விநியோகித்தல். | .. | 13.74 |
| 4 சத்துணவுத் திட்டம் .. .. | .. | 155.30 |
| மொத்தம் .. | 52,503 | 5,685.30 |

17—

ஜோலார்பேட்டை மருந்தகத்திற்கு ஒரு பெண் டாக்டரை நியமித்தல்.

வினா 10981—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஜோலார்பேட்டையில் உள்ள மருந்தகத்திற்கு ஒரு பெண் டாக்டரை நியமிக்க அரசு உத்தேசித்து உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உடன் செயல்படுத்த அரசு முன்வருமா?



விடை—

(அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டம் ஜோலார்பேட்டையிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகத்திற்கு ஒரு மருத்துவர் பணியிடம்தான் அனுமதிக்கப்பட்டுள்ளது. இம்மருந்தகத்தில் நியமனம் செய்யப்பட்ட ஆண் மருத்துவர் உயர்படிப்பிற்காக விடுப்பில் சென்றபோது 19—1—1982 முதல் ஒரு பெண் மருத்துவர் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையரால் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார். பின்னர் ஆண் மருத்துவர் விடுப்பிலிருந்து திரும்பி வந்து மீண்டும் அப்பணியில் சேர்ந்துள்ளதால், பெண் மருத்துவர் ஒருவரை இம்மருந்தகத்தில் நியமிப்பது இயலாததாகும்.

18—

வடாற்காடு மாவட்டத்தில் கடந்த ஈராண்டுகளில் வேலை தேடி பதிவு செய்த நபர்களின் எண்ணிக்கை.

வினா 11029—திரு. இல. பலராமன் : மாண்புமிகு ஆதி திராவிட நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் 1979, 1980, 1981 ஆம் ஆண்டுகளில் வேலை தேடி பதிவு செய்த நபர்கள் எத்தனை ?

(ஆ) பட்டதாரிகள் எண்ணிக்கை, முன்னாள் இராணுவத்தினர், பின்தங்கியவர், தாழ்த்தப்பட்டவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) வேலை வாய்ப்பு கிடைத்தவர்களின் எண்ணிக்கை யாது ?

விடை—

| | ஆண்டு. | | எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (அ) | 1979 (31-12-1979 நிலவரப்படி) | .. | 64,689 |
| | 1980 (31-12-1980 நிலவரப்படி) | .. | 58,585 |
| | 1981 (31-12-1981 நிலவரப்படி) | | 62,622 |

| (ஆ) | 1979 இறுதியில் (31-12-1979 நிலவரப் படி). | 1980 இறுதியில் (31-12-1980 நிலவரப் படி). | 1981 (31-12-1981 நிலவரப் படி). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 பட்டதாரிகள் .. | 4,207 | 6,021 | 6,668 |
| 2 முன்னாள் இராணுவத்தினர். | 2,721 | 2,517 | 1,975 |
| 3 பின்தங்கியவர் .. | * | * | 41,060 |
| 4 தாழ்த்தப்பட்டவர்கள் | 10,211 | 10,021 | 10,755 |

(இ) வேலை வாய்ப்பு கிடைத்தவர்கள் எண்ணிக்கை வருமாறு :—

| விவரம். | 1979. | 1980. | 1981. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 வேலை வாய்ப்பு கிடைத்தவர்கள் மொத்தம். | 3,894 | 3,024 | 4,532 |
| 2 அவர்களில் பட்டதாரிகள் | 150 | 91 | 125 |
| 3 முன்னாள் இராணுவத்தினர். | 139 | 103 | 107 |
| 4 பின்தங்கியவர்கள் .. | * | * | 1,776 |
| 5 தாழ்த்தப்பட்டவர்கள் | 567 | 534 | 648 |

* வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பின்தங்கிய வகுப்பினருக்குத் தனியாக 1979, 1980ஆம் ஆண்டுகளுக்கு விவரங்கள் இல்லாத காரணத்தினால் அவை கொடுக்கப்படவில்லை.



19—

1980-81 பால்வாடி பள்ளிகள் துவக்கப்பட்ட இடங்கள்.

வினா 11645—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1980-81 ஆம் ஆண்டில் எத்தனை பால்வாடி பள்ளிகள் எங்கெங்கு துவக்கப்பட்டுள்ளன ?

விடை—

விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது—

1980-81ஆம் ஆண்டில் திறக்கப்பட்டு செயல்பட்டுவரும் குழந்தைகள் காப்பகங்களின் (பால்வாடி பள்ளிகளின்) விவரங்கள் மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | காப்பகம் செயல்படும் கிராமத்தின் பெயர். | மொத்த காப்பகங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| செங்கல்பட்டு மாவட்டம்— | | |
| 1 மதுராந்தகம் .. | ஜமீன் எண்டத்தூர் .. | |
| 2 திருப்போரூர் .. | பொன்மான் .. | |
| 3 மீஞ்சூர் .. | வெண்ணிவயல்சாவடி.. | |
| 4 சித்தாமூர் .. | அனலூர் .. .. | |
| 5 உத்திரமேரூர் .. | கரும்பாண்டி .. | |
| 6 பூண்டி .. | திருப்பாச்சூர் .. | |
| 7 காஞ்சிபுரம் .. | காரப்பேட்டை .. | |
| 8 கும்மிடிபூண்டி .. | ஏனதிப்பாக்கம் .. | 8 |

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | காப்பகம் செயல்படும் கிராமத்தின் பெயர். | மொத்த காப்பகங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| வட ஆற்காடு மாவட்டம்— | | |
| 9 செங்கம் | குயிலம் | .. |
| 10 மாதனூர் | தோட்டாளம் | .. |
| 11 கலசப்பாக்கம் | அருணகிரிமங்கலம் | .. |
| 12 அரக்கோணம் | கிருஷ்ணாபுரம் | .. |
| 13 ஆற்காடு | கூரம்பாடி | .. |
| 14 கீழ்பெண்ணாத்தூர் | வைப்பூர் | .. |
| 15 மாதனூர் | வெங்கிலி | .. |
| 16 செய்யாறு | தண்டரை | .. |
| 17 வாலாஜா | வனபாடி | .. |
| தென் ஆற்காடு மாவட்டம்— | | |
| 18 திருக்கோயிலூர் | பூமாரி | .. |
| 19 நல்லூர் | தோலார் | .. |
| 20 கண்டமங்கலம் | பஞ்சமாதேவி | .. |
| 21 மங்களூர் | வசிட்டபுரம் | .. |
| 22 கொமராட்சி | கொமராட்சி | .. |
| 23 மேல்மலையனூர் | கப்பலம்பாடி | .. |
| 24 பண்ருட்டி | லக்ஷ்மிநாராயணபுரம் | .. |
| 25 பரங்கிப்பேட்டை | கழுமாங்குடி | .. |
| 16 மேல்மலையனூர் | கீழசெவலம்பாடி | .. |
| 27 உளுந்தூர்பேட்டை | புகைப்பட்டி | .. |
| 28 விருத்தாசலம் | மாத்தூர் | 11 |



| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | காப்பகம் செயல்படும் கிராமத்தின் பெயர். | மொத்த காப்பகங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கோயம்புத்தூர் மாவட்டம்— | | |
| 29 பெரியநாயக்கன் பாளையம். | குப்புச்சிபாளையம் | .. |
| 30 உடுமலைப்பேட்டை | திணைக்குளம் | .. |
| 31 மடத்துக்குளம் | கன்னியூர் | .. |
| 32 கிணத்துக்கடவு | கொட்டம்பட்டி | .. |
| 33 சுல்தான்பேட்டை | பூராண்டாம்பாளையம் | |
| 34 அன்னூர் | சொக்கம்பாளையம் | .. |
| 35 மடாத்துக்குளம் | சர்க்கார் கண்ணாடி புதூர். | |
| பெரியார் மாவட்டம்— | | |
| 36 கோபிச்செட்டிப் பாளையம். | மேட்டுப்பாளையம் (முத்துக்காளிமேடை) | |
| 37 கோபிச்செட்டிப் பாளையம். | காசியூர் | .. |
| 38 கோபி | கோபிபாளையம் (மேவாணி). | |
| 39 காங்கேயம் | பாலக்கோட்டை | .. |
| 40 மொடக்குறிச்சி | அவல்பூந்துறை | .. |
| தஞ்சாவூர் மாவட்டம்— | | |
| 41 தஞ்சாவூர் | பள்ளி அக்கிரகாரம் | .. |
| 42 பூதலூர் | அச்சம்பட்டி | .. |
| 43 நாகப்பட்டினம் | சிக்கல் | .. |
| 44 மாயூரம் | செம்பகச்சேரி | .. |
| 45 குத்தாலம் | கிள்ளியனூர் | .. |
| 46 நன்னிலம் | கோயில்திருமலம் | .. |
| 47 பாபநாசம் | உள்ளிகடை | .. |
| 48 திருவோணம் | தோப்புவிடுதி | .. |
| 49 திருவிடைமருதூர் | மேலயப்பநல்லூர் | .. |

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | காப்பகம் செயல்படும் கிராமத்தின் பெயர். | மொத்த காப்பகங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்—** | | |
| 50 முசிரி | மனப்பாளையம் | .. |
| 51 முசிரி | திருமருதூர் | .. |
| 52 துறையூர் | வீரமாசம்பட்டி | .. |
| 53 ஆலத்தூர் | செட்டிக்குளம் | .. |
| 54 புள்ளம்பாடி | நம்பகுறிச்சி | .. |
| 55 அந்தநல்லூர் | பாலூர் | .. |
| 56 கிருஷ்ணராயபுரம் | திருக்காம்புலியூர் | .. |
| 57 பெரம்பலூர் | அய்யலூர் குடிக்காடு | .. |
| **புதுக்கோட்டை மாவட்டம்—** | | |
| 58 திருவரங்குளம் | விலத்திரக்கோட்டை | .. |
| 59 அன்னவாசல் | நார்த்தமலை | .. |
| 60 விராலிமலை | கடம்பலூர் | .. |
| 61 குன்னாண்டார் கோயில். | புலியூர் | .. |
| 62 திருமயம் | காட்டூர் | .. |
| **மதுரை மாவட்டம்—** | | |
| 63 கொட்டாம்பட்டி | மங்களம்பட்டி | .. |
| 64 பெரியகுளம் | சில்வர்பட்டி | .. |
| 65 சாணார்பட்டி | வத்தலதோப்பம்பட்டி | .. |
| 66 திருமங்கலம் | குமரப்பனூர் | .. |
| 67 தேனி | தடிச்சேரி | .. |
| 68 போடிநாயக்கனூர் | பி. மீனாட்சிபுரம் | .. |
| 69 திண்டுக்கல் | காந்திநகர் | .. |
| 70 வடமதுரை | வக்கம்பட்டி | .. |
| 71 மேலூர் தெற்கு | தாரியமங்கலம் | .. |





| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | காப்பகம் செயல்படும் கிராமத்தின் பெயர். | மொத்த காப்பாகங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **இராமநாதபுரம் மாவட்டம்—** | | |
| 72 திருவாடானை | ஓரிக்கோட்டை | .. |
| 73 நரிக்குடி | காட்டனூர் | .. |
| 74 ராஜபாளையம் | தெற்குதேவதானம் | .. |
| 75 திருச்சுழி | பொம்மகோட்டை | .. |
| 76 கமுதி | பசும்பொன் | .. |
| 77 ராமநாதபுரம் | பரனூர் | .. |
| 78 சாத்தூர் | நாசகாபுரம் | .. |
| 79 பொகளூர் | எட்டிவயல் | .. |
| 80 கன்னங்குடி | பத்தியக்குடி | .. |
| **தர்மபுரி மாவட்டம்—** | | |
| 81 மொரப்பூர் | குருபரஹல்லி | .. |
| 82 நல்லம்பள்ளி | சிவாடி | .. |
| 83 பர்கூர் | தொகரப்பள்ளி | .. |
| **திருநெல்வேலி மாவட்டம்—** | | |
| 84 வாசுதேவநல்லூர் | நாரணபுரம் | .. |
| 85 ராதாபுரம் | ராதாபுரம் | .. |
| 86 ஆலங்குளம் | தென்றுமாய்மான் குறிச்சி. | .. |
| 87 அம்பாசமுத்திரம் | முடப்பாலம் | .. |
| 88 தூத்துக்குடி | ரத்னபுரி | .. |
| 89 திருச்செந்தூர் | பெஞ்சமின்காலனி | .. |
| 90 சேரன்மகாதேவி | ஆலடி காலனி | .. |
| 91 தென்காசி | பூம்பொழி | .. |

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். (1) | காப்பகம் செயல்படும் கிராமத்தின் பெயர். (2) | மொத்த காப்பகங்களின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| சேலம் மாவட்டம்— | | |
| 92 சங்கரன்கோவில் | பனையூர் | .. |
| 93 எலச்சிப்பாளையம் | உஞ்சனை | |
| 94 ராசிபுரம் | பாளப்பாளையம் | .. |
| 95 நாமக்கல் | பெரியப்பட்டி | .. |
| 96 சேலம் (வாழப்பாடி) | பேளூர் | .. |
| 97 பெத்தநாயக்கன் பாளையம். | மேட்டுடையாம் பாளையம். | .. |
| 98 ஓமலூர் | மூலாண்டிபட்டி | .. |
| 99 எலச்சிப்பாளையம் | கோசலம்பாளையம் | — |
| 100 கொளத்தூர் | சின்ன மேட்டூர் | 9 |
| | மொத்தம் | 100 |

20—

தஞ்சை மாவட்டத்தின் குடவாசல் ஒன்றியத்தில் புதுக்குடியினின்று திருவிழிமழலை வரை உள்ள அரசலாற்றில் இடது கரை சாலையை கப்பிச் சாலையாக போடும் திட்டம்.

வினா 11681—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தின் குடவாசல் ஒன்றியத்தில் 91 புதுக்குடியினின்று திருவிழிமழலைவரை உள்ள அரசலாற்றில் இடது கரைச்சாலையை கப்பிச்சாலையாக மாற்றும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

எனில், அரசின் மேல் நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



21—

புலியூர் சிமெண்ட் ஆலையில் இருந்து வெளியேறும் புகையைக் கட்டுப்படுத்த ஏற்பாடு.

வினா 12018—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புலியூர் சிமெண்ட் ஆலையில் இருந்து வெளியேறும் புகையைக் கட்டுப்படுத்த அரசு என்ன ஏற்பாடு செய்துள்ளது?

விடை—

புலியூர் செட்டிநாடு சிமெண்ட் ஆலையிலிருந்து புகையைக் கட்டுப்படுத்தக்கூடிய கருவியை அந்நிறுவனத்தினர் கல்கத்தாவிலிருந்து தருவிக்க தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். அந்தக் கருவியில் 95 சதவிகிதம் பாகங்கள் வந்து சேர்ந்துவிட்டன. அதனைப் பொருத்தும் வேலை விரைவாக நடைபெற்று வருகிறது. மேற்படி கருவி 30—6—1983-க்குள்ளாக பொருத்தப்பட்டு விடும் எனத் தெரியவருகிறது.

22—

முசிறி அரசு மேல்நிலைப்பள்ளி மின்கம்பிகள் பழுதடைந்ததால் அதனை மாற்ற நடவடிக்கை.

வினா 12226—திரு. எம். கே. இராஜமாணிக்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி, அரசு மேல் நிலைப்பள்ளியில், மின்கம்பிகள் பழுதடைந்த நிலையில் உடன் மாற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளதா?

(ஆ) ஆம் என்றால், அரசு மாற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த மின் கம்பிகள் பழுது நீக்கப்பட்டு விட்டன.

23—

வடாற்காடு கடந்த ஈராண்டிற்கு முன் அளிக்கப்பட்ட சலுகை.

வினா 12255—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் ஊனமுற்றவர்களுக்காக 1980-81, 1981-82-ல் அளிக்கப்பட்ட சலுகைகள் என்ன?

(ஆ) அதற்காக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

வடாற்காடு மாவட்டத்தில் ஊனமுற்றவர்களுக்காக 1980-81, 1981-82-ல் வழங்கப்பட்ட சலுகைகள் பின்வருமாறு:

| வரிசை எண்ணும் சலுகைகளின் விவரமும். | 1980-81 | | 1981-82 | |
|---|---|---|---|---|
| | பயனடைந்தோர். | செலவழிக்கப்பட்ட தொகை. | பயனடைந்தோர். | செலவழிக்கப்பட்ட தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | | ரூ. |
| 1 மூச்சக்கரவண்டி .. | 65 | 65,000 | 150 | 2,25,000 |
| 2 செவிப்புலன் கருவிகள் | 50 | 25,000 | 20 | 8,000 |
| 3 சக்கர நாற்காலி | இல்லை | — | 8 | 8,000 |
| 4 தையல் இயந்திரங்கள் | 12 | 8,400 | 100 | 69,300 |
| 5 சுய வேலை வாய்ப்பிற்காக உதவி .. .. | .. | — | 142 | 1,00,000 |
| 6 படிப்புதவி.. .. | .. | .. | 600 | 15,000 |
| 7 ஊனமுற்றோர் விளையாட்டுப் போட்டிகள். .. | 25 | 250 | 52 | 2,000 |



24—

கல்ராயன்மலை, பச்சைமலை பகுதிகளில் உள்ள பழங்குடி விவசாயிகள் சலுகைகளை இடைத்தரகர்கள் அனுபவிப்பதை தடுக்க நடவடிக்கை.

வினா 12511—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆதி திராவிடர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்ராயன் மலை, பச்சைமலை பகுதிகளில் உள்ள பழங்குடி விவசாயிகளுக்கு அரசு அளித்துள்ள சலுகைகளை அவர்கள் முழு அளவில் பெற முடியாமல் இடைத் தரகர்கள் அவற்றை அனுபவிப்பதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

25 —

திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் தாலுகா ஜெயங்கொண்டம் ஊரில் உள்ள கழுகுமலை நாதசுவாமி கோவில் அருகில் புராதன கடவுள் சிலைகள் கண்டுபிடிப்பு.

வினா 12637—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் தாலுக்கா ஜெயங்கொண்டம் ஊரில் உள்ள புராதன கழுகுமலைநாத சுவாமி கோவில் அருகில் 1981 ஆம் ஆண்டு சோழர்கால புராதன கடவுள் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டனவா?

விடை—

திருச்சிராப்பள்ளி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் ஜெயங்கொண்டம் அருள்மிகு கழுகுமலை நாத சுவாமி திருக்கோயிலைச் சேர்ந்த இரகசிய அறை 21—10—1981 அன்று, அறங்காவலர்கள் மற்றும் நகை சரிபார்க்கும் அதிகாரிகள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதில் ஐந்து சிலைகளும் சிறிய பித்தளை திருவாட்சியும் கண்டுபிடிக்கப்பட்டன. சிலைகள் பெயர், எடை, மதிப்பு கீழ்வருமாறு :—

| | சிலை விவரம். | எந்த உலோகத்தினால் ஆனது. | எடை. (சுமார்) | மதிப்பு (சுமார்) |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| | | | | ரூபாய் |
| 1 | போகசக்தி அம்மன் | தங்கம் கலவாத கலப்பு உலோகம். | 23 1/4 கி. | 1,395 |
| 2 | பிட்சாடனார் .. | ஷ் | 18 1/4 கி. | 1,095 |
| 3 | பூதம் .. | ஷ் | 2 3/4 கி. | 165 |
| 4 | ஆண்டிசிலை .. | ஷ் | 11 3/4 கி. | 705 |
| 5 | தனியம்மன் திருவாட்சியுடன். | ஷ் | 2 3/4 கி. | 165 |
| 6 | தனி திருவாட்சி .. | பித்தளை | 3 1/4 கி. | 195 |
| | | கூடுதல் .. | 62 கி. | 3,720 |

26—

புதுக்கோட்டையில் உள்ள திருக்கோகர்ணம் கிராமத்தில் உள்ள அருங்காட்சியகத்தில் களவு.

வினா 12896—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் உள்ள திருக்கோகர்ணம் கிராமத்தில் உள்ள அருங்காட்சியகத்தில் (மியூசியத்தில்) புதுக்கோட்டை அரசர் எழுதிய கடிதங்கள், பலவிதமான பறவைகளின் அமைப்பு, அக்காலபோர் வீரர்களின் ஆடை அணிகலன்கள் பெண்களின் தாலி வகைகள் சில திருடு போய்விட்டதாக அரசுக்குப் புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

27—

1981 ஆம் ஆண்டு முதல் ஆதி திராவிடர் நலத்துறை ஆலோசனைக்குழு அமைத்தல்.

வினா 12948—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 ஆம் ஆண்டு முதல் ஆதி திராவிடர் நலத்துறை ஆலோசனைக்குழு அமைக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், காரணம் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1980 ஆம் ஆண்டில் மாநில சட்டப் பேரவையானது கலைக்கப்பட்டு பின்பு மறுபடியும் 1980 ஆம் ஆண்டில் மக்களாட்சி முறைப்படி அரசு தேர்ந்தெடுக்கப்பட்டது. இதனால் மாநில ஆதிதிராவிடர் நலக்குழுவானது திருத்தியமைக்கப்பட வேண்டியுள்ளது. தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் பூர்வாங்க விவரங்களை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். விரைவில் இக்குழுவானது திருத்தி அமைக்கப்படும்.

28—

அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசே நேரடியாக சம்பளம் வழங்கும் திட்டம்.

வினா 13007—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசே நேரடியாக சம்பளம் வழங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) 3—12—1982 ஆம் நாளிட்ட கல்வித் துறை அரசாணை 2417ல் அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசே நேரடியாக சம்பளம் வழங்கும் திட்டம் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக 1—12—1982 முதல் அமுலுக்கு கொண்டுவரப்பட்டு உள்ளது. தற்போது அந்தத் திட்டத்தை செயலாற்றுவதற்கு சென்னை உயர் நீதி மன்றம் தடை விதித்துள்ளது.

29—

அரசு கூட்டுறவு வங்கிகள் மூலம் வீடு கட்ட கடன் வழங்கும்போது மரங்களை வளர்க்க அறிவுறுத்தல்.

வினா 13136—திரு. சி. கோபால் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வீடு கட்ட அரசு கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்கும் போது மரங்களை கண்டிப்பாக வளர்க்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளதா ?

விடை—

இவ்வாறு அரசு ஆணை வெளியிடப்படவில்லை. ஆனால் கிராம கூட்டுறவு வீட்டுவசதி சங்க உறுப்பினர்கள் அவர்களது வீட்டு பின்புறங்களில் தென்னை அல்லது மாமரங்களை நட்டு வளர்க்குமாறு அறிவுறுத்த கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி), வீட்டுவசதி சங்கங்களின் துணைப் பதிவாளர்களை அறிவுறுத்தியுள்ளார்.

30—

மதுரை தியாகராசர் பொறியியற் கல்லூரி விடுதி மூடியதால் உதவித்தொகை பெறும் மாணவர்கள் படும் சிரமம்.

வினா 13294—திரு ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை தியாகராசர் பொறியியற் கல்லூரி விடுதி கடந்த ஓராண்டு காலமாக மூடியிருப்பதால் உதவித் தொகை பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் சிரமப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அவர்களில் வெளியில் தங்கியிருக்கும் வெளியூர் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?



விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசால் அங்கீகரிக்கப்படாத விடுதியில் தங்கிப் பயில்வதால் இம்மாணவர்களுக்கு மத்திய அரசு/மாநில அரசு கல்வி உதவித் தொகைகள், புற மாணவர்களுக்குரிய விகிதத்திலேயே வழங்கப்படுகிறது. இவர்களுக்கு கடன் கல்வி உதவித் தொகையும் வழங்கப்படவில்லை, எனவே இம்மாணவர்கள் சிரமப்படுகிறார்கள். இம்மாணவர்கள் அங்கீகரிக்கப்படாத தனியார் விடுதிகளில் தங்கியிருந்த போதிலும் இவர்களுக்கு விடுதி மாணவர்களுக்கு உரிய விகிதத்தில் மத்திய அரசு கல்வி உதவித் தொகை வழங்க அனுமதிக்கும்படி மத்திய அரசினரை இவ்வரசு கேட்டுக் கொண்டு உள்ளது. மத்திய அரசின் கல்வி உதவித் தொகைக்கு தகுதியற்ற மாணவர்களுக்கு மாநில அரசு கல்வி உதவித் தொகை வழங்குவது, தகுதியுள்ள எல்லா மாணவர்களுக்கும் கடன் கல்வி உதவித் தொகை வழங்குவது, ஆகியவை இவ்வரசின் பரிசீலனையில் உள்ளன.

31—

திருவண்ணாமலை கூட்டுறவு அர்பன் வங்கி காசாளர் கையாடிய பணம் பற்றி நடவடிக்கை.

வினா 13300—திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு கைத்தறி-கூட்டுறவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை கூட்டுறவு அர்பன் வங்கியில் ஓர் ஆண்டிற்கு முன் காசாளர் ரூ. 10,000-த்தை கையாடல் செய்தது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

(இ) மறுபடியும் அவருக்கு வேலை கொடுக்கப்பட்டது உண்மையா ?

(ஈ) ஆம் எனில், என்ன காரணம் ?

விடை—

(அ) திருவண்ணாமலை கூட்டுறவு அர்பன் வங்கியில் தினசரி சேமிப்புத் திட்டத்தின் பொறுப்பாளராக பணியாற்றிய திரு. வி. பன்னீர்செல்வம் என்ற எழுத்தர் ''தேனி தினசரி சேமிப்பு திட்ட'' வசூல் நிதியில் ரூ. 16,672 கையாடல் செய்துள்ளார்.

(ஆ) தேனி தினசரி சேமிப்பு திட்டம் (வடக்கு) என்ற வங்கித் திட்டத்தில் அனேக ஊழல்கள் இருப்பதாக தெரிவித்த சரக துணைப் பதிவாளரின் அறிக்கையின் அடிப்படையில், கூட்டுறவுத்துறை புலனாய்வுப் பிரிவு இது தொடர்பாக விசாரணை செய்து தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டப்பிரிவு 65-ன் கீழ் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கையாடல் செய்யப்பட்ட தொகை முழுவதும் வசூல் செய்யப்பட்ட போதிலும் சம்பந்தப் பட்டவர்கள் மீது குற்றவியல் (Prosecution) நடவடிக்கை தொடர இணைப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

(இ) ஆம்.

(ஈ) திரு. வி. பன்னீர்செல்வம் என்ற எழுத்தர் தினசரி சேமிப்புத் திட்டத்தில் செய்த ஊழல்களுக்காக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு, கையாடல் செய்யப்பட்ட தொகை முழுவதும் அவரிடமிருந்து வசூல் செய்யப்பட்டபின் அவர் சமர்ப்பித்த இராஜிநாமா கடிதம் வங்கியின் ஒழுங்குமுறை உப குழுவினால் பரிசிலனை செய்யப்பட்டு, 3-10-1980-ல் ஏற்றுக் கொள்ளப் பட்டு அவர் பணியிலிருந்து 4-10-1980 அன்று விடுவிக்கப் பட்டார். திரு. பன்னீர்செல்வம், தன் உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும், குடும்ப சூழ்நிலை காரணத்தாலும் தான் வங்கியில் எழுத்தர் பதவியை பதவி விலகல் செய்ததை அங்கீகரிக்காமல் தன்னை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளுமாறு கொடுத்த கருணை மனுவின் பேரில், வங்கியின் 17-11-1980-ல் நடைபெற்ற கூட்டத்தில் நிர்வாகக் குழுவினால் புரிசிலிக்கப்பட்டு பதவி விலகல் ஏற்பு ரத்து செய்யப்பட்டு 1-12-1980 முதல் மீண்டும் வேலையில் சேர அனுமதிக்கப்பட்டு, இடைப்பட்ட காலத்தை சம்பளம் இல்லாத விடுப்பாக கருத தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

திருவண்ணாமலை கூட்டுறவு அர்பன் வங்கியின் தலைவர், எழுத்தர் திரு. வி. பன்னீர்செல்வத்தை 15-9-1982 முதல் மீண்டும் தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளார். விதிமுறைகளின்படி அவர்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



32—

கரூர் நகரில் அடிக்கடி ஏற்படும் மின்தடை.

வினா 13305—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் நகரில் அடிக்கடி திடீர் திடீரென்று மின்தடை ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

விடை—

(அ) ஆம். மின் தேவை உற்பத்தித் திறனுக்கு அதிகமாக இருந்ததாலும் மற்றும் கரூருக்கு மின்சாரம் வழங்கும் ஈரோடு துணை மின் நிலையத்தில் மின் அழுத்தக் குறைவு ஏற்பட்டதாலும் கரூர் நகரில் மின் விநியோகத்தில் தவிர்க்க முடியாது அடிக்கடி மின் தடங்கல் ஏற்பட்டது.

(ஆ) மின் விநியோகத்தை சரி செய்ய மின்சாரம் பயன் படுத்துவதில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது நிலைமை சீராகியுள்ளது.

33—

திருத்தணி சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு ஊழியர் நியமனம்.

வினா 13626—திரு. பூ. மு. நரசிம்மன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயத்திற்கு ஊழியர்களை நியமித்திட அரசு அனுமதியளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு உத்தரவுப்படி எத்தனைபேர்கள் ஆலய ஊழியர்களாக நியமிக்கப்பட வேண்டும்? புதிதாக ஊழியர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்களா?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருக்கோயில் பணியாளர்கள் நியமனத்திற்கு அரசு உத்தரவு தேவை இல்லை. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் மற்றும் துணை ஆணையர் ஆகியோரின் முன் அனுமதியின் பேரில் 1959-ம் ஆண்டு இந்து சமய அறநிலைய சட்டப் பிரிவு 55 (1)-ன்படி பரம்பரையில்லா பணியாளர்களை தேவைக்கேற்றவாறு நியமனம் செய்ய திருக்கோயில் அறங்காவலர் குழுவிற்குத்தான் அதிகாரமுண்டு.

34

ஆலத்தூர் கேட்டிலிருந்து அரியலூர் செல்லும் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

வினா 13675—திரு. என். பெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வரகூர் தொகுதியைச் சேர்ந்த ஆலத்தூர் கேட்டிலிருந்து அரியலூர் செல்லும் சாலையில் கி.மீ. 11.2, 11.4-இல் குறுக்கிடும் ஆற்றில் பாலம் கட்ட அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

விடை—

இல்லை. இப்பாலம் அமைக்கும் வேலை எவ்வித அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலும் இடம் பெறவில்லை. இச்சாலையில் கி.மீ. 21-0-ஆல் மருதையாற்றின் குறுக்கே ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் மாநில சாலைகள் திட்டத்தின் கீழ் 1982-83 ஆம் ஆண்டு இரண்டாம் பாகத்திட்டத்திற்கு ஒரு பாலம் கட்ட அரசு ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கூறிய காரணத்தினாலும் அரசின் குறுகிய நிதிவசதியின் காரணமாகவும் இப்பாலம் கட்டும் பணியை உடனடியாக மேற்கொள்ள இயலாது.



35—

கும்பகோணம் நகராட்சிக்குச் சொந்தமான பாணாதுறையில் இருந்த கழிப்பிடம் பரிவர்த்தனை.

வினா 13713—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் நகராட்சிக்குச் சொந்தமான பாணா துறையில் இருந்த கழிப்பிட இடத்தை அவ்விடத்திற்கு பின்புறமுள்ள தியேட்டர் உரிமையாளருக்கு பரிவர்த்தனை செய்து கொடுத்தது உண்மையா?

(ஆ) மேற்படி கழிப்பிடத்தை பொது மக்கள் மாற்றக் கூடாது என அரசுக்கு விண்ணப்பித்தார்களா?

(இ) ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டது?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) இந்தக் கழிப்பறை திரையரங்கு முன்புறம் அமைந்து இருந்ததால் துர் நாற்றம் வீசிக்கொண்டு அருவருக்கத்தக்க வகையில் இருந்தது. எனவே இதனை அப்புறப்படுத்திவிட்டு, திரையரங்கு உரிமையாளருக்கு சொந்தமான இடத்தில் ஓர் நவீன கழிப்பறை அவரது செலவில் கட்டி முடிக்கப்பட்டு, அது பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

36—

திருச்சியில் துணை நகரம் உருவாக்கும் திட்டம்.

வினா 13778—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருச்சியில் துணை நகரம் (சாட்டிலைட் டவுன்ஷிப்) ஒன்றை உருவாக்க செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

[1984 ஏப்ரல் 24

37—

பஞ்சாயத்து ஒன்றியங்களில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் எண்ணிக்கை.

வினா 13871—திரு. இல. பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பஞ்சாயத்து ஒன்றியங்களில் பணி செய்யும் ஆசிரியர்கள் பட்டதாரிகள் எத்தனை பேர்?

(ஆ) இவர்களில் பட்டம் பெற்றவர்களுக்கு தனி தன்மை சலுகை, வேலை தகுதி மாற்றியமைக்கப்பட்டுள்ளதா?

விடை—

(அ) பஞ்சாயத்து ஒன்றிய பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் 854 பேர்கள்.

(ஆ) 1-9-1979-க்குப் பிறகு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களில் பி. டி. அல்லது பி. எட்., பட்டம் பெற்றவர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமனம் பெறுகின்றனர். நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்கள், பட்டம் பெற்று இடைநிலை ஆசிரியர்களாக பணிபுரிந்து வரும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுக்கான பணியிடங்களாக மாற்றப்பட்டுள்ளன. முன்னுரிமை அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணி உயர்வு அளிக்கப்படுகிறது. தவிர, இடைநிலை ஆசிரியர்கள் பி. எட். தகுதி பெற்றால், அரசாணை 42, கல்வித்துறை, நாள் 10-1-1969-ன்படி இரண்டு ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கப்படுகின்றன.

38—

வடாற்காடு மாவட்ட தொழிலாளர் நீதிமன்றத்திற்கு வந்த வழக்குகளின் எண்ணிக்கை.

வினா 13871—திரு. இல. பலராமன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றத்திற்கு வந்த வழக்குகள் 1979-80, 1980-81, 1981-82-ஆம் ஆண்டுகளில் எத்தனை?

(ஆ) சமரசம் செய்யப்பட்டவை எத்தனை?

(இ) உயர்நீதிமன்றத்திற்குச் சென்றவை எத்தனை?



1984 ஏப்ரல் 24]

விடை—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றத்திற்கு வந்த வழக்குகள் விவரம்.

| | |
|---|---|
| 1979-80 | 33 |
| 1980-81 | 49 |
| 1981-82 | 52 |

(ஆ) சமரசம் செய்யப்பட்டவை :

| ஆண்டு. | 1947-ம் ஆண்டு தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் படி ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப் பட்டவை. | 1947-ம் ஆண்டு தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(4)-ன் கீழ் சமரச முறிவறிக்கை அனுப்பப் பட்டவை. | அறிவுரை மூலம் முடிக்கப் பட்டவை. | மொத்தம் சமரசம் செய்யப் பட்டவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1978-79 .. | 98 | 76 | 322 | 496 |
| 1980-81 .. | 75 | 86 | 204 | 365 |
| 1981-82 | 82 | 132 | 165 | 379 |

(இ) உயர்நீதிமன்றத்திற்கு சென்றவை :

| | |
|---|---|
| 1979 | ஒன்றும் இல்லை. |
| 1980 | ஒன்று. |
| 1981 | ஒன்றும் இல்லை. |
| 1982 | ஒன்று. |

39—

எடையூரில் தங்கி படிக்கும் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு விடுதி கட்டிக் கொடுக்கும் திட்டம்.

வினா 14157—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு ஆதி-திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் எடையூரில் தங்கிப் படிக்கும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிக் கொடுக்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) எடையூர் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்காக கட்டிடம் கட்டுவதற்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி மேம்பாட்டுக் கழகத்திடம் நிலம், ஒப்படைப் பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

40—

வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்கும்போது அந்தந்த மாவட்டங்கள் முன்னுரிமை வழங்கப்படுதல்.

வினா 14218—திரு. எஸ். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்போது அவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படுமா ?



விடை—

அரசுத் துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் அவை களில் ஏற்படும் காலியிடங்களை வேலை வாய்ப்பு அலுவலகங் களுக்கு தெரிவிக்கும்போது, வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பெயர்களை பதிவு செய்துள்ள, அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள்தாம் அந்த காலியிடங்களுக்கு பரிந் துரை செய்யப்படுகின்றனர். இவ்வாறான பரிந்துரை விண்ண ணப்பத்தார்களது பதிவு முதன்மையின் (Securiuty cf Registration) அடிப்படையில் செய்யப்படுகிறது. இந்நிலை பட்டதாரிகள் உட் பட அனைத்துப் பிரிவினருக்கும் பொருந்தும். இருப்பினும், நிறுவனங்கள் கோரும் கல்வி மற்றும் அனுபவ தகுதிகளுடன் விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்ட மாவட்ட வேலை வாய்ப்பு அலு வலகங்களின் பதிவேடுகளில் கிடைக்கப் பெறாத கட்டங்களில், அண்டை மாவட்டங்களில் அவ்வாறான விண்ணப்பதாரர்கள் கிடைக்க நேர்ந்தால் அவர்களை பெறும்பொருட்டு அவ்வகைக் காலியிடங்கள் அண்டை மாவட்டங்களுக்கும் சுற்றுககு அனுப்பப்படுவதுண்டு.

41—

வடாற்காடு மாவட்டத்தில் வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உதவிப் பணம்.

வினா 14492—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் 1980-க்குப் பிறகு 1981 பிப்ரவரி முடிய வேலையில்லாத எத்தனை பட்டதாரிகளுக்கு உதவிப்பணம் வழங்கப்பட்டது ?

விடை—

தமிழ்நாட்டில் வேலையற்றோர் நிவாரணத் தொகை தகுதி வாய்ந்த மனுதாரர்களுக்கு 1-7-1980 முதல் வழங்கப்படுகிறது. 1-7-1980 முதல் 28-2-1981 முடிய வட ஆற்காடு மாவட்டத் தில் வேலையற்றோர் நிவாரணத் தொகை வழங்கப்பட்ட பட்ட தாரிகளின் எண்ணிக்கை 34.

42—

குத்தாலம் ஒன்றிய குழந்தைகள் காப்பகங்களின் எண்ணிக்கை.

வினா 14643 —திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் ஒன்றியத்தில் இயங்கி வரும் குழந்தைகள் காப்பகங்கள் எத்தனை?

(ஆ) அவற்றுள் சமூக நலத்துறை மூலம் இயங்குவது எத்தனை? ஊராட்சி மூலம் இயங்குவது எத்தனை?

(இ) அதில் பணிபுரியும் பால சேவிகாக்களின் மாத சம்பளம் எவ்வளவு?

விடை—

(அ) குத்தாலம் ஒன்றியத்தில் 55 குழந்தைகள் காப்பகங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் 1–7–1982 முதல் செயல்படும் நிலையில் அனைத்தும் சமூக நலத்துறையின் கீழ் இயங்குகின்றன.

(இ) பால சேவிகாக்களின் ஒட்டு மொத்த மாத ஊதியம் ரூ. 175 ஆகும்.

43—

மாவட்ட ரீதியாக நடத்தப்படும் தனியார் இல்லம் ஆதிதிராவிட மாணவ மாணவிகள் விடுதிகள் எண்ணிக்கை.

வினா 14670 —திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் மாவட்ட ரீதியாக நடத்தப்படும் ஆதி திராவிடர் மாணவ மாணவிகளின் விடுதிகள் எத்தனை தனியார் இல்லங்களில் நடைபெறுகிறது?

(ஆ) அதற்கு உண்டாகும் செலவு எவ்வளவு தொகை?



விடை—

தமிழகத்தில் மாவட்ட ரீதியாக நடத்தப்படும் ஆதி திராவிடர் மாணவ மாணவியர்களின் விடுதிகளில் தனியார் இல்லங்களில் நடைபெறுவது மற்றும் அதற்கு உண்டாகும் செலவுப் பற்றிய விவரங்களின் அறிக்கைப் பற்றிய விவர அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

வாடகை கட்டிடங்களில் அமைந்திருக்கும் ஆதிதிராவிடர் நல விடுதிகளின் விவரங்கள்.

| மாவட்டம். | மொத்த விடுதிகளின் எண்ணிக்கை. | | வாடகை கட்டிடங்களில் அமைந்திருக்கும் விடுதிகளின் எண்ணிக்கை. | | மொத்த வாடகை. |
|---|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | ஆண். | பெண். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) ரூ. |
| 1 சென்னை .. | 7 | 4 | 3 | 3 | 42,864 |
| 2 செங்கல்பட்டு .. | 42 | 13 | 32 | 11 | 95,784 |
| 3 வடாற்காடு .. | 32 | 14 | 22 | 13 | 85,488 |
| 4 தென்னாற்காடு .. | 50 | 16 | 39 | 15 | 1,30,272 |
| 5 தஞ்சாவூர் .. | 42 | 16 | 32 | 12 | 90,792 |
| 6 திருச்சிராப்பள்ளி | 46 | 14 | 36 | 10 | 78,000 |
| 7 சேலம் .. | 39 | 14 | 34 | 9 | 81,912 |
| 8 கோயம்புத்தூர் | 13 | 7 | 7 | 3 | 29,784 |
| 9 மதுரை .. | 50 | 23 | 45 | 20 | 2,82,672 |
| 10 இராமநாதபுரம் | 57 | 16 | 49 | 15 | 1,37,364 |
| 11 தர்மபுரி .. | 21 | 6 | 19 | 5 | 52,296 |
| 12 நீலகிரி ... | 9 | 4 | 8 | 3 | 31,464 |
| 13 திருநெல்வேலி | 42 | 26 | 36 | 24 | 1,05,888 |
| 14 கன்னியாகுமரி | 7 | 5 | 3 | 5 | 18,480 |
| 15 புதுக்கோட்டை | 18 | 6 | 13 | 5 | 41,160 |
| 16 பெரியார் .. | 10 | 6 | 6 | 6 | 42,624 |
| மொத்தம் .. | 485 | 190 | 384 | 159 | 13,46,844 |

44—

கடலூர் வட்டத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதாச்சாரத்திற்கு ஆசிரியர்கள் பதவி

வினா 14749—திரு கே. உச்சி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதாச்சாரத்திற்கேற்றவாறு போதுமான ஆசிரியர்கள் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் மட்டும் அன்றி, இம்மாநிலத்தில் பிற இடங்களிலும் சில பல பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கைக் கேற்ப, அரசு ஆணைகளின்படி அனுமதிக்கத்தக்க அளவுக்கு ஆசிரியர் பணியிடங்கள் இல்லை என்ற நிலைமை கடந்த பல ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. அப்பள்ளிகளின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யும் அளவுக்கு ஆசிரியர் பணியிடங்களை கூடுதலாக ஏற்படுத்த அரசு நிதி நிலை இடந்தராது. எனினும் அரசு நிதிநிலை இடந்தரும் அளவுக்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

54—

மதுரையிலுள்ள போக்குவரத்து துறைக்கு சொந்தமான பிரயாணிகள் தங்கும் அறைகள் எண்ணிக்கை.

வினா 14796 —திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) மதுரையிலுள்ள போக்குவரத்து துறைக்குச் சொந்தமான பிரயாணிகள் தங்கும் அறைகள் எத்தனை ?

(ஆ) அவைகள் தற்போது யார் நிர்வாகத்தில் உள்ளது ?

விடை —

(அ) மதுரை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்கும் அறை ஒன்று உள்ளது.

(ஆ) இது, தற்போது, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக, மதுரை கிளை மேலாளரின் நிர்வாகத்தில் உள்ளது.



46—

மாவட்ட தலை நகரங்களில் டிஸ்ட்டிரிக்ட் ரெவின்யூ ஆபீசருக்கு இணையாக ஒரு ஜாய்ன்ட் டைரக்டர் ஏற்படுத்துதல்.

வினா 14837—திரு எஸ், டி. உகம்சந்த் மற்றும் திரு பெ., சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட தலைநகரங்களில் District Revenue Officerக்கு இணையாக ஒரு Joint Director பதவி ஏற்படுத்தி உள்ளாட்சி வேலைகள் நிர்வகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

விடை—

(அ) தற்பொழுது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

47—

பழனி தொகுதியில் ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுவோர் எண்ணிக்கை.

வினா 14889—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதியில் எத்தனை பேருக்கு ஊனமுற்றோர் உதவித் தொகை 1977 ஆம் ஆண்டு முதல் கொடுக்கப்படுகிறது ? (ஆண்டு வாரியாக) :—

விடை—

| வருடம். | உதவித் தொகை பெற்ற நபர்கள். |
|---|---|
| (1) | (2) |
| 1977 .. .. | 46 |
| 1978 .. .. | 47 |
| 1979 .. .. | 56 |
| 1980 .. .. | 66 |
| 1981 .. .. | 69 |
| 1982 .. .. | 69 |

48—

### தமிழகத்தில் காசநோய் மருத்துவமனைகள் படுக்கைகள் எண்ணிக்கை.

வினா 14989—திரு என். பழனிவேல் : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் காசநோய் மருத்துவ மனைகள் எத்தனை உள்ளன ?

(ஆ) அவற்றில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை எத்தனை ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் அரசின் மேற்பார்வையில் 8 காசநோய் மருத்துவமனைகள் உள்ளன. இதைத் தவிர, தனியார் துறையில் 3 காசநோய் மருத்துவமனைகள் உள்ளன.

(ஆ) அரசு காசநோய் மருத்துவமனையில் (T.B. Sanatorium T.B. Hospital) 1,882 படுக்கைகளும், மூன்று தனியார் காசநோய் மருத்துவமனைகளில் 714 படுக்கைகளும் உள்ளன. இதைத் தவிர 36 அரசு பொது மருத்துவமனைகளில்(Government Hospital Clinics) 821 படுக்கைகளும், அதேபோல் தனியார் துறையில் உள்ள 6 பொது மருத்துவமனைகளில் (Private Hospitals) காசநோய் சிகிச்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 187 படுக்கைகளுமாக, மொத்தம் 36,041 படுக்கைகள் காசநோயாளிகளின் சிகிச்சைக்காக உள்ளன.

49—

### திருப்பூர் அரசு மருத்துவ மனையில் இருந்த படுக்கைகளின் எண்ணிக்கை.

வினா 14990—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் அரசு மருத்துவமனையில் 1980–81 ஆம் ஆண்டில் இருந்த படுக்கைகள் எத்தனை ?

(ஆ) தற்பொழுது அது அதிகரிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?



விடை—

(அ) 104.

(ஆ) மற்றும் (இ) இது தவிர மேலும் கூடுதலாக 316 படுக்கைகள் போட ஏதுவாக கீழ்க்கண்டவாறு புதிய கட்டிடங்கள் கட்ட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது—

(1) 186 படுக்கைகள் கொண்ட கூடுதல் பிரிவு.

(2) 20 படுக்கைகள் கொண்ட குடும்பநலப் பிரிவின் சிகிச்சைப் பிரிவு (Post-Partum ward).

(3) 10 படுக்கைகள் கொண்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு.

50—

### சங்கராபுரம் அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர் நியமனம்.

வினா 15076—திரு. ஜோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர் நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கப்படுவார் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசினர் மருந்தகம் சங்கராபுரத்தில் தற்போது இரு மருத்துவர் பணியிடங்கள் உள்ளது. அவற்றில் தற்பொழுது இரு ஆண் மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களில் ஒரு ஆண் மருத்துவரை மாற்றி அவரிடத்தில் ஒரு பெண் மருத்துவரை நியமிக்க தமிழ்நாடு தேர்வாணைக் குழுவில் தேர்ந்தெடுக்கப்படும் மருத்துவ அலுவலர்கள் பட்டியல் வந்தவுடன் ஆவன செய்யப்படும்.

51—

சங்கராபுரம் தொகுதியில் தேவபாண்டலம் கிராமத்தில்
அரிசன மாணவர் விடுதி கட்ட செயற்குறிப்பு.

வினா 15085—திரு சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள தேவபாண்டலம் கிராமத்தில் அரிசன மாணவர் விடுதி கட்டுவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): தென் ஆற்காடு மாவட்டம், சங்கராபுரம் தொகுதி தேவபாண்டலம் கிராமத்தில் மாணவர் விடுதி கட்டு வதற்கு அரசிடம் தற்சமயம் ஏதும் திட்டமில்லையென்றாலும் 1983—84 ஆம் ஆண்டில் இப்பணி மேற்கொள்ளப்படும் என ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தெரிவித்து உள்ளார்.

52—

தொடிப்பட்டியில் உள்ள காமாட்சியம்மன் கோவிலைத்
திருப்பணி செய்யும் உத்தேசம்.

வினா 15087—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்விராயன் மலைப்பகுதியில் உள்ள தொடிப்பட்டி யில் உள்ள மலைவாழ் மக்கள் வழிபடும் ஆலயமான காமாட்சி யம்மன் கோவில் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் ஆலய கட்டிடத்தை புதுப்பிக்கும் பணி எப்போது மேற்கொள்ளப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): இத்திருக்கோயில் திருப்பணி தொடர்பாக திருப்பணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. திருப்பணிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின்பு திருப்பணி வேலை தொடரப் படும்.



53—

தமிழ்நாடு பிரதம கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலம்
கொடுக்கப்படும் கடன்கள்.

வினா 15111—திரு தி. கா. நல்லப்பன்; திரு. ஏ. டி. கருப்பையா, திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் பிரதம கூட் டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் வழங்கப்படும் கடன்கள் உரிய காலத்தில் வழங்கப்படவில்லை என்று அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : அரசுக்கு பிரதம கூட்டுறவுச் சங்கங் களிடமிருந்து கோரிக்கை ஒன்றும் வரவில்லை. 1981-82 ஆம் கூட்டுறவு ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் பிரதம நகர்ப்புற கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கு ரூ. 14,74.83 இலட்சம் கடன் வழங்கியுள்ளது. இதே ஆண்டில் கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கிராமப்புற கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கு ரூ. 11,44.50 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

54—

மதுரை மாவட்டத்தில் இருநூறுக்கும் குறைவாக மாணவர்கள்
எண்ணிக்கை கொண்டுள்ள உயர்நிலைப் பள்ளிகள்.

வினா 15148—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் இருநூறுக்கும் குறைவாக மாணவர்கள் எண்ணிக்கை கொண்டுள்ள உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) மாணவர்கள் எண்ணிக்கை குறைந்ததற்கான காரணங்கள் யாவை ?

(இ) அந்த உயர்நிலைப் பள்ளிகளின் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த நடவடிக்கைகள். மேற்கொள்ளப் படுமா ?

விடை—

(அ) 37

(ஆ) இவ்வுயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்ட காலத் திலிருந்தே 200-க்கும் குறைவாகவே மாணவர்கள் எண்ணிக்கை இருந்து வந்திருக்கிறது. பெரும்பான்மையான பள்ளிகள் சிறிய கிராமத்திலும் சிறிய ஊர்களிலும் அமைந்துள்ளதால் மாணவ/

மாணவியர் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. நகரங்களில் உள்ள பள்ளிகளின் அருகில் தனியார் துறை பள்ளிகள் அமைந்துள்ளதாலும் மாணவர்களின் எண்ணிக்கை பரவலாக உள்ளது. மேலும் பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்கள் வாழும் பகுதிகளின் அருகில் உள்ள பிற்பட்டோர் நலத் துறையினரால் நடத்தப்படும் தங்கும் விடுதிகள் உள்ள பள்ளிகளை நாடியும் மாணவர்கள் சென்று விடுகின்றனர்.

(இ) ஒவ்வொரு ஆண்டும் பள்ளிகள் திறக்கப்படும்போதும் அதற்குப் பின்னரும் பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் மூலமாக வயது வந்தோர் அனைவரையும் பள்ளிகளில் சேர்க்க அவ்வப்போது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

55—

குன்னூர், வண்ணாரப்பேட்டை, சத்தியமூர்த்தி நகர்
ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்ட நில ஆர்ஜிதம்.

வினா 15169—திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர், வண்ணாரப்பேட்டை, சத்தியமூர்த்தி நகர் ஆதி திராவிடர்கள் 300 குடும்பங்களுக்கு வீடுகள் கட்ட நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) குன்னூர், வண்ணாரப்பேட்டைப் பகுதியில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்ட நிலம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. ஆனால், குடிசை மேம்பாட்டுப் பணியை கோயமுத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் ஆகிய நான்கு மாவட்டத் தலைநகரங்களில் மட்டும் செயல்படுத்தப்படல் வேண்டும் என்ற அரசின் கொள்கை முடிவு காரணமாக, மேற்கண்ட திட்டம் செயல்படுத்தப்படவில்லை. அரசு தனது நிலை ஆணை எண் 550, நாள்: 2—7—1982-ல் மேற்கூறிய நான்கு மாவட்டத் தலைநகரங்களல்லாமல், மாநிலம் முழுவதில், அத்தியாவசியமான பகுதிகளில் குடிசை மேம்பாடு/மாற்றும் பணியை நிறைவேற்ற ஆணையிட்டுள்ளது. இதன்படி, குன்னூர் பகுதியில் ச. எண். 662/2-ல் உள்ள நிலத்திலும் அதன் அருகில் உள்ள ச. எண். 662/1ஏ-ல் உள்ள இரு நிலப் பகுதிகளிலும் சிறந்த முறையில் பயன்படுத்த ஏதுவாக ஒரு விரிவான (comprehensive) திட்டத்தை வீட்டு வசதி வாரியம் உருவாக்கியுள்ளது. இதில் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கு 50 சதவிகிதத்திக்கு மேல் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.



56—

வேலூர் தலைமை வேலைவாய்ப்பு அலுவலகத்தில்
1982 வரை வேலை கேட்டு பதிவு செய்தவர்கள் எண்ணிக்கை.

வினா 15214—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், வேலூரில் உள்ள தலைமை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலை கேட்டு 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை பதிவு செய்து உள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) அவர்களில் 1981-82 ஆம் ஆண்டில் எத்தனை பேருக்கு வேலை கொடுக்கப்பட்டது?

விடை—

(அ) வடாற்காடு மாவட்டம் வேலூரிலுள்ள தலைமை அலுவகத்தில் வேலை கேட்டு 1982 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு மார்ச் திங்கள் இறுதிவரை (31—3—1982 முடிய) பதிவு செய்து செல்லுபடி பதிவேட்டில் வேலைக்காக காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 44,545 ஆகும்.

(ஆ) அவர்களில் 1981-82 ஆம் ஆணடில் (ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரையில்) 4,162 பேருக்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், வேலூர், மூலமாக வேலை கொடுக்கப்பட்டது.

57—

ஆலங்காயத்திலுள்ள துணை வேலை வாய்ப்பு அலுவகத்தின்
பட்டியலில் 1982 வரை பதிவு செய்தவர்களின் விவரம்.

வினா 15215—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம ஆலங்காயத்திலுள்ள துணை வேலை வாய்ப்பு அலுவகத்தில் வேலை கேட்டு 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) அவர்களில் 1981—82 ஆம் ஆணடில் எத்தனை பேருக்கு வேலை கொடுக்கப்பட்டது?

விடை—

(அ) வடாற்காடு மாவட்டம் ஆலங்காயத்திலுள்ள துணை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் வேலை கேட்டு 1982 ஆம்ஆண்டு மார்ச் திங்கள் இறுதியில் பதிவு செய்து செல்லுபடி பதிவேட்டில் காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 16,127 ஆகும்.

(ஆ) அவர்களில் 1981-82 ஆம் ஆண்டில் (ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரையில்) 652 பேருக்கு வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக வேலை கொடுக்கப்பட்டது.

58—

**சங்கரன்கோவில், குருவிகுளம், மற்றும் மேலநீலிதநல்லூர் ஆகிய கிராமங்களிலுள்ள வானொலிப் பெட்டிகள் செயல்பட அரசு நடவடிக்கை.**

வினா 15304—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில், குருவிகுளம், மேலநீலிதநல்லூர் ஆகிய ஒன்றிய கிராமங்களில் வானொலிப்பெட்டிகள் செயலற்றிருக்கின்ற நிலை அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் செயல்பட அரசு துரித நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) இம்மூன்று ஒன்றியங்களையும் சார்ந்த கிராமங்களில் கண்டனம் செய்யப்பட்டவையுள், கண்டனம் செய்யப்பட வேண்டிய சில வானொலிப் பெட்டிகள் மட்டுமே செயலற்று இருக்கின்றன.

(ஆ) தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் கழகம் தயாரிக்கும் 'எல்காட்' என்னும் வானொலிப் பெட்டியை உள்ளாட்சி நிறுவனங்கள் வாங்கலாம் என ஆணையிட்டுள்ளது. எனவே, கண்டனம் செய்யப்பட்ட வானொலிப் பெட்டிகளுக்குப் பதிலாக 'எல்காட்' வானொலிப் பெட்டியை வாங்கி நிறுவுவது அந்தந்த ஒன்றியங்களைச் சார்ந்ததாகும்.



59—

**1979-80 மற்றும் 1980-81 ஆம் ஆண்டுகளில் பஸ் லாரி விபத்துக்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை.**

வினா 15320—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1979-80, 1980-81 ஆம் ஆண்டுகளில் பஸ் விபத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கை என்ன ?

(ஆ) லாரி விபத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கை என்ன ?

(இ) அரசு—போக்குவரத்து கழகப் பேருந்துகளால் இறந்தவர்கள் எண்ணிக்கை என்ன ?

விடை—

(அ) 1979-80, 1980-81 ஆண்டுகளில் பஸ் விபத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கை முறையே 932, 972.

(ஆ) 1979-80, 1980-81 ஆண்டுகளில் லாரி விபத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கை முறையே 1,224, 1,242.

(இ) அரசு—போக்குவரத்து கழகப் பேருந்துகளால் இறந்தவர்களின் எண்ணிக்கை :—

| | 1979-80 | 1980-81 |
|---|---|---|
| பல்லவன் போக்குவரத்து கழகம் (புறநகர்) | 108 | 115 |
| பல்லவன் போக்குவரத்து கழகம் (மாவட்டம்) .. | 54 | 39 |
| பாண்டியன் போக்குவரத்து கழகம் .. | 98 | 104 |
| சேரன் போக்குவரத்து கழகம் .. | 89 | 76 |
| சோழன் போக்குவரத்து கழகம் .. | 57 | 79 |
| அண்ணா போக்குவரத்து கழகம் .. | 45 | 52 |
| கட்டபொம்மன் போக்குவரத்து கழகம் | 59 | 71 |
| தந்தைப் பெரியார் போக்குவரத்து கழகம் .. | 32 | 68 |
| திருவள்ளுவர் போக்குவரத்து கழகம்.. | 59 | 67 |
| மொத்தம் .. | 601 | 671 |

60—

புத்தேரியில் நடுநிலைப் பள்ளிக்கு அரசு கட்டிடம் கட்டித்தர விண்ணப்பம்.

வினா 15331—திரு., மு. அப்பாதுரை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவி தேசியவிநாயகம்பிள்ளை பிறந்த ஊரான புத்தேரியில் நடுநிலைப்பள்ளிக்கு அரசு கட்டிடம் கட்டித்தர வேண்டுமென விண்ணப்பம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) புத்தேரியில் அரசு நடுநிலைப்பள்ளி ஏதுமில்லை. அரசு உயர்நிலைப்பள்ளி ஒன்று தான் செயல்படுகிறது. அதற்கு அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டுவதற்குரிய விண்ணப்பம் கிடைக்கப்பெற்று இவ்வருடம் நிதி நிலைமை காரணமாக தேர்ந்தெடுக்கப்படவில்லை.

61—

இந்திய மருத்துவத் துறையில் மருத்துவம் படித்தவர்கள் மற்ற மருத்துவ முறைகளில் மருத்துவம் புரிய அரசு அனுமதி வழங்கல்.

வினா 15407—திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இந்திய மருத்துவத்துறையில் மருத்துவம் படித்தவர்கள் அதே முறையில் மருத்துவம் புரிகின்றார்களா ?

(ஆ) இந்திய மருத்துவம் படித்தவர்கள் மற்ற மருத்துவ முறைகளில் மருத்துவம் புரிய அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், அனுமதி பெறாமல் மற்ற மருத்துவ முறைகளில் மருத்துவம் புரியும் இந்திய மருத்துவம் படித்தவர்களின் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?





விடை—

(அ) ஆம்.

(ஆ) இந்திய மருத்துவத்தை மட்டுமே பாடத்திட்டமாகக் கொண்டுள்ள இந்திய மருத்துவ பட்டங்கள் முதலியவற்றைப் பெற்றவர்கள், இந்தியமுறை மருத்துவத்தில் மட்டுமே மருத்துவம் புரிய அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இந்திய மருத்துவம் மற்றும் ஆங்கில மருத்துவம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து படித்தவர்கள், இருமுறையிலும் மருத்துவம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

(இ) எப்போதாவது இதுபோன்ற புகார்கள் வரும்போது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்திய மருத்துவத்துறை இயக்குநரால் காவல்துறையுடன் தொடர்பு கொள்ளப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

62—

அரியலூர் பயணிகள் விடுதியில் 4 அறைகள் கட்ட செயற்குறிப்பு.

வினா 15491—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் பயணியர் விடுதியில் 4 அறைகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

அரியலூர் பயணியர் விடுதியில் கூடுதல் அறைகள் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் நிலுவையில் இல்லை.

63—

சிங்காநல்லூர், ஜெயலட்சுமி மில்லை திறக்க எடுத்துள்ள நடவடிக்கை.

வினா 15563—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை, சிங்காநல்லூர், ஜெயலட்சுமி மில்லை திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

[1984 ஏப்ரல் 24

விடை—

கோவை, ஜெயலட்சுமி மில்ஸ் மூடிக்கிடப்பது குறித்த
பிரச்சினை சம்பந்தமாக கோவை தொழிலாளர் துறை துணை
ஆணையர் முன்பு ஒப்பந்தமொன்று ஏற்பட்டு, ஆலை மீண்டும்
8—9—1982 முதல் இயங்கி வருகிறது.

(2) ஜெயலட்சுமி மில்ஸ் நிறுவனத்தில் பணியாற்றும் 675
பணியாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலி
ருந்து நபரொன்றுக்கு ரூ. 200 வீதம் உதவித் தொகை அளிக்க
அரசாணை (பல்வகை) எண் 1843, தொழிலாளர் மற்றும் வேலை
வாய்ப்புத்துறை, நாள் 4—9—1982-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

(3) மேலும், ஜெயலட்சுமி மில்ஸ் நிர்வாகம் ரூ. 30
இலட்சத்திற்கு மேற்படாமல், பஞ்சாப் தேசிய வங்கியிலிருந்தோ
அல்லது ஏதாவதொரு நாட்டுடைமை வங்கியிலோ கடனுதவி பெற
அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.

64—

சின்னதாராபுரம் ஆரம்ப சுகாதாரநிலையத்தை அரசு
மருத்துவமனையாக மாற்ற கோரிக்கை.

வினா 15624—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்
வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

திருச்சி மாவட்டம் சின்னதாராபுரம் ஆரம்ப சுகாதார
நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றிடவேண்டுமென்று
கோரிக்கை வந்துள்ளதா?

விடை—

இல்லை.

65—

மருந்தாளுநர் (பார்மஸிஸ்ட்) பயிற்சிக்கு ப்ளஸ் 2 தேர்வு
முடித்தவர்களுக்கு ஒரு ஆண்டு படிப்பு என்று முடிவெடுத்தல்.

வினா 15636—திரு. எல். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மக்கள்
நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) மருந்தாளுநர் (பார்மஸிஸ்ட்) பயிற்சிக்கு எஸ். எஸ்.
எல். சி. தேர்வு முடித்தவர்களுக்கு இரண்டு ஆண்டு படிப்பு
என்பதை மாற்றி ப்ளஸ் 2 தேர்வு முடித்தவர்களுக்கு ஒரு ஆண்டு
படிப்பு என்று அரசு முடிவு எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1984 ஏப்ரல் 24]

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1982-83 கல்வியாண்டில் முந்தைய ஆண்டைப்
போலவே எஸ்.எஸ்.எல்.சி. (பதினோராம் வகுப்பு) படித்தவர்
களுக்கு இரண்டு ஆண்டுக் கால படிப்பும் ப்ளஸ் 2 (எச்.எஸ்.சி.)
படித்தவர்களுக்கு 1 ஆண்டுக் கால படிப்பும் தொடர்ந்து
அளிக்கப்படுகிறது. இதுவே எஸ்.எஸ்.எல்.சி. மாணவர்களுக்கு
கடைசி சந்தர்ப்பம் என்றும், 1983-84 ஆம் ஆண்டிலிருந்து
ப்ளஸ் 2 (எச்.எஸ்.சி.) முடித்தவர்களுக்கு மட்டுமே 1 ஆண்டு
படிப்பு அளிக்குமென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

66—

சென்னை 148 ஆவது வட்டம் சென்னை வேளச்சேரி
கழிவு நீர் திட்டத்தில் சேர்க்கப்படுதல்.

வினா 15648—திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு தொழி
லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா:

(அ) சென்னை 148ஆவது வட்டம் சென்னை வேளச்சேரி
கழிவு நீர் (Drainage) திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

கிண்டி—வேளச்சேரி கழிவுநீர் திட்டத்திற்கு அரசு ஒப்புதல்
அளிக்கும் போது, சென்னை மாநகர் 148ஆவது வட்டம் வேளச்
சேரி சென்னை மாநகராட்சி எல்லையில் இல்லை. எனவே,
இப்பகுதி கிண்டி, வேளச்சேரி கழிவுநீர் திட்டத்தில் சேர்க்கப்பட
வில்லை.

67—

பொள்ளாச்சி-மீன்கரை சாலையை சீர்திருத்த அரசு
நடவடிக்கை.

வினா 15704—திரு. எம். வி. இரத்தினம்: மாண்புமிகு
உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி - மீன்கரை சாலை (சிமெண்ட்ரோடு)
மிகவும் பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர்திருத்த அரசு எடுத்துள்ள
நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பொள்ளாச்சி தாலுக்காவில் உள்ள பொள்ளாச்சி-மீன்கரை சாலையின் (அரசு மாவட்ட பெருஞ்சாலை) நீளம் கி.மீ. 0/0—22/0 வரை உள்ளது. இச்சாலை பொள்ளாச்சியி லிருந்து (தமிழகம்) மீன்கரைக்கு (கேரளா) செல்கிறது. இச் சாலையில் கீழ்வரும் பகுதிகளில் செப்பனிடும் வேலை முடிக்கப் பட்டுவிட்டன—

கி.மீ. 4/8, 4/10—5/2, 5/4—5/6, 6/2—6/8.

கீழ்வரும் பகுதிகளில் செப்பனிடும் வேலை நடைபெறு கிறது :—

கி.மீ. 14/0—15/0, 15/0—16/0, 19/4—20/6.

மீதமுள்ள பகுதிகளில் ஒட்டு வேலை செய்யப்பட்டு சாலை நல்ல நிலையில் உள்ளது.

68—

நீலகிரி மாவட்டம், மஞ்சூர், கைகாட்டி ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து வந்த புகாரின் பேரில் அரசு நடவடிக்கை.

வினா 15738—திரு. கு. ரமணி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், மஞ்சூர், கைகாட்டி ஆகிய இடங் களில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் நடை பெற்றுள்ள முறைகேடுகள் பற்றி அரசுக்கு புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) புகார்களுக்கு ஆதாரமில்லையாதலால் மேற்கொண்டு நடவடிக்கை தேவையில்லை என்று அரசு முடிவு செய்தது.



69—

நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள மங்களபுரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவுதல்.

வினா 15773—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசிபுரம் வட்டம் நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தி லுள்ள மங்களபுரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

70—

மதுராந்தகம் வட்டத்தில் புதிய ஏரிகள் அமைத்தல்.

வினா 15813—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் புதிய ஏரிகள் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) அதன் மதிப்பீடு யாது ? எப்பொழுது பணிகள் துவக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1984 ஏப்ரல் 24

71—

1982-ல் சென்னை நகரிலும் மாவட்டங்களிலும் ஓடும் ஆட்டோக்களின் எண்ணிக்கையை உயர்த்த செயற்குறிப்பு.

வினா 15886—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982-ல் சென்னை நகரிலும், மாவட்டங்களிலும் ஓடும் ஆட்டோக்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் காரணம் தருக.

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

72—

ஜவ்வாது மலைப் பகுதி, திருப்பத்தூர் தாலுக்கா மட்றம்பள்ளி கிராமத்தில் இருந்து புதூர் நாடு கிராமம் வரை பஸ் விட கோரிக்கை.

வினா 15944—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜவ்வாது மலைப் பகுதி, திருப்பத்தூர் தாலுக்கா, மட்றம் பள்ளி கிராமத்தில் இருந்து புதூர்நாடு கிராமம் வரை பஸ் விட வேண்டும் என்று அப்பகுதி மக்களிடம் இருந்து ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

விடை—

ஆம். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.



1984 ஏப்ரல் 24]

73—

அரசு நடத்தும் பரிசு சீட்டில் பரிசு அளிக்கும் முறையின் விவரம்.

வினா 16061—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு நடத்தும் பரிசுச் சீட்டில் பரிசளிக்கும் முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை கீழே கொடுக்கப்பெற்றுள்ளது.

சிறப்புக் குலுக்கலில் முதலாவது, இரண்டாவது, பரிசு கஞம், சாதாரண குலுக்களில் முதல் பரிசான ரூ. 1.00 லட்சமும், பரிசு பெற்றோர் விரும்பும். வங்கிகள் மூலமாக பரிசு சீட்டுகளை குலுக்கல் நடந்த 180 நாட்களுக்குள் இயக்குநருக்கு அனுப்பி அவரிடமிருந்து பெறவேண்டும். இதே விதமாக குலுக்கல் நடந்த 90 நாட்களுக்குள் ரூ. 10,000 முதல் ரூ. 1,00,000 வரை உள்ள பரிசுகளை எந்த மாவட்டத்தில் பரிசு பெற்ற சீட்டு விற்கப்பட்டதோ அந்த மாவட்டக் கருவூல அலுவலர்க்கு மனுச் செய்தால் தொகை வழங்கப்படும். பரிசு பெற்ற தொகை பரிசுத் தொகை உள்ளாக இருப்பின் குலுக்கல் தேதியி- ரூ. 10,000-க்கு நாட்களுக்குள் சார்நிலை கருவூல அலுவலர்க்கு லிருந்து 90 கொள்ளவேண்டும். 90 நாட்களுக்கு மேல் மனுச் செய்து சீட்டு வைத்திருப்பவர், தகுந்த காரணத்துடன் பரிசு பெற்ற மாநில பரிசுச் சீட்டு இயக்குநருக்கு 180 நாட்களுக்குள் மனு செய்துகொண்டால் அது பரிசீலிக்கப்படும். பரிசு வழங்க ஆணை பிறப்பிக்கப்படும். கிழிந்துபோன, கசங்கியப் பரிசு பெற்ற சீட்டுகள் வைத்திருப்போர் மாநில பரிசுச் சீட்டு இயக்குநருக்கு காரணத்துடன் 180 நாட்களுக்குள் மனுச் செய்து கொள்ள வேண்டும். 180 நாட்களுக்குள் பரிசு பெற்ற சீட்டுகளின் பேரில் பரிசு கோரப்படாவிட்டால் பரிசுத் தொகை வழங்கப்பட மாட்டாது. பொது மக்கள் விரும்பினால் ரூ. 1,000 வரை யிலுள்ள பரிசுத் தொகையை முகவர்களிடமிருந்தே பெற்றுக் கொள்ளலாம். முகவர்கள் பின்பு கருவூலங்களில் அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. தமிழ் நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் மீண்டும் துவக்கப்பட்ட தேதியான 7–8–1976 முதல் 30–4–1981 வரை மாதம் ஒரு முறை குலுக்கல் நடத்தப்பட்டு வந்தது. 1981 மே மாதம் முதல் 1982 பிப்ரவரி மாதம் முடிய மாதம் இருமுறை குலுக்கல்கள் நடத்தப்பட்டன. 1982 ஆம் வருடம் மார்ச் மாதம் முதல், 10 நாட்களுக்கு ஒரு முறை என்ற கணக்கில் மாதம் மும்முறை குலுக்கல்கள் நடைபெற்று வருகின்றன. பரிசு சீட்டுத் திட்டம் மீண்டும் துவக்கப்பட்டதிலிருந்து 1982 ஆம் வருடம் ஜூன் மாதம் முடிய சாதாரண மற்றும் சிறப்புக் குலுக்கலில் வழங்கும் மொத்தப் பரிசுகளின் எண்ணிக்கையில் செய்யப்பட்ட மாற்றங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்:—

| மொத்தப் பரிசுகளின் மாற்றப்பட்ட மாதமும் வருடமும். | மொத்தப் பரிசுகளின் எண்ணிக்கை. | | | |
|---|---|---|---|---|
| | சாதாரணக் குலுக்கல். | தொகை. | சிறப்புக் குலுக்கல். | தொகை. |
| (1) | (2) | (3) ரூ. | (4) | (5) ரூ. |
| 8-76 .. | 2,634 | 3,49,000 | .. | — |
| 9-77 .. | 2,655 | 3,90,000 | 1,312 | 15,80,000 |
| 11-79 .. | 2,655 | 3,90,000 | 2,714 | 17,50,000 |
| 1-81 .. | 2,655 | 3,90,000 | 2,713 | 17,50,000 |
| 5-81 .. | 2,652 | 3,88,000 | 2,713 | 17,50,000 |
| 3-82 முதல் 6-82 | 11,563 | 3,89,200 | 11,571 | 17,50,000 |

10-7-1982 முதல் சாதாரண குலுக்கலில் 5-வது ரகப் பரிசாக ரூ. 500 50 பேருக்கு கொடுப்பது என்ற முறை மூலமும் மற்றும் சில மாற்றங்களுடனும் திட்டம் திருத்தம் செய்யப்பட்டு 30-6-1982 நாளிட்ட அரசாணை 412-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதனால் பரிசு மொத்த எண்ணிக்கை 11,605 ஆகவும், மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,08,800 ஆகவும் உயர்த்தப்பட்டது. சிறப்புக் குலுக்கலில் கொடுக்கப்படும் மொத்தப் பரிசுகளின் எண்ணிக்கையிலும்



பரிசுத் தொகைகளிலும் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை. 4 முதல் 7-வது ரக பரிசுகளைத் தேர்ந்தெடுப்பதில் வெற்றிபெறும் பரிசு சீட்டுகளின் எண்களை பொதுவாக எடுப்பது என்ற முறை 10-7-1982 லிருந்து கைவிடப்பட்டு, எல்லா ரக பரிசுகளுக்கும் ஒவ்வொரு வரிசைக்கும் தனித்தனியாக வெற்றிபெறும் பரிசுச் சீட்டுகளின் எண்களை எடுப்பது என்னும் புதிய முறை புகுத்தப்பட்டுள்ளது.

74—

1982 போபாலில் இருந்து புதுக்கோட்டையை சேர்ந்த மூன்று குடும்பங்கள் கொத்தடிமைகளாக இருந்து வந்ததை மீட்ட விவரம்.

வினா 16153—திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 ஜூலையில் மத்தியப் பிரதேசத்தில் உள்ள போபாலில் இருந்து புதுக்கோட்டையைச் சேர்ந்த மூன்று குடும்பங்கள் கொத்தடிமைகளாக இருந்து வந்ததை மீட்டு வரப்பட்டுள்ளதா.

(ஆ) ஆம் எனில் அதன் விபரமென்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : 14–7–1982-ல் மத்தியப் பிரதேசத்திலிருந்து கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வரப்பெற்ற நபர்களின் எண்ணிக்கை பதினொன்று. அவர்களின் குடும்ப எண்ணிக்கை ஏழு. அதன் விபரம் கீழ்வருமாறு :—

| வரிசை எண். | குடும்பங்களின் வரிசை. | விடுவிக்கப்பட்ட நபரின் பெயர். | சொந்த ஊர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | வசந்தா, க.பெ. முத்து | ஏ. செட்டியப்பட்டி. |
| 2 | | ராணி, த.பெ. முத்து | ஷை |
| 3 | | பொன்னழகு, த.பெ. முத்து. | ஷை |
| 4 | 2 | பழனி, த.-பெ. முத்தன் | அயின்குடி. |

| வரிசை எண். | குடும்பங்களின் வரிசை. | விடுவிக்கப்பட்ட நபரின் பெயர். | சொந்த ஊர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 5 | 2 | பொன்னழகு. க.பெ. பழனி. | அயின்குடி. |
| 6 | 3 | அடைக்கலம், த.பெ. ராமன். | ஷை |
| 7 | 4 | சுப்பையா, த. பெ. லெட்சுமணன். | ஷை |
| 8 | 5 | முத்து என்ற அருளாந்து. த. பெ. இந்நாசிமுத்து. | ஷை சொக்கநாத பட்டி. |
| 9 | | மாரி, த. பெ. முத்து | ஷை |
| 10 | 6 | முத்து, த. பெ. வெள்ளச்சாமி. | ஆயின்குடி. |
| 11 | 7 | ஆறுமுகம், த. பெ. புரவி. | தச்சம்பட்டி. |

75—

## இரிப்பாறை கோட்டத்திலுள்ள ரப்பர் தொழிற்சாலையில் ஜெனரேட்டர் அமைத்தல்.

வினா 16217—திரு டி. மணி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கிரிப்பாறை கோட்டத்திலுள்ள ரப்பர் தொழிற்சாலையில் ஜெனரேட்டர் அமைக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) மின்சாரம் தடைப்பட்டாலும் இந்த ஜெனரேட்டரை இயக்கி கிரீப் அடிக்கும் இயந்திரத்திற்கு மின்திறன் கொடுத்து கிரீப் அடிக்கப்படவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(இ) இப்படி மின்சாரம் தடைப்படும்போது ஜெனரேட்டரை இயக்கி கிரீப் அடிக்கச் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?



136263

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) சிறிது காலம் ஜெனரேட்டர் பழுதடைந்திருந்ததால் கிரீப் அடிக்கும் இயந்திரத்திற்கு மின் சக்தி வழங்கி கிரீப் அடிக்க இயலவில்லை. ஆனால், தற்பொழுது ஜெனரேட்டர் பழுது பார்க்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

76—

## கொடைக்கானல் பகுதியில் செம்மறி ஆடுகளை காட்டிலாகா அதிகாரிகள் கொன்றதாகக் கூறப்படும் புகார் பேரில் அரசு நடவடிக்கை.

வினா 16235—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆகஸ்டு 12-ம் தேதி (1982) கொடைக்கானல் பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த சுமார் 160 செம்மறி ஆடுகளை காட்டிலாகா அதிகாரிகள் ஓட்டிச்சென்று விஷம் வைத்துக் கொன்று விட்டாதாகச் சொல்லப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆகஸ்டு திங்கள் 12-ம் தேதி மதுரை மாவட்டம் கொடைக்கானல் பிரிவிலிருக்கும் கிளாவரை கிராமத்தைச் சேர்ந்த சுமார் 200 ஆடுகளை காடுகளில் மேய்ந்து கொண்டிருக்கும்போது, வனத்துறை அதிகாரிகளும் தலையாரியும் சேர்ந்து அவைகளை ஒரு வீட்டில் அடைத்து வைத்தது உண்மை. மறு நாள் காலையில் 122 ஆடுகள் (84 வெள்ளாடுகளும் 38 செம்மரி ஆடுகளும்) இறந்துவிட்டன. இது மூச்சுத்திணறலினால் ஏற்பட்டது என்று தெரியவருகிறது. விஷம் வைத்துக்கொல்லவில்லை.

(ஆ) இதனால் பாதிக்கப்பட்ட கிராமவாசிகளுக்கு ஒரு ஆட்டிற்கு ரூ. 250 விதம் முதல்வரின் நிவாரண நிதியிலிருந்து ஈட்டுத்தொகை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இது சம்மந்தப்பட்ட வனத்துறை அதிகாரிகள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். தலையாரியும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்றும் வருவாய் கோட்ட அலுவலரைக் கொண்டு (Revenue Divisional Officer) ஒரு விசாரணை செய்யும் படியும் மதுரை மாவட்ட ஆட்சியாளரைக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

77—

1980-81 மற்றும் 1981-82 ஆண்டுகளில் தினசரி பத்திரிகைகளில் விளம்பரத்திற்கென்று செலவழிக்கப்பட்ட தொகை.

வினா 16274—திரு எஸ். இராசாராமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1980-81, 1981-82-ஆம் ஆண்டுகளில் தினசரி பத்திரிக்கைகளில் தமிழக அரசு விளம்பரங்களுக்கென செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளில் தினசரி பத்திரிக்கைகளில், அரசின் பல்வேறு துறைகளும், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களும் வெளியிடப்பட்ட விளம்பரங்களுக்கென செலவுத் தொகை பின்வருமாறு.

| | ரூ. |
|---|---|
| 1980-81-ல் ஆன செலவுத் தொகை .. | 1,48,21,142 |
| 1981-82-ல் ஆன செலவுத் தொகை .. | 1,88,38,997 |

78—

திருச்சி நகர பகுதியில் டாக்சி, ஆட்டோக்களில் பொருத்தப்பட்ட மீட்டர்களை உபயோகப்படுத்துதல்

வினா 16299—திரு எஸ். இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகர் பகுதியில் டாக்சி, ஆட்டோக்களில் மீட்டர் பொருத்தப்பட்டு அவை பயன்படுத்தாமல் ஓடிக் கொண்டு இருக்கின்றன என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை என்ன ?



விடை—

(அ) திருச்சி நகர் பகுதியில் ஓட்டப்படும் அனைத்து டாக்சி மற்றும் ஆட்டோக்களில் மீட்டர் பொருத்தப்பட்டுள்ளது.

(ஆ) மொத்தம் 143 ஆட்டோ, 10 டாக்சிகள் மீது கடைசியாக வந்த தணிக்கை அறிக்கைகளின் படி 3 டாக்சிகளிலும் 18 ஆட்டோக்களிலும் மீட்டர் பயன்படுத்தப்படாமல் இருந்தன எனக் கண்டு பிடித்து அனுமதிச் சீட்டு தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது.

79—

குடந்தை வட்டத்தில் யானைக்கால் வியாதியை தடுக்க தீவிரத் திட்டம்.

வினா 16305—திரு எஸ். இராசாராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தை வட்டாரத்தில் யானைக்கால் நோயைத் தடுக்க தீவிரத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) குடந்தை வட்டாரத்தில் யானைக்கால் நோயைத் தடுக்க வேண்டி, தேசிய யானைக்கால் தடுப்புத் திட்டத்தின்கீழ் 1957 ஆம் ஆண்டில் ஒரு கட்டுப்பாட்டு பிரிவு துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், 1979 இல் ஒன்றும், 1981 இல் ஒன்றுமாக இரண்டு இரவு நேர சிகிச்சைப் பிரிவுகள் இவ் வட்டாரத்தில் ஏற்படுத்தப்பட்டு அவைகள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) கொசுத் தடுப்பு எண்ணெய், மற்றும் பேடக்ஸ், தெமோபாஸ், பைரோக்ஸ் முதலிய கொசுப் புழுக் கொல்லி மருந்துகள் வழங்கப்பட்டு, அவைகள் கொசுப் புழுக்களை ஒழிக்க தெளிக்கப்பட்டு வருகின்றன. மேலும் யானைக்கால் நோயின் அறிகுறிகள் கண்டவர்களுக்கு ரத்தப் பரிசோதனை செய்து மாத்திரைகள் வழங்கி (Dectoblets) சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகிறது. 1981 இல் குடந்தை வட்டாரத்தில் யானைக்கால் நோய் பற்றிய புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| மொத்தம் இரத்த பரிசோதனை செய்த நபர்கள் .. | 75,506 |
| அதில் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் ... .. | 2,158 |

80—

பழனியிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து பழனிக்கும் ஓடிக்கொண்டிருக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் பயண நேரத்தை மாற்றும் செயற்குறிப்பு.

வினா 16306—திரு என். பழனிவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து பழனிக்கும் ஓடிக் கொண்டிருக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் பயண நேரத்தை மாற்றியமைக்கக் கோரி விண்ணப்பம் எதுவும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

81—

ஆதிதிராவிடர்களுக்கென 18 சதவிதம் ஒதுக்கீடு செய்வதில் மலைவாழ் மக்களுக்கு தனி ஒதுக்கீடு அளிக்க நடவடிக்கை.

வினா 16338—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்களுக்கு என்று ஒதுக்கீடு செய்துள்ள 18 சதவீதத்தில் மலை வாழ் மக்களுக்கு அவர்களது மக்கள் தொகை விகிதத்தில் தனியாக ஒதுக்கீடுகள் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) இந்த வகையில் மத்திய அரசு எவ்வாறு ஒதுக்கீடு செய்துள்ளது. ?



விடை—

(அ) இம் மாநிலத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கட் தொகையின் அடிப்படையில் இப் பிரிவினருக்கென 18 சதவிகிதம் இடங்கள் அரசுப் பணிகளிலும் கல்வி நிலையங்களிலும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இம் மாநிலத்தில் பழங்குடியினரின் மக்கட் தொகை ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாக உள்ளதால், அவர்களுக்கென தனி இட ஒதுக்கீடு செய்வது இயலாது. மேலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தற்போதைய மொத்த 18 சதவிகிதம் இடங்களுக்கு பழங்குடியினர் போட்டியிட ஏதுவாக உள்ளது. இந்தியா முழுவதும் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் மக்கட் தொகை அடிப்படையில் மத்திய அரசு தனி இட ஒதுக்கீடுகள் செய்துள்ளது.

(ஆ) நாடு முழுவதும் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கட் தொகையின் அடிப்படையில் முறையே 15 சதவிகிதம் மற்றும் 7½ சதவிகிதம் என மத்திய அரசு இட ஒதுக்கீடு செய்துள்ளது. இது மத்திய அரசுத் துறைகளுக்கும், நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

82—

நெடுஞ்சாலைத் துறையில் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம், தார் போடப்பட்டு இரட்டிக்கப்பட்டு பராமரிக்கும் விதம்.

வினா 16339—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலைத் துறையில் பராமரிக்கப்படும் சாலைகளின் மொத்த நீளம் எவ்வளவு ?

(ஆ) இவற்றில் தார் போடப்பட்ட தூரம் எவ்வளவு ?

(இ) அகலம் இரட்டிப்பாக்கப்பட்ட தூரம் எவ்வளவு ?

விடை—

(அ) நெடுஞ்சாலைத் துறையில் பராமரிக்கப்படும் சாலைகளின் மொத்த நீளம் 37,472 கி.மீ.

(ஆ) தார் போடப்பட்ட சாலையின் நீளம் 31,916 கி.மீ.

(இ) அகலம் இரட்டிப்பாக்கப்பட்ட தூரம்—

| | கி.மீ. |
|---|---|
| ஒரு வழித்தடம் .. .. .. | 31,412 |
| இரு வழித்தடம் .. .. .. | 6,060 |

83—

**1981–82 ஆம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆதி திராவிடர் மாணவர்கள்.**

வினா 16340—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–82ஆம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆதி திராவிடர் மாணவர்கள் மொத்தம் எவ்வளவு பேர்?

(ஆ) மலைஜாதியினர் மட்டும் எவ்வளவு பேர்?

(இ) ஆதி திராவிடர், மலை ஜாதியினர் தனித்தனி சதவீதம் எவ்வளவு?

விடை—

(அ) 1981–82ஆம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆதி திராவிடர் மாணவர்கள் மொத்தம் 78 பேர்.

(ஆ) மலைஜாதியினர் மட்டும் 5 பேர்.

(இ) அரசு ஆணையின்படி ஆதி திராவிடர் மற்றும் மலை ஜாதியினருக்கு 18 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விரு பிரிவினருக்கும் தனித்தனி இட ஒதுக்கீடு கிடையாது.

84—

**கிருஷ்ணகிரி ஊத்தங்கரைக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு.**

வினா 16348—திரு. பி. எஸ். துரைசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியில் இருந்து ஊத்தங்கரைக்கு பர்கூர், ஜெகதேவி வழியாக பேருந்து விடுவதற்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விடப்படும்?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

85—

**சத்துணவுத் திட்டத்தில் வேலை வாய்ப்பு கிடைத்த நபர்கள் எண்ணிக்கை விவரம்.**

வினா 16368—திரு. சி. கோபால்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வரின் சத்துணவு திட்டத்தில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது?

விடை—

முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் வடாற்காடு மாவட்டத்தில் 15,257 நபர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். அதன் விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1 | குழந்தைகள் நல அமைப்பாளர்கள் (கிராமப்புறம்) | 2,641 |
| 2 | குழந்தைகள் நல அமைப்பாளர்கள் (நகர்ப்புறம்). | 327 |
| 3 | குழந்தைகள் நல உதவியாளர்கள் (கிராமப்புறம்). | 5,316 |
| 4 | குழந்தைகள் நல உதவியாளர்கள் (நகர்ப்புறம்) | 654 |
| 5 | ஆதி திராவிடர் பள்ளிகள், பிற்படுத்தப்பட்டோர் பள்ளிகள், மற்றும் இதர அரசுப் பள்ளிகளில் வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 6,319 |
| | மொத்தம் .. | 15,257 |

86—

**கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தை அமுல்படுத்தாமல் வாழயத்திவயல் பாலமோர் தோட்ட நிர்வாகிகள் மேல் நடவடிக்கையின் விவரம்.**

வினா 16372—திரு. டி. மணி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டத் தொழிலாளர் நலச்சட்டத்தை அமுல் நடத்தாத காந்திமதி, வாழயத்தி வயல் பாலமோர் தோட்ட நிர்வாகிகள் மேல் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

விடை—

காந்திமதி எஸ்டேட் தோட்டத்தில் தோட்டத் தொழில் சட்ட விதிகள் சரிவர கடைப்பிடிக்கப்படவில்லை என்று வந்த புகாரின் மீது நாகர்கோவில் தோட்ட நிறுவனங்கள் ஆய்வரும், திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையரும் ஆய்வுகள் மேற்கொண்டனர். மேற்படி நிர்வாகம் தோட்டத் தொழில் சட்ட விதிகளின்கீழ் பராமரித்து வரவேண்டிய சில பதிவேடுகள், நமூனாக்கள் வைத்து வரத் தவறிய குற்றத்திற்காக நிர்வாகத்தின் மீது வழக்குத் தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வாழயத்தி வயல் என்ற பெயரில் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் வரக்கூடிய தோட்டம் ஒன்றுமில்லை.

பாலமோர் தோட்டம் 28—3—1981இல் நாகர்கோவில் தோட்ட நிறுவன ஆய்வரால் ஆய்வு செய்யப்பட்டு பதிவேடுகள் பராமரிக்கப்படாதது, குடிதண்ணீர் வசதி, வீட்டு வசதி, செய்து தராத போன்ற முரண்பாடுகளுக்கு நிர்வாகத்தின்மீது வழக்குத் தொடரப்பட்டு 23—10—1981 அன்று ரூ. 150 அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

87—

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் முந்திரி
ஆலையின் பாக்டரி (Factory) சட்டம் அமுலாக்காத
முதலாளிகள் மீது நடவடிக்கை.

வினா 16373—திரு. டி. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் முந்திரி ஆலைகளில் பாக்டரிச் (Factory) சட்டம் அமுலாக்காத முதலாளிகள் மீது அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது?

விடை—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 174 முந்திரி ஆலைகள் உள்ளன. இவற்றில் 15 தொழிற்சாலைகளில் வேலை நடைபெறவில்லை. தொழிற்சாலைகளுக்குரிய சட்ட விதிகளை அமுல்படுத்தாததற்காக 121 முந்திரி ஆலைகள் பேரில் 476 முரண்பாடுகளுக்காக (Contraventions) நீதிமன்றத்தில் வழக்குகள் சென்ற ஆண்டில் 1—1—1982இல் இருந்து 30—9—1982 வரை தொடரப்பட்டுள்ளன.



88—

கனியக்காவிளையில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக
பணிமனை கட்டும் திட்டம்.

வினா 16378—திரு. டி. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு கனியாக்காவிளையில் பணிமனை கட்ட செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—

"இல்லை."

89—

செங்கற்பட்டு மாவட்டத்தில் வருவாய் ஆய்வாளர்களுக்கு
கட்டிக்கொடுத்த வீடுகள் எண்ணிக்கை.

வினா 16382—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் வருவாய் ஆய்வாளர்களுக்கு வீடுகள் எத்தனை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது?

விடை—

செங்கற்பட்டு மாவட்டத்தில் வருவாய் ஆய்வாளர்களுக்கு 82 அலுவலகம் இணைந்த குடியிருப்புகள் கட்ட ஆணையிடப்பட்டு இதுவரை 31 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டு உள்ளது.

90—

வடலூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின்
பணிமனை கட்டும் செயற்குறிப்பு.

வினா 16388—திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் வடலூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை ஒன்று நிறுவ அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

91—

1981-82-ன் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள பேருந்துகள் எண்ணிக்கை.

வினா 16397—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள பேருந்துகள் எத்தனை?

(ஆ) 1982 ஆகஸ்ட் இறுதியில் கழகத்தில் உள்ள பேருந்துகள் எத்தனை?

விடை—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகத்தில் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 492 ஆகும்.

(ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் 1982 ஆகஸ்ட் இறுதிவரை இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 511 ஆகும்.

92—

தர்மபுரி மாவட்டத்தில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டுதல்.

வினா 16407—திரு. பி. எஸ். துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பர்கூர் தொகுதி பர்கூர், மத்தூர், சந்தூர், போச்சம்பள்ளி, சாமல்பட்டி, ஊத்தங்கரை ஆகிய இடங்களில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்ட அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?



விடை—

(அ) தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஊத்தங்கரை என்ற இடத்தில் அரசு அலுவலர்களுக்கான வாடகை குடியிருப்பு திட்டத்தின் கீழ் 58 வீடுகளும், மற்றும் மாத்தூர் என்ற இடத்தில் வருவாய் ஆய்வாளர்களுக்கு ஒரு வீடும் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற இடங்களான பர்கூர், சந்தூர், போச்சம்பள்ளி மற்றும் சாமல்பட்டி ஆகிய இடங்களில் வீட்டு வசதி திட்டம் அமல் படுத்தப்படவில்லை.

(ஆ) தற்போது திட்டம் எதுவும் பரிசிலனையில் இல்லை.

93—

வேடசந்தூர் பேரூராட்சியை நகராட்சியாக்கும் செயற்குறிப்பு.

வினா 16419—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் வேடசந்தூர் பேரூராட்சியை நகராட்சியாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

94—

அந்நிய ஆட்சிக்கு எதிராக விடுதலைப் போர் நடத்திய மருது பாண்டியன் வாரிசுகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்.

வினா 16475—திரு. செ. செம்மலை: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்நிய ஆட்சிக்கெதிராக விடுதலைப் போர் நடத்திய மருது பாண்டியனின் வாரிசுகளுக்கு உதவித் தொகை வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1984 ஏப்ரல் 24

விடை—

(அ) ஆம்.

(ஆ) பெரிய மருது சின்ன மருது சேர்வைக்காரரின் சந்ததியினரான 202 பேருக்கு 19—7—1982 முதல், மாதம் ரூ. 150 நிதி உதவி அளிக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

95—

தமிழ்நாட்டில் மலேசியா நாட்டைச் சேர்ந்த அர்ச்சகர்கள், நாதசுர கலைஞர்கள் ஓதுவார்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான திட்டம்.

வினா 16479—திரு. செ. செம்மலை: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மலேசியா நாட்டைச் சேர்ந்த அர்ச்சகர்கள், ஓதுவார்கள், நாதசுர கலைஞர்களுக்கு பயிற்சிகள் அளிப்பதற்கான திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

96—

திருவள்ளுவர் போக்குவரத்து கழகத்தினரால் வாங்கப்பட்ட டேப் ரெகார்டர்கள் எண்ணிக்கை.

வினா 16506—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்து கழகத்தினால் எத்தனை (Tape recorder) கள் வாங்கப்பட்டன?

(ஆ) இவைகளில் எத்தனை தற்பொழுது இயங்குகின்றன?



1984 ஏப்ரல் 24]

விடை—

(அ) 16—1—1980 முதல் 1—12—1982 வரை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் 142 ஒலிப்பதிவுக் கருவிகள் வாங்கப்பட்டன.

(ஆ) இவற்றுள் 108 ஒலிப்பதிவுக் கருவிகள் நல்ல நிலையில் இயங்கிக்கொண்டு இருக்கின்றன.

97—

மதுராந்தகம் வட்டம் மாமண்டூர் கிராமத்தில் 'Tourist hotel' ஏற்படுத்துதல்.

வினா 16507—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் வட்டம் மாமண்டூர் கிராமத்தில் சுற்றுலாத் துறையின் மூலம் (Tourist hotel) ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது செயலுக்கு வரும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

98—

எரியோட்டில் பின்தங்கியோர் நலத்துறை மூலம் மாணவர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு.

வினா 16570—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பிற்பட்டோர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எரியோட்டில் பின்தங்கிய நலத்துறை மூலம் மாணவர் விடுதி அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

[1984 ஏப்ரல் 24

99—

### வேடசந்தூர் வட்டத்தில் 1980-81, 1981-82 ஆகிய ஆண்டுகளில் முதியோர் உதவித் தொகை, உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை, வயது முதிர்ந்த விவசாயத் தொழிலாளர்கள் உதவித் தொகை.

வினா 16574— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

வேடசந்தூர் வட்டத்தில் 1980–81, 1981–82 ஆகிய ஆண்டுகளில் முதியோர் உதவித் தொகை, உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை, வயது முதிர்ந்த விவசாயத் தொழிலாளர்கள் உதவித் தொகை எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது ?

விடை—

வேடசந்தூர் வட்டத்தில் 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளில் புதிதாக முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வருடம். | இனம். | நபர்களின் எண்ணிக்கை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1980–81 | ஆதரவற்ற முதியோர் .. | 177 | |
| | உடல் ஊனமுற்றோர் .. | 12 | |
| | விதவைகள் .. .. | 108 | |
| | விவசாயிகள் .. .. | .. | |
| | | | 297 |
| 1981–82 | ஆதரவற்ற முதியோர் .. | 122 | |
| | உடல் ஊனமுற்றோர் .. | 3 | |
| | விதவைகள் .. .. | 139 | |
| | விவசாயிகள் .. .. | 100 | |
| | | | 364 |



1984 ஏப்ரல் 24]

100—

### வேடசந்தூர் வட்டம் வந்தக்கோட்டையில் உயர்நிலைப் பள்ளி அமைக்க செயற்குறிப்பு.

வினா 16576—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் வட்டம் வந்தக்கோட்டையில் புதிதாக உயர் நிலைப் பள்ளி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

வேடசந்தூர் வட்டம் வந்தக்கோட்டையில் புதிய அரசினர் உயர்நிலைப் பள்ளி துவக்கக் கோரும் கருத்துரு 1982–83-ம் கல்வியாண்டின் துவக்கத்தில் பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்பட்டது. இக்கருத்துருவை பரிசிலனை செய்த உயர் மட்டக் குழு இதனை அரசுக்கு பரிந்துரைக்கவில்லை.

குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. எம். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் மதுக்கரையிலே ஏ.சி.சி. சிமெண்ட் தொழிற்சாலை சுரங்க லைசன்ஸ் குத்தகைக் காலத்தை நீட்டித்துக் கொடுக்காத காரணத்தினால் சுமார் 2,000 தொழிலாளர்கள் வேலையிழக்கக்கூடிய அபாயம் இருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளும்போது அதைப்பற்றிப் பேசலாம்.

திரு. சி. த. சிதம்பரம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் நம்முடைய காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. உ. சுப்பிரமணியன் அவர்களும் கல்லலிலிருந்து காளையார் கோயில் வரை, காளையார் கோயிலிலிருந்து இளையாங்குடிவரை செல்லும் சாலைகள் மிகவும் பாதிக்கப்பட்டு சாலை விபத்துக்கள் ஏற்படுவது குறித்து தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அதுதங்களால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது, ஆனால் அதே போன்று சாலை மோசமான நிலையிலுள்ளதால் அடிக்கடி சாலை விபத்துக்கள் ஏற்படுவது குறித்து, விதி54-ன் கீழ் திரு. ஜே. சி. டி. பிரபாகரன் கொடுத்த கவன ஈர்ப்பு இன்று வர இருக்கிறது, அப்படியானால், நாங்கள் கொடுத்ததை ஏன் நிராகரிக்க வேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நான் பார்க்கிறேன். தவறு இருந்தால் திருத்த முயற்சிக்கிறேன்.

### (ஆ) இலங்கைவாழ் தமிழர் பிரச்னை

திரு. அ. ரகுமான்கான்; தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் டெல்லியிலே பிரதமர் அவர்களோடு இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து 70 நிமிடம் பேசியிருப்பதாகப் பத்திரிக்கையிலே செய்தி வந்திருக்கிறது. இங்கே சட்டசபை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாம் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள். நேற்றுகூட இராஜாஜி ஹாலிலே இலங்கைத் தமிழர்கள் உருக்கமாகப் பேசியிருக்கிறார்கள், கொல்லப்படுகிறார்கள் என்று. எனவே மத்திய சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? நம்முடைய பிரதமர் நம்முடைய முதல்வரோடு என்ன பேசினார், என்ன நடவடிக்கை என்பது குறித்து சபையிலே ஒரு அறிக்கை வைக்கவேண்டும். அல்லது முதல்வர் வரவேண்டும். ஏனென்றால், முதல்வர் ஊரிலே இருக்கிறார். நட்சத்திர விழாவிலே எல்லாம் கலந்து கொள்கிறார். எனவே தகவல் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கை இருக்கிறதா என்று கேட்கிறேன். கேட்டு, இருந்தால் அவைக்குத் தெரிவிக்க முயற்சிக்கிறேன்.



### (இ) காரைக்குடியில் பல்கலைக் கழகம் அமைத்தல்

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே காரைக்குடியிலே பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் பல பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், காரைக்குடி பல்கலைக் கழகம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; எல்லோருமாக சேர்ந்து முயற்சி பண்ணினால்தான் பல்கலைக் கழகம் வரும். ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுப்போம்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### நாகப்பட்டினம் வேட்டைக்காரன் இருப்பு என்ற கிராமத்தில் சுங்க அதிகாரிகள் நடத்திய துப்பாக்கிச்சூடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து ஆகியோர் ''17-4-1984 நள்ளிரவு 1-30 அளவில் நாகப்பட்டினம் அருகில் வேட்டைக்காரன் இருப்பு என்ற கடலோரக் கிராமத்தில் சுங்க அதிகாரிகள் சுட்டதில் பன்னீர் செல்வம் என்பவர் இறந்ததால் அந்தப் பகுதி மக்கள் மத்தியில் எழுந்துள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்டப்பேரவையில் நாம் இதற்கு முன்னாலே காவல் துறையினரால் சுடப்பட்டு இறந்த நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதித்து இருக்கிறோம், அதைப்போல காவல் நிலையங்களிலோ வெளியிலோ தாக்கப்பட்டு அதன்காரணமாக இறந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் விவாதித்து இருக்கிறோம். அதேபோல முதலாளிகளுக்கு ஆதரவாக சில இடங்களில் காவல்துறையினர் தாக்கி அதன் காரணமாக இறந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் விவாதித்து இருக்கிறோம். ஆனால் இந்தப் பிரச்னை என்னவென்றால் சுங்க இலாக்காவினுடைய அதிகாரிகள் பன்னீர் செல்வம் என்ற ஒரு வாலிபரை சுட்டு அதன்விளைவாக அவர் இறந்தது குறித்ததாகும் 17-4-84 அன்று இரவு 1-30 மணி அளவில் வேட்டைக்காரன்இருப்பு என்று நாகப்பட்டினத்திற்கு அருகிலே இருக்கிற இடத்தில் அந்த வாலிபர் சுடப்பட்டிருக்கிறார். இப்படிச் சுட்டதற்கு காரணமாக இருந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது நமக்கு என்ன தெரிகிறதென்றால், ஏதோ

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1984 ஏப்ரல் 24

ஒரு சிலர் ஸ்மக்லிங் ஆக்டிவிட்டீஸில் ஈடுபட்டவர்களை இவர்கள் பிடிக்கச் சென்றார்கள் என்று சொல்கிறார்கள். ஸ்மக்லிங் ஆக்டிவிட்டீசில் ஈடுபட்டவர்களைப் பிடிக்க வேண்டியது அவசியம் தான். அதுபற்றி கருத்து வேறுபாடில்லை. ஸ்மக்லிங் ஆக்டிவிட்டீசில் ஈடுபட்டவர்களை தடுப்பதற்காக நடவடிக்கைகளை எடுப்பதற்கு சுங்க இலாக்காவைச் சேர்ந்தவர்கள் சட்டப்படி அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிரச்சனை அதுவல்ல. இந்த வருந்தத்தக்க நிகழ்ச்சி அங்கே நடைபெற்றதற்குக் காரணம், சுங்க இலாக்காவினுடைய அதிகாரிகள் ஸ்மக்லிங் ஆக்டிவிட்டீசில் ஈடுபட்டவர்களை பிடிப்பதற்காகச் சென்ற இடத்தில் அவர்கள் என்ன செய்தார்கள் என்றால், அங்கே ஒரு மாரியம்மன் கோவிலில் திருவிழா நடந்து கொண்டிருந்தது அந்த மாரியம்மன் கோவில் திருவிழாவில் உள்ளே சென்று அங்கேயிருந்து இரண்டு பேர்களை இவர்கள் பிடித்தார்கள். அந்தத் திருவிழாவிலே கலந்து கொண்டிருந்த மக்கள் கூட்டத்திலே இவர்கள் வந்து இப்படி நடவடிக்கை எடுப்பது சரியில்லை என்று அவர்கள் தடுத்து இருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னவென்றால் இந்த நாட்டிலே இருக்கிற சட்டத்திட்டங்களின்படி கஸ்டம்ஸ் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் கடலில் ஏற்படுகிற ஸ்மக்லிங் ஆக்டிவிட்டீசை தடுப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் கரையில் வந்து யாரையாவது அவர்கள் பிடிக்கவேண்டுமென்றால் காவல்துறையின் வழியாகத் தான் அவர்கள் அதைச் செய்ய வேண்டும். அவர்கள் காவல்துறையை அணுகினார்களோ, காவல்துறையின் உதவியை அவர்கள் பெற்றதாகவோ தகவல் இல்லை.

இந்த நேரத்தில் நாம் ஒன்றை கவனிக்க வேண்டும். அந்த இடத்தில் திருவிழா நடந்துகொண்டிருந்த போது நம்முடைய காவல் துறையினர் இருந்திருப்பார்கள். அவர்களுடைய உதவியை இந்த அதிகாரிகள் நாடினார்களா என்பது தெரியவில்லை. இப்படி ஒரு கலவரம் ஏற்பட்டதற்குப் பிறகு காவல் துறையினர் என்ன செய்தார்கள் என்பதும் தெரியவில்லை. ஆகவே பிரச்னை என்னவென்றால், இந்த நாட்டிலே இருக்கிற மக்களுடைய உயிர்களுக்கு விலையில்லாத அளவில், யார் வேண்டுமானாலும் நாட்டிலே இருக்கிற மக்களைச் சுடலாம் என்பதற்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். காவல்துறையினர் ஒருசில இடங்களில் சட்டுக் கூட்டத்தைச் சமாளிக்க அல்லது செய்திடுகின்ற சூழ்நிலைமைகளை நாம் பார்க்கிறோம். அதைக்கூட நாம் கண்டித்து விவாதிக்கிறோம். அந்தப் பிரச்னைகள் சம்பந்தமாக சில விசாரணைக் குழுக்களை அமைத்துக்கொள்கிறோம். ஆனால் இங்கே பிரச்னை என்னவென்றால் ஸ்மக்லிங் ஆக்டிவிட்டீசில் ஈடுபட்டவர்களை பிடிப்பதற்கென்று ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு—அதுவே கூட எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது என்று தெரியவில்லை—இவர்கள் அந்த ஊரில் நடைபெற்ற ஒரு கோவில் திருவிழாவில் சென்று அங்கே ஆளை



1984 ஏப்ரல் 24] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

பிடித்துக்கொண்டு செல்வதற்கான முறையிலே நாட்டிலே லா அண்ட் ஆர்டர் பொசிஷன் டிடீரியோரேட் செய்வதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது. அவர்கள் இப்படி தன்னிச்சையாக நடந்துகொண்டதன் விளைவாகத்தான் திருவிழாவிலே இருந்த மக்கள் அவர்களை பிடித்துக்கொண்டுச் செல்வது சரியல்ல என்று தடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்கு பதிலாக அந்த அதிகாரிகள் என்ன செய்திருக்கவேண்டுமென்றால் அருகிலே இருக்கிற காவல் நிலையத்திற்குச் சென்று அவர்களுடைய உதவியோடு எந்த நேரத்திலே இவர்களைப் பிடிக்கலாம் என்று பார்த்து அவர்களைப் பிடித்து இருக்க வேண்டும். அதை விட்டு அவர்களைச் சுடக்கூடிய முறையிலே விஷயத்தை வளர்த்துக்கொண்டது நிச்சயமாக கண்டிக்க வேண்டிய ஒன்றாகும்.

இறந்த பன்னீர்செல்வம் குடும்பத்திற்கு இந்த நேரத்தில் நாம் அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிற அதே நேரத்தில் அவர் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்க வேண்டுமென்று கேட்கும் நேரத்தில் இப்படிப்பட்ட முறையில் சுங்க அதிகாரிகள் நடந்து கொண்டதற்கு, என்ன தான் அவர்களிடத்தில் அதிகாரம் இருந்தாலும், அவர்களுடைய அதிகார வரம்பை மீறி, அவர்கள் செயல்பட்டு இருக்கிறார்கள், அவர்களுடைய எக்ஸ்ட்ரா ஜுடிசியல் ஆக்டிவிடீஸ் மீறி அவர்கள் நடந்து இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, அவர்கள்மீது எத்தகைய நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த நாட்டில் உள்ள எந்த மனிதனையும் சுடலாம் என்கிற நிலைமையில் நடந்து இருக்கின்ற இப்படிப்பட்ட நடவடிக்கைகள் இனிமேல் நடக்காமல் இருப்பதற்கான முறையில் விதிமுறைகளை வகுப்பதற்கான ஆலோசனைகளைத் தருவதற்கும் அது பற்றி முடிவு எடுப்பதற்கும் வழிசெய்யும் வகையில் இந்தப் பொருள் குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நாகப்பட்டினத்தைச் சேர்ந்த சுங்கத் துறையினர் சில கடத்தல் குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு 17-4-84 அன்று இரவில் நாகப்பட்டினத்திலுள்ள வேட்டைக்காரன் இருப்பு என்ற கிராமத்துக்குச் சென்றனர். அவர்கள் அவ்வூரில் அப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருந்த கோவில் திருவிழாவில், கடத்தல் குற்றவாளி ஒருவரைத் தேடினர். அப்பொழுது பொதுமக்கள் கூட்டமாகச் சுங்கத்துறையினரை சூழ்ந்து கொண்டு கற்களாலும், சோடா பாட்டில்களாலும் சாராய பாட்டில்களாலும் தாக்கினர். சுங்கத்துறையினரை கடமையைச் செய்யவிடாமல் தடுத்தனர். அவர்கள் சென்ற வாகனம் (ஜீப்) சேதப்படுத்தப்பட்டது. சுங்க அலுவலர்களும் காயப்படுத்தப்பட்டனர். எனவே தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள சுங்கத் துறையினர் வானத்தை நோக்கி சுட்டனர்.

சுங்கத் துறையினர் இது சம்பந்தமாக கொடுத்த புகாரின் பேரில் தலைஞாயிறு காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டம் 147, 148, 341, 332, 324, 336, 427 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த இடத்தில் 18-4-84 அன்று காலையில் நாகப்பட்டினம் சார்பு ஆட்சியர் விசாரணை நடத்தினார். 17-4-84 அன்று இரவில் சுங்கத்துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் திரு. அழகப்பப் பிள்ளை என்பவரின் 20 வயதுள்ள மகன் பன்னீர்செல்வம் என்பவர் குண்டடிபட்டு அந்த இடத்திலே உயிரிழந்தார் எனத் தெரிய வந்தது. கிராமத்தினர் கொடுத்த புகாரின் பேரில் இந்திய தண்டனைச் சட்டம் 302 பிரிவின் கீழ் தலைஞாயிறு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையிலுள்ளது.

காவல் துறை நிலை ஆணை 144 பிரிவு 3-ன் கீழ் மேற்படி சம்பவம் குறித்து விசாரணை செய்து சுங்கத் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது நியாயமானதா இல்லையா என்பதைக் கண்டறிந்து இரண்டு வாரங்களில் அறிக்கை அனுப்புமாறு நாகப்பட்டினம் சார்பு ஆட்சியர் தஞ்சை மாவட்ட ஆட்சியரால் கோரப்பட்டுள்ளார். சார்பு ஆட்சியரின் அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன் இது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஊரில் எந்தவிதமான பதட்ட நிலைமையும் இல்லை. கிராம மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையைச் செய்து வருகின்றனர். ஊரில் தக்க பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

ஆகவே, சுங்க அதிகாரிகள் சுட்டது நியாயம்தானா என்பதைக் கண்டறிந்து அறிக்கை அனுப்புமாறு நாகப்பட்டினம் சார்பு ஆட்சியர் தஞ்சை மாவட்ட ஆட்சியரால் கோரப்பட்டுள்ளதால், மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக் காட்டியது போல் அந்த அறிக்கை கிடைத்தவுடன் அவற்றையெல்லாம் ஆராய்ந்து, அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு முடிவு எடுத்துள்ளது என்கிற உறுதியை நான் இங்கே தெரிவித்து இப்பிரச்னை குறித்து விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது



## 4. கவன ஈர்ப்புகள்

### (அ) ஆவடி-அம்பத்தூர் பெருஞ்சாலை பராமரிப்பு

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: தலைவர் அவர்களே, "ஆவடி அம்பத்தூர் சாலை மோசமான நிலையிலுள்ளதால் அடிக்கடி சாலை விபத்துக்கள் ஏற்படுவது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள சென்னை திருவள்ளூர் சாலை ஒரு அரசு மாவட்டப்பெருஞ்சாலையாகும். இச்சாலையில் அம்பத்தூரிலிருந்து ஆவடிவரையிலான சாலைப் பகுதிகிலோமீட்டர் 18/0 முதல் 25/0 வரைஆகும் இந்தப்பகுதியில் சாலையை அகலப்படுத்துதல், வளைவுகளை நேர் செய்தல், சாலையை வலுப்படுத்துதல் போன்ற முன்னேற்றப்பணிகளுக்காக ரூ. 151.00 இலட்சத்திற்கு சென்னை அபிவிருத்தித் திட்டப்பணியாக உலக வங்கி உதவியுடன் வேலைகள் நடந்து வருகின்றன. கிலோமீட்டர் 24/0 முதல் 25/0 வரை வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. கிலோ மீட்டர் 18/0 முதல் 24/0 வரை வேலைகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. தற்போது பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. சாலைப்பராமரிப்பைப் பொறுத்த மட்டில் சமீபத்தில் பெய்த மழையினால் ஏற்பட்ட நெரடி பள்ளங்கள் சரி செய்யப்பட்டுவிட்டன. இதனால் போக்குவரத்துக்கு தடங்கல் எதுவும் இல்லை.

(முற்பகல் 10-30)

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாற்றுத் தலைவரவர்களே, இந்த அம்பத்தூரிலிருந்து ஆவடி செல்லுகிற சாலை தொழிலாளர் பெரு மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் சாலை, அன்றாடம் பயன்படுத்தும் சாலை, டியூப் ப்ராடக்ஸ் தொழிற்சாலை, ஆவடி டாங்க் பாக்டரி, மற்றும் டிஃபன்ஸ் தொழிற்சாலைகளுக்குச் செல்லுகிற சாலை இது. ஆகையால் இது ஒரு முக்கியமான சாலையாக இருக்கிறது. இந்தச் சாலை பராமரிப்பு வேலை தொடங்கி, இன்னும் முடிக்கப்படாமல் ஆங்காங்கே தோண்டி வைக்கப்பட்டு, மேற்கொண்டு வேலை நடைபெறாமல் அப்படியே இருக்கிறது. இரவு நேரத்தில் வருகிற தொழிலாளர்கள் தெரியாமல் அந்த பள்ளங்களில் விழுந்து துன்பப்

படுகிறார்கள். அது மட்டுமல்லாமல் லாரிகளில் அடிபட்டு, சிகிச்சைக்காக மருத்துவ மனைக்குச் செல்லும் சூழ்நிலை ஏற்படுகிறது. தொடங்கிய வேலை விரைவிலே முடியவேண்டும். ஆகவே, வேலைகளை விரைவு படுத்த வேண்டும். அதற்கு இரவு பகலாக வேலை நடக்க வேண்டும். அந்த வகையில் வேலை களை விரைவு படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா? குறிப்பாக டி.வி எஸ். படித் தொழிற்சாலையிலிருந்து மண்ணூர்ப்பேட்டை வரையுள்ள சாலை மிகவும் குறுகலாக இருக்கிறது. குறுகிய சாலையாக இருப்பது மட்டுமல்லாமல் ஆக்கிரமிப்பு செய்யப் பட்டிருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். சாலையின் இருபுறமும் தொழிலாளர்கள், பாதசாரிகள் செல்ல பிளாட்ஃபாம் முழுமையாக அமைக்கப்பட வேண்டும். அதற்கு ஏதேனும் திட்டம் இருக்கிறதா? அப்படி இருந்தால் இந்தப் பணி எப்போது முடியும்? ஆங்காங்கே பணிகள் தற்போது எந்த நிலையில் உள்ளன? எப்போது முழுமையாகச் சாலைப் பணிகள் முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சனை 18 கிலோ மீட்டரிலிருந்து 25 கிலோ மீட்டர் வரை உள்ள பகுதியாகும். எனவே, பகுதி பகுதியாக என்ன என்ன வேலைகள் நடந்திருக் கின்றன, மேலும் நடந்துகொண்டிருக்கின்றன என்று சொல்வது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பலன் உள்ள தாக இருக்கும் என்று கருதுகிறேன். அம்பத்தூர் நகரியத்தில் 18-வது கிலோமீட்டரிருந்து 19/7 கிலோ மீட்டர் வரையில் வேலை முடிந்துவிட்டது. 19/7 முதல் 20 வரையில் பணி நடந்துவருகிறது; கிலோமீட்டர் 20-லிருந்து 20/8 வரை சாலை அகலப்படுத்தும் பணி முடிந்துவிட்டது. 20/8 முதல் 21/2 வரையில உள்ள பணிகள் 30-4-84க்குள் முடிந்துவிடும். 21/2 முதல் 22/5 வரையில் இருபுறமும் அகலப்படுத்தும் வேலை முடிந்து, அதன் மேல் தார் பரப்பும் வேலை ஏப்ரலில் எடுத்துக்கொள்ளப்படும். கிலோமீட்டர் 22/5 முதல் 23/2 வரையில் 90 மீட்டர் அளவுக்கு தார் பரப்பும் வேலை முடிந்து விட்டது. கிலோமீட்டர் 23/2 முதல் 24 வரையில் தார் பரப்பும் வேலை பாக்கியுள்ளது. 30-4-84க்குள் வேலை முடிந்துவிடும். கிலோமீட்டர் 24 முதல் 25 வரையில் ஆவடி நகரிய சாலைப் பணி முடிந்துவிட்டது.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாற்றுத் தலைவரவர்களே, இருபுறமும் பாதசாரிகள் நடந்து செல்லக்கூடிய அளவுக்கு பிளாட்பாரம் அமைக்கும் பணி இதில் அடங்குமா? அம்பத்தூர், பாடி, மண்ணூர்ப்பேட்டை சாலையில் முதற்கட்டமாக டியூப் பிராடக்ஸ் ஃபாக்டரி வரையில வது உடனடியாகப் பணிகள் முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாற்றுத் தலைவர் அவர்களே, அகலப்படுத்தும் வேலை நடைபெறுவதையும், நடந்து முடிந்த வேலைகளையும் சொன்னேன். எந்த எந்த



இடத்தில் என்ன என்ன பணிகள் என்று சொன்னேன். அவர்கள் சொல்லுகிற இடம் எது என்று எனக்குத் தெரியாது. ஆனால், இந்தச் சாலையில் கிலோ மீட்டர் 18 முதல் 22 வரை என்ற தகவல்தான் என்னிடம் இருக்கிறது.

## (ஆ) பழனி அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே படச்சுருள் தட்டுப்பாடு

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, "பழனி அரசு மருத்துவ மனையில் எக்ஸ்ரே படச்சுருள் இல்லாததால் நோயாளிகள் படும் இன்னல்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

பழனியிலுள்ள அரசு மருத்துவமனையில் போட்டோ பிலிம் 6 மாத காலமாக கையிருப்பில் உள்ளது. இவை அவசர விபத்து மற்றும் அத்தியாவசியமானபோது உபயோகப்படுத்தப் படுகின்றன. அக்டோபர் 83 முதல் மார்ச் 84 முடிய பிலிம் களின் இருப்பு கீழ்வருமாறு:—

| மாதம் | 15×12 | 12×10 | 12×6 | 10×8 | 8½×6½ | 6½×4¾ |
|---|---|---|---|---|---|---|
| அக்டோபர் '83 | 234 | 183 | .. | 300 | 150 | 186 |
| நவம்பர் '83 | 179 | 121 | .. | 234 | 120 | 132 |
| டிசம்பர் '83 | 131 | 50 | .. | 178 | 88 | 109 |
| ஜனவரி '84 | 96 | 6 | .. | 210 | 58 | 28 |
| பிப்ரவரி '84 | 96 | 6 | .. | 36 | 47 | 47 |
| மார்ச் '84 | 47 | 44 | .. | 24 | 24 | 24 |

6-2-84 அன்று ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்திற்கு தேவைப் பொருள் பட்டியல் அனுப்பப் பட்டுள்ளது. அவைகள் பெறப்பட்டதும் இருப்பு பராமரிக்கப் படும். பழனி அரசு மருத்துவமனையில் இரண்டு எக்ஸ்ரே உபகரணங்கள் உள்ளன. ஒரு நாளைக்கு சராசரியாக பத்து எக்ஸ்ரே படங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த பழனி அரசு மருத்துவ மனையில் போட்டோ பிலிம் இல்லாத காரணத்தால் கடந்த 6 மாதங்களாக அங்கு செல்லக்கூடிய சாதாரண—சீரியஸ் இல்லாத நோயாளிகள்

நோயாளிகளுக்கு பிலிம் எடுக்க முடியவில்லை. வெளியே எடுத்துவாருங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் இந்த விவர அறிக்கையில் அம்மாதிரி இல்லை என்று சொல்லி யிருக்கிறார்கள். ருந்தா...ம்கூட கடந்த ஜனவரி முதல் இன்றுவரை அங்கே தேவையான அளவுக்கு பிலிம் இல்லை என்று விவர அறிக்கையில் தெரிகிறது. ஏதோ பெயரளவுக்கு பிலிம் இருக்கிறது. சீரியசாக வரக்கூடிய கேசுகளுக்கு மட்டும் படம் எடுக்கிறார்கள். சாதாரணமாக வரக்கூடிய நோயாளி களுக்கு ஏழை எளிய மக்களுக்கு பிலிம் இல்லை என்று சர்வ சாதாரணமாகச் சொல்லிவிடுகிறார்கள். தேவைப்பட்டால், வெளியே போய் எடுத்துவாருங்கள் என்று சொல்லுகிறார்கள். அல்லது பிலிம் எடுக்கத் தேவையில்லை என்று சொல்கிறார்கள். இதனால் அந்த மக்கள் பெரும் துன்பப்படுகின்றார்கள். நான் கூட, கடந்த 2, 3 நாட்களுக்கு முன்னால் அங்கே இருக்கக் கூடிய மருத்துவ அதிகாரிகளைப் பார்த்தேன். அவர்கூட என்னிடத்தில் கறாராக இல்லை என்றும் சொல்ல மறுக்கிறார் அல்லது இருக்கிறது என்றும் சொல்லத் தயங்குகிறார். (குறுக்கீடு) போட்டோ பிலிம் இல்லாத காரணத்தால் மக்கள் கஷ்டப்படு கிறார்கள். ஆகவே துரிதமாக அங்கே போட்டோ எடுக்க வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசு உத்தரவிடுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர் எச். வி ஹண்டே: 6-2-84 அன்று இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்க்கு கடிதம் எழுதி, இப்போது அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். இதிலே ஒரு விஷயத்தை நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்துவது இந்தக் கேள்விக்குப் பதிலாக அமையும் என்று நினைக்கிறேன். எக்ஸ்-ரே பிலிமைப் 'பொறுத்தவரையில்' ஒரு தவறான எண்ணம் பரவலாக இருக்கிறது. எல்லா வியாதிகளுக்கும் எக்ஸ்-ரே எடுக்கவேண்டு மென்று எடுப்பதுதான் மருத்தவர் கவனித்ததற்கு அடையாளம் என்ற ஒரு தவறான எண்ணம் இருக்கிறது. எக்ஸ்-ரே எடுத் தார்கள் நன்றாக கவனித்தார்கள் என்று சொல்லக்கூடிய பழக்கம் நம் நாட்டில் இருக்கிறது. அது தேவையற்ற பழக்கம், எல்லா வியாதிகளுக்கும் எக்ஸ்-ரே எடுக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் பல நேரங்களில் பிரைவேட் பிராக்டிஸ் செய்பவர்கள் போக்கு, அவர்கள் நோயாளிகள் வற்புறுத்துவதால் எடுக்கச் சொல்கிறார்கள். எந்த வியாதிக்குத் தேவையோ அந்த வியாதிக்கு மட்டும் எடுத்தால் போதும். தலைவலி, உடம்புவலி, வயிற்றுவலி போன்றவைகளுக்கு எக்ஸ்-ரே எடுத்தால்தான் நன்றாக இருக்கும் என்று சொல்கின்ற பழக்கம் தேவையற்ற போக்கு. இந்த மருத்துவமனையைப் பொறுத்த வரையில், நான் உங்களுக்குத் தெளிவாகச் சொல்ல விரும்பு கிறேன். எந்தக் காலக் கட்டத்திலும் எக்ஸ்-ரே இல்லை என்ற நிலைமை இல்லை. 15×8, 12×10, 10×8, 8½×6½, 6½×4½ இத்தனை எக்ஸ்-ரேக்களும் நமக்கு எவ்வளவு இருக்கவேண்டுமோ





அதற்கு மேலே இருக்கிறது. நிறைய எக்ஸ்-ரேக்கள் நம் நாட்டில் வீணாக்கப்படுகிறது. வெளிநாட்டில் அப்படி கிடையாது. எதற்கெடுத்தாலும் எக்ஸ்-ரே எடுத்தால், சில்வர் காம்பனன்ட் வீணாகிறது. தேவைப்படுகின்ற வியாதிகளுக்கு மட்டும் எக்ஸ்-ரே எடுப்பது நல்லது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் ஒரு சிறந்த டாக்டராக இருக்கின்ற காரணத் தினால் நோயாளிகளுடைய மனோநிலையை அவர் புரிந்து கொள்ளாமல் அவர் சொல்கிறார் என்று தான் சொல்ல வேண்டும். சாதாரண நோயாளிகளுக்குக்கூட டாக்டர்கள் அவர்களை டிகிரி வைத்துப் பார்த்தால், பாதி நோய் தானாகவே தீர்ந்துவிடும். அதைப்போலவே போட்டோ எடுத்தால் போட்டோ வீணாகிவிடும் என்று கருதுவது சரியல்ல. ஆகவே அந்த சாதாரண மக்களுக்கு போட்டோ எடுப்பதிலே, மருந்து கொடுக்காமல், நோய் குணமாகிவிடலாம். ஆனால் போட்டோ பிலிம்களில் நெருக்கடி இருக்கலாம். அதையும் நான் உணரு கிறேன். இருந்தாலும், பழனி மருத்துவமனையைப்போல் பல மருத்துவமனைகள் எக்ஸ்-ரே பிலிம்கள் இல்லாத நிலையில் இருக்கின்றன. எனவே இதை உடனடியாக கவனிப்பதற்கு அமைச்சரவர்கள் உத்தரவிடுவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அதிலே அவர்களுடைய கேள்வி ஒன்று பாராட்டுதல், இரண்டு குற்றச்சாட்டு. ஆக இரண்டிற்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். மருத்துவர்கள் என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி நோயாளிகளுக்கு விளக்க வேண்டும் அங்கே தான் பிரச்சினை எழுகிறது. சில வியாதி களுக்கு, எக்ஸ்-ரே தேவையில்லை, இந்த வைத்தியம் போது மானது என்று சொல்ல வேண்டும். அப்படிச் செய்யாமல் ஏனோ தானோ என்று செய்வதால் பிரச்சினைகள் வருகின்றன. எந்தந்த நோயாளிகளுக்கு எக்ஸ்-ரே தேவையில்லை என்பதைச் சொல்ல வேண்டும். சும்மா ஊசி போடுங்கள் ஊசி போடுங்கள் என்று நோயாளிகள் சொல்வார்கள். இந்த வியாதிக்கு ஊசி போட வேண்டாம் என்று திட்டவட்டமாக தைரியமாகச் சொல்ல வேண்டும். நோயாளிகள் கேட்கிறார்கள் என்பதற்காக அதையெல்லாம் கொடுப்பது தேவையில்லை. அது வைத்தியம் அல்ல ஆகவே தெளிவாக இதற்கு எக்ஸ்-ரே தேவையில்லை என்று விளக்கிச் சொல்லி, அதை எடுக்காமல் இருந்தால் நல்லதாக இருக்கும். ஆனால் ஒன்றை மட்டும் சொல்கிறேன்.

(முற்பகல் 10.40)

எந்த நோய்க்கு எக்ஸ்-ரே தேவையோ அதற்கு மட்டும் நிச்சயமாக எக்ஸ்-ரே எடுக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கொண்டு இருக்கிறோம், இந்த மருத்துவமனையை C.

பெரிறுத்தவனரயில், கால் அட்டன்சன் நோட்டிஸ் கொடுத்த உடனே நான் அங்கே விசாரித்தபோது, அங்கே எக்ஸ்-ரே இருக்கிறது என்று தெரிந்துகொண்டோம். நிறைய ஸ்டாக் வைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்றும், மீண்டும் ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்சுக்கு எழுதி அங்கே ஸ்டாக் ஏராளமாக வைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. வரவு—செலவுத் திட்டம் 1984-85—வாக்கெடுப்பு—தொடர்ச்சி
(அ) கோரிக்கை எண் 36—பாசனம்

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 52,27,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: துணைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி செந்துறை அருகில் அணைக் கட்டு கட்டுவது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 52,27,66,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ப. சுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சியிலுள்ள ஏலகிரி மலை அடிவாரத்தில் குன்னத்தூர் என்னுமிடத்தில் ஒரு புதிய ஏரி கட்டித்தர வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 52,27,66,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

Thiru J. Hemachandren : Sir, to discuss the need to construct Pallikuttam Dam in Kanyakumail cistrtct, I move that the allotment of Rs. 57, 28, 66, 000- under Demand No. 36-Irrigation be reduc d by Rs. 100.

திரு. செ. சிவசாமி: துணைத் தலைவர் அவர்களே, பல நூற்றுக்கணக்கான வருடங்களாக சிறுகச் சிறுக ஒவ்வொரு ஆண்டும் தண்ணீரோடு வரும் மகிழி சேர்வதன் காரணமாக கண்மாய் மேடிட்டுப் போய் கொள் அளவு குறைந்ததனால் கண்மாயின் நீர்பிடி பரப்பு முழுவதையும் வெட்டி ஆழப்படுத்துவது சம்பந்தமாக விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:





''மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 52,27,66,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. யா. சை மு. யூசுப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 57,62,94,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. கு. பாலன்: துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 57,62,94,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன: மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டுக்குரிய பாசனத்துறை குறித்த மானியக் கோரிக்கைகளை இந்த அவையில் முன்வைக்கக் கூடிய மிகப் பெரிய வாய்ப்பை எனக்கு வழங்கிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய உளம்கனிந்த நன்றியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே நான் பேசவேண்டிய கருத்துக்கள் எல்லாம் ஏற்கனவே புத்தக வடிவிலே** அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதை நான் பேசியதாக ஏற்றுக்கொண்டு, அவைக் குறிப்பில் அந்த உரையை ஏற்றுக்கொண்டு, உரிய கருத்துக்களை வழங்குமாறு கேட்டுக்கொண்டு அவர்கள் கருத்தை வழங்கிய பிறகு என்னுடைய பதிலுரையை வழங்குகின்றேன்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கைகள், எண் 36, மற்றும் 51 ஆகியவற்றின் மீது நான் சார்ந்திருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூறலாம் என்று கருதுகிறேன். அதற்கு எனக்கு அனுமதி தந்த தலைவர் அவர்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் முதலிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். முதலாவதாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்திலே

**297—310-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

பல புதுத் திட்டங்களும், பழைய திட்டங்களைச் செப்பனிடுவதற்கு சில வேலைகளையும் கொடுத்திருப்பதற்கு நான் இந்த சமயத்திலே அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, 1967—லே காங்கிரஸ் ஆட்சி நீங்கிய பிறகு எந்தவிதமான புதிய நீர்ப்பாசனத் திட்டங்களையும், பெரிய திட்டங்களையும் செய்யும் ஆற்றல் இல்லை என்று கூறலாம். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், காங்கிரஸ் ஆட்சியிலே பெரிய பெரிய நீர்ப்பாசன திட்டங்களை எல்லாம் இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்திவிட்டு, பெரிய பெரிய காடுகளை எல்லாம், வனங்களை எல்லாம் நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் கொண்டுவந்தோம்.

அதற்குப் பிறகு நல்ல பெரிய திட்டங்களை இந்த அரசு கொண்டுவர வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது நம்முடைய தலையாய கடமை என்னவென்றால், காவிரி நீர்ப் பிரச்னை. காவிரி நீர் பிரச்னையில் நமக்கும் கர்நாடக மாநிலத்திற்கும் 1924-ல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, இன்னும் அந்தத் திட்டம் நடைபெறாமல் இருக்கிறது. 1974 லோடு அந்தத் திட்டம், அந்த ஒப்பந்தம் முடிவு அடைந்துவிட்டதாக கர்நாடக அரசு அறிவித்திருக்கிறது. தொடர்ந்து இருப்பதாக . நாம் கூறிக்கொண்டிருக்கிறோம். அந்தத் தலையாய பிரச்னையில் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதை மிக முக்கியமாகக் கருதி, கர்நாடக மாநில அரசோடு மீண்டும் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டால்தான் தஞ்சை வாழ்மக்களுக்கு ஒரு மன நிம்மதி ஏற்படும். அப்படி இல்லை என்றால், தஞ்சை முழுவதும் காடாக காட்சி அளிக்கக் கூடிய ஒரு நிலைமை அங்கே நிலவுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும், 'இதை மிகத் தலையாய கடமையாகக் கொண்டு இந்த காவிரி நீர் பிரச்னையைத் தீர்க்க ஒரு முடிவுக்குவர முன் வரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மைய அரசும், அதாவது மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு பிரதமர் அவர்களும், தமிழகத்திற்கு இப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை வகுத்துக் கொடுக்க வேண்டும் என்று தான் பலமுறை இதற்கான கூட்டங்களைக் கூட்டியிருக்கிறார்கள். இந்த திட்டம் நமக்காகப் போடப்பட்ட ஒரு திட்டம், ஆகவே நாம் தான் இதில் அக்கறை எடுத்துக் கொண்டு, மைய அரசோடு, சேர்ந்து கர்நாடக அரசோடு பேசி இந்தத் திட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.





அதேபோல 1977-லே பெய்த பெருமழையினால் குடகனாறு அணை உடைந்துவிட்டது. அந்த அணை 1977-லே யிருந்து இன்றுவரை செப்பனிடப்பட எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் அதை மறுபடியும் கட்டுகிறோம கட்டுகிறோம் என்று சொல்லியே 6, 7 ஆண்டு காலமாக அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது குடகனாறு திட்டத்திற்காக 30 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம் என்றும், அதைக் கட்டுவதற்காக சம்பந்தப்பட்ட இன்வெஸ்டிகேஷன் நடந்து வருகிறது என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆகவே, கொள்கைக் குறிப்பிலேதான் இன்று வரை அது நிற்கிறது, சென்ற ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்களும், நானும்கூட, இந்த குடகனாறு திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை மிக அதிகமாக இங்கே எடுத்துக் கூறினோம். குடகனாறு திட்டத்தினால் மதுரை மாவட்டமும், திருச்சி ம வட்டத்தில் கரூர் தாலுக்காவும், குறிப்பாக எனது தொகுதியான, கிருஷ்ணராயபுரம் மேலும் பலன் அடையக்கூடிய வாய்ப்பு இந்தத் திட்டத்தில் இருக்கிறது. அதிலிருந்து வரக்கூடிய தண்ணீரெல்லாம் வீணாகக் காவிரியிலே கலந்து, காவிரி மூலம் கடலுக்குச் சென்று விழுகிறது என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே குடகனாறுத் திட்டம் யார் காலத்திலே கட்டப்பட்டது என்பதை பிரதானமாக நினைக்காமல், அதிலே எந்தவித காழ்ப்புணர்ச்சி யும் கொள்ளாது குடகனாறு திட்டத்தை உடனடியாக ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், அமராவதி ஆற்றிலே, உடுமலைப்பேட்டை அணை என்ற ஒரு அணை 1955-லே கட்டப்பட்டிருக்கிறது. அதனுடைய முக்கியம் எல்லாம் கரூர் பாசனத்திற்கு. கரூர், சின்னதாராபுரம் போன்ற இடங்களுக்கு தண்ணீர் கொடுத்துவிட்டுத்தான், எக்ஸஸாக இருக்கக்கூடிய தண்ணீரைத்தான் புதிய வாய்க்கால் களுக்கு தருகிற ஒருநிர்ப்பந்தம் இருந்தது அந்த அணை 1955-லே கட்டப்ப டபோது ஆனால் இன்றுள்ள நிலைமை வேறாக இருக்கிறது. புதியதாக கட்டப்பட்டுள்ள வாய்க்கால்களின் மூலமாக பெரியார் மாவட்டத்திலே, கோவை மாவட்டத்திலே தண்ணீரை திறந்து விட்டுவிட்டு, கீழே கரூர் மாவட்டத்திற்கு அந்த தண்ணீர் திறந்துவிடப்படுவதில்லை. ஆகவேதான் 1955-லே ஏற்படுத்தப்பட்ட அணையினாலே, கீழே உள்ள ஆயக்கட்டுக்காரர்களுக்கு குறிப்பாக கரூர் வட்டம் முழுவதும் உள்ள ஆயக்கட்டுக்காரர்களுக்கு டாசனத்திற்கு பிரயோஜனம் இல்லாமல் அந்த இடமெல்லாம் தரிசாக காட்சியளிக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு சில முக்கியமானவர் களின் தலையீட்டினால் இந்த உடுமலைப்பேட்டை அணையி லிருந்து தண்ணீர் வருவதில்லை. ஆகவே தான் மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்களும், நானும் சென்ற முறை ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்தோம். உடுமலைப் பேட்டை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டதாகக் கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படி உண்மை

யிலேயே தண்ணீர் திறந்துவிடப்படாமல், பெரியார் மாவட்டத்திற்கு மட்டும் தண்ணீர் திறந்துவிடப்பட்டு, கீழே உள்ள ஆயக்கட்டுக்காரர்களை வருஷா வருஷம் எந்தவிதமான பாசன உதவியும் இல்லாமல் பாயப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்லாமல் இப்போது கரூர், குளித்தலை வட்டத்தில் உள்ள அமராவதி பட்டணத்திற்கு நிலவரியையும் 2 மடங்கு 3 மடங்கு உயர்த்தியிருக்கிறார்கள். ஆகவே கரூரிலுள்ள விவசாயிகள் எல்லாம் விவசாயச் சங்கம் ஒன்று ஏற்படுத்தி, மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களிடத்திலும், முதலமைச்சர் அவர்களிடமும் மனுக்களை கொடுத்திருப்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் அமராவதி ஆற்றிலே கட்டளையிலே, பெர்மெனென்ட் ரெகுலேட்டர் என்ற வகையில் ஒரு ரெகுலேட்டரைக் கட்டச் சொல்லி கடந்த 4 ஆண்டுக் காலமாக கேட்டு அது ஆய்விலேயே இருந்து வருகிறது தோராயமாக 172 லட்சம் ரூபாய்க்கு அதனுடைய மதிப்பீடு போடப்பட்டு இன்னமும் இன்வெஸ்டிகேஷன் நிலையிலேயே இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வது, ஒரு இன்வெஸ்டிகேஷன் வேலைக்கே 3 வருஷம் 4 வருஷம் எடுத்துக்கொண்டால், எப்படி விவசாயத்தையே நம்பி இருக்கக்கூடிய நம்முடைய தமிழகம் முன்னேற முடியும். ஏறக்குறைய 100-க்கு 75 பேர்கள் விவசாயத்தையே நம்பியிருக்கிறார்கள். விவசாயத்திற்கு பாசனத்தை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். முறையில்லாத பாசனத்தின் மூலம் விவசாயக் கூலிகள், விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்

(முற்பகல் 10-50)

கிறார்கள். ஆகவே எடுத்துக்கொண்டால் சீக்கிரமாக முடித்தால் தான் மக்களுக்குப் பயன் கொடுப்பதாக இருக்கும் என்ற இந்த சமயத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பெர்மனென்ட் ரெகுலேட்டர்ஸ் கட்டுவது 3,4 ஆண்டுகளாக பெண்டிங் ஆக இருக்கிறது. லேண்ட் இம்ப்ரூவ்மெண்ட் போர்டிலே அது வைக்கப்பட்டு அதன் சேர்மனான வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் சிபாரிசு செய்யப்பட்டு இன்னும் பெண்டிங்காக இருக்கிறது. அதையும் சீக்கிரம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நொய்யல் ஆற்றிலே கரூர் தாலூகாவுக்குப் பாசன வசதி கிடைக்கும் அளவுக்கு சிறிய அணையை கட்டி நீரைத் தேக்கி புதிதாக பாசனம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்ற திட்டம் இன்னும் ஆய்வில் இருக்கிறது. சீக்கிரம் அதை எடுத்துக் கொண்டு அந்தப் பகுதி மக்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்திலே பாசனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதாக இந்த குறிப்பிலே இருந்தாலும் போதிய முக்கியத்துவம் கொடுத்து எந்தவிதமான திட்டமும் அறிவிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சின்னசேலம் எம். எல். ஏ. சிவராமன் அவர்கள் சென்ற ஆண்டிலே பல குறிப்புகளை இங்கே கொடுத்திருக்கிறார்கள். தென் ஆற்காடு மாவட்டத்திலே கள்ளக்குறிச்சியிலே இருக்கும் கோமுகி அணையினை உயர்த்தவேண்டுமென்று சென்ற ஆண்டு பேசினார்கள். அது பரிசீலனையில் இருப்பதாகவும் சாத்தியம் இருந்தால் விரிவான ஆய்வு செய்து திட்டம் எடுத்துக்கொள்ளப் படும் என்றும் கொள்கைக் குறிப்பில் கொடுக்கப்பட்டு இருக் கிறது. சென்ற ஆண்டு பேசினார், இன்னும் ஆய்வில் இருப்பதாக சொல்லப்படுகிறது. மிகவும் காலதாமதமாகிறது. தென் ஆற்காடு மாவட்டத்தில் ஆத்தூரிலிருந்து வரக்கூடிய வசிஷ்டா நதியின் குறுக்கே அணை கட்டவேண்டுமென்றும் கரைகளை அகலப்படுத்தவேண்டுமென்றும் சென்ற ஆண்டிலேயே அவர்கள் பேசினார்கள். கொள்கைக் குறிப்பிலே வசிஷ்டா நதி வெண்ணாற்றில் சேர்வதற்கு முன் வேறு திட்டங்களை நிறை வேற்றுவதற்கு சாத்தியக் கூறு இல்லை என்று சொல்லப்பட்டிருக் கிறது. திரு. சிவராமன் கூறுவதெல்லாம் தனிப்பட்ட ஒரு முதலாளியின் தலையீட்டால்தான் இந்தத் திட்டம் நிறை வேறாமல் இருக்கிறது என்பது. ஆகவே அதை மனதில் கொண்டு தனிப்பட்டவர் யாருக்கும் செல்வாக்காது மக்களுக்குப் பயன்படுகின்ற நல்ல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பல கோடி ரூபாய் இங்கே ஒதுக்கியிருக்கிறோம். முக்கியமாக நீர்ப்பாசனத் திட்டங்கள் மக்கள் வாழ்க்கைக்கு நாட்டு மக்கள் சுபிட்சமாக வாழ வழிவகுக்கும் என்பதால் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றிகூறி முடித்துக் கொள் கிறேன்.

*திரு. மி. வின்சென்ட்: மாற்றுத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டிற்கான பாசன மீதான மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்புத் தந்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இருக்கின்ற நில நீரில் 90 சதவீதத்திற்குமேல் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பது பாசனத் துறையின் சிறப்பினை எடுத்துக்காட்டுகிறது என்பதை முதன்முதலாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1983-84 ஆம் ஆண்டு நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மூலமாக 14,350 ஹெக்டேர் பரப்புக்கு கூடுதல் பாசன வளத்தை ஏற்படுத்தி உள்ளோம். பரம்பிகுளம்-ஆழியார் பாசனப் பரப்பு விரிவாக்கத் திட்டத்தின் மூலமாகவும், பெரியாறு-வைகை பாசன

முறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் மூலமும் வெம்பக் கோட்டை நீர்த்தேக்கத் திட்டத்தின் மூலமும் குன்னூர் சத்தை நீர்த்தேக்கத் திட்டத்தின் மூலமும் ஈச்சம்பாடி அணைக்கட்டுத் திட்டத்தின் மூலமும் 14,350 ஹெக்டேர் கூடுதலாக பாசன வசதியை அளித்த இந்த அரசு. இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதி ஆண்டான 1984—85 இல் 28,170 ஹெக்டேர் என்று நிர்ணயித்திருப்பது என்பது ஆண்டுக்காண்டு பாசன வளத்தைப் பெருக்குவதில் இந்த அரசு எடுத்துவரும் முயற்சிக்கு எடுத்துக்காட்டு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழக அரசு சமீபத்திலே ரூபாய் 27.60 கோடி செலவிலே 200 ஹெக்டேர்க்கு குறைவாக உள்ள பரப்பைக் கொண்டுள்ள மானாவாரி ஏரிகளை நவீனப் படுத்தும் திட்டத்தை அங்கீகரித்து இருப்பதற்காக நான் மனதாரப் பாராட்டுகிறேன். இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகம் ஐரோப்பிய பொருளாதார சமுகத்தினுடைய உதவியைப் பெற்று அந்தத் திட்டத்தை மேற்கொள்ள இருக் கிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் சுமார் 150 பாசன ஏரிகள் நவீனபடுத்தப் படும் என்பதை நான் வரவேற்கிற நேரத்தில் குமரி மாவட்டத்தில் பல மைல்கள் சுற்றளவு உள்ள பறக்கைக்குளம் போன்ற ஏரி போன்ற குளங்களை இந்த பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இந்த நேரத்தில் வைக்கிறேன். குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை பாசன வசதி தருகின்ற அளவுக்கு ஒரு தன்னிறைவுப் பெற்ற மாவட்டமாக ஆக்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்கிறது என்பதை நான் இதய பூர்வமாக வரவேற்று பாராட்ட முன் வருகிறேன். குமரி மாவட்டத்தில் கோதையாறு பாசன முறை அடங்கிய அனந்தநாறு கால்வாய் நாகர்கோவில் தொகுதியை சேர்ந்த இந்த கால்வாய்க்கு சுமார் 351 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் நீட்டப்பட்டு இன்றைய தினம் தனி டிவிஷன் எக்ஸிக்யூட்டிவ் இன்ஜினியர் அவர்கள் தலைமையில் செயல்பட்டு வருவதை நான் இந்த நேரத்தில் பாராட்டுகிறேன். அதுபோல்தான் 85 லட்சம் ரூபாய் செலவில் இப்போது திற்பரப்பு அணைக்கு வலதுபுற கால்வாயை விரிவு படுத்தும் திட்டமும் செயல்பட்டு வருகிறது என்பதற்காக நான் இந்த நேரத்தில் நன்றி உணர்வோடு இந்த அரசை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசால் நியமிக்கப் பட்ட தொழிற்நுட்ப கழகத்தின் பரிந்துரைக்கு இணங்க கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளின் உபரி நீரை தமிழ் நாட்டுக்கு திருப்பி விடுவதற்கு, பாசன வசதி அளிப்பது பற்றி இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்துமாறு கேரள முதலமைச்சர் அவர்களை தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளதை நான் பாராட்டுகிறேன். ஆனால் தமிழ்நாட்டில் குமரி மாவட்டத்தில் மாம்பழத்துறை ஆறு இருக்கிறது. அந்த ஆற்றில் சுமார் 200 மில்லியன் கன அடி தண்ணீர் இதுவரையிலும் வீணாகச் சென்று கடலில் கலக்கிறது.



அமைச்சர் அவர்களிடம் நான் தெரிவித்து
இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் அந்தப்பகுதிக்கு அழைத்துச்
அவர்களை நேரடியாக நான் பார்த்து ஆச்சரியப்பட்டார்.
சென்றேன். அவர்களே அதைப் பாயும் ஆறுகளில் வருகின்ற
ஏன் என்றால் மேற்கு நோக்கி நாம் முயற்சிகள் மேற்கொண்டு
தண்ணீரை திருப்பி விடுவதற்கு கன்னியாகுமரி மாவட்டத்தில்
இருக்கிற இந்த நேரத்தில் வருகின்ற 200 மில்லியன் கன அடி
மாம்பழத்துறை ஆற்றில் கலப்பதை அவர்கள்
தண்ணீர் வீணாகச் சென்று கடலில் வெகு விரைவில் செயல்
கண்ணால் பார்த்து அந்தத் திட்டத்தை மேற்கொண்டுள்ளார்கள். இந்த
படுத்துவதற்கு ஆக்கப் பணிகளை மாவட்டத்தில் மாம்பழத்
மானிய கோரிக்கையில் கன்னியாகுமரி நம்பியாறு, எலுமிச்சை
துறை ஆறு, திருநெல்வேலி மாவட்டத்தில் பணிகள் மேற்கொள்ளப்
ஆறு போன்ற 29 திட்டங்களுக்கு ஆய்வு நிலையில் இருக்
பட்டு அவைகள் வெவ்வேறு முன்னேற்ற எடுத்துச் சொல்லி
இன்றது என்பதை இங்கே தெளிவாக ஆயிரக்கணக்கான குமரி
விருக்கிறார்கள். அதற்காக பல டாக்டர் புரட்சித்
மாவட்ட விவசாயிகளின் சார்பில் மாண்புமிகு நன்றி காணிக்கையை
தலைவர் அவர்களுக்கு என்னுடைய தொகுதியில் இந்த அணை
வைக்கின்ற நேரத்தில் பத்மநாபபுரம் முயற்சிக்கு ஒரு
கட்டும் திட்டத்திற்காக நான் எடுத்த நான் மாண்புமிகு
தொண்டன் எனக்கு அன்பு முத்தம் தந்ததை அன்போடு
அமைச்சர். அவர்களுக்கு அதே உணர்ச்சியோடு நான்
திருப்பிக் கொடுக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் தனி
சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு பொதுப்பணித்துறையின்
தலைமைப் பொறியாளர் கீழ் இயங்கும் மற்றும் சிறு பாசன
ஆய்வு பிரிவு மாநிலத்தில் சிறிய, நடுத்தர வருகிறது என்று குறிப்
திட்டத்தின் ஆய்வுப் பணிகளைச் செய்து மீது இந்த அரசு எந்த
பிடப்பட்டுள்ளது. குமரி மாவட்டத்தின் என்பதை இங்கே எடுத்துக்
அளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறது 13 திட்டத்தின் பெயர்கள்
காட்டியிருக்கிறீர்கள். இன்றையதினம் சுமார் 5 ஆயிரத்து 824
அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக 863 ஹெக்டேர் நிலங்கள்
லட்சம் ரூபாய் செலவில் 44 ஆயிரத்து இந்தத் திட்டங்கள்
முழு பலன் அடைகின்ற அளவுக்கு இருக்கும் ரூ. 5,824
அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒதுக்கப்பட மாவட்டத்தில் உள்ள
லட்சத்தில் 2,790 லட்சத்தை குமரி நவீனப்படுத்துவதற்காக
கோதையாறு பாசன திட்டத்தை இதயபூர்வமாக உள்ளம்
ஒதுக்க இருப்பதற்கு நான் மனமாற பாராட்ட கடமைப்பட்டு
திறந்து இந்த நேரத்தில் ஒதுக்கிய பணத்தில் பாதிக்கு
இருக்கிறேன். ஏன் என்றால் உள்ள நீர்ப் பாசனத்திற்காக
மேலாக குமரி மாவட்டத்தில் சுட்டிக்காட்டுகின்ற இந்த
ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை பார்க்கின்ற நேரத்தில் நான்
நேரத்தில் அதனை எண்ணிப் குமரி மாவட்ட மக்கள் புரட்சித்
மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நன்றி உடையவர்களாக
தலைவர் அவர்களுக்கு என்றென்றும் நான் இந்த நேரத்தில்
இருப்பார்கள் என்ற உறுதியை லட்சம் மதிப்பு
தருகிறேன். மேலும் ரூபாய் 8,012 ஆய்வு செய்யப்பட்டு
உள்ள 63 சிறப்பு சிறு பாசன திட்டங்கள்

அரசின் பரிசீலனையில் உள்ளது. இது தவிர ரூபாய் 2,22 லட்சத்திற்கு 216 சிறப்பு சிறுபாசன திட்டங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதை நான் இந்த நேரத்தில் வெகுவாக பாராட்டுகிறேன்.

சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்குவதற்காக கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. நீரை கொண்டு வரும் இந்த கிருஷ்ணா நதி நீர் திட்டத்தை நிறைவேற்றுதல் மற்றும் இதற்காக செலவினங்களை பகிர்ந்துகொள்ளுவது சம்பந்தமாக 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18 ஆம் நாள் அன்று ஆந்திரா, தமிழக முதலமைச்சர்களால் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்து இடப் பட்டது. 1983 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள் பாரத பிரதமர் அவர்களால் துவங்கப்பட்ட இந்தத் திட்டம் தமிழக எல்லைக்குள் பூண்டி வரையிலும் கால்வாய் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு நல்ல முன்னேற்றத்தில் உள்ளது என்பதை நாம் அறிவோம்.

(முற்பகல் 11—00)

கிருஷ்ணா நதி நீர் வழங்கு திட்டத்தைப் பொறுத்தவரையில், உலகத்திலே உள்ள எந்தத் திட்டத்திற்குமே இல்லாத சிறப்பு இந்தத் திட்டத்திற்கு உண்டு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். அதாவது, ஒரு திட்டம் கையெழுத்திடப்படும் நேரத்தில், அதற்குக் குறிப்பிட்ட ஆண்டு, அதாவது 50 ஆண்டுகள் அல்லது 100 ஆண்டுகள் என்ற வரையறை உண்டு. ஆனால் வரையறையே இல்லாமல், இந்த தமிழகம் உள்ளவும் இந்த திட்டம் நிறைவேற்றப்படும் என்று இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகி இருப்பது, உலக வரலாற்றிலேயே முதன்முறையாக உள்ளது என்பதை நான் தெரிவிக்கின்ற நேரத்தில், இது புரட்சித் தலைவரவர்களின் நிர்வாகத் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், புரட்சித் தலைவரைப் பார்பது என். டி. ஆர். ஏமாற்றிவிட்டார் என்றுசொல்லுகின்ற அளவிற்குத் தமிழகத்திலே எதிர்க்கட்சி நண்பர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவரவர்களைப் பொறுத்த வரையில் அவர் யாரையும் ஏமாற்றவும் மாட்டார். யாரிடத்திலேயும் ஏமாறவும் மாட்டார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவரவர்களை ஏமாற்ற நினைத்தவர்கள், 1972 ஆம் ஆண்டிலிருந்து இடம் தெரியாமல் இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு, ஆந்திரா மாநிலத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், ஆந்திர மாநிலத்திற்குத் துரோகம் செய்துவிட்டதாக என். டி. ஆர். அவர்களைப் பார்த்துக் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள்.





ஆனால், இங்கே உள்ள எதிர்க்கட்சித் தலைவர், புரட்சித் தலைவர் ஏமாந்து விட்டார் என்று சொல்கிறார். இது அவருடைய விரக்தியைத்தான் காட்டுகிறது; மக்களை சந்திக்கின்ற சக்தியை இழந்த உள்ளத்தில் எழுந்த கள்ளத்தனம்தான் இது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

760 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டப்பட்ட இடத்தில், 200 கோடி ரூபாயைத்தான் நாம் செலவழிக்கிறோம். ஆனால் அதன் மூலமாகக் கிடைக்கின்ற தண்ணீர் 15 டி. எம்.சி. ஆகும். ஸீப்பேஜுக்கும், எவாப்பரேஷனுக்கும் 3 டி. எம். சி. தண்ணீர் செலவழிக்கப்பட்ட பிறகு, மீதியுள்ள 12 டி.எம்.சி. தண்ணீரையும் பார்டர் வரைக்கும் கொண்டு சென்று சேர்க்க வேண்டுமென்று ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தண்ணீருக்காக பணம் கொடுப்பதா என்று கேட்கிறார்கள். தண்ணீருக்காகப் பணத்தைக் கொடுக்கவில்லை, தண்ணீரைக் கொண்டு வருகின்ற கால்வாய்களை வெட்டுவதற்காகத்தான் பணம் கொடுக்கிறோம். இதுகூடத் தெரியாத அளவிற்கு, இதற்குமுன் பல்லாண்டுகாலம் ஆட்சி நடத்தியிருக்கிறார்களே என்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், உண்மையிலேயே நமக்கு வேதனையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நதிகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று 1980 ஆம் ஆண்டு நேஷனல் டெவலப்மெண்ட் கமிட்டியில், புரட்சித் தலைவரவர்கள் வற்புறுத்தினார்கள். அந்த வற்புறுத்தலுக்கு இன்றைக்கு வெற்றி கிடைத்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "மத்திய அரசு ஏற்படுத்திய தேசியநீர்வள அமைப்பின், ஆளுகைக் குழுவின் இரண்டாவது கூட்டம் 1923 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாள் நடைபெற்றது. இவ்வமைப்பு தீபகற்ப நதிகளின் வளர்ச்சிக்குத் தேவையான அவ்வினை மேற்கொண்டு செயலாக்கவும், திட்டமிட்டுள்ளது. மகாநதி, கோதாவரி ஆகிய ஆறுகளின் உபரி நீரைத் தெற்கே கிருஷ்ணா, பெண்ணாறு, காவிரி, வைகை போன்ற படுகை களுக்குத் திருப்பி, இப்படுகைகளை வளப்படுத்துவதே இவ் வமைப்பின் பணியாகும்" என்று குறிப்பிடப்பட்டு, அதற்கான எல்லா புள்ளி விவரங்களையும், வேண்டிய உதவிகளையும், தமிழக அரசு அளித்து வருகிறது என்று சொல்லியிருப்பது, 1980 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் விடுத்த கோரிக்கைக்குக் கிடைத்த வெற்றி என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

பராக்கா நீரைப் பொறுத்தவரையில் வங்க தேசத்தோடு மத்திய அரசு சுமுகமாகத் தீர்த்துக் கொண்டதைப்போல, காவிரி நீர்ப் பிரச்னையிலேயும் மத்திய அரசு தலையிட்டு உடனடியாகத் தீர்வு காண்பதற்கு முயல வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

இன்டர்ஸ்டேட் ரிவர் ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டால் மறு ஒப்பந்தம் வருகின்ற வரையில், இருக்கின்ற ஒப்பந்தம் அப்படியே இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், நீர்ப் பங்கீடு சம்பந்தமாக, 1924 ஆம் ஆண்டுக்கு முன்பே, 1892 இல் ஒரு அக்ரிமெண்ட் உள்ளது. அதில், தமிழகத்தின் அனுமதியில்லாமல், கர்நாடக அரசு ஒரு புதிய அணையைக்கூட கர்நாடகத்தில் கட்டக் கூடாது என்ற விதி முறைகள் இருக்க, கபினி, ஹேமாவதி, ஹாரங்கி ஆகிய அணைகள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தமிழகத்தை ஆண்டுகொண்டிருந்த நேரத்தில் அங்கே கட்டப்பட்டன என்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், தட்டிக் கேட்க நாதி யற்றவர்கள் அன்றைக்கு இந்தத் தமிழகத்தை ஆண்டு, நஞ்சை விளைக்கின்ற தஞ்சையின் நெஞ்சத்தைப் பிளந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அன்றையதினம் மத்திய அரசுக்கு எதிராக தமிழகத்திலிருந்து அபாயச் சங்கு ஊதப்பட்டிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக் காது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மத்திய அரசால் காவிரியில் ஃபேக்ட் ஃபைன்டிங் கமிட்டி என்ற ஒன்றை நியமித்து அது ஆராய்ந்தது. இவ்வாறு ஆராய்ந்ததில் உபரி நீர்கணக்கெடுப்பு பற்றிய ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் தவறான உண்மைக்குப் புறம்பான, வேண்டும் என்றே தமிழகத்தைப் புறக்கணிக்கின்ற அளவில், தமிழனை நாலாந்தரக் குடிமகன் என்று நிர்ணயித்து உபரி நீர் இல்லை என்று சொல் கின்ற அளவுக்கு ஒரு தீர்ப்பினை அளித்தார்கள். இதை அன்றையதினம் ஆட்சிப் பீடத்தில் இருந்தவர்கள் தட்டிக் கேட்க வில்லை என்பதை அடுத்து ஒரு குற்றச்சாட்டாக நான் வைக் கிறேன்.

கர்நாடக அரசு தமிழகத்திற்கு நியாயமான அடிப்படையில் கொடுக்கவேண்டிய தண்ணீரைத் தர மறுப்பது சர்வதேச நியதிக்கு முரண்பாடானது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவ்வாறு சுட்டிக்காட்டி நான் ஒரு ஆதாரத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே 10 தினங்களுக்கு முன்பு காவிரி நதி நீர்ப் பங்கீடு பிரச் சினை சம்பந்தமாக பொறியாளர்கள், நீதிபதிகள் பங்கு கொண்ட கருத்தரங்கு எழும்பூர் பெரியார் திடலில் நடந்தது. அதில் நீதிபதி திரு. வேணுகோபால் என்ன குறிப்பிட்டார் என்றால் 10 ஆண்டு காலத்திற்கும் மேலாகப் பேச்சுவார்த்தை நடந்தாகிவிட்டது; இனியும் பேச்சுவார்த்தை மூலம் காலம் தள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது; காலதாமதம் பிரச்சினையை மேலும் கடினமாக்கும்; வேறு பல நாடுகளிலும் இதுபோன்ற நதிநீர்ப்



பங்கீட்டுத் தாவா தீர்க்கப்பட்டுள்ளன. அவ்வாறு தீர்க்கப் பட்டுள்ள நிலைமையை எண்ணிப் பார்க்கும்போது பிரச்சினை சுலபமானதுதான், ஆனால் அதைத் தீர்க்க மனம் இல்லை என்ற முடிவுக்குத்தான் வரவேண்டி இருக்கின்றது என்று திரு. வேணுகோபால் சொல்லி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தலைமடைப் பகுதியிலே இருப்பவர்களுக்கு உள்ள உரிமை கடைமடைப் பகுதியிலே இருப்பவர்களுக்கும் உண்டு என்றும் எனவே காவிரி நதி நீரைப் பொறுத்தவரையில் கர்நாடகத்தில் இருப்பவர்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அவ்வளவு உரிமை தமிழ்நாட்டிலுள்ள தமிழனுக்கும் உண்டு என்பதை அறுதியிட்டு உறுதியாகச் சொன்ன நீதிபதி ஒன்றைக் குறிப்பிடுகிறார். இதற்கு ஒப்பந்தம் தேவையில்லை. இதன் தொடர்பாக வழக்கு தொடரப்படுமேயானால் நிச்சயமாக தம்முடைய உரிமைக்கு நியாயம் கிடைக்கும் வகையில் எந்த ஒரு நீதிமன்றமும், எந்த ஒரு நீதிபதியும் தீர்ப்பு வழங்குவார் என்று உறுதியோடு சொல்லி இருக்கிறார்.

காவிரி தங்கள் பகுதியில்தான் உற்பத்தி ஆகின்றது எனவே அந்தத் தண்ணீர் முழுவதும் தங்களுக்குத்தான் சொந்தம் என்று கர்நாடக அரசு கூறும் விதி எந்த நாட்டிலும் எந்த நேரத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்பதை அவர் தெளிவுபடுத்திக் காட்டி இருக்கிறார் என்பதைச் சொல்லிக் கடைசியாக நான் ஒன்றைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரி பாசனத்திற்கு ஆணைக்குழு ஒன்றை மத்திய அரசு உடனடியாக அமைக்கவேண்டும் என்ற வேண்டுகோளை வைக் கிறேன். இன்றையதினம் கர்நாடகத்தில் குடகு பகுதியில் எவ்வளவு மழை பெய்தால் அதன் காரணமாக கிருஷ்ணசாகர் நதி நீர்த்தேக்கத்தில் எவ்வளவு நீர் மட்டம் உயரும் என்ற கணக்கெடுப்பு இதுவரையில் நடைபெற்று வந்தது. ஆனால் இப்போது தமிழகப் பாசன அதிகாரிகள் உள்ளே கணக்கெடுப்ப தற்காக வரக்கூடாது என்று தடுத்து நிறுத்துகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறு கர்நாடக அரசு தடுக்கின்ற அந்தச் சிக்கலை உடனடியாக நிறுத்தவேண்டும். இந்த இரண்டு அரசுகளும் சுமுகமாகப் பேசித் தீர்ப்பதில் ஒரு முடிவு ஏற்படா விட்டால் மத்திய அரசு தலையிட்டு இதற்கு ஒரு முடிவு கண்டு தமிழகத்தில் நஞ்சை விளையும் தஞ்சைக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. மு. ப. முனுசாமி: பெருமதிப்பிற்குரிய பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவுகள் என்ற 36, 51 ஆகிய எண்களை உடைய மானியக் கோரிக்கைகளின்பேரில் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கலந்த வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் கல்குளம் தாலுக்காவில் மாம்பழத்துறை அணை என்ற புதிய அணை கட்ட வேண்டும் என்று அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் பல ஆண்டுக்காலமாக கேட்டிருந்தும் கூட தற்போது மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை

அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் சென்றிருந்த போது வேண்டுகோளாக வைக்கப்பட்டிருந்தும் கூட அதனை முறைப்படி தயாரிக்கப்பட்ட திட்டத்தில் சேர்க்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே வரும் தண்ணீரைத் தேக்குகின்ற வகையிலே ஒரு அணைக் கட்டித் தேக்கினால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அதன் காரணமாகப் பாசனம் பெறும். இப்போது அந்தத் தண்ணீர் எல்லாம் வீணாகக் கடலில் கலக்கின்றது. எனவே அந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதுபோல் தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் புவனகிரி ஒன்றியத்தில் வறட்சி நிவாரணப் பணியின் கீழ் பல பணிகள் 1982–83 ஆம் ஆண்டில் செய்யப்பட்டன. அவ்வாறு எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள் செய்து முடிக்கப்பட்ட பிறகும் கூட அந்தப் பணிகளைச் செய்த பணியாளர்களுக்கு அரசு பணம் கொடுக்காமல் அந்தத் தொகையை நிறுத்தி வைத்திருக்கின்றது.

(முற்பகல் 11–10)

இரண்டு ஆண்டுக்காலமாக அந்த ஒப்பந்தக்காரர்கள் அந்தப் பணத்தைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, அரசு தலையிட்டு அவர்களுக்கு உடனடியாக அந்தப் பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் பல ஆண்டுகளாக, வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலிருந்து சாஸ்திரமுட்டுலு நீர்த்தேக்கத் திட்டம் என்ற பெரிய நீர்த் தேக்கத் திட்டம் ஒன்று கட்டவேண்டுமென்று பொறியியல் வல்லுநர்களால் கொடுக்கப்பட்டது. அப்பொழுதே கட்டியிருந்தால் சுமார் ரூ. 40 இலட்சம் செலவில் கட்டியிருக்க முடியும் என்று சொல்லப்பட்டு இத்தனை ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது கொள்கை விளக்கக் குறிப்பிலே ரூ. 2.65 கோடி மதிப்பீடாகும் இத்திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் காட்டுக்குப் பக்கத்தில் உள்ளதால் அவர்களுக்குக் குடிக்கக் கூடத் தண்ணீர் கிடையாது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், அந்தப் பகுதியில் விவசாயிகள் உணவு உற்பத்தி செய்யவும், அவர்களுடைய குடிதண்ணீர் பிரச்னையை நிவர்த்தி செய்யவும் வாய்ப்பு இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு முக்கிய திட்டத்தை இந்த நிதி ஆண்டிலாவது சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே சின்னார் நீர்த்தேக்கத் திட்டம் பல ஆண்டுக் காலமாகியும்கூட அத்திமொட்லு கிராமத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குப் பலன் கிடைக்கக்கூடிய அளவுக்குக்





கால்வாய் வெட்டித் தரவில்லை. கேட்டால் அப்பொழுது சாயில் பிரிசர்வேஷன் 25 சதவீதம் இருக்க வேண்டுமென்று சொல்லி, ஆனால் அங்கு 20 சதவீதம் தான் இருக்கிறது என்று பொதுப் பணித் துறையினரால் சொல்லப்பட்டது. ஆகவே, அந்தக் கால்வாயை விவசாயிகளுக்கு வெட்டித் தந்தால், பூரணமாக நிலம் பாய்ச்சலுக்கு வரும் என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அந்தப் பணியினை உடனடியாக முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போலத்தான் நீர்த் தேக்கத்தில் நிரப்பப்பட்டு அங்குள்ள விவசாயிகளுக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல், தண்ணீர் முனைப்பாக ஆற்றில் விழுகிறது. உபரியாகப் போகும் தண்ணீரை, கால்வாய் வெட்டி, பல ஏரிகளுக்குக் கொடுத்தால், ஏரிகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். அதுபற்றி 2,3 ஆண்டுகளாகக் கேட்டிருந்துங்கூட, மாவட்ட வளர்ச்சிமன்றக் குழு கூட்டத்தில் கேட்டிருந்துங்கூட, பொதுப்பணித் துறையினர் என்ன சொல்கிறார்கள்? 5 ஆண்டுக்காலம் நீர்க் கொள்ளளவு சரியாக இருக்கிறதா இல்லையா என்று தெரிந்தால்தான் செய்ய முடியும் என்று பொறியியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் இதே பதிலைத்தான் கொடுத்துக் கொண்டு வருகிறார்களே தவிர, 5 ஆண்டுக்காலம் முடிந்தும்கூட, அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து, அங்கு புதிய கால்வாய்களை வெட்டி, அங்குள்ள ஏரிகளுக்குத் தண்ணீர் கொடுக்கலாம் என்ற எண்ணம் இதுவரையில் ஏற்படவில்லை. இதுபற்றி கவனிக்க வேண்டுமென்று மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்தால், பல ஏரிகளுக்கு, அங்கே தண்ணீர் கிடைக்கும். தண்டேகரை ஹள்ளி பல்லேன் அள்ளி என்கிற ஏரிகளுக்கு இந்த நீர்த் தேக்கத்திலிருந்து நிரந்தரமாகத் தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே உபரி தண்ணீரைத்தான் கேட்கிறோம். அந்த உபரித் தண்ணீரை எங்களுக்குத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் பல ஏரிகள் மேட்டுப் பகுதியில் உள்ளதால், எப்போதுமே தண்ணீர் கிடைப்பதில்லை. ஒரு கால்வாய் வெட்டித் தந்தால் அங்கே 15 ஏரிகளுக்குத் தண்ணீர் தவறாமல் கிடைக்கும். அப்படிப்பட்ட நிலைமையில் நாங்கள் பலமுறை கேட்டிருந்துங்கூட, அதை அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிபாரிசு செய்துங்கூட, இன்னும் பொதுப் பணித் துறையினர் அதை எடுத்துக்கொள்ளவில்லை. அந்த நீர்த் தேக்கத்திலுடைய தண்ணீர் அவர்களுக்குக் குறையாமல், அந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான அளவு கிடைத்தது போக, உபரியாகும் தண்ணீரை அந்தப் பழைய ஏரிகளுக்கு கால்வாய்கள் மூலம் கொடுத்தால், வறட்சி என்ற நிலைமை இல்லாமல், போதுமான தண்ணீர் அவர்களுக்குக் கிடைக்கும் என்பதைச் சொல்லி, அதைச் செய்துதர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மு. ப. முனுசாமி] [1984 ஏப்ரல் 24

அதே மாதிரி தும்பலஅள்ளி என்று புதிதாகக் கட்டப்பட்டிருக்கிறது. இன்னுங்கூட முடியவில்லை. ஆனால், வறட்சி நிவாரண வேலையிலே 10 ஏரிகளுக்குக் கால்வாய் மூலம் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் அங்கு தண்ணீர் அதிகமாக வந்தால்தான் தண்ணீர் எடுக்க முடியும் என்று பொதுப் பணித்துறையினர் சொல்கிறார்கள். இந்த ஆண்டு 28 அடிக்கு மேல் தண்ணீர் நிற்கிறது. பூரா தண்ணீரும் கீழே வடிகிறது. இப்படிப்பட்ட வறட்சி நிலையில், கால்வாய் வெட்டப்பட்டிருந்தால், 10 எரிகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். அது மேடாக இருக்கிற பிரதேசமானதால், எந்த ஏரிகளுக்கு தண்ணீர் வரக்கூடிய அளவுக்கு எந்தக் காட்டாறும் இல்லை. இப்படிப்பட்ட காட்டாறுகள் இல்லாததால் தான் நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், அந்தப் பகுதியில் இருக்கிற ஏரிகளுக்கு இப்படிப்பட்ட நீர்த்தேக்கத்திலிருந்து கொடுத்தால் தான் உதவியாக இருக்கும். கீழ்ப் பக்கத்தில் இருக்கிற ஏரிகளுக்கு நிரந்தரமாக தண்ணீர் கொடுக்க வேண்டுமென்றால் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் தான் முடியும். இல்லையென்றால் அதை நல்லமுறையில் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட பகுதிகளில் விவசாயிகள் நல்ல பலன் பெறுகிற வகையில் இந்த நீர்த்தேக்கத்திலிருந்து புதிய கால்வாயை வெட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிருஷ்ணகிரி வட்டதில் சில பணிகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டிருந்தும் கூட இன்னமும் அந்த வேலைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இப்போது ஒதுக்கப்படுகிற இந்த மூலதனச் செலவிலே அந்தப் பணிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். தர்மபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகும். எப்போதும் அது பின்தங்கிய மாவட்டமாக இருக்கக் கூடாது. அந்த நிலையை மாற்றுகிற அளவிலே திட்டங்களை மேற்கொள்ளவேண்டும். அங்கே விவசாயம் செய்யக் கூடியவர்கள் 100-க்கு 70 பேர்கள் இருக்கிறார்கள். அந்த விவசாயிகள் இருக்கிற இடத்தில் புதிய திட்டங்களைப் போட்டு, விவசாயத்தை நல்லமுறையில் செய்தால்தான் விவசாயிகள் முன்னேற்றம் அடைய முடியும், விவசாயிகள் மானாவாரியாக இருக்கிற நிலத்தை நம்பி வாழாமல், நீர் இறைத்து அதிலேயிருந்து விவசாயம் செய்யக்கூடிய முறையிலே செய்தால் தான் அவர்கள் வாழ்வு வளம் பெறும். நீர்த்தேக்கத்திலிருந்து புதிய கால்வாயை வெட்டிக்கொடுத்தால் தான் அவர்கள் நல்லமுறையில் விவசாயம் செய்ய முடியும். அதுபோன்ற திட்டத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 ஏப்ரல் 24] [திரு. மு. ப. முனுசாமி]

அதேபோல் நிலத்தடி நீர் இப்போது மிகவும் கீழே போய் விட்டதாக வல்லுநர்கள் சொல்கிறார்கள். நிலத்தடி நீர் கீழே போகாமல் இருப்பதற்காக இப்போது. கசிவு நீர்க்குட்டைகள் கட்டப்படுகின்றன. அப்படி கட்டப்படுகிற குட்டைகள் போதாது. இன்னும் பல குட்டைகள் கட்டப்பட வேண்டுமென்றும் அதற்காக இன்னும் அதிகமாக பணம் ஒதுக்கப்பட வேண்டுமென்றும் கேட்டும்கூட அரசிடம் இருந்து போதிய பணம் கிடைக்கவில்லை. இந்த ஆண்டிலும் கூட மிகவும் குறைவாகவே பணம் கிடைத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தக் கசிவு நீர்க்குட்டைகளைக் கட்டுவதற்கு இன்னும் அதிகமான நிதி ஒதுக்கீட்டைச் செய்யவேண்டும். அப்போது தான் நிலத்தடி நீர் கீழே போகாமல் இருக்க வாய்ப்பாக இருக்கும். ஆகவே அதைச் செய்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தம்பைநல்லூர் பகுதியில் இருக்கிற ஏரிக்கு கால்வாய் வெட்டித்தர வேண்டுமென்று பொதுப்பணித்துறையிடம் நான் மூன்று ஆண்டுகளாகக் கேட்டு வருகிறேன். அந்தக் கால்வாய் வெட்டினால் யாரோ ஒரு நிலப்பிரபுவின் நிலத்தில் 10 செண்ட் நிலம் போகும் என்று ஆட்சேபணை செய்ததன் காரணமாக அரசாங்கம் அதை எடுக்காமல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்த தம்பைநல்லூர் ஏரிக்குச் செல்லக்கூடிய கால்வாய் புலாப்பட்டி ஆற்றிலேயிருந்து வருகிறது. அது ஏற்கெனவே வெட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலிருந்து தண்ணீர் சரியானமுறையில் அந்த ஏரிக்குச் செல்ல முடியாமல் இருக்கிறது. ஆகவே புதியதாக ஒரு அணையைக் கட்டி அந்த ஏரிக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டு ஆண்டுகளாக இதுகுறித்து கேட்டும் அரசு கவனிக்கவில்லை. ஆகவே உடனடியாக இதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காவேரிப்பட்டினம் பிர்க்காவில் ஓடமங்கலம் தாலூக்காவில் ஓட்டப்பட்டி ஏரி என்று இருக்கிறது. அந்த ஏரியிலிருந்து புதிய கால்வாய் வெட்டினால் இரும்பத்தூர் ஏரிக்கு நிரந்தரமாகத் தண்ணீர் கொண்டு போகமுடியும். பொதுப் பணித்துறையிடம் பலமுறை கேட்டும் கூட அந்தத்துறை அதைச் செய்யவில்லை. நாங்கள் கேட்பது எங்களுடைய வசதிக்காக அல்ல. அந்தப் பகுதி மக்களுக்கு நிரந்தரமாக தண்ணீர் கிடைக்க, அவர்கள் நல்லமுறையில் பாசன வசதி பெறுவதற்காகத் தான் கேட்கிறோம். ஆகவே அந்தத் திட்டத்தை மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வதற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பலமுறைகள் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டும் கூட இன்னும் எடுத்துக்கொள்ளப் படாமல் இருக்கிறது.

அதேபோல ஹோசூர் தாலூக்காவில் அன்சட்டி பிர்க்காவில் அக்கம்மாள் ஏரி என்று ஒரு பெரிய ஏரி 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படுகிறது. இவைகளுக்காக ஒதுக்கப்படுகிற நிதி ஒதுக்கீட்டை அதிகரித்து பின்தங்கிய மாவட்டமான எங்கள் மாவட்டத்தில் முழுமையான கவனம் செலுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. மு. ப. முனுசாமி) [1984 ஏப்ரல் 24

(முற்பகல் 11-20)

பெண்ணாகரம் பக்கத்திலே நாகவல்லி அணை கட்டப்படுகிறது. அதன் மூலம் பாளையம்புதூர் என்ற இடத்திற்கு வாய்க்கால் அமைத்து தண்ணீர் பாய்ச்ச முடியும். ஆகவே, அந்த வேலையைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒசூர், வட்டத்தில் கெலவரலபள்ளி என்ற நீர்த்தேக்கம் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. ஏறத்தாழ 3 கோடி ரூபாய் அளவிற்கு அதற்காக நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. 1980-ம் ஆண்டு சட்டமன்றத்தில் அது பற்றி அறிவிக்கப்பட்டு இருந்தும்கூட, உயர்நீதி மன்றத்தில் யாரோ ஒரு தனிப்பட்ட நபர் வழக்குத்தொடுத்து ஸ்டே வாங்கிவிட்டதால் அந்தப் பணி இன்னும் முடிவுறாமல் இருக்கிறது. அந்த வழக்கு இன்னும் முடியவில்லை என்று சொண்டுகொண்டு சொல்லிக்கொண்டு இருந்தால் போதாது. அதற்காக ஏற்கனவே 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்வதால் மட்டும் பயன் இல்லை. அந்த நிலங்களை எடுக்கிறபோது ரெவின்யூ இலாகா ஏன் இதன் மீது சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. தனிப்பட்ட முறையில் ஒருவர் வாங்கியுள்ள ஸ்டேயை ரத்து செய்ய அரசு ஏன் 3 ஆண்டுகாலம் ஆகியும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, அந்தத் தடையை விரைவில் உடைத்து எறிந்து அந்த அணை வேலையை உடனடியாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விரைவில் அந்தப் பணியை முடிக்கவேண்டும் என்று கேட்டு, இந்த மானியக்கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய துணை மாற்றுத் தலைவருக்கு நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களால் இந்த அவை முன் கொண்டுவரப்பட்டு இருக்கும் நீர்ப்பாசனத்துறை மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 3 விதமான நீர்ப்பாசனங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றன. கிணற்றுப் பாசனம், கால்வாய்ப் பாசனம், குளத்துப் பாசனம், அந்தப் பாசனங்கள் மூலமாக தமிழகத்தில் உள்ள சர்பேஸ் வாட்டர், நிலமேற்பரப்பு நீர், சப்-சாயில் வாட்டர், கிரௌண்ட் வாட்டர் (நிலத்தடிநீர்) ஆகியவற்றையெல்லாம் நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம் என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழகத்தில் இருக்கிற தண்ணீரில் 90 விழுக்காடு பாசன வசதிகளை நாம் பயன்படுத்தி வருகிறோம். அதன் காரணமாக இந்த ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட 28 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் 70 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பரப்புள்ள நிலங்கள் பாசனம் மேலும் தண்ணீரைப் பெற்று இருக்கிறது என்பதை நான் இங்கே



1984 ஏப்ரல் 24] [திரு. கே. குப்புசாமி]

குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தின் விவசாய வளர்ச்சியை ஒட்டித்தான் பொருளாதார முன்னேற்றம் அடைய முடியும். அதற்கு காவிரி நீர்ப்பாசனம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

1924ஆம் ஆண்டில் அன்றைய மைசூர் அரசுக்கும் சென்னை ராஜதானியாக இருந்த அரசுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் 50 ஆண்டுகளுக்கு என்று இருந்தாலும், 50 ஆண்டுகளுக்குப் பின்னால் அது காலாவதி ஆகிவிட்டது என்பது சர்வதேச விதிகளுக்கு, சர்வதேச நியதிகளுக்கு, அரசியல் சட்டத்திற்கு முரணானது என்பதை சட்ட நிபுணர்களே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உயர்நீதிமன்ற நீதிபதிகள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர், வின்சென்ட் அவர்கள் பேசும்போது கூட அதை எடுத்துச் சொன்னார்கள்.

1924 ஆம் ஆண்டிலே அந்த ஒப்பந்தம் ஏற்பட்டபிறகு தமிழகம் 60 விழுக்காடு தண்ணீரையும், கர்நாடகம் 40 விழுக்காடு தண்ணீரையும் பயன்படுத்திக்கொண்டு வந்த நிலைமை இருந்தது. அதற்குப் பின்னாலே கருநாடக அரசு ஹேமாவதி, ஹேரங்கி ஆகிய அணைகளை காவிரியின் குறுக்கே கட்டி, தமிழகத்திற்கு வரும் தண்ணீரைத் தடுத்து நிறுத்தும் நிலையை ஏற்படுத்தினார்கள். இதை எதிர்த்துத்தான் அன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த திராவிட முன்னேற்றக்கழக அரசு உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடர்ந்தது. அந்த உச்ச நீதிமன்ற வழக்கு தொடர்ந்து நடத்தப்பட்டு இருக்குமேயானால் இன்றைக்கு தமிழகத்திற்கு நிச்சயமாக நியாயமான ஒரு முடிவு காவிரி பங்கீட்டில் கிடைத்து இருக்கும். ஆனால் என்ன காரணத்தாலோ, தி.மு.க. ஆட்சியில் அந்த நிலை ஏற்படாத வகையில், உச்ச நீதிமன்றத்தில் தி.மு.க. ஆட்சியால் போடப்பட்ட அந்த வழக்கு வாபஸ் வாங்கப்பட்டது. அந்த வழக்கை வாபஸ் வாங்கியதற்கான காரணம் நமக்குத்தெரியவில்லை. அந்த வழக்கு வாபஸ் வாங்கப்பட்டது தவறு என்று நாம் இன்றைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இப்போது நாம் டிரிபியூனலுக்கு அந்த வழக்கை எடுத்துச் சென்றாலும், உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கை நாம் வாபஸ் வாங்கிவிட்டதால், அந்த வழக்கு முடிவதற்கு எத்தனை ஆண்டுகாலமாகும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அந்த வழக்கை வாபஸ் வாங்காமல் இருந்தால் இந்த நேரம் தமிழ்நாட்டுக்கு சாதகமாக, ஒரு நியாயமான முடிவை நாம் பெற்றிருக்க முடியும். ஏன் வாபஸ் வாங்கினார்கள் என்பதை எனக்குப் பின்னாலே பேசுகின்ற திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்கள் விளக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடகத்தைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் 8 இலட்சம் ஏக்கர்தான் காவேரி தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தி வந்தார்கள். நாம் கிட்டத்தட்ட 28 இலட்சம் ஏக்கர்

பரப்பளவுக்கு காவேரி நீரை பாசனத்திற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இருக்கிற தண்ணீரை வீணாக்காமல், தேவையான அளவுக்கு, சிக்கனமான முறையில் சேமித்துவைத்து, பயன்படுத்திவருகிறோம். நமக்குக் கிடைக்கிற தண்ணீரை இருக்கிற தண்ணீரை வீணாக்காமல் குளங்கள், குட்டைகள், அணைகள், தடுப்பு அணைகள் மூலமாக சேமித்துவைத்து தமிழக அரசு பயன்படுத்தி வருகிறது. 28 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு பாசனம் செய்வதைப் பார்த்த கர்நாடகம் இன்றைக்கு 8 இலட்சத்திலிருந்து 28 இலட்சம் ஏக்கர் என்ற அளவுக்கு பாசனப் பரப்பை விரிவுபடுத்தியிருக்கிறது. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது, ஆகவே, கர்நாடகத்தை தமிழகம் தட்டிக் கேட்க முடியாது என்று சொல்லி நமக்கு வரக்கூடிய தண்ணீரை நிறுத்துநிறுத்தியது மட்டுமல்லாமல் வழிந்து ஓடுகிற தண்ணீரையும் நிறுத்துநிறுத்துவதற்காக 290 கிலோ மீட்டர் அளவுக்கு வாய்க்கால் வெட்டும் வேலை நடத்துவருகிறது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், வாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும், அந்த உடன்பாடு காலாவதியாகிவிட்டது என்றாலும், 'ரைப்பேரியன் ரைட்' இருக்கிறது. அடிமடை, கடைமடை என்று சொல்வார்கள். அடிமடையில் இருக்கிறவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறதோ அதே உரிமை கடைமடையில் இருக்கிறவர்களுக்கும் உண்டு. ஏற்கெனவே இருந்து வந்த ரைப்பேரியன் ரைட் என்று சொல்கின்ற அந்த உரிமை இருக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கூட இந்த ரைப்பேரியன் ரைட் சம்பந்தமாக பிரச்சனை வந்தபோது இந்த ரைப்பேரியன் ரைட் செல்லுபடியாகும் என்று சொல்லி இருக்கிறார்கள். எனவே காவேரி உடன்பாடு காலாவதியாகி விட்டாலும், ரைப்பேரியன் ரைட் என்ற அடிப்படையில் ஏற்கெனவே நாம் பயன்படுத்திவந்த தண்ணீரைத் தருவதற்கு கர்நாடகம் கடமைப்பட்டிருக்கிறது; அந்த உரிமையைத் தடுக்க முடியாது. இப்படிப்பட்ட ஒரு நிலைமையில்தான் வழிந்தோடுகின்ற சர்ப்ளஸ் வாட்டரையும் தடுத்து நிறுத்துவதற்காக 290 கிலோமீட்டர் அளவுக்கு அவர்கள் கால்வாய் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாக தடுத்து நிறுத்த வில்லை என்றால் பிறகு தமிழ்நாட்டுக்கு வருகிற சர்ப்ளஸ் வாட்டர் கூட வராமல் தஞ்சை பாலையாகக்கூடிய நிலைமை நிச்சயமாக ஏற்பட்டுவிடும். பேச்சுவார்த்தை என்ற பெயரால் இதுவரை காலம் கடத்தி, அணைகள் கட்டி ஏற்கெனவே வந்து கொண்டிருந்த தண்ணீரை தடுத்து நிறுத்திவிட்டார்கள். மேலும் வாய்க்கால் வெட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கால்வாய் பணியும் முடிந்துவிட்டால் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் அறவே வராத நிலை ஏற்படும். எனவே இந்தப் பேச்சுவார்த்தை உடனடியாக முடிக்கப்பட வேண்டும். இல்லை என்றால் டிரிபியூனலுக்கு அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை. டிரிபியூனலுக்கு அனுப்பினால் தமிழ்நாட்டுக்கு நிச்சயமாக நியாயம் கிடைக்கும். தமிழ்நாட்டுப் பக்கம் நியாயம் இருக்கிறது; வெற்றி கிடைக்கும். எனவே டிரிபியூனலுக்கு அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.





'ஃபாக்ட் பைண்டிங் கமிட்டி' பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென் அவர்கள் குறிப்பிட்டார்கள். மத்திய அரசு காவேரி நதிநீரை பயன்படுத்தும் முறையைக் கண்டறிய ஒரு குழுவைப் போட்டது. அந்தக் குழுவின் அறிக்கை ஓரளவுக்கு தமிழகத்திற்கு சாதகமாக வந்திருக்கிறது. அந்தக் குழு உண்மையை எடுத்துச் சொல்லியிருக்கிறது. அந்தக் குழுவின் அறிக்கையை கர்நாடக அரசு வன்மையாகக் கண்டித்திருக்கிறது. அந்தக் குழுவின் அறிக்கை அடிப்படையில்தான் பேச்சுவார்த்தை நடக்கிற சூழ்நிலை இருக்கிறது. விரைவிலே பேச்சுவார்த்தையில் முடிவு ஏற்படவில்லை என்றால் அந்த ஃபாக்ட் பைண்டிங் குழு ரிப்போர்ட் அடிப்படையில் டிரிபியூனலுக்கு அனுப்ப நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கேரளத்திலிருந்து மேற்கு நோக்கி ஓடி வீணாக கடலிலே கலக்கும் தண்ணீரை தமிழ்நாட்டுக்கு திருப்பி விட நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்கு நோக்கி ஓடுகிற ஆறுகளை திருப்பிவிட்டால் கிட்டத்தட்ட 47 டி.எம்.சி. தண்ணீர் நமக்குக் கிடைக்கும். அதாவது 600 எம்.சி.எம். வாட்டர் கிடைக்கும் வழிவகை இருக்கிறது. மத்திய அரசு நியமித்த வல்லுநர் குழு இதை அறிவித்திருக்கிறது. 600 எம்.சி.எம். வாட்டர் இருக்கிறது. அதை திருப்பிவிட்டால் தமிழ்நாட்டில் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், பழனி, ஒட்டன் சத்திரம், ஆத்தூர், இராமநாதபுரம் ஆகிய வறண்ட பகுதிகள் எல்லாம் வளம் பெறும் நிலைமை உருவாகும். இதையும் பேச்சு வார்த்தை என்று சொல்லி, காலம் கடத்தாமல் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கேரள அரசு இன்னும் பேச்சு வார்த்தைக்கே இணங்கவில்லை. அதனால் தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தி, மத்திய அரசு நேரிடையாக இதில் தலையிட விரைந்து ஏற்பாடு செய்யவேண்டும். அப்படியானால்தான் மேற்கு நோக்கி வீணாகச் செல்லும் நீரை தமிழ்நாட்டுக்குப் பயன் படுத்தும் வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அடுத்து வளைகுடா நதிகளின் இணைப்பு பற்றி எடுத்துக் கொள்வோம். காவிரி இணைப்பு பற்றி நீண்டகாலமாக பேசப் பட்டு, அது ஒரு கனவாக ஆகிவிட்டது. அதையொட்டி ஒரிஸ்லாவில், ஓடுகிற மகாநதி, ஆந்திரத்திலே ஓடுகிற கோதாவரி ஆகிய இரண்டு ஆறுகளிலும், வெள்ளப் பெருக்கினால், ஆண்டு தோறும் ஏராளமான தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது. இந்த இரண்டு நதிகளின் உபரி நீரையும், கிருஷ்ணா நதி, பெண்ணாறு, காவிரி, தாமிரபரணி, வைகையோடு நாம் இணைப்போமேயானால், இந்த நதிகளிலே பெருகிவரும் தண்ணீர், வறட்சி நிறைந்த தமிழகத்தின் பகுதிகள் வளம் பெறுவதற்கான வாய்ப்பாக நிச்சயமாக ஏற்படும். அதற்காக National water

Development Agency என்ற நீர் நிலை முன்னேற்ற அமைப்பு என்ற ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தி இருக்கிறது. இதிலே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கூட உறுப்பினராக இருக்கிறார்கள். இருந்தாலும் இந்தக் குழுவின் வேலை இன்னும் மந்தமாக இருக்கிறது என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. இந்தக் குழுவும், சேலம் இரும்பு ஆலையைப் போல, சேது சமுத்திர ப்ராஜெக்டைப் போல, கரூர்–தூத்துக்குடி அகல ரயில் பாதை போல இங்கே கிடப்பிலே போடப்படாமல் உடனடியாக செயல்படுத்திக் கொடுக்கின்ற நிலையை தமிழக அரசு வற்புறுத்தி மைய அரசை செயலில் ஈடுபடச் செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தேசிய நதிகளை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற வட மாநில நதிகளில் 10 நதிகளை தேசிய நதிகளாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது. அதில் மகாநதி, கங்கை, பிரம்மபுத்திரா, ஹூக்ளி, கோதாவரி, கிருஷ்ணா ஆகிய நதிகள் இருக்கின்றன. ஆனால் இங்கே பிரச்சினைக்குட்பட்ட—தமிழகம் எதை நோக்கிக் கொண்டிருக்கிறதோ, எந்தக் காவிரி பிரச்சினையை முக்கியமாக கருதிக் கொண்டிருக்கிறதோ,— அந்தக் காவிரி இந்த தேசிய நதிகளில் இல்லை. இந்தத் தேசிய நதிகளில் காவிரி இருக்குமானால், கர்நாடக அரசை பணியவைப்பதற்கு மத்திய அரசிற்கு வாய்ப்பிருந்திருக்கும். ஆனால் என்ன காரணத்தினாலோ காவிரி தேசிய நதியாக அறிவிக்கப்படவில்லை. இந்த நிலையில் Inland Water Ways Authority என்ற ஒன்றை தொடங்கி மத்திய அரசு இப்போது சட்டமாகக் கொண்டுவர முடிவு செய்திருக்கிறது. அதாவது தேசிய நதிகளில் நீர்வரத்தைப் பிரிப்பது, பயன்படுத்துவது, அதை முறைப்படுத்துவது என்பதற்காக, Inland Water Ways Authority என்ற ஒன்றை ஆரம்பிப்பதற்கு சட்டம் அங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது நான் ஏன் அதை சொல்கிறேன் என்றால், வட இந்திய நதிகளிலுள்ள நீரை முறைப்படுத்த மைய அரசு முனைப்பு காட்டுகிறது. ஆனால் அதே நேரத்தில், தென்னிந்தியாவில், தமிழகம் வறண்டு வருகிற நேரத்தில், காவிரியைப் பொறுத்தவரையில், கர்நாடக அரசுடன் பிரச்சினைகள் ஏற்படுகின்ற நேரத்தில், அதைத் தடுத்து நிறுத்தும் வகையில் காவிரியை தேசிய நதியாக ஆக்கவில்லை. மற்ற வட மாநிலங்களிலுள்ள நதிகளை ஆக்கிவிட்டு, Inland Water Ways Authority ஆரம்பிப்பதிலே என்ன பயன் என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

காவிரிப் பிரச்சினையை, மேற்கு நோக்கிப் பாயும் நதிகளை தமிழகத்தை நோக்கித் திருப்புகின்ற பிரச்சினைகளில் முயற்சி எடுத்து, அக்கறை காட்டாமல், மத்திய அரசு தேசிய நீரோட்டம், தேசிய ஒருமைப்பாடு என்று தமிழர்களுக்கு உபதேசம் செய்வது வேடிக்குரிய ஒன்றாகும். அதுவே பிறகு கேள்விக்குறியாக மாறிவிடும் என்பதை நான் இந்த நேரத்தில் மெத்த பணிவோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை மைய அரசோடு சேர்ந்து பேசி, தமிழகத்திற்கு ஒரு சாதகமான நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் வற்றாத ஜீவநதிகள் இல்லை. வானம் பார்த்த பூமிகள்தான் அதிகம். பருவமழையும் ஆண்டுக்காண்டு பொய்த்து வருகிறது. இந்த நிலையில் அப்போதைக்கப்போது பெய்கிற மழைநீரை, சிறு குட்டைகள், நீர்ப்பாசன குளங்கள், சிறிய சிறிய நீர்த்தேக்கங்கள், அணைகள் அமைத்து, தமிழகத்தை வளமாக உருவாக்கி வருகிறது நம்முடைய அரசு. அதற்காக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிடைக்கின்ற நீரை விஞ்ஞான ரீதியில் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறையில், வழிவகைகளைக் கண்டாக வேண்டும். சின்னஞ்சிறு இஸ்ரேலில் வேளாண்மைத் துறை பிரமிக்கத் தக்க முன்னேற்றம் அடைந்திருக்கிறது. Lift Irrigation. Sprinkler Irrigation என்ற பாசன முறைகளை எல்லாம் தமிழ்நாட்டிலே பயன்படுத்த முடியுமா என்பதை எல்லாம் ஆராய்ந்து, தமிழகத்திலே ,பயன்படக்கூடிய இந்த விவசாய முறைகளை இங்கேநடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு விரிவான ஆய்வுகளை நடத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஆனால் இப்போது கால்வாய்களை பெரிய விவசாயிகள் சிறிய விவசாயிகளுக்கு. மடை அடைத்து தண்ணீர் விடுவது இல்லை. அவர்களே முழுவதுமாக பாய்ச்சிக் கொள்கிறார்கள்.

அதேபோன்று அணைகளில் தண்ணீர் திறந்துவிடுகிற அதிகாரம் பொதுப்பணித் துறைக்கு இருக்க வேண்டும். தண்ணீர் இருக்கிறது என்று சொல்கிற அதிகாரம் பொதுப்பணித்துறைக்கு இருக்கிறது. ஆனால் அதை திறந்துவிடுகிற அதிகாரம் ரெவின்யூத் துறைக்கு இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் உள்ள பரப்பலார் அணையிலிருந்து தண்ணீர் விடக்கூடிய அதிகாரம் பொதுப்பணித் துறையிடம் இல்லை. அது ரெவின்யூ துறையிடம் இருக்கிறது. தண்ணீர் தேவைப்படுகின்ற காலத்தில், பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி, கேட்டு, தண்ணீர் திறந்து விடுவதற்காக அலைச்செய்வததால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே இந்த இரட்டை முறையை, டுயல் சிஸ்டத்தை ஒழித்து விட்டு, ஒரே முறையில் பொதுப்பணித் துறையிலே இந்த ஒப்படைக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சில அணைகள் கட்டுவதற்கான பணிகள் ஆய்வு நிலையில் உள்ளன. அந்த ஆய்வுகள் எல்லாம், பொருளாதார ரீதியிலே சாத்தியப்படாதவைகளாக இருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் பெரும்பகுதி பரப்பளவு நிலங்கள் எல்லாம், பொருளாதார ரீதியிலே கடைசி நிலையில்தான் இருக்கின்றன. ஆனால் அந்தப் பகுதியினுடைய பின்தங்கிய நிலையைக் கணக்கில்

(திரு. கே. குப்புசாமி) [1984 ஏப்ரல் 24

எடுத்துக்கொண்டு, அந்தப் பகுதியினுடைய மக்களுடைய வருமானத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்த திட்டங்களை எல்லாம், பொருளாதார ரீதியிலே சாத்தியப்படாத, அதாவது பெனிபிட்—காஸ்ட் ரேசியோ என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். அந்த பெனிபிட் காஸ்ட் ரேசியோ என்ற அதைக் கைவிட்டு, பொருளாதார ரீதியில் பின்தங்கிய பகுதிகளுக்கு அந்தத் திட்டங்களை எல்லாம் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், நங்காச்சி என்ற அணை, அந்த அணையிலே, இப்போது ஆய்வு நடத்து கிட்டத்தட்ட 7,500 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி பெறுகிற அளவில் ஆய்வுகள் முடிந்து அரசு அறிக்கை தயார் செய்து கொண்டு இருப்பதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அறிக்கை, அறிக்கையோடு நின்றுவிடாமல், அந்த அறிக்கை திட்டமாக வருவதற்காக, துறை ஒத்துழைக்க வேண்டும் என்றும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமான ஓடை, நல்ல தங்காள் ஓடை, என் தொகுதியிலே உற்பத்தியாகி என் தொகுதியிலே செல்லுகிறது. எனவே அதிலே கட்டுகின்ற அணையினுடைய தண்ணீர் பெரும் பகுதி மூன்றிலே இரண்டு பகுதி என்னுடைய தொகுதியில் செல்லுகின்ற காரணத்தால் என்னுடைய தொகுதி வறட்சியாக இருக்கின்ற காரணத்தால், இந்த அணையை எங்கள் பகுதியிலே கட்டவேண்டும். அங்கே அணை கட்டப்பட்டாலும், மூன்றிலே இரண்டு பங்கு தண்ணீர், ரைப்பேரியன் ரைட்டுப்படி, அந்த தண்ணீரை ஒட்டன்சத்திரத்தில் உள்ள தொப்பம்பட்டிக்கு கிடைக்கிற வகையில் அந்த அணையை அமைப்பதற்குரிய வகையில் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெருமாள்கோவில் அணைக்கட்டு என்று ஒன்று இருக்கிறது. இந்த அணைக்கட்டு அரசால் கிட்டத்தட்ட ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் வந்திருக்கிறது. இது சிறந்த திட்டம், உகந்த திட்டம் என்று அரசாலே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். மாவட்ட ஆட்சித் தலைவருடைய கன்கரன்சுக்காக நிறுத்தி வைப்பது என்பது முறையாகாது. இந்த கன்கரன்ஸ் முறையை கைவிட்டு, இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால், ஒட்டன்சத்திரத்திற்கு குடிநீர் பிரச்சனை தீரும். ஒட்டன்சத்திரத்திலுள்ள வறண்ட குளங்களுக்கும் தண்ணீர் கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று அங்கே விருப்பாச்சி பகுதியிலே பெருமாள்குளம் என்ற ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளத்திலிருந்து ஒரு வாய்க்காலை வெட்டி, அங்கே இருக்கிற பல குளங்களுக்கும்,



1984 ஏப்ரல் 24] [திரு. கே. குப்புசாமி]

வீரமல்லா குளம், பாப்பான் குளம், பெரியகுளம் ஆகிய குளங்களுக்கும், அதனுடைய உபரி நீரை வாய்க்கால் மூலமாக கொண்டு செல்கிற ஆய்வு முடிந்திருக்கிறது. எனவே அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என் தொகுதியிலே உள்ள புதியமரத்துக் கோட்டைக்கு மேற்கில் உள்ள கருமலையில் இருந்து வரும், புலிக்குண்டு ஓடை, கத்தியுத்து ஓடை, குளிங்குடத்து ஓடை, கன்னிமார் ஓடை ஆகிய 4 ஓடைகளைத் தடுத்து, கோவில்பாறை என்ற இடத்திலே நீர்த்தேக்கம் கட்டினால், அந்தப் பகுதியிலே உள்ள வறண்ட நிலங்கள் எல்லாம் வளம் பெறுவதோடு, வறண்ட கிணறுகளுக்குத் தண்ணீர் கிடைக்கும் என்பதால், அந்த நீர்த்தேக்க ஆய்வை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நீர்ப்பாசனத் துறையை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று முத்துநாயக்கன்பட்டிக்கு மேற்குப் பகுதியிலே உள்ள தேவர் மலையிலிருந்து வரும் காட்டுஓடை என்ற ஓடையைத் தடுத்து, பாசனக்குளம் அமைத்துத்தந்தால், அந்தப் பகுதி வறண்ட பகுதியாக இருப்பது மீண்டும் வளம் பெறுகிற நிலைமைக்கு நிச்சயமாக வரும், எனவே அதை நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சில சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுக்குப் பேச வாய்ப்பில்லாத நிலையில் சில செய்திகளைக் கொடுத்திருக்கிறார்கள். திண்டுக்கல் வட்டம், ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் சோப்பாநாயக்கன் கோம்பைத்திட்டம், கீழ்க்கோம்பைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக வைக்கப்பட்டுள்ளது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வெள்ளைச்சாமி அவர்கள் கடந்த பல மாதங்களாக இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று துறையையும், அமைச்சர் அவர்களையும் வற்புறுத்தி வருகிறார்கள். அவர்களுடைய கணிப்புப்படி, கோப்புகள் நகருகின்றதே தவிர, திட்டங்கள் நகரவில்லை என்ற குறைபாடு இருக்கின்றது. அந்த நிலையை மாற்றி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கடைசியாக, திருவரம்பூர் தொகுதி, புதுக்களத்துக் கட்டளை என்ற வாய்க்கால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. அந்த வாய்க்காலில், கால்நடைகளுக்கும், மற்றும் சிறு விவசாயிகளுக்கும் தண்ணீர்விட அரசையும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் கேட்டு, அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

6. அறிவிப்புகள்

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய மானியக் கோரிக்கை மீது விவாதத்தில் பங்கு கொள்வதற்கு அதிக அளவில் மாண்புமிகு உறுப்பினர்கள் விழைவதனாலும், கட்சித் தலைவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும் பேரவைக் கூட்டம் இன்று பிற்பகல் 4.00 மணி முதல் 7.00 மணி வரையில் கூடும் என்பதை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.40)

5. வரவு-செலவுத் திட்டம் 1984–85—விவாதம்—(தொடர்ச்சி)

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, வடகிழக்கு, தென்மேற்கு பருவமழையை நம்பி இருக்கக்கூடிய தமிழகத்தில் குளம், கிணறு கால்வாய்களுக்கு பாசனம் செய்வது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருப்பது, 'தமிழ்நாட்டில் நிலநீர் வளத்தில் 90 விழுக்காட்டிற்கு மேல் உபயோகப்படுத்தப்பட்டு விட்டதாக,' சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரு ஆய்வு அறிக்கை சொல்கிறது—"In the case of surface Water resources which has an ultimate potential of 65.33 million hectare meters, the utlisation has been about 36%, If we compare all the States, Tamil Nadu has the highest rate of utlisation, 62.4% followed by Andhra Pradesh, Punjab, Orissa and other States. ஆக ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது 62.4 சதவீதம் என்பது. ஆனால் 90 சதவீதம் பயன்படுத்தப் பட்டிருப்பதாக இதிலே சொல்லியிருப்பது எந்தவிதத்தில் பொருத்தமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கிற மிக முக்கியமான பிரச்னை என்னவென்றால், விஞ்ஞான ரீதியாக சிக்கனமாகத் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான். அதுவும் குறிப்பாக வறட்சி பகுதிகளில் இந்த சிக்கன நீர்பாசனங்கள் மிகமிக அவசியமானது. இதைப்பற்றி அந்த ஆய்வு அறிக்கையில் சொல்லப்படுவது என்னவென்றால் From the view point of dependability of irrigation during drought times, the irrigation system of Tamil Nadu is to be rated inferior



to that of Punjab. Tube wells, which are known to be most dependable during drought times, account for a small fraction (4%) of total state irrigation; the corresponding percentage in Punjab is around 55% என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆகவே சிக்கன நீர் பாசனத்தை இந்த டியூப் வெல் மூலமாக அல்லது லிஃப்ட் இர்ரிகேஷன் மூலமாக செய்ய முடியும் என்பது தான். தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆய்வு அறிக்கையில் சொல்லப்படுவது, 4 சதவீதம்தான் தமிழகத்தில் உபயோகத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள். பஞ்சாபிலே 55 சதவீதம் பயன்படுத்துகிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சிக்கன நீர்ப்பாசனத் திட்டத்தை இன்னும் தீவிரமாக அமல்படுத்தவேண்டியது அவசியம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல குவாலிட்டி என்ற வகையில் சிக்கனமாக பயன் படுத்துவதில், எவ்வளவு சரியானது என்பதைப் பற்றி இந்த ஆய்வு அறிக்கையில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் From the quality aspect, dugwell irrigation ranks high beeause it offers excellent scope for controlled application of water to crops and thus permit intensive agriculture with high crop yields that generate high farm incomes. என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே அளவுக்கு அதிகமான வருமானத்தை குறிப்பாக கமர்ஷியல் கிராப்ஸ் என்று சொல்லப்படுகிற வியாபார பொருள்களை உற்பத்தி செய்வதற்காக ஒரு நல்ல பாசன திட்டத்தை உருவாக்குவதற்கு இந்த லிப்ட் இர்ரிகேஷன் அல்லது கிணற்றிலிருந்து பம்ப் செட் மூலமாக தண்ணீர் ஏற்றுவதுதான் சிறப்பானது என்று ஆய்வு அறிக்கை சொல்லியிருப்பதை குறிப்பிட விரும்புகிறேன். அத்தோடு இன்றைக்கு பாசன நீரைப் பொறுத்தவரையில் பாதிக்கு மேல் விரயம் ஆகிறது அல்லது வீணாகிறது என்று ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

In fact much of the water is lost through seepage (owing to unlined canal system) and other means during conveyance. Seepage loss in the main canal and minor distributaries has been approximated as nearly half, so the effeetive water that is being delivered to the fields might be only half the canal outflow.

ஆகவே, வாய்க்கால்களில் விடக்கூடிய தண்ணீர் பாதிக்குமேல் விரயம் ஆகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நீக்குவதற்கு இன்றைக்கு லைனிங் செய்ய நாம் முயற்சிக்கிறோம். குறிப்பாக வெளிநாட்டிலிருந்து உதவிபெற்று இந்தப் பணியை நாம் செய்கிறோம். ஏற்கெனவே நிரந்தரமாக, பெர்மெனென்ட் சோர்ஸஸ் என்ற வகையில், பெரியார் போன்ற திட்டங்களுக்கு லைனிங் செய்யும் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், ஐ.ஈ.ஸி. மூலமாக பல கோடி ரூபாயை நாம் கடனாகப் பெற்று இந்தச் சிக்கன நீர் பாசனத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருக்கிறீர்கள். வரவேற்கத் தக்கது.

ஆனால் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்குப் பெரியார் பாசனத் திட்டத்தில் லைனிங் வேலைகள் மிகவும் தாமதமாகிறது என்று எனக்குக் கூறப்பட்டது. அங்கே ஒரு சீப் என்சினியர், 3 சூப்பிரண்டென்டிங் என்சினியர்கள் இருக்கிறார்கள். சீப் என்சினியர் சிமின்ட் சிலாப்ஸ் போடுவதையும் இன்னொரு எஸ்.இ. கட்டட வேலைகளைப் பார்ப்பதாகவும் இப்படிப் பணிகளைப் பிரித்துக் கொண்டு பார்ப்பதன் காரணமாக அந்த வேலைகளை முழுமையாகவும் வேகமாகவும் செய்யவில்லை என்று கூறப்படுகிறது. ஆகவே அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டுமென்று பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும் அதை தமிழக அரசு எந்த அளவுக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. நிலத்தடி நீர் நாட்டிலே சிறப்பான முக்கியமான அம்சமாக இருக்கிறது என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. சமுதாயக் கிணறுகள் மூலமாக ஆங்காங்கே உள்ள சிறு விவசாயிகள் பயன்பெறுகின்ற வகையிலே முழுமையாகப் பயன் அடையக்கூடிய வகையிலே திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால் ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியங்களால் போடப்பட்ட சமுதாயக் கிணறுகள் எல்லாம் ஒரு சில வசதி படைத்தவர்கள், நிலச்சுவான்தார்கள் நிலத்திலே வெட்டப்பட்டு அதன் காரணமாக சிறு விவசாயிகளுக்கு பயன்கிடைக்காத நிலைமை ஏற்பட்டதை நாம் பார்க்கிறோம். ஆகவே சமுதாயக் கிணறுகளை—பல லட்ச ரூபாய்கள் செலவானாலும்—பெரிய கிணறுகளாக வெட்டி சிறு விவசாயிகளுக்கு பயன் அளிக்கின்ற முறையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கிணறுகளுக்கு மின்சார இணைப்பு கிடைப்பது என்பது இப்போது குதிரைக்கொம்பாக இருக்கிறது. மிகவும் சிரமப்படுகிறார்கள். இங்கே சட்டமன்றத்திலே அதைப்பற்றிப் பல கேள்விகள் எழுப்பப்பட்டன. பம்புசெட்டுகளை வாங்கி வைத்து மின்சாரத்திற்காக பல்லாயிரக்கணக்கான பேர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குறைபாட்டைத் தீர்ப்பதற்கும் மின் இணைப்புக் கொடுப்பதற்கும்—மின் இணைப்புக் கொடுப்பது மின்சார வாரியமாக இருந்தாலும்—நீர்ப்பாசனத் துறையும் அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த கொள்கை குறிப்பிலே டியூப் வெல்ஸ் என்பதைப் பற்றியே குறிப்பிடவில்லை. தமிழகத்திலே டியூப் வெல்ஸ் கார்ப்பரேஷன் என்று இருக்கிறது. அந்த டியூப் வெல்ஸ் கார்ப்பரேஷனுடைய பணி என்ன? அதனுடைய செயல்பாடு



என்ன? அதனுடைய முன்னேற்றம் என்ன? இவைகளைப்பற்றி எந்தக் குறிப்பும் இதில் இல்லை. கொள்கை குறிப்பைப் பொறுத்த வரையில் டியூப் வெல்ஸ் கார்ப்பரேஷன் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. சிக்கனமாகவும் விஞ்ஞான ரீதியாகவும் தண்ணீரைப் பயன்படுத்தக் கூடிய முறையிலே இந்த டியூப் வெல்ஸ் நல்லது என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். ஆனால் அதைப்பற்றி எந்தக் குறிப்புமே இல்லையென்பது சரியல்ல, ஆகவே அதைப்பற்றி விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு Percolation ponds என்ற முறையிலே நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கு தமிழகத்திலே Percolation ponds பயன்படுத்த ஏற்பாடு செய்கிறோம் என்ற தலைமைச் செயலாளருடைய அறிவிப்பை பத்திரிகையிலே பார்த்தோம். ஆனால் அதைப்பற்றி இந்தக் கொள்கைக் குறிப்பிலே இல்லை. அதைப்பற்றி இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது, அதற்கு ஆகக்கூடிய செலவு என்ன, திட்டம் தீட்டப்பட்டதா, ஆய்வு செய்யப்பட்டதா? அதைப்பற்றியும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பணியாளர்களைப் பொறுத்தவரையில், திட்டப் பணிகளுக்கு பல்வேறு பாசனக் கால்வாய்கள், குளங்கள் இவற்றைத் தூர் எடுப்பது சம்பந்தமாக உள்ளவற்றிற்கு வெளிநாடுகளிலிருந்து கடன் பெற்று ஏற்பாடு செய்யப்போகிறோம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பணிகளைச் செய்வதற்கு பணியாளர்கள் அல்லது பொறியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. இ.இ.சி. மூலமாக 25 கோடி ரூபாய் கடன் பெறுகிறோம். அதன்மூலமாக அந்தத் திட்டத்தை அமல்படுத்துவோம் என்று சொல்லப்பட்டது. அந்தப் பணிகளுக்கு பணியாளர்கள் உதவியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? அதற்கு புரவிஷன் என்ன? அதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா? என்.ஆர்.இ.பி. என்ற கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 130 கோடி ரூபாய் செலவிடப்பட இருக்கிறது. குளங்களை ஆழப்படுத்தவும், தூர் எடுக்கவும் போன்ற பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணிகளுக்காக தனியாக பொறியாளர்கள் நியமிக்கப்படவில்லை. மதிப்புகளை எழுதுவதற்கோ அல்லது பார்ப்பதற்கோ தனியாக உதவியாளர்கள் கிடையாது. சொல்லப் போனால் 130 கோடி ரூபாய் அவசரத்திலே அள்ளித்தெளிக்கிற நிலைமைதான் இருக்கிறது. அதுதான் உண்மை. ஏராளமான பணம் செலவு செய்தாலும்கூட முழுமையாக அமல் நடத்தப்படவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அதுமட்டும் அல்ல, அதில் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். மழை காலம் எப்போது ஆரம்பிக்கிறதோ அப்போதுதான் அந்தப் பணிகள் தொடங்கப்படுகின்றன. ஆனால் மழை காலங்கள் ஆரம்பித்த உடன் இப்படி தொடங்கிய பணிகளை அரை குறையாக செய்துவிட்டு அந்த மழை வந்த உடன், வெள்ளம் வந்த உடன், அல்லது வேறு ஏதாவது தண்ணீர் வந்த உடன் அந்தப் பணிகளை முடித்துவிடுகிறார்கள். இப்படி

தொடர்ச்சியாக இந்தப் பணிகள் நடக்கின்றன. இது பயங்கரமான மோசடி என்பதை நான் இந்த அரசுக்கு முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் காண்டிராக்டர்களுக்கும், இன்ஜினியர்களுக்கும் மற்றும் சில நபர்களுக்கும் ஒரு ஏற்பாடு இருப்பதாக நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன் ஆகவே மழை காலத்தில் ஒரு கால்வாயின் மூலமாக தண்ணீர் விடப்பட்டால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நெல் விளைச்சல் வந்த உடன் அந்தப் பகுதியில் தண்ணீர் விடுவதை நிறுத்தி விடுவார்கள். அப்போது அந்தப் பணிகளை தொடங்கலாம். ஆனால் 3 மாதம் 4 மாதம் கழித்து அதற்கு எஸ்டிமேட் போடவேண்டும், சாங்ஷன் வாங்க வேண்டும் என்று சூழ்நிலை இருப்பதால் மழை தொடங்கிய உடன் அந்தக் கால்வாயை ஆழப்படுத்தும் பணிகளையும் தூர் எடுக்கும் பணிகளையும் எடுத்துக்கொள்கிறார்கள். ஆகவே எவ்வளவு தூர் எடுக்கப்பட்டது? அந்தப் பணிகள் முழுமையாக செய்யப்பட்டதா? என்று கணக்கு எடுக்கமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. தண்ணீர் வந்த உடன் கால்வாயில் மண் மேடு ஆகிவிட்டது என்று சொல்லப்படுகிறது. இந்த பயங்கர மோசடியை உடனடியாக தவிர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கால்வாயில் தண்ணீரை நிறுத்தியவுடன் இந்தப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய ஒரு ஏற்பாட்டை செய்யவேண்டும். கேரளத்தில் இது மாதிரி கால்வாயில் தண்ணீரை நிறுத்திய உடன் 10 நாள் 15 நாட்களுக்குள் இந்தப் பணிகள் முடிக்கப்படுகின்றன என்று எனக்கு தகவல் சொல்லப்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட பணிகளை நாம் முழுமையாக செலவு செய்கிற தொகைக்கு அது பொது மக்களுக்கு, விவசாயிகளுக்கு பயன்படக்கூடிய முறையில் அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

அதோடு திட்டப் பணிகளை செய்கின்ற செயற் பொறியாளர்களுக்கு பல்வேறு வேலைகள் இருக்கின்றன. டி.டி.சி. கூட்டத்திற்கு செல்லவேண்டும், இன்ஸ்பெக்ஷனுக்கு போக வேண்டும், இப்படி பல்வேறு பணிகள் இருக்கின்றன. ஆகவே திட்டப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய அந்த ஈ..ஈ செயற் பொறியாளர்களுக்கு பி.ஏ. உதவியாளர் நியமிக்கவேண்டும் என்று 1980 ஆம் ஆண்டு அரசாணை பிறப்பித்து இருப்பதாகவும் ஆனால் அது இன்னும் அமுலாக்கப்படவில்லை என்றும் எனக்கு தகவல் சொல்லப்படுகிறது. ஆகவே உடனடியாக அதற்கு ஒரு ஏற்பாட்டை செய்வது மிக முக்கியம். பாசன திட்டங்களுக்கு அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கு இன்றைக்கு செகரட்டரிகளாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். இங்கே செகரட்டேரியட்டைப் பொறுத்தவரைக்கும் அந்த 'டெக்னிக்கல் நோ-அவ்' கிடையாது. மற்ற மாநிலங்களில் ஸ்பெசல் செக்ரட்டரி என்றோ அல்லது இன்ஜினியரிங் சிப் என்ற ஒரு





அமைப்பு இருக்கிறது. அதில் பழமையான ஒரு சிறந்த பொறியாளர்களை இப்படிப்பட்ட பணிகளில் நியமிக்கிறார்கள். ஆகவே இப்போது சில 'ஐபோதேட்டிக்கல் கொரிஸ்' வருகின்றன. இங்கே செகரட்டேரியட்டில் கொரி வந்தால் மறுபடியும் கீழே இருக்கக்கூடிய கலெக்டர் ஆபிஸக்கு அனுப்பி அங்கிருந்து ஈ.ஈ.க்கு போய், இன்வெஸ்டிகேஷனுக்கு போய், கிளார்க்குக்கு போய் சின்ன கொரியை கூட நிவர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு இன்றைக்கு நிலைமை இருக்கிறது. இதனால் இன்றைக்கு 'அன்டூயூ டிலே' ஒரு தவிர்க்கமுடியாத காலதாமதம் என்பது இதன் காரணமாக ஏற்படுகிறது. இதற்கு என்று ஒரு பொறியாளர், அனுபவம் மிக்கவர் இங்கே இருக்கக்கூடிய வாய்ப்பு இருந்தால், ஸ்பெஷல் செகரட்டரி டு கவர்ன்மெண்டு அல்லது இன்ஜினியரிங் சீப் என்று ஒரு ஏற்பாடு இருக்குமானால் இப்படிப்பட்ட சிறு கொரிகளை இந்த இடத்திலேயே அதைப் பரிசீலனை செய்து அதை நிவர்த்திச் செய்யலாம் இதன் மூலமாக காலதாமதத்தை தவிர்க்கலாம். காலதாமதத்தை தவிர்ப்பதன் மூலமாக இன்றைக்கு ஏராளமான திட்டங்களுக்கு காஸ்ட் ஆப் புரடெக்ஷன், காஸ்ட்டு ஆப் கன்ஷ்டரக்ஷனை தவிர்ப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்தமுடியும். ஆகவே இப்படிப்பட்ட ஒரு ஆலோசனையை அரசு பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன். அதோடு சில திட்டப்பணிகளை பொறுத்தவரைக்கும் வாசுதேவநல்லூர் தொகுதியில் செண்பகவல்லி அணை என்ற ஒன்று போடப்பட்டது. நான் இந்த டிலேவைப் பொறுத்தவரைக்கும் சொல்ல விரும்புகிறேன். 1978ஆம் ஆண்டு 5.85 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் அதற்கு பிறகு மறு மதிப்பீடு செய்யப்பட்டு 7 லட்சத்து 52 ஆயிரத்து 117 ரூபாயை அரசு அனுமதித்தது. தற்போது ரீ-காஸ்ட்டு அதனுடைய ரீ.எஸ்டிமேட் எவ்வளவு என்றால் 10 லட்சத்து 29 ஆயிரத்து 532 ரூபாய். இது கேரளாவை நோக்கி போகக்கூடியதண்ணீரை இந்த பகுதிக்கு திருப்ப வேண்டும். இது 78-லே போடப்பட்ட திட்டம். இந்த 6 ஆண்டு காலத்தில் இது 2 மடங்காக ஏறிவிட்டது இதனுடைய மதிப்பீடுகள். ஆகவே கேரளாவுக்கு போகக்கூடிய இந்தத் தண்ணீரை திருப்புவதற்கு மிக வேகமாக செய்யக்கூடிய பணி இது. இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். மேற்கு நோக்கி போகக்கூடியத் தண்ணீரை கிழக்கு பக்கம் திருப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொன்னார்கள். புதிதாக அப்படிப்பட்ட உரிமைகளைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால், அதேநேரத்தில் ஏற்கனவே பல ஆண்டுகளாக அனுபவித்துக்கொண்டிருக்கின்ற ஒரு உரிமை போயிருக்கிறது. அது என்னவென்றால், ஏற்கனவே கிழக்கு நோக்கிப் போய்க்கொண்டிருந்த நீர் மேற்கு நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. ஏனென்றால் அணை உடைந்திருக்கிறது. அதற்கு 1978 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டு, ஒரு எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு, பிறகு ரீ-எஸ்டிமேட் என்றும், ரீ-காஸ்ட் என்றும் தொடர்ச்சி இருந்து கொண்டிருப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு

அமைச்சரவர்கள் அதில் அக்கறை எடுத்துக்கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கூடியவிரைவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மோர்வலாறு அணைத் திட்டம் எட்டு கோடி ரூபாயில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அந்த எஸ்டிமேட் மாறி 32 கோடி ரூபாய் தற்பொழுது செலவு செய்யப்பட்டும் இன்னும் வேலை பாக்கியிருக்கிறது. இப்படித் தாமதம் செய்வதன் காரணமாக அதிகமாகச் செலவுகள் ஏற்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாகதேவநல்லூரைப் பொறுத்தவரையில், உள்ளார் அணைத் திட்டம், உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் கட்டப்பட வேண்டும். இது இலாபகரமான திட்டம் என்ற குறிப்பு இருக்கிறது. எனவே, கூடியவிரைவில் அதைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல் அணை, கோட்டமலையாறு அணை ஆகியவை குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இவைகளைக் கூடிய விரைவில் கட்டுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரிவலம் வந்த நல்லூருக்கு அருகில் வயலிகுளம் உருவாக்கப் படுவதற்கு ஆய்வு செய்யப்பட்டு, திட்டத்தை நிறைவேற்று வதற்கு அனுமதி கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளது. அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

பாபநாசத்திற்கு அருகில் உள்ள கோரையாறு அணைத் திட்டமும் ஆய்வு செய்யப்பட்டு அரசின் அனுமதிக்காக வந்து கிடப்பில் இருக்கிறது. அதையும் விரைவில் பரிசீலனை செய்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கொடுமுடியாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அதற்காக என்னுடைய மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பச்சையாறு திட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே சிங்க வால் குரங்குகள் இருப்பதால் மத்திய அரசு அனுமதிக்கவில்லை என்று கூறப்படுகிறது. 1975 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப் பட்ட திட்டம். சமீபத்தில் வெள்ளம் வந்த நேரத்தில்கூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தார்கள். இந்தப் பச்சையாறு திட்டம் நிறைவேற்றப் பட்டிருந்தால் தற்போது ஏற்பட்ட நிலைமைகளைத் தவிர்த் திருக்கலாம் என்று தூத்துக்குடியில் பத்திரிகை நிருபர்களிடத்தில் சொன்னதாகப் பத்திரிகைகளில் பார்த்தோம். 1975 ஆம்



ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டிருந்தும் அந்தத் திட்டம் நிறை வேற்றப்படவில்லை. ஆகவே, இந்த அரசு அதை நிறைவேற்று வதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால் இந்தக் கொள்கைக் குறிப்பில் அப்படிப்பட்ட திட்டம் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. முதலமைச்சர் அவர்கள்கூட சமீபத்தில், அந்தத் திட்டம் நிறை வேற்றப்பட்டிருந்தால் இதுபோன்ற தன்மைகள் தவிர்க்கப் பட்டிருக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு முக்கியமான திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு ஏன் தயங்குகிறது? அதைப்பற்றிக் குறிப்பிடாமல் இருப்பதற்கான காரணம் என்ன? எனவே, தயவுசெய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் சிங்கவால் குரங்குகள் கிடையாது.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசப்: தலைவரவர்களே, பச்சையாறு திட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் அறிவார்கள்; நானும் அறிவேன். ஏனென்றால், நாங்கள் இரண்டு பேரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அந்த மாவட்டத்தில் நிறை வேற்றப்பட்டுக்கொண்டு வர வேண்டியதாக இருந்தது. அன்றைக்குத் தமிழக முதல்வரவர்கள் சொன்னதெல்லாம், இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருந்தால், இப்படிப்பட்ட திட்டங்கள் உரியமுறையில உருவாக்கப்பட்டிருந்தால் வெள்ளத் தடுப்புக்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதற்குச் சமமாக இருந்திருக்கும்; ஆனால் திட்டத்திற்கு கால்கோள் விழா நடத்தி விட்டார்கள்; அதை நடத்துவதற்கு முன் என்னென்ன நடை முறைகள் கடைபிடிக்கப்பட வேண்டுமோ அவைகளைக் கடைப் பிடிக்காத காரணத்தினால், இதைத் தொடர்ந்து அன்றைக் கிருந்த அரசும், அதைத் தொடர்ந்து வந்த அரசும் மேற்கொள்ள முடியவில்லை என்றுதான் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூறினார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று எல்லாக் கட்சிகளின் தரப்பிலேயிருந்தும் வலியுறுத்தப்படுகிறது. சிங்கவால் குரங்கு என்பது அந்தப் பகுதியில் இல்லை. அப்படி இல்லாத ஒன்றைக் காட்டி, மத்திய அரசு தடுக்கிறது என்று காரணம் காட்டிச் சொல்கிறார்கள். இதைப்பற்றி விசேஷமான முறையில் மத்திய அரசிடம் விளக்கி, சிங்கவால் குரங்குகள் அந்தப் பகுதியில் இருப்பதாகச் சொல்வது சரியல்ல என்பதை இந்த அரசு தெளிவுபடுத்தி அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நிறைவேற்றுவது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாமிரபரணி மேம்பாடுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அதை ஒரு பாலிசியாக ஒத்துக்கொண்டாலும்கூட, பெரியாறு திட்டம் நிறைவேற்றப்படாததால் இதை நிறைவேற்றவில்லை

என்று சொல்லப்படுகிறது. ஆனால் இதைக் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். இந்தத் திட்டம் இல்லாத காரணத்தினால் ஏராளமான தண்ணீர் சேதாரம் அடைகிறது. பல பகுதிகளில் பாசனத்தை முழுமைப்படுத்த முடியவில்லை. தீவுகள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் கருத்திற்கொண்டு தாமிரபரணியில் லயனிங் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

இருக்கங்குடி திட்டம் பற்றி நான் இந்த மன்றத்தில்கூட எழுப்பி இருக்கிறேன். அந்தத் திட்டத்தின் காரணத்தால் ஒருசில கிராமப் பகுதிகள் பாதிக்கப்படும் என்று அங்குள்ள மக்கள் பயப்படுகிறார்கள். அப்படி இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது வரவேற்கத்தக்கது. ஆனால அந்தப் பகுதி மக்களிடையே மறுபடியும் சென்று பேசியபோது அப்படிப்பட்ட பாதிப்பு ஏற்படலாம் என்றுதான் அவர்கள் கூறுகிறார்கள். எனவே பாதிப்பு இல்லாத வகையில் அந்தத் திட்டத்தை ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்பியாறு, எலுமிச்சை ஆறு, மேல் மணிமுத்தாறு போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் மடிச்சல் கால்வாய் திட்டத்தைப் பொறுத்த வரையில் அதன் முக்கால் பகுதி வேலைகள் முடிந்துவிட்டன இன்னும் கால் பகுதி வேலைதான் பாக்கி இருக்கின்றது என்று சொல்கிறார்கள். அதை முடித்துக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்லிகூடம் அணை என்பது கடந்த 7 ஆண்டுக் காலமாக நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. அதையும் நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் பரலையாறு திட்டத்தையும் நிறைவேற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பழனி வட்டத்தில் காவளப்பட்டி அருகே பச்சையாறு திட்டம் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அதுவும் முடிக்கப்படவில்லை. ஷட்டனார் உடைந்து 6, 7 ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. அதிகமான பணம் செலவாகாது. எனவே அந்த நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சில குளங்களைப் பொறுத்தவரையில் மீன் பாசி உரிமை என்று சில தனியார்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி இந்த மன்றத்தில்கூடச் சொல்லி இருக்கிறேன். வெள்ளைக்காரர்கள் காலத்திலிருந்து இந்த பொதுப் பணித்துறை பராமரிப்பிலே இருக்கக்கூடிய இந்தக் குளங்களைப் பொறுத்தவரையில் மீன்பாசி உரிமை தனியார்களுக்கு இருப்பது நியாயம் இல்லை. அவ்வாறு தனியார்களுக்கு அந்த உரிமை இருப்பதன் காரணத்தால் அப்படிப்பட்ட ஒரு சில நபர்களின் பொறுப்பில்தான் அதிலிருந்து தண்ணீரை தண்ணீர் தட்டுப்பாடு காலத்தில் சிறு விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எனவே சிறு விவசாயிகளுக்கு முழுமையாக தண்ணீர் கொடுக்கின்ற வாய்ப்பு இல்லை. குறிப்பாக ஜமீன் குளங்களைப் பொறுத்தவரையில் பராமரிப்பதற்கு அரசு தரப்பிலிருந்து ஊழியர்கள் நியமிக்கப்படவில்லை. அவ்வாறு அரசுத் தரப்பிலே ஊழியர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதன் காரணத்தால் ஒருசில நிலச்சுவான்தார்தான் அங்கே பணியாளர்களை நியமித்திருக்கிறார்கள். அந்தப் பணியாளர்கள் அங்கே இருக்கின்ற நிலச்சுவான்தார்களின் விருப்பு, வெறுப்புக்கு ஏற்றபடிதான் நடந்துகொள்கிறார்கள். ஆகவே உடனடியாக அந்த ஜமீன் குளங்களைப் பொறுத்தவரையில் பணியாற்றக்கூடிய பணியாளர்களை உடனடியாக அரசு ஏற்று அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.



திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகளின் மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்காக என்னுடைய நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் தற்போதைய பாசன முறைகளை நவீனப்படுத்தல் என்ற தலைப்பின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள நில நீர் வளத்தைப் பொறுத்தவரையில் 90 விழுக்காட்டுக்கு மேல் உபயோகபபடுத்திவிட்டோம், எனவே இனிமேல் எஞ்சிய நீர் வளத்தை உபயோகப்படுத்தி பெரிய பாசனத் திட்டங்களை வகுக்க வாய்ப்பில்லை என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே யதார்த்தமான உண்மைகளை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே நில நீர்ப் பரப்பு என்பதைப் பெரும்பாலும் உபயோகப்படுத்திவிட்டோம். இனிமேல் நிலத்தடி நீரை நம்பித்தான் பாசன முறைகளைச் செய்ய வேண்டி இருக்கின்றது என்ற நிலைமைகளை எல்லாம் கண்கூடாக அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 62 இலட்சம் ஹெக்டேர் நிலம் பாசனத்தில் இருந்தாலும் 32 இலட்சம் ஹெக்டேர் தான் நீர்ப்பாசன முறையில் வந்திருக்கின்றது. மீதி எல்லாம் மானாவரிப் பாசனம் என்று சொல்லக்கூடிய வானம் பார்த்த பூமியாகத்தான் இருக்கின்றது. அந்த நிலத்தடி நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தினால் அந்த 32 இலட்சம் ஹெக்டேர் பாசனம் என்பதை 62 இலட்சம் ஹெக்டேர் பாசனம் என்ற நிலைமைக்கு மாற்றலாம் என்று நிபுணர்கள் எல்லாம் குறிப்பிட்டுக்காட்டி இருக்கிறார்கள்.

நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்கவேண்டும். அடுத்து நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும். இந்த இரண்டு பிரச்சினைகளையும் குறிப்பாகத் தமிழக அரசின் பொதுப்பணித்துறை நிச்சயமாக மேற்கொண்டு ஆகவேண்டும். இல்லை என்றால் எதிர்காலத்திலே மிகப்பெரிய பயங்கரமான நிலைமையை நாம் பாசனத்தைப் பொறுத்தவரையில் சந்திக்கவேண்டியிருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துகின்ற முறையை உழவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தாக வேண்டும். கொள்கை விளக்கக் குறிப்பிலே பாசன மேம்பாட்டுப் பணி பயிற்சிக் கூடம் ஒன்றை எப்படி நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுப்பதற்காக அமைப்பது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதைத் திருச்சியிலே அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக வரவேற்பையும், பாராட்டுதலையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பாசனத்தை இரட்டிப்பாக்குகின்ற முறைகள் பற்றி நிபுணர்கள் எல்லாம் சொல்லி இருக்கிறார்கள். வாட்டர் மேனேஜ்மென்ட் நிறுவனம் என்ற ஒரு அமைப்பை நிறுவியாகவேண்டும். மாநிலம் பூராவும் அதனுடைய கிளை நிறுவனங்களை நிறுவி இந்தப் பாசனத்தினுடைய பொறுப்பை அவர்களிடத்திலே ஒப்படைத்தால் நிச்சயமாகத் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தித் தமிழகத்தில் இருக்கின்ற எல்லா நிலங்களையும் பாசனத்திற்குக் கொண்டுவரலாம் என்று இன்றைக்கு நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். அது எப்படி சாத்தியமாகும் என்றுகூட இங்கே சிலபேர் கேட்கக்கூடும். சர்க்கரை ஆலைகள் கரும்பைப் பயிர் செய்கின்ற உழவர்களுக்கு அதை நடவு செய்வதற்கும், உரம் வாங்குவதற்கும், பூச்சி மருந்து வாங்குவதற்கும், கரும்பை வெட்டி வருவதற்குமான செலவுகளை எல்லாம் அவர்கள் ஏற்றுக்கொண்டு இறுதியிலே அவர்கள் அந்தப் பணத்தை எடுத்துக்கொள்கிறார்கள். அதைப் போலவே இதற்கும் அந்தப் பாசன முறைச் செலவை கரும்பு ஆலைகள் ஏற்றுக்கொண்டால் கரும்பு பயிரைப் பொறுத்தவரையில் பாசன முறை கொண்டு வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று இன்றைக்கு நிபுணர்கள் கூறுகிறார்கள் அதைத் தமிழக அரசு குறிப்பாக, பொதுப்பணித் துறை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி கூட இஸ்ரேல் நாட்டிலே, வேரிலே தண்ணீரைப் பாய்ச்சி, நீர் பாய்ச்சு முறையிலே சிக்கனத்தைக் கடை பிடிக்கிறார்கள் என்று குறிப்பிட்டுக்காட்டினார்கள். அதைக்கூட நாம் பரிட்சார்த்தமாக பயன்படுத்தி எதிர்காலத்தில் அப்படிப்பட்ட பாசனமுறையைக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.





அடுத்து, இந்த நிலத்தடி நீர் வளத்தை எப்படிப் பெருக்க வேண்டுமென்பதற்காக மராட்டி மாநிலத்திலே ஒரு ஏற்பாட்டை இன்றைக்கு அந்த அரசு வைத்திருக்கிறது. மராட்டிய மாநிலத்திலே இருக்கிற கால்வாய்களில் எல்லாம் 15 அடி ஆழத்திற்குத் தண்ணீர் போய்க்கொண்டே இருக்கும். அதனாலே அங்கே கிணறுகளிலே நீர் வளம் பெருகி, பாசனத்திற்கு மிகப்பெரிய அளவுக்குப் பயன் உள்ளதாக இருக்கிறது. மராட்டிய மாநிலத்திலே கிணறுகளைக் குறிப்பிட்ட ஆழத்திற்கு மேல் வெட்டக் கூடாது என்று அந்த அரசு தடை உத்தரவு போட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய மாநிலத்தில் எந்த அளவு நிலத்தடி நீரை உறிஞ்ச முடியுமோ அந்த அளவுக்கு உறிஞ்சிக்கொண்டிருக்கிறோம். கிணறுகளை எவ்வளவு ஆழம் வேண்டுமானாலும் வெட்டலாம்; தடையில்லை. அதே நிலை நீடித்தால் குறிப்பாக கோவை மாவட்டம் போன்ற பகுதிகளெல்லாம் வெகு சீக்கிரத்திலே பாலைவனம் போல் ஆகி, நிலத்தடி நீர் குறைந்து போகும் மிகப்பெரிய பயங்கரமான நிலை உருவாகும். இப்படியே நிலத்தடி நீரை எடுத்துக் கொண்டே போனால், தமிழ் நாட்டில் 100 ஆண்டுக்காலம் போனால், நிலத்தடி நீரே இருக்குமா என்று சந்தேகப்படும் அளவுக்கு இன்றைக்கு நீர் வளத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அச்சத்தைத் தமிழகம் சந்தித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, நிலத்தடி நீரை பெருக்குவதற்கு, நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்குவதற்கு தமிழக அரசு முனைப்பாகச் செயல்பட்டாக வேண்டும்.

பெர்கலேஷன் பான்ட்ஸ் என்று சொல்லக்கூடிய கசிவுநீர் குட்டைகளை ஏராளமாக கிராஷ் புரோகிராம் என்று சொல்லப்படுகிற, விரைவுத் திட்டத்தின் மூலமாக, ஏராளமான பணத்தைச் செலவழித்து நாடெங்கும் செயல்படுத்துவதற்கான பணியிலே வேகமாக ஈடுபட்டிருக்கிறது அரசு. அதை நான் பாராட்டுகிறேன்.

அதைப்போலவே, மழை நீர் தேங்கி நல்ல நீர் வளம் ஏற்றுகின்ற ஏரிகள், குளங்கள், குட்டைகளெல்லாம் ஆக்கிரமிப்புகளில் இருக்கின்றன. அங்கே வீடுகள் கட்டியிருக்கிறார்கள், சிலபேர் அங்கு உழுது பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள், சிலபேர் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறார்கள், ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். எப்படி தேசீய நெடுஞ்சாலைகளை ஆக்கிரமித்துள்ளவர்களை, தயவு தாட்சண்யமின்றி அகற்றுகிறோமோ, அதே மாதிரி மழை நீர் தேங்குகின்ற ஏரிகளிலே, குளங்களிலே, குட்டைகளிலே இருக்கிற ஆக்கிரமிப்புகளை அகற்றாவிட்டால் எதிர்காலத்தில் மழை நீர் தேங்க வாய்ப்பில்லாமல் போகும், குறைந்து போகும். அதை அரசு கவனத்திலே கொண்டு, முன்னுரிமை கொடுத்து அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். சின்னசாமி] [1984 ஏப்ரல் 24

அடுத்து பாசனத் திட்டம் குளங்கள், குட்டைகள் பொறுத்த வரை, இன்றைக்கு 3 சொல்கிறார்கள். ஒன்று பொதுப்பணித் துறையினர், அடுத்து, வேளாண் பொறியியல் துறையினர், அடுத்து, ஊராட்சித் துறையினர் என்று அவரவர்களுக்கு தனித் தனியான குளங்கள் என்று எல்லாம் சொல்கிறார்கள். அவற்றை எல்லாம் ஒரே துறையின் கீழ் கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுப் பாசனக் கால்வாய்களைச் சீரமைப்பது என்பது மிகவும் முக்கியமானது. கால்வாய்கள் மிகவும் மேடாகியிருக் கின்றன. ஏராளமான தண்ணீர் வந்தாலும் கூட கால்வாயில் தண்ணீர் போக முடியாத அளவுக்கு அவைகள் எல்லாம் தூர் வாரப்படாமல் இருக்கின்றன. பொதுப் பணித்துறையினரைக் கேட்டால் பணம் இல்லை யென்கிறார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர், வறட்சி நிவாரணப் பணி, அல்லது என்.ஆர். இ.பி. திட்டங்களின் கீழ் சொற்ப தொகையை ஒதுக்குகிறார்கள். அதையும் கான்ட்ராக்ட்காரர்கள் எடுத்துக் கொண்டு சரியாக செய்வதில்லை. இராஜாக்கள் காலத்திலே குடிமராமத்து என்று இருந்ததாக நாம் சரித்திரத்திலே படித்திருக்கிறோம். இன்றைக்குக் குடி மராமத்து இல்லை. ஆகவே, ஒரு ஏக்கருக்கு ரூ. 100, அல்லது ரூ. 50 என்று அங்கேயிருக்கிற விவசாயிகளிடம் வாங்கி, அதே அளவு பணத்தைப் பொதுப் பணித் துறை செலவு செய்து, அந்த வேலைகளைச் செய்தாக வேண்டும். வேலைகளைச் செய்யும்போது, அங்கீகரிக்கப்பட்ட ஆயக்கட்டு கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டும். அதாவது நல்ல விவசாயிகள், ஊர் வம்பு செய்யாதவர்களாகப் பார்த்து, விவசாயிகளுடைய நலனில் அக்கறை உள்ளவர்களாகப்பார்த்து அந்த கமிட்டிகளில் போட வேண்டும். வாய்க்கால்களைத் தூர் வாருகின்ற, அகலப்படுத்து கின்ற பணிகளை அந்தச் கமிட்டிகளிடம் ஒப்படைத்தால் நிச்சயமாக வாய்க்கால்களில் தண்ணீர் வராத நிலைமை இருக்காது. ஆகவே, அதைச் சீக்கிரமாகப் பரிசீலிக்கவேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அதை அரசு நிச்சயமாக சீக்கிரமாக பரிசீலிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்து வரப்பு கட்டுதல் என்று ஒவ்வொரு வாய்க்கால் களுக்கும் ஒவ் வொரு ஆண்டும் தற்காலிகமாக வரப்பு கட்டு கிறார்கள். என்னுடைய தொகுதியில் நீர்ப்பாசனத் தலைமைப் பொறியாளர் திரு. மோகனகிருஷ்ணன் அவர்கள் வந்திருந்தபோது அங்கேயிருக்கிற விவசாயிகள் எல்லாம் அந்த வரப்புக் கட்டுதலைப் பற்றிச் சொன்னார்கள். தற்காலிகமாக வரப்புக் கட்டுவதற்கு ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சம், இரண்டு லட்சம் என்று செலவிடப் படுகிறது. ஆகவே அதை நிரந்தரமாகக் கட்டிக் கொடுக்கவேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



1984 ஏப்ரல் 24] [திரு. எம். சின்னசாமி]

என்னுடைய தொகுதியில் அமராவதி பாசனம் இருக்கிறது. கரூர் வட்டம் கடைக்கோடியாக இருக்கிற காரணத்தால் வெள்ளம் வந்தால்கூட அமராவதியிலே தண்ணீர் வருவதில்லை. அங்கே கேட்டால் பல்வேறு அரசியல் பிரச்னைகளை எல்லாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அணை கட்டுகிறபோது எந்த அளவிற்கு பாசனத்திற்கு தண்ணீர் கொடுக்க முடியும் என்று கணக்குகள் இருக்கின்றன. ஆகவே 'அஷ்யூர்ட் வாட்டர் சப்ளை' என்று இருக்கிறதை நிச்சயமாகக் கொடுக்கவேண்டும். ஆனால் இப்போது அது கொடுக்கப்படுவதில்லை. தலைமைப் பொறியாளரைக் கேட்டால், அவருக்குக் கீழே இருக்கிற சூப்பிரண்டெண்டிங் என்ஜினியர், எக்சிகியூட்டிவ்' என்ஜினியர் ஆகியவர்களைக் கேளுங்கள் என்று சொல்கிறார். அவர்களைக் கேட்டால் மேலே இருக்கிற தலைமைப் பொறியாளரைக் கேளுங்கள் என்று விவசாயிகளை அலையவிட்டுக் கொண்டிருக்கிற நிலைமை இருக் கிறது. ஆகவே நம்முடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கரூர் வட்டத்தைப் பொறுத்தவரையில், குளித்தலை வட்டத்தைப் பொறுத்தவரையில் அமராவதி ஆற்றுப் பாசனத்திற்கு எவ்வளவு தண்ணீர் கொடுக்கவேண்டும் என்பதை விவசாயிகள் அடங்கிய ஒரு உயர்மட்டக் கமிட்டியைப் போட்டு அதிலே முடிவு செய்தால் தான் அந்தப் பகுதிகளுக்கு போதுமான தண்ணீர் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து உடுமலைப்பேட்டையில் இருக்கிற செயல் பொறி யாளர் அலுவலகத்தை கரூருக்கு மாற்றித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் நொய்யலாறு திட்டம் நீண்டகாலமாக, 30 ஆண்டுகளாக பேசப்பட்டு வருகிற திட்டம். அதனுடைய முதல் திட்ட வேலைகள் இப்போது நடந்து வருகிறது. இரண்டாவதுத் திட்டத்தை குறைந்தது பத்தாயிரம் ஏக்கருக்கு பயனளிக்கிற வகையில் கரூர் ஒன்றியத்தில் அதை செய்து கொடுக்கவேண்டுமென்று ஆய்வுப்பணிகள் எல்லாம் நடத்தப்பட்டு இன்றைக்கு அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதனை சீக்கிரம் இந்த ஆண்டில் முடித்துக்கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடகனாறுத் திட்டம். அது உடைந்துபோனதற்குப் பின்னாலே ஆய்விலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதையும் இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசனத் திட்டங்களை ஆய்விற்கு எடுத்துக்கொள்கிற போது, பல்வேறு பிரச்சனைகள் வருகின்றன. கீழே இருக்கிற எக்சிகியூட்டிவ் என்ஜினியர், சூப்பரிடெண்டிங் என்ஜினியர் எல்லாம் டெக்னிக்கல் ரிப்போர்ட்டை பரிந்துரை செய்த பிறகு தலைமைப் பொறியாளர் ஆய்விற்கு வருகிறது. அவர் கொடுத்த பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் கன்கரன்ஸ் வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்தத் திட்டம் சாத்தியமானது, தண்ணீர் பாயும் என்று தொழில்

நுட்ப அதிகாரிகள் சொன்னதற்கு பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரின் கன்கரன்ஸ் எதற்கு என்று எனக்கு புரியவில்லை. அது பழைய பிரிட்டிஷ் முறையிலிருந்து இருந்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரைப் பொறுத்தவரையில் அந்த அணை கட்டுவதற்கு வேண்டிய, வாய்க்கால்கள் வெட்டுவதற்கு வேண்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்வதுதான் அவருடைய பணியாக இருக்கவேண்டும். மற்றப் பணிகளுக்கு அவர்கள் செல்லக்கூடாது என்ற வகையில் இந்த முறையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி எக்சிகியூட்டிவ் என்ஜினியர் பரிந்துரை செய்து, தலைமைப் பொறியாளர் (ஆய்வு) பரிந்துரை செய்து, அதற்குப் பிறகு பொதுப்பணித்துறை செயலாளர், பொதுப்பணித்துறை அமைச்சர் ஆகியோர் எடுத்துக் கொண்ட பிறகு நிதித்துறைக்கு வருகிறபோது அந்தத் துறைச் செயலாளர் இந்தத் திட்டம் சாத்தியமானது இல்லை என்று சொல்கிறார்கள். இது எப்படி சரியாக இருக்குமென்று தெரியவில்லை. ஆகவே இந்த முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் அமராவதி ஆற்றிலிருந்து பிரியும் வாய்க்கால் கரூர் நகரத்தின் எல்லைக்குள் வருகிறது. அதில் தினமும் ஓரத்தில் இருக்கிற குடிசைவாசிகள் குப்பைகளைக் கொட்டி விடுவதால் தண்ணீர் வருவது இல்லை. இதுபற்றி கேட்டால் பொதுப்பணித்துறை இந்த வாய்க்காலை தூர் எடுப்பதா அல்லது நகராட்சி தூர் எடுப்பதா என்கிற பிரச்னை வருகிறது. இந்தப் பிரச்னை 10 ஆண்டுக்காலமாக இருந்து வருகிறது. ஆகவே அந்த நகராட்சி இந்த பராமரிப்பைச் செய்ய வேண்டும்; அதற்கான பணத்தை பொதுப்பணித்துறை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற உத்தரவை அரசு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

அடுத்து திருவரம்பூர் தொகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட விவசாயிகள் இன்றைக்கு மாயனூர், கட்டளை, உய்யக் கொண்டான் வாய்க்கால்களில் பாசனம் பெற்று பயிர் செய்வதை பூர்த்தியாக்கி அறுவடை செய்ய தண்ணீர் பெறவும், கால்நடைகள் தண்ணீர் பெறவும் போதிய தண்ணீர் கிடைக்கவும் அமைச்சர் அவர்கள் வழிவகை செய்யவேண்டுமென்று திரு. அண்ணாதாசன் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள் கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவைமுன் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள மானியக்கோரிக்கைகள் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை கூற விரும்புகிறேன் நம்முடைய தமிழ்நாடு ஏற்கனவே ஒரு உஷ்ணமண்டலம்—நாடு பருவ மழையை நம்பி வேளாண்மைத் தொழிலை நாம் செய்யவேண்டி இருக்கிறது என்பது நாம் அறிந்த



ஒரு உண்மை. அந்தப் பருவ மழை ஒரே சீராக எல்லாக் காலங் களிலும் இல்லை. ஆண்டுதோறும் பெய்வது கிடையாது. அதனால் தான் ஆங்கில ஆட்சி காலத்திற்கு முன்பிருந்தே கூட நம்முடைய நாட்டில் ஏரிகள், குளங்கள், குட்டைகள் கண்மாய்கள் ஆகியவற்றை ஏற்படுத்தி அதன் மூலம் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தியிருந்தார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆகவே, இந்த மாதிரியான நீர்த்தேக்கங்களை தமிழகத்திலே அதிகமான அளவிற்கு நிறுவி இருப்பதால், தமிழகத்திலே உள்ள விசேஷமான நிலைமை என்னவென்றால், இந்த நீர்த்தேக்கங்கள் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு கிட்டத்தட்ட 39,000 ஏரிகள், குளங்கள், தமிழகத்தில் இருக்கின்றன என்று சொல்கிற அளவிற்கு ஒரு சிறப்பு அம்சம் பொருந்தியதாக இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்தத் தேக்கங்களில் உள்ள நீரை கால்வாய் மூலமாகக் கொண்டு பாசன வசதிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஏரி, குளம், கண்மாய் பாசனங்கள் நல்ல முறையில், சீராக செம்மையாக, நடக்காமல் இருப்பதால் இன்றைக்கு மிகப் பெரிய பாதிப்பு விவசாயத்திற்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் அவற்றைப் பராமரிப்பதற்கான முறையில் விசேஷ கவனம் செலுத்தப்படாத காரணத்தால் பல ஏரிகள் குளங்கள், கண்மாய்கள் தூர்ந்து போய், மேடிட்டுப்போய், எந்த அளவிற்கு அவைகள் ஆழமாக இருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு இல்லாமல் இருக்கின்றன. முன்பெல்லாம் கிராமத்தில் சொல்வார்கள். ஒரு முறை இந்த குளங்கள், கண்மாய்கள் நிரம்பி விட்டால் போதும் இரண்டு போகம் பயிர் செய்து விடலாம் என்று. ஆனால் இப்போது ஒரு போகத்திற்கே இரண்டு முறை அந்தத் தேக்கங்கள் நிரம்ப வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த அமைப்புகளைச் சீரமைப்பதற்கு நாம் என்ன செய்து இருக் கிறோம். கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சாகுபடி நிலங்கள் அதிகரிக்கப்பட்டு இருக் கின்றன. நவீன சாகுபடி முறைகள் புகுத்தப்பட்டு இருக்கின்றன. ஆனால், இவற்றிற்கெல்லாம் போதுமான அளவிற்கு நீர்ப்பாசன வசதிகள் திட்டமிடப்பட்டு இருக்கிறதா என்றால் இல்லை என்றே சொல்லவேண்டும். இதற்கான திட்டங்களைத் தீட்டித்தர நம்மிடத்தில் நிபுணர்கள் இல்லையா என்றால் இருக்கிறார்கள், திட்டத்தைத் தீட்டித்தந்து இருக்கிறார்களா என்றால் தந்து இருக்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிற அளவிற்கு நிதி ஆதாரங்கள், நிதி ஒதுக்கப்படவில்லை என்றுதான் சொல்லப்படுகிறது. இந்த நீர்ப்பாசன திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாத காரணத்தால் இன்றைக்கு விவசாயிகளுக்கும் பெரும் கஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது இதற்கான புள்ளி விவரங்களை என்னால் தர முடியும்.

[திரு. சோ. அழகர்சாமி] [1984 ஏப்ரல் 24

அதைப்போலவே இன்றைக்கு இந்த நீர்ப்பாசன வரத்துக்களை சீராக செம்மையாக வைத்திருக்காத காரணத்தால், நாட்டில் வெள்ளம் ஏற்படுகிறபோது தொடர்ந்து பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. ஏரி, குளங்கள், கண்மாய், ஆகியவற்றில் போதுமான அளவிற்கு நீர்த்தேக்கம் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் ஆங்காங்கு வெள்ளப்பெருக்கெடுத்து பயிர்கள் நாசமாகின்றன. இவ்வளவு நிலைமைகளை நாம் சந்தித்த பிறகும் அவற்றைப் பார்த்து சீரமைக்க நாம் தவறிவிட்டோம் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டவிரும்புகிறேன். சில இடங்களில் ஏரி முழுவதுமாக நிரம்பி இருந்தால் 45 நாட்களுக்குக் கூட தண்ணீர் பாசனத்திற்கு வராத நிலைமை இருக்கிறது. இதன் காரணமாக மழை நேரங்களில் இந்தத் தண்ணீர் வீணாவது கொஞ்ச நஞ்சமல்ல. அவைகள் அனைத்தும் சமுத்திரத்தில் சென்று வீணாகி விடுகின்றன. உதாரணத்திற்குச் சொல்கிறேன், இந்த ஆண்டு பெய்த மழை காரணமாக தஞ்சை மாவட்டத்தில் கீழ்பகுதியிலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் வத்திராயிருப்பு பகுதியிலும் வந்த வெள்ளம் காரணமாக பல ஆயிரம் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டு இருக்கின்றன. கடந்த ஆண்டு வறட்சி நிலை இருந்தபோதிலும், இந்தப் பணிகள் சரிவர செய்யப்படாத காரணத்தால், நாம் நீர்ப்பாசன தேக்கங்களை சரிவர பராமரிக்கத் தவறிவிட்டோம் என்று சொல்லிக்கொள்கிறேன். எந்த வகையில் இவைகள் செய்யப்படவில்லை என்று நானும் பலமுறை சொல்லியிருக்கிறேன், இங்கே இப்போதும் பலர் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12–20)

ஆகவே, இந்த பாசன வசதிகளைச் செம்மைப்படுத்தி, சீர்படுத்தி, நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனென்றால் எதிர்காலத்தில் தண்ணீர் நிலைமை மோசமாகப் போய்விடும். அதை எண்ணிப்பார்த்து இப்போதே தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். பாசன வசதிக்கு நமக்கு பிரதானமாக இருப்பது காவேரி நதிநீர்தான். காவேரி நதி நீர் மூலமாக 10 இலட்சம் ஏக்கருக்குமேல் தஞ்சை மாவட்டத்தில் பாசன வசதி கிடைக்கிறது. வாய்க்கால் வசதிகளும், வடிகால் வசதிகளும் நமக்கு செம்மையான முறையில் அமையவில்லை என்ற காரணத்தால் கடந்த ஆண்டு நமக்கு மிகப்பெரும் சேதாரம் ஏற்பட்டது. இதுவரை காண முடியாத அளவுக்கு தஞ்சை மாவட்டத்தில் சேதம் ஏற்பட்டதை நாம் பார்த்தோம். இது சம்பந்தமாக ஏற்கெனவே சென்ற கூட்டத்திலும் நான் சொல்லி இருக்கிறேன்.

காவேரி கமிட்டி என்று ஒரு கமிட்டி போடப்பட்டு, அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே இரண்டு திட்டங்கள் போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தினமணி பத்திரிகையில் வெள்ளமும், வெள்ளத் தடுப்பும் என்ற தலைப்பில் கடந்த பிப்ரவரி மாதம் 16



1984 ஏப்ரல் 24] [திரு. சோ. அழகர்சாமி]

17 தேதிகளில் நல்ல பல செய்திகளை வெளியிட்டிருக்கிறார்கள். 1931 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் சூப்பரின்டெண்டிங் என்சினீயராக இருந்த நீலகண்ட சாஸ்திரி என்பவரும். 1961-ல் நாடு சுதந்திரம் கிடைத்த பின்னால் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில், தஞ்சை மாவட்டத்தில் சூப்பரின்டெண்டிங் என்சினீயராக இருந்த எஸ். இராமசாமி அய்யர் என்பவரும் தயாரித்துக் கொடுத்த திட்டங்கள் இன்றைக்கு ப்ளூபிரின்ட் வடிவிலேயே அரசாங்கத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மேற்கொண்டு அதில் எந்த விதமான கவனமும் செலுத்தப்படவில்லை. பாசன வசதியைச் செம்மைப்படுத்த, வடிகால் வசதிகளை சீர் செய்ய, காவேரி நதி நீரை நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்வதற்கான சிறப்பு அம்சங்கள் எல்லாம் சரியான நல்ல திட்டங்கள் எல்லாம் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது சம்பந்தமாக இந்த அரசு என்ன செய்திருக்கிறது? அதை எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்பது பற்றி ஆலோசனை செய்கிறார்களா? அதற்கு வேண்டிய நிதியை எங்கிருந்து பெறுவது என்று சிந்தித்தார்களா என்று பார்த்தால் எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. இனிமேலாவது அந்தத் திட்டங்களைப் பார்த்து, புதிதாக நல்லமுறையில் திட்டங்களைத் தயாரித்து, செம்மைப்படுத்த வேண்டும்.

எதற்காக இதைப் பிரதானமாகக் குறிப்பிடுகிறேன் என்றால் வடிகால் வசதி இல்லாமல் தஞ்சை மாவட்டம் மட்டுமல்ல; நெல்லை மாவட்டத்தில்கூட தாமிரபரணி பாசனத்தில் ஆறுகநேரி பகுதி ஒவ்வொரு ஆண்டும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் விளையும் நெல்லை அறுவடை செய்து கொண்டுபோக முடியாமல் நீரில் மூழ்கிப்போய் விடுகிறது. இதை எல்லாம் சீர் செய்ய வேண்டுமென்றால் வடிகால் வசதிக்காக ஒதுக்கப்படுகிற குறைந்த நிதி போதாது, இந்த நிதியின் அளவை அதிகமாக்க வேண்டும்.

நாம் பிரதானமாக பாசனத்திற்கு நம்பிக்கொண்டிருக்கிற காவேரி சம்பந்தமாக தொடர்ந்து தாவா இருக்கிறது. இந்த காவேரி சம்பந்தமாக இரண்டு நாட்களுக்கு முன்னால் கர்நாடக அமைச்சர் ஒருவர் பத்திரிகை வாயிலாக ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். டிரிபியூனலுக்குப் போகவேண்டாம், இரண்டு மாநிலங்களும் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி, பிரச்சனையைத் தீர்த்துக்கொள்ளலாம், தீர்க்க முடியும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே தமிழக முதலமைச்சர் இதிலே விசேஷ கவனம் செலுத்தி, மற்ற வேலைகளை கொஞ்சம் ஒத்தி வைத்து, கர்நாடக முதலமைச்சரோடு அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சரோடு 2, 3 நாட்கள் அங்கே உட்கார்ந்து பேசி, இதிலே ஒரு தீர்வு காண வேண்டும். 1974 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் தாவா தீரவில்லை. ஒவ்வோராண்டும் நமக்கு திறந்து விடவேண்டிய தண்ணீரை அவர்கள் சரியாக விடவில்லை. விட்டாலும் காலாகாலத்தில் விடவில்லை; பலமுறை வற்புறுத்தினால்தான் ஓரளவுக்குத் தண்ணீரை விடுகிறார்கள். அதனால்

நாம் பெரிதும் பாதிக்கப்படுகிறோம். குறிப்பாக தஞ்சை மாவட்டம் பெருமளவுக்குப் பாதிக்கப்படுகிறது. ஆகவே இதிலே விசேஷ அக்கறை செலுத்தி, உடனடியாக இந்தக் காவேரி நதிநீர் பிரச்சனையைத் தீர்த்துவைக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். முதலமைச்சர் இப்போது இங்கே இல்லா விட்டாலும் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் முதலமைச்சரிடம் சொல்லி, தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1977 ல் உடைந்துபோன குடகனாறு அணை இன்றைக்கும் சீர்செய்யப்படவில்லை. பரிசீலனை, பரிசீலனை, ஆய்வு என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள், திட்டம் போடுகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 10 ஆண்டுகள் ஆகிவிட்டன அந்த அணை உடைந்து. நானும் போய்ப் பார்த்தேன், மற்றவர்களும் பார்த்தார்கள்; முதலமைச் சரும் வந்து பார்த்தார் அந்த அணையின் மண் கரை மட்டும் தான் உடைந்திருக்கிறது, கல் கட்டு அப்படியே இருக்கிறது. உடனடியாக அந்த அணையை சீர் செய்திருந்தால் நல்ல பயன் ஏற்பட்டிருக்கும். இனிமேலாவது அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நெல்லை மாவட்டத்தில் கொடுமுடியாறுத் திட்டம் இருக்கிறது. அமைச்சருக்கு அதுபற்றி நன்றாகத் தெரியும். கொடுமுடியாறு திட்டம் வரவேண்டுமென்று ஏறத்தாழ 10, 12 ஆண்டுகளாகச சொல்லிக் கொண்டிருக்கிறார்சள் அந்தப் பகுதி மக்கள். அதற்கு திட்டமிடப்பட்டு, ஒரு கோடி ரூபாய் வரையில் வேலையும் செய்யப்பட்டிருக்கிறது. எழுப்பிய கட்டிடங்கள் அப்படியே இருக்கின்றன. கடைசியாக, சமீபத்தில் ஒரு பெரிய லாரியை உள்ளே வைத்து பூட்டியிருக்கிறார்கள். அது அப்படியே இருக்கிறது. இவ்வளவு செலவழிக்கப்பட்ட பிறகு யாரோ ஒரு பெரிய மனிதர் தலையிட்டால் வேலை நடக்காமல் இருக்கிறது. அவருடைய தோட்டம் அங்கே இருக்கிறது, தோப்பு இருக்கிறது அவை அழிந்துவிடும் என்று சொல்லி, அந்த அணை வேலை நடைபெறாமல், பரிசீலனை, ஆய்வு என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியே ஆய்வு, பரிசீலனை, ஆய்வு என்று தொடர்ந்து போய்க்கொண்டிருக்கிறது. இனிமேல் அதற்கு ஆய்வு தேவையில்லை. ஏற்கனவே ஆய்வு எல்லாம் செய்தாகி விட்டது. சாதகமான பதில் வந்திருப்பதாகத் தகவல். ஆகவே உடனடியாக கொடுமுடியாற்றுத் திட்டத்தை நிறைவேற்றவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் அவர்களே, இங்கே ஒரு குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய காரணத்தினால், நான் மதியம் பதில் தருவதற்கு முன்னால், மாலைப் பத்திரிகை களில் இப்படிப்பட்டக் குற்றச்சாட்டுக்கள் வந்துவிடும் என்பதற்காக இப்போதே பதிலளிக்க விரும்புகிறேன்.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டத்தைப் பொறுத்த மட்டிலும், ஏற்கனவே அதற்குரிய ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் ஆரம்பக் கட்டத்தில் வேலைகள் மேற்கொள்ளப் பட்ட நேரத்தில், இந்தப் பணிகளை எடுத்துக்கொள்ளமுடியாது என்று அதிகாரிகள் ஒரு முடிவுக்கு வந்ததால், அதை மாற்றி கட்டாயமாக அந்தப் பணிகளை செய்தாகவேண்டும், அதற்கான ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இந்த அரசு உத்தரவிட்டிருப்பதன் விளைவாகத்தான், விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அரசின் முடிவிற்கு வந்த நேரத்தில்தான் ஒரு குறையைக் கண்டுபிடித்தோம். அந்த நீர்த் தேக்கத் திட்டத்தினால் பயன் அடையும் பாசனக் குளங்கள் எட்டு தான், என்பதை அறிந்தோம். இரண்டு கால்வாய்கள், வள்ளி யூரான் கால்வாய், வடமலையான் கால்வாய். இரண்டு கால்வாய் களின் மூலமாக, ஒவ்வொரு கால்வாயின் மூலம் 4 குளங்கள் தான் பயனடைகின்றன. அந்தப் பகுதி மக்கள் 40, 50 குளங்கள் பயனடையவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறார்கள். இப்போது அதிகாரிகளால், அல்லது பொறியாளர்களால் தயாரிக்கப்பட்ட திட்டத்தினை அரசு ஏற்றுக்கொண்டால், மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல், தனியார் தோட்டத் திற்கு அழிவு அதிகமாக இருக்காது என்பதையும், அதே நேரத்தில் அதிகமாக எதிர்பார்க்கிற ஏழை விவசாய மக்கள் நம்பிக்கை இழப்பார்கள் என்ற நிலைமை இருக்கிறது. அதற்காக தொடர்ந்து அந்த திட்டத்தினை மறுபடியும் மாற்றி அமைப்பது. 40, 50 குளங்கள் பயனடையும் விதத்தில் இந்தத் திட்டத்தை மாற்றி அமைக்க இந்த அரசு இப்போது ஈடுபட்டிருக்கிறதே தவிர, தனியார் பாதிக்கப்படுவார்கள் என்ற எண்ணம் சிறிதளவு கூட இந்த அரசிற்கு இல்லை, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விரைவில் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நம்பு கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. உடனடியாக, துரிதமாக அந்தத் திட்டத் தினை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். 8 குளங்களா, 10 குளங்களா? என்பதல்ல பிரச்சினை. அந்தப் பகுதியில் அணை வரவேண்டும். அதன்மூலம் அங்குள்ள கிணறுகள் நீர் மட்டம் உயரவேண்டும். அதனால் தான் பிரச்சினைகள் தீர்க்கப்படும். தமிழகத்திலே தண்ணீரை தங்கத்திற்கு சமமாக மதிப்பார்கள். இதிலே பணத்தை பார்க்கக் கூடாது. எங்கெங்கு முடியுமோ, அங்கங்கு அதிகமாக தண்ணீரைத் தேக்க வேண்டும். அதிலே கட்டுப்படியாகுமா, கட்டுப்படியாகாதா என்றெல்லாம் பார்க்கக் கூடாது. வறட்சி, பஞ்சம், வெள்ளம் ஆகியவை வரும் நேரத்தில், எப்படி செலவு செய்கிறோமோ. அது எப்படி கட்டுப்படி யாகிறதோ, எப்படி கணக்கு பார்க்காமல் செலவழிக்கிறோமோ, அந்த அளவிற்கு இதிலும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1984 ஏப்ரல் 24

இன்றைக்குப் பெரியார் அணையைப் பொறுத்தவரையில், கேரளத்திற்கும், நமக்கும் உள்ள ஒப்பந்தப்படி இன்னும் கூட 152 அடி தண்ணீரை தேக்க வேண்டும் என்றாலும் இப்போது குறை வாகத்தான் தேக்கப்படுகிறது.

மேலும் பொதுப்பணித் துறை மூலமாக வேண்டிய ஏற்பாடு களைச் செய்ய வேண்டும். அந்த அணை ஏற்கனவே பழுது பார்க்கப்பட்டதாக அறிகிறேன். இன்னும் கொஞ்சம் பழுது பார்க்கப்படவேண்டி இருந்தாலும் கூட, முழுவதையும் பழுது பார்த்து, அதனுடைய முழு அளவான 152 அடி தண்ணீரை தேக்கி வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

(பிற்பகல் 12–30)

தர்மபுரியில் போனவருடம் போனபோது பார்த்தேன். சலவரப்பள்ளி என்ற இடத்தில் ஒரு அணையைக் கட்டியிருக் கிறார்கள். கட்டிடங்கள் கட்டி இருக்கிறது. மெஷினரி எல்லாம் இருக்கிறது. அந்தக் கட்டிடத்தில் பேர்பாதி வேலைகள் முடிந்து விட்டன அதிகமாக செலவழித்த பிறகு, கோர்ட்டிலே நடவடிக்கை, வழக்கு என்று சொல்லி அப்படியே இருக்கிறது. இப்போது வழக்கில் இருந்தாலும் கூட, அதை துரிதப்படுத்தி, கலவரப்பள்ளி அணையை கட்டி முடிக்க வேண்டும். அதனுடைய மதிப்பீடு 606.65 இலட்சம் ரூபாய். வேலைகள் எல்லாம் அரை குறையாகத்தான் இருக்கிறது. என்ன காரணம் என்றால், யாரோ அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர் கோர்ட்டுக்குப் போயிருப்பதாகச் சொல்கிறார்கள். இப்படி கோர்ட்டிற்குப் போனவரைக் கூப்பிட்டு பேசி, காம்பன்சேஷன் கொடுத்திருந் தால்கூட, அந்த வேலை முடிந்திருக்கும். அப்போதே செய்தி ருந்தால், பாதி செலவு குறைந்திருக்கும். ஆனால் இப்போது மேற்கொண்டு வேலைகளை செய்ய 600 இலட்சம் ரூபாய் ஆகலாம் என்று தெரிகிறது. எனவே அப்போதே கூப்பிட்டு, காம்பன்சேஷன் தொகையைக் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்தி ருந்தால், இந்த வேலைகள் முடிந்திருக்கும். இப்போது வழக்கு சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறது, ஹைகோர்ட்டிலே இருக்கிறது என்கிறார்கள். அது எந்தக் கோர்ட்டிலே இருந்தாலும் கூட சீக்கிரமாக அந்த வழக்கை முடித்து, அந்த அணையைக் கட்டி முடிக்க வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னால், சம்பந்தப்பட்டவர்களைக் கூப்பிட்டு, அரசாங்கம் கூப்பிட்டுக் கேட்கும்போது, அவர்கள் யாரும் மறுக்க முடியாது. அரசாங்கத் திற்கு இருக்கிற வலுதான் காரணம். எனவே நீங்கள் அவர்களைக்கூப்பிட்டுப் பேசி, அவர்களைக் காப்பரமைஸ் பண்ணி அந்த அணையின் வேலைகளைத் துரிதமாகச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1984 ஏப்ரல் 24] [திரு. சோ. அழகர்சாமி]

அதற்கு அடுத்தபடியாக, பரம்பிக்குளம் திட்டம். இதிலே ஆனைமலையாறு திட்டத்தை நிறைவேற்றினால் ஏறக் குறைய 2 லட்சத்து, 14 ஆயிரம் ஏக்கருக்கு பாசனம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. எனவே இதற்கு வேண்டிய துரிதமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வால்பாறைத் தொகுதியில் உள்ள பரம்பிக்குளம் நீர்ப்பாசனத்தின் கால்வாய்கள் எல்லாம் தூர் வாரப்படாமல் பல ஆண்டுக்காலமாக இருப்பதன் காரணமாக, கீழ் மடையிலே, கடைசியிலே உள்ள விவசாயிகளுக்கு தண்ணீர்ப் போய்ச் சேரவில்லை என்று நம்முடைய வால்பாறைத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் ஏ. டி. கருப்பையா அவர்கள் சொல்கிறார். எனவே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக நெல்லை மாவட்டத்திலே உள்ள பச்சையாறு திட்டம். இது சம்பந்தமாக ஏற்கெனவே சொல்லிக் கொண்டிருந்தாலுங்கூட இன்றைக்குக்கூட இது சம்பந்தமாக ஆய்வில் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறீர்களே தவிர, அதற்கு வேண்டிய துரிதமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மழைக்காலங்களிலே அந்த மலையிலிருந்து வருகிற தண்ணீர் எக்கச்சக்கமாக வந்து அந்தப்பகுதியிலிருக்கிற நிலங்களை எல்லாம் அடித்து மிகப் பெரிய சேதாரத்தை ஏற்படுத்துகிறது. இது சம்பந்த மாக சொல்வது அங்கே சிங்கவால் குரங்கு இருக்கிறது, அதற்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக நிறுத்தி வைத்திருப்ப தாகச் சொல்கிறார்கள். சிங்கவால் குரங்கைப் பற்றி கவலைப் படக்கூடாது. மனிதனைப் பற்றித்தான் கவலைப்படவேண்டும் முதலில். ஏன் என்றால் மனிதனுக்கு முதலில் உணவு கிடைக்க வேண்டும், விவசாயம் பண்ண வேண்டும். எனவே இது சம்பந்தமாக துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இது ரொம்ப நாளாகவே இருக்கிறது.

அதற்கு அடுத்தபடியாக, இந்த வடிகால் வசதி சம்பந்தமாக சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆறுமுகமங்கலத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே இடையார்காடு, தெற்கவடிகால் ஆகிய அப்பகுதி மக்கள் வடிகால்களை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று ரொம்ப நாளாக கேட்டு இருப்பதாகச் சொல் கிறார்கள். அது சம்பந்தமாக நீங்கள் ஒரு அபிவிருத்தி வரி போட்டாலும் பரவாயில்லை. அதைக்கூட கொடுக்க நாங்கள் தயார் என்று சொல்கிறார்கள் இந்தக் கால்வாயை வெட்டினால், மிகுதி தண்ணீர் பூராவும் ஆற்றுக்குப் போய்விட்டால், எங்களுக்கு வருடா வருடம் ஏற்படக்கூடிய பாதிப்பு ஏற்படாது என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் இப்போது கூட வறட்சி ஏற்பட்டபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சென்ற போது, அங்குள்ள விவசாயிகள் அனைவரும் சேர்ந்து மனு கொடுத்திருக்கிறார்கள். அப்பகுதி வயல்கள் முழுவதும் நீரில் மூழ்கி விட்டது. அங்கே வாய்க்கால் இல்லாததினால், 15 நாள்

மழை பெய்து தண்ணீர் தேங்கி விட்டதால், ஒரு ஏக்கருக்கு 40 மூட்டைகள் கிடைப்பதற்கு பதிலாக 4 மூட்டைகள் கூட வர முடியாத நிலை இருக்கிறது. ஆகவே உடனடியாக வடிகால் வசதியை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது இரண்டு இடத்லதச் சொல்லியிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்திலும், நெல்லை மாவட்டத்திலே உள்ள தாமிரபரணி பாசனம் ஆறுமுகமங்கலம் பகுதியிலும் இதுமாதிரி இன்னும் பல இடங்களிலும் இருக்கலாம். எனவே வடிகால் வசதி களைச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப்பிறகு, கிழக்கு முகவை மாவட்டத்திலே வைகை யாற்றுப் பாசனம் சம்பந்தமாக இந்த அறிக்கையிலே சொல்லி யிருக்கிறார்கள். அதிலே இரண்டுபக்கத்திலேயும், அந்த விராகனூர் பக்கத்திலே ஒரு ரெகுலேட்டரும், பார்த்திபனூர் பக்கத்திலே ஒரு ரெகுலேட்டரும் கட்டப் போகிறோம், அதற்கு வேண்டிய பணத்தை எல்லாம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். நான் கூட அங்கே போனபோது அதைப் போய்ப் பார்த்தேன். அந்த ஆற்றுப் பகுதியிலே மணலை அள்ளிப் போடுவதினாலேயே மழை வந்தவுடனே மணல் எல்லாம் அடித்துக் கொண்டு போகப்பட்டு, கம்ப்ளீட்டாக அந்தக் கால்வாய் முழுவதும் போய்விட்டது. ஆற்லைறவிட்டு, கொஞ்சம் தள்ளி ரோட்டுப் பக்கமாக இருக்கிற கால்வாய் செம்மையாக இருக்கிறது. ஆகவே அந்தக் காண்ட்ராக்டாரர்கள் பணம் முழுவதையும் எடுத்துக் கொண்டதுதான் மிச்சமே தவிர, எவ்வளவு பணம் செலவழித்தாலும் கூட, அந்த வைகைக்குப் பக்கத்திலே இருக்கிற கால்வாய்களைச் செப்பனிடாததின் காரணமாக எந்தப் பிரயோசனமும் இல்லாமல், இதுவரை செலவழித்த பணம் வீணாகத்தான் போயிருக்கிறது. இன்று வரையிலும் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட்டாலே தெரியும். 2 பக்கத்திலே இருக்கிற அந்தக் கால்வாயை செப்பனிடுகிறோம், செப்பனிடுகிறோம் என்று சொல்லி, மணலை அள்ளிக் கொட்டி, திரும்பவும் மழை வரும்போது அந்தத் தண்ணீர் மணலை அடித்துக் கொண்டு போய்விடுகிறது. இதனால் விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்த மாதிரி இன்னும் பல திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன.

நெல்லை மாவட்டத்தில் உள்ள இருக்கங்குடி நீர்த்தேக்கத் திட்டம் என்று 7, 8 வருடமாகச் சொல்லிக் கொண்டு வருகி றார்கள். உடனடியாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதமாகச் செய்ய வேண்டும்.





அதே மாதிரி, நான் நேற்றே பேசும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்றைக்குச் சொல்லுங்கள் என்று சொன் னார்கள். செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் தாலுக்காவில் உள்ள மேல நல்லாத்தூர் ஏரி நானே போய்ப் பார்த்தேன். அதிலே 3 மதகுகள் இருக்கின்றன. அந்த ஏரி ரிப்பேர் செய்து 15 வருடங்கள் ஆகிவிட்டன. அந்த கரைகள் எல்லாம் போய் விட்டன. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், (மணியடிக்கப்பட்டது) அங்கே உள்ள பிர்லாவினுடைய இந்துஸ்தான் மோட்டார்ஸ் என்று நிறுவனத்திற்குள்ளே இரண்டு மதகுகள், 2 கால்வாய்கள் செல்லுகின்றன

அந்தக் கால்வாய்களுக்கு மறைச்சி முள்வேலி கம்பி போட்டாகி விட்டது. நான் நேரிலேயே பார்த்தேன் இந்த முள் வேலி கம்பி தடுத்ததினாலே, இந்த நிறுவனத்திற்கு கீழ் பக்கம் உள்ள வயல்களுக்கு, ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் செல்லவில்லை. அது மட்டுமல்லாமல் அந்த கண்மாய்களிலே கொஞ்சம் கொஞ்சமாக கரையை உடைத்து, அதைப் பூராவும் ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து, அந்த நிறுவனம் முயற்சி செய்கிறது. அங்குள்ள அதிகாரிகளாலேயே வலுவுள்ள பிர்லாவை எதிர்க்க முடியவில்லை. அவர்கள் தான் அந்த கலங்களையும் உடைத்திருக்கிறார்கள். திரும்ப அவர்களிடம் போய் அதைக் கட்டிக் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். 'ஏம்பா உடைத்தே, உடைத்ததற்காக கட்டிக் கொடு' என்று சொல்லி அவர்களும் அரைகுறையாக கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அங்கே நியாயமான நடவடிக்கை இல்லை என்று சொல்கிறேன்.

அதே மாதிரியாக நீர்வரத்து கால்வாயை, அந்த ஏரிக்கு தண்ணீர் வரக்கூடிய கால்வாயை, புல்டோசர் வைத்து தூர்த்து, தண்ணீரை ஏரிக்கு வராமல் செய்து, அந்த தண்ணீரை ஆற்றுக்கு மாற்றிவிட்டு, அந்த ஏரியைப் பூராவும் தான் ஆக்கிரமித்து அந்த தொழிற்சாலையை விரிவு படுத்துவதற்கு, இந்த ஏரியை யும் குளோஸ் பண்ணி, பக்கத்திலே உள்ள விவசாயிகளையும் குளோஸ் பண்ண வேண்டும் என்று முடிவெடுத்திருக்கிறார்கள். அங்குள்ள விவசாயிகளும் சொல்கிறார்கள், எங்களுடைய நிலத்தை பூராவையும் எடுத்துக் கொள்ளுங்கள், எங்களுக்கு வீட்டுக்கு ஒரு ஆளுக்கு அந்த நிறுவனத்திலே வேலை கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்க ஒப்பந்தம் செய்தால், வருடத்திற்கு 3 பேருக்குத்தான் தருவோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆக, 600 பேர்களுக்கு வேலை கொடுப்பதற்கு, 200 ஆண்டுக்காலம் இவர்கள் காத்தி ருக்க வேண்டும். 200 ஆண்டுக்காலம் ஒரு மனுஷன் உயிரோடு இருக்கக்கூடிய மருந்தை வாங்கி சாப்பிட்டுவிட்டு, அதற்குப் பிறகு, அந்த நிறுவனத்தில் வேலை பெறுவதற்காக காத்திருக்கக் கூடிய நிலையிலே தான் அங்கே இருக்கிறது.

ஆகையினால்தான் உடனடியாக அமைச்சர் அவர்கள் இதற்கு வேண்டிய ஏற்பாட்டை செய்து, இந்த கண்மாய்களுக்கு வரக் கூடிய கால்வாயை, புல்டோசர் வைத்து தூர்த்ததையும், அந்த

மடையை, மதகை உடைத்ததையும், நேரிடையாக பார்வையிட்டு அல்லது தக்க அதிகாரிகள் மூலமாக பார்வையிடச் செய்து, தக்க நடவடிக்கைகளை எடுத்து அந்த விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இன்று செங்கல்பட்டு மாவட்டத்திலே உத்திரமேரூர் தாலுக்காவிலே சாத்தனஞ்சேரி என்ற இடத்தில் ஓர் ஏரி இருக்கிறது. அந்த ஏரி நிறைந்து இருக்கிறது. ஏரி நிரம்பியிருந்தாலும்கூட, அதிலேயிருந்து ஒரு ஏக்கர் ½ ஏக்கர் நிலம் வைத்திருக்கிற சிறு விவசாயிகளுக்கு தண்ணீர் போவதில்லை. ஏனென்றால் முன் பக்கத்திலே இருக்கிற 2, 3 பெரிய மனிதர்கள், அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, அந்த ஏரியிலே இருக்கிற தண்ணீரை வழியில் மடக்கி வைத்துக் கொண்டு, நாங்கள் விலைக்கு தருகிறோம் அதை வாங்கி நீங்கள் விவசாயம் செய்யுங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த ஏழை எளிய விவசாய மக்களுக்கு, சிறு ஆயக்கட்டை வைத்துக் கொண்டிருக்கக் கூடியவர்களுக்கெல்லாம் முறையாக தண்ணீர் கிடைப்பதற்கு இந்த டிபார்ட்மெண்ட் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், தாசில்தாரிடம் மனு கொடுத்திருக்கிறார்கள். அவரும் போய் சொல்லியிருக்கிறார். ஆனால் அவருக்கு அவர்கள் அடங்கவில்லை. அதனால் இன்று வரையில் அவர்கள் தண்ணீர் பெற முடியவில்லை. அவர்கள் அரிசன ஏழை விவசாயிகள். ஆகவே, அவர்களுக்கு வேண்டிய ஏற்பாட்டை செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்,

அதற்கு அடுத்தபடியாக, தென்பெண்ணை ஆற்றிலே சேந்தனூருக்குப் பக்கம் கிளை நதியாகப் பிரிகிற மலட்டாற்றின் முகத்துவாரத்திலே மணல் மேடிட்டு தூர்ந்துபோய் இருக்கிறதாம். ஆகவேதான் 35 மைல் தூரம் ஓடுகிற அந்த மலட்டாற்றால் குங்கும்பட்டு, விரானம், தென்னம்பாக்கம், செல்லாஞ்சேரி, சிறுகுமாரமங்கலம் ஆகிய கிராமங்களுக்கு—ஆங்காங்கு அணை இருக்கிறது கல் அணையும் இருக்கிறது, மணல் அணையும் இருக்கிறது—இருந்தாலும் கூட முகத்துவாரத்திலேயே மணல் மேடிட்டதன் காரணமாக, இந்தப் பகுதிகளுக்கு தண்ணீரே வருவதில்லை. அதைச் செப்பனிட வேண்டும் என்று பக்கத்திலே இருப்பவர்கள் எல்லாம் போராட்டம் உண்ணாவிரதம் எல்லாம் நடத்தியும் கூட, இதுவரையில் செய்யப்படவில்லை. ஆகவே, அந்த மணல்மேட்டை நீக்கி அந்த தண்ணீர் அப்பகுதிக்கு வருவதற்கு வேண்டிய ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக நம்முடைய பாசனத் துறைக்கு ஒதுக்கிய நிதி குறித்து; நான் முன்பே சொன்னேன். இந்த சிறு பாசனத் திட்டத்திற்கு சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு ஏன் குறைந்திருக்கிறது? சென்ற ஆண்டு 100 ரூபாய்க்கு செய்த வேலையை இந்த ஆண்டு 200 ரூபாய் கொடுத்தால்தான் செய்ய



முடியும். ஏனென்றால் விலைவாசி பூராவும் கூடியிருக்கிறது. ஆட்களுடைய ஊதியம் கூடியிருக்கிறது. சிமெண்ட், செங்கல் போன்ற மற்றப் பொருட்களின் விலையும் உயர்ந்திருக்கிறது. ஆகவே, 100 ரூபாய்க்கு போன வருஷம் ஒரு வேலையை செய்தால், 200 ரூபாய் இருந்தால் தான் இந்த வருஷம் அதே வேலையை செய்ய முடியும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, 1983–84-ல் நிதி ஒதுக்கம் 2 கோடியே 90 லட்சம். இதைச் செலவழிக்க உங்களுக்கு ஏன் இடமே கிடைக்கவில்லையா? அல்லது காண்டிராக்டர்களே கிடைக்கவில்லையா? திருத்திய மதிப்பீட்டிலே அந்தத் தொகை 1 கோடியே 53 லட்சம் தான்.

அதற்குப் பிறகு 84–85-லே மதிப்பீடு 1 கோடியே 72 லட்சம், எதற்கு? இந்தச் சிறு பாசன திட்டத்திற்கு. மொத்தத்திலே நீங்கள் ஒதுக்கியது 52 கோடியே 27 லட்சத்து 66 ஆயிரம். 1983-84-லே மதிப்பீடு 56 கோடியே 92 லட்சம். 1984-85-லே 52 கோடியே 27 லட்சத்து 66 ஆயிரம். ஆகக் குறைவு 4 கோடியே 64 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய், போன வருடத்தை விட, இந்த வருடம் நிதியை குறைத்திருக்கிறீர்கள். இப்படி குறைத்துப் போட்டால் எப்படி வேலை நடக்கும்? ஆனால் நாம் சொல்வோம் என்ஜினியர்கள் இருக்கிறார்கள், டிபார்ட்மெண்ட் இருக்கிறது, சீஃப் என்ஜினியர் இருக்கிறார், அப்புறம் அதற்கு மேலே பொதுப் பணித் துறை எல்லாம் இருக்கிறது என்று எல்லோரையும் சொல்வோம். ஆனால் இவ்வளவு பேர்கள் இருந்தும் காசு ஒதுக்காமல் இருந்தால் என்ன செய்ய முடியும்? காசு ஒதுக்குவதற்கு என்ன தயக்கம்? இவ்வளவு முக்கியமான துறையாச்சே, அந்தத் துறையிலுள்ள பணியாளர்களுக்கு ஒழுங்காக வேலை கொடுக்க பணத்தை ஒதுக்கணுமே, அதுமட்டுமல்லாமல் நீர்ப்பாசனத்துறை சரியாக நடந்தால்தான் நாட்டிலே உணவு பஞ்சமோ அல்லது உணவு பற்றாக்குறையோ ஏற்படாமல் இருக்கும் என்று அக்கறையோடு அந்தப் பணத்தை ஒதுக்கியிருக்க வேண்டுமா இல்லையா? அதே மாதிரியாக பாசனம் குறித்த மூலதனச் செலவில் வடிகால் திட்டத்திற்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள். 83-84-லே 99 லட்சம். அப்புறம் 84-85லே 70 லட்சம். அதிலே 30 லட்சம்

(பிற்பகல் 12-40)

குறைத்து விட்டீர்கள். போன வருடத்தைவிட இந்த வருடம் 30 லட்சம் குறைந்தால் எவ்வளவு வேலை நடக்கும். அதேமாதிரி மொத்தம் 1983-84 இல் மதிப்பிலே 63,99,77,000 ஒதுக்கினீர்கள். ஆனால் 84-85-க்கு 57,62,94,000 தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். 6 கோடியே 36 லட்சம் போன வருஷத்தைவிட இந்த வருடம் குறைவு. அதைத்தான் நான் சொல்கிறேன். முதலிலேயே சொல்லும்போது சொன்னேன். இந்த அரசாங்கத்திற்கு எது முக்கியமோ அந்த முக்கியமான பணிக்கு பணம் ஒதுக்குவதற்கு மனம் வரவில்லை. விவசாயம் முக்கியமில்லையா. அதை நம்பித்தான் கோடிக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள்? தமிழகத்திலே ஏறக்குறைய 4½ கோடி மக்கள் இருக்கிறார்கள் என்றால் அதிலே 3 கோடி மக்கள் விவசாயத்தை நம்பித்தான்.

அது விவசாயத் தொழிலாளியோ அல்லது விவசாயியோ அதை நம்பித்தான் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். பிழைப்பைக் கெடுத்து விட்டீர்கள் என்று சொன்னால் வேலைவெட்டி என்று சொல்லி அவர்கள் நகரப்புறங்களிலே சுற்றிக்கொண்டிருக்கிற ஒரு இக்கட்டான நிலையை மோசமான நிலையை உண்டாக்கியிருக்கிறீர்கள். நம்முடைய நாட்டிலே இவ்வளவு வசதி வாய்ப்புகள் இருந்தும்கூட மத்திய சர்க்காரிடம் போய் மாதா மாதம் எங்களுக்கு 80 ஆயிரம் டன் அரிசி கொடு, கோதுமை கொடு என்று நாம் கையேந்திக் கொண்டிருக்கிற மோசமான நிலையை எல்லோரும் பார்த்து பரிதாபப்படக்கூடிய நிலையில் இருக்கிறோம். இந்த மாதிரியான வசதிகளையெல்லாம் ஏற்படுத்திக் கொடுத்தால் இந்த மாதிரி கஷ்டம் வராது. குடிநீருக்குப் பட்ட கஷ்டம் கொஞ்சமா? ஆகவே பாசனத்துறைக்கு நிதி ஒதுக்கீட்டிலே மிக மோசமாக வேண்டுமென்றே புறக்கணிக்கிறீர்களோ என்று நினைக்கிறேன். அதை மாற்றி சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பாசனம் குறித்த மூலதனச் செலவில் சிறு பாசன சிறப்புத் திட்டம் என்று சொல்லி 83-84 இல் 2 கோடியே 47 லட்சம் ஒதுக்கினீர்கள். இந்த வருடம் அதற்கு 2 கோடியே 25 லட்சம்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஏன்? எல்லாவற்றிலுமே குறைவு. அதேமாதிரி தூர்வாருதல் பொறுத்தும். திரு. ஆர்.டி. கருப்பையா தொகுதியிலே உள்ள நிலைமைகளைச் சொல்கிறார், கால்வாய் எல்லாம் மூடிவிட்டது, அதை அகற்றுவதற்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறோம்? 1983-84 இல் 3 லட்சம், 1984-85 இல் 2 லட்சம், இரண்டு லட்சத்திலே ஒரு ஊரிலே ஒரு சிறிய கால்வாயில்தான் தூர் எடுக்கலாம். ஆகவே பெயரளவுக்கு டோக்கன் அமவுண்ட் என்ற அளவுக்கு ஒதுக்கியிருக்கிறீர்களே தவிர அக்கறையோடு இந்தக் காரியத்தைச் செய்யவில்லை.

என்னுடைய தொகுதியிலே—அது வருடாவருடம் பஞ்சம் வரக்கூடிய பகுதி, வறட்சி வரக்கூடிய பகுதி—ஒட்டப்பிடாராமோ, சங்கரன்கோவிலோ, கோவில்பட்டியோ, விளாத்திகுளமோ இந்த ஏரியா பூராவும் அப்படித்தான். ஆகவே மழை காலங்களில் நிறைய தண்ணீர் வரும். அந்தத் தண்ணீரைத் தேக்கி வைத்து ஏரியாக கண்மாயாக அமைத்தோம் என்று சொன்னால் அந்தப் பக்கத்திலே உள்ளவர்கள் ஏதோ ஒரு மகசூலாவது செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். பல இடங்களிலே அந்த காலத்திலே குளம் அமைத்து இருக்கிறார்கள். அந்த மாதிரி இடங்களில் குடிநீருக்கும் பஞ்சமில்லை, ஆடுமாடுகளுக்கும் தண்ணீருக்குப் பஞ்சம் இல்லை. ஆகவே இரண்டு வருடத்திலே ஒரு மழை பெய்தாலும் அதைத் தேக்கி வைப்பதன் காரணமாக ஒரு மகசூலுக்கு முழுமையாக இடம் இருக்கிறது. மீதி கிணற்றிலே உள்ள வாட்டர்லெவல் உயர்ந்துவிடுகிற காரணத்தினால் கிணற்றுப் பாசனம் செய்யவும் முடிகிறது. ஆகவே விசேஷமாக ஒரு திட்டம் தீட்டி அதிகமாக நிதி ஒதுக்கி தமிழகத்திலே உள்ள 39 ஆயிரம் குளங்களையும்—அது பூராவும் மேடிட்டு இருக்கின்றது, மத்தியிலே 2, 3 அடி தண்ணீர்தான் நிற்கிறது, ஆறுமுகம் கண்மாய் பெரிய கண்மாய், அதிலே 3 அடி தண்ணீர்





தான் மத்தியில் நிற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அவைகளை எல்லாம் தூர் எடுக்கவும் ஆழப்படுத்தவும் நடவடிக்கை எடுத்து இப்படிப்பட்ட பிரயோசனமான காரியங்களைச் செய்ய வேண்டுமே தவிர பிரயோசனம் இல்லாமல் சிலவற்றைச் சொல்லிக் கொண்டிருப்பதிலே பலன் இல்லை. அந்தப் பகுதியிலே ஏரிகள், குளங்கள் அமைக்கலாம் என்று புரப்போசல் வந்திருக்கிறது. அது பூராவும் கிடப்பிலே கிடக்கின்றது. இப்போது கூட புதுப்பட்டி, பூதலபுரம் கண்மாய் பற்றி 15 வருடங்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்., கிராமத்திலே நிலம் இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கிற ஒரு திட்டத்தின் கீழ் மத்திய சர்க்காருடைய நிதி உதவியுடன் ஏதோ திட்டம் செய்யப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர ஒன்றும் இதுவரை செய்யவில்லை. அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் 4, 5 திட்டங்கள். டி. புதுப்பட்டி, பூதலபுரம், நாச்சியார்பட்டி என்று இருக்கின்றன. அதைப்போலவே சின்னவேடபட்டி என்று கோவை மாவட்டத்திலே 2 கோடியே 47 லட்சத்திலே திட்டம் அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இப்படி எல்லாமே பரிசீலனைதான். இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்த்தால் பரிசீலனை பரிசீலனை எத்தனை நாளைக்கு பரிசீலனை செய்து கொண்டு இருப்பீர்கள். ஆகவே பரிசீலனை பரிசீலனை என்பதை விட்டுவிட்டு செய்கையில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதிதாக எங்கெங்கே ஏரிகள், நீர்த்தேக்கங்களை அமைக்க முடியும் என்று பார்க்க வேண்டும். எனக்கு முன்னாலே பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். சிறு சிறு குட்டைகள், பான்ட் ஸ்கீம் போட்டுவிட்டால் மழை காலங்களிலே அந்தக் குட்டைகளிலே நீர் நிரம்பும், கண்மாய்களிலே கிணறுகளிலே தண்ணீர் மட்டம் உயரும். ஆகவே இதிலே கொஞ்சம் அக்கறையோடு காரியங்களைச் செய்ய வேண்டுமே தவிர வேறு எதையும் பேசிக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. முக்கியமான பாசனத் துறையை இந்த அரசு அக்கறையோடு கவனிக்கவில்லை, இனிமேலாவது கவனித்து இந்தக் காரியங்களைச் செய்தால் தமிழகம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதோடு மட்டுமல்ல, பிற மாநிலங்களுக்கு உணவு தானியத்தை சப்ளை செய்யக்கூடிய முறையிலே உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி அல்லது கேபினட்டிலே சொல்லி வேண்டிய ஏற்பாடுகளைத் துரிதமாக செய்ய வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு.க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களால் அவைக்கு முன்னால் கொண்டு வந்து இருக்கிற மானிய கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை நான் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியை கூறி என்னுடைய கருத்துக்களை இங்கே அவையின் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

(திரு. க. பாலசுப்பிரமணியன்) [1984 ஏப்ரல் 24

நீர்ப்பாசனம் என்று சொன்னாலே அது காவேரி பாசனம் என்று தான் வரலாறு நீண்ட ஆண்டுகளாக சொல்லிக்கொண்டிருப்பதை தமிழகம் அறியும். காவேரி என்பது குடகு மலையில் ஆரம்பித்து தர்மபுரி மாவட்டத்தில் நுழைந்து சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணையில் தேங்கி அதன் பிறகு சேலம் மாவட்டத்திற்கு பயனை அளித்து, அதற்கு பிறகு திருச்சி மாவட்டத்திற்கு ஒரு பகுதிக்கு பலனை அளித்து, தஞ்சை மாவட்டம் முழுமைக்கும், தென் ஆற்காடு மாவட்டத்தின் உள்ள ஒரு பகுதிக்கும், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஒரு பகுதிக்கும் ஆக தமிழகத்தில் உள்ள 5 மாவட்டங்களுக்கு காவேரி நீரினுடைய பாசனம் நீண்ட நெடும் ஆண்டுகளாக பயன் பட்டு வருகிறது என்று சொன்னால் அது தமிழகத்தின் 3-ல் ஒரு பகுதிக்கு காவேரி நீர் பாசனம் பயன் அளித்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். காவேரி நீரினுடைய பாசனம் 1924-லேயே ஒப்பந்தம் ஆகி அது 1974-லே முடிந்து இன்றைக்கு 10 ஆண்டு காலமாக சீரான முறையில் தண்ணீர் கிடைக்காமல் தமிழகத்திற்கு வளத்தை கொடுக்கக்கூடிய தஞ்சை மாவட்டம் பரிதவித்துக் கொண்டிருக்கிறது என்பதை தமிழகம் அறியும். இந்த நேரத்தில் காவேரி அணையை கட்டிய கரிகால் பெருவளத்தானை நாம் நினைவு கூறுவது நல்லது என்று கருதுகிறேன். எத்தனையோ வல்லுநர்கள் எல்லாம் இப்போது இருந்தாலும் கூட ஆங்கிலேயர்கள் உலக வல்லுநர்களை அழைத்து வந்து காவேரிக்கோ அல்லது மற்ற அணைகளுக்கோ நல்ல திட்டங்கள் வகுத்தாலும் கரிகால் பெருவளத்தான் கட்டிய கல் அணை மாதிரி கிடையாது. அதற்கு முன்னால் மேட்டூரில் தண்ணீரை தேக்கி அந்த கல் அணை மூலமாக தஞ்சை மாவட்டம் பக்கத்தில் உள்ள மாவட்டங்களுக்கு பலன் அளிக்க முடியும் என்ற தத்துவத்தை அந்த காலத்திலேயே ஏறக்குறைய பல நூறு ஆண்டுகளுக்கு முன்னதாகவே கரிகால் பெருவளத்தான் செய்தான் என்பது வரலாற்று உண்மை. அப்படிப்பட்ட அந்த தண்ணீரை கொண்டு ஏறக்குறைய தஞ்சை மாவட்டம் பயன் அடைந்து வந்த காலம் மாறி இன்றைக்கு பல மாவட்டங்கள் மேலே இருக்கின்ற மாவட்டங்கள் அதை பயன்படுத்திக்கொண்டு வருகிறது. அதே நேரத்தில் நமக்கு மேலே இருக்கக்கூடிய தண்ணீரை விடக்கூடிய கர்நாடக மாநிலம் தமக்கு தண்ணீர் விடாமல் தடுப்பு செய்து கொண்டு வருகிறது. இந்த நேரத்தில்தான் காவேரியினுடைய அந்த ஒப்பந்தத்தை தமிழக முதலமைச்சர் அவர்கள் புதுப்பித்து மீண்டும் காவேரிக்கு தொடர்ந்து நீர் வருவதற்கு அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டு வருவதற்கு நான் மனமாற பாராட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். காவேரியிலே அணையை கட்டிய கரிகாலன் கொள்ளிடம் என்று அதற்கு வடிகாலாக அமைத்து வைத்தான். கொள்ளுகின்ற இடமாகிய அந்த கொள்ளிடம் காவேரியிலேயே அதிகமான பயனை அடைந்த மக்கள் அந்த உபரி நீரை வெளியேற்றுவதற்காக கட்டப்பட்டது தான் கொள்ளிடம். அந்த கொள்ளிட கால்வாயை கட்டிய கரிகாலன் கடற்கரையிலே பழைய ஆறு என்ற இடத்திலே அந்த கால்வாய் வங்கக் கடலில் வந்து இணையும் அளவுக்கு செய்து



1984 ஏப்ரல் 24] (திரு. க. பாலசுப்பிரமணியன்)

வைத்தான். அந்தப் பகுதியிலே தான் ஏறக்குறைய 30 கிலோ மீட்டர் தூரத்திலே காவேரியினுடைய கரையில் கொள்ளிடத்தினுடைய கரையில் என்னுடைய தொகுதி இருக்கிறது. நான் இங்கே சொல்வது குடகு மலையில் ஆரம்பித்த காவேரி தஞ்சை மாவட்டத்தினுடைய டெயிலென்டு என்று சொல்லக்கூடிய கடைசி பகுதியாகிய சீர்காழி தாலுக்காவிலே கடலிலே கலக்கியது என்று சொல்லும்போது நான் ஒரு வேதனையான கருத்தையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

ஏனென்றால், மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு இரண்டு மாதங்கள் கழித்துத்தான் சீர்காழி தாலுக்காவிற்கு வருகிறது. அதற்குக் காரணமே, நீண்ட நெடுங் காலமாக அந்தக் காவேரிக் கால்வாய்களைச் சரியாகப் பராமரிக்காமல் விட்டதுதான். சரியான முறையில், ஏறக்குறைய இருபதாண்டுக் காலமாக—1962 ஆம் ஆண்டுக்குப் பிறகு பராமரிக்கப்படவில்லை. அதனால்தான், பலயிடங்களிலே—கடலோரப் பகுதிகளிலே வெள்ளம் எடுப்பதைவிட, நடுப்பகுதியிலே, மத்தியப் பகுதியிலே அதிகமாக வெள்ளம் எடுக்கிறது. அதற்குக் காரணமே, காவேரியினுடைய இந்தக் கிளைக் கால்வாய்கள் ஓடுகின்றஇடமெல்லாம் பக்கத்துக் கரைகளெல்லாம் சாலைகளாக இருக்கின்றன. ஆகவே சாலைகள் சரியான முறையில் செப்பனிடப்படுவதில்லை. அதேபோல, கால்வாய்களும், சரியான முறையிலே தூர்வாரப்படுவதில்லை. இதன் விளைவாகத்தான் கடலோரப் பகுதியிலே உள்ள மக்கள் நல்ல முறையிலே, பாதுகாப்பாக இருந்தாலும், நடு மத்தியிலே இருக்கின்ற மக்கள் பாதுகாப்பு இல்லாமல், வெள்ளத்தினால் அவதிப்படுகிறார்கள். இது தமிழகம் கண்டது. ஆகவே, நான் இந்த நேரத்திலே மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரவர்களுக்கும், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரவர்களுக்கும் என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, அளக்குடி என்ற அந்த இடம், கொள்ளிடத்தினுடைய வெள்ளக் காலத்திலே நேராகக் கடலுக்குச் சென்று கலக்க வேண்டிய இடத்திலே ஒரு தடுப்புச் சுவர் போன்ற காவிரியினுடைய கரை இருக்கிறது. அந்தயிடத்திலே, வெள்ளம் வந்து தாக்குகின்றபொழுது, அங்கே உடைப்பு ஏற்பட்டால் ஏறக்குறைய 20, 25 கிராமங்கள் தண்ணீரில் மூழ்கிவிடக்கூடிய அபாய நிலை நீண்ட காலமாக இருந்து வந்தது. அந்த நிலைமைகளைக் கவனித்த நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள், இன்றைக்குத் தடுப்பு அணையாக, 110 இலட்சம் ரூபாயில்— ஏறக்குறைய 88 இலட்சம் ரூபாய் மதிப்பிட்டு, அதைச் செயல்படுத்த ஆரம்பித்து, இன்னும இரண்டு மூன்று மாதங்களில் 110 இலட்சம் ரூபாய் செலவு செய்து, தடுப்புச் சுவர் எழுப்புகின்ற

அளவிற்கு அந்த அணையை இப்பொழுது கட்டுவதற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். ஆகவே, அதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்களுக்கும், மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சரவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரியிலே வெள்ளம் என்றால், கொள்ளிடத்திலே தான் அதிகமான நீர் பெருக்கெடுத்து ஓடும். ஆகவே, அந்த இரண்டு கரைகளையும் சரியான முறையில் உயர்த்தியும், அகலப்படுத்தியும் கட்டுவதன் மூலமாகத்தான் வெள்ளத்தை நாம் சமாளிக்க முடியும் என்பதை உணர்ந்த புரட்சித் தலைவரவர்கள், இன்றைக்கு இரண்டாண்டுக் காலமாக என்னுடைய தொகுதியிலே ஏறக்குறைய 35, 40 கிலோ மீட்டர் தூரத்திலே கொள்ளிடத்தில் இரண்டு கரைகளையும் நல்ல முறையில் கட்டி அமைத்து; வெள்ளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தமைக்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொள்ளிடத்தில் பலயிடங்களிலே தடுப்புச் சுவர்கள் நீண்ட நெடுங்காலமாகக் கட்டப்பட்டு வருகின்றன. அந்தத் தடுப்புச் சுவர்களெல்லாம் பழுதடைந்து, எந்த நேரத்திலும் வெள்ளம் வரும் நேரத்தில் கீழே விழுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, அவைகளைப் பழுது பார்த்து எடுத்துக் கட்ட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, எலத்தூர் என்ற இடத்திலே இரண்டு தடுப்புச் சுவர்கள் ஏற்கனவே கட்டப்பட்டு, பழுதடைந்து விட்டன. வடரங்கம் என்ற இடத்தில் ஒரு தடுப்புச் சுவர் கட்டப்பட்டு பழுதடைந்து விட்டது. சந்தப்படுகை என்ற இடத்திலே இரண்டு தடுப்புச் சுவர்கள் கட்டப்பட்டு பழுதடைந்திருக்கின்றன. இவைகளைப்பற்றியெல்லாம், ஏற்கனவே இருந்தத் துறையை வகித்து வந்த மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் தகவல்களைக் கொடுத்து, அதற்கான ஆய்வுகளும் நடைபெற்று, இப்பொழுது செயல்படுவதாக் இருக்கிறது. இந்த நிதியாண்டிலேயே அவைகளைக் கட்டுவதன் மூலமாக ஏறக்குறைய 50, 60 கிராமங்களுக்குப் பாதுகாப்பையும், மக்களுக்கு மன தைரியத்தையும் அளிக்க முடியும் என்று நான் அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொள்ளிடத்தில் ஏற்படுகின்ற வெள்ளத்தினாலும் சரி, அல்லது பெருமழையினாலும் சரி, கொள்ளிடத்தில் வருகின்ற தண்ணீர் கடலிலே சென்று வீணாகிறது. ஆகவே, மேட்டூரை எதிர்பார்ப்பதைவிட, அங்கே நமக்குக் கிடைக்கின்ற தண்ணீரை நல்ல முறையிலே சேமித்து வைக்க சில மாற்று ஏற்பாடுகளைச் செய்தால் நல்லது என்று கருதி, சில ஆலோசனைகளைக் கூற விரும்புகிறேன்.

திருச்சி மாவட்டத்ினுடைய கீழ் பகுதியிலே அல்லது தஞ்சை மாவட்டத்தின் மேல் பகுதியிலே கொள்ளிடத்திலே ஒரு பெரிய நிலப்பரப்பிலே அணை ஒன்றைக் கட்டி, கொள்ளிடத்தில் உள்ள





உபரி நீர் கடலுக்குச் செல்லாமல், அந்த அணையிலேயே தேக்கி வைப்பதன் மூலமாக, கோடை காலங்களில் நல்ல பாசனத்திற்கும் வசதி செய்ய முடியும்; வருவாயை ஈட்டுவதற்கும் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அப்பர் டேம் என்று சொல்லக்கூடிய, திருச்சிக்கு மேற்கே, முக்கொம்பு என்ற இடத்தில் தண்ணீரைத் தேக்கி, பிறகு திருச்சிக்குப் பக்கத்தில் இருக்கின்ற கல்லணைக்கு விட்டு, அங்கேயும் தண்ணீரைத் தேக்கி, அதற்குப் பிறகு லோயர் அணை என்று சொல்லக்கூடிய கீழ் அணையிலேயும் தண்ணீரைத் தேக்கி, நீர்ப்பாசனத்தை முறைப்படுத்தி வருகிறார்கள். நான் இங்கே ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். லோயர் அணைக்கும், கடலுக்கும் நடுவிலே, கொள்ளிடம் நதியானது ஏறக்குறைய 60, 65 கிலோ மீட்டர் கடந்து வந்து, கடலில் சேருகிறது. ஆகவே, இந்த நடுமத்தியில் இருந்து ஏறக்குறைய லோயர் அணையிலிருந்து ஒரு 30 கிலோ மீட்டர் தொலைவிலே அல்லது கடலிலேயிருந்து ஒரு 30, 35 கிலோ மீட்டர் மேற்கேயோ செக் டேம் என்று சொல்லப்படுகின்ற தடுப்பு அணையைக் கொள்ளிடத்தில் கட்டவேண்டும். அப்படிக் கட்டுவதன் மூலம் அந்தத் தண்ணீரை நல்ல முறையில் எல்லா காலத்திலும் பயன்படுத்த வசதியாக இருக்கும். நாம் மேட்டூரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற நிலைமையை மாற்றி தனக்குத் தானே என்று சொல்லக்கூடிய செல்ப் சஃபிஷியன்சி என்ற அளவுக்கு தன்னிறைவு பெறமுடியும். இந்த யோசனையை இங்கே இருக்கின்ற அனைத்துப் பொறியாளர்களும் ஆய்விலே எடுத்துக் கொண்டு சாத்தியப்படுமா என்று பார்த்து இதைச் செய்ய வேண்டும் என்னுடைய தாலுக்காவிலே ஏறக்குறைய 50 ஆயிரம் ஏக்கர் நிலங்களை குன்னம்பாறையிலே சாகுபடி செய்து கொண்டு வருகிறோம். அந்த நிலங்களைப் பொறுத்தவரையில் கோடை காலங்களில் மேலே இருந்து தண்ணீரை எதிர் பார்க்காமல் இங்கே பக்கத்திலேயே ஏற்பாடுகளைச் செய்வதன் மூலமாக அந்த மக்களுக்கு நல்ல முறையில் பயன்படும்.

கொள்ளிடத்திலே அதன் படுகையிலே இருக்கின்ற நீர் வற்றாத நீர். அது எந்தக் காலத்திலும் ஊறிக்கொண்டிருக்கின்றது. அதனால்தான் அங்கே இருந்து ஏறக்குறைய 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற சீர்காழிக்கு குடிநீருக்காக கொண்டு வரக்கூடிய அளவுக்கு தமிழக அரசின் ஆலோசனை இருக்கின்றது. ஆகவேஅந்த அணையைக் கட்டுவதன் மூலமாக அந்தத் தண்ணீரை நீர்ப்பாசனத்திற்கும் பயன்படுத்தலாம். அதிலே கிடைக்கின்ற ஊற்றுநீரை நிரந்தரமான குடிநீர் வசதிக்கும் பயன்படுத்தலாம். ஆகவே அப்படிப்பட்ட ஒரு ஆய்வை மேற்கொள்வதன் மூலம் தஞ்சை மாவட்டத்திலே மாயவரம் தாலுக்கா, சீர்காழி தாலுக்கா, தரங்கம்பாடி தாலுக்கா போன்ற தாலுக்காக்களின் நீர்ப்பாசன நிலங்களை நிரந்தரமாகப் பாதுகாப்பதற்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்த முடியும்.

இந்த நேரத்திலே மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நீர்ப்பாசனத் துறையில் இருக்கின்ற அத்தனை பொறியாளர்களுக்கும் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். கொள்ளிடத்தினுடைய கால்வாய்களான புதுமன்னியார், கூப்புடையார் முப்பனார், ராஜன் வாய்க்கால் ஆகியவை எல்லாம் ஆரம்பத்திலே வாய்க்கால்களாக வருகின்றன. சீர்காழி, மாயவரம் தாலுக்காக்களில் நுழையும் போது அவைகள் எல்லாம் கால்வாய்கள். ஆகவே அவைகளிலே இருந்து வருகின்ற தண்ணீரை எல்லோருமே நிலத்திற்குப் பாய்ச்சிக் கொண்டு, பிறகு அதனுடைய உபரித் தண்ணீரை அந்த அந்தக் கால்வாய்களிலே வடிய வைத்து அதை எடுத்துத் தான் நாங்கள் பாய்ச்ச வேண்டிய நிலைமை ஏற்படுவதன் காரணத்தால் தான் மேட்டூரிலே தண்ணீரைத் திறந்தால் இரண்டு மாதங்கள் கழித்துத் தான் எங்களுக்குத் தண்ணீர் வருகின்றது என்று சொன்னேன். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் மாற்ற வேண்டும் என்றால் அந்தக் கால்வாய்கள் நீண்ட நாட்களாகத் தூர் எடுக்கப்படாமல் இருக்கின்ற நிலைமையை மாற்ற வேண்டும். டீசில்ட் என்று சொல்வார்களே அப்படிப்பட்ட அந்தத் தடைகளாக இருக்கின்ற மணல், மண் இன்னும் சில செடிகளை எல்லாம் அகற்றியாக வேண்டும். அப்படி அகற்றுவதன் மூலமாகத்தான் உடனடியாக மேட்டூரிலே திறக்கின்ற தண்ணீர் எங்களுக்கும் கிடைக்கும். அது விவசாயத்திற்கும் பயன்படும். அப்படிப்பட்ட நிலைமையிலே இங்கே இருக்கின்ற பொறியாளர்கள் அதை ஆய்விலே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மழைக் காலங்களில் எங்கு பார்த்தாலும் சேதம் அதிகமாக வந்தது. அப்படி சேதம் அதிகமாக வந்ததன் காரணத்தால் மராமத்து வேலைகள் செய்யாததன் காரணத்தால் அங்கே இருக்கின்ற கால்வாய்கள் எல்லாம் சரியான நிலைமையிலே இல்லை. நாம் சில இடங்களிலே அணைகளை கட்டி இருக்கிறோம். சில இடங்களில் மதகுகளைக் கட்டி ரெகுலேட்டர் மூலமாகத் தண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறோம். ரெகுலேட்டருக்குப் பின்னால் இருக்கின்ற பகுதிகளில் எல்லாம் தண்ணீர் வருகின்ற வேகம் காரணமாக மண் மேடு ஏற்பட்டு தடைகள் ஏற்படுகின்றன. அந்த மண் மேடுகள் வெள்ள நீரைத் தடுத்து, கரைகளையும், சாலைகளையும் உடைத்து விளை நிலங்களை அழித்து விடுகின்றன. கிராமங்களிலும் புகுந்து விடுகின்றன. இதனை நான் இங்கே சொல்லும் போது நீர்ப்பாசனத் துறை அமைச்சருக்கு மட்டும் சொல்லவில்லை. இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே ஏற்பட்ட வெள்ளம் கடலோரப் பகுதிகளைப் பாதிக்கவில்லை; அதற்கு மாறாக நடுவிலே இருந்த பல கிராமங்களைப் பாதித்து விட்டது. அதற்குக் காரணம் கடலோரத்தில் இருக்கின்ற முகத்துவாரங்கள் இலகுவாக வடிகின்றன. ஆனால் மேலே இருக்கக் கூடிய கால்வாயின் பகுதிகள் மேடு ஏற்பட்டதால் தண்ணீர் சரியான முறையில்





கடலுக்குச் செல்லவில்லை. ஆகவே தான் இப்படிப்பட்ட ஒரு அவல நிலைமை தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்டது. இந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்றால் உடனடியாக இதற்கு அதிகமான செலவு செய்ய வேண்டும். போதிய நிதியாதாரம் வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். ஆனால் நீண்ட நெடுங்காலமாக சில பேர் கடனை வாங்கிக் கொண்டு தருகிறேன். தருகிறேன் என்று சொல்லி காலதாமதம் ஏற்பட்டு, அதன் பின்னர் அரசாங்கம் சில சட்டங்களைக் கொண்டு வந்து இன்றைக்குத் திடீரென்று கடனைக் கட்டுவது என்றால்—தற்போது அசலைவிட வட்டி அதிகமாக ஆகி எவ்வளவு அதிகமாக வரமுடியுமோ அவ்வளவு அதிகமாக ஆகி இருக்கின்ற நிலைமையில் சற்று சிரமம் தான். முன்பு நீண்ட நெடுங்காலமாக ஆட்சி செய்தவர்கள் சரியான முறையில் பராமரிக்காத காரணத்தால், மராமத்து வேலைகள் எல்லாம் தடைப்பட்டு கால்வாய்கள் எல்லாம் தூர்ந்து அவற்றில் எல்லாம் நீர் சரியான முறையிலே வடியாமலே இருந்து இன்றைக்கு அதிகமான செலவு செய்து அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

(பிற்பகல் 1-00)

இருந்தாலும் கூட அப்படிப்பட்ட இடங்களிலே இருக்கிற மக்களுக்கு நாம் நிவாரணம் அளிக்க வேண்டும். அந்த நிவாரணம் நிரந்தரமாக இருக்க வேண்டும். ஆகவேதான் அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறை பொறியாளர்களோடு கலந்து பேசி, அவைகளை நல்ல முறையிலே செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே தூக்குடுவார் உப்பானார் வடிகால் கால்வாய் இருக்கின்றது. அது கடலிலே சென்று கலக்கின்ற இடத்திலே குறுக்கே ஒரு பெரிய மணல் மேடு இருக்கிறது. அந்தக் கால்வாயினுடைய பகுதிக்கும் கடலுக்கும் இடையில் 1/2 பர்லாங்தான் தூரம் இருக்கும். ஆனால் மணல் மேடு இருப்பதாலே அது திசை மாறி, வடக்கு நோக்கி ஏறக்குறைய 2 பர்லாங்தூரம் செல்கிறது. அதனாலே அந்தப் பகுதி மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, மணல் மேட்டை அகற்றுவதன் மூலம், அது நேராகச் சென்றால், தண்ணீரும் வடியும்; பக்கத்திலே இருக்கிற மக்களுக்கும் பாதுகாப்பாக இருக்கும், மக்களுக்கும் பயம் இருக்காது. அப்படிப்பட்ட நிலைமையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே இருக்கிற ஏரிகளை, குளங்களை எல்லாம் நல்ல முறையிலே உலக வங்கியினுடைய உதவியின் மூலம். சால்வி, ஈ. ஈ. சி. என்று சொல்லக் கூடிய ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியோடு, செப்பனிட வேண்டுமென்று மானாவாரி ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தை தமிழக அரசு

முதல் முறையாகச் செயல்படுத்தி வருகிறது என்பதை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் பார்த்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, தஞ்சை மாவட்டத்திலே கால்வாய்ப் பாசனம் மாத்திரம் இருக்கிற காரணத்தாலே, சிறு ஓடைகள், சிறு ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளில் எல்லாம் தூர் எடுக்காத காரணத்தால், அவைகள் காய்ந்து விடுகின்றன. என்னுடைய தொகுதியிலே இரண்டு ஏரிகள் இருக்கின்றன. சுருவாலி ஏரி என்பது ஒன்று. அடுத்து, பெருந் தோட்டம் என்ற இடத்திலே இருக்கிற ஏரி. ஒவ்வொரு ஏரியும் ஏறக்குறைய 1,500, 2,000, ஏக்கர் நிலங்களுக்குப் பாசனத்தை தரக்கூடிய ஏரிகள். ஆனால், இந்தக் காலத்திலே பார்த்தாலே அவைகள் எல்லாம் காய்ந்து விட்டன; அவைகள் எல்லாம் மேடாகி விட்டன. அவைகளை எல்லாம் ஆழப்படுத்தி, கரைகளை அகலப்படுத்தினால் நிரந்தரமாகத் தண்ணீர் பிரச்னைக்கு அங்கே தீர்வு காண முடியும். ஆகவே, அப்படிப் பட்டகாரியங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திற் கொண்டு செயலாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்,

இராஜன் வாய்க்கால் என்ற நீர்ப்பாசனத்திலே தெற்கு இராஜன், வடக்கு இராஜன் என்று இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திற்குத் தெற்கு இராஜன் வாய்க்காலும், தென் ஆற்காடு மாவட்டத்திற்கு வடக்கு இராஜன் வாய்க்காலும் நல்ல முறையிலே நீர்ப்பாசன பணிகளைச் செய்து கொண்டு வருகின்றன. ஆனால், தஞ்சை மாவட்டத்தினுடைய தெற்கு இராஜன் வாய்க்காலினுடைய நிர்வாகப் பொறுப்பு சிதம்பரத்திலே இருக்கிற வடக்கு இராஜன் பகுதியிலே தான் இருக்கிறது. ஆகவே, தெற்கு இராஜனிலே இருக்கிற குறைபாடுகளை வடக்கு இராஜனிலே இருக்கிற அல்லது சிதம்பரத்திலே இருக்கிற அலுவலகத்திற்குச் சென்று சொல்லி தீர்க்க வேண்டிய சிரமம் இருக்கிறது. அதே போன்று அவர்களும் இங்கே வந்து மேற்பார்வை பார்ப்பதற்கான தூரமும் நேரமும் செலவாகிறது. அவைகளை மாற்றுவதன் மூலமாக, அங்கே உள்ள விவசாயிகளுக்கும் வசதியாக இருக்கும் அதிகாரிகளுக்கும் சுலபமாக இருக்கும். ஆகவே, அதை மாற்றியமைக்க வேண்டு மென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசினுடைய பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்திலே எவ்வளவு நிலங்கள் பயன் பெறுகின்றன என்பதையும் பெரியார் வைகை திட்டத்தையும் பற்றி இங்கே தெரிவித்தார்கள். ஆனால் பெரியார், திட்டம் பக்கத்திலே உள்ள சுவர் இன்னும் தட்டும் தருவாயிலே இருக்கிற காரணத்தாலே அது எந்த அளவிற்கு மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் பயன்படும் என்பதை என் போன்றவர்கள் சில குழுக்களின் மூலம் நேரிலே சென்று பார்த்த பொழுதுதான் நன்றாகத் தெரிந்து கொண்டோம். அந்த வேலைகளை இன்னும் அதிகமான அளவிற்கு விரைவிலே துரிதப்படுத்த வேண்டும்





ஏனென்றால் அது வேறு மாநிலத்திலே இருக்கிறது. அதனால் அவர்கள் கொஞ்சம் தாமதப்படுத்தினாலும், நம்முடைய அரசு துரிதப்படுத்தி, விரைவிலே முடிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்ல முடிவுகளை மேற்கொண் டிருக்கிறார்கள். அவைகளை நாம் கிழக்கு நோக்கித் திருப்புவதன் மூலமாக, நிச்சயமாக மேற்குப் பகுதி மாவட்டங்கள் நல்ல பலன் பெறும்.

வெள்ளச் சேதத்திற்காக 8 கோடி ரூபாயும், வெள்ளத்திலே பாதிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு ஒரு கோடி ரூபாயும் இங்கே ஒதுக்கி இருக்கிறார்கள். நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தை சீர்படுத்துவதற்கு இந்த 10 கோடி ரூபாய் குறைவாக இருக்கு மென்ற நிலைமை இருக்கிறது. ஆகவே தமிழகம் முழுவதிலும் இருக்கிற வெள்ளச் சேதங்களை சீர்படுத்துவதற்காக இன்னும் அதிகமான தொகையை ஒதுக்க வேண்டும். அதுபோல முக்கியத்துவம் வாய்ந்தவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து சீர் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே தஞ்சை மாவட்டத்தின் உறுப்பினர்கள் சிலர் தங்களுடைய தொகுதிகளுக்கான கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அதாவது காவேரி வளர்ச்சிப் பணிகள் வட்டம் திருவாரூர் கோட்டப் பராமரிப்பிலே உள்ள சேங்காலிபுரம் வடிகால் குச்சிப்பாளையம் என்ற இடத்தில் முடிகிறது. திருவாரூரில் ஆரம்பித்து குச்சிப்பாளையம கிராமம் வரையில் அந்த வடிக்கால் திட்டம் செல்கிறது. அந்த வடிகால் முழுமை யிலும் நெய்வேலி காட்டாமணி என்று சொல்லப்படுகிற செடி வகைகள் இருக்கின்றன. இந்த நிலைமை தமிழகம் முழுவதிலும் இருக்கிறது. இந்த நெய்வேலி காட்டாமணி செடிகளை ஓரளவிற்கு அகற்றிவிட்டாலே தமிழகத்தில் பல கால்வாய் களின் நீர்ப்பாசனம் சீரடையும். அந்தச் செடிகள் அதிகமான அளவில் கால்வாயில் நுழைந்து, கால்வாயை மேடாக்கி, தண்ணீர் சரியான முறையில் போகவிடாமல் செய்வதால், அவைகளை உடனடியாகக் களைவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மணக்கால், அய்யம்பேட்டையைச் சேர்ந்த தேராஞ்சி என்ற இடத்தில் இருக்கிற ஆதிதிராவிடத் தெருவிற்கு அருகிலே வடிகாலின் இடதுகரையில் வெள்ளத் தடுப்புச் சுவர் ஒன்று கட்டினால் பக்கத்தில் இருக்கிற அரிசன மக்கள் பாது காப்பாக இருப்பார்கள். இல்லையென்றால் எந்த நேரத்தில் வெள்ளம் வந்தாலும் அவர்களை வெள்ளம் அடித்துக் கொண்டு போகக்கூடிய ஒரு ஆபத்தான நிலைமை ஏற்பட்டுக் கொண் டிருக்கிறது. அவைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கலையரசன் அவர்களுடைய தொகுதியில் வேறொரு பிரச்னையை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். நன்னிலம் தாலுக்காவிலே உள்ள பாக்கம், கோட்டூர் ஆகிய கிராமங்களுடைய விவசாயிகள் நீண்டகாலமாக சில கோரிக்கைகளை அரசுக்கு வைத்திருக்கிறார்கள். அதாவது கால்வாயின் 80/2—என்ற இடத்தில் கீழ்ப்பாக்கம், குடுமி தாயினார், கோட்டூர் ஆகிய பாசன வாய்க்கால்கள் அங்கே இருக்கின்றன. அவைகள் எல்லாம் ஒரே அளவாக இல்லாமல், மேலும் கீழுமாக இருப்பதால் தண்ணீர் சரியாக தேங்குவது இல்லை. அதனால் அவைகள் அந்த மக்களுக்கு நீர்ப்பாசனத்திற்கு பயன்படாமல் போய் விடுகிறது. ஆகவே அந்த இடத்திலே ஒரு சிறு தடுப்பு அணை, பெட்—டாம் ஒன்று கட்டி அந்த மக்களின் நீர்ப்பாசனத்திற்கு வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவைகள் எல்லாம் சிறு சிறு காரியங்கள். இவைகளுக்கு பரிகாரம் செய்து விட்டால் அந்தப்பகுதியிலே இருக்கிற மக்களுக்கு நிரந்தரமான பரிகாரமாக அமையும் என்பதால் இது போன்ற காரியங்களை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தினுடைய கடைசிப் பகுதியான சீர்காழி தாலுக்காவில் இருக்கிற வடிகால்களை நல்லமுறையில் தூர் எடுப்பதன் மூலமாக பராமரிப்பு செய்வதன் மூலமாக வெள்ளக் காலங்களில் தண்ணீர் இலகுவாக வடியும்; அங்கே இருக்கிற மக்கள் பயன் பெறுகிற அளவில் வசதியாக இருக்கும். அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இந்த ஆலோசனைகளை அனைத்து அதிகாரிகளையும் வைத்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் ஏறக்குறைய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகள் காவேரி நீரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. இதற்கான வசதிகள் சரியான முறையில் இல்லாததால்தான் தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுகிற தஞ்சை மாவட்டம் இந்தியாவில் இருக்கிற மற்ற மாநிலங்களிலிருந்து நெல்லை மற்ற தானியங்களை எதிர்பார்க்கிற அவலநிலைமை இருக்கிறது. ஆகவே இது போன்ற பணிகளுக்கு முன்னுரிமை தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*(பிற்பகல் 1-10)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து திரு. தனுக்கோடி பேசுவார்.

திரு. கே. தனுக்கோடித்தேவர்: என் பெயரை முழுமையாக சொல்லி அழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படியானால் உறுப்பினரின் தொகுதியைச் சொல்லி அழைக்கிறேன். முதுகளத்தூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் இப்போது பேசுவார்.

திரு. கே. தனுக்கோடித்தேவர்: தொகுதியைச் சொல்லி அழைக்கிற வழக்கம் இப்போது இல்லை. என் பெயரை முழுமையாகச் சொல்லி அழைத்தால் நான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தொகுதி பெயரைச் சொல்லி பேச அழைப்பதுதான் பாராளுமன்ற முறை. அந்த முறையை இன்றைய தினத்தில் இருந்து துவங்கலாம் என்கிற கருத்தில் உறுப்பினரின் தொகுதி பெயரைக் குறிப்பிட்டு பேச அழைத்து இருக்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : துணைத் தலைவர் அவர்களே, இது வரையில் பெயரைச் சொல்லி பேச அழைப்பதுதான் நடைமுறையாக இருந்து வருகிறது. ஆகவே, அந்த முறையைப் பின்பற்றி அவர் பெயரைச் சொல்லி அழைப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொகுதியைச் சொல்லி அழைப்பது தவறு அல்ல. அதுதான் பாராளுமன்ற முறையாகும். அந்த முறையைப் பின்பற்றலாம் என்பது என் கருத்து.

திரு. கு. ரமணி: பாராளுமன்றத்தில் கூட இப்போது அந்த முறை பின்பற்றப்படவில்லை. ஒவ்வொரு உறுப்பினரின் தொகுதியைக் குறிப்பிட்டுப் பேச அழைப்பது சரியாக இருக்காது.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சர், நிதித் துறை அமைச்சர் என்று மாண்புமிகு அமைச்சர்களை அழைப்பது போல், தொகுதியைக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர்களை அழைப்பதில் தவறு ஒன்றும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் நீண்ட நாட்களாக உறுப்பினராக இருப்பதால் நான் ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன், மாண்புமிகு உறுப்பினர் பெயரைச் சொல்லி பேச அழைத்து விட்டால் இந்தப் பிரச்னை தீர்ந்து விடும். மாண்புமிகு உறுப்பினர்களும் பேசி முடித்து விடுவார்கள். ஆகவே, என் ஆலோசனையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொல்வதை நான் மறுக்க வில்லை. தொகுதியைக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர்களை அழைப்பது தான் பாராளுமன்ற முறை. உறுப்பினர்களை அழைக்கும் பொழுது, தொகுதியைச் சொல்லித் தான் அழைக்க வேண்டும்; பெயரைச் சொல்லி அழைக்கக் கூடாது என்பதாக 1968-ஆம் ஆண்டு நம்முடைய அவையிலேயே தீர்ப்பளிக்கப் பெற்றுள்ளது.

"Members should be referred to by their Constituencies and not by their names".

1968 XII. P 33,

இந்த முறையைப் பின்பற்றுவது நல்லது என்பது தான் என் கருத்து.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் உங்களுடைய உணர்வுகளைச் சொன்னீர்கள். அவை உறுப்பினர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தி விட்டனர். அவையினர் கருத்துப் படி செயல்படும் சுமூகமான சூழ்நிலை ஏற்படுத்த, பெயர் சொல்லி அழைப்பதன் மூலம் இந்தப் பிரச்னையை விட்டு விடலாம்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை-முன்பும் இரண்டொரு முறை எழுந்து—அந்த உறுப்பினர்கள் தம் பெயரை முழுமையாகச் சொல்லி அழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். சாதியைக் குறிப்பிடக் கூடாது என்பதற்காக தொகுதியைச் சொல்லி அழைக்கும்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது அல்ல என்னுடைய நோக்கம். பார்லிமென்டரி முறையை நான் குறிப்பிட்டேன். அப்படி அழைப்பது நன்றாக இருக்கும் என்பது என் கருத்து. I don't want to impose my view on the House. இந்தப் பிரச்னையை இத்தோடு விட்டு விடலாம். திரு தனுக்கோடித் தேவர் இப்போது பேசுவார்.

திரு. கே. தனுக்கோடித்தேவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களால் இந்த அவை முன் கொண்டு வரப்பட்டு இருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்து இருக்கின்ற அகில இந்திய பார்வார்ட் பிளாக் சார்பாக பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு அருமைச் சகோதரர் மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் சொன்னதைப் போல நிதி பற்றாக்குறையாக இருக்கிறது. இதற்கு ஒதுக்குகின்ற பணம் போதாது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால் ஆண்டுக்காண்டு விலை வாசி உயர்ந்து கொண்டே இருக்கிறது. அந்த அளவுக்கு இந்தத் துறைக்கு நிதி கூடுதலாக ஒதுக்கப்பட வேண்டும் என்று எங்களுடைய கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.





குறிப்பாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மானாவாரி பூமிதான் பெரும் பகுதியாக இருக்கிறது இந்த அரசு வந்த பின்னால் பல நல்ல திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்தியிருக்கிறார்கள். அதே நேரத்தில் இந்த மானாவாரி பூமியை வளம் பெறச் செய்ய போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை. போன ஆண்டு வறட்சி ஏற்பட்டது. இந்த ஆண்டு வெள்ளம் ஏற்பட்டது. வெள்ளம், வறட்சி இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது போன ஆண்டு ஏற்பட்ட வறட்சியைவிட இந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம் அதிகமாக இருக்கிறது. ஏற்கனவே ஒரு போகம் பயிர் செய்தார்கள். அதன் பின்னால் இன்றைக்கு இரண்டாவது போகம் வைத்திருக்கிற விவசாயிகள் ஓரளவுக்கு பசுமையைக் காணுகின்ற நேரத்தில் மழை இல்லாத சூழ்நிலை ஏற்படும்போல் தோன்றுகிறது. அதனால் இந்த அரசாங்கம் என்ன செய்ய வேண்டுமென்றால் ஓடுகின்ற காட்டாறுகள் அத்தனையிலும் அணைகளைக் கட்டி, தடுப்புச் சுவர்களைக் கட்டி, நீரைத் தேக்கி வைக்க வேண்டும். அதுதான் இப்போதைக்கு சாலச் சிறந்ததாக இருக்கும்.

மனித வர்க்கத்திற்கு அத்தியாவசியப் பொருள்கள் உணவும் தண்ணீரும் என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். ஆகையால் இந்த நீர்த் தேக்கங்களை தேவையான இடங்களில் எல்லாம் கட்ட வேண்டும். மழைக் காலங்களில் வெள்ளம் வந்து. வீணாகக் கடலிலே போய்ச் சேருகின்றன. அப்படி வீணாகாமல், எங்கெல்லாம் இப்படி வீணாகிறதோ அங்கெல்லாம் அதைத் தடுத்து, தடுப்புச் சுவர் கட்டி அல்லது அணைகட்டி, தண்ணீரை தேக்கி வைத்தால் நிலத்தடி நீரும் கிடைக்கும், விவசாயத்திற்கும் பயன்படும். அதனால் அரசுக்கும் மக்களுக்கும் மிகப் பெரும் நன்மை ஏற்படும். அது ஒரு நல்ல திட்டமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில், கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில், இரண்டு அணைகளை கட்டினால் ஓரளவுக்கு பயனுள்ளதாக இருக்கும். அங்கே ஜீவநதி ஒன்றும் இல்லை. கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்னால் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து தண்ணீர் ஜீவநதியாக எங்களுடைய பகுதிக்கு வந்தது. இன்றைக்கு வைகை நதியிலிருந்து வரக்கூடிய தண்ணீரைத் தான் அங்குள்ள விவசாயிகள் பெரும்பாலும் நம்பியிருக்கிறார்கள்; ஆனால் தண்ணீர் வருவதில்லை. இன்றைக்கு அங்கே வருகின்ற உபரி நீரைக் கூட கொடுக்காமல் மதுரையில் இரண்டு அணைகளைக்கட்டி, தண்ணீரை சேமித்து வைத்து, பயன்படுத்துகிறார்கள்; அதன் காரணமாக குண்டாறு, கிருதமால் நதி, பரலையாறு முதலிய ஐந்து ஆறுகள் வாயிலாகப் பாசன வசதி பெற்ற எங்கள் பகுதி இன்றைக்கு வறண்டு போய் கிடக்கிறது. அந்த ஆறுகள் இன்றைக்கு தூர்ந்து விட்டன.

இப்படிப்பட்ட ஒரு நிலையில் நம்முடைய அரசு அந்தப் பகுதி மக்களுடைய நலன் கருதி, ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறது. அதாவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசுப் பொறுப்பேற்ற பிறகு, அங்கே மலட்டாறு திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள் அதற்காக அவர்களுக்கு அந்தப்பகுதி மக்களின் சார்பாக நன்றித் தெரிவித்துக் கொள்கிறேன்;

நீண்டகாலமாக இருந்து வந்த பிரச்சனை இது. இந்த மலட்டாறுத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 5,000 குடும்பங்கள் வாழும் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு இலட்சம் ஏக்கர் நிலம் பாசனவசதி பெறும். இப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை நிறைவேற்றியிருக்கிற இந்த அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு இந்த அரசு செய்கின்ற காரியங்களுக்கு என்றென்றும் துணையாக, உறுதுணையாக இருப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டம் நிறைவேறுகிற போது ஏதோ அரசியல் வாதிகளால் சில குறுக்கீடுகள் வந்ததாகக் கேள்விப்படுகிறேன்.

(பிற்பகல் 1-20)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது போன்ற 1,000 ஏக்கருக்கு மேலே உள்ள நீர்த் தேக்கம் இருக்கின்ற கண்மாய்களை ஆழப்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால், அந்த நீர்த்தேக்கங்களில் கூடுதலான தண்ணீரை தேக்கி வைப்பதற்கும், விவசாயம் செய்வதற்கும் வாய்ப்பாக அமையும். தற்போது ஏரிகள் மேடாக இருக்கின்றன. வரத்துக் கால்வாய்கள் தூர்ந்து போய் இருக்கின்றன. அவைகளைச் செப்பனிட்டுக் கொடுத்தால், விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியும். எனவே, அதையும் செய்து கொடுக்க வேண்டும்.

கேரளத்திலே மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளின் தண்ணீர் கடலில் சங்கமம் ஆவதாகச் சொல்கிறார்கள். நம்முடைய அரசு, தமிழக முதல்வர் அவர்கள் அந்த அரசுடன் தொடர்பு கொண்டு, அந்தத் தண்ணீரை கிழக்கு நோக்கிபாயச் செய்வார்களேயானால், தமிழகம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று, மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைச் செய்தால் மக்கள் வாழ்த்துவார்கள். உணவு உற்பத்தியில் நம் நாடு தன்னிறைவு பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளின் தண்ணீரை கிழக்கு நோக்கி கொண்டு வருவதற்கு நம்முடைய அரசு முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அதே போன்று இன்றைக்கு ஒரு மாநிலத்திற்கு ஒரு மாநிலம் இந்த நீர்ப் பிரச்சினை இருந்து வருகிற காரணத்தால், நீர்த் தேக்கத்திற்குரிய பிரச்சினைகள் வருகிற போது. இந்த தண்ணீர்ப் பங்கீட்டில் மாநிலங்கள் ஒழுங்காகச் செய்யாது போனல், அப்போது மத்திய அரசே தலையிட்டு, இந்த ஜீவநதிகளையும், காட்டாறுகளையும், தேசிய மயமாக்கினால், இன்றைக்கு தண்ணீர் வீணாகக் கடலில் போய் கலக்காது. மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் தண்ணீர் கிடைப்பதில்லை. கேரள அரசைக் கேட்டால் விட முடியாது என்று சொல்கிறார்கள். ஆகவே மத்திய அரசு உடனடியாக தலையிட்டு. கடலில் வீணாகப் போய் கலக்கின்ற தண்ணீரை இந்த மூன்று மாவட்டங்களுக்கும் திருப்பி விடுகின்ற தன்மையை ஏற்படுத்த வேண்டும். இப்படிச் செய்யத் தவறினால், நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். அந்த நிலை வரவில்லையென்றால், இந்த காட்டாறுகளையும், ஜீவநதிகளையும் தேசிய மயமாக்க வேண்டுமென்ற நிலையைச் சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இது போன்று சமஸ்தான ஏரிகள் என்று சமஸ்தான காலத்திலிருந்தே இருக்கின்றன. அந்த ஏரிகளும், கண்மாய்களும் யாராலும் எடுக்கப்படாமல் இருக்கின்றன. அவைகளை பொதுப் பணித் துறையும் எடுத்துக் கொள்ளவில்லை. பஞ்சாயத்தும் எடுத்துக் கொள்ளவில்லை. தாலுக்காவும் எடுத்துக் கொள்ளவில்லை. இப்படி யாரிடத்திலும் இல்லாமல் சில கண்மாய்கள் பழுதடைந்திருக்கின்றன. போன ஆண்டு தான் அதை சீர் செய்யும் வகையில், பல கண்மாய்கள் ஓரளவிற்கு செப்பனிடப் பட்டிருக்கின்றன. அவைகள் முழுமையாகச் செப்பனிடப்பட வில்லை. காரணம் நிதி பற்றாக்குறை. அவைகளை முழுமையாகச் செப்பனிடாமல், அரைகுறையாகத்தான் செப்பனிட்டார்கள். எனவே அவைகளை முழுமையாகச் செப்பனிட்டு, அங்கே மராமத்து வேலைகளைச் செய்து, அங்கேயுள்ள மடைகளைக் கட்டிக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-26 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(மாலை 4-00)

மாலை 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 36 — பாசனம் }
(ஆ) கோரிக்கை எண் 51 — பாசனம் குறித்த மூலதனச் செலவு } தொடர்ச்சி.

திரு. கே. தனுக்கோடித்தேவர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய பாசனத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது காலையில் பேசியதைத் தொடர்ந்து இப்போது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக இந்த மானியக் கோரிக்கையில் விவசாயிகளைப் பொறுத்தவரையில் சில நல்ல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிற அரசாங்கத்தைப் பாராட்டுவதோடு பாசன வசதிக்காக இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்கி காட்டாறுகளுக்கு மதகுகள் கட்டி தண்ணீரைத் தேக்கி வைக்கக்கூடிய நிலையை உருவாக்கினால் பொதுவாக தமிழகத்தைப் பொறுத்த வரையில் உணவுப் பற்றாக்குறை நீங்குவதோடுகூட அடுத்த மாநிலங்களுக்கு கொடுக்கக்கூடிய அளவிற்கு விவசாய உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வாய்ப்பு அமையக் கூடிய வகையில் பூமி நம்மிடம் இருப்பதால் அத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கக்கூடிய நிதியைக் கொண்டு அவர்கள் கண்மாய்களையெல்லாம் முழுமையாக மராமத்து செய்ய முடியாத நிலையிருப்பதால் அவற்றை பொதுப்பணித்துறைக்கு மாற்றி பொதுப்பணித்துறை மூலம் மராமத்து வேலைகள் செய்யவேண்டும் என்ற ஆணையை பார்க்கிறபோது நான் பெருமைப்படுகிறேன். காரணம், ரூ. 3,000-க்கு மேலே பஞ்சாயத்து யூனியன் மூலம் மராமத்து செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. இப்போது பொதுப் பணித் துறை செய்கின்றபோது, இவைகள் முழுமையாக மராமத்து செய்யப்பட்டு, நீர்த் தேக்கங்கள் எல்லாம் ஒழுங்காக செப்பனிடப்பட்டு, மழைக் காலங்களில் கூடுதலான நீரைத் தேக்கி வைக்கின்ற வாய்ப்பினை, தன்மையைச் செய்திருக்கிறார்கள். அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

அதைப்போலவே, தூர்ந்து போய் இருக்கின்ற வரத்துக் கால்வாய்களை எல்லாம் மராமத்து செய்து, தண்ணீர் வருகின்ற காலங்களில் தண்ணீர் வீணாகப் போகாமல், ஒழுங்காக அந்தத் தண்ணீர் கிளைக் கண்மாய்களுக்குச் செல்லுகின்ற வகையில் அவைகளை மராமத்து செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, சமஸ்தான காலத்திலிருந்த கண்மாய்கள் இன்னும் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன அப்படிப்பட்ட கண்மாய்களையும் அரசு மராமத்து செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.





அதைப்போலவே, எங்கள் பகுதியில், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நான்கு ஆறுகள் இருக்கின்றன, 1. குண்டாறு, 2. கிருதமால் நதி, 3. வெள்ளை ஆறு, 4. நாராயண காவேரி ஆகும். இந்த நான்கு ஆறுகளிலே, நாராயண காவேரி என்பது கிட்டத்தட்ட 24 மைல் தூரமுள்ள ஒரு பெரிய காவேரியாக இருக்கிறது. 1952-53-ல் காங்கிரஸ் காரர்கள் ஆட்சிக் காலத்திலே மராமத்து செய்யப்பட்டது. அதற்குப் பின்னர், இதுவரையிலே அது மராமத்து செய்யப்படாமல் இருந்து வருகிறது. அதிலுள்ள தண்ணீர் மற்ற ஏரிகளுக்குப் போவதற்கு வாய்ப்பில்லாமல், மழைக் காலங்களில் தண்ணீர் வீணாகப் போய்விடுகிறது. எனவே, ஆங்காங்கே உள்ள கண்மாய்களுக்கு தண்ணீர் போகக்கூடிய அளவுக்கு, மழைக் காலங்களில் ஆங்காங்கே தண்ணீர் தேக்கி வைப்பதற்கு வாய்ப்பாக இதை மராமத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நாராயண காவேரி பாசனத்தில் உள்ள போது, 64 கிளைக் கண்மாய்கள் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். இந்த 64 கண்மாய்கள் மூலம் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்வதற்கான வாய்ப்புள்ள காரணத்தால், மழைக் காலங்களில் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு வசதியாக ஆங்காங்கே மதகுகள் கட்டித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மலட்டாறு திட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்ததற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். என்னைப் பொறுத்து மட்டுமல்ல. என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். முதல்வர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி பாராட்டு தெரிவிக்கின்ற இந்த நேரத்தில், இந்த மலட்டாறு திட்டத்திற்கு அரசியல் நோக்கோடு குந்தகம் விளைவிப்பதாகக் கேள்விப்படுகிறேன். எனவே, இந்தத் திட்டத்தை முடிந்தால் இந்த ஆண்டே நிறைவேற்றித் தரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். காரணம், இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் தான், கிட்டத்தட்ட 10,000 ஜனங்கள் பிழைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. அப்படிச் செய்வதால், தூர்ந்து இருக்கின்ற இடங்களில் தண்ணீர் தேங்கி, நிலத்தடி நீர் மேலும் பெருக வாய்ப்பிருக்கிறது. குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க வாய்ப்பிருக்கிறது. ஆகவே, முழுமையாக இந்த மலட்டாறு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, மலட்டாறு திட்டத்திற்குப் பக்கத்தில் சங்கதேவன் கால்வாய் என்றிருக்கிறது. இந்தத் திட்டம் போன ஆண்டே ஆய்வு செய்யப்பட்டு, அதனுடைய கோப்பு அரசுக்கு வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். சங்கரதேவன் கால்வாய் என்பது ஒரு பெரிய கால்வாய். மலட்டாற்றிலிருந்து வருகின்ற தண்ணீரை வீணாக்காமல், அங்கே இருக்கின்ற 16 கிளைக் கால்வாய்களில் போகும்படி செய்தால், நன்றாக இருக்கும். இல்லாவிட்டால், அந்தத் தண்ணீர் வீணாகக் கடலிலே போய் சேரும்.

அப்படி தண்ணீர் வீணாகக் கடலிலே போய்ச் சேராமல், அங்குள்ள ஓடையிலும், குளங்களிலும் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், அந்த சங்கரதேவன் கால்வாயைச் செப்பனிட்டுத் தருமாறும், அங்குள்ள வரத்துக் கால்வாய்களை முழுமையாக மராமத்து செய்து தருமாறும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4-10)

அதேபோல இன்றைக்கு என்னுடைய பகுதியில் 3 ஆண்டுக் காலமாக சிவகங்கை கோட்டத்தில், நம்முடைய அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கும் பொதுப்பணித் துறையினுடைய நிர்வாகத்தின் கீழ் ஒரு அதிகாரி மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் பணிபுரிந்துக் கொண்டிருக்கிறார். அவர் 3 ஆண்டுக்காலமாக பணியாற்றியும் இந்த அரசுக்கு கெட்ட பெயர் எடுத்துத் தரவேண்டும் என்று எண்ணியே செய்கிறாரோ என்று சந்தேகக் கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடிய நிலைமையில் ஒரு கால கட்டத்தில் அந்தப் பகுதி இருக்கிறது.

அந்த அதிகாரி பொறுப்பில் இருப்பதால், பொதுப் பணித் துறை மூலமாக அரசே எடுத்து நடத்துகின்ற பெரிய திட்டங்களில்கூட என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் எந்தவித வேலையும் நடைபெறவில்லை. போன ஆண்டு வறட்சிக்காக கொடுத்த 12 லட்சம் ரூபாயை மக்களுக்காக முழுமையாக செலவழிக்காது, அப்படியே கவர்ன்மெண்ட்டுக்கே திருப்பிக் கொடுத்துவிட்டார். அரசிடம் அவர் நிதி கேட்பதும் இல்லை. அந்தப் பகுதியில் எந்த திட்டத்திற்காகவும் வேலை நடத்த முன் வருவதும் இல்லை. அரசே பெரிய திட்டங்களை, நல்ல திட்டங்களை கொண்டு வரும்போது, அந்த திட்டங்களை நடத்துவதற்கு உறு துணையாக இருந்து, நல்ல முறையில் அந்த திட்டங்களை நடத்த அவர் செயல்படுவதே இல்லை. அவர் அவருடைய சம்பளத்தை மட்டும் வாங்கிக் கொண்டு, அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தித் தருகின்ற வகையிலேயே நடந்து கொண்டு வருகிறார். இதைப் பற்றி நான் பல முறை வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும் சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் சொல்லியிருக்கிறேன். அவர் மீண்டும் அங்கேயே தொடர்ந்து இருப்பாரேயானால், மலட்டாறு திட்டத்தைக் கூட, அவர் நிறைவேற்றுவதற்கு தடையாக இருப்பாரோ என்ற சந்தேகக் கண்ணோட்டத்தோடு சொல்கிறேன். இந்த மாதிரி அதிகாரிகளை கண்காணிப்பதில் அரசு தீவிரமாக இருக்க வேண்டும். எங்கேயாவது தவறுகள் நடக்கிறது என்றால், உடனே அந்த அதிகாரிகளை அழைத்து அவர்களுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறி, அந்த மாதிரி அதிகாரிகளை அந்தப் பகுதியில் இனிமேல் இருக்காமல் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.





எந்தவித வேலையும் என்னுடைய பகுதியில் நடக்கவில்லை என்பதோடு, இந்த மாதிரி அதிகாரிகளால் அரசுக்கு கெட்ட பெயர் தான் ஏற்படுகிறது. அந்த மாதிரி அதிகாரி இனி அந்தப் பகுதிக்கு இல்லாமல் இருப்பது நல்லது என்ற வகையில், அந்தப் பகுதியிலே ஒரு நல்ல அதிகாரியை நியமனம் செய்து, இந்தப் பொதுப் பணித்துறையின் பணிகள் அந்தப் பகுதியிலே சிறப்பாக நடைபெறுவதற்கு ஆவன செய்யும்படி இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிறு கண்மாய்கள், 1955-56லே கட்டப்பட்ட மதகுகளும் கண்மாய்களும் இன்று உடைந்து இருக்கின்றன. 3/4 அடி தூம்பு செய்து, அந்த தூம்பின் வழியாக தண்ணீர் செல்லும்போது, மணலும் சேர்ந்து அடித்துக் கொண்டு போவதால், தண்ணீர் அதன் மேட்டு வழியாக ஒழுங்காக செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அதை 2 அடி தூம்பாக அமைத்து. அந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் ஒழுங்காக செல்ல மதகுகளையும் கட்டித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல காட்டாறுகளைப் பொறுத்தவரையில், என்னுடைய பகுதியிலே மிக அதிகமாக காட்டாறுகள் இருக்கின்றன. முதுகளத்தூர், கடலாடி பகுதிகள் மிகவும் பள்ளமான பகுதியில் இருக்கிற காரணத்தால், மதுரை மாவட்டத்திலிருந்து வைகை தெற்கு நோக்கி பாயும்போது, பல கண்மாய்களுக்கு தண்ணீர் செல்லாது வீணாகக் கடலிலே சென்று கலக்கிற காரணத்தால், அந்தக் கண்மாய்களை செப்பனிட்டு மதகுகளையும் கட்டிக் கொடுத்தால், ஓரளவிற்கு விவசாயிகளுக்கு பலன் அளிக்கக்கூடும் என்ற காரணத்தால், காட்டாறுகளில் மதகுகளைக் கட்டி தண்ணீரை தேக்கி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கு இராமநாதபுரத்தில் மஞ்சப்பட்டி ஓடை என்று ஒரு ஓடை இருக்கிறது. அந்த ஓடையின் தண்ணீர் பயன்படாத வகையில் செல்லப்பட்டி என்ற கிராமத்திற்கு பக்கமாகப் போய், வீணாகக் கடலிலே கலக்கிறது. அதே மாதிரி கிழக்கு இராமநாதபுரத்தில் இருக்கிற பள்ளாச்சி என்ற பகுதியில் பள்ளாச்சி கண்மாய் இருக்கிறது. அங்கே இந்தத் தண்ணீரை தேக்கிக் கொடுப்பீர்களேயானால், அந்தப் பகுதியும் செழிப்பாவதற்கு வாய்ப்பு ஏற்படும், தண்ணீர் வீணாகப் போவது தடுக்கப்பட்டு, தேக்கி வைக்கப்பட்டு விவசாயிகளுக்குப் பயன் அளிக்கக்கூடிய வகையில் இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

அது போல இந்தக் கால்வாய்களைப் பற்றி ஏற்கெனவே அரசுக்கு தகவல்கள் வந்து, எத்தனை கண்மாய்களின் வழியாக இந்த தண்ணீர் சென்று, எத்தனை ஏக்கர்களுக்கு பயன் அடையும் என்ற வகையில், ரிப்போர்ட்டு தயாரித்து அனுப்பி இருப்பதாக அதிகாரிகள் சொன்னார்கள். ஆகவே, அந்த ரிப்போர்ட்டுகளின் அடிப்படையில் மதகுகளைக் கட்டி நீர் தேக்கம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய பகுதியில் இன்னும் முழுமையாக மராமத்து செய்யாத கண்மாய்கள் இருக்கிற காரணத்தால், அவைகளை மராமத்து செய்து, காட்டாறுகளின் மீது மதகுகளைக் கட்டி, நாராயணக் காவேரியை மீண்டும் முழுமையாக இரு கரைகளையும் சேர்த்து செப்பனிட்டு கொடுப்பீர்களேயானால், சுமார் 50 கண்மாய்களுக்கு நீர்ப்பாசனம் பெறக்கூடிய அளவுக்கு இருக்கிற காரணத்தால், அதை முழுமையாக எடுத்துச் செயல்படுத்த வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டு, மலட்டாறு திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. இரா. அமிர்தராஜ் : பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்ப்பாசனத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்து இருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் அனைவரும் காவிரி நீர் சம்பந்தப்பட்ட பிரச்சினையையும் மற்றும் பல முக்கியமான பிரச்சினைகளையும் எடுத்து வைத்துப் பேசினார்கள். இந்த அறிக்கையைப் பார்க்கிறபோது தமிழகத்திலே புதிய நவீன முறையில் பாசனத்திட்டங்களை எல்லாம் விரைவாக செயல்படுத்துவதற்காக நல்ல அறிவிப்புகளைத் தந்து இருக்கிறார்கள். குறிப்பாக பெரியார், வைகை, காவிரி பாசனப் பகுதிகளை நவீனப்படுத்துவதன் மூலம் சேமிக்கப்படும் நீரைக் கொண்டு பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலம் புதிதாக பாசன வசதிக்கான வாய்ப்பை உருவாக்கித் தந்து இருக்கிறார்கள். இந்த நிலைமையை இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழ்நாட்டிலே தான் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது பாராட்டாமல் இருக்க முடியாது. இந்தத் திட்டங்களோடு நெல்லை மாவட்டத்திலே தாமிரவருணி பாசனப் படுகையையும் நவீனப்படுத்தி அதன் மூலமாக லட்சக்கணக்கான ஏக்கர் பாசன வசதி வாய்ப்பைப் பெறுகிற சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போன்று நெல்லை மாவட்டத்திலே தூத்துக்குடி பக்கிள் ஓடையில் வெள்ளம் ஏற்பட்டு பல குடியிருப்புக்களை காலி செய்திருக்கிறது. அது மட்டுமல்ல சுற்றியிருக்கிற விவசாயிகள் பாதிக்கப்பட்டு அங்கே இருக்கக்கூடிய மக்களையெல்லாம் அழிக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கியது. இத்தனை ஆண்டுக்காலமாக தொடர்ச்சியாக நிகழ்ச்சிகள் நடந்து வந்தாலும் இதற்கு முன்னாலே ஆண்டவர்கள் அதைப்பற்றிப் பாராமுகமாக இருந்த வேதனை ஒருபுறம் இருந்தாலும் இந்த நிகழ்ச்சியை அரசு மனதிலே கொண்டு அந்தக் குடியிருப்பு மக்களைப் பாதுகாக்கிற வகையிலே விவசாயிகளுடைய பயிர்களை பாதுகாக்கக்கூடிய வகையிலே 82 லட்ச ரூபாயை ஒதுக்கி மக்களைப் பாதுகாக்கக்கூடிய முறையிலே அந்தத் திட்டத்தை அமைப்பதற்கு அனுமதி அளித்திருப்பதற்காக மாவட்ட மக்கள் சார்பாக நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதைப்போலவே நெல்லை மாவட்டத்திலே கோடகன் வாய்க்கால் திட்டத்தையும் கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டத்தையும் உருவாக்கிக் கொடுத்து அவைகள் மூலமாக அவைகள் செயல்முறைக்கு வருகிறபோது அந்தப் பகுதி பாசன வசதிகள் பெறுவதோடு அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு குடிநீர் கிடைப்பதற்கு வசதிவாய்ப்பு ஏற்படுகிற சூழ்நிலையை அமைத்து இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதையெல்லாம் விரைவாக செயல்முறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பன்னெடுங்காலமாக ஒரு திட்டத்தை அந்த மக்கள் கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். கடம்பா குளத்திலிருந்து திருச்செந்தூர் தாலுகாவிலே 11 குளங்களுக்கு தலைக் கால்வாய்மூலம் பாசன வசதியை ஏற்படுத்தித் தருகிற சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியிலே உள்ள விவசாய மக்கள் எல்லாம் எங்களுக்குத் தனி கால்வாய் வேண்டுமென்று பல ஆண்டுக்காலமாக கோரிக்கையை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அந்த தனிக் கால்வாய் எந்த அளவுக்கு விவசாயிகளுக்குப் பயன்படும் என்பதையும் அதை அமைப்பதன் மூலம் விவசாயிகளுக்கு தண்ணீரை எந்த அளவுக்கு சேமித்து வைக்கமுடியும் என்பதையும் என்னை விட நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள் ஆகவே அந்தப் பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான தனி வாய்க்கால் அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடையனோடைக்கு அருகில் கடம்பாகுளத்தினுடைய தென்கரை ஓரமாக அந்தக் கால்வாயினை அமைப்பதன் மூலமாக அரசுக்கு செலவும் குறையும், திட்டத்தை விரைவாகவும் நிறைவேற்றமுடியும், அதோடு அந்த நீரை சேமித்து வைத்து அந்தப் பகுதி விவசாயிகளுக்கு ஒரே சீரான முறையிலே ஒரே காலத்திலே. விவசாயத்தைச் செய்யக்கூடிய முறையில் வசதியை ஏற்படுத்திக்கொடுத்து பயன் அடைய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல் ஆத்தூர் பகுதியிலே உள்ள வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகள் சுமார் 5 ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் அவர்கள் அந்த கொடிக்கால் விவசாயத்தை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் கோடைகாலத்திலே அவர்களுக்கு தண்ணீர் கொடுப்பதில்லை. வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளைப் பொறுத்தபட்டில் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களுக்கு அவர்களுடைய கஷ்ட நஷ்டம் நன்றாகத் தெரியும். நான் இந்த நேரத்திலே அவர்களிடம் ஒரு கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே கோடைகாலத்திலே நியாயமாக 110 கியூசெக்ஸ் தண்ணீர் வழங்கப்படுகிறது. அவர்கள் தங்களுடைய விவசாயத்தைப் பாதுகாக்க முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது.

கோடை காலத்திலே முறையாகத் தண்ணீர் கொடுக்கிறார்களா என்றால் நிச்சயமாகக் கிடையாது, ஆகவே நிரந்தரமாக உத்திரவாதமாக தண்ணீர் கொடுத்து அந்த விவசாயிகளுடைய மனக் குறையை மாற்றவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4–20)

அதேபோல் இன்றைக்கு பருவம் தவறி பெய்த மழையின் காரணமாக ஆங்காங்கே உள்ள வடிகால்கள் மூலம் வெள்ளம் புறப்பட்டு வயல் நிலங்கள் வாழைத் தோட்டங்கள் அழிந்து இருப்பதற்குக் காரணம் அங்கே வடிகால்கள் எல்லாம் சீர் அமைக்கப்படாமல் தூர்ந்து கிடப்பது மட்டும் அல்லாமல் வடிகால்களை தனியார்கள் ஆக்கிரமித்துக்கொண்டு வாழை, தென்னை மரங்களைப் பயிரிட்டு இன்றைக்கு வடிகால்களை முழுமையாக ஆக்கிரமிப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள். மழைக் காலங்களில் வெள்ளம் வடிகின்றபோது அந்த விவசாய பகுதி அனைத்தும், ஆக்கிரமிப்புப் பகுதி அனைத்தும் இந்த வெள்ளத்தை முழுமையாகத் தடுக்கின்ற காரணத்தால் வயல் நிலங்கள், வாழைத் தோப்புகளில் இந்த வெள்ளங்கள் புகுந்து வெற்றிலைக் கொடிக்கால்கள் போன்ற இடங்களில் புகுந்து பல லட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டத்தை உருவாக்கி இருக்கிறது. சமீபத்தில் 2 தினங்களுக்கு முன்பு விவசாய உயர்மட்டக் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. முனு ஆதி அவர்களும் நானும் அந்த விவசாயப் பகுதிகளை சுற்றிப் பார்க்கிறபோது அந்த விவசாயிகள் சொன்ன மிகப்பெரிய குறை இது தான். வடிகால்களில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றித் தாருங்கள் என்று கேட்டார்கள். அப்படி ஆக்கிரமிப்புக்களை அகற்றித் தந்தால் மழைக் காலங்களில் வருகின்ற வெள்ளங்கள் சீராக வெளியில் சென்று கடலில் கலக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் இந்த விளை நிலங்கள் அழிக்கப்பட்டு எங்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்தை உருவாக்குகிறது என்று எடுத்துச் சொன்னார்கள். ஆகவே இந்த வடிகால்களில் இருக்கின்ற ஆக்கிரமிப்புச் செய்துள்ள ஆக்கிரமிப்பாளர்களை எப்படியாவது கடுமையான சட்டத் திட்டங்களை உருவாக்கியாவது அவர்களை அகற்றித் தீரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சேதுக்குவாய்த்தான்குளம் பல நூறு ஆண்டு காலமாக தூர் எடுக்காமல் இருக்கிறது என்பதை அந்த விவசாய மக்கள் சொன்னார்கள். அந்த சேதுக்குவாய்த்தான்குளத்திலேயும் தனியார்கள் ஆக்கிரமிப்புகள் உள்ளன. ஆகவே தூர் எடுக்கப்பட்டு அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டும். சேதுக்குவாய்த்தான் குளத்திற்கு வருகின்ற தண்ணீர் ஏறத்தாழ 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மாவடி பண்ணை என்ற இடத்திலிருந்து ஒரு ரெகுலேட்டர் மூலம் அங்கே தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. அந்த கால்வாய் மிகவும் குறுகியதாக இருப்பதாலும் அடிக்கடி மணல் தூர்ந்து போகிற



காரணத்தாலும் காலத்தே அந்த குளம் பெருகுவதற்கு வாய்ப்பு இல்லாமல் விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகள் பாதிக்கப்படுகிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, இந்த குளத்திற்கு அருகே சூளுடையார் கோயில் என்று ஒன்று உள்ளது. அதிலிருந்து 100 அடி தூரத்தில் ஆத்துராங்கால் உள்ளது. ஆகவே 100 அடி தூரத்தில் இருக்கின்ற ஆத்துராங்காலுக்கும் அந்தக் கோயிலுக்கும் இடையே உள்ள அந்த 100 அடிக்கு ஒரு இணைப்புக் கால்வாய் வெட்டினால் அதிலே ஒரு ரெகுலேட்டர் வைத்து இந்த குளத்திற்கு தண்ணீர் கொண்டு வரமுடியும். மேலும் ஆத்துராங்காலிலிருந்து மாவடிப் பண்ணையிலிருந்து வருகின்ற அந்தக் கால்வாயில் தண்ணீர் கொண்டு வருகின்ற சூழ்நிலையில் அதில் வழியில் ஆயில் இன்ஜினை வைத்து தண்ணீர் எடுத்து விடுகிற காரணத்தினால் குளத்திற்கு தண்ணீர் வருவது இல்லை. ஆகவே இந்த 100 அடிக்கு இடைப்பட்ட தூரத்திற்கு கால் வாயை வெட்டி இந்த சேதுக்கு வாய்த்தான் குளத்திற்கு முறையாகக் தண்ணீர் கிடைக்க வழி வகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

சாத்தான்குளம் பகுதியில் ஆண்டாண்டு தோறும் கடுமையான வறட்சி ஏற்பட்டு ஏறத்தாழ அங்கு இருக்கின்ற 100 க்கு மேற்பட்ட குளங்கள் பெருகாத சூழ்நிலை ஏற்பட்டு இன்றைக்கு நிலத்தடி நீரும் இல்லை, குளங்களில் தண்ணீர் இல்லை என்ற ஒரு சூழ்நிலை ஆண்டுதோறும் அங்கே உருவாகி வருகிறது. அதை நிவர்த்தி செய்கின்ற வகையில் ஆண்டுதோறும் மழைக் காலத்தில் தாமிரபரணி ஆற்றில் 20 ஆயிரம் கன அடி நீர் வீணாகப் போய் கடலில் கலக்கிறது. ஆகவே அப்படி கலக்கின்ற தண்ணீரை மேலப்பாளையத்திற்கு அருகில் சுத்தமல்லி என்ற இடத்தில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு அணை கட்டி அதிலிருந்து 2 ஆயிரம் கன அடி கொள் அளவு கொள்ளக்கூடிய ஒரு பிரதான கால்வாய் அமைத்து கருமேனி ஆற்றில் இணைக்கப்படுமானால் நாங்குநேரி பகுதி, சாத்தான்குளம் பகுதி ஆகிய 2 பகுதிகளில் இருக்கின்ற நூற்றுக்கு மேற்பட்ட மானாவாரிக் குளங்கள் பாசன வசதி பெறுகின்றபோது ஒரு லட்சம் ஏக்கருக்கு மேல் நிலங்கள் நஞ்சைப் பயிர் நிலங்கள் அங்கே பயன் பெறமுடியும். அதோடு அந்த பகுதியில் இருக்கின்ற வறட்சியும் போகும். அந்தப் பகுதியில் இருக்கின்ற குடிநீர் பிரச்சினையையும் தீர்க்க முடியும். ஆகவே இந்தத் திட்டத்தை ஆய்வு செய்யவேண்டும். விரைவில் அமலுக்கு கொண்டு வரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்களுடைய சார்பில் நான் பணிவல்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுக்குக் கிழக்கே ஆண்டுதோறும் கடலில் போய் கலக்கும் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தும் சூழ்நிலையை உருவாக்கவேண்டும். காரணம், வடகாலில் ஆண்டு முழுவதும் தண்ணீர் செல்கிறது. ஸ்பிக், தெர்மல் பிராஜக்ட், ஹெவி வாட்டர் பிராஜெக்ட் போன்றவற்றிற்கு வடிகால் மூலம் ஆண்டு முழுவதும் தினந்தோறும் தண்ணீர் போகின்ற நிலைமை இருக்கிறது. ஆனால் விவசாயத்திற்கு தண்ணீர் கிடைப்பது

இல்லை. நான் கேட்டுக் கொள்வது எல்லாம், வெள்ள நேரத்தில் ஸ்ரீவைகுண்டம் அணையைத் தாண்டி கடலில் கலக்கும் வெள்ளத்தை ஏரலுக்கு அருகில் மிகப்பெரிய அணையைக் கட்டி வெள்ளக் காலத்தில் வரும் தண்ணீரைச் சேமித்து வைத்து அந்த நிறுவனங்களுக்கு எடுத்துச் செல்லலாம். அப்படிச் செய்கிற போது ஸ்ரீவைகுண்டம் பகுதியில் இருக்கும் விவசாயிகளும் தங்களுடைய விவசாயத்திற்கு நல்ல தண்ணீரைப் பெற்று இரு மடங்கு தங்கள் உற்பத்தியைப் பெருக்க முடியும். அந்தப் பகுதி மக்களின் குடிநீர் பஞ்சத்தையும் போக்கமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் வெள்ள நீர் கடலில் போய் கலக்காத சூழ்நிலையும் ஏற்படும். அப்படிச் செய்வதன் மூலம் தென்கால், வடகால் ஆகிய இரண்டு பகுதிகளில் உள்ள விவசாயிகளும் பொதுமக்களும் நல்ல வகையில் தங்களுடைய வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக்கொள்ள வசதி ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டத்தில்; உடுமலைத் தாலுக்காவைச் சேர்ந்த மடத்தூர், மயிலாபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள நிலங்களையும் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பொய்கையணை திட்டத்தினை நிறைவேற்றவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் எல்லாம் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரான திரு. முத்துக்கிருஷ்ணன் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கையைக் கொடுத்து, திரு. முத்துகிருஷ்ணன் அவர்களும் அந்தப் பகுதியை நேரில் பார்வையிட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், தலைமைப் பொறியாளரையும் அழைத்துச் சென்று நேரில் பார்வையிடச்செய்து, அது சாத்தியமான திட்டம்தான், நிறைவேற்றப்படலாம் என்று சொல்லி, அதற்கான திட்டத்தையும் தயாரித்து, அந்தத் திட்டம் தற்போது தலைமைப் பொறியாளரின் ஒப்புதலுக்காக இருக்கிறது என்று தெரிகிறது. ஆகவே, அந்தத் திட்டத்தை கன்னியாகுமரியில் உள்ள ஆரல்வாய்மொழி பகுதியில் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இதன் காரணமாக ஒரு போக விளைச்சல் உடைய அந்தப் பகுதி நிலங்களில் இரு போக விளைச்சல் செய்யும் சூழ்நிலை ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஸ்ரீவைகுண்டம் பகுதியில் ஆறுமுகமங்கலம் என்ற இடத்தில் ஒரு பெரிய குளம் இருக்கிறது. அதை மராமத்துச் செய்ய வேண்டும். அப்படி மராமத்து செய்வதோடு மட்டுமல்லாமல், அந்தக் குளத்தில் அமலைச்செடி குளம் முழுவதும் ஆளுயரத்திற்கு வளர்ந்து, அதை ஆக்கிரமித்துக்கொண்டு இருக்கிறது. இதனால் தண்ணீர் தேங்கும் அளவு குறைவாக இருக்கிறது. வெள்ளம் வருகின்ற நேரத்தில் நிறைய தண்ணீர் அதிலே தேங்கமுடியாத



நிலை இருப்பதால். அந்த ஆறுமுகமங்கலம் குளத்தில் இருந்து ஸ்பிக், தெர்மல் ஸ்டேஷன், மற்றும் ஹெவி வாட்டர் பிராஜெக்ட்ஸ், தண்ணீர் எடுத்துச் செல்வதால், அவர்கள் செலவிலேயே அந்த அமலைச்செடியை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லது அவர்களுக்கு அது குறித்து ஆணையிடவேண்டும் என்று இந்த நேரத்தில் நான். கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீவைகுண்டம் கஸ்பா குளம், சிவகிளை, பெருங்குளம், பட்டர்குளம் ஆகியவைகளை மராமத்துச் செய்ய வேண்டும் என்றுகேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பாசனத் துறையில் இருக்கும் கட்டுமானப் பிரிவில் இருக்கும் வேலைபார்க்கும் ஊழியர்களுடைய ஊதியம் ரூ. 12 என்று உள்ளது. இன்றைக்குள்ள சூழ்நிலையில் அந்த ரூ. 12 என்பது போதுமானதாக இருக்கிறதா என்று கேட்டால் நிச்சயமாகப் போதாது, இதை அதிகப்படுத்தவேண்டும். அதோடு மட்டுமல்லாமல் 30 நாள் பணி அவர்கள் தொடர்ந்து செய்தால் உடனே அந்த இடத்தில் இருந்து அவர்கள் அகற்றப் படுகிற சூழ்நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. இதனால் அவர்களுடைய குடும்பம் பாதிக்கும் சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே தள்ளப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதை மாற்றியமைக்கவேண்டும். அதோடு மட்டுமல்லாமல், அவர்கள் இந்தத் தொழிலையே நம்பி இருக்கிற காரணத்தால், அவர்களையெல்லாம் நிரந்தரமாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்வதோடு அந்த வகையில் அவர்களுடைய குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தோவாளை போன்ற இடங்களிலும் மற்றும் நெல்லை மாவட்டத்திலுள்ள பல இடங்களிலும் உள்ள கால்வாய்களில் சிமெண்ட் லைனிங் வேலை நடைபெற்று வந்தது. இப்போது அது தொடரப்படாமல் நிறுத்தப்பட்டு இருக்கிறது. அவைகளைத் தொடர்ந்து செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் பெய்த பெரு மழையால் தாமிரபரணியில் வெள்ளம் ஏற்பட்டு அது புன்னக்காயல் பகுதியை அழித்து விட்டது. காரணம், புன்னக்காயல், சேந்தமங்கலம் பகுதியில் இருந்து அந்த ஆற்றின் இருமருங்கிலும் கரைகள் இல்லை. அப்படி கரைகள் இல்லாத காரணத்தால் ஒரு பாதி வெள்ளம் முக்காணி, சேதுக்கு வாய்த்தாள் போன்ற பகுதிகளில், வெள்ளம் புகுந்து விவசாயத்தை அழித்து விட்டது. கிழக்குப் பகுதி வெள்ளம் புன்னக்காயல் என்ற ஊரையே அழித்து விட்டது. அதனால் விவசாயம் பாதித்து விட்டது. ஆகவே, அதைத் தடுக்கும் வகையில் அந்த ஆற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அதிலே ஆக்கிரமிப்பு செய்து உடைமரம் வளர்க்கின்றவர்

களை விரட்டி அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதி மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், புன்னைக்காயல், முக்காணி பகுதிகள் பாதிக்காத வகையில் அந்த ஆற்றின் இரு புறமும் கரைகளை உயர்த்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வெள்ளம் வருகின்ற காலத்திற்கு முன்பே இதைச்செய்து கொடுப்பதன் மூலம் அந்தப் பகுதி மக்களையும் விவசாய மக்களையும் இந்த அரசு பாதுகாக்க முடியும், அவர்களுக்கு பயன்தர முடியும் என்று நான் நினைவுபடுத்துகிறேன்.

(மாலை 4-30)

சடையநேரி கண்மாயில் ஷட்டர்கள் இல்லை; சிலயிடங்களில் உடைப்பு ஏற்பட்டிருக்கின்றது. வெள்ளம் வந்தால்தான் அந்தக் கால்வாயைச் சீரமைக்க வேண்டுமென்ற சூழ்நிலை அதிகாரிகளிடத்தில் இருப்பதால், உடைப்பு ஏற்பட்டு விவசாயிகளின் நிலம் அழிக்கப்படும் நிலைமை இருக்கிறது. இந்த முறையில் சடையநேரி கால்வாயில் பராமரிப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. இதைப் பரிசீலித்து, அதைச் சீரமைக்க வேண்டும். ஆங்காங்கு தேவையான இடங்களில் ஷட்டர்களை அமைக்க வேண்டும்; முறையான பாசன வசதிகளைச் செய்ய வேண்டும். அடைக்கலாபுரத்திலிருந்து சடையநேரிகுளம் வரையில் முறையாக கால்வாய் வசதி இல்லை. சடையநேரிகுளம் வரையில் அந்தக் கால்வாய் முறையாகச் செல்லுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கேரளாவில், மேற்குத் தொடர்ச்சி மலையிலே பெய்யும் மழையினால் உற்பத்தியாகும் ஆறுகளெல்லாம் மேற்கு நோக்கி ஓடி வீணாகக் கடலில் கலக்கின்றன. ஆகவே, மேற்கு நோக்கிப் பாய்ந்து கடலில் வீணாகக் கலக்கின்ற தண்ணீரைத் தமிழகத்திற்குத் திருப்பி விட வேண்டும். அப்பொழுது தான், நெல்லை, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்கள் செழிப்படையும். கன்னியாகுமரி மக்களுக்கும் அது பயன்படும். இந்த வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பல ஆண்டுகளாகத் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறீர்கள். ஆனால், காலம்தான் கடந்துகொண்டே இருக்கிறதே தவிர, அந்தக் காரியம் நிறைவு பெற்றிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. ஆகவே, அந்த ஆறுகளைத் திருப்புகின்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டிலே ஒரு ஆண்டு மழை பெய்தால் நான்காண்டுகளுக்கு மழை இல்லாத நிலைமை இருக்கிறது; பெரும்பாலும் கடுமையான வறட்சி நிலைமை இருக்கிறது. சமீபத்தில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக பயிர்கள் அழிந்து போகின்ற நிலைமை ஏற்பட்டது. ஆனால், அடுத்த ஆண்டில் நிச்சயமாக மழை வருமா என்றால், அதை நாம் எதிர்பார்த்திருக்க வேண்டிய சூழ்நிலைதான். நிச்சயமாக வரும்



என்ற நிலைமை இல்லை. ஆகவே, அந்தச் சூழ்நிலைகளையெல்லாம் மனத்தில் வைத்துக்கொண்டு, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் தண்ணீரைத் திருப்பி நம்முடைய பகுதிக்குக் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன், நன்றி வணக்கம்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு பாசனத் துறை பற்றிய இந்த விவாதத்தில் சில கருத்துக்களை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு தண்ணீரிலே பற்றாக்குறை மாநிலம் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. ஆனால், இதை உணர்ந்து, இதற்கேற்ற நடவடிக்கைகளை நாம் எடுத்திருக்கிறோமா என்றால் இல்லை.

முக்கியமாக, தமிழ்நாட்டின் மிக முக்கியமான நதியான காவிரி நதி நீர்ப் பிரச்னையிலே கடந்த சில ஆண்டுகளாக அந்தப் பிரச்னைக்கு எந்தத் தீர்வும் ஏற்படாததன் விளைவாக எவ்வளவு பெரிய கஷ்ட நஷ்டங்களுக்குத் தமிழகம் ஆளாகியிருக்கிறது என்பதை நாம் அத்தனைபேரும் அறிவோம்.

அதிலும், குறிப்பாக, இந்தப் பிரச்னையிலே, அமைச்சர்கள் மட்டத்திலே, முதலமைச்சர்கள் மட்டத்திலே, மத்திய அரசின் அமைச்சர்கள் தலையீட்டின்பேரிலே பல தடவைகள் பேச்சு வார்த்தை நடந்தும்கூட, இன்னும் ஒரு சுமுகமான தீர்வு வரவில்லை. எந்தத் தீர்வும் வராமல் தள்ளிப் போடப்படுவதன் காரணமாக, கர்நாடக மாநிலத்திற்கு எந்த நஷ்டமும் இல்லை; நமக்குத்தான் நஷ்டம். ஒரு நாள் தள்ளிப் போடப்பட்டாலும் அதன் விளைவாகத் தமிழ்நாட்டு விவசாயிகளுக்குத்தான் பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதற்கு உடனடியாகத் தீர்வு காண என்ன செய்ய வேண்டுமோ அதை நம்முடைய அரசு செய்ய வேண்டுமென்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

கர்நாடக மாநிலத்திலே அவர்கள் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மீறி, நம்முடைய சம்மதமில்லாமல், ஹேமாவதி, கபினி போன்றவற்றிலெல்லாம் அணைகளைக் கட்டியிருக்கிறார்கள். இதைப்பற்றியெல்லாம் சட்டமன்றத்திலேயும் நிறையப் பேசியிருக்கிறேன், மற்ற உறுப்பினர்களும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இப்படி அவர்கள் தமிழகத்திற்கு வர வேண்டிய நியாயமான தண்ணீரைத் தடுத்து, அவர்களாவது செழிப்பாக வளமாக வாழ்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை.

அண்மையில், இந்து பத்திரிக்கையில்—7-3-84 ஆம் தேதி ஒரு செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தியிலே அவர்கள் சொல்கிறார்கள். பெங்களூரில் உள்ள, Institute for Social and Economic change, Bangalore அதாவது, "....Workshop on water

management held under the auspices of the Command Area Study unit of the Institute for Social and Economic Change, Bangalore'' என்ற ஒரு அமைப்பு நடத்திய ஒரு ஆராய்ச்சிக் கருத்தரங்கிலே அவர்கள் அதிர்ச்சி தரத் தக்க உண்மையைச் சொல்லியிருக்கிறார்கள். என்னவென்று சொன்னால், காவிரி நதி நீரை—தமிழகத்திற்கு வரவேண்டிய நியாயமான நீரை அவர்கள் தடுத்து நிறுத்தி புதிய பகுதிகளுக்கு—கர்நாடகத்தின் பகுதிகளுக்கு பாசன வசதிகளை அளித்தார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதில் ஒன்றும் நமக்கு வருத்தம் இல்லை. அப்படி அவர்களாவது வளமாக வாழ்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. ஆனால் புதிய பகுதிகள் என்ன ஆகி இருக்கின்றன என்பதைப் பற்றி காவிரி கமாண்ட் ஏரியா டெவலப்மென்ட் அதாரிட்டியிலே அதிகாரியாக இருக்கக் கூடிய நஞ்சுண்டசாமி அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்: "HINDU 7-5-1984: —According to Mr. Nanjundaswamy, Administrator, of the CADA for the Cauvery basin projects, it was feared that the soil in the Ghataprabha and the Malaprabha command areas could become useless, due to excessive irrigation which had rendered the land saline to a large extent. The relatively new Hemavathi irrigation project command faced the same problem. Even villages in the Command areas of the State were becoming waterlogged. The stagnant water led to breeding of mosquitoes and disease. About 20 villages in the Hemavathi Command area had to be shifted for this reason....'' என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவர்களுடைய அதிகாரியே சொல்கிறார். அதிகத் தண்ணீரைப் பாய்ச்சி நல்ல நிலங்களை எல்லாம் சதுப்பு நிலங்களாக ஆக்கி அங்கே கொசுக்கள் பரவி, அதனால் வியாதிகள் பரவி மக்கள் வாழ முடியாத நிலைமை ஏற்பட்டது மட்டுமல்ல; அங்கே உள்ள அருமையான நிலங்கள் எல்லாம் வீணாகிவிட்டன என்று. இதைப்பற்றி நாம் கவனிக்கவேண்டும். அவர்கள் என்ன சொல்லி இருக்கிறார்கள்? நாம் தேசியக் கண்ணோட்டத்தில் இந்தப் பிரச்சினையைப் பார்க்கவேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நமக்கு நியாயமாக வரவேண்டிய தண்ணீரையும் நீங்கள் கொடுக்கவில்லை, சரி போகட்டும். நீங்களாவது முறையாக அதைப் பயன்படுத்தி உங்களுடைய மாநிலத்தையாவது வளமாக ஆக்கி இருக்கின்றீர்களா என்றால் அதுவும் இல்லை; அங்கே இருக்கக்கூடிய நிலத்தை எல்லாம் சதுப்பு நிலமாக ஆக்கினாலும் ஆக்குவோமே தவிர, அந்த நிலத்தை எல்லாம் சதுப்பு நிலமாக ஆக்கி அதன்மூலமாக அங்கே கொசுக்கள் பரவி மக்களுக்கு வியாதி ஏற்பட்டாலும் பரவாயில்லை, தமிழகத்திற்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட கொடுக்க மாட்டோம் என்று சொல்கின்ற போக்கு கர்நாடக மாநிலத்தில் இருப்பவர்களுக்கு



இருக்குமேயானால் அது எப்படி தேசிய ஒருமைப்பாட்டுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதிலே நம்முடைய அரசு தீவிரமான கவனம் செலுத்தவேண்டும். இதுபோன்று அவர்களுடைய அதிகாரிகள் கொடுத்த அறிக்கை பற்றி மைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன் காவிரி பிரச்சினையைப் பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே ஆரம்பக் கட்டத்திலேயே நான் இதைச் சுட்டிக் காட்டி இருக்கிறேன். பேச்சுவார்த்தைகளில் நேரத்தை வீணாக்க வேண்டாம்; இந்தப் பேச்சு வார்த்தைகளால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை, முடிவிலே பேச்சுவார்த்தை முறிந்து பின்னால் நீங்களே இதற்கு ட்ரிபுனல் வேண்டும் என்று சொல்வீர்களேயானால் இடையிலே இந்த 3, 4 ஆண்டுகள் வீணாகப் போனது தான் மிச்சம். ட்ரிபுனலிலே அதற்குப் பிறகு விசாரிக்க ஏற்பாடு செய்தால் மேலும் சில ஆண்டுகள் வீணாகும். ஆக மொத்தத்தில் 7. 8 ஆண்டுகள் வீணாகும் என்றால் அவ்வாறு வீணாவதால் நஷ்டம் நமக்குத்தான்; கர்நாடக மாநிலத்திற்கு இல்லை. ஏனென்றால் அவர்கள் ஆற்றின் மேல் பகுதியில் இருப்பவர்கள்: நாம் கீழ்ப்பகுதியில் இருக்கிறோம். எனவே அவர்களுக்கு நஷ்டம் இல்லை. எனவே உடனடியாக இதை ட்ரிபுனலுக்கு விடவேண்டும் என்று நான் வற்புறுத்தினேன். ஆனால் அன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இதை நம்முடைய பிரதம மந்திரி அவர்களின் ஆர்பிட்ரேஷனுக்கு விடலாம் என்று ஒரு யோசனையைச் சொன்னார்கள். அதுதான் நல்ல யோசனை என்றும் சொன்னார்கள். பிரதம மந்திரி அவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்றில்லை. பிரதம மந்திரி ஆர்பிட்ரேஷனில் ஒரு முடிவைச் சொன்னாலும் கூட அதிலே ஏதாவது ஒரு பார்ட்டி ஒத்துக்கொள்ளலாம்; இன்னொரு பார்ட்டி ஏற்க மறுக்கலாம்; அதன் பின்னால் ட்ரிபுனலுக்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்படும். அப்போதும் பல ஆண்டுகள் வீணாகும். ஏற்கெனவே பஞ்சாபுக்கும், ஹரியானாவிற்கும் இடையே நடைபெற்ற நதி நீர்த் தகராறிலே பிரதம மந்திரி தலையிட்டு ஆர்பிட்ரேஷன் செய்தபோது அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அதன் விளைவாக அந்தப் பிரச்சினை இன்றைக்கு முற்றிப் போய் இருக்கின்றது. அந்தநிலைமை இங்கேயும்வரும். எனவே வேண்டாம், நேரடியாகவே இதை ட்ரிபுனலுக்கு அனுப்புங்கள். ஏனென்றால் நம்முடைய இந்திய அரசாங்கம் 1956-ஆம் ஆண்டிலே இன்டர் ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட் ஆக்டை நாடாளுமன்றத்திலே கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கின்றது. அந்த சட்டப்படி இதை ட்ரிபுனலுக்கு அனுப்புங்கள். அந்த ட்ரிபுனல் தீர்ப்புப்படி நமக்கு நிச்சயமாக இலாபம் இருக்கும். இன்றைக்கு நாம் அடைந்து கொண்டிருக்கின்ற நஷ்டத்தை விட அந்த ட்ரிபுனலால் எந்த மோசமும் நிச்சயமாக வராது. ஏனென்றால் நியாயம் நமது பக்கம் இருக்கின்றது. உலக நீதிகளும், சர்வதேசச் சட்டங்களும் நமக்கு ஆதரவாக இருக்கின்றன. ஆகவே இதை

உடனடியாக ட்ரிபுனலுக்கு அனுப்புவதன் மூலம்தான் இந்தப் பிரச்சினையிலே ஒரு நல்ல தீர்வு வரும் என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(மாலை 4-40)

இன்னொன்றையும் இந்த அவையிலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரு தரப்பும் பேச்சு வார்த்தை நடத்துகிறது. அதிலே அவர்கள் எந்த முறையிலே இந்தப் பேச்சு வார்த்தையை அணுகுகிறார்கள், நாம் எந்த முறையிலே அணுகுகிறோம் என்பதற்கு அடிப்படையிலே வேறுபாடு இருக்கிறது. கர்நாடக மாநிலத்திலே, அர்ஸ் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் பாசனத் துறையின் அமைச்சராக இருந்தவர் சென்ன பெசவப்பா. அவரைக் காவேரி ஆலோசனைக் குழுத் தலைவராக நியமித்து, அந்தப் பேச்சுவார்த்தையில் 'கன்ட்டினுவிட் டி' இருக்கும் வகையில், அவர்தான் தொடர்ந்து திலே வந்து கொண்டே இருக்கிறார். முதலமைச்சர்கள் வந்தாலும் அமைச்சர்கள் வந்தாலும் முடிவான அதிகாரம் அவருக்கு அளிக்கப்பட்டு, 7, 8 ஆண்டுக்காலமாக, ஒவ்வொரு பேச்சு வார்த்தையிலும் வந்திருக்கிறார். அவர் ஒரே நிலையை வற்புறுத்துகிறார். கர்நாடகம் ஒரு போகம் விளைவிக்கவே கஷ்டப்படுகிற நேரத்திலே தமிழகத்திற்கு முப்போகத்திற்குத் தண்ணீர் எதற்கு என்பதுதான் அவருடைய குறிக்கோள்? இதிலே பிடிவாதமான நிலைமை கர்நாடக மாநிலத்திற்கு ஏற்பட்டது அதனால்தான். ஆனால் நம்முடைய தமிழகத்தின் சார்பிலே பேச்சுவார்த்தைக்கு முதல் தடவை சென்றவன் அடுத்த தடவை கிடையாது; அடுத்த தடவை சென்றவர் அதற்கு அடுத்த தடவை கிடையாது. அதற்குள்ளே அமைச்சர்கள் பல தடவைகள் மாற்றம். அதிலே சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் செல்வதில்லை. அதற்கு மாறாக இன்னொரு துறையைச் சேர்ந்த அமைச்சர் அந்தப் பேச்சுவார்த்தைக்குச் செல்வார். அதைப்போல் யார் சம்பந்தப்பட்ட இன்ஜினியரோ அவரை அழைத்துப் போவதில்லை. நீங்கள் வேறு யாரையோ அழைத்துப் போகிறீர்கள்......

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாற்றுத் தலைவர் அவர்களே, காவிரி பிரச்னையைப் பொறுத்த மட்டிலும் எப்படி கர்நாடக மாநிலத்திற்கு சென்ன பெசவப்பா வழிகாட்டியாக இருக்கின்றாரோ, அப்படி தமிழகத்தைப் பொறுத்தமட்டில் அந்தக் காவிரிப் பிரச்னையை மிகவும் தெளிவாகத் தெரிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒவ்வொரு பேச்சு வார்த்தைக்கும் செல்கிறார்கள், அவர்களே வழி காட்டியாக இருக்கிறார்கள். ஆகவே, எந்த அமைச்சர் போனாலும் வந்தாலும் அல்லது அமைச்சரவையிலே மாற்றம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அது ஒரு பிரச்னையாகாது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தெளிவாக ஒவ்வொரு பேச்சு வார்த்தையிலும் உரிய நடவடிக்கையை எடுத்து வருகிறார் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





திரு. ப. நெடுமாறன்: உங்களுடைய கட்சியின் சார்பில் அல்ல. தமிழகத்தின் சார்பில் முதல் அமைச்சர் அவர்களே இதற்குச் செல்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எனக்கு மகிழ்ச்சி. ஆனால் முதல் அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறையை நிர்வகிக்கவில்லை. இதிலே முக்கியமானது, சம்பந்தப்பட்ட அமைச்சர் இதிலே சென்றிருக்கிறாரா என்று பார்த்தால் ஒரு தடவை கூடச் சென்றதாக எனக்கு நினைவில்லை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் செல்கிறார். அவருடைய அறிவு ஆற்றலிலே எனக்குச் சந்தேகம் இல்லை. மின்சாரத் துறை அமைச்சருக்குச் சம்பந்தம் இல்லாத பேச்சுவார்த்தையிலே அவர் மீது நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள். அது உங்களுடைய விவகாரம், நான் தலையிட விரும்பவில்லை. அவரையே பாசனத் துறை அமைச்சராக்கி, அவரையே இந்தப் பேச்சுவார்த்தைக்கு அனுப்பலாம் நீங்கள். அதை விட்டுவிட்டு, மின்சாரத் துறை அமைச்சர் ஒவ்வொரு தடவையும் பேச்சுவார்த்தைக்குச் செல்வதும், பாசனத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் அந்தப் பேச்சுவார்த்தையிலே பங்கெடுக்காமல் இருப்பதும், அது பேச்சு வார்த்தைக்குச் செல்கிற இடத்திலே நம்முடைய கட்சியைப் பலவீனப்படுத்திவிடும் என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதிலே நாம் அந்த அம்சத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல, அந்தப் பேச்சுவார்த்தையிலே எந்தக் கட்சி கர்நாடகத்திலே இருந்தாலும் அது இந்திரா காங்கிரஸ் ஆண்ட காலத்திலும் அதற்குப் பின்னாலே இன்னொரு கட்சி ஆண்ட காலத்திலும் எத்தனை முதல் அமைச்சர்கள் மாறினாலும் அர்ஸ் முதலமைச்சராக இருந்தாலும் குண்டு ராவ் முதல் அமைச்சராக இருந்தாலும் இன்றைக்கு ஹெக்டே முதலமைச்சராக இருந்தாலும் அதிலே ஒரே கொள்கைதான். அதிலே சென்ன பெசவப்பா என்ன சொல்கிறாரோ அதைத்தான் மாநில அரசு கருத்தாக வைத்துக் கொண்டு அவர்கள் விடாப்பிடியாக இருக்கிறார்கள். ஆனால் இங்கே அப்படி ஒரு ஒருமித்த நிலை இல்லை. அது ரொம்ப வருந்தத்தக்கது. நம்முடைய தமிழகத்தின் நிலையை அந்தப் பேச்சுவார்த்தையிலே பலவீனப்படுத்தி விட்டது. ஆகவே, இனிமேல் கொஞ்சமும் தாமதப்படுத்தாமல் அதை டிரிபியூனலுக்கு ரெஃபர் பண்ண வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமான பிரச்னை, பெரியார் அணைப் பிரச்னை. இந்தப் பிரச்னையும் இன்றைக்கு முற்றி மோதியிருக்கிறது. பெரியார் அணை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்திலே வைகை நதிப்பாசனத்திற்கு உதவுகிற முக்கியமான அணை. அன்றைக்கிருந்த திருவாங்கூர் அரசாங்கத்தோடு அன்றைக்கிருந்த சென்னை மாகாண அரசாங்கம் ஒப்பந்தம் செய்து கொண்டு அதன் விளைவாக இந்த அணை கட்டப்பட்டது, 999 வருஷ ஒப்பந்தம். அதிலே கிட்டத்தட்ட 100 ஆண்டுகள்தான் கழிந்திருக்கின்றன. இன்னும் சுமார் 900 ஆண்டுகளுக்கு இந்த ஒப்பந்தம் இருக்கிறது. இதற்கிடையில்

(திரு ப. நெடுமாறன்) [1984 ஏப்ரல் 24

ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்தில் இதைப் பற்றி விவாதங்கள் எல்லாம் நடந்து பல பிரச்னைகளிலே நான் சொல்லியிருக்கிற காரணத்தாலே, விரிவாகப் போகவில்லை. இன்றைக்கு என்ன நிலைமை? 152 அடி தண்ணீர் அந்த அணையிலே இருக்க வேண்டும். அணை இடியப் போகிறது. அணை மிகவும் பலவீனமாக இருக்கிறது என்று ஒரு புகாரைக் கேரள மாநிலம் கிளப்பி, அணையிலே தண்ணீர் மட்டம் 136 அடியாக குறைக்கப்பட்டிருக்கிறது. இதிலே பல்வேறு பேச்சுக்கள் நடந்து அதற்குப் பின்னாலே தமிழக அரசு இதை ஒப்புக் கொண்டிருக்கிறது. இந்த 152 அடியாக இருந்தாலும் கூட தமிழகம் உபயோகப் படுத்தக்கூடியது 104 அடி வரையில் உள்ள தண்ணீர் தான் 104 அடிக்குக் கீழே உள்ள தண்ணீர் என்பது 'டெட் ஸ்டோரேஜ்' ஆகும். அதை ஒரு நாளும் தமிழகம் உபயோகப்படுத்த முடியாது. 152 அடி என்பது 136 அடியாக ஆக்கியம் பின்னாலே 14 அடி தண்ணீரைத் தான் இன்றைக்கு தமிழகம் உபயோகிக்கக் கூடிய நிலைமை. இதன் விளைவாக என்ன ஆகியிருக்கிறது என்றால் ஏறத்தாழ தமிழ்கம் ஒரு ஆண்டிற்கு 13.5 டி.எம்.சி. தண்ணீரை இழக்கிறது. இதன் விளைவாக கடந்த மூன்று ஆண்டுக்ளில் 51.5 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழகம் இழந்து, மதுரை, இராமநாதபுரம், மாவட்டங்களில் 80 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இன்றைக்கு போதுமான தண்ணீர் இல்லாமல் வாடக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு முக்கியமான பிரச்னை. மத்திய அரசினுடைய தலையீட்டின் பேரில் தமிழக அரசு ஒன்றை ஒப்புக் கொண்டது. என்ன அது? இந்த அணை இடிந்து விடும் என்று அவர்கள் சொல்கிறார்கள். மத்திய அரசின் என்ஜினியர்கள் பார்வையிட்டு இந்த அணை சரியாக இருக்கிறது; இந்த அணை பாதுகாப்பாக இருக்கிறது என்று சொன்னாலும் கூட, கேரள அரசின் வற்புறுத்தலின் பேரிலே நம்முடைய அரசாங்கம் நம்முடைய பணத்திலேயிருந்து 10 கோடி ரூபாய் செலவு செய்து இந்த அணையை முழுமையாக மராமத்து செய்வதாக ஒப்புக் கொண்டிருக்கிறோம். அந்த மராமத்து வேலைகளை இரண்டு பிரிவகளாகப் பிரித்து நாம் செய்ய வேண்டும். அதிலே முதல் பகுதி வேலைகள் முடிந்த பிறகு 136 அடியாக இருக்கிற தண்ணீர் மட்டத்தை 145 அடியாக உயர்த்திக் கொள்ளலாம்; அதற்கு பின்னாலே இரண்டாவது கட்ட வேலைகள் முடிவடைந்த பிறகு அந்தத் தண்ணீரை 152 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்று நாம் ஒப்பந்தம் செய்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இப்போது முதல் கட்ட மராமத்து வேலைகள் முடிவடைந்து விட்ட பின்னாலே 145 அடியாக தண்ணீரை உயர்த்திக் கொள்வதற்கு கேரளம் நம்மை அனுமதிக்கவில்லை. அதற்கு அந்த அரசு மறுக்கிறது. இரண்டு ஆண்டுகளாக இது தான் நிலைமை இந்த நிலைமையைப் போக்குவதற்கு நம்முடைய அரசாங்கம் இதுவரையில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். எந்த நடவடிக்கையும் இல்லை. நம்முடைய உரிமையை நிலை நாட்டுவதிலே நீங்கள் போதுமான அக்கறையைச் செலுத்தவில்லை என்று நான் இந்த அவையிலே குற்றம் சாட்ட விரும்புகிறேன்.



1984 ஏப்ரல் 24] (திரு. ப. நெடுமாறன்)

இரண்டாவது, சென்ற தடவை நீங்கள் அங்கே கேரளத்துக்காரர் ஒருவருக்கு மராமத்து வேலைகளை காண்ட்ராக்ட் விட்டீர்கள். இந்தத் தடவை தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் காண்ட்ராக்ட் எடுத்திருக்கிறார் என்ற காரணத்தாலே அவரை அந்த வேலையைச் செய்யவிடாமல் கேரள காண்ட்ராக்டர் தடுக்கிறார். அவரை மீறி இந்த காண்ட்ராக்ட்டரால் வேலையைச் செய்ய முடியவில்லை. வேலைகள் எல்லாம் ஸ்தம்பித்துக் கிடக்கின்றன. இந்த நிலைமையில் இரண்டாவது கட்ட வேலைகள் எதுவுமே செய்ய முடியாமல், அணைத் தண்ணீர் மட்டத்தை உயர்த்த முடியாமல் நாம் இன்றைக்கு அவதிக்குள்ளாகி இருக்கிறோம். இதன் விளைவாக நம்முடைய தமிழகத்திற்கு பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இந்தப் பிரச்னையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் நேரடியாகக் கவனம் செலுத்தி அங்கே 145 அடியாக தண்ணீர் மட்டத்தை உயர்த்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்பதை வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்து இங்கே மேற்கு நதி நீர் பிரச்னைப் பற்றியும் நம்முடைய அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆண்டிற்காண்டு அதே பகுதி அப்படியே வருகிறது. இதுசம்பந்தமாக நாங்கள் கேரள அரசாங்கத்திற்குச் சொல்லி இருக்கிறோம், பதில் வரவில்லையென்று; மேற்கு நதி நீர் தமிழகத்திற்கு திருப்பப்பட வேண்டும் என்பதிலே தமிழகம் நீண்டகாலமாக இந்தக் கோரிக்கையை வற்புறுத்தி வருகிறது. இன்றைக்கு 2,500 டி.எம்.சி தண்ணீரை இங்கே உற்பத்தியாகி அதிலே ஏறத்தாழ 5 சதவீதம் தண்ணீரை மட்டுமே கேரளா இதுவரையில் பயன்படுத்துகிறது. இனி அவர்கள் புதிய பாசனத் திட்டங்கள் வகுத்து மேற்கொண்டு தண்ணீர் உபயோகப்படுத்தினாலும் 12 முதல் 15 சதவீதம் தண்ணீருக்கு மேலே அவர்கள் நிச்சயமாக உபயோகிக்கப் போவதில்லையென்று அவர்களுடைய பொறியியல் வல்லுநர்களே சொல்லி இருக்கிறார்கள். இதை நாம் மனதிலே கொண்டு கேரள அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். அதிலே மத்திய அரசு தலையிட்டு இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணவேண்டுமென்று சொல்ல வேண்டும். ஏனென்றால் அவர்கள் இதிலே 250 டி.எம்.சி. தண்ணீரை அவர்களுடைய 'டெயில் எண்ட் இரிகேஷனிற்கு' பயன்படுத்துகிற தண்ணீரை, மழைக்காலத்திலே அவசியப்படாத தண்ணீரை அவர்கள் 'நமக்குக் கொடுத்து உதவினால் மட்டும் தமிழகத்திலே மதுரை, இராமநாதபுரம், கோயம்புத்தூர் மாவட்டங்களிலும், நெல்லை மாவட்டத்திலும் வறண்ட பகுதிகளை வளமாக்கி ஏறத்தாழ 50 லட்சம் டன்கள் உணவு தானியங்களை நம்மாலே உற்பத்திச் செய்ய முடியும்.

(மாலை 4-50)

கேரள அரசும், கேரளத்தில் இருக்கிற தனிப்பட்டவர்களும் ஒவ்வொரு ஆண்டும் சுமார 20 இலட்சம் டன் உணவு தானியங்கள் வெளி மாநிலங்களிலிருந்து விலைக்கு வாங்குகிறார்கள். அவர்கள் ஓரளவுக்கு நமக்கு தண்ணீர் அளித்தால்

அதனால் நம்முடைய மாநிலத்தில் கூடுதலாக 50 இலட்சம் டன் உணவு தானியம் உற்பத்தி செய்ய முடியும். அதிலே 20 இலட்சம் டன்னை மலிவு விலையில் நாம் அவர்களுக்குக் கொடுக்க முடியும். இப்படிப்பட்ட ஒரு பரஸ்பர பண்டமாற்று முறையில் இந்த அரசு பேச்சுவார்த்தை நடத்தி, தண்ணீர் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, பச்சையாறு பிரச்சனைபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் வற்புறுத்திச் சொன்னார்கள். திருநெல்வேலி மாவட்டம் களக்காடுமலையில் இந்த நதி உற்பத்தியாகிறது. அங்கே உற்பத்திய கி கணத்தான் கரையான் ஓடை, அணைக்கிடங்கு ஓடை, மரசடி ஆறு, உப்பாறு ஆகிய ஆறுகளுடன் சேர்ந்து பச்சையாறாக 22 மைல் ஓடி, தாமிரவருணியில் கலக்கிறது. 23-3-75 அன்று இன்றைக்கு பொதுப் பணித் துறைச் செயலாளராக இருக்கிற திரு. மாதவ சர்மா அவர்கள் அன்றைக்கு நெல்லை மாவட்டத்தில் கலெக்டராக இருந்தபோது ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். பச்சையாறு திட்டம் 455 இலட்சம் செலவில் கட்டப்படும். அதற்கான அனுமதியை அரசாங்கம் அளித்திருக்கிறது என்று 23-3-1975 அன்று அறிவித்தார்கள். 27-11-1975 அன்று, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி அவர்கள் அதற்கு அடிக்கல் நாட்டினார்கள். 29-4-76 ல் நெல்லை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் திருத்த மதிப்பீடு 575 இலட்சம் ரூபாய் என்று கலெக்டர் அறிவித்தார். 16-5-76லி பச்சையாறு உட்பட 7 பாசனத் திட்டங்களுக்கு தமிழக அரசு அனுமதி வழங்குயிருப்பதாக அறிவிக்கப்பட்டது. 21-5-76 அன்று 5 நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அதில் இந்தப் பச்சையாறு திட்டம் ஒன்று என்று அறிவிக்கப்பட்டது. ஆகஸ்ட் 1977-ல் பச்சையாறு திட்ட வேலை தொடங்கப்படும் என்று அன்றைக்கு ஆளுநராக இருந்த சுகாதியா அவர்கள் அறிவித்தார்கள். 27-4-79 அன்று இந்த சட்டமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜான் வின்சென்ட் அவர்கள் பச்சையாறு திட்டம் பற்றி ஒரு கேள்வி கேட்டபோது, அதற்கு இந்தத் துறையின் பொறுப்பை வகித்த மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள், கூடங்குளத்தில் அணுமின் நிலையம் வரவிருப்பதால் அதற்கும் சேர்த்து கூடுதல் தண்ணீரைத் தேக்க, அணையை விரிவாக்க வனத்துறை நிலத்திலும் சர்வே செய்ய வேண்டியுள்ளது, வனத்துறை அனுமதி அளிக்காமல் மறுத்து வருகிறது, பேச்சுவார்த்தை நடந்துவருகிறது என்று அறிவித்தார்கள்.

8-3-78-ல் கூடங்குளத்தில் அணுமின் நிலையம் அமைக்க மத்திய அரசைத் தமிழக அரசு வற்புறுத்தி வருகிறது. அணுமின் நிலையத்திற்கு தண்ணீர் வழங்கும் வகையில் பச்சையாறு திட்டம் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் இந்த மன்றத்தில் அறிவித்தார்கள்.





25-8-1978-ல் பச்சையாறு அணைத் திட்டம் 13 கோடி ரூபாய்ச் செலவில் விரிவாக உருவாக்கப்பட்டு வருகிறது; கூடங்குளம் அணு மின்நிலையத்திற்கு 200 மில்லியன் கன அடி தண்ணீரும், பாசனத்திற்கு 130 மில்லியன் கன அடி தண்ணீரும் ஆக 330 மில்லியன் கன அடி தண்ணீரைத் தேக்கக் கூடிய வகையில் அந்த அணைக் கட்டப்படும் என்று பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் அறிவித்தார். ஆக, வரிசையாக இதைப்போன்ற அறிவிப்புகள் அமைச்சர்களாலும், அதிகாரிகளாலும் செய்யப்பட்டு வருகின்றனவே தவிர, பச்சையாறு திட்டம் வரவில்லை. அந்தத் திட்டம் வந்தால் வறண்ட பகுதியாக இருக்கிற நான்குனேரி தாலுகா வளமான ஒரு பகுதியாக மாறும். என்ன காரணத்தால் இவ்வளவு அறிவிப்புகள் வந்த பின்னர் அந்தத் திட்டம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை நான் அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதில் உரையில் இதுபற்றி விளக்குவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

நான் இன்னும் சிலவற்றை மட்டும் சுருக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். பாலாற்றின் குறுக்கே கர்நாடக மாநிலத்தில் பெட்டமங்கலம் என்ற இடத்தில் ஒரு ஏரி அமைத்ததால் பாலாற்றில் தண்ணீர் வரத்து நின்றுவிட்டது என்று ஒரு புகார் சொல்லப்படுகிறது அதுபற்றி தமிழக அரசு ஆராய வேண்டும். அப்படி இருந்தால் அதை நிவர்த்திச் செய்ய என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சென்னைக்கு குடிநீர் வரும் பூண்டி நீர்த் தேக்கத்திற்கு வருகின்ற தண்ணீரை நகரி ஆற்றின் குறுக்கே அணையை, ஆந்திர மாநில அரசு, எல்லையில் ஆந்திர அரசு அண்மையில் அமைந்திருப்பதால், பூண்டித் தேக்கத்திற்கு வருகின்ற தண்ணீர் பெருமளவு குறைந்து விட்டது என்ற புகார் இருக்கிறது. இதையும் நம்முடைய அரசு ஆராய வேண்டும்.

ஆந்திரப் பிரதேசத்தில் கிருஷ்ணாபுரம் என்ற இடத்தில் 1975-ல் இந்த அணை புதியதாக கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதையும் ஆராயவேண்டும்.

அடுத்து இன்னொன்று, கிருஷ்ணா நதிநீர்த் திட்டம். இந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை ஆரம்பத்திலே இந்த சட்டமன்றத்திலே சுட்டிக்காட்டி, அதை அமலுக்குக் கொண்டு வருவதை வரவேற்றவன் நான் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இன்றைக்கு கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை

1984-85க்குள் முடித்துவிடுவோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எனக்குக் கிடைத்த தகவல்படி இந்தத் திட்டத்தில் வேலை செய்ய போதுமான கூலியாட்களும், கான்ட்ராக்ட்காரர்களும் இல்லை. டெண்டர்கூட யாரும் போடவில்லை என்ற புகார் வந்திருக்கிறது. இந்த நிலைமையில் எப்படி 1984-85க்குள் இந்தத் திட்டம் முடிக்கப்பட்டுவிடும் என்பதை அறிய விரும்புகிறேன். ஆரம்ப வேலைகள் முடிந்தால்தான் கட்டுமான வேலைகளைச் செய்ய முடியும் ஆகவே அடுத்த மழைக் காலத்திற்குள்ளாக இந்த திட்டத்தை முடிக்க சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

அண்மையிலே வைகை நதியிலே ஏற்பட்ட வெள்ளத்தின் விளைவாக எவ்வளவு பெரிய சேதங்கள் ஏற்பட்டன என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும். 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை, 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை, இது போன்ற சேதங்கள் ஏற்பட்டு கொண்டிருக்கின்றன. ஆகவே வைகை நதிக்கு மேலோ, அல்லது கீழோ இன்னொரு பெரிய அணை கட்டப்படவேண்டும். அப்போது தான் வெள்ளக் காலத்தில் வருகின்ற வெள்ளத் தண்ணீரை தடுத்து, தேக்கி வைக்க அது உதவும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மஞ்சளாறு, வருஷ நாடு போன்ற பகுதிகளிலிருந்து வருகின்ற தண்ணீரை தேக்கி வைப்பதற்கான அணை போதுமானதாக இல்லை. இதையும் அரசு ஆராயவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதியதாக கண்மாய்களை உலக வங்கி உதவியுடன் ஆழப்படுத்தவும், நவீனப்படுத்தவும், ஒரு திட்டத்தை அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு முன்னால், தமிழகத்திலுள்ள சகல கண்மாய்களிலும் அத்து மீறி, ஆக்கிரமிப்பு செய்யப்பட்டவைகள் நிறைய இருக்கின்றன. அங்கே இந்த ஆக்கிரமிப்புக்களை எல்லாம் நீக்கவில்லையென்றால், எந்தப் பயனும் இருக்கமுடியாது. எனவே யாராக இருந்தாலும், எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், கண்மாய் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தவர்களை வெளியேற்ற வேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன்.

மதுரையிலிருந்து ராமேஸ்வரம் செல்லக் கூடிய சாலை மிக முக்கியமான சாலை. பாம்பன் பாலம் கட்டியதற்குப் பிறகு, இந்தச் சாலையின் முக்கியத்துவம் அதிகமாகும். எனவே மதுரையிலிருந்து மணலூர் வரையில் செல்லும் சாலை வைகை யாற்றின் கரையையொட்டிப் போகிறது. இது மிகத் தாழ்வான சாலையாக இருக்கின்ற காரணத்தினால், மதுரையில், வைகை யாற்றில் சிறிதளவு வெள்ளம் வந்தால் கூட, சாலை மூடப்பட்டு விடுகிறது இதன் காரணமாக போக்குவரத்து ஸ்தம்பித்து விடுகிறது. இந்தக் கரையையொட்டிப் போகின்ற சாலையை



சில அடிகள் மேலே உயர்த்தினால் தான் அது வெள்ளத்தைத் தடுக்கும் கரையாக இருக்கும், அதேநேரத்தில் வெள்ளக் காலங்களில் எந்தவித பாதிப்பும் இல்லாமல், போக்குவரத்து எளிதாக நடக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் நான் எழுப்பிய சிலவற்றுக்கு, தங்களுடைய உரையின் இறுதியில் பதிலளிப்பார் என்ற நம்பிக்கையுடன் என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்): மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் இன்னும் பேசவேண்டியிருப்பதால், இனிமேல் பேசுகின்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காலத்திற்குள் 5 நிமிடத்திற்குச் சுருக்கமாக பேசி முடிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. தங்கராசு: மாற்றுத் தலைவர் அவர்களே! மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கை எண்கள் 36, 51-பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவின்மீது பேசுவதற்கு என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நீர்ப்பாசனத் துறை இன்றைய தினம் பெரிய நீர்ப்பாசனத் துறை என்றும், அதற்குப் பின்னர் நடுத்தர நீர்ப்பாசனத் துறை என்றும் அதற்குப் பின்னர் சிறிய நீர்ப்பாசனத் துறை என்றும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தத்

(மாலை 5·00)

துறை விவசாயத்திற்கு பயன்படக்கூடிய அளவிற்கு நீர்வளம் நிறைந்து செயலாற்றி வருகிறது. அப்படிப் பார்க்கிறபோது, இன்றையதினம் பெரிய நீர்ப்பாசனச் திட்டத்தின் அடிப்படையில் 18 கோடி ரூபாய்ச் செலவில் பரம்பிக்குளம்-ஆழியார் பாசனத் திட்டத்தை விரிவுபடுத்தி, 56,660—ஹெக்டேர் நிலங்களுக்கு பாசனம் அளிக்கப்பட்டு இருப்பதாகவும், அதற்குப்பின்னால் பெரியார்—வைகை பாசனத் திட்டத்தை நவீனப்படுத்திய வகையில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது என்றும், அதற்கு 46 கோடி ரூபாய் செலவு செய்திருப்பதாகவும், இந்தத்திட்டத்தினால் 10,305 ஹெக்டேர் நிலங்கள் பயன் அடைந்திருப்பதாகவும், 1984 ஆம் ஆண்டுக்குள் முதற்கட்டமாக இந்த வேலைகள் முடிய இருக்கிறது என்றும், அதற்குப் பின்னால், இரண்டாவது கட்டத்திற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருப்பதாகவும் இங்கே தெரிவித்திருக்கிறார்கள், அதைப் பார்க்கிறபோது, உண்மையிலே நான் பாராட்டுகிறேன். நடுத்தர பாசனத் திட்டத்தின் அடிப்படையிலே 200 ஹெக்டேருக்குக் குறைவாக உள்ள ஏரிகளை ரூபாய் 27.60 கோடி மதிப்பீட்டில் பாசனத்தை அதிகப்படுத்தும்

திட்டத்தைதமிழகத்தில் முதன்முதலாக ஐரோப்பிய பொருளாதார சமூகத்தினரின் இ.இ.சி, ஈரோப்பியன் எக்கானாமிக் கம்யூனிஸ்ட் உதவியுடன் செயல்படுத்த இந்த அரசு 5 மாவட்டங்களை செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, ராமநாதபுரம் ஆகிய இந்த 5 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்த 5 மாவட்டங்களில் உள்ள சுமார் 150 ஏரிகளை நவீனப்படுத்தி, அதற்குக்கீழ் பகுதியிலே இருக்கின்ற ஆயக்கட்டுக்கள் பாசன வசதி பெறுவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்திருப்பதை நான் மகிழ்ச்சியோடு பாராட்டுகிறேன்.

அதற்குப் பின்னால், நடுத்தர பாசனத் திட்டத்தின் அடிப்படையில் மத்திய அரசின் குறியீட்டின் அடிப்படையிலே 2000 ஹெக்டேரிலிருந்து 10,000 ஹெக்டேர் வரையில், ஏற்றுக்கொண்டு அதனுடைய பாசனத்தைப் பெருக்குவதற்கு என்று 5 திட்டங்களை இந்த ஆண்டு எடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், அதே அடிப்படையிலே கிராமப் பகுதியிலே இருக்கின்ற ஏரிகள், குளங்கள், நீர்ப்பாசனத் துறையில் எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதை நான் எடுத்துச் சொல்லியாக வேண்டும். அந்த அடிப்படையில் விவசாயிகள் நம்பியிருக்கின்ற இந்த நீர்ப்பாசனத் துறை கிராமப் பகுதியிலே இருக்கின்ற ஏரிகள், குளங்கள், ஆகியவற்றில் ஒரு போகம் விவசாயம் செய்யக்கூடிய அளவிற்குகூட தண்ணீர் நிரப்புவதற்கு வழியில்லை. காரணம் அவை ஏரிகளாக இருந்தாலும் அவை மேடாகி, தூர்ந்துபோய் இன்றைக்கு ஒரு போகத்திற்குக் கூட தண்ணீர் தேங்க முடியாத அளவிற்கு, அவைகள் மேடிட்டு இருக்கின்றன. எனவே அவைகளை ஆழப்படுத்தவேண்டும். அப்படிச் செய்கிறபோது, இயந்திரங்கள், புல்டோசர் போன்ற இயந்திரங்களின் மூலமாக, ஒரு ஆண்டுக்கு இத்தனை ஏரிகள், குளங்களில் தூர் வாரவேண்டும் என்ற அடிப்படையிலாவது. நாம் அவைகளைச் செப்பனிடவேண்டும். அப்படிச் செப்பனிட்டு, விவசாயிகள் பயன்பெறக்கூடிய அளவிலே, அந்த ஏரிகளிலும், குளங்களிலும், தண்ணீரைத் தேக்கினால் நல்லது. வெறும் அணைகளை மட்டும் சரி செய்து விட்டால் போதாது, ஏரிளையும், குளங்களையும்ஆழப்படுத்துவதற்கு, புல்டோசர் போன்ற இயந்திரங்களின் மூலமாக ஆழப்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆட்களை வைத்து, ஆழப்படுத்துவதைவிட்டு, புல்டோசர் மூலமாக அந்த ஏரிகளை ஆழப்படுத்தவேண்டும், அதன் மூலமாக அந்தப் பகுதிகளிலே உள்ள விவசாயிகள் பயன்பெறத்தக்க அளவிலே, நீர்ப்பாசனத் துறை இதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே அடிப்படையில் இன்றைய தினம் 2 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ஹெக்டேர்வரை நடுத்தரப் பாசனமாக ஆக்குவதற்கு நாம் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம், அந்த வகையில் திட்டங்களை இந்த ஆண்டு எடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் என்னுடைய தென்னாற்காடு



மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி தொகுதியில் இருக்கிற பெருமாள் ஏரி பத்தாயிரம் ஏக்கருக்கு பாசனம் தரக்கூடிய அளவுக்கு ஒரு பெரிய ஏரி, அந்த ஏரியின்கீழ் குறைந்தது பத்தாயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. இன்றையதினம் அதன் கொள்ளளவு குறைந்து மிகவும் மேடிட்டு பாதிக்கப்பட்டிருக்கிறது. அதை விரைவாக ஆழப்படுத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புல்டோசர் மூலமாக அந்த பெருமாள் ஏரியை ஆழப்படுத்தச் செய்து, தென்னாற்காடு பகுதியில் இருக்கிற ஆயக்கட்டு நிலங்கள் பாசனம் பெறக்கூடிய அளவுக்கு, ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் இன்றையதினம் வெள்ளத் தடுப்பு நிவாரணத்தின்கீழ் ஒரு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்த பெருமாள் ஏரிக்கு வரத்து வாய்க்கால், வாலாஜா ஏரியிலிருந்து வரவனாறு வாய்க்கால் வழியாக பெருமாள் ஏரிக்கு வருகிறது. ஆனால் அந்த பெருமாள் ஏரிக்கு வருகிற அந்த வாய்க்காலின் இரண்டு புரமும் அணை இல்லாமல் இருக்கிற காரணத்தால் ஒவ்வொரு ஆண்டும் அந்தப் பகுதி பாதிக்கப்படுகிறது. எங்களைப் போன்றவர்கள் 1/2, ஆண்டு நீர்ப்பாசனத் துறை கூட்டத்தின்போதும் பேசியும்கூட, மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் எடுத்துச் சொல்லியும்கூட எந்தவித பயனும் இல்லை.

எனக்கு முன்பிருந்த அரசியல்வாதிகள் பேசுகிறபோது அவர்கள் கூட இதைப்பற்றி சொல்லும்போது சொல்கிறார்கள், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இதை வலியுறுத்தினோம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிகாலத்திலேயும் இதை வலியுறுத்தினோம். இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயும் நீங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று. ஆனால் எந்தக் காலத்தில் அந்த கால்வாய்களுக்கு இருபுறமும் அணைபோடப் போகிறார்ளோ தெரியவில்லை. அதற்குரிய திட்டங்களைத் தீட்டி, கீழிருந்து மேல்வரைக்கும் அரசாங்கத்தில் சிபாரிசு செய்து கொண்டேபோனால்கூட அங்கே தலைமையிலே இருப்பவர்கள் அதை தள்ளி விடுகிறார்கள் என்ற குறைபாட்டை எடுத்துச் சொன்னார்கள்.

ஆகவே, நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வது எல்லாம், இப்படி ஒவ்வொரு காலத்திலும் வெள்ளம் ஏற்படுகிறபோது எல்லாம், வரவனாற்றின் இருபுறமும் கரை இல்லாத காரணத்தாலே என்னுடைய குறிஞ்சிப்பாடி பகுதியில் 20 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. புவனகிரி சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியில் 20 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, இரண்டு பக்கங்களிலும் உள்ள கிராமங்களும் இப்படி, அந்தப் பக்கம் ஒரு இருபது, இந்தப்பக்கம் ஒரு இருபது என்று ஒவ்வொரு வருஷமும் வெள்ளம் வரும்போது பாதிக்கப்படுகின்றன

அந்த கிராம மக்கள் கிராமத்தை விட்டே அந்த நேரத்தில் ஓடிப் போய் விடுகிறார்கள். இந்த நிலைமை தொடர்ந்து இருந்து வருகிறது. ஆகவே, இந்த நேரத்திலே கேட்டுக் கொள்வதெல்லாம் வரவனாற்றின் இருபுறமும் போதுமான இடம் இருக்கிறது. ஆகவே, இதன் இரண்டு புறங்களிலும் பெருமாள் ஏரி வரை கரை அமைத்து தர ஏற்பாடு செய்தால் அந்தப்பகுதிக்கு வெள்ளச் சேதத்திலிருந்து நிவாரணம் அளிக்க முடியும். அந்தப் பகுதி மக்களுக்கு பாதிப்பிலிருந்து நிவர்த்தி அளிக்கவும் வழி ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லி, இதனால் அந்தப் பகுதி விவசாயிகளின் நிலமும் பாதிக்கப்படாமல் தடுப்பதற்கும் வழி ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பெருமாள் ஏரிக்கு கீழ் பக்கத்தில் இருக்கிற கோடி வாய்க்கால்களில், குண்டியமல்லூர், மருவாய்ச்சேரி ஆகிய இரண்டு பகுதிகளிலேயும் இருபுறமும் அணை இல்லாத காரணத்தால் பெருமாள் ஏரியின் கீழ் புறமும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதியிலேயும் கரைகளை அமைத்து தரவேண்டும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, வருகிற ஆண்டிலே அதை செய்து தர வேண்டும் என்று வலியுறுத்தி, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டிற்கான பாசனம் மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த பாசன அறிக்கையில் பெரியார் நீர்ப்பாசனத் திட்டத்திற்கு, 6வது 5 ஆண்டு திட்டத்தின் கடைசி ஆண்டான 84-85 வது ஆண்டில் 44·2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. பெரியார் நீர்ப்பாசனத் திட்டங்கள் என்று சொன்னவுடன் அதை புதிய திட்டங்கள் என்று நாம் எண்ண முடியாது. ஏற்கெனவே இருக்கிற பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்தை விரிவாக்கும் திட்டம். அதைப்போலவே பெரியார் வைகை பாசனத்தை நவீனப்படுத்தி விரிவாக்கும் திட்டம் என்று இவைகள் விஸ்தரிப்புத் திட்டங்களே, தவிர புதிய திட்டங்கள் அல்ல என்பதை எல்லோரும் அறிவோம். காரணம் மாண்புமிகு அமைச்சர் அவர்களே அவருடைய கொள்கை விளக்கக் குறிப்பில் விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள், "தமிழ்நாட்டில் நிலநீர் வளத்தில் 90 விழுக்காட்டிற்கு மேல் உபயோகப்படுத்தப்பட்டு விட்டதால், எஞ்சிய நீர் வளத்தை உபயோகிக்க பெரிய பாசன திட்டங்களுக்கு இனி அதிக வாய்ப்பில்லை: ஆகவே எஞ்சி இருக்கிற நீரை வைத்து புதிய திட்டங்களை இனிமேல் போட முடியாது என்ற காரணத்தால், இருக்கிற திட்டத்தை நவீனப்படுத்துவதைத் தவிர வேறு வழியே இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்



(மாலை 5-10)

ஆகவே, அதன் காரணமாக இன்றைக்கு பெரிய திட்டங்கள் என்று சொன்னாலும், இந்த விஸ்தரிப்புத் திட்டங்கள் பெரிய திட்டங்களாக இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களுக்கு ஒரு நிரந்தரமான தீர்வு வரவேண்டுமென்றால், நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் கேரளாவில் மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளைத் திருப்பி விடுவதைத் தவிர வேறு வழியில்லை. எனக்கு முன்னால் பேசிய அருமை அங்கத்தினர் தங்கராசு அவர்கள் பேசியதுபோல், 1952 ஆம் ஆண்டிலேயே, அதாவது இரண்டாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே அப்பர் பெரியாறு திட்டத்தைச் சேர்க்க வேண்டுமென்பது பரிசீலனையில் இருந்தது. இந்தத் திட்டத்தை இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று அன்றைக்கு இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆனால், இன்று ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் துவங்க இருக்கின்ற இந்த நேரத்திலே கூட இதுபற்றி முடிவு செய்யப்படாமல் இருப்பது உண்மையிலேயே மெத்த வருத்தமாக இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதிலே ஒரு சிறப்பான நடவடிக்கையை எடுத்து, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்த அப்பர் பெரியார் திட்டத்தைக் கொண்டுவர முயற்சி எடுக்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இதைப்பற்றிச் சொல்கிறபோது, மத்திய அரசு தொழில்நுட்பக் குழு பரிந்துரைக்கேற்ப கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரை தமிழ் நாட்டுக்கு திருப்பிவிட, இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்த கேரள முதலமைச்சரை தமிழ்நாட்டு முதலமைச்சர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த இரு தரப்பு பேச்சுவார்த்தை என்பது நமக்கு சரிபடாத ஒன்று. காரணம் காவிரிப் பிரச்னையில் இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். கேரள அரசாக இருந்தாலும் சரி, கர்நாடக அரசாக இருந்தாலும் சரி, அவர்கள் அட்வான்டேஜியஸ் பொசிஷனிலே இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் இந்த பேச்சுவார்த்தைகளிலே அவசரம், காட்ட வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, நம்முடைய அரசுதான் இதிலே தீவிர முயற்சிகள் மேற்கொண்டு, இந்த பேச்சுவார்த்தைகளை முடுக்கிவிட ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப்: மாற்றுத்தலைவர் அவர்களே, இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட வரையில், அவர்களை நாம் வற்புறுத்த முடியாது. பேச்சுவார்த்தைக்கு ஒரு நாளை, குறிப்பிட்டு, அதற்கு வரவேண்டும் என்று சொல்ல முடியுமே தவிர அவர்கள் மீது படையெடுத்து, ஆற்றை திருப்பிவிட முடியாத ஒரு சூழ்நிலையில் இந்த நாடு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்

திரு. க. பாரமலை: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திற்கு நன்றி. நான் சொல்வது படையெடுப்பது அல்ல. நம்முடைய கருத்தை, வலியுறுத்தி, நம்முடைய நிலையை வேகமாக எடுத்துச் சொல்லி முயற்சிக்க வேண்டும் இரண்டு தரப்பும் ஒத்துவராத நிலையில் மத்திய அரசாங்கம் தலையிட வேண்டுமென்று நாம் ஏற்கனவே வற்புறுத்தி வருகிறோம். மத்திய அரசும் பல சந்தர்ப்பங்களில் தங்கள் கடமையைச் செய்யத் தவறியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே முடிவெடுத்து, இதை டிரிபியூனலுக்கு விடவேண்டும் அல்லது உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும் என்ற ஒரு பொதுவான கருத்தை, உருவாக்கி, மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில் பெரியார், வைகை திட்டத்திலே கிடைக்கின்ற உபரி நீரை பகிர்ந்து அளிப்பதைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இதே சட்டமன்றத்திலே மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய சின்னகருப்பத் தேவர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். சீரமைப்புச் செய்வதால் கிடைக்கக்கூடிய சேமிப்பு நீரை உபயோககப்படுத்துகின்றபோது, அது எந்தப் பகுதியிலிருந்து எடுக்கப்படுகிறதோ, அந்தப் பகுதிக்கு முன்னுரிமை வழங்கவேண்டுமென்று சொன்னார்கள். வைகை அணை கட்டியதினால், இராமநாதபுரம் மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு நியாயமாக கிடைக்கவேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை என்ற ஒரு பரவலாக கருத்து, அந்த மாவட்ட மக்கள் மத்தியிலே இருக்கிறது. இந்த நிலையிலும்கூட இன்னும் புதியது புதியதாக அணைக்கட்டு திட்டங்கள் மதுரை மாவட்டத்திலே வந்து கொண்டிருக்கின்றன. வைகையிலிருந்து உபரி நீர் பெற, வராக நதியில் சோத்துப்பாறை அணை கட்டும் புதிய திட்டம் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறர்கள். இந்த அணைகள் எல்லாம் கட்டுவதற்கு முன்னால், அங்கே பெய்கின்ற மழைத் தண்ணீர் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வந்து கொண்டிருந்தது. இதை மனதிலே வைத்துக் கொண்டு, இப்படி ஒரு சீரமைப்புத் திட்டத்தைச் செய்கின்றபோது, உபரி நீரை பகிர்ந்து அளிப்பதில், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்ற முடிவை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி ஏற்கெனவே அமைச்சர், அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டிலே மத்திய அமைச்சர் தலைமையிலே கூடிய மாநாட்டிலே இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொண்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். 1984 ஆம் ஆண்டு ஜனவரியில் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இது எந்த ஆண்டு முடியுமோ என்று தெரியவில்லை, ஆகவே வெகு விரைவில் பேச்சுவார்த்தை



நடத்துவதற்கு சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும். இல்லையென்றால் காலதாமதத்தை தவிர்க்க டிரிபியூனலுக்கு அல்லது உச்சநீதிமன்றத்திற்கு இந்தப் பிரச்சினையை எடுத்துச் சென்று, ஜீவாதாரமான பிரச்சினையை விரைவான முடிவை காண்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அறிக்கையில் Desilting-cum-Reclamation என்ற வகையிலே 1983—ஆம் ஆண்டிலே 3 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1984-85 ஆம் ஆண்டிலே 2 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீர்ப்பாசனத் திட்டத்திற்கு எந்த அளவுக்கு பாசன மேம்பாடு அவசியமோ அதிலே நவீனப்படுத்துகிற முயற்சி அவசியமோ அதைக்காட்டிலும் கண்மாய்கள் டிஸில்ட் பண்ணவேண்டியது அவசியம் என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். எந்தவகையான சீர் திருத்தம் செய்தாலும் கண்மாய்களின் கொள்ளளவை அதிகப்படுத்தினால் ஒழிய, நாம் போடுகிற திட்டங்கள் எல்லாம் பயன் அற்றதாகிவிடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிலையில் டீசல்டிங்கிற்காக 2 லட்ச ரூபாய் ஒதுக்கினால் யானைப் பசிக்கு சோளப் பொறி போடுவதுபோல் என்று சொல்வார்களே அதைப்போன்று மிகமிகக் குறைவானது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். 1952–53 ஆம் ஆண்டிலே சட்டமன்றத்திலே ஒரு பேச்சிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஆண்டிலேயே இந்த வேலையினுடைய முக்கியத்துவம் கருதி அதற்காக 10 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். 1952–53 லேயே 10 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் இவ்வளவு ஆண்டுகளுக்கு பின்னாலேயும் இரண்டு லட்ச ரூபாய்தான் செலவழிக்கிறோம் என்றால், அது மிகமிக போதாது. ஆகவே அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு பெருந்தொகையை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வைகை நதிக்கு வெள்ளக்கரை அமைப்பது சம்பந்தமாக 655 லட்ச ரூபாயிலே ஒரு திட்டம் பரிசீலனையில் இருப்பதாக சொல்கிறார்கள். அதிலே முதற்கட்டமாக பார்த்திபனூர் ஓடையிலிருந்து இராமநாதபுரம் பெரிய கண்மாய் வரை என்று சொல்லியிருக்கிறார்கள். அடுத்த கட்டமாக விரகனூரிலிருந்து பார்த்திபனூர் அணை என்று சொல்லியிருக்கிறார்கள். நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன். இவை இரண்டையும் ஒரே நேரத்திலே சைமல்டேனியஸாக எடுக்கவில்லையென்றால் நம்முடைய நோக்கம் நிச்சயமாக நிறைவேறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே பார்த்திபனூர் அணைவரை அணையை ஏதும் கட்டாமல் இன்றைக்கு கிழக்கில் மட்டும் கட்டுவார்களானால் நிச்சயமாக புது வெள்ளம் காட்டாற்று வெள்ளம் வருகிறபோது Flash Flood என்று சொல்கிறார்களே, இப்போது நம்மை எல்லாம் துன்பத்திற்குள்ளாக்கியதே, அதைப் போன்று வெள்ளம் வருகிறபோது அந்தக் கரைகள் பயன் அற்றதாகிவிடும், ஆகவே இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து விரகனூர் அணையிலிருந்து இராமநாதபுரம் பெரிய கண்மாய்

வரை எந்த எந்த இடங்களிலே மிக மிக அவசியம் இருக்கிறதோ அந்த இடங்களிலே கட்டுவதற்கு முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விரகனூரிலே மதகு அணை இருக்கிறது. வைகையிலிருந்து தண்ணீர் அல்லது வண்டியூர் கண்மாயிலே கிடைக்கிற சர்ப்ளஸ் வாட்டர் இவை வெல்லாம் சேகரித்து வைக்கப்படுகின்றது. அதை விநியோகம் செய்வதில் அரசு நிலையான ஒரு கொள்கையை கடைப்பிடிக்க வில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். இதுகுறித்து கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் திருப்புவனம் சம்பந்தப்பட்ட ஆயக்கட்டுகள் எவ்வளவு, வடபகுதியிலுள்ள ஆயக்கட்டுகள் எவ்வளவு என்றும் அதை எந்த வகையில் பகிர்ந்தளிப்பது என்றும் ஒரு பரிந்துரையை அரசுக்குச் செய்திருக் கிறார்கள். அந்தப் பரிந்துரையை அமல் செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டே இரண்டு கோரிக்கைகள். என்னுடைய தொகுதியிலே ஏனாதி கிராமத்திற்கு பெரியார் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டு மென்று கூறியபோது சென்ற ஆண்டு அப்போது இருந்த நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அருள்கூர்ந்து நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். சர்வே நடந்தது, நாமே சிபாரிசு செய்திருக் கிறோம். உலக பேங்கினுடைய கவனத்திற்குச் சென்று இருக்கிறது என்று சொன்னார்கள். அதை விரைவுபடுத்தி நம்முடைய அமைச்சர் அவர்கள் என்னுடைய பகுதிக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், அதைப்போல் நிலையூர் சேனால் விஸ்தரிப்புக் திட்டத்தின்கீழ் பல கிராமங் களுக்கு மத்தியில் இருக்கிற வடுகபுரம் விடப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தை நான் அமைச்சர் அவர்களிடம் நேரடியாகச் சொல்லியிருக்கிறேன். அந்தக் கிராமத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(மாலை 5-20)

திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாசன மானிய கோரிக்கை எண். 36ன் கீழ் 52 கோடியே 27 லட்சத்து 66 ஆயிரம் ரூபாயும், அதேபோல் பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற மானிய கோரிக்கை எண். 51ன் கீழ் 57 கோடியே 62 லட்சத்து 94 ஆயிரம் ரூபாயும் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். இந்த மானியங்கள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். 1984-85 ஆம் ஆண்டுக்கான பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன திட்டச் செயலாக்கங் களுக்கென ஒதுக்கப்பட்ட தொகை 46.02 கோடி ரூபாய். இதனால் பாசன வசதி பெற்று பயன் அடையும் நிலம் 28,170 ஹெக்டேர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது வரவேற்கத் தக்கது, பாராட்டத்தக்கது. இன்று தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசின் கீழ் செயல்பட்டு வருகின்ற மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பு



ஏற்ற பின்னால் கிராமம் கிராமமாகச் சென்று ஒவ்வொரு பாசனத் திட்டத்தையும் நேரிடையாகப் பார்த்து அதன் மூலம் நடவடிக்கை எடுப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். அதேநேரத்தில் இன்று குளங்கள், ஏரிகள், கண்மாய்கள் போன்றவைகள் மிகவும் ஆழப்படுத்தப்பட்டு இருக்கின்ற நேரத்தில் சமீப வெள்ளப் பெருக்கின் காரணத்தால் அநேக குளங்கள் தூர்ந்து இருக்கின்றன. ஆகையால் இங்கே ஒதுக்கப்பட்டத் தொகையில் அதுவும் குறிப்பாக 150 குளங்கள் பயன் அடையக் கூடிய ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள். அந்த 150 என்பதை நன்கு பரிசீலனைச் செய்து இன்னும் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் ஏராளமான குளங்கள் பயன் அடையக்கூடிய நிலைமைக்கு கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

தமிழக அரசு ரூ. 27.60 கோடி மதிப்பீட்டில் 200 ஹெக்டேருக்குக் குறைவாக உள்ள பாசனப் பரப்பைக் கொண்டுள்ள மானாவாரி ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தை கொண்டு வந்து பல குளங்கள் சேர்க்கப்பட்டு இருக்கிறது. நெல்லை மாவட்டத்தில் குறிப்பாக வள்ளியூர், நாங்குனேரி, செங்கள்குறிச்சி போன்ற பெரிய ஏரிகள் மணலால் தூர்ந்து மிகவும் உயர்ந்த ஒரு மேடான நிலையில் இருக்கிறது. ஆகவே அதை மராமத்து எடுக்கின்றதால் அதனால் அந்தப் பகுதிக்கு பயன் இல்லை. புல்டோசர் மூலமாக அதை ஆழப்படுத்த ஒரு திட்டத்தை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வரவேண்டும், அதை செயற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சமீப காலத்தில் வெள்ளப் பெருக்கு எடுத்து மிகவும் சேதம் ஏற்பட்ட நேரத்தில் அது வெறும் தாமிரபரணி ஆற்று பாசனத்தில் மட்டும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு அல்ல, பச்சைஆறு மிகவும் அதிகமான அளவில் வெள்ளப் பெருக்கு எடுத்து ஒரு பகுதி நம்பியாறு, ஒரு பகுதி வடமலையான்தென்காலிலும் சேர்ந்து விடுகிறது. ஆகவே பச்சை ஆறு திட்டத்தை கொண்டு வரக்கூடிய சூழ்நிலையில் நான் பல நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பல முறை எடுத்துச் சொன்னேன். அதிலும் குறிப்பாக நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் நேரிடையாகப் பார்த்தார்கள். 1975 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். ஆனால் அன்று பச்சை ஆறு திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அங்கே இன்வெஸ்ட்டிகேஷன் எதுவும் இல்லை. எந்த வித ஆய்வும் நடத்தவில்லை. ஆனால் அங்கு இருந்த சில தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் விவசாயிகள் இடத்தில் பல லட்சக்கணக்கான ரூபாயை வசூல் செய்து அதற்கு என்று ஒரு பெரிய விழாவை எடுத்து அடிக்கல் நாட்டினார்கள். 1977-க்கு பிறகு 1984 வரை மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்திலும் பேசப்பட்டு இங்கே சட்டமன்றத்தில் பேசுகின்ற நேரத்திலும் அதற்கு பின்னால் இப்போது வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதை பார்ப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம்

புரட்சித் தலைவர் அவர்கள் அங்கே வந்த நேரத்திலும் அவரோடு இங்கு இருக்கின்ற மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களும் கருத்தை பரிமாறிக்கொள்கின்ற நேரத்தில் அந்த திட்டம் பற்றி எந்தவிதமான ஒரு கேரப்பும் இல்லை என்ற உண்மை வெளிவந்தது. ஆனாலும் கூட பச்சை ஆறு திட்டத்தில் 170 குளங்கள் பயன் அடையக்கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது. ஆனால் 1980 ஆம் ஆண்டு மத்திய அரசு மத்திய திட்டக் கமிஷனை அனுப்பி அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டு இருந்தார்கள். சிங்க வால் குரங்கு இருப்பதால் அந்த இடத்தில் அணை கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். 5, 6 சிங்க வால் குரங்குகள் இருக்கிறது என்பதற்காக ஒரு மாபெரும் திட்டத்தை கைவிட வேண்டும் என்று சொல்வது மிகவும் வேதனை அளிக்கக்கூடியது ஆகும் என்று நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆகையால் பச்சை ஆறு திட்டம் மிக மிக முக்கியமான திட்டம், பிரதானமான திட்டம் என்பதால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு மத்திய அரசு திட்ட கமிஷனுக்கு இங்கு இருக்கின்ற மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டு எப்படியும் நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்' கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். அதுபோல இங்கே 294 லட்ச ரூபாய் செலவில் கொடுமுடி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஆய்வு நடப்பதாகச் சொன்னார்கள். மிக விரைவில் 11 திட்டங்கள் எடுக்கப்பட இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிற காரணத்தால் அதிலும் குறிப்பாக இந்த கொடுமுடி திட்டம் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் தொகுதியைச் சேர்ந்த திட்டம் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆகையால் அந்த பகுதியில் இராதாபுரம் தாலுக்காவும், நாங்குநேரி தாலுக்கா விவசாயிகளும் தண்ணீருக்கு மிகவும் கஷ்டப்படும் மிகவும் வறட்சியான தொகுதியாக இருப்பதால் கொடுமுடி ஆறு திட்டத்தை பயன் அளிக்கக்கூடிய திட்டத்தை நாங்குநேரி, இராதாபுரம் தாலுக்காவில் உள்ள விவசாயிகள் பயன் பெறக்கூடிய நிலையில் உள்ள இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே சட்டமன்றத்தில் பல முறை நாங்கள் கேட்டு இருக்கிறோம். மணிமுத்தாறு பாசனத்தில் ஏராளமான தண்ணீர் கசிவு ஏற்பட்டு விவசாயிகளுக்கு பயன் இல்லாமல் போய்விடுகிறது. 450 கன அடி நீர் எடுக்கின்ற நேரத்தில் இறுதியாக இங்கே 370, கன அடி தண்ணீர் தான் அங்கே போய் சேருகிறது. அந்த அடிப்படையில் சிமெண்டு லைனிங் கேட்கப்பட்டது. அதே நேரத்தில் நாங்குநேரி பகுதியில் உள்ள வடமலையான்காலில் சிமெண்ட் லைனிங் போடப்பட்டது. அதே நிலையில் இன்னும் மணிமுத்தாறு பாசனத்தில் சிமெண்ட் லைனிங் போட்டு அதை செப்பனிட்டுக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



பல ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட மணிமுத்தாறு அணையில் வாய்க்கால்களின் கரைகள் மிகவும்மோசமான நிலையில் இருப்பதால் அந்த இரண்டு கரைகளையும் புதுப்பிக்க வேண்டும். குறிப்பாக, மணிமுத்தாறு பாசனத்தில் உள்ள குளங்களுக்குத் தண்ணீர் செல்லாத காரணத்தினால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இதன் காரணமாகப் பிரச்னைகள் வருகின்றன. ஆகவே, குறிப்பிட்ட ஒவ்வொரு குளத்திற்கும் தனிக் கால் வேண்டுமென்று பலமுறை கேட்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கே வந்த நேரத்தில் நேரடியாகப் பார்வையிட்டார்கள். அவர்களிடத்தில் விவசாயிகளும் சொன்னார்கள். ஆகவே, இருக்கின்ற ஒவ்வொரு குளத்திற்கும் தனிக் கால் திட்டத்தை இந்த ஆண்டிலேயே செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்பெஷல் குளங்கள், ரிசர்வ் குளங்கள் என்றும், ரெகுலர் குளங்கள் என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 11 குளங்கள் இருக்கின்றன. அவைகள் ரிசர்வ் டேங்குகளாக இருக்கின்றன. அவைகளை ரெகுலர் டேங்குகளாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது ரீச்சில் உள்ள குளங்களையும், நான்காவது ரீச்சில் உள்ள மாங்குளம், கழுவூர்குளம் ஆகிய இடங்களில் உள்ள குளங்களையும் ரெகுலர் டேங்குகளில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பச்சையாறு திட்டத்தில் பாசன வசதியில்லாத நிலைமை இருக்கிறது. பாப்பான்குளம் கள்ளூர்குளம் ஆகிய இரண்டு குளங்கள் இந்தப் பாசனத்தில் சேர்க்கப்படவில்லை. மணிமுத்தாறு பாசன வசதியில் கொண்டு செல்லக்கூடிய வழிவகை இருப்பதால் இந்த இரண்டு குளங்களையும் அதில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் தங்கள் சொந்தச் செலவில் வாய்க்கால்களை வெட்டுகிறார்கள். மணிமுத்தாறு பாசனத்தில், மூன்றாவது ரீச்சில் உள்ள இடங்களைப்பற்றி நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில்கூடச் சொல்லி, பரிந்துரை செய்து அனுப்பப் பட்டிருக்கிறது. ஆனால் இதுவரையில் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மணிமுத்தாறு பிரதானக் கால்வாய்ப் பாசனத்தில் மூன்றாவது ரீச்சில் கடம்பன்குளம் என்ற குளம் இருக்கின்றது. அங்கே அரிசன மக்கள் நிறைய வாழ்கிறார்கள். அந்த குளம் பற்றியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தனிமடை அமைக்க வேண்டும்.

பச்சையாறு தண்ணீரைப் பொறுத்தவரையில், மூன்றாவது மடைப் பாசனக் குளத்தில் தண்ணீர் வர வேண்டியிருக்கிறது. மேலே உள்ள பாச்சான்குளம் பகுதியில் தண்ணீர் விடுவதற்கு மறுக்கிறார்கள். ஆகவே, 1975 ஆம் ஆண்டிலேயிருந்து 1979 ஆம் ஆண்டு வரை இதுவரையில் பிரச்னைகள் உருவாகிக்

கொண்டிருக்கின்றன. அதில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, பாச்சான்குளத்திற்கும் மற்றும் சில குளங்களுக்கும் பச்சையாறு பாசனத்திலிருந்து தனிக் கால் மூலம் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் மத்தியிலே எத்தனையோ பிரச்னைகள் இருந்தாலும்கூட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு புரட்சித் தலைவரவர்களின் அரசு, மரியாதைக்குரிய மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரவர்கள் நேரடியாகப் பார்த்து, அவர்களிடத்தில் மக்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லுகின்ற காரணங்களினால் உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

* திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இன்றைக்கு அவையிலே வைக்கப்பட்டிருக்கின்ற நீர்ப்பாசனத் துறை மானியக் கோரிக்கை மீதும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தரப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும் நான் சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆரம்பத்தில், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த, காவிரி நீர்ப் பிரச்னையால் பாதிக்கப்பட்ட விவசாயி என்ற அடிப்படையில் காவிரி நீர்ப் பிரச்னை சம்பந்தமாக இந்த அவையிலே பலபேர் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருந்தாலும் நானும் சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திற்குக் குறிப்பாக ஜூன் மாதம் 12-ஆம் தேதி வாக்கில் மேட்டூர் நீர் திறந்து விடப்படுவது வாடிக்கையாகும். ஆனால், இந்த ஆண்டு இரண்டு மாத காலம் தாமதமாக, ஆகஸ்ட் மாதம் 17-ஆம் தேதி மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்துவிடப்பட்டு, 22-ஆம் தேதி கல்லணை திறக்கப் பட்டது. இடையிலே—ஜூலை 31 ஆம் தேதியிலிருந்து ஐந்து நாட்கள் மேட்டூர் அணையை திறந்துவிட்டு மூடினார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரிவிக்கப்படவில்லை, ஆனால் இரண்டு மாதம் தாமதமாகத் தண்ணீர் திறந்து விடப்பட்டதற்கான காரணத்தைக் கேட்டபொழுது, இந்த அவையில் 1-11-83 ஆம் தேதியன்று, அரசினுடைய சார்பாக, எங்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு வைக்கப்பட்ட அறிக்கையில், கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்கு உரித்தான தண்ணீரை அனுப்பாமல் தங்கள் பகுதியில் உள்ள நீர்த் தேக்கங்களில் தேக்கி வைத்தது என்ற கருத்து குறிப்பிடப்பட்டுள்ளது.

(மாலை 5-30)

ஆனால் இவ்வாறு நீரைத் தேக்கி வைக்கிறார்களே, அது ஏன் என்று நம்முடைய அரசு அந்தத் தட்டிக் கேட்கவில்லை' அறிக்கையிலேகூட நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லை. அவர்களுடைய பதிலிலேயாவது அதுபற்றித் தெரிவிப்பார்கள் என்று நான் இன்றையதினம் எதிர்பார்க்கிறேன்.



காவிரி நீர் சம்பந்தமாக 1924 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி ஒரு வினாடிக்கு 20 ஆயிரம் க்யூசக்ஸ் தண்ணீர் கிருஷ்ணசாகருக்கு வருகின்றது என்று சொன்னால் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு கர்நாடக அரசிற்கு உரிமை இல்லை என்று இருப்பதாக நம்முடைய சட்டப்பேரவைக் குறிப்புகளில் கூட இருக்கின்றது. நான் பலருடைய பேச்சுக்களைப் படித்துப் பார்த்திருக்கிறேன். அதிலேயும் சொல்லி இருக்கிறார்கள் அதன்படி ஒரு வினாடிக்கு 20 ஆயிரம் க்யூசக்ஸ் தண்ணீர். கிருஷ்ணசாகருக்கு வருகின்றது என்றால் அதைத் தடுத்து நிறுத்துகின்ற உரிமை கர்நாடக அரசுக்கு இல்லை. இப்போது ஒரு சொட்டுத் தண்ணீர் வந்தால் கூட அதைத் தடுத்து நிறுத்துகிறார்கள் அதைக் கேட்க முடியவில்லை. அதோடு மட்டுமல்ல. 1924 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் 10-வது விதியில் தமிழக அரசின் அனுமதியின்றி கர்நாடக அரசு எந்த அணையையும் கட்டக்கூடாது என்று இருக்கின்றது. அந்த விதிகளை எல்லாம் மீறி கபினி, ஹேமாவதி, ஹேரங்கி என்ற மூன்று அணைகளைக் கட்டி இருக்கிறார்கள். அதைத் தட்டிக் கேட்க யாரும் முன்வரவில்லை.

இந்த அவையிலே பேசக்கூடிய ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசையே குறை சொல்லிப் பேசிக்கொண்டிருப்பதை நாம் இப்போது பார்க்கிறோம். 1976 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி அதாவது ஆளுநர் ஆட்சி ஓராண்டுக்காலம் நடைபெற்றிருக்கின்றது. அதற்குப் பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 7 ஆண்டுக்காலம் நடந்திருக்கின்றது. இப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக்குப் பிறகு தமிழகத்தில் 8 ஆண்டுக்காலம் உங்களுடைய ஆட்சியும், காங்கிரஸ் ஆட்சியும் நடந்திருக்கின்ற நிலையில் 8 ஆண்டுகளுக்கு முன்னாலே நடைபெற்ற ஆட்சியையே குறை சொல்லிக்கொண்டிருப்பது நல்லதல்ல என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டெல்லாம் 1924 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்கு 50 ஆண்டுகள் உயிர் இருக்கின்றது; அந்தவகையில் 1974 ஆம் ஆண்டு அந்த ஒப்பந்தம் காலாவதியாகும்; ஆகவே 1974 ஆம் ஆண்டு அந்த ஒப்பந்தத்தைக் காலாவதியாக்காமல் ஆக்கி இருந்தால் அந்த ஒப்பந்தத்திற்கு உயிர் இருந்திருக்கும்; ஆனால் இன்று அந்த ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட கட்டுப்பாடுகளையும், இதர ஷரத்துக்களையும் முறைப்படுத்துவதற்கு இந்த அரசுக்கு உரிமை இல்லை என்பதைத்தான் நாங்கள் சொல்கிறோம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்று கருதுகிறாரா? அல்லது ஒப்பந்தம் தொடர்ந்து இருக்கின்றது என்று கருதுகிறாரா என்பதை அவர்களின் பதிலிலே இறுதியிலே அவர்கள் குறிப்பிட வேண்டும்.

1924 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தம் காலாவதியாக வில்லை என்று தான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சர்வ கட்சிகளையும் சேர்ந்த விவசாயிகள் சார்பாக உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கு தொடரப் பட்ட காலத்தில் கூட அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த, இன்றையதினம் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற மரியாதைக்குரிய திரு. கருப்பையா மூப்பனார் அவர்கள் அந்த வழக்கு நடத்தக்கூடிய குழுவிலே முக்கிய பொறுப்பிலே இருந்தார்கள். அன்றையதினம் பாரதப் பிரதமர் அவர்கள் வழக்கை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள், நாங்கள் சுமூகமாகத் தீர்த்து வைக்கிறோம் என்று சொன்ன காரணத்தால் வழக்கு வாபஸ். வாங்கப்பட்டது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த வழக்கு உச்சநீதிமன்றத்திற்குச் செல்வதாக இருந்த அன்றைய காலகட்டத்தில் பல்வேறு உறுப்பினர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். பாரதப் பிரதமர் எழுத்து மூலமாக உறுதி கொடுத்தார்களா? எந்த அடிப்படையில் அதை வாபஸ் வாங்கவேண்டும் என்று அன்றைய ஆட்சியாளர் களிடத்திலே பிரதமர் அவர்கள் சொன்னார்கள்? அன்றைய சட்டமன்ற நடவடிக்கைகளில் அதற்குத் தேவையான பதில் வரவில்லை என்பதுதான் காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் ஒரு தீர்வு ஏற்படவேண்டும் என்று விரும்புகிற அனைவருடைய குற்றச்சாட்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இன்றையதினம் ஆளும்கட்சியைச் சேர்ந்தவர் களைக் கேட்டுக் கொள்வது, எத்தனையோ கோப்புகளை எல்லாம் புரட்டிப் பார்க்கிறீர்கள். காவிரி சம்பந்தமான கோப்பு கிடைக்கவில்லையா என்றுதான் உங்களுக்குப் பதிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்; அன்று சட்டமன்றத்திலும் சொல்லியிருக்கிறீர்கள், இன்று நீங்களும் சொல்கிறீர்கள். எந்த அடிப்படையில், எந்தச் சூழ்நிலையில், எங்கே எழுத்து மூலமாகத் தெரிவித்தார்கள். அல்லது கோரிக்கையாக, வைத்தார்கள் என்று அன்று ஆண்டு கொண்டிருந்த தமிழக அரசைப் பார்த்து கேட்டார்கள். அது ஒரு குற்றச்சாட்டு. அது ஆட்சியிலிருந்தபொழுது — 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மீறி, அணையைக் கட்டிக் கொண்டிருக்கிற பொழுது, இந்தச் சட்டமன்றத்திலும் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் குரல் கொடுத்தார்கள், தடுக்கவேண்டுமென்று. அன்றைக்கு உரிய நடவடிக்கை இல்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு அல்ல; அன்றைக்கு பல்வேறு எதிர்க்கட்சிகள் கொடுத்த குற்றச்சாட்டுதான்; அதற்குச் சரியான விளக்கத்தைக் கொடுப்பார்களானால் நாங்களும் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.





திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அன்றைய பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சரிடத்தில் கேட்டுக் கொண்டதற்கிணங்க சுமுகமாகத் தீர்த்து வைக்கிறேன் என்று சொல்லியதற்கிணங்க வழக்கு வாபஸ் வாங்கப்பட்டது. எங்களுடைய குற்றச்சாட்டுகள் எல்லாம் அதற்குப் பிறகு தீர்க்கப்படவில்லை என்பதுதான். ஆகவே, நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வது, காவிரி நீர்ப் பிரச்னையை உடனடியாக தீர்க்க வழி செய்ய வேண்டும் என்பதுதான். இதைத்தான் தஞ்சை மாவட்ட விவசாயிகளின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், கங்கை, காவிரி இணைப்பும் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாகும். எவ்வளவு ரூபாய் செலவானாலும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு தமிழக அரசு முயற்சிக்க வேண்டும், மத்திய அரசும் முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் மேற்கு நோக்கி ஓடக்கூடிய ஆறுகளை எல்லாம் கிழக்கு நோக்கித் திருப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இன்றையதினம் தோழமைக் கட்சிகளாக இருக்கிற இந்த நேரத்தில் இரண்டு கட்சிகளும் இணைந்து இந்தப் பெரிய திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சில இடங்களில் வேலைகள் தாமதமாக நடைபெறுகின்றன. தரம் இல்லாத வேலைகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் கூடப் பொதுப் பணித் துறையில் சிறப்பாகப் பணியாற்றக்கூடிய திறமைமிகு அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால், *** சில இடங்களிலே வேலைகள் தாமதப்படுகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதற்கு ஆதாரம் இருக்கிறது. நான் கொடுக்கிறேன். சபாநாயகருடைய அனுமதியை வாங்கி இருக்கிறேன். நீங்கள் வேண்டுமென்று கேட்டால் கடைசியிலே சொல்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசுகின்ற உறுப்பினர் அவர்கள் *** திட்டங்கள் தாமதப்படுகின்றன என்ற ஒரு குற்றச்சாட்டை சொல்லியிருக்கின்றார். அதற்கு ஆதாரம் இருக்கின்றதா? எந்த அடிப்படையில் அவர்கள் பேசுகிறார்கள்? ஆதாரம் இருந்தால் ஆதாரத்தை முதலிலே கொடுத்துவிட்டு உறுப்பினர்

---

***மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேசவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுவரையில் அவர் சொன்ன குற்றச்சாட்டை சபைக்குறிப்பிலிருந்து எடுத்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்) : ஆதாரம் இருந்தால் பேசவேண்டும், இல்லாவிட்டால் நீக்கி விடுவேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் ஆதாரத்தைக் கடைசியிலே தருகிறேன். நான் பேரவைத் தலைவரிடத்திலே காண்பித்து அனுமதி வாங்கியிருக்கிறேன். நீங்கள் வேண்டுமென்றால் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிடுங்கள்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கொடுக்கப்பட்ட தீர்ப்புகளின்படி ஏதேனும் குற்றச்சாட்டுகள் சொல்லப்பட வேண்டுமென்றால் அதற்குரிய ஆதாரத்தை மாண்புமிகு அவைத் தலைவரிடத்திலே காட்டி அனுமதியைப் பெற்று அதற்குப் பிறகுதான் குற்றச் சாட்டைச் சொல்லவேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அதே நடைமுறையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடைபிடித்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்..

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு வே. இரா. ஜெயராமன்) : அந்தக் குற்றச்சாட்டுக்கு அனுமதி பெற்றிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார் உறுப்பினர். அந்தக் குற்றச்சாட்டுக்கு அனுமதி பெற்றிருந்தால் அதை என்னிடம் கொடுக்கவேண்டும். அதைப் பார்த்து. அதற்கு அனுமதி பெற்றிருந்தால் அது குறிப்பேட்டில் அப்படியே இருக்கும். அதுவரையில் அந்தக் குற்றச்சாட்டுகள் சபைக்குறிப்பில் இடம் பெறாது; வெளியிடாமல் இருப்பதற்கு நான் உத்தரவிடுகிறேன்.

(மாலை 5-40)

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அடுத்து நம்முடைய முக்கியமான பிரச்னை காவேரி நீர் பிரச்னை. இந்தப் பிரச்னையிலே இவ்வளவு நவீன விஞ்ஞான வசதிகள் இல்லாத 2,000 ஆண்டுகளுக்கு முன்னாலே மாமன்னன் கரிகால் சோழனால் கட்டப்பட்ட கல்லணை. சிங்களத்தின் மீது படையெடுத்து வென்று அங்கேயுள்ளவர்களை அடிமைகளாகக் கொண்டு வந்து கல்லணை கட்டியதாகக்



கூறுவார்கள். அதிலே பிரிவது தான் காவேரி—வீரசோழன் ஆறு. இப்படி வரலாற்றுச் சிறப்புமிக்க காவேரி இன்றைக்கு சோதனைக்குள்ளாகி வறண்ட பாலைவனமாகிக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். மழை பெய்யாவிட்டால் வறண்ட பாலைவனமாகவும், மழை பெய்தால் வெள்ளம் வரக்கூடிய சூழ்நிலை காவேரி பகுதியில் இருப்பதை நாம் காண்கிறோம். இதை மாற்றுவதற்கு தேவையான இடங்களில் அணைகளைக் கட்ட வேண்டும். வெள்ளத்தை தடுத்து நிறுத்துவதற்கு ரெகுலேட்டர்களைக் கட்ட வேண்டும். ஆறுகளை அகலப்படுத்த வேண்டும். ஆறுகள் கடலில் கலக்கிற இடங்களில் வண்டல் மேடிட்டு இருக்கிற இடங்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று நான் அரசை கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 12,720 மைல் நீளமுள்ள 29,953 கால்வாய்கள் இருக்கின்றன. ஆயிரம் மைல் நீளமுள்ள 36 ஆறுகள் மூலமாக 9·34 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறக்கூடிய வாய்ப்புகள் தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்றன. 1,505 'ஏ' பிரிவு வாய்க்கால்கள் உள்ளன. அதிலே 138 வாய்க்கால்கள் மட்டும் பொதுப்பணித்துறை மூலம் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பராமரிக்கப்படுகின்றன. பாக்கி வாய்க்கால்களை பராமரிப்பது என்பது இதுவரையில் கேள்விக் குறியாக இருக்கிறது. 'ஏ' பிரிவு வாய்க்கால்கள் மட்டுமல்லாமல் அதிலே பி,சி,டி, வரையில் பல வாய்க்கால்கள் இருக்கின்றன. அந்த வாய்க்கால்களை எல்லாம் அரசின் மூலமாக குடிமராமத்து மூலமாக மேடிட்டு இருக்கிற அந்த வாய்க்கால்களை உடனடியாக தூர்வாரி பராமரிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஓடிக்கொண்டிருக்கிற ஆறுகளில் 20-க்கும் மேற்பட்ட ஆறுகள் என்னுடைய தொகுதியில தான் ஓடுகின்றன. அந்த ஆறுகளில் நெய்வேலி காட்டாமணக்கு என்று சொல்லப்படுகிற ஒருவித செடி முளைத்து ஆறுகளை எல்லாம் தூர்த்துவிட்டது. சில பகுதிகளில் இங்கே ஒரு ஆறு ஓடிக்கொண்டிருந்தது என்று சொல்கிறார்கள். அந்த ஆறு இருந்ததற்கான அறிகுறியே தெரியவில்லை. அந்த அளவிற்கு காட்டாமணக்கு செடிகள் பெரும்பகுதி வாய்க்கால்களையும், ஆறுகளையும் தூர்த்து விட்டதை நாம் பார்க்கிறோம். அந்தச் செடிகளை எல்லாம் அப்புறப்படுத்தி உடனடியாக ஆறுகளை செப்பனிட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இன்னும் பல பகுதிகளில் வாய்க்கால்கள், பாசன வடிகால் வசதிகள் சரியாக இல்லாமல் இருக்கின்றன. அந்த வடிகால் வசதிகள் இல்லாத இடங்களுக்கு எல்லாம் உடனடியாக வடிகால் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நவீன. திட்டங்களை அமல்படுத்துவதற்கு இன்றையதினம் 418.95 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. போதுமானதல்ல

1967 முதல் துவங்கப்பட்ட வேலைகள், அதாவது காவேரி சீரமைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். (1) ஆறுகளை மேம்படுத்தல்; (2) தேவையான இடங்களில் ரெகுலேட்டர்கள் கட்டுதல்; (3) வாய்க்கால்களைச் சீரமைத்தல்; (4) வாய்க்கால் கரைக்கு காரை பூசுதல்; (5) கரைக் காவலர்கள் நியமனம் செய்து நீர்ப்பாசனம் செய்வது; இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதற்காக அன்றைய தினம் 1967-ல் காவேரி பராமரிப்புத் திட்டம் துவங்கப்பட்டது. ஆனால் தேவையான இடங்களில் ரெகுலேட்டர்கள் கட்டப்படவில்லை. எனது தொகுதி தேதியூர் யாகசாலை எல்லையில் திருமலைராசன் ஆற்றில் ரெகுலேட்டர் கட்ட வேண்டும். ஐந்து ஆண்டுகளாக இந்த முயற்சிகள் நடக்கின்றன. அதற்கான அனுமதி வழங்கப்பட்டு விட்டது. ஆனால் ரெகுலேட்டர் கட்டப்படவில்லை. அதை உடனடியாக கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீரசோழன் ஆற்றில் பழைய கூடலூர் எல்லையில் பல்லவன் வாய்க்கால் தலைப்பில் ரெகுலேட்டர் கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வீரசோழன் ஆற்றில் பல்லவன் வாய்க்கால் தலைப்பில் ரெகுலேட்டர் கட்டிக்கொடுத்தால் அருகிலே இருக்கிற பல கிராமங்களுக்கு பாசன வசதி கிடைக்க வாய்ப்புகள் இருக்கிறது.

மகிமாலையாற்றில் 'ஏ-2' பழைய கூடலூர் வாய்க்கால் தலைப்பில் ஒரு பெட்-டீராம் கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல கிராமங்களுக்கு வடிகால் வசதி இல்லாமல் மழை பெய்தால் மூழ்கி பாழாகிக் கொண்டிருக்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம். ஏரந்தவாடி, செருகளத்தூர், சாலிய மங்கலம், வடவேர், சேங்காலிபுரம் ஆகிய கிராமங்களுக்கு வடிகால் வசதிகள் இல்லாத காரணத்தால் மழை பெய்கிறபோது அழிந்து பாழாகின்றன. அந்தக் கிராமங்களுக்கு உடனடியாக வடிகால் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குத்தாலம் ஒன்றியம் பெரம்பூர், தேவஸ்தான பெரம்பூர் ஆகிய கிராமங்களுக்கு வடிகால் வசதி இல்லை. ஒவ்வொரு மழை பெய்கிற நேரத்திலும் அந்தக் கிராமங்கள் அழிந்து கொண்டு இருக்கின்றன. (குறுக்கீடுகள்) ஆகவே, அந்தக் கிராமங்களுக்கு வடிகால் வசதியும், சேத்தூர் கிராமத்திற்கு வடிகால் வசதியும் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, குடவாசல் ஒன்றியத்தைச் சேர்ந்த கோண வாய்க்கால் பகுதியில் உள்ள அத்தனை கிராமங்களும் மூழ்கி பாதிக்கப்பட்டு இருக்கின்றன. பெரும்பகுதி ஆறுகள், கால்வாய்கள் தூர்ந்து மேடாகி விட்டது. தெய்வேலி காட்டாமணக்கு என்ற ஒரு வித செடி ஆறுக்குள், கால்வாய்கள் அனைத்திலும் பரவி ஆறுகள் முழுவதையும் தூர்த்து விட்டது.





ஆகவே, அதை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைப் போலவே, கோண வாய்க்கால் வெட்டாறு எண்கள் ரெகுலேட்டருக்குக் கீழ் பகுதியில் வடியும் வகையில் வடிகால் வசதியும் மாற்றியமைத்துக் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கரைக்காலூர், திருப்பாம்புரம், கம்பூர், துளார், செருகுடி, பாகசாலை, செம்பொன்சேர்ப்பாக்கம், செறுதலைக்குடி, மாளிகைநத்தம், சருக்கை, வருகக்குடி ஆகிய கிராமங்களுக்கு வடிகாலாக இருந்து வரும் வடகோரையாறு, தென்கோரையாறு இரண்டும் தூர்ந்து மேடாகிவிட்டது. மழை பெய்கிற காலத்தில் அந்தப் பத்து பன்னிரண்டு கிராமங்களும் அழிந்து கொண்டு இருப்பதை நாம் பார்க்கிறோம். அந்தக் கிராமங்களுக்கு வடிகால் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குத்தாலம் ஒன்றியம், அகரகெண்ணிநல்லூர், கம்பூர் அனந்தநல்லூர் ஆகிய இடங்களுக்கு பாசன வசதி புதிய வாய்க்கால் அமைத்துத் தருவதற்காக அதிகாரிகளால் பரிசீலிக்கப் பட்டு, அந்தத் திட்டம் இப்போது பொதுப்பணித்துறை அதிகாரிகளின் அனுமதிக்காக காத்து இருப்பதாக அறிகிறேன். அந்தத் திட்டத்தை உடவடியாகச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசுகிற போது தலைவரிடத்தில் ஏதோ ஆதாரத்தைக் காட்டி, அனுமதியைப் பெற்றதாகச் சொன்னீர்கள், தலைவரிடத்தில் அது பற்றி நான் கேட்டபோது, அத்தகைய ஆதாரத்தை எதுவும் தாங்கள் காட்டாவில்லையென்றும், அவர்கள் அதற்கு அனுமதியைத் தரவில்லை என்றும் சொன்னார்கள். ஆகவே, இப்படிச் சொல்வது முறையல்ல. (குறுக்கீடு) உண்மையிலேயே தலைவரிடத்தில் காட்டியிருந்தால் காண்பித்ததாகச் சொல்லலாம், இந்த அவையில் நாம் ஒருவருக்கொருவர் சொல்வதை நம்புகிறோம்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: நிச்சயமாக நான் தலைவரிடத்தில் காண்பித்து அனுமதி வாங்கியிருக்கிறேன். (குறுக்கீடு) ஒரு முறையல்ல, இரண்டு முறை கேட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது தான் போனில் அது குறித்து தலைவரிடத்தில் கேட்டேன். அந்த மாதிரி செய்யப்படவில்லை என்று அவர்கள் சொன்னார்கள்.

திரு இரெ. இராசமாணிக்கம்: நான் கேட்டு இருக்கிறேன். அதேபோல், குடவாசல் ஒன்றியத்தில் கடலங்குடி வாய்க்கால் தலைப்பை கூந்தலூர் ரெகுலேட்டருக்கு அருகில் வாய்க்கால் தலைப்பை மாற்றி கொடுக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். அதை உடன் செய்து கொடுக்கவேண்டும் என். கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இரெ. இராசமாணிக்கம்] [1984 ஏப்ரல் 24

பிலாவடி வாய்க்கால், முடிகொண்டான் ஆற்றில் உள்ளது. அந்த வாய்க்கால் தலைப்பில் படுகை அணை, பெட்டாம் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேங்காலிபுரம் வாய்க்கால் தலைப்பு சோழசூடாமணியாற்றில் உள்ளது. அந்தத் தலைப்பு மூலம் வேறு கிராமங்களுக்கும் பாசனம் இருப்பதால் பாதிக்கப்படுகிறது. ஆகவே, தனி வாய்க்கால் தலைப்பு ஏற்படுத்தி பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

மேலூரரைச்சேரி கிராமத்திற்கு தற்போது உள்ள பாசன வாய்க்கால் மூலம் போதுமான தண்ணீர் கிடைக்கவில்லை. புது சிமிளி வாய்க்கால் மூலம் பாசனம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே புதுக்குடி ஊராட்சி நரசிங்கன்பேட்டை கிராமத்திற்கும், நெம்மேலி கிராமத்திற்கும் பாசன வாய்க்கால் முடிகொண்டான் ஆற்றில் இருந்தும், குடவாசல் பிரதாபராமபுரம் ஊராட்சி பூவாம்பூர், குச்சிப்பாளையம் கிராமங்களுக்கு பாசன வாய்க்கால் திருமலைராசன் ஆற்றில் இருந்து பிரித்தும் சரியான பாசனம் கிடைக்கவில்லை. புதிய வாய்க்கால் தலைப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

*திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களால் இங்கே முன்மொழியப்பட்டுள்ள நீர்ப்பாசன மானியக்கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், நீர்ப்பாசனத் துறை என்கிறபோது அது நிலத்தடி நீரை மேம்படுத்துவதற்கும், நீர்வளத்தைக் கட்டுப்படுத்தி பல வகையில் அதை நல்லமுறையில் பயன்படுத்துவதற்கும் மிகச்சிறப்பான முறையில் செயலாற்ற வேண்டிய ஒரு துறையாக இருக்கிறது. அந்த வகையில் பல சிறப்பான நடவடிக்கைகள் மூலம் இந்த அரசு நடவடிக்கை எடுத்து இருப்பதால் என்னுடைய பாராட்டுகளை முதலில் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். காரணம் அத்தகைய அளவிற்கு விரைவாகவும், வேகமாகவும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தமிழகம் மிகவும் வறண்ட பிரதேசமாக இருக்கும் நிலைமை ஏற்படும்.

இங்கே பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று சொன்னாலும், நிலத்தடி நீரை மேம்படுத்துவதற்காக அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் குளங்கள் பராமரிப்பை முதலில் கருத்தில் கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். 35 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் இருக்கும் குளங்கள் எதுவும் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. அது பல்வேறு வகைகளில்



1984 ஏப்ரல் 24] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

ரோடேஷன் முறையில் செப்பனிடப்பட்டு வருகிறது என்று சொன்னாலும், அவற்றினுடைய வரத்து வாய்க்கால் செப்பனிடப்படாமல் இருக்கிறது என்கிற உண்மையை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். காரணம், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்து கண்மாய்கள், வரத்துக் கால்வாய்கள் எல்லாம் குடிமராமத்து முறையில் பராமரிக்கப்பட்டு வந்தன. அந்தப் பாசனத்தின் மூலம் பயனடைகின்ற அந்தந்த விவசாயிகளே பராமரிப்புப் பணிகளை முறைப்படிச் செய்ய வேண்டுமென்ற ஒரு அடிப்படையில் அப்போது பராமரிக்கப்பட்டன. ஆனால் இன்றைக்கு அந்த பராமரிப்பு இல்லாத காரணத்தால் கண்மாய்களும் வரத்துக் கால்வாய்களும் தூர்ந்துபோய் இருக்கின்றன. ஏராளமாகச் செலவிட்டாவது, எப்படியும் அந்தக் கண்மாய்களையும் வரத்துக் கால்வாய்களையும் செப்பனிட்டாக வேண்டும். அப்படி இல்லை என்றால், குடிமராமத்து முறையில் செப்பனிடுவது என்றாலும் அதற்கு சம்பந்தப்பட்டவர்களை மராமத்துச் செய்யக்கூடிய பக்குவத்திற்குக் கொண்டுவர வேண்டும். இல்லை என்றால் நம்முடைய மாநிலத்தில் நிலத்தடி நீரே இல்லாமல் போய்விடும். இன்றைக்கு மற்ற மற்ற மாநிலங்களை விட நம்முடைய மாநிலம் முழுக்க முழுக்க நிலத்தடி நீரை நம்பிக்கொண்டிருக்கிறது.

(மாலை 5-50)

இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு நாம் நிலத்தடி நீரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆயிரம் ஹெக்டேருக்கு 111 எலக்ட்ரிக் மோட்டார்களை வைத்து நாம் நிலத்தடி நீரை பம்பு செய்து கொண்டிருக்கிறோம். பஞ்சாபை எடுத்துக் கொண்டால் ஆயிரம் ஹெக்டேருக்கு 36 எலக்ட்ரிக் மோட்டார்களை வைத்து நிலத்தடி நீரை பம்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அரியானாவில் ஆயிரம் ஹெக்டேருக்கு 33 எலக்ட்ரிக் மோட்டார் வைத்திருக்கிறார்கள். மகாராஷ்டிரத்தில் ஆயிரம் ஹெக்டேருக்கு 27 எலக்ட்ரிக் மோட்டார் வைத்திருக்கிறார்கள். கர்நாடகத்தில் கூட ஆயிரம் ஹெக்டேருக்கு 22 எலக்ட்ரிக் மோட்டார்தான் வைத்து நிலத்தடி நீரை பம்பு செய்கிறார்கள். இந்தக் கணக்கைப் பார்க்கிறபோது நாம்தான் அதிக அளவுக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பது தெரியும். இந்த நிலத்தடி நீரை மேம்படுத்த வேண்டுமென்றால் கண்மாய்களில் நீரை தேக்கி வைக்க வேண்டும். பழைய கண்மாய்கள் ஏறத்தாழ 35,000 தமிழ்நாட்டில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவை தூர்ந்துபோய், நல்லமுறையில் பயன்படாமல் இருக்கின்றன. அவற்றை எல்லாம் மீண்டும் பராமரிப்பு செய்து பயனுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டும்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் 35 ஆண்டுக் காலமாக புறக்கணிக்கப்பட்டு வந்த கிராமப்புறங்களை மேம்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திற்கே ஒரு வழிகாட்டியாக, தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டுவந்து, கிராமப்புறங்களுக்குத் தேவையான சாலைகள், குடிநீர் வசதிகளை எல்லாம் செய்து கொடுத்தார்கள். அதற்காக மூன்று ஆண்டுக் காலத்தில் 250 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். இந்த நாட்டில் 35 ஆண்டுக் காலமாக புறக்கணிக்கப்பட்டுவந்த கிராமப்புறங்கள் இந்த சீரிய தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக பேணி பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போன்று ஏதாவது ஒரு சிறப்புத் திட்டத்தைப் போட்டு, இந்த 35 ஆயிரம் கண்மாய்களை எல்லாம் சீர்படுத்தவேண்டும், செப்பனிட வேண்டும். அப்படிச் செய்தால்தான் நிலத்தடி நீர் இருக்கும். இல்லை என்றால் எதிர்காலத்தில் நமக்கு நிலத்தடி நீரே இல்லாமல் போய்விடும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

அடுத்தபடியாகச் சொல்ல வேண்டுமென்றால் கண்மாய்களில் ஏராளமான ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. அந்த ஆக்கிரமிப்புகளை எல்லாம் அப்புறப்படுத்த வேண்டும். கண்மாய்கள் ஆக்கிரமிப்பு என்று சொல்லும்போது மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. ஏனென்றால் 1971 ஆம் ஆண்டுதான் முதன் முதலாக குளங்கள், கண்மாய்கள், ஏரிக் கரைகளில் பட்டா கொடுக்கப்பட்டது. ஏராளமான இடங்களில் கண்மாய் நீர்பிடிப்புப் பகுதிகளில் பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். பட்டா இல்லாமல் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருப்பது ஏராளமாக இருக்கின்றது. ஆக்கிரமிப்பு செய்து, விவசாயம் செய்வதால் குளத்திலே நீர் நிரம்புகிறபோது அந்த நீர்ப்பிடிப்புப் பகுதியில் செய்திருக்கிற பயிர் பாழாகிவிடும் என்பதால் மதகை உடைத்து, தண்ணீரை வெளியேற்றிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கைகளினால் குளத்தின் நீர் பரப்பு (வாட்டர் ஸ்ப்ரெட் ஏரியா) 30 முதல் 40 சதவீதம் வரையில் குறைந்துவிட்டது. அந்த அளவுக்கு குளம் கோர்வை பட்டா கொடுத்திருக்கிறார்கள், ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். இப்படி ஆக்கிரமிப்பு செய்கிறவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் வழியில்லாமல் இருக்கிறது. அதனால் ஆக்கிரமிப்பு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இது ஒரு கொடுமையான செயல். இந்த ஆக்கிரமிப்பு ஒரு தொடர் குற்றமாக நடந்து கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க வேண்டுமென்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கடுமையான நடவடிக்கை இல்லை என்பதால் ஆக்கிரமிப்பு தொடர்ந்து நடக்கிறது. ஆக்கிரமிப்பை தடுக்க ஏதாவது ஒரு வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்றைக்கு காலையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல இந்த கண்மாய்களில் ஒரு பகுதி ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலும், ஒரு பகுதி வேளாண்மைத் துறையின் பராமரிப்பிலும், ஒரு பகுதி நீர்ப்பாசனத் துறையின் பராமரிப்பிலும் இருக்கின்றன. இந்த நிலையைப் போக்கி,





எல்லாவற்றையும் நீர்ப்பாசனத் துறையின் செயல்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும். அப்படியிருந்தால்தான் சீரான கண்காணிப்பு ஏற்பட்டு, ஓரளவுக்கு பராமரிக்கப்பட முடியும். அப்படியானால்தான் 35,000 கண்மாய்களையும் நம்பி, நாம் நிலத்தடி நீரை தாராளமாகப் பயன்படுத்திக்கொள்ள வழிவகை ஏற்படும்.

வேறு வகையில் நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும், இந்த 35,000 கண்மாய்களையும் ஒழுங்காகப் பராமரிக்க ஒரு வாரியத்தை ஏற்படுத்தலாம். இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியாக தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியதைப்போல தனியாக ஒரு வாரியம் அமைத்து, இந்த கண்மாய்களை எல்லாம் பராமரிக்கும் ஒரு சிறப்புத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாரியம் ஏற்படுத்தி, அதன் மூலமாக கடுமையான நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்பு செய்திருக்கிறவர்களை எல்லாம் அப்புறப்படுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல் வரத்துக் கால்வாய்களையும் கண்மாய்களையும் நல்லமுறையில் பராமரிக்க ஆங்காங்கே "நீரை உபயோகிப்போர் குழு" அமைத்து, அரசு நல்ல முறையில் அந்தக் குழுக்களை செயல்படச் செய்யவேண்டும். நிலத்தடி நீரைப் பெருக்க, புதிதாக 'பாண்ட்ஸ் ஸ்கீம்' போட வேண்டுமென்று சொல்கிறோம். இந்த பாண்ட்ஸ் ஸ்கீம் போடுவதோடு, பழைய குளங்களையும் கண்மாய்களையும் ஏரிகளையும் தூர் எடுத்து, நல்ல முறையில் பராமரிக்க ஏதாவது ஒரு சிறப்புத் திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு நிலத்தடி நீர் போதுமான அளவுக்கு இல்லை என்பதால் பல்வேறு பகுதிகளில் "டார்க் ஏரியா" என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த நிலத்தடி நீரைப் பொறுத்த வரையில், மாநிலத்தில் பல்வேறு பகுதிகளை டார்க் ஏரியா என்று அறிவித்திருக்கிறார்கள். அதிலே என்னுடைய தொகுதியான வேடசந்தூர் பகுதியிலுள்ள 3 ஊராட்சி ஒன்றியங்களை டார்க் ஏரியா என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே துறை எந்த நோக்கத்திற்காக "கறுப்புப் பகுதி" என்று சொன்னதோ, அந்த நோக்கம் நிறைவேறாத சூழ்நிலை இருக்கிறது. டார்க் ஏரியா என்று துறை விதித்திருக்கிற ஒரே காரணத்தினால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும், நிலவள வங்கிகளிலும், புதிய கிணறு வெட்ட, ஆழப்படுத்த கடன் கேட்டால், இது டார்க் ஏரியா, அதனால் கிணறுகள் வெட்டுவதற்கு பணம் கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். டார்க் ஏரியா என்று அறிவிக்கப்பட்டபோது, புதிய கிணறுகள் தோண்டுவதற்கும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கடன் கொடுக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். அரசாங்க ஆணையின் நோக்கம், அதனுடைய கொள்கை என்னவென்றால், கூடுதலாக நிலத்தடி நீரை எடுக்கக் கூடாது என்பதுதான். ஆனால் பணம் இருக்கிறவர்கள் புதிய கிணறுகளை வெட்டிக் கொள்கிறார்கள். ஆனால் கடன் வாங்கி நீர் வளத்தை பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள் மாத்திரம், டார்க் ஏரியா என்று இருப்பதன்

காரணமாக இந்த நிலத்தடி நீரை எடுப்பதற்கு கடன் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆனால், துறை எதற்காக டார்க் ஏரியா என்று சொல்லியது என்றால், நிலத்தடி நீரை மேலும் எடுக்கக் கூடாது என்பதற்குத்தான். வசதியுள்ளவர்கள் புதுக் கிணறுகளை வெட்டிக் கொள்ளலாம் என்ற நிலைமை இருக்கிறது. ஆனால் மற்றவர்கள் கடன் கேட்கும் நேரத்தில், டார்க் ஏரியா என்று சொல்லிக் கடன் மறுக்கப்படுகிறது. 1977 புயலின்பொழுது, பாதிக்கப்பட்ட குடகனாறு அணை இதுவரையில் கட்டப்படாமல் இருக்கிறது. வேடசந்தூர்ப் பகுதியைப் பற்றி நான் சொல்லித் தெரியவேண்டிய அவசிய மில்லை. மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். மதுரை மாவட்டத்தின் வடபகுதி வறட்சியான பகுதி என்றாலும் அந்த வறட்சி மையம் கொண்டிருப்பது வேடசந்தூரில் தான். அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் குடகனாறு அணையை நம்பித்தான் இருப்பவர்கள். இவ்வளவு நல்ல மழை சமீபத்தில் மாநிலம் முழுதும் பெய்திருந்தும் கூட, வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் மேற்குப் பகுதி இன்றும் வறண்ட நிலையில் பாலைவனமாகத் தான் இருக்கிறது. ரூ. 9.20 கோடி செலவில் குடகனாறு அணையைக் கட்டுவதற்கு அரசிற்கு குறிப்பு அனுப்பப் பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை விரைவாக, விரிவாக உடனே தொடங்குவதற்கு அனுமதி அளிப்பதற்கான முயற்சிகளை அமைச்சரவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி மேற்கொள்ளப் படுகிறபோது, இந்த அரசு எந்தவிதமான அரசியல் நிர்பந்தங் களுக்கும் ஆட்படாமல் இருக்கவேண்டும். மிகவும் வறட்சியான அந்தப் பகுதியில் கட்டப்பட்ட குடகனாறு அணையிலிருந்து திருச்சி மாவட்டம் முழுவதற்கும் தண்ணீர் கொண்டுவருகின்ற சூழ்நிலை முன்பு ஏற்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வேடசந்தூர்ப் பகுதியில் கட்டப்பட்ட குடகனாறு அணையிலிருந்து திருச்சிக்குக் கொண்டுவரப்படுகின்ற வாய்க்கால்கள், ஆளப்பாடி. வல்லபுரம், வெள்ளோடு, கோட்டாநத்தம் டி. காடலூர் ஆகிய கிராமங்கள் வழியாக திருச்சிக்கு தண்ணீர் செல்கிறது. இப்படி வறண்ட கிராமங்கள் வழியாக திருச்சிக்கு அனுப்பப்படும் சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில், குறைந்தபட்சம் இந்த கிராமங்களில் இருக்கின்ற ஏறத்தாழ 100 கண்மாய்களிலாவது தண்ணீர் நிரப்பப்பட வேண்டும், குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியமும் வேடசந்தூர், ஊராட்சி ஒன்றியமும் மிகவும் வறட்சிப் பகுதிகளாக இருக்கின்றன. இந்த இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கும், குடகனாறு அணை ஒரு வரப்பிரசாதமாக இருந்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சரவர்களும், துறை அதிகாரிகளும் வேடசந்தூர் தாலுகாவின் வறட்சி நிலைமையை கருத்தில் கொண்டு அங்கே இந்த அணைத் தண்ணீரை வேடசந்தூர் தாலுகாவிலேயே பயன்படுத்தவேண்டும். எனவே குடகனாறு அணையிலிருந்து வருகின்ற தண்ணீர் முழுக்க முழுக்க அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் திட்டமிட வேண்டும். குஜிலியம்பாறை வழியாக திருச்சிக்குச் செல்லும்போது



அதை முழுக்க முழுக்க மதுரை மாவட்டத்திற்கு மட்டும் பயன்பட வழிவகை செய்யவேண்டும். குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியத்தில், இருக்கின்ற கண்மாய்களான — நான் ஏற்கனவே சொன்னது போல், ஆழப்பாடி, வல்லபுரம், வெள்ளோடு, கோட்டாநத்தம், டி. கூடலூர் ஆகிய கண்மாய் களை நிரப்பவேண்டும்.

வடமதுரைக்குப் பக்கத்திலுள்ள, அய்யலூருக்கு அருகிலுள்ள கங்கையூர் அணையைக் கட்டுவதற்கு ஆய்வு நடத்திக்கொண்டிருக் கிறார்கள். அதை விரைவில் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

*திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நீர்பாசனக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

கங்கை—காவிரி திட்டத்தைப் பற்றி நீண்ட காலமாகப் பேசப் பட்டது. ஆனால் காவிரித் திட்டம் என்று சொல்லக் கூடாது. இது வைகைத் திட்டமாக இருக்கவேண்டும். குமரி முனை வரை நீட்டிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால் இன்று வரையில் அந்தத் திட்டம் கணக்கில் கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை. வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி என்று சொல்வார்கள். அந்தக் காவிரியில் 5 டி.எம்.சி தண்ணீர் விடப்பட்டதைப்பற்றி பெருமையாக குறிப்பிலே சொல்லப் பட்டிருக்கிறது. அந்த நிலைமைக்கு இன்றைக்கு தமிழகம் வந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, வருத்தமாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றி மேலும் [illegible] அதிகப்படுத்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இரண்டு பருவ நிலைமை களை நம்பி நீர்ப்பாசனத்தை அபிவிருத்தி செய்யவேண்டிய நிலையில் இருக்கிறோம். தென்மேற்கு பருவ மழை, வடகிழக்கு பருவ மழை ஆகிய இரண்டு பருவ மழைகளும் இந்த ஆண்டு [illegible] சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையில் குறைந்தளவு [illegible]மாக, டிசம்பர் மாதம் வரையில் எங்கே வறட்சி வந்து [illegible] என்ற நிலை இருந்தது. ஆனால் ஜனவரி மாதத்தில் பெய்த மழை ஓரளவிற்கு நம்பிக்கை ஏற்படுத்தியது. பிறகு மதுரை மாவட்டத்தில் அதிகமான அளவிற்கு வெள்ளம் வந்தது. அதற்குப் பிறகு மார்ச் மாதத்தில் 6, 7, 8 தேதிகளில் வைகையில் பிரம்மாண்டமான அளவில், தண்ணீர் வரக்கூடிய அளவிற்கு மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து மழை பெய்தது.

(இரவு 6-00)

ராமநாதபுரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் கடுமையான மழை பெய்ததன் காரணமாக வத்திராயிருப்பு போன்ற இடங்களில் மிகப் பெரிய பாதகங்கள் ஏற்பட்டது என்பது நமக்குத் தெரியாத விஷயம் அல்ல. இப்படிப்பட்ட நிலைமையில் எங்கு பார்த்தாலும் ஒரு நேரத்திலே வறட்சி நிவாரணப் பணிகள் ஆரம்பித்து, அந்தப்

பணிகளைச் செய்கின்ற நேரத்தில், [illegible] வேலை [illegible] செய்யக்கூடிய அளவிற்கு நிலைமைகள் எல்லாம் [illegible] ஏற்பட்டது. அந்த வேலைகளில் நாம் எல்லாம் [illegible] என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியார் நீர்த்தேக்கம் இன்றைக்கு 7[illegible] [illegible] திட்டமிட்டு வேலைகள் நடந்திருந்தாலும் கூட, இன்றைக்கு முதல் கட்டமாக வேலைகள் முடிக்கப்பட்டு இருக்கின்றன. இரண்டாம் கட்ட வேலைகள் சீக்கிரமாக ஆரம்பிக்கப்படும் என்று [illegible] படுகிறது. எனவே கூடிய சீக்கிரத்திலே இந்தப் பணிகளைச் செய்து முடிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாக பெரியாறிலேயிருந்து அதிக நீரைப் பெற்று கிழக்கு ராமநாதபுரம் பழைய ஆயக்கட்டுக்களில் உள்ள விவசாயிகளுக்கு உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மார்ச் மாதம் 5 ஆம் தேதி வரையிலும் குடிநீருக்காக, வைகையிலேயிருந்து தண்ணீர் விடவேண்டும் என்று நான் கூட [illegible] கொண்டிருந்தேன். ஆனால், அதற்குப் பின்னால், வைகையிலே உடைப்பு ஏற்பட்டு போகக்கூடிய அளவிற்கு தண்ணீர் வந்தது. அதுமட்டுமல்ல, 1977, 1979 ஆம் ஆண்டுகளில் வைகையிலே ஏற்பட்ட உடைப்புக்கள் அடைக்கப்படவில்லை. அங்கே 100-க்கும் மேற்பட்ட கால்வாய்கள் பிரிகிறது. ஆகவே இதன் மூலம் 426 ஏரிகள் இன்றைக்குப் பயன்படுகின்றன. பார்த்திபனூர் மதகு அணை வலது கால்வாயிலே, 45 கிலோ மீட்டர், இடது கால்வாயில் 43 கிலோ மீட்டர், அதேபோல் [illegible] இடது கால்வாயிலே 30 கிலோ மீட்டர், வலது பக்கத்திலே 47 கிலோ மீட்டர் நீளத்திற்கு மொத்தம் 6[illegible] லட்சம் மதிப்பீட்டிலே இன்றைக்கு வேலைகள் நடந்து கொண்டிருந்தாலும் கூட, தொடர்ச்சியாக அந்த வேலைகள் நடக்காமல் இருக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. எனவே அந்த வேலைகளை வேகமாகச் செய்யவேண்டும். அந்த வேலைகளை வேகமாகச் செய்யவேண்டும் என்று சொல்கிற நேரத்திலே, 685 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு திட்டத்தை கையிலே வைத்துக்கொண்டு, தொடர்ச்சியாக பாருங்கள், இந்த திட்டத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லி, 6 ஆண்டுக் காலமாக அலுவலகங்களிலே [illegible] கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. எனவே இந்த திட்டத்தை கணக்கிலே எடுத்துக்கொண்டு, வைகை நதி நீர் பாசனத்தை நம்பியிருக்கக்கூடிய விவசாயிகளை அவர்களுடைய பாசன வசதிகளை பூர்த்தி செய்யக்கூடிய அளவிலே இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போது கூட பரமக்குடி, மானாமதுரை போன்ற பகுதிகளிலே உள்ள விவசாயிகளிடத்திலே மிகப் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. 6 ஆண்டுக் காலமாக இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. ஏதாவது ஒரு ஆர்ப்பாட்டம் [illegible] நிலைமை ஏற்பட்டிருக்கிறது. [illegible] மாற்றி, ஆர்ப்பாட்டம் [illegible]





வேண்டாத அளவிற்கு நீங்கள் அவைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு, இந்த ஆண்டு 685 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது—உடனடியாக அந்த வேலைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியார்—வைகை திட்டத்தை நவீனப்படுத்தும் திட்டத்திலே சிமெண்ட் பூசப்படுகிறது. அப்படி சிமெண்ட் பூசப்படுகிற நேரத்திலே பல கோளாறுகள் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அதை எல்லாம் மாற்றியமைத்து, நல்லமுறையிலே வேலைகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கிருதமால், குண்டாறு நதிகளுக்கு வைகை நீரை திருப்பி விடுதல் வேலைக்கு 148 லட்சத்திலே வேலை நடைபெறுகிறது. வைகையின் கீழ்ப் பகுதி பாசனத்திற்கு ஆபத்து வந்து விடாத நிலையில் இந்த வேலைகளை உடனடியாகச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மானாமதுரைப் பகுதியில் உள்ள நட்டூர் கண்மாயின் உள்பகுதியிலே உள்ள கால்வாய் கிட்டத்தட்ட 30 வருடங்களாக வெட்டப்படாத நிலைமையிலே இருக்கின்றது. அது சுமார் 3 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி அளிக்கக்கூடிய கண்மாய். இன்று வரையில் அதிலே சரியான அளவிலே தண்ணீர் பெருகவில்லை. இந்த ஆண்டு [illegible] தண்ணீர் வந்ததினால், இப்போதுதான், ஏப்ரல் [illegible] ஆம் தேதிக்கு மேலேதான் இந்தக் கண்மாயிலே தண்ணீர் பெருகியிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். நெட்டூர் கண்மாய்க்கு கீழே, புதுக்கோட்டை கண்மாய் என்று ஒரு கண்மாய் இருக்கிறது. அந்த கண்மாய்க்கு இந்தக் கால்வாயிலேயிருந்து தண்ணீர் ஓடாக இருப்பதால் [illegible] அதற்கு வேறு ஒரு திட்டம். இப்போது [illegible] லட்சம் ரூபாயிலே போட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. [illegible] அந்த எஸ்டிமேட்டை திருத்தி, அங்கே இருக்கக்கூடிய [illegible] உயர்த்தி அந்தக் கண்மாய்க்கு தண்ணீர் போவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுதான் சிக்கனமானதுங்கூட. அதைவிட்டு விட்டு நெட்டூர் கண்மாய் முகப்பிற்கு மேலும் புதிதாக ஒரு [illegible] ஏற்படுத்தி, இந்த புதுக்கோட்டை கண்மாய்க்குத் தண்ணீர் கொண்டு போனால் நிச்சயமாக நெட்டூர் விவசாயிகளுக்கும் இந்தப் புதுக்கோட்டை விவசாயிகளுக்கும் தேவையில்லாத ஒரு மனக்கசப்பை உண்டாக்குவதற்கு அதிகாரிகளே [illegible] அளிக்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கச்சாத்தூர் கிராமத்திலே உள்ள கண்மாயிலே இந்த நிலைமைதான் இருக்கிறது. அந்த கண்மாய்க்குள்ளே தண்ணீர் போகிறது. உடனே வெளியிலே வந்துவிடுகிறது. அப்படிப்பட்ட நிலையிலே அந்தக் கால்வாய் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த டிராப்பையும், தண்ணீர் வரக்கூடிய அளவிற்கு—உயர்த்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டு

பல கண்மாய்களுக்கு கால்வாய்கள் இல்லை. அவைகளுக்கு கால்வாய்கள் அமைக்கப்படவேண்டும். மேலாயூர் கண்மாய் கால்வாயின் முகப்பை அகலப்படுத்தவேண்டும். ஆர்.எஸ். மங்கலம் பகுதியிலே 560 அடி நீளம் உள்ள தென்பகுதியிலே வாய்க்கால் திட்டங்கள் எதுவும் இல்லாத காரணத்தால், பல வருஷமாகக் கேட்டுக் கொண்ட பிறகு, இப்போது எஸ்டிமேட் போடப்பட்டு நீண்ட நாட்களாக அது அரசு அலுவலர்களிலே தாமதமாக இருந்து கொண்டு இருக்கிறது. எனவே அதை உடனடியாகச் சாங்ஷன் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆர். எஸ். மங்கலம் யூனியனில் மட்டும் 200 ஜமீன் கண்மாய்கள் ரெகுலரைஸ் செய்யப்படாமல் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கண்மாய்களை எல்லாம் ரெகுலரைஸ் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்றுப் பகுதியிலே வடிகால் வசதிகளைச் செய்யாததின் காரணமாக, ஆற்றுப் பகுதியிலே தண்ணீர் வருவதில்லை. ஒரு கண்மாயினுடைய வடிகால் இன்னொரு கண்மாய்க்கு வரத்துக் கால்வாயாக இன்றைக்கு தமிழகம் முழுவதும் இருந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தில் இருக்கக்கூடிய 39 ஆயிரம் கண்மாய்களை எடுத்துக்கொண்டு பார்ப்போமேயானால் ஒரு கண்மாயினுடைய வாய்க்கால் இன்னொரு கண்மாய்க்கு வரத்துக் கால்வாயாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையில் இந்தக் கண்மாய்கள் அத்தனையும் இன்றைக்கு செப்பனிட்டு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இராமநாதபுரம் கண்மாயிலே வரும் தண்ணீரை ஒழுங்குப்படுத்தாததன் காரணமாக பல சேதாரங்கள் ஏற்படுத்தப்படுவதோடு கடலிலே போய் வீணாக விழுகிறது. அதை ஒழுங்குப் படுத்தவேண்டும். ஒழுங்குப்படுத்தாததினால் இராமநாதபுரத்திலிருந்து தேவி பட்டணம் போகக்கூடிய ரோடு அடிக்கடி பாதிக்கப்படுகிறது. அங்கே போக்குவரத்து ஸ்தம்பித்துப் போகிறது. அதுமட்டுமல்ல, ஆர். எஸ். மங்கலம் கண்மாய்களின் பாசனப் பகுதி, வைகையின் பழைய ஆயக்கட்டுப் பகுதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. மீண்டும் பழைய ஆயக்கட்டுப் பகுதியாக ஆர். எஸ். மங்கலம் கண்மாயை கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[illegible] மதுரைக்குப் பக்கத்திலே உள்ள சுப்பன் கால்வாய் ஆரம்பிக்கப்பட்டு நீண்ட நாட்களாக அப்படியே அரைகுறையாக இருந்துக் கொண்டிருக்கிறது. அந்த சுப்பன் கால்வாயை பூர்த்தி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். [illegible] கால்வாயில் 7 [illegible] தண்ணீர் [illegible] உள்ளது. அந்தக் கால்வாயை செப்பனிட வேண்டும். அது மட்டுமல்ல, [illegible] [illegible] [illegible]



[illegible]கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஆர்ட்டீஷியன் ஊற்றுநீர் கண்டு [illegible] கண்மாய்களுக்கு தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதிலே இப்போது [illegible] பெரிய கஷ்டங்கள் இருக்கின்றன. அதை நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 77-க்கும் பின்னாலே பம்பு செட்டுகளுக்கு இணைப்புக் கொடுக்காத நிலைமை இருக்கிறது. அந்த பம்பு செட்டுகளுக்கு இணைப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிறுபாசனக் கால்வாய்கள் [illegible] (மணியடிக்கப்பெற்றது.)

திரு. ஆர். தவசி: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசன திட்ட மானியத்தின் மீது எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம் எங்கும் நீர்ப்பாசனத்துறை மிகவும் சிறப்பாகவும் மிக விரைவாகவும் செயல்பட்டு வருவதை தமிழக மக்கள் பாராட்டாமல் இருக்கமுடியாது. நானும் அவ்வாறே தமிழக அரசுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டத்திற்கு தனித்தனியாக அணைக்கட்டுகளை கட்ட வேண்டும் என்ற என்னுடைய ஆழமான கருத்தை இந்த அவையிலே வைக்கிறேன்.

காரணம் என்னவென்றால், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு வருஷம் வறட்சியும் ஒரு வருஷம் வெள்ளப் பெருக்கும் மாறி மாறி வந்துக் கொண்டே இருப்பது வழக்கமாக இருக்கிறது. அந்த மாதிரி வறட்சி வருகிறபோது, அந்த மாவட்டத்து மக்கள் நீர் இல்லாமல் பாதிக்கப்படுகிறார்கள். அதே நேரத்தில் வெள்ளம் வருகிறபோது, அவர்கள் பாதிக்கப்படாமல் இருக்கிற அளவுக்கு பாதுகாப்பு வேண்டும் என்றால், [illegible] ஒரு அணை கட்டியாக வேண்டும்.

இந்த மாதிரி வெள்ளப்பெருக்கு 1979-ல் வந்தபோது [illegible] கடலுக்கு [illegible] மாத காலத்தில் சென்ற தண்ணீரை [illegible] எடுத்துப் பார்ப்போமேயானால் 5 வருஷத்திற்கு அந்த மாவட்டத்திற்கு அந்த தண்ணீர் பயன்படும். அந்த அளவுக்கு உரிய தண்ணீர் கடலுக்கு போய் இருக்கிறது.

அடுத்து 81-ல் வறட்சி, 82-ல் நிதானமாக மழை. 83-ல் வறட்சி. 84 இந்த ஆண்டு வெள்ளப்பெருக்கு. இந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் கடலுக்கு போயிருக்கும் தண்ணீரை கணக்கு பார்ப்போமேயானால் அடுத்த [illegible] முழுவதும் அந்தத் தண்ணீர் பயன்படும். அப்படிப்பட்ட தண்ணீரை கடலுக்கு விட்டு விட்டு, நாம் அடுத்த மாதத்திலிருந்து தண்ணீர் கிடைக்கவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருக்கிறோம்.

அந்த நிலை மாற வேண்டும் என்றால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆண்டாண்டு தனித் தனி அணைகளை கட்டவேண்டும். மத்திய அரசினுடைய உதவிகளைப் பெற்று, அங்கேயிருந்து நிதி உதவியை அடைந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரைக்குப் பக்கத்திலோ அல்லது வைகை அணைக்கு மேல்புறமோ அல்லது வருசநாட்டு பக்கத்திலோ ஒரு அணையை கட்ட வேண்டும். அப்படி கட்டினால் வீணாக ஓடி சேதத்தை விளைவித்துக் கொண்டு, கடலுக்குப் போய் விழுகிற தண்ணீரை, தேக்கி வைத்து வறட்சி வருகிற மாவட்டங்களில் அதைப்பயன்படுத்த, அது அந்த மாவட்டத்திற்கு உதவியாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்து.

இந்த மாதிரி குறிப்பாக மானாமதுரை பக்கத்திலோ அல்லது வருசநாட்டுக்குப் பக்கத்திலோ ஒரு அணையைக் கட்ட வேண்டும் இன்று இருக்கிற வைகை டாம் குறிப்பிட்ட அளவில்தான் தண்ணீர் கொள்கிறது. பெருவாரியான மழை வரும்போது ஏராளமான தண்ணீர் கடலுக்குத்தான் விட்டுக் கொண்டிருக்கிறது. அப்படி போதிய அணைக்கட்டினுடைய விஸ்தரிப்பு இல்லாத காரணத்தினால் அந்த மாவட்டம் பாதிக்கப்படுகிறது.

(இரவு 6-10)

எனவே அந்த அணைக்கட்டை இந்த மாவட்டத்திற்கு கட்டித் தரவேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான கருத்து ஆகும்.

மானாமதுரை அருகே விரகனூர் பக்கத்தில் ஒரு மதகும் பார்த்திபனூருக்கு பக்கத்தில் ஒரு மதகும் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் இராமநாதபுரம் கண்மாய்வரை சரியான கண்மாய் கட்டப்படாததால் 1979-ல் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தினால் சேதாரம் ஏற்பட்டு இன்று அந்தப் பகுதியிலே வருகின்ற தண்ணீர் நேராக வைகை மூலமாக கடலுக்குச் சென்று விடுகிறது. அங்கே ஒரு கால்வாய் ஏற்படுத்தினால் அந்தக் கால்வாய் மூலமாக தண்ணீர் கண்மாய்களுக்குச் செல்லும்.

விரகனூருக்குப் பக்கத்திலே கிருதமால் நதிக்கு ஒரு கால்வாயை இந்த அரசு வந்த பிறகு, மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்த பிறகு வெட்டுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

பார்த்திபனூருக்குப் பக்கத்தில் பரளியாறு என்ற ஒரு கால்வாய் வெட்டப்படுகிறது. முன்னாலே இருந்த அரசு இந்த மாதிரியான ஒரு கீர்மையான திட்டத்தைப் போட்டிருக்குமானால், சிரணிக் கால்வாயில் ஏற்பட்ட சேதம் போல் சேதம் ஏற்பட்டிருக்காது. ரூ. 12 கோடி அளவிற்கு மாநில அரசு செலவழித்தும் இத்தகைய சேதமும் நஷ்டமும் பாதிப்பும் ஏற்பட்டிருக்காது. இந்த அரசு கீர்மையான முறையில் இந்த [illegible] தனித்திட்டம், பார்த்திபனூர்-பர[illegible] [illegible] போட்டிருக்கிறது.



பரமக்குடிக்குப் பக்கத்தில் கீழ்நாட்டார் கால்வாய், மேல்நாட்டார் கால்வாய் என்ற இரு இடங்களில் இரு மதகுகளைக் கட்டி, மேல் நாட்டார் கால்வாய் வழியாக வருகிற அவர் வெள்ளம் வைகைக்குப் போகிறமாதிரியும் கீழ்நாட்டார் கால்வாயில் வருகிற அவர் வெள்ளம் வைகைக்குப் போகிற மாதிரியும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1979-ம் ஆண்டில் சிரணிக் கால்வாயில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அரசு ரூ. 14 கோடியில் ஒரு எஸ்டிமேட் போட்டு ஒரு திட்டத்தைக் கவனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இன்று வரை அந்த வேலை துவக்கப்படவில்லை. அந்த வேலையை உடனடியாகத் துவங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பரமக்குடிக்கு அருகே கீழ ஆய்குடிக்கு அருகில் வைகை உடைப்பு எடுத்து நிலங்களையெல்லாம் அரித்துக் கொண்டே வருகிறது. ஆகவே இதைப் போக்க, அரசின் 14 கோடி மதிப்புள்ள சிரணிக் கால்வாய்த் திட்டத்தை, அதற்கான வேலைகளை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வேலை ஆரம்பித்தால் கீழ ஆய்குடி பக்கத்தில் உடைப்பு ஏற்படாமல் வைகையின் தண்ணீரை அந்தப் பகுதி மக்கள் பயன்படுத்தமுடியும் என்பது அந்தப் பகுதி மக்களுடைய கருத்து. எனவே மாண்புமிகு புரட்சித்தலைவரின் ஆட்சி, தமிழக அரசு இந்த ரூ. 14 கோடி எஸ்டிமேட் திட்டத்தைப் பொறுத்து உடனடியாக வேலை ஆரம்பித்து வெள்ளத்தினால் ஏற்படும் சேதத்திலிருந்து அந்தப் பகுதி மக்களைக் காக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேஜையடிக்கப்பெற்றது)

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, 5 கோடி மக்களுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்வதற்கும் இந்த மாநிலத்தை உணவு உற்பத்தியில் ஒரு உபரி மாநிலமாக ஆக்குவதற்குத் தேவையான நதி [illegible] மற்றும் ஊற்றுநீர் குளங்கள், குட்டைகள் இவைகளின் மூலமாகக் கிடைக்கும் நீரைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான, போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தின் அடிப்படையான பிரச்சனை, முக்கியப் பிரச்சனை காவிரி நதிப் பிரச்சனை அதைப் பற்றி சட்ட மன்றத்திலும் பேசுகிறோம். வெளியிலும் பேசுகிறோம். ஆனாலும் வெறும் பேச்சளவில்தான் இருக்கிறது அந்தப் பிரச்சினைக்கு இன்று வரை எந்த முடிவும் ஏற்படவில்லை. அதனால் ஏற்படுகிற நஷ்டம் தமிழகத்திற்குத்தான் என்பதை நாம் உணர்ந்தாலும் அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதிலே அரசு எந்தவிதமான முனைப்பும் காட்டவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே இதுபற்றிய விவாதம் நடைபெறுகிற

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டம் சம்பந்தமாக விவரமான அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் கோதையாறு தான் வெள்ளத்திற்கு ஊற்றாக அழிவை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருக்கிறது. அந்தத் திட்டமும் எடுத்துக்கொள்ளப்படவில்லை- அதைப் போலவே காட்டுவாரி, உப்பார்வாரி, பனையூர்வாரி பழுது பார்க்கப்படாததன் காரணமாகவும் அங்கே செய்திருக்கிற ஆக்கிரமிப்புக்களைக் கூட அகற்றுவதற்கு சக்தியற்ற நிலைமையிலே அதிகாரிகள் இருக்கின்றதன் காரணமாக வெள்ளம் வருகிறபோதுதான் நாம் அந்த ஆக்கிரமிப்புகளைப்பற்றிப் பேசுவோம், வெள்ளம் வடிந்துவிட்டால் வெயில் வந்துவிட்டால் அதை மறந்துவிட்டு பழைய கதையாகப் போகும் என்ற நிலைமை இருப்பதால் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அந்த நிலைமை மாற்றப்பட்டாக வேண்டும். காட்டுவாரிக்காக 90 லட்ச ரூபாய் திட்டம் ஒன்று ஆய்வில் இருக்கிறது. ஆய்வில் இருக்கிறது, என்று சொல்கிறார்கள். எத்தனை வருடம் அது ஆய்வில் இருக்கிறது. கடந்த பன்னிரண்டு வருடகாலம் ஆய்வில் இருக்கிறது, என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். 90 லட்சம் என்று சொல்கிற ஒரு திட்டம் வருடம் ஆக ஆக லட்சங்கள் அதிகரித்துக் கொண்டே போகிறது. இந்த ஆய்வுக்கு எப்போது ஓய்வு வரும் என்று தெரியவில்லை. ஆனால் எந்தத் திட்டமாக இருந்தாலும் ஆய்வில் இருக்கிறது. ஆய்வில் இருக்கிறது என்ற பதிலைத்தான் பார்க்க முடிகிறது. அந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றினால் ஒரு பகுதி சேதத்தைத் தவிர்க்கமுடியும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே வந்தியம் வடிகாலில் தண்ணீர் வடிந்து போவதற்கு வழியில்லை. எழுநூற்றுமங்கலம் பாசன வாய்க்காலில் இந்தத் தண்ணீர் கலந்து வடியாமல் வயல்களில் வெள்ளம் பாய்ந்து 300 ஏக்கரில் பயிர்கள் எல்லாம் ஆண்டு தோறும் பாழாகிறது. இந்த வடிகால் வாய்க்காலை காட்டு வாரியில் சேர்க்க ஒரு திட்டம் வேண்டும் என்றால் நீங்கள் சொல்வது வாஸ்தவம்தான், எங்களால் திட்டம் இன்னமும் உருவாக்க முடியவில்லை, ஆய்வில் இருக்கிறது, ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம் என்ற பதிலைத்தான் தருகிறார்கள். இந்த மாதிரியான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய தமிழக அரசு காவேரி ஆற்றில் மோகனூரில் பெட் ரெகுலேட்டர் 3½ கோடி ரூபாயில் கட்டுவதற்கு திட்டம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். திருச்சி மாவட்டத்தில் உள்ள தென்கரை கால்வாய், கட்டளை மேட்டு வாய்க்கால், உய்யக் கொண்டான் வடகரைக் கால்வாய் மற்றும் இதர கால்வாய்கள் மூலம் ஒன்றே முக்கால் லட்சம் ஏக்கர் நிலங்கள் சாகுபடியாகின்றன. காவிரி ஆற்றில் மேட்டூர் சீசன் முடிந்துவிட்டால் திருச்சி

மாவட்டத்திலே உள்ள ஒன்றே முக்கால் லட்சம் ஏக்கர் நிலங்களில் பெருவாரியான நிலங்கள் காவிரியிலே உள்ள ஸ்பிரிங் வாட்டர் தண்ணீர் மூலமாக மேட்டூரிலிருந்து கிடைக்கக்கூடிய மிகச் சிறிய அளவு தண்ணீரை வைத்துக்கொண்டு இரண்டாவது போகம் நெல், கரும்பு, வெற்றிலை போன்ற பயிர்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மோகனூரிலே பெட் ரெகுலேட்டர் கட்டினால் திருச்சி மாவட்டத்திலே 1 லட்சம் ஏக்கருக்கு மேல் இம்மாதிரியான பயிர்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகும். இதனால் மோகனூரில் 10 ஆயிரம் ஏக்கர் பயன் அடையலாம். ஆனால் திருச்சி மாவட்டத்திலே 1 லட்சம் ஏக்கருக்கு மேல் பாதிக்கப்படும். தவிர திருச்சி மாவட்டத்தில் 4 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. 3 சர்க்கரை ஆலைகளுக்குத் தேவையான கரும்பை புகளூருக்கும் பேட்டைவாய்த்தலைக்கும், லால்குடியில் உள்ள கோத்தாரி சர்க்கரை ஆலைக்கும் 20 ஆயிரம் ஏக்கரில் கரும்பு மேலே கூறியுள்ள கால்வாய்கள் மூலமாக அதில் வருகின்ற தண்ணீர் மூலமாகத்தான் சாகுபடி செய்து ஆகவேண்டும். 20 ஆயிரம் ஏக்கர் கரும்பை அழித்து, அந்த சர்க்கரை ஆலைகளை அழித்து, சர்க்கரை உற்பத்தியை நாம் நாசப்படுத்தப் போகிறோமா? அரசினுடைய கொள்கை என்ன என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே மோகனூரில் Bed Regulator கட்டுவது கைவிடப்படவேண்டும் என்று நான் தெளிவாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 6-20)

அடுத்து அதேமாதிரி கட்டளை மேட்டு வாய்க்காலில் 19.2 கிலோ மீட்டரில் அதிலே ஒரு அணை கட்டுவதாக 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து ஒரு திட்டம் ஒவ்வொரு ஆண்டும் அந்தத் திட்டத்தை எடுத்து வைத்து நிறைவேற்றவேண்டும் நிறைவேற்ற வேண்டும் என்று கூறப்படுகிறது. அந்த 19.2 km-க்குக் கீழே 25 ஆயிரம் ஏக்கர் சாகுபடி இருக்கிறது. நெல், கரும்பு, வாழை மற்ற சாகுபடிகள் இருக்கின்றன, அதற்கு மேல் 5 ஆயிரம் ஏக்கர் தான் சாகுபடி இருக்கிறது. இந்த அணை கட்டுவதன் மூலமாக யாருக்குப் பயன் அளிக்கிறது என்பதையும் யாரைப் பாதுகாக்கப் போகிறோம் என்ற அடிப்படையான நிலைமையை கருத்தில் கொள்ளாமல் அதை கட்டவேண்டும், கட்டவேண்டும் என்ற முறையில் கூறப்படுகிறது. அது நிறுத்தப்படவேண்டும் என்பதை நான் தெளிவாக குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, அமராவதி ஆற்றில் ஒரு தடுப்புச் சுவர் கட்ட வேண்டும் என்று பல வருடமாக மாவட்ட வளர்ச்சி மன்றப் கூட்டத்திலும், இங்கே சட்ட மன்றத்திலும் பேசியாகி விட்டது. அதற்கு எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு விட்டது. நிறைவேற்றப்படும் என்று கூறப்படுகிறது. ஆனால் எப்போது நிறைவேற்றப்படும் என்று தெரியவில்லை. எந்த நிலையில் இருக்கிறது தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





அடுத்து, நான் குறிப்பிட விரும்புவது என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டது. மணப்பாறை வட்டத்தில் மாமுண்டி ஆற்றில் இருந்து மரவனூரில் இருக்கிற பெரிய ஏரிக்குப் பாசன வசதி அளிப்பதற்கு ஒரு அணை கட்டுவதற்கு ஒரு திட்டம் ஆய்வு நிலையில் இருக்கிறது என்று கூறப்படுகிறது. அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி கீழேவழியூர் குளத்துக்கு (மணியுடிக்கப் பெற்றது, கல்லடை குளத்தில் இருக்கக்கூடிய உபரி நீரக் கொண்டு வந்து அங்கே பாசன வசதி செய்யக்கூடிய முறையில் ஒரு திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குழித்தலை வட்டம் தேசிய மங்களம் கிராமத்தின் அருகில் குளம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், பஞ்சப்பட்டி பூங்காற்றில் நாதம்பட்டி அருகில் அணை கட்டி வையலூர் ஏரிக்குத் தண்ணீர் கொண்டு செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடவூரில் குருடன் பாறை அணைத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குறிப்பிட விரும்புவது, வாய்க்கால்களில் உள்ள மேடிட்ட மணலைத் தூர் எடுப்பது அவசியமான ஒரு கடமையாகும். இன்றைய தினம் குடிமராமத்து வேலைகள் நிறுத்தப்பட்டு விட்டதன் காரணமாக இது கவனிக்கப்படாமல் இருக்கிறது. அதற்கு அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்து அனைத்து வாய்க்கால்களிலும் தூர் எடுப்பதற்கு ஏற்பாடுகள் அனைத்தும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதகுகளில் இருக்கக்கூடிய குழாய்கள் சிறியதாக இருக்கிறது. எந்த காலத்தில் வாய்க்கால்கள் வெட்டினார்களோ அந்தக் காலத்தில் அந்தக் குழாய்கள் வைக்கப்பட்டன. அன்றைக்கு 100 ஏக்கர் ஆயக்கட்டு சாகுபடி என்றால் இன்றைக்கு 500 ஏக்கர் சாகுபடியாகிறது. அந்தப் பழைய 6 இன்ச்சு குழாய், 9 இன்ச்சு குழாய் அதிலே தான் தண்ணீர் போகவேண்டும். தண்ணீர் பாய்ச்சுவதில் தகராறு, கிராமங்களில் வரக்கூடிய அடி, தடி சண்டை, குத்து வெட்டு எல்லாம் இதன் காரணமாகத்தான் நடக்கிறது. ஆகவே இன்றைய தினம் சாகுபடி விஸ்தரித்துள்ளதற்குத் தகுந்த மாதிரி அந்தக் குழாய்களையும் பெரிய குழாய்களாக மாற்றி அமைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாயனூர் தென்கரை வாய்க்கால் உய்யக்கொண்டான் பேட்டு வாய்க்கால் போன்ற வாய்க்கால்களை வருடத்தில் 15 தினங்கள் மட்டுமே அடைக்க வேண்டும். ஏன் என்றால், கரும்பு, வாழை, வெற்றிலை போன்ற பயிர்கள் இருக்கின்றன. அதை ஒரு மாதம் காயப் போட்டால் அவைகள் தாங்காது. ஆகவே பி.டபிள்யூ.டி. இலாக்கா பழுது பார்க்கும் வேலைகளை 15 நாட்களுக்குள் பழுது பார்க்கலாம். அதற்கு ஒன்றும் கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கீடு செய்யவில்லை. 5 லட்சம் ரூபாய் 10 லட்சம் ரூபாய் 20 லட்சம் ரூபாய் தான் பழுது பார்க்கக்கூடிய வேலைக்கு ஒதுக்குகிறார்கள்

ஆனால் இந்த வேலைகளுக்காக ஒரு மாதம் கால்வாய்களை அடைக்கவேண்டும் என்று எனக்கு கூறுகிறார்கள். பயிர்கள் பாதிக்கப்படுகிறது. 15 நாளாக அதை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத்தலைவர் தலைமை.)

அடுத்து, டிராப்புகள் நிறைய இருக்கின்றன. ஆரம்பத்தில் வாய்க்கால்களை வெட்டிய நேரத்தில் அமைக்கப்பட்டவை பழுதாகியுள்ளன. அதற்குப் பதிலாக நிரந்தரமான ரெகுலேட்டர் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவேரியில் தண்ணீர் வேகமாகவும் அதிகமாகவும் வருகின்ற நேரத்தில் கரைகள் உடைக்கப்பட்டு அழிகின்றன, ஃபாரஸ்ட் நிலங்கள் அழிகின்றன; தனியார் நிலங்கள் அழிகின்றன. க்ராயின்ஸ் அதாவது கற்குவியல் சுவர்களைக் கட்டுவதன் மூலம் இந்த அழிவிலிருந்து நிலைகளைப் பாதுகாக்க முடியும். அதிலும் முக்கியமாக, குளித்தலையில், காவேரி ஆற்றில் பாலத்தைக் கட்டியதற்குப் பிறகு இந்த ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. கற்குவியல் சுவர் கட்ட வேண்டும் என்று நான்காண்டுக் காலமாக நானும் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். வருடத்திற்கு ஒன்று என்ற ரீதியில் கட்டப்பட்டிருந்தாலும்கூட இந்நேரம் நிறைவேறி இருக்கும். ஆனால் அதைச் செய்யவில்லை. அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

12-3-84 ஆம் தேதியன்று, வால்பாறை தொகுதியில் காடம்பாறை நீரேற்று மின் திட்ட அணைக்கட்டில் கற்பகம் என்ற 19 வயது, திருமணம் ஆகாத பெண் வேலை செய்யும்போது தவறி விழுந்து இறந்து விட்டாள். அவருடைய குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்தாவது பணம் கொடுக்க வேண்டும். ஏனென்றால், அணைக்கட்டு வேலையில் ஈடுபட்டிருந்த பொழுது இறந்த காரணத்தினால் நமக்கும் பொறுப்பு இருக்கிறது. கட்டிடத் தொழிலாளர்கள் இறந்தால் நஷ்டயீடு கொடுப்போம் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே இப்படிப்பட்ட பணியில் ஈடுபட்டிருந்தபொழுது இறந்திருக்கின்ற காரணத்தினால் அந்தக் குடும்பத்திற்கும் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினைகளையெல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வழக்கமாக உள்ள பதிலாக இல்லாமல், இவைகளை நிறைவேற்றுவதற்கு உத்தரவாதமான நடவடிக்கைகளைப் பற்றி பதிலில் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்த்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

*திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாற்றுத் தலைவரவர்களே, பாசனம் மீதான மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி, வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





இந்தியத் துணைக் கண்டத்தைப்பற்றி, ஒரு ஜெர்மன் நாட்டு ஆசிரியன் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று முயற்சித்த நேரத்தில், இந்தியத் துணைக் கண்டம் ஏன் பொருளாதார ரீதியில் பின் தங்கி இருக்கிறது என்ற ஆராய்ச்சியை செய்யும் பொழுது, இந்த இந்தியத் துணைக் கண்டமே ஒரு விவசாய நாடு, அந்த விவசாயத்திற்குத் தேவையான அடிப்படைத் திட்டங்களை ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பிறகும்கூட நிறைவேற்றவில்லை என்று பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்களின் மீது ஒரு குற்றச்சாட்டாகவே, மைய அரசின் மீது ஒரு குற்றசாட்டாகவே அந்த ஜெர்மன் நாட்டு எழுத்தாளன் சொல்லியிருக்கிறான். ஒரு மாபெரும் குற்றச்சாட்டைச் சாட்டியிருக்கிறான். பொருளாதார ரீதியில், உலகத்தில் பின்தங்கிய சூழ்நிலைக்குக் காரணம், விவசாயத்திலே முன்னேறுவதற்கான அடிப்படை வசதியான பாசன வசதிகளை செய்து கொடுக்கவில்லை ஏதோ ஐந்தாண்டுத் திட்டங்கள் என்று போட்டிருக்கிறார்களே தவிர, அந்த ஐந்தாண்டு திட்டங்களெல்லாம் தனிப்பட்ட நபர்களை உயர்த்துவதற்காகத் தான் இதுவரையில் பயன்பட்டுக்கொண்டிருக்கின்றனவே தவிர விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்று அந்த ஆசிரியர் சொல்லியிருக்கிறார்.

திரு. உ. சுப்பிரமணியன் : ஐந்தாண்டுத் திட்டங்களினால் தனிப்பட்டவர்கள்தான் பயன் பெற்றிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். இதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. வே. இரா. ஜெயராமன்); தனிப்பட்ட பொதுமக்கள் என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்களேன்.

திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்தக் கருத்தை நான் சொல்லவில்லை. ஜெர்மன் நாட்டைச் சார்ந்த ஒரு ஆராய்ச்சி எழுத்தாளன் இதைச் சொல்லியிருக்கிறான். அதைத்தான் நான் மேற்கோளாகக் காட்டுகின்றேனே தவிர, வேறொன்றுமில்லை, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதுதான் இதன் மையக் கருத்து.

அந்த அளவிலே இங்கே பேசிய அன்புச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் முதற்கொண்டு சொன்னார்கள். இங்கே என்னுடைய அருகாமையிலே இருக்கின்ற திரு. பாரமலை அவர்களும் சொன்னார்கள். காவிரி நதி நீர்ப்பிரச்னையை ட்ரிப்யூனலுக்கு விட வேண்டுமென்று சொன்னார்கள். கோர்ட்டுக்கு ஏன் சொல்ல வேண்டுமென்ற கேள்வியை நான் வைக்க விரும்புகிறேன். கோர்ட்டுக்குச் செல்வதால் நம்முடைய பிரச்னைகள் தீர்வதிலே காலதாமதத்தில் முடிந்துவிடுகிறது. இதனால் காலதாமதம்தான் ஏற்படுகிறதே தவிர, நம்முடைய பிரச்னைகள் முழுவதும் தீர்க்கப்படவில்லை என்பதை மனதிற்கொண்டு,

மைய அரசை ஆண்டு கொண்டிருக்கின்ற பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்த நதி நீரைப் பொறுத்தவரையில் இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள 22 மாநிலங்களிலும் உள்ள இந்தப் பிரச்னையை ஒட்டுமொத்தமாக அணுகி, இதில் தீர்வு காணவேண்டுமென்று இந்தப் பேரவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 6-30)

காவிரி நதியைப் பொறுத்த வரையில் இங்கே பேசுவதற்கு அதிக நேரம் கிடைக்கவில்லையென்றாலும் ஒரேயொரு விஷயத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். காவிரியைப் பொறுத்த வரையில், என்னுடைய பகுதியிலே உள்ள வடகரை வாய்க்கால் என்ற முக்கியமான வாய்க்கால், பிரதான வாய்க்கால் செல்கிறது. இந்த வாய்க்காலும், வேறு பல உப வாய்க்கால்களும் செல்கின்றன. இந்த வாய்க்கால் ஆரம்பத்திலே சிலைப் பிள்ளையார் புத்தூர் வழியாகத் திருப்பப்பட்டிருக்கின்றது. வருடம் ஒரு முறை இந்த சிலைப் பிள்ளையார் புத்தூரைப் பொறுத்த வரையில் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் செலவு செய்து குரம்பு அமைக்கிறார்கள். இந்தக் குரம்பினுடைய பிரயோஜனம் எல்லாம் அங்கே திரிசந்தோய்மலை வரைதான் அந்த அளவுக்குத்தான் தண்ணீர் உபயோகப்படுகின்றது. அதற்குக் கீழே இருக்கின்ற பகுதிகளுக்குப் பயன்இல்லை. அதற்குக் கீழே முசிறியிலிருந்து 13 மைல் வரை உள்ள வாத்தலை வரை உள்ள முக்கம்பு மற்றும் சுற்றி இருக்கக்கூடிய விவசாய நிலங்கள் 10500 ஏக்கர். அதனுடைய உபரியாக 5 அயிரம் ஏக்கர் இருக்கின்றது. ஆக மொத்தம் ஆயக்கட்டு 15500 ஏக்கர்கள் ஆகும். அவ்வாறு நிரந்தரமாக இருக்கின்ற அந்த ஆயக்கட்டுகள் அத்தனைக்கும் இன்றையதினம் 10 அண்டுக் சாலமாக தண்ணீர் வராத நிலைமை இருக்கின்றது அந்த கடைமடை பகுதிகளுக்குத் தண்ணீர் செல்லவில்லை. தொட்டியம் போன்ற இடங்களில் இருக்கின்ற பயிர்கள் எல்லாம் பணப்பயிர்கள். அங்கே இருக்கின்ற விவசாயிகள் 5 நாட்களுக்கு சில்ட் க்ளியரன்ஸ் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். அதனால் எங்கள் பகுதிகளைப் பொறுத்தவரையில் மிகவும் பாதிப்பு ஏற்படுகின்றது.

இங்கே இரிகேஷன் கமிட்டியிலே ஒரு திட்டத்தைக் கொடுத்திருந்தோம். முசிறி-குளித்தலைப் பாதையில் இருக்கின்ற பெரியார் பாலத்தின் குறுக்கே இருக்கின்ற வீடிங் சேனல், ராணி மங்கம்மாள் ஆண்டுகொண்டிருந்த காலத்தில் கட்டப்பட்ட தலைப்பு வாய்க்காலாகும். அது புதிதாக ஏதோ காவிரி நதி நீர் ஒப்பந்தத்திற்குக் குந்தகம் விளைவிக்கின்றது என்று எக்ஸிக்யூட்டிவ் இன்ஜினியர் அவர்கள் பதில் கொடுத்திருக்கிறார்கள். அது அப்பட்டமான, முழுமையான, உண்மைக்கு மாறான ஒன்றாகும். இந்த இரிகேசனைப் பொறுத்தவரையில் இருக்கின்ற அதிகாரிகள் கொடுக்கின்ற பதிலை வைத்துக்கொண்டு பார்க்கும்போது அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் [illegible] அவர்களும் மற்றும் இருக்கின்ற அத்தனை அதிகாரி





களும் அந்தப் பகுதிக்கு வீடிங் சேனல் அமைக்கவேண்டும் என்று அங்கே வந்து பேசும்போதும், பார்க்கும்போதும் சொல்லி இருக்கிறார்கள். அது பொருத்தமான இடத்தில்தான் இருக்கின்றது எனவே அதிகமான செலவு தேவையில்லை; ஆகவே அதை நிறைவேற்றலாம் என்ற அளவிலே தான் பிரதான எக்ஸிக்யூட்டிவ் இன்ஜினியரிலே இருந்து அனைவரும் ஒத்துக் கொண்டார்கள். அதற்குப் பின்னர், அவ்வாறு ஒத்துக்கொண்டதற்குப் பிறகு கன்சல்டேட்டிவ் கமிட்டிக்கு அவர்கள் பதில் அனுப்பும் போது இது சாத்தியம் இல்லை, இந்தப் பகுதியிலே இந்த வீடிங் சேனலை அமைத்தால் கிழக்குப் பகுதியிலே இருக்கின்ற அய்யன் வாய்க்கால், பெருவளை, பதுவாத்தலை, ஸ்ரீரங்கம் மேட்டூர் வாய்க்கால் ஆகிய பகுதிகளுக்குத் தண்ணீர் வராமல் பாதிப்பு ஏற்படும் என்ற கருத்தினைச் சொல்லி இருக்கிறார்கள். இது முழுமையான மறுக்கப்படக்கூடிய, ஒரு அப்பட்டமான உண்மைக்கு மாறான விஷயம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தஅளவுக்கு அதிகாரிகள் அங்கே பதில்கொடுத்திருக்கிறார்கள். இவ்வாறு உண்மைக்குபுறம்பான செய்திகளை அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். இங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கையிலேஆர்.டி.ஓ. அறிக்கையைச் சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். எனவே எக்ஸிக்யூட்டிவ் இன்ஜினியர் கொடுத்திருக்கக்கூடிய பதில் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இந்தப் பகுதியிலே வருடத்திற்கு 10, 15 தடவை இங்கே பெரிய போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதன் காரணமாக பெருத்த பதட்ட நிலை விவசாய மக்களிடையே நிலவிக் கொண்டிருக்கின்றது. எனவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியினைப் பொறுத்தவரையில் இந்த வீடிங் சேனலைப் புதுப்பிக்கவேண்டும் என்ற ஒரே பிரச்சினைதான். எனவே இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு இதை முடித்துக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் காட்டாறான அய்யாறு ஒன்று குறுக்கே செல்கின்றது. அய்யாத்தூர் பகுதியிலே இருக்கின்ற அய்யாற்றின் குறுக்கே ஒரு சக்டாம் ஒன்றை அமைத்துக் கொடுத்து நெய்வேலி, காமங்கலம், வெப்பந்துறை போன்ற ஏரிகளுக்கு நீர் செல்கின்ற அளவுக்குச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பகுதியில் இவர்கள் போட்டிருக்கின்ற எஸ்டிமேட் குறைந்த அளவுதான். எனவே இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றினால் கூட 6 அல்லது 7 இலட்சம் ரூபாய்தான் செலவாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு பிரச்சனைகளை முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அதிகாரிகளைப் பொறுத்த அளவிலே, என்னுடைய பகுதியிலே இருக்கிற எஸ்.ஓ., அதாவது ஜே.இ. அவர்கள் ஏற்கனவே சுமார் 4 ஆண்டுக்காலம் சஸ்பென்ஷனிலே இருந்து இன்றையதினம் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அவரைப் பொறுத்த அளவிலே இங்கே 3 வேலைகளைக் செய்திருக்கிறார். அதாவது, பெர்கலேஷன்-பாண்ட் கசிவு நீர்க் குட்டைக்கு முசிறி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த, திருச்சி இராயப்பேட்டை கசிவு நீர் குட்டைக்கு, மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.90 இலட்சம். இதைக் கவன்மாகக் கேட்க வேண்டும். ஏனென்றால், நாங்கள் பெரிய திட்டத்தைக் கொடுத்திருக்கிறோம். அந்தப் பெரிய திட்டத்தினால் பலன் பெறக்கூடிய நிலங்கள் 15,500 ஏக்கர் நிலங்கள். அடுத்த திட்டத்தினால் 6.000, 7,000 ஏக்கர் நிலங்கள் பயன்படும். அவற்றை விட்டு விட்டு, அங்கே இருக்கிற அதிகாரிகள் தங்களுடைய சொந்த இலாபம் கருதி, சுமார் ரூ 4.90 இலட்சத்திற்குத் திட்டத்தைத் தீட்டி, அதிலே சுமார் ரூ. 1 இலட்சம் செலவு செய்து அந்தத் திட்டத்தை முடித்து இருக்கிறார்கள். ஆனால் பட்டுவாடா செய்த தொகை ரூ. 4.90 லட்சம். அதைப் போலவே ஒன்று தொட்டியம் பஞ்சாயத்து யூனியனை சேர்ந்த குறிஞ்சிநத்தம் என்ற ஒரு கிராமத்திலே ஒரு கசிவு நீர்க் குட்டையைக் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கசிவு நீர்க் குட்டையினுடைய மதிப்பீட்டுத் தொகை ரூ 3 இலட்சம். அதைப் போலவே, தாத்தையனார்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த வளையெடுப்பிலே ஒரு கசிவு நீர்க் குட்டையைக் கட்டியிருக்கிறார்கள். அதனுடைய மதிப்பீடு சுமார் ரூ. 3 இலட்சம்தான். இந்த அளவுக்கு, இவற்றிலே செலவு செய்திருக்கிற தொகையை, நாங்கள் கொடுத்திருந்த திட்டத்திலே செலவு செய்திருந்தால் அந்தப் பகுதியிலே நல்ல முன்னேற்றம் இருந்திருக்க முடியும். அந்தப் பிரச்சனையை இங்கு மட்டும் எழுப்பவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நம்முடைய மதிப்பிற்குரிய தமிழக முதல்வர் அவர்களுக்கும் புகார் செய்து, அந்தப் புகார் ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கிற அளவிலே இருக்கிறது. அந்த அதிகாரி மீது துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசுக்குக் கெட்ட பெயர் அளிக்கின்ற வகையிலே, ந்த புல்லுருவிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். நான் குறிப்பிடுகின்ற ரூ. 4.90 இலட்சத்தில் ரூ. 1 இலட்சம் கூட செலவு செய்யவில்லை. அதை எந்த நேரத்திலே கேட்டாலுங் கூட நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி, நான் குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடை பெறுகிறேன்.

* திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவு மீதான மானியக் கோரிக்கைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ. 101,90,60,000 கேட்டிருக்கிறார்கள் அந்தக் கோரிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவுகள் என்ற வகையில் ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த ரூ 109 கோடி போதுமானது அல்ல என்பதை முதலில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக்கப் புணிகள், சேனல்கள், குளங்கள், முதலியவைகளை ரிப்பேர் [illegible] ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை போதாது.





வருஷாவருஷம் செய்யப்பட வேண்டிய உடைப்பு வேலைகள் சேனல்களில் மடைகள் சீர்செய்யப்பட வேண்டிய வேலைகள், சட்டர் செய்ய வேண்டிய பணிகள், முதலியவை செய்ய போதுமானதாக இல்லை என்பதைக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குச் சில பிரச்னைகளைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த முறை சட்டமன்றத்தில் சில குறைபாடுகளை வைத்தபொழுது, சேனல், குளங்கள் தூர் எடுக்கப்பட வேண்டுமென்றுசொன்னபொழுது1983 ஆம்ஆண்டில், வறட்சி நிவாரணப் பணிக்காலத்தில் பல்வேறு வாய்க்கால்களும், ஏரிகளும் தூர் எடுக்கப்படவில்லையென்று சொல்லி, அதோடு டீசில்ட்டிங் கம் ரிக்ளமேசன் ஸ்கீம் என்பது குமரி மாவட்டக் குளங்களுக்கு ஏனைய மாவட்டங்கள் போல் குமரி மாவட்டத்திற்கு நீட்டப்பட வேண்டுமென்று கேட்டதற்கு, நீட்டிப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை, இருப்பினும் பெரிய குளங்களைத்தூர் எடுக்க இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதாகத் தெரிவித்தார்கள்.

(இரவு 6-40)

1978-ஆம் ஆண்டு தென்மேற்கு மழையின் போது வள்ளியாற்றில் ஏற்பட்ட உடைப்பைச் சீர் செய்வதற்காக 72 ஆயிரம் ரூபாய்க்கு மதிப்பீடு ஒப்புதல் ஆகியுள்ளது என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் வள்ளியாற்றில் 1978-ஆம் ஆண்டு ஏற்பட்ட உடைப்பு இன்று வரையில் கட்டப்படாமல் இருக்கிறது. சமீபத்தில் பெய்த மழையின் போதும் அந்தப் பகுதியில் இருக்கிற நெற்பயிர்கள் அழிந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே கூட கட்டப்பட்ட கட்டு ஒன்று இடிந்து போய் அதனாலும் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பல்வேறு வாய்க்கால்கள் தூர்ந்து போய் கிடப்பதால் பாசனத்திற்குத் தண்ணீர் வராமல் உள்ளது.

Tail-end of the channels have not been desilted. என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கல்குளம் பகுதியில் திக்கணங்கோடு சேனம்விளை கால்வாய், திக்கணங்கோடு செம்பொன்விளை கால்வாய் முட்டம் சானல் கடைவரம்பு, பட்டினம்காலில் ஆனைக்குழிவழி ரீத்தாபுரம் வரும் கால்வாய், இலட்சுமிபுரம் கால்வாய் கருமன்கூடல்வாய்க்கால் பெரியாப்பள்ளி கால்வாய்ஆலன்கோட்டை கால்வாய், கணபதிபுரம் வாய்க்கால், காரவிளை சானல் ஆகிய வாய்க்கால்கள் இன்றைக்கும் தண்ணீர் இல்லாமல் இருக்கின்றன. அந்த வாய்க்கால்கள் ஆழப்படுத்தப்படாமல் தூர் எடுக்காமல் இருப்பதால் கடைவரம்பில் இருக்கிற நிலங்களுக்கு தொடர்ந்து தண்ணீர் கிடைக்காமல் இருககிறது, கடந்த ஐந்தாண்டுகளாக இந்த நிலைமை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதோடு வள்ளி

யாறு, பெரியகுளம், பண்ணையூர் என்ற வாய்க்கால்களில் லிப்ட் இரிகேசன் வைக்க வேண்டுமென்று பலமுறை இந்த மன்றத்திலே கேட்கப்பட்டும், அது இலாபகரமாக இல்லையென்று அதை அரசு மறுத்து வருகிறது. ஆனால் சிலகாலம் டெம்பரவரியாக ஒரு ஷார்ட் டெர்மிற்கு மட்டும் பயன்படுகிற திட்டமாக அந்த லிப்ட் இரிகேசன் திட்டத்தை நாம் பயன்படுத்துகிற வகையில் விவசாயிகள் பயிர் விளைவிக்கிறபோது சில நாட்களுக்கு பயன் படுத்துகிற அளவிலே அரசு இலாப கண்ணோட்டத்தைப் பார்க்காமல் உடனடியாக இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குமரி மாவட்டம் வந்த போது மாம்பழத்துறை அணைத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதாக அறிவித்தார்கள். ஆனால் அவர்கள் அறிவித்ததற்கு சில மாதங்களுக்கு முன்பு ஆங்கே இருக்கிற அதிகாரிகள் சீப்-என்ஜினியர் அவர்களும் அவரோடு சம்பந்தப்பட்ட பொதுப் பணித்துறை அதிகாரிகளும் அந்த திட்டத்திற்கு சாத்தியக்கூறுகள் இல்லையென்று அறிவித்து இருக்கிறார்கள். மேலும் ஆய்வு செய்வதற்காகத் தான் அந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டோமே தவிர வேறில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் கோதையாறு பாசனத் திட்டம் பொறுத்தவரையில் மாம்பழத்துறை அணை, பொய்கை அணை பேச்சிப்பாறை அணை, பெருஞ்சாணி அணை போன்ற பல்வேறு அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்றினால் தான் அந்தத் திட்டம் முழுமையாகும் என்று கோதையார் இரிகேசன் கோடு (Irigation Code) சொல்லப்படுகிறது. பாசனப்பகுதிகளை நாம் அதிகப்படுத்திக் கொண்டே போகிறோம். பட்டினங்காலை செய்திருக்கிறோம். இராதாபுரம் வாய்க்காலை அமைத்து இருக்கிறோம். ஆனால் அணைக்கட்டுக்களை அதிகமாக்காத காரணத்தால் அந்தப் பகுதிகளுக்கு 'To stabilise the existing water supply system is very difficult' அந்த நிலை இருந்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

நவீனப்படுத்தும் வகையில் அனந்தனாறு கரைகளில் சிமெண்ட் லைனிங் போடுவதைப் பற்றிஇங்கே அறிவிப்பு தந்திருக்கிறார்கள். ஆனால் அந்த வாய்க்கால்கள் எல்லாம் முழுமையாக மண்மூடி தூர்ந்து போய் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கோதையாறு பாசனத் திட்டத்தை நவீனப்படுத்த வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 7 ஆண்டுகளாக கட்டப்படாமல் இருக்கிற வள்ளியாறு உடைப்பை உடனடியாகக் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகப்படியான ஒதுக்கீடுகளை பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கி கடைவரம்பு நிலங்களுக்கு மேலே இருக்கிற, 'அப்பர் சுலூயிஸ்களில் சட்டர்களை





எல்லாம் ரிப்பேர் செய்யவேண்டும். காரணம் கடைவரம்பு விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறது. மேலே இருக்கிற சுலூய்ஸ்களுக்கு சட்டர்களைப் போடவேண்டும். இந்தக் கோடைக்காலத்தில் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் கட்டாயமாக அந்த சட்டர்களை ரிப்பர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இலாக்கா பொதுவாக இப்படிப்பட்ட தருணங்களில் சுலூய்ஸ் வில் ரிப்பேர் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுத்து, விவசாயிகளுக்கு பயனுள்ள வகையிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டி-சில்ட் செய்வது, ரெக்ளமேஷன் செய்வது போன்ற பல்வேறு பணிகளைச் செய்யவேண்டும் என்று பல்வேறு உறுப்பினர்கள் சொன்னார்கள். பெரிய குளங்கள் எல்லாம் இன்றைக்கு ஆக்கிரமிப்புக்கு ஆளாகி இருக்கிறது. அவற்றை உடனடியாக அகற்றி, ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்வாய்களைத் தூர் எடுப்பதற்கு பல்வேறு பகுதிகளில் யார்ட்ஸ்டிக் வைத்து இருக்கிறார்கள். 1/2 அடி தூர்ந்து போய் இருந்தால்தான் அந்த வாய்க்கால் தூர் எடுக்கப்படும் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால் குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு அடிமட்டப் பகுதிகளில் 6 9 இஞ்சு தண்ணீர் பாயும் வாய்க்காலாக இருந்தாலும், இஞ்சிக்கு மேல் வந்தால் தான் தண்ணீர் வருகிறது. இல்லையென்றால் வருவது இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமையில் அங்கே டிசில்ட் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டு கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீர்பாசனத்துறை மானியக் கோரிக்கை மீது என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தியாவின் சராசரி நீர்ப்பாசனத்தை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, தமிழ் நாட்டில் நீர்வளம் இல்லாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொன்னார்கள். இந்தியாவின் நீர்வளம் சராசரி தலா ஒரு நபருக்கு லட்சத்து நாற்பதாயிரம் கனஅடி தண்ணீர் என்று சொன்னால் தலா ஒருவருக்கு தமிழ் நாட்டில் உள்ள நீர்வளத்தைக் கணக்கிட்டால், 2 ,000 கனஅடி தான் என்பதை நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, இந்தியாவிலேயே வடக்கிலும். வடகிழக்கிலும் பெய்கிற மழை, கேரள மாநிலத்தில் பெய்கிற மழை அளவு தான் அதிகமாக இருக்கிறதே தவிர தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், பருவ மழை தவறுவதும், காலந் தவறி மழை பெய்வதும், குறைவான அளவு மழை பெய்வதும் வரலாற்று

உண்மையாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வேன். குறிப்பாக மேட்டூர் அணை கட்டப்பட்ட பிறகு வரம்பு நீர் அளவு (limit flow) முறை கடை பிடிக்காததால் தான் இந்த நிலைமை ஏற்பட்டது. கருநாடக மாநிலம் கொஞ்சம் கொஞ்சமாக தமிழ்நாட்டிற்கு நீர் விடும் நிலை ஏற்பட்டு விட்டது, அதனால் பாசன வசதி பெரிதும் பாதிக்கப்படுகிறது. இந்த நிலைமையில் பாசன வசதியை அதிகப்படுத்த வேண்டும் என்று சொன்னால், வடக்கே உள்ள கங்கையையும் கோதாவரியையும், மகாநதியையும் திருப்பி, தமிழ்நாட்டிற்கு நாம் கொண்டு வந்தால்தான் முடியும். கேரளாவில் பெய்கிற மழை தமிழ்நாட்டிற்கு வரவேண்டியதுதான். ஆனால் மேற்குத் தொடர்ச்சி மலை அதைத் தடுத்து அங்கேயே மழையைப் பொழிய வைத்து விடுகிறது. கேரளாவில் பெய்கிற மழை அளவு 2 லட்சத்து 50 ஆயிரம் கோடி கன அடி தண்ணீர் என்று சொன்னால், அதிலே கேரளாவிற்கு தேவையான 50 கோடி கன அடி தண்ணீர் போக எஞ்சிய தண்ணீர், கடலில் கலக்கும் தண்ணீர், தமிழ்நாட்டிற்கு கிட்டத்தட்ட 2 கோடி கன அடி தண்ணீர் கொடுக்கலாம். ஆனால் அப்படிச் செய்வதற்கு நமக்கு அதிகாரம் இல்லை. அதைப்போலவே. கங்கையையும், காவேரியையும், மகாநதியையும் இணைக்கும் திட்டத்தைத் தீட்ட அதிகாரம் நம்மிடத்தில் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அது எப்போது வரும் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் கேட்டார்கள். அ.இ.அ.தி.மு.க. கட்சி கருநாடக மாநிலத்து ஆட்சியை கைப்பற்றுகிற போதுதான் நாம் சொல்கிற மாதிரி அங்கே இருந்து தீர்மானத்தைப் போட்டு, காவிரி நீர் தமிழ் நாட்டிற்கு எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு அனுப்ப வேண்டும் என்று தீர்மானம் போட்டு அனுப்பலாம். ஆனால் இன்றையதினம் இந்த காவிரி நதிநீர் பங்கீடு சரியான முறையில் அமைய வேண்டும் என்பதற்காக தமிழக அரசு முனைப்பான நடவடிக்கை எடுத்து வருகிறது. அங்கே இருக்கிற முதல் அமைச்சர் ஒவ்வொருவரோடும் நம்முடைய மாநில முதலமைச்சர், புரட்சித்தலைவர் அவர்கள் பேச்சு வார்த்தைகள் அடிக்கடி நடத்தினார்கள். பின்னர் கடிதங்கள் எழுதினார்கள். பேனாமுனையிலும் பேச்சு வார்த்தைகளிலும் முனைப்பையும் துடிப்பையும் புரட்சி தலைவர் காட்டினார்கள். இதைத் தான் நம்மால் செய்ய முடியும். துப்பாக்கியையா காட்ட முடியும். ஜனநாயக நாட்டில் இந்தியா போன்ற பெரிய உபகண்டத்தில் இன்டர்ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட்ஸ் ஆக்ட் என்று ஏற்படுத்தி அதற்குப் பிற்பாடு இன்டர் ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட்ஸ் ஆக்டின் கீழ் விதிகளை ஏற்படுத்தி, அதற்குப் பிறகு இன்டர் ஸ்டேட் வாட்டர் போர்டு என்று இன்னொரு சட்டத்தையும் கொண்டு வந்து, இருந்தபோதிலும் பேச்சுவார்த்தைகள் பயனளிக்கவில்லை என்று நடுவர் முடிவுக்கு அனுப்பவில்லை. அப்படி ஒருக்கால் இந்தப் பிரச்னையை நாம் கோர்ட்டுக்குக் கொண்டு



போனாலும், கோர்ட் மூலம் ட்ரிபியூனலுக்கு அனுப்பினாலும் இந்திரா காந்தி அம்மையார் மனம்கனிந்து அதை டிரிபியூனலுக்கு அனுப்பினாலும், அந்த டிரிபியூனல் தருகிற தீர்ப்பை அமுல்படுத்துவதற்கு இன்றையதினம் அந்த சட்டங்கள் எதிலும் இடம் இல்லை என்பதை நான் திரு. நெடுமாறன் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். துப்பாக்கியை எடுத்தால் குண்டே வெடிக்காது. ட்ரிபியூனல் தீர்ப்பு பொம்மை துப்பாக்கியாகத்தான் இருக்கும். டிரிபியூனலுக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை என்று பல ஆண்டுகளாகச் சொல்லி வருகிறோம். இன்டர்ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட்ஸ் ஆக்ட் படி, இதிலே சம்பந்தப்பட்ட மாநிலங்கள் பேச்சுவார்த்தை நடத்தி, அந்தப் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறவில்லை என்று சொன்னால்தான், நாம் கோர்ட்டுக்குப் போக முடியும் என்று இருக்கிறது.

(இரவு 6—50)

இன்னொரு சட்டம் இருக்கிறது. அரசியல் சாசனத்தில் ஒரு மாநிலம் அல்லது இரண்டு மாநிலங்களுக்கு இடையே இருக்கிற நதிநீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வழக்கு மன்றம் தீர்ப்பு அளிக்கக்கூடாது, விசாரிக்கக் கூடாது என்று ஒரு ஆர்ட்டிக்கிள் இருக்கிறது. ஆகவே கோர்ட்டுக்குப் போக வேண்டும் என்றால், எந்தக் கட்சியாக இருந்தாலும் ஆட்சியில் உள்ள கட்சி கோர்ட்டுக்குப் போகாது, ஆனால் விவசாயிகள் போயிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் ஒரு விவசாயி கோர்ட்டுக்கு போயிருக்கிறார். அதைப்போன்று கர்நாடகத்திலும் போயிருக்கிறார்கள். சென்னை உயர்நீதிமன்றமும் கர்நாடக உயர் நீதிமன்றமும் அந்தந்த மாநிலத்தில் உள்ள விவசாயிகள் போட்ட வழக்கிலே சாதகமாக தீர்ப்பு அளிக்கலாம் என்று சொல்லி, விவசாயிகள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகலாம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் கூட வழக்குத் தொடுக்கலாம். அரசு அதைத் தடுக்காது. தனிப்பட்ட விவசாயிகள் தமிழ்நாட்டில் தங்களுக்கு பரிகாரம் காண வேண்டும் என்பதற்காக கோர்ட்டுக்குப் போகலாம்.

திரு ப. நெடுமாறன்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் நான் டிரிபியூனலுக்குப் போக வேண்டுமென்று சொன்னதை கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்று சொன்னதாக தவறுதலாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்று நான் எந்த நேரத்திலும் சொன்னதில்லை. தனிப்பட்டவர்கள் கோர்ட்டுக்குப் போகலாம் என்று சொன்னார்கள். நான் கூட வழக்குத் தொடுக்கலாம் என்றும் சொன்னார்கள். நான் வழக்குத் தொடர்ந்தால் நிச்சயமாக வாதாட திரு. சுவாமிநாதன் அவர்களை வைத்துக் கொள்வேன். அவரை வைத்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஏனென்றால் இந்தப் பிரச்சனையிலே இருவர் கருத்தும் ஒன்றுதான். தமிழ்நாட்டுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதுதான் இவருடைய கருத்தும். எல்லா வகையிலும் பேசிப் பார்த்தும் தீர்வு கிடைக்கவில்லை என்றால் டிரிபியூனலுக்குப் போவதைத்தவிர வேறு வழியில்லை என்று நான் சுட்டிக்

காட்டினேன். எப்படியாவது ஒரு நல்ல முடிவு ஏற்பட வேண்டும். அதற்கு நீங்கள் மத்திய அரசை வேண்டுமானால் வற்புறுத்தி, ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்யலாம். அல்லது இன்டர் ஸ்டேட் டிரிபியூனல் என்று கூட சொல்லி. நாடாளுமன்றத்திலே இந்தப் பிரச்சனையைக் கொண்டுவர ஏற்பாடு செய்யலாம். அல்லது அண்ணா தி.மு.க. உறுப்பினர்களே இதற்கு ஒரு தீர்மானத்தை அங்கே கொண்டு வரலாம். இப்படிப்பட்ட முயற்சிகளை எடுக்கவில்லை என்றால் நமக்கு நியாயம் கிடைக்காது.

திரு வி. வி. சுவாமிநாதன்: துணைத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு.நெடுமாறன் அவர்கள் வழக்குத் தொடுத்து. அந்த வழக்கிலே வாதாடுகின்ற உரிமையை எனக்குக் கொடுத்தால் நிச்சயமாக நான் வாதாடுவேன். ஏனென்றால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இது தனிப்பட்டவர் பிரச்சனை அல்ல. தமிழ்நாட்டு மக்களுடைய பிரச்சனை, இது ஒரு அரசியல் பிரச்சனையாக இருப்பதால்தான் எந்தக் கட்சி கர்நாடகத்தில் வந்தாலும் முதலமைச்சர் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக உடனடியாக உண்டு அல்லது இல்லை என்று சொல்ல முடியாமல் தவிக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் கூட இல்லை என்றால் இல்லை என்று சொல்லிவிடுங்கள் என்று சொன்னார்கள். முடியாது என்று சொல்வதற்குத்தானா ஒரு கட்சி ஆட்சியில் இருக்கிறது. அரசியல் ரீதியில் பல முயற்சிகளை எடுக்க வேண்டும்; எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் பலன் கிடைக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். பழைய காலத்தில் கங்கையை சோழப்பேரரசன் கொண்டு வந்ததாகச் சொல்வார்கள்' மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கிருஷ்ண நதி நீரை தலைநகரான சென்னைக்குக் கொண்டு வருகிறார்கள். கிருஷ்ண நதியைக் கொண்டுவருகிற எம்.ஜி.ஆர். அவர்களால் காவேரியையும் கொண்டுவர முடியும் என்று நம்புகிறோம். முடியாது என்று சொல்ல முடியாது. அதற்கு பல மார்க்கங்களை கடைபிடிக்க வேண்டும். அந்த வகையிலே முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். ட்ரிபியூனலுக்கு போவதற்கு முன் ட்ரிபியூனல் தீர்ப்பை அமுலாக்க சட்டத்திருத்தம் கொண்டு வரவேண்டியது முக்கியம் என்று தான் சொல்கிறேன்.

தமிழ்நாட்டில் நீர்வளம் இல்லை என்று சொன்னார்கள். அப்படி இருந்தாலும் அண்ணா தி.மு.க. ஆட்சி வந்த பிறகு தான் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலத்திற்கு புதிதாக பாசன வசதியை செய்து கொடுத்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே முதல் முதலாக இந்திய ஐரோப்பிய நிதி நிறுவனம் உதவியோடு தமிழ்நாட்டில் பல்வேறு ஏரிகளை நவீனமயமாக்கி பாசன வசதிகளை பெருக்கவும் பன்னாட்டு வளர்ச்சி அமெரிக்க உதவி நிறுவனத்தின் உதவியால் நீர்பாசன மேம்பாட்டு பயிற்சியை பொறியாளர்களுக்கு, அளிக்கவும் நீர்வளத்தை பற்றி அரசுக்கு அறிவுரைகளை வழங்க நீர்வள நிறுவனத்தையும் ஏற்படுத்தி. நீர்பாசனம்



மிகச்சிறப்பாக நடக்க பாடுபடும் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களையும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வளவு நீர்ப் பஞ்சம் இருக்கிறபோது நமக்கு மாற்று யோசனை தெரிவிக்க நல்ல எஞ்சினியர்கள் வேண்டும். தஞ்சைக்கு காவேரி நீர் வரவில்லை என்றால் என்ன செய்யலாம் என்று எஞ்சினியர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டும். காட்டன் பரம்பரையில் வந்தவர்கள், திருமலை பரம்பரையில் வந்தவர்கள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள். வெள்ளம் வந்தது என்று சொன்னால், வெள்ளம் வந்தபிறகு அன்றாட தேவையான அரிசி வேட்டி, புடவை இதர உபகரணங்களைக் கொடுத்து பரிகாரம் காண்பதற்குப் பதிலாக நிரந்தரமாக ஒரு நல்ல வழியைக் கண்டாக வேண்டும். அணைகள் கட்டுவதற்கும் தண்ணீர் கடலுக்கு போய் வீணாகாமல் தடுப்பதற்கு புதிய புதிய வழி முறைகளை ஏற்படுத்தவும், ஏரிகளைத் தூர் எடுப்பதற்கும் நல்ல முறையில் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றுவதற்கும் மத்திய அரசிடம் தமிழக அரசு பல கோடி ரூபாயைக் கேட்க வேண்டும். பல கோடி ரூபாயை மத்திய அரசிடம் பெற்று, நாம் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, அந்தத் திட்டங்களை சிறப்பான முறையில் நிறைவேற்ற வேண்டும்.

சங்க காலத்தில் கூட தமிழ்நாட்டில் குளத்தை எட்டாம் பிறைச் சந்திரனுக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். ஒரு குளத்தில் தண்ணீரை தேக்கி வைத்தால் அதனால் 4 மாதங்களுக்கு பாசனம் முழுமையாக அளிக்க முடியும். அந்த அளவுக்கு இருந்தால் காவேரி நதியிலே கர்நாடக அரசு தண்ணீர் விடவில்லை என்றாலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. பல்வேறு குளங்களில் நீரைத் தேக்கி வைக்க வழிவகை இல்லாமல் இப்போது ஆக்கிரமிப்பு அதிகமாகி, தூர்ந்து போய் இருக்கின்றன

இந்தக் குளங்களிலும், ஏரிகளிலும் தூர் வாரவேண்டும். ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். சிலர் தென்னை, வாழை போன்றவைகளைப் பயிரிட்டு இருக்கிறார்கள். கரைகளில் சில பேர் நெற்பயிர்களை பயிரிட்டிருக்கிறார்கள். சிலர் குடியிருக்கிறார்கள். அதையெல்லாம் தடுப்பதற்கு எந்த அரசியல் கட்சிகளும் தடையாக இல்லை. அப்படி அரசியல் கட்சிகள் தடையாக இல்லாமல் இருக்கும்பொழுது, பொதுப்பணித் துறையினர் அதைச் சார்ந்த என்ஜினியர்கள் துணிந்து அந்த ஆக்கிரமிப்புகளை எல்லாம் ஏன் அகற்றக் கூடாது? இதைப் பொறுத்தவரையில், எல்லா ஆக்கிரமிப்புகளையும் அகற்றி தூர் வாரி, ஏரி குளங்களின் நீளத்தையும் அகலத்தையும் அதிகப்படுத்தியும் ஆழப்படுத்தியும் சீர் செய்ய நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. வி. வி. சுவாமிநாதன்) [1984 ஏப்ரல் 24

வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் முயன்றபோது உலக நிபுணர்கள் அரசிற்கு அறிவுரை வழங்கியிருந்தார்கள். சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டும் என்றால், அதன் கொள்ளளவை அதிகப்படுத்த வேண்டும். கொள்ளளவை அதிகப்படுத்தினாலொழிய கொண்டுபோகக் கூடாது என்ற நிபந்தனையை விதித்திருந்தார்கள். இத்தனை அடி ஆழம் வீராணம் இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். வீராணத்தில் இத்தனை அடி கொள் அளவு இருக்கவேண்டு மென்று அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

விராணத்தைப் போல் இன்றையதினம் செங்கற்பட்டு மாவட்டத்தில், மதுராந்தகம் ஏரியில் தூர் வாரவேண்டும். மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் உகம்சந்த் அவர்கள், அந்த ஏரியை தூர் வார வேண்டிய வேலையை, அரசு எடுத்து, அதற்கு பணம் ஒதுக்கியிருப்பதாக மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டு, அந்த வேலையைத் துரிதமாகச் செய்யவேண்டு மென்று கேட்டிருக்கிறார்கள்,

அதுமட்டுமல்ல, சிதம்பரம் தாலுக்காவில் உள்ள மன்னார் குடி தாலுக்காவில் உள்ள அந்தப் பொதுப்பணித்துறை டிவிஷனை பற்றி நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனோ தெரியவில்லை, அந்தப் பொதுப்பணித்துறையைப் பொறுத்தவரையில், ஆய்வு சப் டிவிஷனை ஏற்படுத்தாமல் இருக்கிறார்கள்.

என்னுடைய புவனகிரி தொகுதியில் மாத்திரம் 25 புதிய நீர்ப்பாசன வாய்க்கால்களை கட்டுவதற்கான திட்டங்கள் நாளது வரையிலும் ஆய்வு செய்ய முடியாமல் இருக்கிறது. காரணம் கேட்டபோது சிதம்பரம் பொதுப்பணித் துறையில் ஆய்வு செய்கின்ற சப் டிவிஷன் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் சிதம்பரம் சப் டிவிஷனில் உள்ள பொறியாளர்களைப் பொறுத்தவரையில், ஓவர்சியர்களாக இருந்தால், இன்ஜினியர் களாக ஆவதற்கும், இன்ஜினியர்களாக இருந்தால் முதுநிலைப் பட்டதாரிகள் ஆவதற்கும் அதை ஒரு உறைவிடமாகப் பயன் படுத்தி வருகிறார்கள்,

நாங்கள் எல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். எங்களுடைய சட்டமன்ற பதவிக் காலம் 5 ஆண்டுகள் தான், இந்த ஐந்து ஆண்டு காலத்திற்குள் நாங்கள் பல தடவை முயற்சித்தும், இந்தத் திட்டங்களுக்காக ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்து, மேலே அனுப்பப்பட முடியாத சூழ்நிலை இருக்கிறது.

குறிஞ்சிப்பாடி பரவனாற்றில் இருகரைக்கும் வெள்ள தடுப்பு சுவர் கட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நானும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும்



1984 ஏப்ரல் 24] (திரு. வி. வி. சாமிநாதன்)

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் பல ஆறுகளில் தடுப்புச் சுவர்களை எழுப்பிக்கொண்டுதான் இருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்திலும் வேறு இடங்களில் கட்டுகிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியில் சிதம்பரம் காட்டுமன்னார் குடி, கடலூர் தாலுக்காவைப் பொறுத்தவரையில் இந்தப் பரவனாறு, வெள்ளாறு ஆகியவைகளைப் பற்றி மாத்திரம் ஏன் கவனிக்கவில்லை என்று தெரியவில்லை. அதற்கான மதிப்பீடு 1981—ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு, தலைமைப் பொறியாள ரால் பரிந்துரை செய்யப்பட்ட பிறகும், தலைமைச் செயலகத் தில் அது முடக்கப்படுமேயானால், அது நல்ல ஜனநாயக மரபு ஆகாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

படிப்படியாக ஆய்வு செய்து, தலைமை பொறியாளர் பரிந்துரை செய்தாலும் செய்யவேண்டியது அவசியம் தான் என்று தெரிந்தபிறகும், பணம் இல்லை என்றாலும் கூட, அடை யாளமாக வேலையை துவங்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கின்ற நேரத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி களின் குரலை எதிரொலிக்கின்ற வகையில், அதற்குப் பரிகாரம் தரப்படவில்லை என்ன செய்வது என்று தெரியவில்லை. இந்த வகையில் சிதம்பரம் பொதுப்பணித் துறையில் ஒரு ஆய்வு சப் டிவிஷனை எற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

என்னுடைய தொகுதியில் சேத்தியாத்தோப்பு அணையைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நிலத் தடி நீர் அங்கே அதிகமாக இருக்கிறது என்று நிலத்தடி நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். மேலும் நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்து அதிகமாக தண்ணீர் வெளியே வருகிறது. நான் அதைப்பற்றி சொன்னவுடன் இரவு என்று கூட பார்க்காமல் ஓடோடி வந்து வெள்ளத்தினால் பாதிக்கப் பட்டு, சேறும் உளையுமாக இருந்த நேரத்தில் கூட பார்வை யிட்ட நீர்பாசன அமைச்சரின் உற்சாகமும், முனைப்பும் அதிகாரி களுக்கும் இருக்கவேண்டும். சேத்தியாத்தோப்பு பகுதிகள் எல்லாம் 3 வருடங்களாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே குடிநீர் இல்லை, குளிப்பதற்கு தண்ணீர் இல்லை. நீர் பாசனத்திற்கும் நீர் இல்லை. நெய்வேலி சுரங்கத்திலிருந்து வளையமாதேவிக்கு வாய்க்கால் வெட்டியிருந்தால், விவசாயத் திற்கு பயன்பட்டிருக்கும். ஆக மூன்று நன்மைகளையும் தரக் கூடிய வாய்க்காலை வெட்டுவதற்கு அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாலாஜா ஏரியிலும் தூர் எடுக்கவேண்டும். சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் கணபதி அவர்கள் தொகுதியில் பொன்னேரியில் தூர் எடுக்கவேண்டும். அதற்குப் பல புல்டோ சர்கள் வேண்டுமென்று பலரும் கேட்டிருக்கிறார்கள். புல்டோ

சர்கள் குறைவாக இருக்கிறது. கடலூர் அலுவலகத்தில் கேட்டால் புல்டோசர்கள் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். எனவே புல்டோசர்களை அதிகமாக வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர் வசதிகளைப் பொறுத்தவரையில், கை போர் செட்டு களை அதிகமாக வைக்கலாம். 40 அடி, 35 அடி ஆழத்திற்கு கை போர் செட்டுக்களை வைத்தால், 3 ஏக்கருக்குக் குறைவாக வைத்திருக்கிற விவசாயிகள் எல்லாம் நீர்ப்பாசனம் செய்யலாம்.

(இரவு 7.00)

ஆனால் அதற்கு தடையிருக்கிறது. ரீ-பைனான்ஸ் இன்ஸ்டிடியூசன் 'நெபாட்' என்கிறார்கள். அவர்கள் ஒரு தடையை வைத்திருக் கிறார்கள். நவாப் காலத்திலே போட்ட ஒரு தடையைப் போல கடலோரத்திலே இருந்து 10 மைல் தொலைவில் எந்த நீர்ப் பாசனத்திற்கும் மோட்டாருக்கும் கடன் வழங்கக்கூடாது என்று ஒரு விசித்திரமான உத்தரவைப் போட்டு இருக்கிறார்கள். தனியாக பணம் இருந்தால். செல்வந்தராக இருந்தால் போட்டுக்கொள்ளலாம். தடை செய்ய யாரும் இல்லை. ஆனால் ஏழைகள், சிறு விவசாயிகள், அவர்கள் போய்க் கேட்டால், கொடுப்பது இல்லை. எனவே அந்த விதியை தயவு செய்து தளர்த்துமாறு கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்ன வென்றால், நேரடியாக பரங்கிப்பேட்டை என்ற கடலோர நகருக்கு 6 மைல் தூரத்திலிருந்து அருமையான நல்ல தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. எங்கே நல்ல தண்ணீர் கிடைக்கிறதோ, அங்கெல்லாம் மோட்டார் வாங்குவதற்கு ஏழைகள், விவசாயி களுக்கு கடன் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. சேத்தியாத்தோப்புக்குப் பக்கத்திலே 101 ஆழ்க்குழாய்க் கிணறுகள் 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு சமுகநலக் கிணறுகள் என்று போட்டு, விவசாயிகள் எத்தனை ஏக்கர் நிலங்க ளுக்குப் பாய்ச்சுகிறார்களோ, அந்த அளவிற்கு கட்டணத்தை வசூல் செய்து பராமரிக்கப்பட்டு வந்த இந்த 101 கம்யூனல் டியூப் வெல்ஸ் அத்தனையும் இப்போது பழுதாகிவிட்டன. சில இயங்கிக் கொண்டு இருக்கின்றன. அங்கே புதிதாகப் போடவேண்டும் என்று சொன்னால், நீங்கள் டியூப் வெல்ஸ் கார்ப்பரேசனை அணுகுங்கள் என்று எழுதுகிறார்கள். டியூப் வெல்ஸ் கார்ப்பரேச னைக் கேட்டால், இது அரிசன மக்களுக்காகத்தான் கொடுக்கி றோம், மற்றவர்களுக்குப் பின்னாலே பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். டியூப் வெல்ஸ் கார்ப்பரேசன் தீர்க்க முடியாத பிரச்சனையை, தயவு செய்து பல்வேறு நல்ல திட்டங் களைக் கொண்டுவந்த தமிழக அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.அரசு, தனியாக, பஞ்சாபில் உள்ளதைப் போல, இர்ரிகேசன் போடு என்று தனியாக, ஒரு வாரியத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக இந்தப் பிரச்சனையைத் தீர்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



எப்படி வாட்டர் போர்டு, மின்சார போர்டு என்று நாம் வைத்து இருக்கிறோமோ, அதைப்போல இர்ரிகேசன் போர்டு என்று வைத்து தமிழ்நாட்டிலே கஜானாவிலே பணம் இல்லை என்று சொன்னால், பல்வேறு வங்கிகளிலேயிருந்து அல்லது உலக ஸ்தாபனங்களிலேயிருந்து, பொது மக்களிடம் இருந்து பணத்தைக் கடன் எழுப்புகிறோமே, அதைப்போல கடனை எழுப்பி பல கோடி ரூபாய்—சுமார் 400 கோடி ரூபாய் செலவு செய்தால் தான் இந்த நீர்வளம் பெருகி, நிலவளம் பெருகிபாசனம் அபி விருத்தியாகும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள் கிறேன்.

எல்லா இன்டஸ்ட்ரியைப் போல, இந்த அக்ரிகல்சரும் ஒரு இன்டஸ்ட்ரி. வேளாண்மையும் இன்டஸ்ட்ரி என்று நாகரீகநாடுகள் ஒத்துக்கொண்ட பிறகு, நாம் தண்ணீரை ரா-மெட்டிரியலாகக் கருத வேண்டும். இதே ஜப்பான் நாட்டிலே நீர் உலோகப் பொருளாக தாதுப்பொருளாக கருதப்படுகிறது. ஜப்பான் நாட்டில் ஒருவர் கிணறு வெட்டவேண்டும் என்று சொன்னால், குழாய் வெட்ட்வேண்டும் என்று சொன்னால் அவர்கள் மைன் இலாகாவைத்தான் அணுகவேண்டும். நகராட்சியை அல்ல. மைன் இலாக்கா பெர்மிசன் கொடுத்தால்தான் கிணற்றை வெட்டலாம். தண்ணீரை அவ்வளவு புனிதமாகக் கருதுகிறார் கள். நம்நாட்டிலே ஒரு காலத்தில் தண்ணீரைப் புனிதமாக கருதினார்கள். ஆனால் இப்போது அலட்சியப்படுத்தப்பட்டு, இன்று ஆபூர்வபொருளாக நமக்கு ஆகிக்கொண்டிருக்கிறது. அந்த முறையிலே இர்ரிகேசன் போர்டு என்று ஒன்றைத் தனி யாக வைத்து, தமிழகத்திற்குத் தேவையான திட்டங்களை நம்முடைய நண்பர் வி. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னதைப் போல, தன்னிறைவுத் திட்டத்திற்காக செலவு செய்ததைப் போல, பெரிய திட்டத்தை 2, 3 ஆண்டுகளில் நிறைவேற்றும்படியாக கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, சேத்தியாத்தோப்பு அணைக்கட்டில் சென்ற ஆண்டு மழை பெய்தபோது, போதிய கொள்அளவு இல்லாத தினால், தண்ணீரை கடலுக்கு அனுப்பிவிட்டார்கள். சேத்தியா தோப்பு அணை சோழர் காலத்திலே கட்டப்பட்டது. கல்லணை சோழர் காலத்திலே கட்டப்பட்டது. அதுவும்—எந்த நோக்கத்தில் அந்தக் காலத்தில், எத்தனை ஏக்கர் நிலங்களின் பாசனத்திற் காகத் தேவைப்படும் என்று கருதி, அதற்குத் தகுந்தவாறு திட்டம்போட்டு கட்டியிருக்கிறார்கள். அதைப்போல நம்முடைய பொறியாளர்கள், நிபுணர்கள் இந்த யுகத்தில் வளரும் மக்கள் தொகை, நீர்பாசனத்திற்கு ஏற்றபடி கொள் அளவைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அணைகளில் அதிகமான அளவிலே தண்ணீரைத் தேக்க திட்டம் தீட்டினால் நீர்ப்பாசனத்திற்கு அவைகள் பயன் படும். ஏனென்றால் சேத்தியாதோப்பு நீர்ப்பாசனத்திற்காக அதிக ணம் கட்டுகிறோம் என்று 1944-ல் விவசாயிகளெல்லாம் ஒத்துக் கொண்டு, அரசே ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறது ஜி.ஒ. எம்.எஸ். நெம்பர் 3084, தேதி 17-11-1944, இதன் பிரகாரம் காவேரியிலிருந்து வருகிற நீரை வீராணம் வழியாக, சேத்தியாத்

தோப்பு அணைக்குக்கொண்டு வந்து, வெள்ளாற்றின் வழியாக
வாலாஜா ஏரி, பெருமாள் ஏரி வரையில் தண்ணீர் பாய்ச்ச
வேண்டும். ஆனால் நடைமுறையில் இது இல்லை. ஏதோ
கொள்ளிடம் கீழ் அணை என்ற பெயரால் காவேரியின் நீர் தான்
சிதம்பரம் தாலுக்கா, மன்னார்குடி தாலுக்கா, குறிஞ்சிப்பாடி
தாலுக்கா போன்ற இடங்களுக்கு வருகிறது என்பது மறைக்கப்
பட்டு காவிரிப் படுகையை வளப்படுத்துகிறபோது, அதை
நவீனப் படுத்துகிறபோது மேட்டூர் அணைக்கு முன்பு, தோற்று
விக்கப்பட்ட சேத்தியாத் தோப்பு, வீராணம் போன்ற ஏரிகளில்
இருந்து போகின்ற வாய்க்கால்களை நவீனப்படுத்தவும் அரசு
முயற்சிக்கவேண்டும். இதைப்பொறுத்தவரையில் சேத்தியாத்
தோப்பு அணைக்கட்டு வீராணம், வடவாறு போன்ற வாய்க்
கால்களை நவீனப்படுத்தவேண்டும் என்று தலைமைப் பொறி
யாளர் பரிந்துரை செய்தும், அதுவும் தலைமை அலுவலகத்திலே
முடக்கப்பட்டு இருக்கிறது. பொறியியல் வல்லுநர்கள்,
தலைமைப்பொறியாளர் வரையில் ஆலோசித்து, திட்டமிட்டு,
ஆய்வு செய்து பரிந்துரை அனுப்பிய பிறகும் அதைத் தடை
செய்தால், அதனால் விவசாயிகள் தான் பாதிப்பார்கள்
என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.
இன்னொரு அபாயம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.
தற்போது நீர்பாசன வாய்க்கால்களிலும், குளங்களிலும் ஆகாசத்
தாமரை, ஆடாதளை என்ற செடிகள் படர்வதாக, குறிப்பாக
எங்கள் ஊர் பக்கம்......

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறு
நீர்ப்பாசனம் என்பதற்குப் பதிலாக, சிறு பாசனம் என்று
சொல்லும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: இந்த மாதிரி, குளத்திலேயும்
வாய்க்கால்களிலேயும் நெய்வேலி ஆடு தொடை அல்லது
ஆகாசத் தாமரை என்ற பெயரில் இந்த வகைச் செடிகள்
படர்ந்திருக்கின்றன. அதைத் தொடர்ந்து பரவாமல் தடுக்க
வேண்டிய முயற்சிகளை எவ்வளவோ உள்ளூர்க்காரர்கள் எடுந்
தாலும் அவ்வளவும் மீண்டும் மீண்டும் வளர்ந்துக் கொண்டே
யிருக்கின்றன. தயவுசெய்து மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை
அமைச்சர் அவர்கள் நல்ல விஞ்ஞானிகளை, ஆராய்ச்சியாளர்
களை கலந்து அதை அடியோடு வளராமல் தடுப்பதற்கு என்ன
வழி என்று கண்டு பிடிக்க வேண்டும். அவைகள் நீர்ப்பாசன
வாய்க்கால்கள் வழியாக படர்ந்து கொண்டே போய் வயல்
களிலேயும் பரவுகிறது, எங்கள் பகுதி சிதம்பரம், காட்டு
மன்னார் கோயில் தாலூக்காக்களில் அப்படிப்பட்ட நிலைமை
இருக்கிறது. அப்படி வயல்களிலே பரவி பாரசைட்ஸ் என்று
சொல்லக்கூடிய ஒரு தொத்துநோய் போல பரவி விவசாயிகளை
பெரிதும் பாதிக்கிறது. ஆகவே இதையும் மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு, காவிரி படுகை பக்கத்தில் வடிமுனைக் குழாய்களை
வைத்திருக்கிறார்கள். தஞ்சை தரணியில் நீர் வளம் நில வளம்
எப்படியோ அப்படித்தான் காட்டுமன்னார் கோயில் பகுதியும்





இருக்கிறது. ஆகவே தஞ்சையிலே காவிரி படுகையிலே
வடிமுனை குழாய்களை அமைத்து இருப்பதைப் போல்,
சிதம்பரம் காட்டுமன்னார் கோயில் தாலுக்காவிலும் வடிமுனை
குழாய்கள் இறக்கப்பட்டு பம்பு செட்டும் மின் இணைப்பும்
ஒரே நேரத்தில் கொடுப்பதற்கு மாண்புமிகு நீர்ப்
பாசனத்துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்கவேண்டும்
என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரி
வித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. உ. சுப்பிரமணியன் மாண்புமிகு துணைத்தலைவர்
அவர்களே, நாட்டு மக்களுக்கு மிகவும் அதிகமாக உணவை
உற்பத்தி செய்ய உதவும் இந்த இலாகாவிற்கு ஒதுக்கப்பட்டிருக்
கிற தொகை மிகவும் குறைவு என்ற கருத்தை நானும் சொல்
கிறேன். எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்களும் சொல்லியிருக்
கிறார்கள். ஆகவே, வளரும் ஜனத்தொகைக்கு தேவையான
உணவு எவ்வளவு அதிகமாக இருக்கிறது என்பதை கணக்கிட்டுப்
பார்ப்போமேயானால் நம்முடைய திட்டங்களை பல்வேறு
வகையிலே, உணவு உற்பத்தியை பெருக்குவதற்கான முறை
யிலே முயற்சிகளிலே நாம் ஈடுபட வேண்டும். அதற்கு இந்த
இலாகாதான் முக்கியமான பொறுப்பாக இருக்கிற காரணத்தால்
இதற்கு அதிகமான அளவுக்கு பண ஒதுக்கீடு செய்யவேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் சுவாமிநாதன் அவர்கள் சொல்லியது
போல, அதற்கு தனி வாரியம் ஏற்படுத்தினாலும் நல்லது.
அல்லது அரசாங்கத்திலே பல்வேறு திட்டங்களை அன்-புரொடக்
டிவ்' என்று உற்பத்தியாகாத நல்ல திட்டங்களை அந்த வகை
யில் மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய திட்டங்கள் பல இருக்
கின்றன—அப்படி செலவழிக்கக்கூடிய இனங்களை குறைத்துக்
கொண்டு, ஒரு சில ஆண்டுகளுக்காவது, இதற்கு முக்கியத்
துவம் கொடுத்து, அதிகப்படியான பணத்தை செலவழித்தால்,
நம்முடைய நாட்டினுடைய மிகப் பெரிய தண்ணீர் தேவை
ஓரளவிற்கு பூர்த்தி செய்யப்படும் என்று கருதுகிறேன்.

அடுத்து நீங்கள் கொடுத்திருக்கிற குறிப்பிலேயே தமிழ்
நாட்டில் நிலநீர் வளத்தில் 90விழுக்காட்டிற்கு மேல் உபயோகப்
படுத்தப்பட்டு விட்டதால் எஞ்சிய நீர் வளத்தை உபயோகிக்க
பெரிய பாசன திட்டங்களுக்கு இனி அதிக வாய்ப்பில்லை.
எனவே தற்போதைய பாசன முறைகளில் நீரை சிக்கனமாக
உபயோகித்துச் சேமிக்கத் திட்டமிட வேண்டியதாகிறது.
தற்போதைய பாசன முறைகளை நவீனப்படுத்துவதின்
மூலம் இவ்வாறு சேமிக்கும் நீரைக்கொண்டு அதிகப்படியான
பரப்பிற்கு பாசன வசதியளிக்க முடியும் என்று மிக அழகாக
இன்றைய நிலைமையை எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள்.

இந்த நிலைக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று
எல்லோரும் ஒரு பரிசீலனை செய்ய வேண்டிய நிலையில் இருக்
கிறோம். ஏனென்றால், நமக்கிருக்கிற அத்தனை நிலநீர் வசதி
களையும் 90சதவீதம் பூர்த்தியடைந்திருக்கக்கூடிய நிலைமையிலே
நமக்குக் கிடைக்கக்கூடிய உபரி தண்ணீரே அண்டை மாநிலங்
களான கேரளத்திலிருந்தும், கர்நாடகத்திலிருந்தும் தான். அதற்கு
அங்கேயுள்ள அரசியல் பிரச்னை குறுக்கிடுகிறது.

நாம் எத்தனைதான் பேசினாலும் அந்தந்த மாநிலப் பகுதியிலுள்ள மக்கள், அவர்களுக்குள்ள உணர்வுகளை வெளியிடுகிற காரணத்தால், அங்கே பொறுப்பிலே உள்ள அரசாங்கம் எந்தக் கட்சி ஆட்சியிலே வந்தாலும் கூட அவர்கள் தங்களுடைய பலத்தை அங்கே காப்பாற்றிக் கொள்வதற்கான முறையில்தான் இந்தப் பிரச்னையை அணுகுகிறார்கள். இங்கே நாம் நம்முடைய உணர்வுகளை அதிகமாக வெளிப்படுத்தினால், உடனடியாக அதற்கு பதில் கொடுக்கிற வகையில்தான் அங்கே கூக்குரல்களை எழுப்புகிறார்கள் என்ற வகையிலே தான் பல ஆண்டுக்காலமாக அந்த திட்டங்கள் தடைபட்டு வருகின்றன. ஆகவே டிப்ளோமேட்டிக்காக என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அதுபோல, நாசூக்காகவும், சாகசத்தோடும் இந்தப் பிரச்னையை முடிக்க நாம் அணுக வேண்டுமே அல்லாது, வீரதீரத்தோடு பேசுவதால் மட்டும் தீராது என்று கருதுகிறேன். அந்த வகையில் முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளை நான் பாராட்டுகிறேன்;

(இரவு 7–10)

அடுத்து மகாநதி, கோதாவரி போன்ற நதிகளுடைய உபரி நீரை இங்கே கொண்டுவர வேண்டும் என்று சொல்வது மிக அற்புதமான திட்டம் தான். ஆனால் நீண்ட தூரம் இருக்கின்ற காரணத்தினாலே தற்சமயம் அதற்கு ஏற்படுகின்ற செலவினங்களைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இது செயல்பட முடியாத திட்டமோ என்று கூட நாம் நினைக்க வேண்டி இருக்கிறது. ஆனால் எப்படியும், நீண்டகால பார்வையோடு பார்க்கும் போது, இந்த தண்ணீர் வரவேண்டும், வேறு வழியில்லை என்ற நிலையிலே, இதை கொண்டுவருவதற்கான முயற்சியில் அரசாங்கம் தொடர்ந்து ஈடுபடவேண்டும். அதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்ய வேண்டும். ஏனென்றால் அந்த காலத்திலேயே பகீரதன் கூட கங்கையைக் கொண்டு வருவதற்கு, ஒன்று இரண்டு நாட்களிலே வரங்கள் பெற்றோ அல்லது தெய்வீக சக்தியின் மூலமாகவோ செய்யக் கூடிய அந்த புராண இதிகாச காலங்களில் கூட, எவ்வளவோ பல ஆண்டுகள் கழித்துத்தான் கொண்டுவந்தான். இப்போழுது கூட பகீரத பிரயத்தனம் என்று சொல்கிறார்கள், அந்த அளவிலே, காவேரி பிரயத்தனம், கங்கை பிரயத்தனம், கோதாவரி பிரயத்தனம் என்று நீங்கள் பாடுபட வேண்டும். முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பலன் உடனடியாக கிடைக்காமல் இருந்தால் கூட முயற்சியில் தளர்ந்து விடக் கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். இப்பொது இருக்கின்ற நிலங்களில் அதிகமாக விவசாயம் ஆகிறது அதற்கு ஏற்படும் அதிகப்படியான தேவையை பூர்த்தி செய்வதற்கு இருக்கிற வசதி வாய்ப்புக்களை எப்படி பயன்படுத்த வேண்டுமென்று சிந்திக்கவேண்டும். அப்படிச் சிந்திக்கும் போது இப்போது, மதுரை மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் அமுல் செய்யப்படுகின்ற வைகை, பெரியார்





மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக செய்யப்படுகின்ற அந்த வேலைகளின் காரணமாக சுமார் 50 ஆயிரம் ஏக்கருக்கு, அதிகமாக இருக்கின்ற தண்ணீரை கூடுதலான விஸ்த்திரணத்திற்கு, பாசனத்திற்கு பயன்படுத்த வசதி ஏற்பட்டிருக்கிறது என்பது அனுபவபூர்வமான உண்மை. இதனை அரசாங்கமும், துறையினரும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அதைப்போல பூமிக்குள்ளே ஸீ பேஜ் என்று சொல்லக்கூடிய வீணாகின்ற தண்ணீரை மீதப்படுத்துவதன் மூலமாக ஒரு சின்ன அணை மூலமாக 50 ஆயிரம் ஏக்கருக்கு நாம் அதிகப்படி பாசனத்தை கொண்டு வருவோமானால் தமிழ்நாட்டில் உள்ள அத்தனை பகுதிகளிலும், இம்மாதிரி திட்டத்தை நாம் அமுலுக்கு கொண்டு வருவோமானால், நமக்கிருக்கின்ற தண்ணீரை அதிகப்படியான நிலங்களுக்கு பாய்ச்சக்கூடிய வசதி இருக்கிறது. இப்பொழுது கூட மதுரை மாவட்டத்திலே பல இடங்களில் பார்க்கிறேன். தஞ்சை நிலங்களில் இருக்கிற வாய்க்கால்களில், ஃபீல்டு போத்தீஸ் என்று சொல்லக்கூடிய, கல்கட்டு கட்டி சிமெண்ட் மூலம் ப்ளாஸ்டர் பண்ணி தண்ணீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல், கண்மாயிலிருந்து திறந்து விட்டால் நேரே வயலுக்குச் செல்லுகின்ற வகையில், எந்தவித சேதாரமும் இன்றி பாய்கின்றக் காரணத்தால், அந்த அதிகமானத் தண்ணீரை மீதப்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே இதனை தமிழ்நாடு முழுவதும் உள்ள இடத்திற்கு அமுல் செய்யலாம். செலவு அதிகமாக ஏற்படும் என்றாலும் கூட, அதனை அந்தந்த பாசன பலன் பெறுகின்ற விவசாயிகள்சார்பில் கடனாக செலுத்தி செலவு செய்து, பின்னர் அவர்களிடமிருந்து கூட நீண்டகாலத் தவணையிலே பணத்தை பெற்றுக் கொள்ளலாம். இப்பொழுது கூட சாயில் கன்சர்வேஷன் ஸ்கீம் என்று விவசாயிகள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், ஆங்காங்கே ஆணைகள் போடப்பட்டு அதற்குரிய செலவுகளை, விவசாயிகளிடமிருந்து பல ஆண்டுகள் தவணை மூலமாக வாங்கிக் கொள்வது போன்று இதனையும் வாங்கினால், உடனடியாக, அதிகப்படியான நீரை மிச்சப்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

இப்பொழுது பல்வேறு விதமான மராமத்து வேலைகள் எல்லாம் வெள்ள நிவாரணம், வறட்சி நிவாரணம் போன்ற திட்டங்கள் மூலமாக நடைபெறுகிறது. ஆனால் அது மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற பிரதான அம்சத்தை வைத்து மேற்கொள்ளப்படுவதனால், அவசர கோலமாக நடைபெறுகிறது.

மேலும், நாம் செலவு செய்கின்ற பணம் அத்தனையும், முழுமையாக பயன்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதை தவிர்ப்பதற்கான முயற்சியிலே, நாம் ஈடுபட வேண்டும். ஏனென்றால், பயன் உள்ள வகையில் செலவு செய்யப்படுகின்ற

பணம் விரயம் ஆவதை நாம் பார்க்கிறோம். இப்பொழுது கூட நண்பர் ராஜமாணிக்கம் பேசிய போது, நடைமுறையிலே ஆங்காங்கு உள்ள சில குறைபாடுகளைச் சொன்னார்கள். அதனை தைரியமாக வெளியிட்டதற்காக பாராட்டுகிறேன். இவ்வாறு பல இடங்களில் இருக்கிறது. நாமினேஷன் முறையில் கொடுக்கின்றது ஆயக்கட்டு தாரர்களுக்கு கொடுக்கின்றது என்ற உன்னதமான நோக்கத்தோடு அரசாங்கம் நடத்தினாலும் கூட நடைமுறையிலே தவறுதலாக பயன்படுத்தப்படுகிறது என்ற உண்மை எல்லோருக்கும் தெரியும். ஏதோ அந்தக் கிராமத்தில் உள்ள ஆயக்கட்டுதாரர்களுக்கு தாட்சண்யமாகவோ, அல்லது கொஞ்சம் பணம் கொடுத்தோ, கையெழுத்து வாங்கி அவர் பெயரில். வேறு எங்கிருந்து யாரோ செய்கின்ற காரணத்தினால் சரியானபடி செயல்படுத்த முடியவில்லை. ஆங்காங்கே செல்வாக்கு உள்ளவர்கள், தங்களுடைய செல்வாக்கை பயன்படுத்தி, அதிகாரிகளை பயன்படுத்தி, வேலைகளை எடுத்து செய்வதனால் அவர்கள் செய்கின்ற வேலை தரம் இல்லாமல் இருக்கின்றது. கிட்டத்தட்ட 100-க்கு 30 சதவிகிதம்கூட பணம் பயன் உள்ள வகையிலே செலவிடப்படவில்லை என்ற உண்மையை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆகவே எந்தக் காரணத்தைக் கொண்டும் நாமிநேஷன் முறையில் விடாமல் ஏற்கனவே நடைமுறையில் இருந்த டெண்டர் முறை மூலம் விடுகிற நிலைமை ஏற்படுமானால் நிச்சயமாக பலன் ஏற்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமங்களிலே சொல்வோம், சில்லரையை மாற்றி சூறை விடுவது என்று, அந்த ஆங்காங்கே உள்ளவர்கள் பொறுக்கிக் கொள்வார்கள். அதைப்போல அரசாங்கமும் கோடி கோடியாகப் பணத்தைச் செலவு செய்தாலும் கூட கோயில் வாசலிலே சில்லரையை சூறை விடுவது மாதிரி இருக்கிறதே தவிர பலனுள்ள வகையிலே நாம் அதைக் காணமுடியவில்லை.

இப்போது செய்யப்படுகிற வேலைகளில் முக்கியமாக எடுத்துக் கொள்வது கரைகளைப் பலப்படுத்துவது என்பது 'Strengthening of bunds' என்ற வகையிலே செய்யப்படுவது. நீர்ப்பாசனத் துறை கன்சல்டேடிவ் கமிட்டியிலே அமைச்சரிடத்திலே நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். கரைகளைப் பலப்படுத்துவதால் அதன் கொள்ளளவு உயராது என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். கண்மாய்களில் டிசில்ட் செய்து, ஏற்கெனவே இருக்கிற சேற்றை வாரி எடுத்தால் தான், கொள்ளளவை அதிகப்படுத்த முடியும். கண்மாய்களை ஆழப்படுத்துவதும் அப்படி தூர் வாருகிற மண்ணை எடுத்துப் போட்டு கரைகளைப் பலப்படுத்துவதும் என்ற நோக்கத்தோடு தான் அந்த கரைகளைப் பலப்படுத்துகின்ற வேலை இருக்க வேண்டுமே தவிர கரைகளைப் பலப்படுத்துவது என்ற ஒரே நோக்கத்திற்காக இது இருக்குமானால் ஏதோ அந்த லெவலை சரி செய்து அழகாக காட்சியளிக்கும்படி இருக்குமே தவிர கூடுதலாக தண்ணீர் கொள்கிறதா என்று பார்த்தால் இல்லை என்ற நிலைமை தான் வரும்.



இராமநாதபுரம் போன்ற வறண்ட பகுதிகளிலே ஆண்டுக்கு 23 இஞ்ச் மழைகூட கிடைப்பதில்லை என்ற நிலைமை இருக்கிற போது, அந்த மழையினாலே கிடைக்கிற தண்ணீரைக்கூட தேக்கிவைப்பதற்கு கண்மாய்கள்தான் இருக்கின்றனவே தவிர வேறு வழியில்லை. ஆகவே கொள்ளளவை அதிகப்படுத்தி, தண்ணீரைத் தேக்கிவைக்கக் கூடிய முறையிலே கண்மாய்களை ஆழப்படுத்த வேண்டும். இந்தப் பணிக்காக நாம் அதிகமாக மனித சக்தியைப் பயன்படுத்துகின்ற நிலமைகள் இருந்தாலும் கூட பெரிய இயந்திரங்களை 'earth movers' வைத்து தூர் வாருகிற நிலைமைகளை செய்ய வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்திலே ராஜசிங்கமங்கலம் கண்மாய், காணூர் கண்மாய் பெரிய கண்மாய்களாக இருக்கின்றன. அவைகளில் தூர் எடுப்பதற்கு —— அவைகளுக்கு டாப் பிரையாரிடி கொடுத்து முன்னுரிமை கொடுத்து —— இயந்திரங்களைப் பயன்படுத்தினால்தான் வேகமாக செய்ய முடியும், அதே நேரத்தில் பெரிய கண்மாய்களுக்கு எல்லாம் அப்படிப்பட்ட பெரிய இயந்திரங்களை பயன் படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஆங்காங்கு சிறு ஆறுகள் போகிற நேரத்திலே பெரு மழையின் காரணமாக அல்லது மான்சூன் சமயத்திலே தண்ணீர் இறுதியாக கடலில் சென்று வீணாகக் கலப்பதைப் பார்க்கிறோம். ஆகவே அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய முறையிலே ஆங்காங்கு தடுப்பு அணைகளைக் கட்டுவோமானால் அந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய நிலமையில் பலன் ஏற்படும்.

இப்போது பாசனத்திற்காக காவிரித் தண்ணீர் மூலம் கிடைக்கக்கூடிய வசதி நமக்குப் பாதிக்கப்படுகிறது, அதற்கு கபினி, ஹேமாவதி அணைத் திட்டங்கள் தான் என்று மட்டும் சொன்னார்கள். கர்நாடக மாநிலத்திலே இயற்கையாகவே மேடும் பள்ளமுமாக இருக்கிற பூமியாக இருப்பதால் ஆங்காங்கே சில இடங்களில் அணைகள் கட்டி காவிரியாற்றிற்கும், கபினி ஆற்றிற்கும் வரக்கூடிய தண்ணீரைத் தேக்குவதன் மூலமாக கிருஷ்ணராஜ சாகருக்கு வரக்கூடிய அந்தத் தண்ணீரே அங்கே வருவதில்லை என்ற உண்மை இருக்கிறது. ஆகவே நாம் வேறு யாருக்கும் செல்கிற தண்ணீரைத் தடுக்காவிட்டாலும் நமக்கு வறட்சியாக இருக்கக்கூடிய காலத்திலே கிடைக்கக்கூடிய வகையிலே கசிவு நீர்க்குட்டைகளிலே தண்ணீரைத் தேக்குவதன் மூலம் கிணற்றுக்கு ஊற்றுக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதால், எங்கெங்கு சாத்தியமோ ஆங்காங்கு சிறு சிறு அணைகளைக் கட்டவேண்டும். மேலும் பல இடங்களிலே தண்ணீர் வாய்க்கால்கள் மூலமாக கண்மாய்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. காலங்காலமாக தண்ணீர் பாய்கின்ற காரணத்தினால் பெரு வெள்ளத்தாலே மண்ணும் அடித்துச் செல்லப்பட்டு நீரோட்டம் காரணமாக லெவல் குறைந்துவிடுகிறது. சேனல் உயரமாக இருக்கிற காரணத்தினாலே தண்ணீர் ஏறித் பாய்வதில்லை. ஆகவே வெறும் தண்ணீர் வந்தாலும்

கூட நீரினால் பயன்பெற முடியாத நிலைமை இருக்கிற காரணத்தினால், ஆங்காங்கே தடுப்பு சுவர்மாதிரி கட்டி அந்த லெவல் குறையாமல் மாமூலாக பாயக்கூடிய கண்மாய்களுக்கு செல்லும்வகையில் அமைத்துக் கொடுத்தால் பல கண்மாய்கள் பலன் அடையும், வறட்சியைத் தாங்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வைகை பெரியார் திட்டத்தைப் பொறுத்தவரையில் எங்கள் பகுதியில் அரசாங்கம் பெரிய மனதோடு சுமார் 15 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நன்றிசெலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனாலும்கூட சிறிய குறை உண்டு. ஏற்கெனவே திட்டத்தில் உள்ள பகுதியில் ஒரு குறிப்பிட்ட 2 ஆயிரம் ஹெக்டேர் அளவுக்கு விடுபட்டு போய் இருக்கிறது என்று அமைச்சரிடமும் அதிகாரி களிடமும் சொல்லியிருக்கிறேன். அதை எப்படியும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 7–20)

ஏன் என்றால், சிவகங்கை பகுதியில் ஏற்கெனவே ஜமீன்தாரி காலத்தில் வெள்ளைக்காரர்களுக்கு லீஸ் கொடுக்கப்பட்டு இருந்த நேரத்தில் அப்போது லீஸ்தாரராக இருந்த ஷீல்டு என்ற வெள்ளைக்காரன் பெயரால் ஒரு கால்வாய் அங்கே ஷீல்டு கால் வாய் என்று வெட்டப்பட்டு 2 கால்வாய்கள் மூலமும் பெரிய ஆற்றின் தண்ணீர் பெருகி வருகின்ற காலத்தில் அந்தத் தண்ணீரை பயன்படுத்தி சிவகங்கையில் மழை ஜமீன் பகுதியில் நீர் பாசனத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. அந்தப் பகுதி முழுமைக்கும் இப்போது நான் கேட்கிறேன். அதிலே 15 ஆயிரம் ஏக்கர் கொடுத்து இருக்கிறீர்கள். இன்னும் சற்று 4 ஆயிரத் திற்கும் கொஞ்சம் அதிகமான ஏக்கருக்கு பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதில் சில பகுதிகளில் இப்போது மெயின் கேனல்களுக்கு எல்லாம் சிமெண்டு லைனிங் போட்டுக் கொடுத்து இருக்கிறார்கள். மகிழ்ச்சி. ஆனால் சில பகுதிகளில் இன்னும் எடுக்கப்படாத பகுதிகளில் கண்மாய் டு கண்மாய் என்ற முறையில் பாசன வசதி கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அதன் மூலம் பல்வேறு சிக்கல்கள் இருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏன் என்றால் இப்போது நாம் கர்நாடகத்துக்காரர்கள் தண்ணீர் விடவில்லை, கேரளத்துக் காரர்கள் தண்ணீர் விடவில்லை. அதற்கு மேலே இருப்பவர்கள் தண்ணீர் விடவில்லை என்ற குறையை சொல்லிக் கொண்டு இருக்கிற நேரத்தில் கிராமப்புறங்களில் கீழே உள்ள கண்மாய்க் காரர்கள் மேலே உள்ள கண்மாய்க்காரர்கள் ஆயக்கட்டுக் காரர்கள், தங்களுக்கு தண்ணீர் விடுவது இல்லை. அதன் மூலம் பல்வேறு விதமான சண்டை சச்சரவுகள் ஏற்படுகிற நிலை எல்லாம் நாம் பார்க்கிறோம். இதனால் லா அண்டு ஆர்டர்



புராப்ளம் வருகிறது. இதை தடுப்பதற்கு இப்போது கண்மாய்கள் மூலம் கொடுப்பதன் மூலமாக ஒரு கண்மாய் நிரம்பி அதற்கு பிறகு அடுத்த கண்மாய்க்கு கொடுக்க முடியும். அதுவரை இவர்கள் காத்திருக்க வேண்டும். அப்படி கொடுக்கின்ற நேரத்தில் கூட எங்களுடைய கண்மாயில் தண்ணீர் வற்றி விட்டது ஆகவே நாங்கள் உடனே நிறுத்திவிடுகிறோம் என்று சொல்லி கிராம மக்களே தடுத்து நிறுத்தக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், அங்கே கலவரம் மூளக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே தயவுசெய்து கண்மாய் டு கண்மாய் என்ற நிலையை மாற்றி நேரிடையாக ஒவ்வொரு கண்மாய்க்கும் கேனால் மூலமாக, கால்வாய் மூலமாக பாசன வசதி கொடுக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்னால் இருந்த நீர்ப்பாசத் துறை அமைச்சர் அவர்கள் ஸ்டேட் லெவலில் கன்சல்டேட்டீவ் கமிட்டி ஒன்றை அமைத்து, சில கூட்டங்களை நடத்தினார்கள். இப்போதும் வந்து இருக்கிற. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒரு கூட்டத்தை நடத்தினார்கள். அந்த கூட்டத்தின் மூலமாக பல்வெறு விதமான பலன்கள் கிட்டியது என்று நாம் கருதுகிறோம். ஏன் என்றால், இங்கு மொத்தத்தில் பல கருத்துகளை சொல்வதை விட அங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு சம்பந்தப்பட்ட பெரிய அதிகாரிகளும், நிர்வாகிகளும் இருக்கிற இடத்திலேயே நாங்கள் எடுத்துச் சொல்லக்கூடிய பல பிரச்சினைகளை அவர்கள் அங்கேயே தீர்வு காணுகிறார்கள். அல்லது அடுத்த கூட்டத்திற்கு அதைப்பற்றி விவரத்தை ஆய்ந்து சொல்கிறோம் என்ற முறையில் செய்தார்கள். அது நல்ல பலன் அளிக்கின்ற வகையில் இருக்கின்ற காரணத் தினால், அடிக்கடி ஆண்டுக்கு 2 முறையாவது கட்டாயம் நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலையில் ஜில்லாவில் நடத்தக்கூடிய நீர்ப்பாசன கருத்தரங்கு என்று சொல்லி 4 முறை எங்கள் மாவட்டத்தில் ஏற்பாடு செய்து 4 முறையும் ஏதோ ஒரு காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டது. தயவு செய்து இந்த கூட்டத்தொடர் முடிந்த பிறகு மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் உடனடியாக வந்து எங்களுக்கு அந்த கருத்தரங்கின் மூல மாக பலன் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகின்ற காரணத் தினால் அதை நடத்துமாறு உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

கசிவு நீர் குட்டைகளைப் பற்றி விரிவாக சொல்லப்படுகிறது. கசிவு நீர் குட்டைகள் எவ்வளவு அவசியம் என்று அந்தக் காலத் திலேயே ஆங்காங்கே கிராமப் பகுதிகளில் கண்மாய்கள் பகுதிகளில் சிறு சிறு குட்டைகள் இருந்தன. அது அவசியமாக இருந்தது. அது சாதாரண காலத்தில் கால்நடைகளுக்கு குடிநீருக்கு உதவியது. ஆனால் தண்ணீர் பற்றாகுறையான காலத்தில் அந்த தண்ணீரை இறைத்து விளை நிலங்களுக்கு கொண்டு வரக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்தது. ஆனால் இப்போது தற்சமயம் உள்ள சமுதாய அமைப்பில் நலிந்த பிரிவினருக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்ற காரணத்தினால் அந்த குட்டைகளை கூட பட்டா போட்டுக் கொடுத்து இருக்கிறார்கள். அங்கே

குட்டைகளில் தண்ணீர் தேங்கக்கூடிய நிலை மாறி அது நஞ்சை நிலமாக மாறி விடுகின்ற காரணத்தினால் அங்கு இருக்கின்ற கசிவு நீர் குட்டைகள் என்ற வகையில் அந்த குட்டைகள் ஒழிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே இதுவரை கொடுக்கப்பட்டு இருந்தாலும் கூட இனியாவது அந்த மாதிரி குட்டைகளை பட்டா போட்டுக், கொடுக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் கொடுத்துள்ள குறிப்பில் தமிழ் புத்தகத்தில் 30-வது பக்கத்தில் ஸ்டேட்மெண்டு 1-ல் 5 லட்சம் அதற்கு மேற்பட்ட செலவில் நிறைவேற்றப் பட்டு வரும் சிறு பாசன திட்டங்களின் வரிசையில் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை இராமநாதபுரம் மாவட்டம் இடம் பெறாதது எனக்கு மிகவும் ஆச்சரியமாக உள்ளது. ஏன் என்றால், கண்மாய்கள் அதிகமான எண்ணிக்கையில் இருக்கின்ற, கண்மாய்களை முழுமையாக நம்பி இருக்கின்ற ஒரு மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம். அந்த மாவட்டத்தில் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட கண்மாய்களை மராமத்து செய்கின்ற திட்டம் இல்லையா? அது ஏன் விடப்பட்டது? எப்படி என்று தெரியவில்லை. அது கவனக் குறைவாக விடப்பட்டிருந்தாலும், அந்த மாவட்டத்தில் உள்ள சில கண்மாய்களைக் கண்டிப்பாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டிசில்டிங் கம் ரெக்ளமேஷன் ஆப் இர்ரிகேஷன் டேங்க்ஸ் என்று அந்தத்திட்டத்திலே தூர் எடுக்கும் பணிகளைச் செய்வதோடு கூட, பாசன ஏரிகளின் கொள்ளளவை உயர்த்த வேண்டும். கொள்ளளவை உயர்த்தினால் மட்டும் போதாது. பலயிடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்ற வேண்டும்.

குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திலே உள்ள ஆயக்கட்டு நிலங்களிலே விவசாயம் செய்கின்ற பொழுது, கேச்மென்ட் ஏரியாவில் ஆண்டுக்காண்டு பிரச்னைகள் எழுகின்றன. முன்பு இப்படிப்பட்ட பிரச்னைகள் எழுந்த நேரத்தில், இராமநாதபுரம் இராஜா அவர்கள் இருந்துவந்த காலத்தில், தீர்வு காணாமல் இருந்த பிரச்னைக்கு ஓரளவிற்கு தீர்வு காணப்பட்டது அதாவது, உள்வாயிலிலே ஆக்கிரமப்புகள் செய்யப்படுவதால் நீரின் கொள்ளளவு பாதிக்கப்படுகிறது என்று ஜமீன் காலத்தில், ஒரு கண்மாயின் நீர்ப் பரப்பு கேச்மெண்ட் ஏரியாவில் இத்தனை என்று நிர்ணயித்து, அதற்கு உரிய அளவிலேதான் ஆயக்கட்டு நஞ்சை நிலம் நிர்ணயிக்கப்பட்டது. ஏனென்றால், இத்தனை ஏக்கர் நிலப்பரப்பிற்கு இவ்வளவு தண்ணீர் இருக்க வேண்டுமென்று முறையில் செய்யப்பட்டது. ஆனால், இப்பொழுது பல்வேறு காரணங்களினால் விவசாய நிலம் பிரிக்கப்பட்டதால் கேச்மென்ட் ஏரியாவை ஆக்கிரமித்திருப்பதால், விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, ஏற்கனவே சட்டவிரோதமாக உள்ள அகற்றுவதோடு, புதிய ஆக்கிரமிப்புகளையும் ஆக்கிரமிப்புகளை செய்யக் கூடாது என்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் சில



சந்தர்ப்பங்களில் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு இந்த இலாக்காவிற்கு அதிகாரம் இல்லை என்று சொல்லப்படுகிறது. சாதாரணமாக ஒரு பெட்டிக் கடை வைத்திருக்கின்ற இடத்தில் ஒரு சிறிய தட்டி வெளியே நீட்டிக் கொண்டிருந்தால்கூட, அதை என்க்ரோச்மென்ட் என்று சொல்லி புல்டோசர்களைக் கொண்டு அடித்து நொறுக்குகின்ற நேரத்தில், உணவு உற்பத்தியைப் பாதிக்கின்ற அளவிற்கும், பெரும் பகுதி மக்களைப் பாதிக்கின்ற அளவிற்கும் உள்ள ஆக்கிரமிப்புகளைத் தடுத்து நிறுத்துவதற்கான சட்டத்தையும், அதிகாரத்யையும் இந்த இலாக்காவிற்கு வழங்கி, மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) கடைமடைப் பாசனம் மாதிரி, நான் கடைசியாகப் பேசிக் கொண்டிருக்கிறேன். என்னுடைய பேச்சைப் பாதியில் நிறுத்தச் சொன்னால் அரைகுறையாகப் பாய்ந்து கொண்டிருக்கும் தண்ணீரைப் போலத் தான் இருக்கும். நானும் வேண்டுமானல், அமைச்சர்கள் சொல்வதைப் போல் வேண்டுமானால் சொல்லிவிடுகிறேன், எழுதிக் கொடுக்கிறேன், அவைகளைப் படித்ததாகக் கருதி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் என்று வேண்டுமானால் சொல்லிவிடுகிறேன். (சிரிப்பு)

தேசியமயமாக்கப்பட்ட சில பேங்குகள் நலிந்த கிராமங்கள் சிலவற்றைத் தத்து எடுத்துக் கொண்டு அவர்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்து கொடுக்கின்றன. அதைப்போல் நான் ஒரு ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டம் மாமூலாக வறண்ட பகுதியாகத்தான் இருக்கிறது. கடைமடையில் இருக்கின்ற அந்தப் பகுதியில் எந்தவிதமான இயற்கையான தண்ணீர் வசதியும் இல்லாமல் இருப்பதால், இந்த இலாக்கா எங்கள் மாவட்டத்தைத் தத்து எடுத்துக் கொண்டு, விசேஷ அந்தஸ்துடன் சேர்ந்துப் பல்வேறு திட்டங்களை அங்கே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹோசூருக்குப் பக்கத்தில் கலவரப்பள்ளி அணை என்ற அணை சம்பந்தமாக இரண்டே முக்கால் கோடி ரூபாய் வரையில் செலவு செய்யப்பட்டு, தற்பொழுது கோர்ட் மூலம் தடை வாங்கப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதனால் நான்காண்டுகளாகத் தாமதமாக இருக்கிறது. தொழிற் பேட்டைக்கு அருகில் உள்ள இடம் அது. அங்கே வேலை ஸ்தம்பித்து இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எனவே அந்தத் தனியாரை நேரடியாகவே சந்தித்தோ அல்லது எப்படியோ அந்தத் தடையை நீக்கவும், அதன் மூலம் அந்த அணைக் கட்டின் வேலை தொடர்ந்து தொடங்கப்பட்டு அந்த மக்களுக்கு பயன் அளிக்கும் விதத்தில் செய்யவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டமும், தஞ்சை மாவட்டமும், திருச்சி மாவட்டமும் சந்திக்கின்ற இடத்தில் உள்ள லோயர் அணைக் கட்டில். வெள்ளக் காலத்தில் அதிகமான வெள்ள நீர் வருகின்ற

நேரத்தில் அது வீணாகக் கடலுக்குச் செல்கின்றது. எனவே, கருப்பூர் கிராமத்தில் ஒரு திருப்பு அணையைக் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உடையார் பாளையம் தாலுக்காவில் உள்ள கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அருகாமையிலுள்ள பொன்னேரியை ஆழப் படுத்தி அதிகமான தண்ணீரைத் தேக்க வேண்டும்.

வீராணம் போன்ற ஏரிகளை ஆழப்படுத்தி, அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு நன்மைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

(இரவு 7-30)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடைபெறுகின்ற நீர்ப்பாசன மானியத்தின் கீழ் 23 மாண்புமிகு உறுப்பினர்கள் உரையாற்றி இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் இந்தத் துறையின் மேல் கொண்டிருக்கின்ற அக்கறை காரணமாக இந்தத் துறையின் முக்கியத்துவம் காரணமாக, ஏறத்தாழ 95 வெட்டுத் தீர்மானங்களை 24 மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நல்லதொரு நாட்டுக்கு நல்லதொரு அரசு எப்படி முக்கியமோ, நம்முடைய நாட்டுக்குத் தமிழ் எப்படி முக்கியமோ அப்படி வேளாண்மையை நம்பி இருக்கக்கூடிய நம் நாட்டுக்குப் பாசனத்துறை மிகவும் முக்கியமானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்திருக்கின்ற காரணத்தாலும், அறிந்திருக்கின்ற காரணத்தாலும் இங்கே தங்களுடைய அரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் அரசின் சார்பிலே நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தின் நீர்வளம் எவ்வளவு தூரத்திற்குப் பயன்படுத்தப் பட்டுக்கொண்டு வந்திருக்கின்றது என்பதை இங்கே பேசிய அத்தனை உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். இந்தத் துறையின் சார்பிலே நாட்டிலே, வேளாண்மைக்குரிய பாசனத் தண்ணீரை மட்டும் வழங்கக்கூடிய பணிகளில் ஈடுபடாமல் அதைவிட ஒரு படி மேலாகச் சென்று மக்களுக்குத் தேவையான குடிநீர்ப் பிரச்சனைகளையும் தீர்க்கக்கூடிய அளவுக்கு உரிய பணிகளில் அரசு ஈடுபடுகின்றது என்பதையும் கடல் அரிப்புக்களைத் தடுக்கின்ற பணிகளில் ஈடுபடுகின்றது என்பதையும், தொழில் துறை வளர்ச்சிக்குத் தேவையான நீர் வளத்தை தருகின்ற பணிகளில் ஈடுபடுகின்றது என்பதையும் தொழில்துறை வளர்ச்சிக்கு தேவையான நீர்வளத்தை தருகின்ற பணிகளில் ஈடுபடுகின்றது என்பதையும் இங்கே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள் அந்த வகையில் இந்தத் துறையின் பணி



அத்தனைத் துறைகளையும் ஒட்டியும், சார்ந்தும் இருக்கின்ற காரணத்தால் இந்தத் துறையின் முக்கியத்துவத்தை அத்தனைபேரும் உணர்ந்திருக்கிறார்கள். இங்கே கூட பல உறுப்பினர்களும் சுட்டிக்காட்டினார்கள். இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி போதாது என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அரசினிடத்திலே இருக்கக்கூடிய நிதி யாதாரத்தை வைத்து எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு ஒதுக்கீடு செய்திருக்கின்றது என்பதை மட்டும் நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

தற்போது தமிழகத்திலுள்ள நீர்வளத்தில் 95 சதவீதத்தைப் பயன்படுத்தியதற்குப் பிறகு இப்போது காட்டு ஓடைகளின் குறுக்கே அணைகளைக் கட்டுகின்ற பணியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். முறைப்பாசனத்தை முறையாக நடைமுறைக்குக் கொண்டுவர கால்வாய்களையும், கிளைக்கால்வாய்களையும் புனரமைப்பு செய்து நவீனப்படுத்துவதன் வாயிலாக கிடைக்கக் கூடிய நீரைச் சேமித்துக் கூடுதலாக ஆயக்கட்டு நிலங்களை எடுத்துக் கொள்ளக்கூடிய பணிகளில் இந்தத் துறை ஈடுபடுகின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. இருக்கக்கூடிய நிலத்தடி நீரைப் பயன் படுத்தி லிஃப்ட் இரிகேஷன் என்ற இறவைப் பாசனத்தை உருவாக்கி அதன்மூலமாக எவ்வளவு தூரத்திற்குப் பாசன நிலங்களுக்கு பாசன வசதி செய்து தர முடியுமோ அந்த அளவுக்குப் பணிகளில் இந்தத் துறை ஈடுபடுகின்றது என்பதை எடுத்துக்காட்ட கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

ஆக இப்பேர்ப்பட்ட பணிகளை எல்லாம் முறையாகச் செய்ய வேண்டும் என்றால் ஒவ்வொரு பணிக்கும் ஆய்வு தேவையான ஒன்றாக இருக்கின்றது என்பதை நாம் அத்தனைபேரும் உணருகிறோம். அந்த ஆய்வுகளை முறையாக மேற்கொள் வதற்கு இந்தத் துறையின் வாயிலாக தனியாக ஒரு ஆய்வுப் பிரிவு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட பணிகளை எல்லாம் அடுக்கடுக்காகச் செய்வதற்கு இந்தப் பாசனத் துறையில் 6 தலைமைப்பொறியாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களின் மூலமாக இந்தத் துறை பராமரிக்கப்பட்டு வருகின்றது. தலைமைப் பொறியாளர், பாசனம், அவர்களால் சிறுபாசனம் மற்றும் நடுத்தரப் பாசனத்துறை, வளர்ச்சியில் அக்கறை கொண்டு செயல்பட்டுக்கொண்டு வருகின்றது. சிறுபாசனத்தை கண்காணிக்க தலைமைப் பொறியாளர் இருக்கிறார். அதே போன்று நிலநீர்க் கோட்டத்தின்வாயிலாக நிலத்தடி நீர் பராமரிக்கப்படுவதற்காக தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்பேர்பட்ட பணிகளை எல்லாம் ஆய்வு, செய்வதற்காக தலைமைப் பொறியாளர் ஆய்வு

இருக்கிறார். பெரியார்—வைகை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு பல கோடிக்கணக்கணக்கான ரூபாயை அரசு செலவு செய்கின்ற காரணத்தால் அதற்கென்று பராமரிப்புகளுக்குத் தனியாக ஒரு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இது மட்டும் போதாதென்று கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக ஏற்பட்ட அனுபவங்களின் வாயிலாக அடிக்கடி தமிழகத்தில் ஏற்படுகின்ற வெள்ள அபாயத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக, அந்த நீரை உரிய முறையில் பயன்படுத்துவதற்காகத் தனியாக வெள்ளத் தடுப்புக்கு என்று ஒரு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் அறிவார்கள். இந்த முறையில் இந்தத் துறை செயல்பட்டுக்கொண்டு வருகின்றது. 1984–85-வது நிதி ஆண்டில் நடுத்தர மற்றும் சிறிய பாசன திட்டங்களுக்கு ரூ. 46.02 கோடி ஒதுக்கீடு செய்து புதிதாக 28,170 ஹெக்டேர் நிலம் பாசன பெறுவதற்காக இந்த ஆண்டு இலக்கினை நிர்ணயித்திருக்கிறது அரசு.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வெள்ளக்கோட்டை, உள்ளூர் சந்தை போன்ற சுமார் 20 நடுத்தர பாசன திட்டங்களுக்கு அரசு அனுமதி அளித்து, அத்திட்டங்கள் பல்வேறு முன்னேற்ற நிலையில் இருக்கின்றன என்பதை நான் இங்கே சொல்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தர்மபுரி மாவட்டத்தில் ஈச்சம்பாடி அணைக்கட்டுத் திட்டம் வேலை ஏற்கனவே முடிந்து விட்டது என்பதையும் அதன் பயனை அந்தப் பகுதி மக்கள் அனுபவித்து வருகிறார்கள் என்பதையும் நான் இங்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

குமரி மாவட்டத்தில் கோதையாறு பாசனத் திட்டம் நவீனப் படுத்தும் திட்டம், நெல்லை மாவட்டத்தில் இருக்கங்குடி அணைத் திட்டம் போன்ற திட்டங்கள் அரசின் தீவிர ஆய்வில் இருந்து வருகின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விரைவில் இவை குறித்து அரசு தகுந்த முடிவினை எடுக்கும், அறிவிக்கும் என்பதையும் நான் இங்கே சொல்லியாக வேண்டும்.

பெரியார் மாவட்டத்தில் தாராபுரம் மாவட்டத்தில் சின்ன முட்டூர் அருகே ரூ.290 இலட்சம் செலவில் நொய்யலாற்றின் தண்ணீரைகபிலர் மலையிலிருந்து ஆற்றுப் பாளையத்திற்கு அருகே தேக்கும் திட்டம் தற்போது நடைமுறையில் இருக்கிறது.

பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம் ஒரத்திபாளையம் கிராமத்திற்கு அருகே ரூ.277 இலட்சம் செலவில் 616 மில்லியன் கன அடி கொள்ளளவு நீர் தேக்கம் திட்டத்தை அமைக்க இந்த ஆண்டு அரசு தீர்மானித்திருக்கிறது என்பதை



[illegible] சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந் நீர்த் [illegible] திட்டம் இடதுபுற கால்வாயின் வாயிலாகவும், [illegible] வாயிலாகவும் பெருந்துறை வட்டத்தில் இருக்கிற 500 ஏக்கர் புதிதாக பாசன வசதி பெறும்.

அத்துடன் ஏற்கனவே உள்ள ஆரத்திபாளையம் பிரதானக் [illegible]வாயும் இப்பொழுது இருக்கக்கூடிய 32.25 கிலோ மீட்டரை [illegible] கிலோ மீட்டர் வரை நீட்டிக்கப்பட்டு, அதன் வாயிலாகக் [illegible]டைக்கக்கூடிய பயனை ஏறத்தாழ 9,775 ஏக்கர் திருச்சி மாவட்டத்தில் உள்ள நிலங்களுக்குப் பாசன வசதி தரப்படும் என்பதையும் நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோன்று பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம் வாயிலாக இப்பொழுது அடைந்திருக்கிற பயனைப் பெறுகின்ற அந்தப் பாசன நிலங்கள் இன்னும் அதிகமான அளவு பயனைப் பெற வேண்டுமென்பதற்காக அந்தத் திட்டத்தை விரிவாக்கும் பணியிலும் அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டத்தின் பயனையும் அதே போன்று விரிவாக்குவதற்காக அரசு தீவிரமாக பரிசீலித்துக் கொண்டு வருகிறது. சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களைப் [illegible] 1984-85-வது ஆண்டு ரூ. 275 இலட்சம் [illegible] செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் 30 [illegible]கள் முடிவடையும்போது, ஏறத்தாழ 3,274 ஹெக்டேர் நிலங்கள் கூடுதலாகப் புதிய பாசன வசதியைப் பெறும்.

இங்கே எடுத்துச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள் [illegible] ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். கடந்த ஆண்டு இருந்த நிதி ஒதுக்கீட்டைவிட இந்த ஆண்டு சிறப்பு சிறு பாசனத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு குறைவாக இருப்பதாகச் சொன்னார்கள். நான் ஒன்றைப் பணிவுடன் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இங்கே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற தொகையோடு கூடுதலாக இன்னும் ரூ. 16 கோடி ஒதுக்கீடு செய்து சிறப்புச் சிறுபாசனத் திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகள் தமிழகத்தில் மேற்கொள்ளக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன என்பதையும் நான் அதைப் பின்னால் என்னுடைய உரையில் எடுத்துச் சொல்ல இருக்கிறேன் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கிராமத்திலே நிலமற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கின்ற இந்தத் திட்டத்தின் கீழ் மைய அரசும் மாநில அரசும் ஒதுக்கீடு செய்திருக்கிற தொகையில் ரூ. 6 கோடி செலவில் 61 சிறு பாசன திட்டங்களை மேற்கொள்ள அரசு தீர்மானித்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் இரண்டாவது கட்டமாக, அதே பணியை மேற்கொள்வதற்காக ரூ. 10

கோடியில் 79 சிறு பாசன திட்டங்களும் 187 வடிகால் அமைக்கும் திட்டங்களும் 1762 முன்னாள் ஜாமீன் குளங்கள் பலப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(இரவு 7-40)

இந்த அறிவிப்பின் வாயிலாக இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய ஒரு முக்கியமான பிரச்னைக்கு தீர்வு காணும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால், பல உறுப்பினர்கள் ஒன்றை இங்கே சுட்டிக் காட்டினார்கள். ஜமீன் நிலங்களை பராமரிக்கக்கூடிய பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை அல்லது சிறு சிறு பணிகளைக்கூட நிறைவேற்றமுடியாமல் இருக்கிறது என்பது போன்ற சில குற்றச்சாட்டுக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு இந்தத் திட்டத்தின் வாயிலாக விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு ஏற்படும் என்று நான் நம்புகிறேன். அதேபோல சிறு சிறு திட்டங்களைத்தான் இப்போது ஏற்றுக்கொண்டு, மேற்கொண்டு தமிழகத்திலே உள்ள நீர் நிலை ஆதாரங்களை பயன்படுத்த முடியும்" என்ற நிலைமை உருவாகிய பிறகுதான் நெல்லை மாவட்டத்திலேயுள்ள நம்முடைய துணைத் தலைவர், சேரன்மாதேவி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க, அவருடைய தொடர்ந்த உழைப்பிற்கிணங்க...

திரு. சோ. அழகர்சாமி. நாங்கள் எல்லோரும் பேசினோம். ஆனால் துணைத் தலைவர் அவர்கள் ஒன்றுமே கேட்கவில்லை என்றாலும் அமைச்சர் அவர்கள் அவரை குறிப்பிட்டுச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். சட்டமன்ற உறுப்பினராக 1977-லிருந்து 1980 வரையில் நான் இருந்த போது எடுத்துக்கொண்ட முயற்சிகளை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். வேறொன்றும் இல்லை.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேண்டுகோள் என்பது வெளியேயும் கொடுக்க முடியும்; உள்ளேயும் கொடுக்க முடியும். பிள்ளையார் சுழியோடு ஆரம்பிப்பது சரியாக இருக்கும் என்பதால் அவைத் தலைவரிலிருந்து ஆரம்பிக்கிறேன். ஏற்கெனவே 6 மணி நேரம் விவாதம் இந்த மானியத்திலே நடந்திருக்கிறது. நீங்கள் எடுத்துச்சொல்லியிருக்கிற கருத்துக்களிலிருந்து இந்தத் துறையிலே நீங்கள் எவ்வளவு அக்கறை வைத்திருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து அதற்காக உங்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.



திரு. சோ. அழகர்சாமி. துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது இருக்கிற நிதி ஆதாரத்திற்கு உட்பட்டு எவ்வளவு நிதி வேண்டுமோ அவ்வளவு ஒதுக்கி இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். பட்ஜெட் மொத்தத்தில் சென்ற ஆண்டு நம்முடைய பட்ஜெட் 1,700 கோடி ரூபாய் என்றால், இப்போது 2,000 கோடி ரூபாய். ஏறக்குறைய 300 கோடி ரூபாய் அதிகமாக வருவதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே நம்முடைய பாசனம் மற்றும் பாசனம் குறித்த மூலதனச் செலவில் வருகிற போது சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 4 கோடியே 64 இலட்சம் பாசனத்திலே குறைவாகவும், மூலதனச் செலவிலே 6 கோடியே 36 இலட்சம் குறைவாகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறதே, இது இந்தத் துறையின்மீது அக்கறை குறைவா? அல்லது அக்கறை அதிகமா? எதைக் காட்டுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப். துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொல்லியபடி இங்கே ஒதுக்கப்பட்ட நிதியோடு நிலைமைகளை விடுவதாக இல்லை. ஏற்கெனவே 16 கோடி ரூபாய்க்கு இங்கே ஒரு உடனடியான அறிவிப்பை தந்திருக்கிறேன். கடந்த ஆண்டைவிட தமிழக அரசின் நிதி வருவாய் கூடியிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதேபோல நம்முடைய தேவை எவ்வளவு கூடியிருக்கிறது; இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு எவ்வளவு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன? கல்வித் துறையாக இருந்தாலும், போக்குவரத்துத் துறையாக இருந்தாலும், தொழில் துறையாக இருந்தாலும் அத்தனைத் துறைகளிலும் தனியாக அக்கறை செலுத்தி நிதி ஒதுக்கீட்டை நாம் செய்துகொண்டு வருகிறோம். அந்த அளவிலே பாசனத் துறைக்கும் நிதி ஒதுக்கீட்டைச் செய்திருக்கிறோம். இருந்தாலும் இன்றைக்கு அனைத்து உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னதைப் போல, பாசனத் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்கிற அளவிற்கு, தேவைப் பொருளான தண்ணீர் இல்லை; அதை நாம் உணர்ந்தாக வேண்டும். அதேபோல இப்படிப்பட்ட சூழ்நிலை நெல்லை மாவட்டத்தில் எலுமிச்சை ஆறை பொறுத்தவரையில் நம்முடைய துணைத் தலைவர், சேரன்மாதேவி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவர்களுடைய நீண்ட நாளைய கோரிக்கையை ஏற்றுக்கொள்கிற அளவிற்கு இப்போது நிலைமைகள் உருவாகும் என்று நான் நம்புகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கீரனூர் கிராமத்திற்குப் பக்கத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு ஆய்வுகள் செய்யப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அரசு விரைவிலே அந்தப் பணிகளைத் துவக்குவதற்குரிய நல்ல சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கே இந்தத் துறையைப் பற்றி நான் பல்வேறு கருத்துக் களைச் சொல்லவேண்டும் என்று விரும்பியிருந்தாலும், இந்தத் துறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய உரையின் வாயிலாக துறை ஆற்றுகின்ற பல்வேறு பணிகளைப் பற்றி சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்பதாலும், ஒன்றை மட்டும் இங்கே நான் சுட்டிக்காட்டுவது என் கடமையாகும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

நான் முன்பே சொன்னதைப்போல பல புதிய யுக்திகளை கடைப்பிடிக்கவேண்டும் என்ற முறையில் தமிழகத்தில் உள்ள பாசனத் துறை பணியாற்றி வருகிறது. அந்தச் சூழ்நிலையில், இன்றைக்கு குறிப்பாக வாய்க்கால்களையும், கால்வாய்களையும், ஆறுகளையும் நவீனப்படுத்துவேண்டும் என்கிற வகையில் சீரிய பணிகளை இந்தத் துறை செயலாற்றி வருகிறது.

பெரியார்—வைகை நவீனப் படுத்தும் திட்டத்தை நாம் இப்போது நடத்தி வருகிறோம். அதிலே முதல் கட்டப் பணிகள், வேலைகள் நடத்தப்பட்டு, இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முதல் கட்டப் பணி முடிந்துவிடும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் ஒரு குற்றச் சாட்டைச் சொன்னார்கள். வைகை—பெரியார் நவீனப் படுத்தும் திட்டத்தைப் பொறுத்தவரையில் காலதாமதமாகப் பணிகள் நடைபெற்று வருகிறது என்று சொன்னார்கள். ஆனால், எந்தக் காலகட்டம் நிர்ணயிக்கப்பட்டதோ அந்தக் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் அந்தப் பணிகள் மேற்கொள்ளப் படும் என்பதையும், இந்த ஆண்டு இறுதிக்குள் முதல் கட்டப் பணிகள் முடிவுறும் என்பதையும், இரண்டாவது கட்டப் பணிகள், 58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு உலக வங்கி உதவியுடன் அதை நிறைவேற்ற, நடைமுறைப் படுத்த இருக்கிறோம் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதன் வாயிலாக இராமநாத புரம் மாவட்டத்தின் வறண்ட பகுதிகள் பாசன வசதி பெறும் என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் உ. சுப்பிரமணியன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, காவிரி படுகையை நவீனப் படுத்தும் திட்டம். காவிரி படுகையைப் பற்றி இங்கே பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு குற்றச் சாட்டுகளைச் சொன்னார்கள். குறிப்பாக, ஒரு பக்கத்திலே வெள்ளக் கால்வாய் ஆகவும் இன்னொரு பக்கத்திலே வடிகாலாகவும் அந்தக் காவிரி பல்வேறு இடங்களில் பல்வேறு வகையில் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், உரிய பராமரிப்பு இல்லாததால் காவிரியின் பயன் முழுமையாகக் கிடைக்காதது மட்டுமல்லாமல், பல்வேறு இடங்களில் காவிரி நீரால் அழிவு ஏற்பட்டு இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கக்கூடாது என்பதுதான் இந்த அரசின்



ஆசையாகும், துறையின் ஆசையாகும். அதற்காக முனைப் போடு செயல்பட்டு, 366 கோடி ரூபாய்க்கு திட்டம் தீட்டி இருந்தோம். ஆனால் அந்தத் திட்டத்தை மாற்றி ஒரு ஆரம்ப கட்ட திட்டமாக ஒரு 100 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்தை உருவாக்கித் தாருங்கள் என்று மத்திய அரசு சொல்லிக்கொண்டதன் அடிப்படையில், இப்போது அதை 100 கோடி ரூபாய் திட்டமாக அடுத்த ஆண்டு முதல் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

குமரி மாவட்டம் கோதையாறு பாசன திட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் ரெத்தினராஜ் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். கோதையாறு பாசன திட்டத்தில் உள்ள அனந்தன் கால்வாய்த் திட்டம் ஏற்கனவே நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. அப்படி இருந்தாலும் கூட இன்னும் தூர் அடைந்து இருப்பதாகச் சொன்னார்கள். வேலைகள் இன்னும் முழுக்க முடியாத காரணத்தால், ஒருக்கால் அந்தக் குறைபாடு இருக்கக்கூடும். வேலைகள் முழுக்க முடிந்த பிறகு, அது முழுமையாக நவீனப்படுத்தப்பட்ட பிறகு, அந்த அனந்தன் கால்வாய் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். அந்த வகையில் அவருடைய உள்ளம் மகிழும் அளவிற்கு அந்தக் கோதையாறு பாசன வசதிகள் சீரமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே, என். பி. சானல், பி.பி. சானல் போன்ற பகுதிகளையும் நவீனப்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. விரைவாக அதற்கு ஒரு நல்ல முடிவு வரும் என்று நான் நம்புகிறேன்.

(இரவு 7-50)

மணிமுத்தாறு, உன்னியாறு, தாம்பிரவருணி, கீழ் பவானி போன்ற ஆறுகள் படிப்படியாக நவீனப்படுத்தப்பட வேண்டு மென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது. அதற்கான ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. திருச்செந்தூர் வட்டத்தில் உள்ள கடம்பா குளத்தில் தனிக் கால்வாய் அமைத்து அங்கே இருக்கிற 11 குளங்களுக்கு பயன் கிடைக்க வேண்டுமென்ற கோரிக்கையை—ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தாலும்— வைத்திருக்கிறார்கள். நேரடியாக நானே அந்தப் பிரச்சனையை அறிந்திருக்கிற காரணத்தால், அதன் முக்கியத்துவத்தைக் கருதி, நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பெரியவர் அழகர்சாமி அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பதால், அதற்கு முக்கியத்துவம் தரப்பட்டு, அதுபற்றி உடனடியாக ஆய்வு நடத்தி அறிக்கை தரவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித் திருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் (வெள்ளத் தடுப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டதைப்போன்று கோவை மாவட்டத்தில் ...ஊர் பள்ளத்தில் ஒரு திட்டத்தை அரசு பரிசீலனை செய்து வருகிறது. நடப்பாண்டு முதல் பன்னாட்டு நிதி உதவி நிறுவனத்தின் உதவியுடன் ஆய்வு நடத்தி வருகிறது. அதைப்

போன்று இன்னொரு விவரத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பேராப்பாறை நீர்த்தேக்கத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, அது பாதியில் நின்றுகொண்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு உரிய நடவடிக்கையை மிகத் துரிதமாக அரசு மேற்கொண்டு வருகிறது. இருக்கிற குறைபாடுகள் களையப்பட்டு, விரைவிலே பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1984 ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, நெல்லை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெய்த பெருமழைக் காரணமாக வரலாறு காணாத அளவுக்கு வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. அதனால் பழுதடைந்த அத்தனைப் பாசன ஆதாரங்களும் சீர் செய்யப்பட்டு, இந்தத் துறை பழுது பார்த்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இதை நன்றாக அறிவார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை, மானாமதுரை வட்டங்களுக்கு தண்ணீர் தாமதமாக விட்டதாக ஒரு குறைபாட்டை இங்கேச் சொன்னார்கள், வைகையிலிருந்து குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் விடவில்லை என்பது ஒரு குற்றச்சாட்டு. 18 நாட்கள் கழிந்துதான் தண்ணீர் விட முடிந்தது என்றாலும் எவ்வளவு சீக்கிரமாக தண்ணீர்விட முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக தண்ணீர் விடப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

திரு. செ. சிவசாமி. துணைத் தலைவரவர்களே, வைகையிலே கடந்த 1978-79 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் மழையின் காரணமாக கரைகள் எல்லாம் சின்னாபின்னமாகி விட்டன; ஓடைகள் எல்லாம் இன்றுவரையில் சீர்செய்யப்படவில்லை. அவைகள் எல்லாம் உடனடியாக சீர்செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப். நான் பதில் சொல்லி முடித்தப் பிறகு விளக்கங்கள் கேளுங்கள், சொல்கிறேன். நான் பதில் சொல்லுகின்றபோது, முதலிலே இந்தத் துறையின் சார்பாக மேற்கொண்ட பணிகளைச் சொல்லிக்கொண்டு வருகிறேன். நீங்கள் என்னென்ன சொல்லியிருக்கிறீர்களோ அதை எல்லாம் கவனமாகக் குறித்து வைத்துக்கொண்டு, பின்னால் பதில் சொல்ல இருக்கிறேன். நீங்கள் சொன்னதற்கு சற்று முன்னால் அல்லது பின்னால் பதில் கிடைக்கும். உங்களுடைய கோரிக்கைக்கு பதில் சொல்ல நான் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு). நேரம் இல்லை என்றால் நான் என்ன செய்வது? எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல நான் தயார்.

இன்னொரு முக்கியமான பிரச்சனையை இங்கே சொன்னார்கள் கண்மாய்களைத் தூர் வாராததினால் கண்மாய்களின் கொள்ளளவு குறைந்துவிட்டது. அதனால்



வெள்ளச்சேதம் ஏற்பட்டது என்று சொன்னார்கள். தூர் வாரக் கூடாது என்பது அல்ல பிரச்சனை. தூர் வாருவதைப் பொறுத்தவரையில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. தூர் வாரவேண்டும் என்பதுதான் இந்த அரசின் ஆசை. தூர் வாரி கண்மாய்களின் கொள்ளளவை அதிகமாக்க வேண்டுமென்றுதான் அரசு கருதுகிறது. இருந்தாலும் தூர் வாரும்போது எடுக்கின்ற மண்ணை எங்கே போடுவது என்ற பிரச்சனை இருக்கிறது. கண்மாய்க்கு பக்கத்திலே ஒட்டியிருக்கிற நிலங்கள் எல்லாம் பட்டா நிலங்களாக இருக்கின்றன. பட்டா நிலங்களில் மண்ணைப்போட நிலச் சொந்தக்காரர்கள் அனுமதிக்கவில்லை; அவர்கள் தடுக்கிறார்கள். அதனால் சேமிக்கப்பட்ட மண்ணை தூரத்தில் கொண்டுபோய் போடவேண்டியிருக்கிறது.

தூர் வார்வதற்கு ஆகும் செலவைவிட, தூர் வாரிய மண்ணை எங்கே போடுவது என்பதில்தான் செலவு அதிகமாக ஆகிறது. அதுதான் நிலைமை. திரு உ. சுப்பிரமணியன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மற்றும் பல்வேறு உறுப்பினர்களும் சொன்னார்கள். இப்படித் தூர் வார்கின்ற நேரத்தில் புல்டோசர்களைப் பயன்படுத்தவேண்டும் என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது மேற்கொள்ளப்படுகின்ற என். ஆர். ஈ. பி., Rural landless employment guarantee போன்ற பல்வேறு திட்டங்களின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்கள் எல்லாம் ஜாப் ஓரியண்டட் பணியாகவும், யாருக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று அந்தத் திட்டம் போடப்பட்டு, அந்த முறையிலே மத்திய அரசு விதிமுறைகளை வகுத்திருக்கிறது. அதிலே ஏதாவது தளர்வு இருந்தால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் மத்திய அரசிடம் சொல்லி, அந்த விதிமுறையில் ஒரு தளர்ச்சியைப் பெற்றுத் தருவார்களே யானால், தமிழகத்தில் இருக்கக் கூடிய நிலைமையைப் பயன்படுத்தி, புல்டோசர்கள் போன்ற பெரிய கருவிகளைப் பயன்படுத்துவதற்கு நாம் நம்முடைய சிந்தனையைச் செலுத்தமுடியும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

பல்வேறு உறுப்பினர்கள் பல பிரச்சினைகளைப் பற்றி சுட்டிக்காட்டினார்கள். குறிப்பாக சின்னசேலம் பகுதியில் வசிஷ்ட்டா நதியில் உடைந்த அணையைக் கட்டுவதில் தனியார் தலையீட்டினால் திருத்தப்படுவதாக மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் தங்கவேல்ராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். வசிஷ்ட்டா நதியில் வாப்பான்பாரி ஏரியில் புதிய அணையைக் கட்டுவது குறித்து, அது தலைமைப் பொறியாளரின் ஆய்வில் இருக்கிறது. ஆகவே தனியார் குறுக்கீட்டிற்கோ, அல்லது தனியார் பயன்படுத்திக்கொள்ளும் அளவிற்கோ, இந்த அரசு தன்னுடைய கொள்கையை விட்டுக்கொடுக்காது என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி பல முக்கியமான பிரச்சினைகளை இங்கே எடுத்துச்சொன்னார்கள். பெரியார் அணையைப்பற்றி கேட்டால், அவர்கள் சொன்ன பிரச்சினைக்கும், குற்றச் சாட்டிற்கும் ஏற்கனவே நான் பதில் வழங்கியிருக்கிறேன். இதிலே இன்னும் தெளிவாக பதில் வேண்டுமென்றாலும், தர தயாராக இருக்கிறேன்.

பச்சையாறு திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் அந்தத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொன்னார்கள். பச்சையாறு திட்டம் எப்படியெல்லாம் உருவாக்கப்பட்டது, எப்படியெல்லாம் கைவிடப்பட்டது என்றெல்லாம் சொன்னார்கள். அந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், என்னுடைய குறைபாடுகள் எல்லாம், எந்த நாள் அந்தத் திட்டத்திற்காக கால்கோள் விழா நடத்தப்பட்டதோ' அதே நாளில் அந்தத் திட்டத்திற்கான அத்தனை பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, தெளிவாக அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படும் நிலை உருவாக்கப்படாமல் கால்கோள் [விழா நடத்தப்பட்டது. அதன் விளைவாகத்தான் தொடர்ந்து அந்தப் பணிகளைச் செய்யமுடியவில்லை, அதற்குப்பிறகு——நீண்ட இடைவெளிக்கும் பிறகு——மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன்கூட, அன்றைக்கு நினைத்திருந்தால் அவருடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி பச்சையாறு திட்டத்தைக் கொண்டுவந்திருக்கலாம். ஆனால் அதற்குப் பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு வந்ததற்குப் பிறகு, நாம் அந்தத் திட்டத்தை மேற்கொள்ளவேண்டுமென்று எண்ணி செயல்படும் நேரத்தில். சிங்கவால் குரங்குகள் இருப்பதாகச் சொல்லி, அந்தத் திட்டத்திற்கு தடை விதித்து, அந்தத் திட்டத்தை மேற்கொள்ள முடியாத நிலைமையை உண்டாக்கியது, வனத்துறை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

திரு. ப. நெடுமாறன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு நான் நினைத்திருந்தால் இதைச் செய்து இருக்கலாம் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அன்றைக்கு ஆளுநராக இருந்த சுகாதியா அவர்களிடம் முறையிட்டபோது, அவர்கள் அதிகாரப் பூர்வமாக இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள்? அவர் போன பிறகு, உங்களுடைய ஆட்சி ஏற்பட்டது. நீங்கள் அமைச்சராக வருவதற்கு முன்னாலே, சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, நீங்களே பச்சையாற்றுத் திட்டத்தினை வற்புறுத்தி இந்த அவையிலே பேசியிருக்கிறீர்கள். இதையெல்லாம் நீங்கள் கேள்வியாகக் கேட்டு, அன்றைக்கிருந்த அமைச்சரிடம் பதில் பெற்றிருக்கிறீர்கள். அப்படியிருக்க, இப்போது உங்களுடைய கையில் அதிகாரம் இருக்கும்பொழுது, மற்றவர்களைச் சுட்டிக்காட்டுவதில் அர்த்தமேயில்லை. உங்கள் கையில் அதிகாரம் இருக்கிறது.



பச்சையாற்றுப் பகுதியிலுள்ள மக்கள் உங்களுக்கு வேண்டியவர்கள்தான். நான் அவர்களிடமிருந்து பல கடிதங்களுக்கு அப்பால் இருக்கிறேன். அது உங்களுடைய தொகுதிக்கு அருகாமையில் இருக்கிறது. அங்கே உங்களுடைய உறவினர்கள், உங்களுக்கு வேண்டியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுடைய நலத்திற்காகவாவது இந்தத் திட்டத்தை உடனடியாகச் செய்வதற்கு ஏதாவது செய்யுங்கள் என்று உங்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 8-00)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் இங்கே பச்சையாறு திட்டத்தைப் பற்றி ஒருசில கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் என் கையில் தரப்பட்டு இருக்கின்ற கோப்புகள் வேறுவிதமாகப் பேசுகின்றன. அவர் சொன்ன கருத்து வேறு, கோப்புகளில் இருப்பது வேறு. அன்று அரசு இந்தத் திட்டத்தைக் கொள்கை அளவிலேதான் ஏற்றுக்கொண்டதே ஒழிய, இந்த திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று ஆணித்தரமாக எந்த ஒரு உத்தரவும் போட்டோ, அல்லது அந்த உத்தரவின் அடிப்படையிலோ எந்தப் பணியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அதேபோன்று கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அழகர்சாமி, மற்றும் நெடுமாறன் ஆகியோர்கள் சொன்னார்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதில் இந்த அரசு முனைப்போடுதான் செயலாற்றிக்கொண்டு வருகிறது. கொடுமுடியாறு திட்டத்தைப் பொறுத்தவரையில் மறுபடியும் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கொள்கை அளவில் இந்த திட்டம் அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்குப் பிறகு, ஆளுநர் ஆட்சியின்போது, வறட்சி நிவாரணத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 34 லட்சம் ரூபாய் இந்தத் திட்டத்திலே செலவழிக்கப்பட்டதே ஒழிய இந்தக் கொடுமுடியாறுத் திட்டத்திற்கு என்று நிதி ஒதுக்கீடு செய்து, அந்த நிதியிலேயிருந்து பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பிறகு இந்த அரசு வந்தபிறகு, இப்போது அந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொண்டபோது பல்வேறு இடையூறுகள் இருந்தன. அதை ஏற்றுக்கொள்கிறேன். இந்தத் திட்டம் தேவையற்ற திட்டம் என்று கூட சொல்லப்பட்டது. என்றாலும் இறுதியில் இந்தத்திட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் அரசு மறுஆய்வு செய்து உத்தரவு போட்டது. அந்த உத்தரவின் அடிப்படையிலே மறு ஆய்வுகள் செய்யப்பட்டு, விளக்கமான, விவரங்கள் தரப்பட்டன. இப்போது இந்த அரசு இந்த திட்டத்தை மேற்கொள்வதற்குரிய ஆய்வில் ஈடுபட்ட நேரத்திலேதான் இந்தத் திட்டத்தை எந்த அடிப்படையிலே மேற்கொண்டது என்று சொன்னால், 1

திரு. ப. நெடுமாறன்: துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கொள்கை அறிவிப்பு. அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இந்த 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை நீடிக்கச் செய்ய வேண்டும். அதுதான் அரசினுடைய கொள்கை என்ற விதத்திலே சொன்னார்கள். நான் அதை சரியானது இல்லை என்று கருதுகிறேன். ஒப்பந்தம் ஏற்கெனவே இருக்கிறது. அது தொடர்ந்து நீடிக்கும். ஒப்பந்தத்தில் உள்ள சில ஷரத்துக்களை 50 ஆண்டுகள் கழித்து, 1974-ஆம் ஆண்டிலே இருதரப்பினரும் உட்கார்ந்து மறுபரிசீலனை செய்து, அதை இப்போதுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப எப்படி மாற்றப்பட வேண்டும் என்பதுதான். 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் தொடர்ந்து நீடிக்கப்பட வேண்டும் என்பதுதான் நமது நிலைமையாக இருக்க முடியும். அதுதான் நமக்கு பாதுகாப்பாகவும் இருக்க முடியும். அமைச்சர் அவர்கள் சொன்னது ஒப்பந்தத்தை புதுப்பிப்பது என்ற வகையிலே. அப்படி இருந்தால் அதை தயவு செய்து திருத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: நான் நம்முடைய நிலையைச் சொல்லவில்லை. கர்நாடக அரசு எடுத்திருக்கிற நிலை அதுதான். அதன் காரணமாகத்தான் தண்ணீரை கொடுக்காது தடுக்கின்ற வகையிலே, தங்களுடைய பகுதியிலே அவர்கள் புதியதாக பல்வேறு திட்டங்களை உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள். தமிழக அரசின் நிலையைப் பொறுத்த மட்டில் நாம் எல்லோரும் இருக்கிற நிலைமையைப் புரிந்துக் கொண்டு, ஏற்கெனவே இருக்கும் ஒப்பந்தம். இப்பொழுதும் நமக்கு காலாவதியாகாத ஒப்பந்தம் தான் என்று கருதுகிறோம். ரைப்பிரியன் ரைட்ஸ் பற்றி வலியுறுத்துகிறோம். ஆகவே நான் தமிழக அரசின் கருத்துக்களை அப்போது எடுத்துச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியார் அணையைப் பொறுத்த மட்டில் நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். அந்தப் பணியை விரைவாக நடத்துவதற்கான அத்தனை முயற்சிகளும் நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. அணையின் மேற்புறத்தில் கான்கிரீட் மூடி அமைக்கும் வேலைகள் 1982-ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு விட்டது. அணையை கான்கிரீட்டினால் பலப்படுத்தும் பணி 1985-86-ஆம் ஆண்டு வரை நீடிக்கும். அதுதான் அங்கே இருக்கக்கூடிய நிலைமை. அணையின் வெள்ளப்பெருக்கத்தை அதிகரிக்க கூடுதலாக 3 வெள்ள நீர்த் தொட்டிகளை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) இதோ அந்த சப்ஜெக்டுக்கு வருகிறேன். கொஞ்சம் பொறுங்கள். இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் கடந்த 4 ஆண்டுக் காலமாக நீர்த்தேக்கத்தில் எடுக்கப்படுகிற தண்ணீரில் தமிழ் நாட்டுக்கு 13.5 டி.எம்.சி ஆண்டு ஒன்றுக்கு கிடைக்காமல் போகிறது. ஆகவே அப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் தமிழகம்





தனக்கு தேவையாக பெறக்கூடிய தண்ணீரை இழக்கிறது என்ற குற்றச்சாட்டைத்தான், மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொன்னார்கள்.

இந்தப்பிரச்னையை பொறுத்தமட்டில், ஏற்கெனவே தமிழ் நாடு, சுரங்கப்பாதையின் வழியாக வைகை நீர்த்தேக்கத்திற்கு தண்ணீரைக் கொண்டு வந்து, நாம் நமக்கு வர வேண்டிய தண்ணீரைப் பெற்றுக் கொண்டு தான் வருகிறோம். நீர் மட்டத்தை 134 அடிக்கு மேல் உயர்த்தாமல் பார்த்துக் கொள்ளலாமே தவிர, தேவையான 13.5 டி.எம்.சி. தண்ணீர் நமக்கு தனியாக சுரங்கப் பாதை வழியாக வைகை ஆற்றுக்கு கொண்டுச் செல்லப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதிலே பெரியார் அணையின் மராமத்துக்களை 2 கட்டமாக நடத்தவேண்டும் என்று நம்முடைய அரசும் கேரள அரசும் உடன்பாடு செய்திருக்கிறது. முதல் பகுதியாக அணையின் மீது ஆர்.சி.சி கேப்பிங் அமைப்பது. அதை அமைத்தபின்னால் 145 அடியாக தண்ணீர் மட்டத்தை உயர்த்த வேண்டும் என்பதற்கு கேரள அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆர் சி.சி. காஸ்டிங் 1982லே முடிந்து விட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் ஏன் 145 அடிக்கு நீர் மட்டத்தை உயர்த்தவில்லை? அதற்கான நடவடிக்கையை இந்த அரசென்ன எடுத்திருக்கிறது என்பதைத் தான் நான் அறிய விரும்புகிறேன்? இரண்டாவது கட்ட பணி இன்னும் துவங்க வில்லை. அது முடிந்தால், 152 அடியாக நீர் மட்டம் உயர்த்த முடியும். ஆகவே இந்தச் சிக்கலைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்

(இரவு 8-10)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. நான் முன்பே சொன்னதுபோல், இரண்டாவது கட்டப்பணி மேற்கொள்ளப்பட்டு, அதிலே முன்னேற்றம் இருக்கிறது. முதல் கட்டப் பணி 82-ஆம் ஆண்டு முடிவடைந்தது. ஆனால் முதற் கட்டப் பணி முழுதும் முடிந்து விட்டதாகக் கூற முடியாது. அதனால், இந்த பெரியார் அணை ஸ்டெபிளைஸ் ஆகிவிட்டது என்று சொல்ல முடியாது. அப்படி ஸ்டெபிளைஸ் ஆகாததால், தண்ணீர் மட்டத்தை உயர்த்த கேரள அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. பெரியார் அணையில் தண்ணீரை அதிக அளவுக்கு தேக்கிவைத்துக் கொள்ளக்கூடிய நிலை வந்த பிறகுதான், இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். அதுதான் நிலைமை.

வாய்க்கால்களில் பெரிய 4, 4 கண்மாய்கள் இருக்கக்கூடிய 8 குளங்கள்தான் அதனால் பயன் அடையும் என்ற சூழ்நிலை இருப்பதைக் கண்டுபிடித்து, அப்படிப்பட்ட ஒரு திட்டத்தின் வாயிலாக, 8 கண்மாய்களுக்கு உரிய அந்த ஆயக்கட்டுகளின் நிலங்கள் மட்டும்தான் பயன் அடையுமானால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் ஏமாற்றம் அடைவார்கள் என்பதற்காக, இந்தத் திட்டத்தின் பயன் பல்வேறு பகுதிகளுக்கும் செல்ல வேண்டும் என்பதற்காக இப்போது அந்தத் திட்டத்தை மாற்றியமைத்து, பெரிய அளவிலே நீர்த்தேக்கத்தைக் கட்டி, இதன் பயன் பல்வேறு இதர கிராமங்களுக்கும் தருவதற்குரிய ஒரு நடவடிக்கையில்தான் இந்த அரசு ஈடுபட்டு இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டம், விளாத்திக்குளம் தாலுக்காவைப் பொறுத்தமட்டிலும், கூவலாபுரம் அருகே ஒரு கண்மாயை அமைக்கின்ற ஒரு திட்டம், 36 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து, நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினால் 300 ஏக்கர் நிலங்கள் பயன் அடையும். மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் கிடைத்தபிறகு, மேற்கொண்டு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமோ, அந்த வகையில் அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இன்னொரு கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் எடுத்து வைத்தார்கள். கோவை மாவட்டத்திலே உள்ள சங்கனூர்பள்ளம் ஓடையின் குறுக்கே ஓர் அணையைக் கட்டி தண்ணீரை ஒரு வாய்க்கால் மூலம் திருப்பி சின்ன ஓடப்பட்டி கிராமத்திற்கு அருகில் ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைத்து, அதன் மூலம் 500 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்கு பாசனவசதி செய்ய வழிவகை செய்ய வேண்டும் என்று ஒரு கோரிக்கையை எடுத்துச் சொன்னார்கள். இந்தத் திட்டத்திற்கு ஏற்கனவே மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. 266 லட்ச ரூபாய்க்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஏற்கனவே இந்தக் கோரிக்கையை—கோவை நகரிலே ஒரு சில பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்படுகின்ற நிலைமையிருக்கின்றது—எனவே இதை வெள்ளத் தடுப்புப் பணியாகவும் ஏற்றுக்கொள்ளலாம். ஆகவே இப்படிப்பட்ட பல்வேறு முக்கியமான காரியங்களுக்காக இந்தத் திட்டத்தை பரிவோடு அரசு ஆய்வு செய்யும். ஏற்கனவே இந்தத் திட்டத்தை வலியுறுத்தி, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் போன்றவர்கள் எல்லாம் பல்வேறு சந்தர்ப்பங்களிலே எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை பரிவோடு அரசு ஆய்வு செய்யும் என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன்.



அடுத்து ஆனைமலையாறுத் திட்டத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னார்கள். இந்தத் திட்டத்தை பொறுத்த மட்டிலும், கேரள-தமிழக அரசுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையிலே—பரம்பிக்குளம்-ஆழியார் திட்டம் முடிவதற்குள்—ஆனைமலையாறு தண்ணீரைத் தமிழகத்திற்குத் திருப்புவதற்கான வேலைகள் நடைபெறவேண்டியுள்ளன. கேரள அரசு ஆனைமலையாறு நீர்த்தேக்கத் திட்டத்தைக் கட்டி, அதிலிருந்து ஒப்பந்தப்படி உள்ள தண்ணீரை எடுத்துக்கொள்ள கருத்துரு கொண்டுள்ளது. அந்தக் கருத்துருவை தமிழ்நாடு அரசு பரிசீலித்து, ஆனைமலையாறின் உப நதியாக உள்ள இட்டியாற்றில் ஒரு சிறிய அணையைக் கட்டி, அதிலிருந்து ஒப்பந்தப்படி உள்ள தண்ணீரை எடுத்துக்கொள்ள ஒப்பிசைவு அளிக்கும்படி கேரள அரசுக்குத் தெரிவித்துள்ளது.

கேரள அரசின் ஒப்புதல் பெற்ற பிறகு, இரண்டு மாநிலங்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு, இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

அதேமாதிரி மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள்
பல முக்கியமான பிரச்னைகளை எடுத்துச் சொன்னார்கள்.
பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன பிரச்னைகளில்
அதிலே பல உறுப்பினர்கள் பிரச்னையுமாகும். இந்தக் காவிரி
ஒன்றான காவிரி பிரச்னையுமாகும். இந்தக் காவிரி
பிரச்னையை பொறுத்த மட்டிலும் நாம் கேட்கக்கூடிய
இடத்திலே இருக்கிறோம். அவர்கள் தரக்கூடிய இடத்திலே
இருக்கிறார்கள். நாம் ஏற்கெனவே இருக்கிற நம்முடைய
ஒ பந்தத்தின் படி, 1924-ஆம் ஆண்டு உருவாக்கிய ஒப்பந்
தத்தின் படி, நமக்குத் தர வேண்டிய தண்ணீரை அவர்கள்
தர வேண்டும் என்று சொல்கிறோம். அதிலே பல்வேறு
ஷரத்துக்கள் இருக்கின்றன. அவைகளை மாண்புமிகு உறுப்பினர்
கள் அறிவார்கள். இந்த ஒப்பந்தம் 50 ஆண்டுக்காலத்திற்கு
பிறகு மறுபடியும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதுதான்
நிலைமையாகும். ஆனால் அதை புதுப்பிப்பதற்கு பல இடை
யூறுகளை அவர்கள் அந்தப் பக்கத்திலேயிருந்து ஏற்படுத்தி
வருகிறார்கள். அந்த இடையூறுகளை நீக்குவதற்காகத்தான்,
மாநில அரசு முனைப்போடு செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

உறுப்பினர்களும் பல்வேறு அரசியல் கட்சி
மாண்புமிகு அரசுக்கு தங்களுடைய
கூட்டங்களின் வாயிலாக தமிழக சொல்லியிருக்கிறார்கள். அந்தக்
கருத்துக்களை எடுத்துச் மரியாதையை தந்துதான்,
கருத்துக்களுக்கெல்லாம் மிகுந்த செய்து, அதன் வாயி
இந்த அரசு அந்த ஒப்பந்தத்தை நீடிக்கச் பெற்று தருவதற்
லாக தமிழகத்திற்கு வரவேண்டிய உரிமையை முதல்வர் டாக்டர்
காக உரிய நடவடிக்கைகளிலே, தமிழக இந்த அரசு
புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையிலே சொல்லிக் கொள்கிறேன்.
ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை

திரு. ப. நெடுமாறன்: துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கொள்கை அறிவிப்பு. அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்· இந்த 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை நீடிக்கச் செய்ய வேண்டும். அதுதான் அரசினுடைய கொள்கை என்ற விதத்திலே சொன்னார்கள். நான் அதை சரியானது இல்லை என்று கருதுகிறேன். ஒப்பந்தம் ஏற்கெனவே இருக்கிறது· அது தொடர்ந்து நீடிக்கும். ஒப்பந்தத்தில் உள்ள சில ஷரத்துக்களை 50 ஆண்டுகள் கழித்து, 1974-ஆம் ஆண்டிலே இருதரப்பினரும் உட்கார்ந்து மறுபரிசீலனை செய்து, அதை இப்போதுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப எப்படி மாற்றப்பட வேண்டும் என்பதுதான். 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் தொடர்ந்து நீடிக்கப்பட வேண்டும் என்பதுதான் நமது நிலைமையாக இருக்க முடியும். அதுதான் நமக்கு பாதுகாப்பாகவும் இருக்க முடியும். அமைச்சர் அவர்கள் சொன்னது ஒப்பந்தத்தை புதுப்பிப்பது என்ற வகையிலே· அப்படி இருந்தால் அதை தயவு செய்து திருத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. யா· சை. மு. யூசுப்: நான் நம்முடைய நிலையைச் சொல்லவில்லை. கர்நாடக அரசு எடுத்திருக்கிற நிலை அதுதான். அதன் காரணமாகத்தான் தண்ணீரை கொடுக்காது தடுக்கின்ற வகையிலே, தங்களுடைய பகுதியிலே அவர்கள் புதியதாக பல்வேறு திட்டங்களை உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள். தமிழக அரசின் நிலையைப் பொறுத்த மட்டில் நாம் எல்லோரும் இருக்கிற நிலைமையைப் புரிந்துக் கொண்டு, ஏற்கெனவே இருக்கும் ஒப்பந்தம். இப்பொழுதும் நமக்கு காலாவதியாகாத ஒப்பந்தம் தான் என்று கருதுகிறோம். ரைப்பிரியன் ரைட்ஸ் பற்றி வலியுறுத்துகிறோம். ஆகவே நான் தமிழக அரசின் கருத்துக்களை அப்போது எடுத்துச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியார் அணையைப் பொறுத்த மட்டில் நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். அந்தப் பணியை விரைவாக நடத்துவதற்கான அத்தனை முயற்சிகளும் நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. அணையின் மேற்புறத்தில் கான்கிரீட் மூடி அமைக்கும் வேலைகள் 1982-ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு விட்டது. அணையை கான்கிரீட்டினால் பலப்படுத்தும் பணி 1985-86-ஆம் ஆண்டு வரை நீடிக்கும். அதுதான் அங்கே இருக்கக்கூடிய நிலைமை. அணையின் வெள்ளப்பெருக்கத்தை அதிகரிக்க கூடுதலாக 3 வெள்ள நீர்த் தொட்டிகளை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) இதோ அந்த சப்ஜெட்டுக்கு வருகிறேன். கொஞ்சம் பொறுங்கள். இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் கடந்த 4 ஆண்டுக் காலமாக நீர்த்தேக்கத்தில் எடுக்கப்படுகிற தண்ணீரில் தமிழ் நாட்டுக்கு 13.5 டி.எம்.சி ஆண்டு ஒன்றுக்கு கிடைக்காமல் போகிறது. ஆகவே அப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் தமிழகம்



தனக்கு தேவையாக பெறக்கூடிய தண்ணீரை இழக்கிறது என்ற குற்றச்சாட்டைத்தான், மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொன்னார்கள்.

இந்தப்பிரச்னையை பொறுத்தமட்டில், ஏற்கெனவே தமிழ் நாடு, சுரங்கப்பாதையின் வழியாக வைகை நீர்த்தேக்கத்திற்கு தண்ணீரைக் கொண்டு வந்து, நாம் நமக்கு வர வேண்டிய தண்ணீரைப் பெற்றுக் கொண்டு தான் வருகிறோம். நீர் மட்டத்தை 134 அடிக்கு மேல் உயர்த்தாமல் பார்த்துக் கொள்ளலாமே தவிர, தேவையான 13.5 டி.எம்.சி. தண்ணீர் நமக்கு தனியாக சுரங்கப் பாதை வழியாக வைகை ஆற்றுக்கு கொண்டுச் செல்லப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதிலே பெரியார் அணையின் மராமத்துக்களை 2 கட்டமாக நடத்தவேண்டும் என்று நம்முடைய அரசும் கேரள அரசும் உடன்பாடு செய்திருக்கிறது. முதல் பகுதியாக அணையின் மீது ஆர்.சி.சி கேப்பிங் அமைப்பது. அதை அமைத்தபின்னால் 145 அடியாக தண்ணீர் மட்டத்தை உயர்த்த வேண்டும் என்பதற்கு கேரள அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆர் சி.சி. காப்டிங் 1982லே முடிந்து விட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் ஏன் 145 அடிக்கு நீர் மட்டத்தை உயர்த்தவில்லை? அதற்கான நடவடிக்கையை இந்த அரசென்ன எடுத்திருக்கிறது என்பதைத் தான் நான் அறிய விரும்புகிறேன்? இரண்டாவது கட்ட பணி இன்னும் துவங்கவில்லை. அது முடிந்தால், 152 அடியாக நீர் மட்டம் உயர்த்த முடியும். ஆகவே இந்தச் சிக்கலைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்

(இரவு 8-10)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. நான் முன்பே சொன்னதுபோல், இரண்டாவது கட்டப்பணி மேற்கொள்ளப்பட்டு, அதிலே முன்னேற்றம் இருக்கிறது. முதல் கட்டப் பணி 82-ஆம் ஆண்டு முடிவடைந்தது. ஆனால் முதற் கட்டப் பணி முழுதும் முடிந்து விட்டதாகக் கூற முடியாது. அதனால், இந்த பெரியார் அணை ஸ்டெபிளைஸ் ஆகிவிட்டது என்று சொல்ல முடியாது· அப்படி ஸ்டெபிளைஸ் ஆகாததால், தண்ணீர் மட்டத்தை உயர்த்த கேரள அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. பெரியார் அணையில் தண்ணீரை அதிக அளவுக்கு தேக்கிவைத்துக் கொள்ளக்கூடிய நிலை வந்த பிறகுதான், இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். அதுதான் நிலைமை.

திரு. ப. நெடுமாறன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதற் கட்டப் பணி முடிந்த உடனேயே 145 அடி நீர் மட்டத்தை உயர்த்தவேண்டுமென்பதுதான் உடன்பாடு. அது முடிந்துவிட்ட பின்னால், கேரள அரசு சொல்லும் வேறு சமாதானங்களை நாம் ஏற்க முடியாது. ஒப்பந்தப்படி அவர்கள் செய்யவேண்டும்.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதற்கட்டப் பணி முழுவதும் முடிந்து விட்டதாகச் சொல்லவில்லை. நான் சொன்னது, அந்த காங்கிரீட் போடும் வேலை 82-லே முடிந்து விட்டது என்பது. ஆனால், தண்ணீரைத் தேக்கக்கூடிய அளவுக்கு பலப்படுத்தும் பணிதான் முக்கியமான ஒன்று. அந்தப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தப்பணி 1985–86-லே தான் முடிவடையும் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படியானால் இந்த மராமத்து வேலை பற்றி கேரள அரசுக்கும், நம்முடைய அரசுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் என்ன? முதற் கட்டப் பணி என்ன? இரண்டாவது கட்டப் பணி என்ன? முதற் கட்டப் பணியில் என்னென்ன வேலைகள் நடந்திருக்கின்றன? இரண்டாவது கட்டப் பணியில் என்னென்ன வேலைகள் நடந்திருக்கின்றன? என்பதை அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அந்த விவரங்களை வெளியிட முடியும். மானிய கோரிக்கையை முடித்துவிட்டு நான் இறுதியாக பதில் வழங்கக்கூடிய நிலையில், அதற்குரிய விவரங்களை சேகரித்துத் தருமாறு கேட்டிருக்கிறேன். ஆகவே இந்த பணியைப் பொறுத்த மட்டில் முன்னேற்றம் இருக்கிறது. அந்தப் பணி முடிந்தவுடன், தமிழ்நாட்டிற்கு உரியஉரிமையைப் பெறுவதில், இந்த அரசு கண்ணுங்கருத்துமாக இருக்கும். எந்தக் காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், எந்த மாநிலத்திற்கும் இந்த அரசு உரிமையை விட்டுக் கொடுக்காது, விட்டுக் கொடுக்கக்கூடிய அளவுக்கு இந்த அரசின் தலைவராக விளங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கமாட்டார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேட்டூர் அணையில் இந்த ஆண்டு இரண்டு மாதங்கள் கழித்துத்தான் தண்ணீர் விட்டதாக மாண்புமிகு உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்கள் சொன்னார்கள். ஆனால், மேட்டூர் அணையில் 15, 6 நாட்கள் கழித்துத் தான் தண்ணீர் விடப் பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவ்வாறு விடப்பட்டதற்குக் காரணம், மேட்டூர் அணையில் இருக்கக்கூடிய நீர் மட்டம் குறைவாக இருக்கின்ற சூழ்நிலையில் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிந்ததுபோல் ஜனவரி, பிப்ரவரி மாதங்களுக்கு முன்னால், [illegible]



மாக இருந்தது. தண்ணீர் விட வேண்டுமென்று நாம் கர்நாடக அரசிடத்திலே வேண்டுகோள் விடுத்திருந்தோம். தண்ணீர் கிடைத்தவுடன், உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். சட்டியில் இருந்தால்தானே, அகப்பையில் வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, தண்ணீர் இல்லாத நிலைமையில்தான் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு தண்ணீர் விடவில்லையே தவிர, தஞ்சை மாவட்டத்தை வளப்படுத்த வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய அவா என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: துணைத் தலைவர் அவர்களே, அதாவது நான் அதைத்தான் சொன்னேன். 2 மாதம் அதாவது ஆகஸ்ட் 17-ஆம் தேதிதான் தண்ணீர் திறந்து விட்டிருக்கிறார்கள். அவையில் 1-11-83 ஆம் தேதியன்று உங்களால் வைக்கப்பட்ட கவனஈர்ப்புத் தீர்மானத்தின் மீதுகொடுக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். தமிழ்நாட்டிற்கு உரித்தான தண்ணீரை அனுப்பாமல் கர்நாடக அரசு தங்களுடைய பகுதியிலே உள்ள நீர்த்தேக்கங்களில் தேக்கிவைத்து இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அதைத்தான் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தேனே தவிர வேறு இல்லை.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். இன்னொரு முக்கியமான பிரச்சினைபற்றி திரு. இராசமாணிக்கம் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். காட்டாமணக்குச் செடிகள் இருப்பதாகவும் அந்தச் செடிகளினால் தஞ்சை மாவட்டத்திலே உள்ள பாசனத்திற்குரிய கால்வாய்கள் ஆக இருந்தாலும், கண்மாய்களாக இருந்தாலும் அவைகளில் எல்லாம் நிரம்பியிருப்பதாகவும் அதனால் பாசன ஆதாரங்கள் பழுதுபட்டுவிட்டதாகவும் பாதிக்கப்பட்டு விட்டதாவும் சொல்லியிருக்கிறார்கள். அதை முக்கியமாக அரசு கவனித்து உரிய முயற்சியில் ஈடுபடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட கோதையாறு, தென்கோதையாறு போன்ற பல்வேறு பாசனத் திட்டங்களைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னதை போன்று தஞ்சை மாவட்டத்திலே காவிரிப் படுகைகளை நவீனப்படுத்துகிற நேரத்திலே அந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிச் சொன்னார்கள். மொத்தமாக எல்லோரும் சொன்ன பிரச்சினைகளுக்கு நான் பதில்

சொல்லிவிட்டேன். காவிரி போன்ற பிரச்சினைகளுக்கு இயன்ற அளவுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். மோகனூரிலே பெட் ரெகுலேட்டர் கட்டக் கூடாது என்ற கோரிக்கையை திரு. கருப்பையா அவர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்கும். அதேபோன்று அமராவதி ஆற்றில் தடுப்புச் சுவர் கட்டப்படவேண்டுமென்று சொன்னார்கள். கோதையாறு, காட்டுவாரி இவைகளில் எல்லாம் வெள்ளத் தடுப்பு நடவடிக்கையாக அங்கே உள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்றவேண்டு மன்பதுபோன்ற பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். மணப்பாறை மருதனூர் ஏரிக்கு அணையைக்கட்டி பாசனவசதி அளிக்கவேண்டும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அந்த கோரிக்கைகளை எல்லாம் அரசு ஆய்வுசெய்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆய்வு என்ற சொன்னவுடனே எனக்கு அவர்களுடைய கவனம்தான் வருகிறது. ஆய்வு ஆய்வு என்று சொல்லியே ஓய்வு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களே என்று சொன்னார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு இல்லத்தைக் கட்டவேண்டு மென்றால் கூட அதற்காக ஆய்வு செய்து தரை அமைப்பைப் பார்த்து செய்யவேண்டியிருக்கிறது. ஆனால் இந்த விஷயத்தினைப் பொறுத்தவரையில் நாம் பல்வேறு விவரங்களை சேகரிக்க வேண்டிய நிலை இருக்கிறது. தேவையான அளவுக்கு அந்த இடத்திலே தண்ணீர் இருக்கிறதா? அப்படி தண்ணீர் இருந்தால் அது போதுமான அளவுக்குப்பாசனத்திற்குக் கிடைக்குமா? இரண்டாவதாக தண்ணீரைக் கொண்டு செல்கிற அளவுக்கு தரையின், நிலத்தின் அமைப்பு இருக்கிறதா என்று எல்லாம் பார்க்கவேண்டும். இப்படியெல்லாம் இருந்தாலும்கூட. இப்போது கிடைக்கக்கூடிய தண்ணீர் நிரந்தரமாக கிடைக்குமா? அதற்குரிய கேட்ச்மெண்ட் ஏரியாவில் மழை இருக்குமா என்றெல்லாம் பார்க்க வேண்டும்.

இப்படிப் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு அதற்குரிய விடைகள் கிடைத்து நிச்சயமாக அந்தத் திட்டத்தினால் பலன் கிடைக்கும் என்ற முடிவுக்கு வந்த பிறகு தான் திட்டத்தை மேற்கொள்ளமுடியும். இல்லாவிட்டால் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழித்தும் இங்கே தண்ணீர் இல்லாவிட்டால் திட்டத்தினால் எந்தவித பயனும் இருக்காது. இதை நன்றாக விவரம் புரிந்த, இன்னும் சொல்லப் போனால் அரசியலில் நீண்ட அனுபவம் மிக்க திரு. கருப்பையா அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு இரா. கருப்பையா: துணைத் தலைவர் அவர்களே, ஒரு நோயாளிக்கு சிகிச்சை அளிப்பதற்கு டாக்டரிடம் போகிறோம். டாக்டர் பரிசோதனை செய்கிறேன் ஆய்வு செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டே இருந்தால் சீக்கிரமாக அந்த நோயாளி போய் விட்டால் பலனில்லாமல் போய்விடும். ஆகவே ஆய்வுக்கும் ஒரு காலம் வேண்டும்.



(இரவு 8–20)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் இங்கே இந்த அவையில் தான் ஒரு கருத்தைக் கூட சொன்னார்கள். காவேரி பிரச்சினைக்கு தீர்வு காணுகிறோம், காணுகிறோம் என்று சொல்லிக்கொண்டே இருக்காதீர்கள், தீர்வு காண முடிந்தால் காணுங்கள் இல்லாவிட்டால் காணமுடியாது என்று சொல்லிவிடுங்கள். நாங்கள் இருக்கின்ற நிலைமையை வைத்து பயன்படுத்திக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். அந்தப் பதிலைத்தான் நான் இப்போது அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிச்சயமாக அந்தப் பணியைச் செய்யவேண்டும். அதுவரை நாம் சற்று பொறுமையாகத்தான் இருக்கவேண்டும். அந்தத் திட்டத்தைப் பயன்படுத்தும் வரை மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கக்கூடிய தற்போது உள்ள நிலைமையை தான் தற்போது எப்பேர்ப் பட்ட நிலையில் பாசன வசதியை பெறுகிறார்களோ, அந்த நிலையில் பயனைப் பெற்று தன்னை பலப்படுத்திக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்னொரு கோரிக்கையை அவர்கள் வைத்து இருக்கிறார்கள். காவேரி ஆற்றில் கல்லணைக்கு மேலே இருக்கக்கூடிய அணைக்கட்டில் மோகனூர் அணைப் பற்றி கேட்டு இருக்கிறார்கள். இதற்கு 2 கோடி ரூபாய் மதிப்பிட்டில் திட்டம் செயற்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆனால் அந்தப் புதிய அணை கட்டிக்கொடுத்தால் வேறு எந்த அணைக் கட்டும் பாதிக்காது என்று நான் இப்போது கருதுகிறேன். இந்த அணைக்கட்டு கட்டனை அணைக்கட்டுக்கும், மேல் அணைக் கட்டுக்கும் இடையில் கட்டலாம் என்று எண்ணி இருக்கிறோம். அதை உரிய முறையில் அரசு ஆய்வு செய்து கொண்டு இருக்கிறது. ஆய்வுக்கு பிறகு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இப்படி பல்வேறு கோரிக்கைகள், பிரச்சினைகள் எடுத்துச் சொன்னாலும் கூட இன்னும் ஒரு சில கருத்துக்களை சொல்லாவிட்டால் அது என்னுடைய உரையை நிறைவு செய்ததாக ஆகாது. நான் முன்பு சொன்னது போல் இந்த ஆண்டு சிறு பாசனத் திட்டத் திற்காக ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். இதே போன்று முக்கியமான பிரச்சினையை அத்தனை உறுப் பினர்களும் சுட்டிக்காட்டினார்கள். குடகனாறு நீர்த்தேக்க திட்டம். இந்தத் திட்டம் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக அந்த அணையில் உடைப்பு ஏற்பட்டது அதற்கு பிறகு அந்தப் பணியை மேற்கொள்ளவில்லை என்றுச் சொன்னார்கள். அந்தப் பணியை மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். நான் இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவதற்காக ஆய்வுகள் செய்யப்பட்டு 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டது. இந்தத் திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர், மற்றும் வருவாய்த்

துறையைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எல்லாம் பரிந்துரைக்கு அனுப்பி இருந்தோம். அந்த பரிந்துரை வரும் வரை காத்து இருக்கவேண்டாம் என்று சொல்லி ஒரு டோக்கனாக 1984-85 ஆம் ஆண்டு 66 லட்சத்து 92 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். விரைவில் உரிய அனுமதிகள் கிடைக்கும் என்று நம்பிக்கை இருக்கிறது. அதற்கு பிறகு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதேபோன்று பல்வேறு ஏரிகளை ஆழப்படுத்தவேண்டும் என்று தான் இந்த அரசுக்கும் விருப்பம் இருக்கிறது. உத்திரமேரூர் ஏரி, மற்றும் மதுராந்தகம் ஏரி போன்ற பல்வேறு ஏரிகளை எல்லாம் ஆழப்படுத்த வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. அதற்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காவேரிப்பாக்கம் போன்ற ஏரிகளை எல்லாம் ஆழப்படுத்தினால் தமிழகத்தில் அதன் பயன் நிச்சயமாக அந்தப் பகுதியில் உள்ள விவசாய பெருங்குடி மக்களுக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே அதற்குரிய முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அத்தனை வழி முறைகளும் கடைபிடிக்கப்பட்டு பிறகு நிலைமைகள் சீராக இருக்குமானால் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை சொல்லிக்கொள்கிறேன். செண்பகத்தோப்பு நீர் தேக்கத் திட்டத்தைப் பொறுத்தவரை இந்த அரசு அந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்காக, நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தீவிர ஆய்விற்காக அந்தத் திட்டத்தை அறிவித்து இருக்கிறது.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977-ஆம் ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு வந்த உடனே நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தத் திட்டம் 7 ஆண்டு காலமாக தொடர்ந்து ஆய்வு, ஆய்வு என்ற நிலைமை.. (மணியடிக்கப்பெற்றது).

திரு. கு. பாலன்: மாண்புமிகு அவைத்துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து பேசட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்கு மட்டும் ஏன் இவ்வளவு வேகமாக எழுந்துகொள்கிறீர்கள். ஆகவே திரு. சண்முகம் சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு ஏ. சி. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அரசு வடார்க்காடு மாவட்டத்திற்குக் கொடுத்த வரப் பிரசாதம்தான் அந்த அணைக் திட்டம். ஆனால் அதிகாரிகள் எந்தக் காரணத்தினால் அதைத் தாமதப்படுத்துகிறார்கள் என்று தெரியவில்லை. எனவே, ஏழாண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டிலேயாவது அதை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்ச ரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தேவையான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் ஒருசில பிரச்னைகளைச் சொன்னார்கள். வைகையிலிருந்து பிரியும் 47 கால்வாய்களை அகலப்படுத்தி செப்பனிடுவதற்காக 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு கோரிக்கைகளை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளையெல்லாம் நான் தொகுத்து எழுதி வைத்திருக்கிறேன். அந்தக் கோரிக்கை களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து, இயன்ற அளவிற்கு முனைப்போடு பணியாற்றி, அவர்கள் உள்ளம் மகிழும் அளவிற்கு அடுத்த ஆண்டு பொலிவோடு பார்க்கும் நிலையை உருவாக்கு வதற்கு இந்தத் துறை முனைப்போடு செயல்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு துணைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பல்வேறு திட்டங்கள் ஆய்வில் உள்ளன என்றும், சட்டமன்ற உறுப்பினர்கள் மகிழத் தக்க அளவிற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அறிவித்தார்கள். நான் கேட்க விரும்புவது, பல்லாண்டுக் காலமாகத் தொகுதியில் பேசப்பட்டு வருகின்ற குறிப்பிட்ட சில திட்டங்கள், பல்வேறு காலகட்டங்களில் நிறுத்தப்பட்டு இருக்கின்ற அந்த முக்கியமான திட்டங்களையாவது—ஆய்விலுள்ள அந்தத் திட்டங்களையாவது அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவர்கள் இங்கே வலியுறுத்துவதெல்லாம் பதினெட்டாம் கால் திட்டம் பற்றி என்று கருதுகிறேன். அதைப் போலவே. சண்முகா நதித் திட்ட அணைக்கட்டுத் திட்டம் பற்றியும் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வெள்ளைச்சாமி அவர்கள் கோக்கநாயக்கன் கோம்பையைப் பற்றி வலியுறுத்திக்கொண்டிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். அழாத பிள்ளையும் பால் குடிக்கும் என்கின்ற நிலைமையை இந்த அரசு உருவாக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னால், நான் ஏற்கனவே சொன்னதைப்போல, இந்தப் பரியாறு சம்பந்தமாக வலுப்படுத்தும் திட்டத்தைப் பொறுத்தவரையில், முதல் கட்டத்தில் ஸ்பில்வே விரிவாக்கும் பணியும் அடங்கியிருக்கிறது. இந்த வேலை முடியவில்லை. இந்த வேலை முடிந்தபிறகுதான் முதல்கட்டப் பணி முடிந்ததாகக் கருதப்படும். இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் முதல் கட்டப் பணிகள் முடியவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்களால் சொல்லப்பட்ட பல்வேறு கருத்துக்களுக்குப் பதில்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சிலவற்றிற்குப் பதில் சொல்லாத காரணத்தினால் அவர்களுடைய கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது அல்ல இந்த அரசின் எண்ணம்.

(இரவு 8–30)

அதை எல்லாம் தெளிவாகக் குறித்து வைத்து உரிய நடவடிக்கைகளை இந்தத் துறை மேற்கொண்டு வருகின்றது. எனவே இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்களால் முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 86— பாசனம்

திருவாளர்கள் ஜெ. ஹேமச்சந்திரன், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் மெ. ஆண்டி அம்பலம், ப. சுந்தரம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 52,27,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 51 பாசனம் குறித்த மூலதனச் செலவு.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 51 பாசனம் குறித்த மூலதனச்செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 57,62,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."





மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 25–4–1984 அன்று காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8–31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

—எதுவுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

160. 1984-85ஆம் ஆண்டில் பாசனம் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் உரை (தமிழ், ஆங்கிலம்).

161. 1984–85 ஆம் ஆண்டில் பாசனம் மற்றும் நிலநீர் பற்றிய சாதனைத் திட்டம். (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு.

(127ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### பாசனம் மீதான மானியக் கோரிக்கை

### 1984-85.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநரின் பரிந்துரையின் பேரில் இவ்வரசுக்கு "கோரிக்கை 36—பாசனம்" என்பதன்கீழ் ரூ. 52,27,66,000-க்கு மேற்படாமலும், "கோரிக்கை 51— பாசனம் மீதான முலதனச் செலவு" என்பதன்கீழ் ரூ. 57,62,94,000-க்கு மேற்படாமலும் தொகை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தற்போதுள்ள பாசன அமைப்புகளை விரிவாக்குவதற்கு ஏற்படும் செலவும் அவற்றைப் பராமரிப்பதற்கான வழக்கமான செலவும் வெள்ளம், புயல், காரணமாக ஏற்படும் செப்பனீட்டுச் செலவும், கோரிக்கை 36— பாசனம் என்பதன் கீழ் வழங்கப்படும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

2. புதிய பாசனத் திட்டங்கள், தொழிற்சாலைகளுக்கு நிலத்தடி நீர் வழங்கும் திட்டங்கள் ஆகியவற்றின் செலவு, "கோரிக்கை 51— பாசனம் மீதான மூலதனச் செலவு" என்பதன்கீழ் பெறும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

### பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனம்

3. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் கடைசி ஆண்டான 1984-85 ஆண்டிற்குப் பெரிய மற்றும் நடுத்தர நீர்ப் பாசன திட்டச் செயலாக்கங்களுக்கென 46.02 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. 1984-85 ஆம் ஆண்டில் பெரிய மற்றும் நடுத்தர பாசன திட்டங்களால், கூடுதலாக 28,170 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்கள் பாசன வசதி பெற நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

### பெரிய நீர்ப்பாசன திட்டங்கள்.

4. ரூபாய் 18 கோடி மதிப்பீட்டுச் செலவில் கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களிலுள்ள 56,660 ஹெக்டேர்களுக்குப் பாசன வசதியளிக்கும், பரம்பிக்குளம்-ஆழியார் திட்டத்தின் பாசனப் பரப்பை விரிவாக்கும் திட்டமும், ரூ. 46 கோடி செலவில் 10,305 ஹெக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கும் பெரியார்-வைகை பாசன அமைப்பை நவீனப்படுத்தும் முதற்கட்ட திட்டமும், நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. மேற்சொன்ன பெரியார்-வைகை முதற்கட்டத் திட்டம் 1984 ஆம் ஆண்டு இறுதியில் முடிக்கப்படும். இதைத் தொடர்ந்து 2ஆவது கட்டத் திட்டம் ரூ. 38.68 கோடி மதிப்பீட்டில் அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணியும், தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுவருகிறது. இந்த 2ஆவது கட்டத் திட்டத்தினால் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் மேலும் 7,521 ஹெக்டேர் நிலங்கள் புதிதாகப் பாசன வசதி பெறும் உலக வங்கியின் உதவியுடன்இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது



### நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள்.

5. ஏற்கனவே ஆங்கீகரிக்கப்பட்ட 20 நடுத்தரப் பாசனத் திட்டங்கள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் இருக்கின்றன. இவைகளில், 2,530 ஹெக்டேர் புன்செய் நிலங்கட்குப் பாசன வசதி தரும்தருமபுரி மாவட்டம் ஹரூர் வட்டத்திலுள்ள, ஈச்சம்பாடி அணைக் கட்டுத் திட்டம் முடிக்கப்பட்டு விட்டது.

6. கீழ் வரும் இரு நடுத்தரத் திட்டங்கள், 1984 ஜூன் மாதத்திற்குள் நிறைவுற்று, உபயோகத்திற்குக் கொண்டு வரப் படும்.

1. வேம்பக்கோட்டை நீர்த்தேக்கத் திட்டம்.

இதனால் இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூர் வட்டத்தில், 3,278 ஹெக்டேர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும்.

2. குள்ளூர்சந்தை நீர்த்தேக்கத் திட்டம்.

குள்ளூர்சந்தை கிராமம் விருதுபட்டி ஓடையின் குறுக்கே அமைந்துள்ள நீர்த்தேக்கம், இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்தில் 1,170 ஹெக்டேர் புதிய புன் செய் நிலப்பரப்புக்குப் பாசன வசதி அளிக்கும்.

7 தருமபுரி மாவட்டம், ஹோசூர் வட்டத்தில் 353 ஹெக்டேர் புன்செய் நிலங்களில் இருபோக சாகுபடிக்கு வாய்ப்பளிக்கும் சூலகிரி-சின்னார் நீர்த்தேக்கத் திட்டம் 1984-85 ஆண்டிற்குள் முடிக்கப்படும்.

8. பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் வட்டத்தில் 1,050 ஹெக்டேர் புதிய புன்செய் நிலத்தில் முதற் போகமும், 350 ஹெக்டேர் பரப்பில் இரண்டாம் போகமும் சாகுபடி செய்ய வகை செய்யும் ரூ. 381 இலட்சம் மதிப்பீட்டிலான பெரும்பள்ளம் நீர்த்தேக்கத் திட்டம் 1983-84 ஆம் ஆண்டிலேயே செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

9 நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டங்களை, மத்திய திட்டக்குழு வகுத்துள்ள குறியீட்டின் அடிப்படையில், வகைப் படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இதற்கிணங்க, 2,000 ஹெக்டேரிலிருந்து 10,000 ஹெக்டேர் வரை பாசன வசதி தரும் திட்டங்கள் நடுத்தர திட்டங்களெனவும் 2,000 ஹெக்டேருக்குக் குறைவாகப் பாசன வசதி தருபவை சிறுபாசனத் திட்டங்களெனவும் கருதப்படும். இதன் அடிப்படையில் கீழ்க்கண்ட ஐந்து நடுத்தர பாசன திட்ட அறிக்கைகளும் அரசின் பரிசீலனையில் உள்ளன:—

1. இருக்கங்குடி நீர்த்தேக்கத் திட்டம் (நெல்லை மாவட்டம்)
2. தாடபள்ளி கால்வாய் புனரமைப்புத் திட்டம் (பெரியார் மாவட்டம்)
3. ஒரத்துப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டம் (பெரியார் மாவட்டம்)
4. செண்பகத்தோப்பு நீர்த்தேக்கத் திட்டம் (வட ஆற்காடு மாவட்டம்)
5. கொரட்டலையாறின் குறுக்கே அணை கட்டுதல் (செங்கற் பட்டு மாவட்டம்)

மேலும் விரிவான ஆய்விற்குப் பின் கீழ்க்கண்ட ஏழு திட்டங் களின் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன:—

1 சாத்தனூர் அணைக்குக் கீழே பொன்னியாறு பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துதல் (வட ஆற்காடு மற்றும் தென்னாற்காடு மாவட்டங்கள்)

2. நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம் (மதுரைமாவட்டம்)

3. மருதையாறு நீர்த்தேக்கத் திட்டம்—தவுட்டைக்குளம் (திருச்சி மாவட்டம்)

4. நிலையூர் கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் (மதுரை மாவட்டம்)

5. மருதையாறு நீர்த்தேக்கத் திட்டம்— சோட்டரை (திருச்சி மாவட்ட )

6. ஐயாறு நீர்த்தேக்கத் திட்டம்—கொல்லிமலை (திருச்சி மாவட்டம்)

7. சாத்தனூர் முழுக்கொள்ளளவு மட்டக் கால்வாய் (வட ஆற்காடு மாவட்டம்)

இந்த 12 திட்டங்களின் மதிப்பீடு சுமார் ரூ.125 கோடியாகும். இதனால் கூடுதலாக 34,000 ஹெக்டேர் பரப்பு பாசன வளம் பெறும்.

10. 1984-85 வருடத்திற்கான வரவு-செலவுத் திட்டத்தில் புதிய நடுத்தர பாசனத் திட்டங்களுக்காக ரூ. 50 இலட்சம் மொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தற்போதைய பாசன முறைகளை நவீனப்படுத்துதல்

11. தமிழ்நாட்டில் நிலநீர் வளத்தில் 90 விழுக்காட்டிற்கு மேல் உபயோகப்படுத்தப்பட்டு விட்டதால் எஞ்சிய நீர் வளத்தை உபயோகிக்க பெரிய பாசன திட்டங்களுக்கு இனி அதிக வாய்ப்பில்லை. எனவே தற்போதைய பாசன முறைகளில் நீரைச் சிக்கனமாக உபயோகித்துச் சேமிக்கத் திட்டமிட வேண்டியதாகிறது. தற்போதைய பாசன முறைகளை நவீனப்படுத்துவதின் மூலம் இவ்வாறு சேமிக்கும் நீரைக்கொண்டு அதிகப்படியான பரப்பிற்குப் பாசன வசதி அளிக்க முடியும்.

12. இத்திட்டத்தின் கீழ் பெரியாறு—வைகை பாசன முறையை (முதற் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டம்) நவீனப்படுத்தும் பணிகள் ஏற்கனவே நடைபெற்று வருகின்றன. பண்டைக்காலந்தொட்டு நடைமுறையிலிருந்து வரும் காவிரிப் பாசனப் படுகை முறையின் பயனை அதிகரிப்பதற்காக காவிரிப் படுகையை நவீனப்படுத்தும் வேலையும் செயல்படுத்தப்படுகிறது. 1985 முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் காவிரிப் படுகைப்பாசன முறையை நவீனப்படுத்தும் வேலையை முழு அளவில் எடுத்துக்கொள்ள அரசு உத்தேசித்திருக்கிறது. இதில் ரூ. 100 கோடி மதிப்புள்ள ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கான பணிகளின் மதிப்பீடு மத்திய நீர்க் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. இதைத் தவிர கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையார் பாசன முறையில் அடங்கிய அனந்தனார் கால்வாய் மற்றும் அதன் கிளைகளை நவீனப்படுத்துதல், திருப்பரப்பு அணையின் வலதுபுறக் கால்வாயை விரிவுபடுத்தி நவீனப்படுத்துவது ஆகிய வேலைகள் முறையே ரூ. 351.50 இலட்சம், ரூ. 85.75 இலட்சம் மதிப்பீடுகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மற்றும் கோதையாறு, மணிமுத்தாறு, பொன்னியாறு, தாமிரபரணி, கீழ் பவானி பாசன முறைகளை நவீனப்படுத்தும் ஆய்வுகள் வெவ்வேறு நிலையில் இருக்கின்றன.



13. தமிழக அரசு, சமீபத்தில் ரூ. 2 60 கோடி மதிப்பீட்டில் 200 ஹெக்டேருக்குக் குறைவாக உள்ள பாசனப் பரப்பைக் கொண்டுள்ள மானாவாரி ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தை அங்கீகரித்திருக்கிறது. இந்தியாவிலேயே, முதன் முதலாக தமிழகம்தான். ஐரோப்பிய பொருளாதார சமூகத்தினரின் (ஈ. ஈ. சி. ஈரோப்பியன் எக்கனாமிக் சம்யூனிட்டி) உதவியுடன் இந்தத் திட்டத்தை மேற்கொள்ள இருக்கிறது. இத்திட்டத்தினால் செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் சுமார் 150 பாசன ஏரிகள் நவீனப்படுத்தப்படும். இதன் மூலம் புதிய பாசன வசதி அளித்தல், தற்போது பாசனப் பற்றாக்குறையிருக்கும் பகுதிகட்குப் பாசன வசதி அளித்தல், தற்போது இருக்கும் பாசனப் பரப்பிற்குப் பாசன உத்திரவாதம் செய்தல் ஆகியவற்றால் 20,000 ஹெக்டேர் பரப்பு பயனடையும் மணிமுத்தாறு, பொன்னியாறு, தாமிரபரணி ஆகியவற்றின் பாசன முறைகளை நவீனப்படுத்துவதற்கான ஆய்வுப்பணிகள் வெவ்வேறு முன்னேற்ற நிலையில் இருக்கின்றன.

### வெள்ளத் தடுப்புத் திட்டங்கள்.

14. செயலில் இருந்துவரும், வெள்ளத் தடுப்பு திட்டங்களுக்கு 1984-85 ஆம் ஆண்டிற்கென ரூ. 107.23 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இத்திட்டங்கள், ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பகாலத்தில் அங்கீகரிக்கப்பட்டன. அரசு, சமீபத்தில், திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடி நகரில் ஓடும் பக்கில் ஓடைக்கு (Puckle Odai) பாதுகாப்புப் பணி திட்டம் ஒன்றை ரூ. 82.00 இலட்சத்தில் அங்கீகரித்துள்ளது. இதனால் இந் நகரின் ஓடையின் அருகாமையில் வசிக்கும் சுமார் 2 இலட்சம் மக்கள் வெள்ளச் சேதத்திலிருந்து காப்பாற்றப்படுவர்.

15. 1984-85-ல் வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்கென ரூ. 25 இலட்சம் மொத்தமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### 20 அம்ச திட்டத்தின் கீழ் புதிய பாசனவளத்தை உருவாக்குதல்.

16. 1983-84 ஆம் ஆண்டு பெரிய, நடுத்தர பாசன திட்டங்களின் மூலம் 14,350 ஹெக்டேர் பரப்பிற்குக் கூடுதல் பாசன வளத்தை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கீழ்க்கண்ட திட்டங்களினால் இலக்கை அடைவோம்:—

1. பரம்பிக்குளம் ஆழியார் பாசன பரப்பு விரிவாக்கத்திட்டம் (10,000 ஹெக்டேர்)

2. பெரியாறு வைகை பாசன முறையை நவீனப்படுத்தும் திட்டம் (1,500 ஹெக்டேர்)

3. வேம்பக்கோட்டை நீர்த்தேக்கத் திட்டம் (1,300 ஹெக்டேர்)

4. குன்னூர் சந்தை நீர்த்தேக்கத் திட்டம் (1,050 ஹெக்டேர்)

5. ஈச்சம்பாடி அணைக்கட்டு திட்டம் (500 ஹெக்டேர்)

17. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதியாண்டான 1984-85–ல் பெரிய நடுத்தர பாசன திட்டங்களின் மூலம் உருவாக்கப்படும் பாசன வளம் 28,170 ஹெக்டேர் என நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. இதனை கீழ் வரும் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் அடைய முடியும்.—

1. பரம்பிக்குளம்-ஆழியாறு விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதி (15,520 ஹெக்டேர்)

2. பெரியாறு–வைகை பாசன முறையை நவீனப்படுத்தும் திட்டம் (முதற்கட்டம் முழுவதும் 7,810 ஹெக்டேர்)

3. வேம்பக்கோட்டை நீர்த்தேக்கத் திட்டம் (1,980 ஹெக்டேர்)

4. குன்னூர் சந்தை நீர்த்தேக்கத் திட்டம் (120 ஹெக்டேர்)

5. ஈச்சம்பாடி அணைக்கட்டுத் திட்டம் (2,030 ஹெக்டேர்)

6. சூலகிரி சின்னார் நீர்த்தேக்கத் திட்டம் (710 ஹெக்டேர்)

காவிரி நீர்.

18. காவிரி நீர்ப்பங்கீடு பிரச்சினை சம்பந்தமாக 1983 ஏப்ரல் 5 ஆம் நாள் மத்திய பாசன அமைச்சரின் தலைமையில் படுகை மாநிலங்களிடையே விவாதிக்கப்பட்டது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் தமிழக மற்றும் கர்நாடக மாநிலங்களிடையே இருதரப்புப் பேச்சு வார்த்தை நடத்தலாமென இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இதற்கிணங்க, தமிழக மற்றும் கர்நாடக முதல்வர்களிடையே 1984 ஜனவரி 5 ஆம் நாள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. மேற்கொண்டு இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொள்ளப்பட்டது.

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைத் திருப்பி விடுதல்.

19. மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைகளுக்கிணங்க, கேரள மாநிலத்தில் மேற்கே நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரைத், தமிழ்நாட்டிற்கு திருப்பித் தமிழகத்தில் பாசன வசதியளிப்பது பற்றி இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்துமாறு கேரள முதலமைச்சர் அவர்களைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். கேரள அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.



கிருஷ்ணா நீர் வழங்கு திட்டம்.

20. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காக, கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி. எம். சி. நீரைக் கொண்டுவருகின்ற கிருஷ்ணா நீர் வழங்குத் திட்டத்ினை நிறைவேற்றுதல் மற்றும் இதற்காகும் செலவினைப் பகிர்ந்து கொள்ளுதல் சம்பந்தமாக, 1983 ஏப்ரல் திங்கள் 18 ஆம் நாளன்று ஆந்திர, தமிழக முதல்வர் அவர்களால் ஓர் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இத்திட்டத்திற்கான பணிகள் இரு மாநிலங்களிலும், அந்தந்த அரசுகளால் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. தமிழக எல்லையில் நடைபெற வேண்டிய பணிகள், 1983 மே திங்கள் 25 ஆம் நாள் பாரதப் பிரதமர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டன. தமிழக எல்லையிலிருந்து பூண்டி வரையிலான கால்வாய் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு, நல்ல முன்னேற்றத்தில் உள்ளது.

நாட்டின் நீர் ஆதாரத்தை முழுவதுமாக பயன்படுத்துவதற்கான தேசிய நோக்குத் திட்டம்.

21. மத்திய அரசு ஏற்படுத்திய தேசிய நீர்வள அமைப்பின் ஆளுகைக் குழுவின் இரண்டாவது கூட்டம் 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாள் நடைபெற்றது. இவ்வமைப்பு தீபகற்ப நதிகளின் வளர்ச்சிக்குத் தேவையான ஆய்வினை மேற்கொண்டு செயலாக்கவும், திட்டமிட்டுள்ளது. மகாநதி, கோதாவரி ஆகிய ஆறுகளின் உபரி நீரை தெற்கே கிருஷ்ணா பெண்ணாறு, காவிரி, வைகை போன்ற படுகைகளுக்குத் திருப்பி, இப்படுகைகளை வளப்படுத்துவதே இவ்வமைப்பின் பணியாகும். இவ்வமைப்பு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றத்தைப் பற்றியும் மேற்கொண்டு ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டிய பணிகளின் செயல்முறைத் திட்டம் பற்றியும் மறு ஆய்வு செய்தது. இவ்வமைப்பிற்குத் தேவையான எல்லா புள்ளி விவரங்களையும், வேண்டிய உதவிகளையும் தமிழக அரசு அளித்து வருகின்றது.

பருவ நிலைகள்.

22. 1983 ஆம் ஆண்டில் தென் மேற்குப் பருவ மழை தாமதித்தது மட்டுமின்று காவிரி, பெரியார், தாமிரபரணி, கோதையார் ஆகிய படுகைகளிலும் பரம்பிக்குளம்–ஆழியார் திட்டப்பகுதிகளிலும் தேவையான அளவு பெய்யவில்லை, இதனால் பாசனத்திற்கு நீர் விடுவது ஒத்தி வைக்கப்பட வேண்டியதாயிற்று. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் போதுமான நீர் இல்லாததாலும், நீர் வரத்துக் குறைவாக இருந்ததாலும், நீர்த் தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு நீர் விடுவது இரண்டு மாதங்கள் தாமதிக்கப்பட்டது. இதனால் 1.33 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் குறுவை சாகுபடி குறைந்தது. எனினும் தென்மேற்கு பருவ மழை வழக்கமான காலத்தை விட சிறிது காலம் நீடித்ததால் தாமதமாக பயிரிடப்பட்ட பயிர்களுக்கு நன்மையளித்தது

23. வடகிழக்குப் பருவமழை காலத்தில் டிசம்பர் 1983-ன் முற்பகுதியில் எதிர்பார்த்த அளவு மழை பெய்யவில்லை. இருப்பினும் டிசம்பர் மாதத்தின் பிற்பகுதியிலும் 1984 ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களிலும் வழக்கத்திற்கு மாறாக நாகநிகழ் மழை பெய்தது.

வெள்ளமும் வெள்ளச் சேதங்களும்.

24. 1983 டிசம்பர் 21 ஆம் தேதி, தமிழ்நாட்டின் கடற் கரைக்குத் தென்கிழக்கே ஏற்பட்ட காற்றழுத்தம் 1983 டிசம்பர் 23 ஆம் தேதி தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்திலருகே கரையைக் கடந்தது. இதனால் திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சா வூர் ஆகிய மாவட்டங்களில் எதிர்பாராமல் பெய்த மழை பல நீர் ஆதாரங்களையும், பாசன கால்வாய் அமைப்புகளையும் சேதப் படுத்தி விட்டது. புதுக்கோட்டை மாவட்டம் மேட்டுப் பகுதி களில் ஏற்பட்ட மிக அதிக அளவு வெள்ளப் பருக்கால் பாசன ஏரிகளிலும், கால்வாய்களிலும் உடைப்புகள் ஏற்பட்டன. சுமார் 1,430 ஏரிகளும் 1,760 பாசன ஆதாரங்களும் சேதமடைந்தன. மிகவும் குறுகிய நேரத்தில் இந்த அடைப்புகளை அடைத்து, இருக்கின்ற பயிர்களுக்கு, கால்வாய் மற்றும் ஏரிகளின் பாசன முறைகளில் பாசனத்திற்கு நீர் விடப்பட்டது. உடைப்பு ஏற் பட்ட பகுதிகளில், பலப்படுத்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வேலைகளைக் கவனிக்கத் தேவையான துணை அலுவலர்களுடன், அரசு ஒரு சிறப்பு தலைமைப் பொறியாளரை நியமித்திருக்கிறது. தமிழ்நாடு அரசு சேதமடைந்த பாசன ஆதாரங்களை சீர் செய்ய ரூ. 8.00 கோடியும், சேதமடைந்த கட்டிடங்களைச் செப்பனிட ரூ.1.00கோடியும் அனுமதித்துள்ளது. இந்த நிதியாண்டில் பாசன ஆதாரங்களைச் சீர் செய்வதற்கு ரூ. 2.5 கோடியும் கட்டிடங்களைச் செப்பனிடுவதற்கு ரூ. 25 இலட்சமும் ஒதுக்கியிருக்கிறது.

25. 1984 ஜனவரி இறுதி வாரத்தில், மத்திய நிபுணர் குழு ஒன்று, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, தென்னாற்காடு மாவட்டங்களில் வெள்ளச் சேதாரங்களை பார்வையிடச் சுற்றுப் பயணம் செய்தது. மீண்டும் ஏற்பட்ட காற்று அழுத்தத்தினால் வழக்கத்திற்கு மாறாக, பிப்ரவரி, மார்ச் மாதங்களில், மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெய்த மழை யினால் அறுவடை தாமதித்ததோடு பயிர்களும் சேதமடைந்தன. கால்வாய்கள் மற்றும் பாசன ஆதாரங்களும் சேதமடைந்தன.

பாசன மேம்பாட்டுப் பயிற்சிக் கூடம்.

26. பன்னாட்டு வளர்ச்சிக்கான அமெரிக்க உதவி நிறுவனத் தின் உதவியுடன் (U. S. A. I. D.) அரசு பாசன மேம்பாட்டு பயிற்சிக் கூடத்தை இம்மாநிலத்தில் அமைக்க, மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது பொதுப் பணித்துறையில் பணி புரியும் அலுவலர்களுக்குப் பாசன நீர் மேம்பாட்டுப் பயிற்சியை





அளிக்கும், அண்ணாப் பல்கலைக் கழகம், சென்னை; தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம், கோவை; இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆப் மேனேஜ்மென்ட், பங்களூர், ஆகிய மூன்று கல்வி நிறுவனங் களைச் சார்ந்த வல்லுநர்கள் விவசாயம் மற்றும் தொடர்புடைய துறைகளில் உள்ள அத்தியாவசியமான அலுவலர்களுக்கும் செயல் துறைஅலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் பயிற்சி அளிப்பார்கள். அரசு இந்தப் பயிற்சிக் கூடத்தை நிர்வகிக்க தொழில் நுட்பக்குழு ஒன்றையும் தொழில் நுட்ப செயற்குழு ஒன்றையும் அமைத் துள்ளது. தற்சமயம், இப்பயிற்சிக் கூடம் சென்னையில் ஆரம் பிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான கட்டிடங்கள் திருச்சி யில் கட்டி முடிக்கப்பட்ட பின் திருச்சிக்குக் கூடிய விரைவில் மாற் றப்படவிருக்கிறது. தமிழ்நாட்டிற்குத் தற்போது தேவையான நீரைச் சிக்கனப்படுத்தி உபயோகப்படுத்தும் வழிமுறைகட்கு, இப்பயிற்சிக்கூடம் ஊக்கம் அளிக்கும். இதனால் கூடுதலான நிலப்பரப்புப் பாசனம் பெறுவதுடன், கிடைக்கும் நீரைச் செவ்வனே பிரித்து வழங்கவும், வாய்ப்பு ஏற்படும்.

பாசனத் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள்.

27. ஒரு தனித் தலைமைப் பொறியாளரின் கீழ் இயங்கும் பொதுப் பணித் துறையின் ஆய்வுப் பிரிவு மாநிலத்திலுள்ள பெரிய, நடுத்தர மற்றும் சிறு பாசன திட்டங்களின் ஆய்வுப் பணிகளைச் செய்து வருகிறது.

28. மேலே 9வது பத்தியில் குறிப்பிட்டுள்ள ஐந்து நடுத்தர பாசனத் திட்டங்களுடன் கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்களும் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன.

| திட்டத்தின் பெயர். | திட்ட மதிப்பீடு. | பயன் பெறும் பரப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (இலட்சம்) | (ஹெக்டேர்) |
| தேராபாறை நீர்த் தேக்கத் திட்டம், மதுரை மாவட்டம். | 233.00 | 764 |
| மதுரை மாவட்டம்—செல்லம்பட்டி அணைக்கட்டு திட்டம். | 227.00 | 973 |
| திருச்சிராப்பள்ளி மாவட்டம்—அணைப் பாடிவாரி நீர்த் தேக்கத் திட்டம். | 204.00 | 1,022 |
| செங்கல்பட்டு மாவட்டம்—மதுராந்த கம் வலதுபுற வாய்க்கால் திட்டம். | 325.00 | 681 |

| (1) | (2) (இலட்சம்) | (3) (ஹெக்டேர்) |
|---|---|---|
| கோவை மாவட்டம்—சின்ன வேடம் பட்டி ஏரித்திட்டம். | 266.00 | 224 |
| முகவை மாவட்டம்—மலட்டாறு அணைக்கட்டு திட்டம். | 424.00 | 1,890 |
| திருநெல்வேலி மாவட்டம்—கோடகன் வாய்க்கால் திட்டம். | 70.80 | 298 |
| தர்மபுரி மாவட்டம்—துர்கம்வெங்கா நீர்த் தேக்கத் திட்டம. | 413.00 | 960 |
| வடாற்காடு மாவட்டம்—அண்டியப்ப னூர் ஓடை நீர்த்தேக்கத் திட்டம். | 323.00 | 800 |
| பெரியார் மாவட்டம்—மண்ணரை அணைக்கட்டு திட்டம். | 190.50 | 296 |
| திருநெல்வேலி மாவட்டம்—கொடுமுடி யாறு நீர்த் தேக்கத் திட்டம். | 293.00 | 490 |
| கன்னியாகுமரி மாவட்டம்—கோதை யாறு பாசன அமைப்பை நவீனப் படுத்துதல். | 2,790.00 | 36,033 |
| சாஸ்திரமுட்டுலு நீர்த்தேக்கத் திட்டம், தர்மபுரி மாவட்டம். | 265.00 | 432 |
| | 5,824.30 | 44,863 |

29. இவை தவிர கன்னியாகுமரி மாவட்டத்தில் மாம்பழத் துறையாறு, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நம்பியாறு, எலு மிச்சையாறு போன்ற 29 திட்டங்களின் ஆய்வுப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு, அவை வெவ்வேறு முன்னேற்ற நிலையில் இருக்கின்றன.

30. மேலும் ரூ. 912 இலட்சம் மதிப்புள்ள 53 சிறப்பு சிறு பாசனத் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு அரசின் பரிசீலனை யில் உள்ளன. இவை தவிர ரூ 2,722 இலட்சத்திற்கான 216 சிறப்பு சிறு பாசனத் திட்டங்கள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

வறட்சி நிவாரணப் பணிகள்:

31. 1982 ஆம் ஆண்டில் தென் மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழைகள் பொய்த்த காரணத்தினால், தமிழ்நாடு முழு வதும் 1983-ல் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டது. பாசன வசதிக்கும் குடிநீர் உபயோகத்திற்கும் கடும் பற்றாக்குறை ஏற் பட்டது. இதனால் பெரும்பாலான விவசாயத் தொழிலாளர் களுக்கு வாழ்க்கை நடத்துவதற்கான வேலை வாய்ப்புகள் இல்லாமல் போயின.



32. அரசு, வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொண்டு அணைகளைப் புதுப்பித்தல், தற்போதுள்ள ஏரிகளையும், குளங் களையும் பழுது பார்த்தல், நீர்க் குட்டைகளை மேம்படுத்தி பழுது பார்த்தல், புதிய நீர்க் குட்டைகள் அமைத்தல் போன்ற 8,725 பணிகளுக்காக ரூ. 1,300 இலட்சம் செலவு செய்து விவ சாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை அளித்ததன் மூலம் மக்கள் நிவாரணம் பெற்றுள்ளனர்.

சிறப்பு சிறு பாசனம்:

33. 1983-84 ஆம் ஆண்டில் சிறப்பு சிறு பாசனத் திட்டத் திற்காக ரூ. 247 இலட்சமும் தூர் வாரி புனரமைக்கும் திட்டத் திற்காக ரூ. 3 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 30 வேலைகள் 1983-84 ஆம் ஆண்டில் முடிக்கப்படவிருக்கின்றன. இப்பணிகள் முடிவுறும்போது 2,530 ஹெக்டேர் நிலங்கள் கூடு தலாக பாசன வசதி பெறும், அவற்றில் 74 வேலைகள் பல்வேறு கட்டங்களில் முன்னேற்ற நிலையிலுள்ளன.

34. 1984-85 ஆம் ஆண்டில் சிறப்புச் சிறு பாசனத் திட்டத் திற்காகவும், தூர்வாரி புனரமைக்கும் திட்டத்திற்காகவும் முறையே ரூ. 225 இலட்சமும், ரூ. 2 இலட்சமும் மாநிலத் திட்டக் குழுவால் ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 30 வேலைகள் 1984-85 ஆம் ஆண்டிலேயே முடிக்கப்படும். இப்பணிகள் முடிவுறும் போது, 3,274 ஹெக்டேர் கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்.

தீவிரப்படுத்தப்பட்ட சிறுபாசனத் திட்டங்கள்:

35. 40 ஹெக்டேருக்கும் குறைவான ஆயக்கட்டுள்ள கண்மாய்கள், தற்போது ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளன. அவைகளைத் தரப்படுத்தும் பணியை பொதுப் பணித் துறை மேற்கொண்டுள்ளது. அதேபோல, முன்னாள் ஜமீனைச் சேர்ந்த கண்மாய்களும், பொதுப்பணித் துறையினால் தரப் படுத்தப்படுகின்றன.

36. 1983-84 ஆம் ஆண்டில் ஏரி மற்றும் குளங்களைத் தரப்படுத்த பொதுப்பணித் துறையைச் சார்ந்த ஏரிகளுக்கு ரூ.75 இலட்சமும் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த ஏரிகளுக்கு ரூ. 40 இலட்சமும், ஒதுக்கப்பட்டது. அதுபோல 1984-85 ஆம் ஆண்டிலும் பொதுப்பணித்துறைக் குளங்களுக்கு ரூ. 60 இலட்சமும் ஊராட்சி ஒன்றியக் குளங்களுக்கு ரூ. 25 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் ஜமீன் குளங்களைத் தரப்படுத்தும் சிறப்புத் திட்டம்:

37. இராமநாதபுரம், செங்கற்பட்டு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் மிக அளவில் அமைந்துள்ள முன்னாள் ஜமீன் குளங்களைத் தரப்படுத்துவதற்கு ஒரு விரிவான திட்டம் உள்ளது.

பாசன வசதிக்கு மிகவும் அடிப்படையான இந்தக் கலமைப்புகள் ஆயக்கட்டுதாரர்கள் பயன் பெறும் வகையில், சீர் செய்யப்பட்டு தரப்படுத்தப்படவிருக்கின்றன. இதற்காக 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 2.50 கோடியும், 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 1·475 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிலத்தடி நீர்:

38. துல்லிய நிலத்தடி நீர் ஆய்வின் பின்னர், தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிலத்தடி நீர் வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் படங்களைக் கொண்டு எங்கெங்கு நிலத்தடி நீர் வளமுள்ளது என்பதை எதிர்காலத்தில் அறிய முடியும்.

39. வறண்ட பகுதிகளில் மேலும் நிலத்தடி நீர் இருக்கும் சாத்தியக்கூறுகளைக் கண்டறிய, உப படுகை வாரியாகவும், கிராம வாரியாகவும் நுண்ணிய அளவில், நிலத்தடி நீர் ஆய்வு செய்யப்படுகிறது.

40. நிலத்தடி நீர்த்துறை. முறையான ஆய்வு தவிர, கீழ்க்கண்ட முக்கிய ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.—

தூய்மைக்கேடு ஆய்வு:

41. நிலத்தடி நீரின் தூய்மைக்கேடு ஆய்வு தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நில நீரின் தன்மைகளை ஆய்வு செய்வதாலும், தொடர்ந்து கண்காணிப்பதாலும் தூய்மைக்கேட்டின் தன்மையைக் கண்டறிந்து தகுந்த பரிகார முறை பரிந்துரைக்கப்படும். இந்த ஆய்வு முதற்கட்டமாக பாலாற் படுகையின் கீழ் உள்ள வடாற்காடு மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் தொடங்கப்பட்டு உள்ளது.

மேற்பரப்பு நீரையும் நிலத்தடி நீரையும் இணைத்து பயன்படுத்துதல்:

42. பாசனத்திற்கு வழங்கப்படும் நீர் நிலத்தடிக்குள் கசிவதால் ஆயக்கட்டுப் பகுதிகளிலே நிலநீர் போதுமான அளவு உள்ளது. அந்த நிலநீர் வளத்தை முழுமையாக பயன்படுத்தவில்லை. " நிலத்தடி நீரையும் மேற்பரப்பு நீரையும் இணைத்து பயன்படுத்தினால் கூடுதல் நிலங்கட்குப் பாசனவசதி அளிக்கலாம். ஆகையினால் நிலநீரும், மேற்பரப்பு நீரும் ஒருங்கிணைந்து பயன்படுத்துவது முக்கியத்துவம் அடைந்து வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம் இந்த ஒருங்கிணைப்பு ஆய்விற்கு ஒரு முன்னோடித் திட்டமாக 1982-83 வருடத்தில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

43. முன்னோடித் திட்ட ஆய்வுமுறை முடிவு அடையும்போது பாசன வசதிகள் விரிவு அடைவதற்கு ஏற்ற வழி முறைகள் பற்றியும், நிலநீரை எடுக்கும் மாதிரி கிணறு அமைப்புகள் பற்றியும் தீர்மானிக்கப்படும்.



செயற்கை முறை நிலத்தடி நீர்ப் பெருக்கு ஆய்வு:

44. தமிழ்நாட்டிலுள்ள நிலப்பகுதிகளில் 73 விழுக்காடு கடினப் பாறைகளால் ஆனது. விவசாயத்திற்குத் தேவையான நீரின் அளவு பன்மடங்காக விரிந்து கொண்டே வருவதால் சில இடங்களில் அதிகப்படியாக நிலத்தடி நீர் எடுக்கப்படுகின்றது. இதனால், இவ்விடங்களில் நிலத்தடி நீர் மட்டம் படிப்படியாகத் தாழ்ந்து கொண்டே செல்கிறது. அதே நேரத்தில் சில வருடங்களில் வெள்ளம் வரும்போது நிலப்பரப்பு நீர் வீணாக வடிந்து வருகிறது. இதைத் தடுத்து, இந்த நீரால் நிலத்தடியில் நீர் அளவினைப் பெருக்க முடியும். அதற்கான ஆய்வு முதல் கட்டமாக (1) வடாற்காடு, (2) தென்னாற்காடு மற்றும் (3) திருநெல்வேலி மாவட்டங்களில் 1983-84 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும்.

தொழில் நுட்ப ஆய்வும் பணி:

45. நிலநீர் ஆய்வு செய்யப்படும் பொழுது பாநிலத்தின் நில நீர் வளத்தைப் பற்றியும், அது எங்கெங்கே அமைந்துள்ளது என்பது பற்றியும் ஏராளமான நிலநீர்நுட்ப விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த விவரங்களும், தொழில் நுட்பமும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டால் அது மிகவும் நன்மை பயக்கத் தக்கதாகும்.

46. இந்தத் தொழில் நுட்பப் பணி தர்மபுரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு முன்னோடியாக அளிக்கப்பட்டு வருகிறது இந்தத் தொழில் நுட்பப் பணிக்கு இந்த மாவட்டத்திலே நல்ல வரவேற்பு இருந்ததாலும், மேலும் விவசாயிகள் இத்திட்டத்தினால் பயன் அடைவதாலும் இந்த இரசு மாநிலத்தின் மற்றப் பகுதிகளுக்கும் இந்தத் தொழில் நுட்பப் பணியை விரிவுபடுத்த ஆணையிட்டுள்ளது.

47. மேலும், இத்துறை, வண்டலூரில் அமையவிருக்கும் வன விலங்குப் பூங்காவுக்கு தேவையான தண்ணீரை வழங்க (கட்டம் 2 மற்றும் கட்டம் 3) ஆணைகள் வழங்கப்பட்டு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

48. செங்கற்பட்டு மாவட்டம், பனங்காட்டுச்சேரி அருகில் பாலாற்றில் அமைந்துள்ள தலை மதகைப் (Head Works) பராமரித்து கல்பாக்கத்தில் அமைந்துள்ள சென்னை அணுமின் நிலையத்திற்கு இத்துறை தண்ணீர் வழங்கி வருகிறது. இந்த நிலையத்திற்கு மேலும் அதிகமாக தண்ணீர் வழங்க ரூ. 78.00 லட்சத்தில் ஒரு திட்டத்தை நிறைவேற்ற அரசு அனுமதித்துள்ளது. இந்தத் திட்டம் தற்சமயம் செய்யப்பட்டு வருகிறது.

நீரியியல் நிறுவனம்:

49. நீர் வளத்தைப் பற்றி, மாநில அரசிற்கு கொள்கை ரீதியான அறிவுரை வழங்குவதற்காக நீரியியல் நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்த நிறுவனம், கிடைக்கக் கூடிய நீர் அளவைக் கணக்கிட்டு மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் வளங்களை முறையாகப் பயன்படுத்தவும், அவற்றை நிர்வகிக்கவும் தகுந்த அறிவுரைகளை அரசுக்குத் தரும். இந்த நிறுவனத்திற்கு ஐக்கிய நாடுகள் முன்னேற்றத் திட்டங்களின் கீழ் நிதி வழங்கப்பட்டுள்ளது.

50. 1983-84 ஆம் ஆண்டு பாசனத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டுக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துரைகளையும், யோசனைகளையும் அரசு கவனத்தில் கொண்டுள்ளது. அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவர அறிக்கை ஒன்று சபையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

ஆவணக்காப்பக
136263
சென்னை-600 008

D
V211,31'N84
N84.67.1

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

*In Madras City.*

1. Account Test Institute, Egmore Madras-600 008.
2. The City Book Company, Madras-600 004.
3. Higginbothams (Private) Ltd., Madras-2.
4. P. Varadachary & Co., Madras-1.
5. C. Subbiah Chetty and Company, Madras-600 005.
6. The Universal Book House, Moore Market, Madras-600 003.
7. C. Sitaraman and Company, Madras-600 014.
8. Mohan Pathippagam and Book Depot, Madras-600 005.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C Pycrofts Road Madras-600 005.
10. The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madars-600 001.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-600 001
12. New Century Book House (Private) Limited, Madras-600 002.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-600 008.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1. A. Venkatasubban and Company, Vellore (North Arcot District)-632 001
2. Bharathamatha Book Depot, Thanjavur.
3. P. V. Nathan and Company, Kumbakonam (Thanjavur District).
4. Appar Book Stall, Thanjavur.
5. P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6. Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8. B. Aruldass, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Book Sellers, No. 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10. Mercury Book Company, No. 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jagannatham Book House, P.B. No. 327, No. 35, Nandhi Koil Street, Tiruchirappalli-2.
12. Ganesh Stores, South Car Street, Sivakasi.
13. Mary Martin Book Sellers, Kotagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar and Sons, Salem-636 001
15. Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem-636 001.
16. Meenakshi Pathippagam, Pudukkottai.
17. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari District.
19. Baby Stores, Book Sellers, Villupuram (South Arcot District).
20. Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-.6.
21. Kumaran Book Depot, Book Sellers, Erode-1.
22. Vela Book Company, No. 4. Annaji Rao Street, Erode-1.
23. Radhamani Stores, No. 6-A, Raja Street, Coimbatore-1.
24. Ajantha Book Centre, Salem-1.
25. Sri Vidhya Book Shop, No. 63. Tennure High Road, Tiruchirappalli-2
26. Sri Rama Vilas Book Shop, No. 90. Amman Sannathi, Madurai-1.
27. Sarvothaya Ilakkiya Pannai, No 32/1, West Velli Street, Madurai-1.
28. Vijaya Book House No. 93, Cherry Road, Salem-636 001

IN OTHER STATES.

1. Jain Book Agency, New Delhi-1.
2. International Book House, Trivandrum.
3. The Book Syndicate, Hyderabad-1.
4. Labour Law Publications, Hyderabad.
5. Puthaghalayam, Pondicherry.
6. Prabhu Book Service, Gurgaon, Haryana
7. K. P. Bagchi and Company, No. 286 B.B, Ganguli Street, Calcutta-12.

[Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery and Printing, Madras.